வெளியீடு—29—5—1971]
Issued—29—5—1971]

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

வியாழக்கிழமை 1970 பிப்ரவரி 26

Thursday, 26th February 1970

தொகுதி XXV—எண் 2

Volume XXV—No. 2

தமிழ் நாடு அரசு
1971

GOVERNMENT OF TAMIL NADU
1971

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

Legislative Assembly Department
Fort St. George, Madras-9.

விலை 50 காசுகள்]
Price 50 Paise]

V2ll,31 N70
31N71.2551
TAMIL NADU ... LIBRARY
61472

# Tamil Nadu Legislative Assembly Debates

SEVENTH SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*(From 25th February to 3rd March 1970.)*

(Volume XXV-Nos. 1 to 5)

*Table of Contents.*

*Wednesday, 25th February 1970.*

| | Pages. |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu | |
| Principal Officers of the Tamil Nalu Legislative Assembly. | |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with Constituencien. | |
| 1. Obituary Reference— | |
| Demise of Thiru K. S. Abdul Azeez, former M.L.A. ... ... ... ... ... | 1 |
| 2. Condolence Resolution— | |
| Demise of Thiru D. S. Authimoolam, M.L.A. | 1-h0 |
| 3. Papers laid on the Table ... ... ... | 10-12 |

*Thursday, 26th February 1970.*

| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... | 13-34 |
| 2. Point of Order— | |
| Change of portfolion of Ministers ... ... | 34-36 |
| 3. Budget for 1970-71— | |
| Presentation ... ... ... ... ... | 36-60 |
| 4. Announcement— | |
| Decisions of the Business Advisory Committee ... ... ... ... ... | 61 |
| 5. Papers laid on the Table ... ... ... | 62-63 |

| | Pages. |
|---|---|
| *Saturday, 28th February 1970.* | |
| 1. Questions and Answers ... ... ... | 151-176 |
| 2. Points of Order— | |
| (i) Adjournment motion disposed of in Speaker'n Chamber ... ... ... | 176 |
| (ii) Functioning of two separate Congress Parties in the Assembly ... ... ... | 176 |
| 3. Aljournment Motions· | |
| (i) Decision of the Mysore Government to construct Hemavatni ahd Swarnavathi-Dams across the tribution of the Cauvery ... ... ... ... | |
| (ii) Attack on a group of farmers of Madurai in Mysore State ... ... | 177 |
| 4. Calling Attention— | |
| (i) Decontrol of foodgrains in all districts except Thanjavur and apprehensions ryots of Thanjavur listrict ... ... | 177-179 |
| (ii) Expeditious supplyl of electricity to pumpsets in Pudukottai area ... ... | 179-181 |
| 5. Announcements— | |
| (i) Separate functioning of Legislature Forward Block Pary ... ... ... | 181 |
| (ii) Provision of separate seats for some Members under the leadership of Thiru G. Bhuvararan ... ... ... | 181-182 |
| 6. General liscussion on the Budget for 1970-71 | 182-248 |
| 7. Papers laid on the Table ... ... ... | 248 |
| *Monday, 2nd March 1970.* | |
| 1. Questions and Answers ... ... ... | 263-292 |
| 2. Privilege Matter— | |
| Alleged leakage of Budget proposals ... | 292-297 |
| 3. Adjournment Motions— | |
| (i) Work-to-rule policy followed by Engineers and employees of the Electricity Boarl and the consequent situation ... | 297-298 |
| (ii) Alleged police excess and lathi charge on a Member of the Legislative Council ... ... ... ... | 298-300 |
| (iii) Increase in cost of living index ... | 300 |





| | Pages. |
|---|---|
| *Monday—2nl March 1970*—coht. | |
| 4. Call Attention— | |
| Hardship experienced by agriculturists of Thanjavur in transporting their levy paddy Government Go downs ... ... ... | 301-302 |
| 5. General discussion on the Budget for 1970-71—cont ... ... ... ... | 303-357 |
| Papers laid on the Table ... ... ... ... | 357 |
| *Tuesday, 3rd March 1970.* | |
| 1. Questions and Answers ... ... ... | 350-389 |
| Adjournment Motions ... ... ... ... | 393 |
| Statement made in Mysore Assembly by Mysore Chief Minister in regard to implementation of 1924 agreement on utilisation of Cauvery waters ... ... ... ... | 390-393 |
| 3. Announcement— | |
| Adjournment motions ... ... ... | 393 |
| 4. Calling Attention— | |
| Steps to stop dangerous activities of Naxalities and infuse sense of security in the minds of people ... ... ... ... ... | 394-395 |
| 5. General Discussion on the Budget for 1970-71—cont. ... ... ... ... ... | 396-455 |
| 6. Papers laid on the Table ... ... ... | 455 |

*How to use the index.*

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill (s)'

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee (s)', 'Council (s)', 'Corporation (s)', etc.

Various subjects like Schools, College, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below—

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | ... | Adjournment Motion. |
| Ann. | ... | Announcement. |
| B.O.H. | ... | Business of the House. |
| C.A. | ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A. St. | ... | Calling Attention Statement. |
| Consid. | ... | Consideration stage of a Bill. This stage includes: (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee. (iii) Amendment to circulate. (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. (v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. | ... | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | ... | Demands for Excess Expenditure |
| Dis. S.D. or D.S.D. | ... | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | ... | Demands for Supplementary Grants. |
| G.A. | ... | Governor's Address. General discussion. |
| H.A.H. Dis./H.H.D. | ... | Half-hour Discussion. |
| Int. | ... | Introduction stage of a Bill. |
| L.A. | ... | Legislative Assembly. |
| L.C. | ... | Legislative Council. |
| M. | ... | Motion. |
| P.M. | ... | Privilege Motion. |
| R/Res. | ... | Resolution. |
| St. | ... | Statement. |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

**வியாழக்கிழமை, 1970 பிப்ரவரி 26**

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **புலவர் கா. கோவிந்தன்** *அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

## 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

*Centre-State Relations*

* 109 Q.—Dr. H.V. HANDE, Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR, Thiru K. VINAYAKAM:—Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that this Government has appointed a three man Commission to go into the sharing of power between Central and State Governments ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** *(அ) ஆம். மத்திய—மாநில அரசுகளின் தொடர்பு குறித்து ஆராய்வதற்கான குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது.*

*(இ) இக்குழுவின் தலைவராக டாக்டர் பி.வி. ராஜமன்னார் அவர்களும், உறுப்பினர்களாக டாக்டர் பி. சந்திரா ரெட்டியும், டாக்டர் எ. லட்சுமணசுவாமி முதலியாரும் உள்ளனர். அவர்களுக்குத் துணையாகச் செயலாளர் ஒருவர் இருக்கிறார். மத்திய—மாநில அரசுத் தொடர்புகள் குறித்து ஆராய்ந்து மாநிலங்களுக்குப் பெருமளவு தன்னாட்சி உரிமை கிட்டும் வழி வகைகளைத் தெரிவிப்பது இக்குழுவின் நோக்கமாகும்.*

**DR. H.V. HANDE :** Sir, may I know the exact terms of reference of this Committee and whether this Committee will take into consideration the fact that the devolution of funds must be made on a statutory basis and not on a discretionary basis ? The present position is that if they want to give some extra money to some State Governments who behave like good boys, the Central Government gives them some extra amount. But, the devolution of funds should be made on a statutory basis. May I know whether this Committee will go into this aspect of the matter also and discuss it specifically and make their recommendations on it ? Otherwise the State Government will be ever at the mercy of the Central Government for the receipt of grants-in-aid, loans and other allotments. We should get whatever is due to us, we should get whatever we are entitled to get. This is possible only if it is made on a statutory basis and not on a discretionary basis. As the question of language is one of the irritants with the Central Government, will the Committee be asked to consider the necessity of having English ? Will the Government request the Committee to take all these aspects also into consideration ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்துள்ள இந்தக் காரணங்களுக்காகத்தான்—அவைகளை ஆராயத் தான்—இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இக் குழு ஒரு வினாப் பட்டியல் தயாரித்து அனைவருக்கும் அனுப்ப இருக்கின்றது. அந்த வினாப் பட்டியல் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் வெகு விரைவிலே கிடைக்கும் அவ்வினாப் பட்டியலில் குறிப்பாக நிர்வாகம்—நிர்வாக அமைப்புக்ள் ; சட்ட மன்றத் துறைகள் ; நிதி—வரி விதிக்கும் அதிகாரம், வருவாயைப் பகிர்ந்து அளிப்பது ; மத்திய அரசாங்கத்திலிருந்து அளிக்கப்படும் கடன், மானியம் ; நீதி பரிபாலனம்—சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட் ; பொதுப் பணி; தேர்தல்கள் ; இதர விஷயங்கள் என்கிற இந்தத் தலைப்புகளில் வினாக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

THIRU K. VINAYAKAM : Of late, the Chief Minister has been propagating a theory that we should have State autonomy at the States and a loose Federation at the Centre. Has this idea also been mooted to the Committee ? Do the Government expect their findings on those lines? Are the Government aware of the fact that when the State-Centre relationship has got to be reconsidered, it cannot be done by the present Parliament and could be done by a Constituent Assembly which will have to be constituted again for this purpose ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் அண்மையில் சொன்னதாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுவது, புதிதாகச் சொன்னதல்ல ; நீண்ட நெடுங்காலமாக எங்களுடைய கட்சி எடுத்துச் சொல்லி வருகின்ற அந்தக் கொள்கைதான் எடுத்துச் சொல்லப்பட்டதேயல்லாமல் வேறல்ல. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிக்கும் பல்வேறு பிரச்னைகளையும் அந்தக் குழு ஆராய்ந்து அறிக்கை அளித்தபின், அந்த அடிப்படையில் தான் நாங்கள் முடிவுகளை எடுப்பதாக இருக்கிறோம்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைக்கப் பட்டிருக்கும் குழு அதனுடைய வேலையை முடிப்பதற்கு ஏதேனும் கால வரம்பு குறிப்பிடப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால், கால வரம்பு நிர்ண யிப்பதற்கு அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** விரைவில் முடித்துத் தர வேண்டும் என்பதுதான் கால வரம்பு.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** ஐயா, அதிகாரங்களைப் பகிர்ந்து அளிப் பது பற்றி ஆராய்ந்து அறிக்கை அளிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும் குழுவிற்கு, ஸ்பெஸிபிக்காக மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் மாநிலங்களைக் கொண்ட கூட்டாட்சி அமைப்பதற்கு வேண்டிய வழிமுறைகளைக் கண்டு ஆராய வேண்டும் என்று ஏதாவது டைரக்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்கள் கொடுக்கின்ற அறிக்கையி லிருந்து நாம் அப்படிப்பட்ட வழிகளைக் காணலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** சார், மத்திய-அரசு மாநில அரசு இவைகளுக்கிடை யே அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளுவதுபற்றி ஆராய்ந்து சிபாரிசு செய் வதற்கு நமது மாநில அரசு அமைத்திருககின்ற இந்தக் குழுவே "ஒன்-ஸைடெட்லவ்" என்று சொல்வார்களே அதுபோல் இருக்கிறது. ஆகவே, இம்மாதிரியான ஒரு குழுவை மத்திய அரசே நியமித்து, எல்லா மாநிலங் களின் பிரதிநிதிகளையும் கொண்டதாக அது அமையுமானால், அது செவ்வனே செயல்படுத்துவதற்கும், பலன் நன்றாக அமைவதற்கும் வாய்ப்பு இருக்கும். ஆகவே, இந்த அரசு அம்மாதிரியான ஒரு குழுவை மத்திய அரசு அமைப்பதற்குச் சிபாரிசு செய்யுமா ?





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நாம் என்ன என்ன உரிமைகளைக் கேட்கலாம் என்பதை அதற்குரிய ஆதாரங்களோடு ஆராய்ந்து அறிக்கை அளிக்கவேண்டும் என்பதற்காகத்தான் இக்குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினரவர்கள் " ஒன்–ஸைடெட் லவ் " என்று குறிப்பிட் டார்கள். அதனுடைய கஷ்ட நஷ்டங்களை நான் கண்டதில்லை. (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** துணைக் கேள்வி போடுவது, மூலக் கேள்வியிலிருந்து எழும் செய்திகளைத் தெரிந்துகொள்ளுவதற்காகத்தான். கருத்துக்களைச் சொல்வதற்கல்ல.

**திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் :** மத்தியிலிருந்து அதிகாரங் களை மாநிலத்திற்கு அதிகமாகத் தரவேண்டும் என்று கோருவ்து நியாயம் தான். இருந்தாலும், அதற்கு முன்பு, மாநிலத்திலே இருக்கின்ற அதிகாரங்களை ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் பிரித்துக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது கொள்கைகளை வகுக்கின்ற அரசாங்கத்தைப் பொறுத்திருக்கிறது. அது வகுக்கின்ற திட்டங்களை ஏற்று நடத்துவதற்கே தவிர, கொள்கைகளைப் பொறுத்ததல்ல.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தரப்பட வேண்டும் என்பதைத் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஒத்துக்கொண்டுள்ளனவாகையால் சர்வ கட்சித் தலைவர்களைக் கலந்தாலோசனை செய்து, சட்டமன்றத்தின் மூலம் அரசியல் சட்டத்தைத் திருத்த ஒரு தீர்மானம் நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய இந்த அரிய யோசனையை, இந்தக் குழுவினுடைய அறிக்கை வந்தபிறகு நாம் செயல்படுத்தலாம் என்று முன்பே ஒரு கருத்து இருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Regarding the terms of reference of this Committee, did the Government make any mention about their language policy, viz., 'Hindi never' and 'English ever' ? Was this idea also mooted to this Committee so as to enable them to formulate their theories and expositions on those lines ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாநிலங்களுக்கு இருக்கவேண்டிய அதிகாரங்களில் நம்முடைய மொழி எது என்று நிர்ணயிக்கின்ற அதிகார மும் கூட இருப்பதில் தவறு ஏதும் இல்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்ற கோரிக்கை, இந்திய அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட காலத்திலிருந்து இந்தியாவிலிருக்கும் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வந்தாலும், நம்முடைய அரசு இந்த விஷயத்தில் தீவிர ஆலோசனை செய்து, தகுதிவாய்ந்த மூவரை நியமித்து இதுபற்றி ஆராய்ச்சி செய்துகொண்டிருப்பதை எல்லோரும் பாராட்டுவது அரசினு டைய கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நல்லவர்களெல்லாம் பாராட்டுகிறார் கள்.

**திரு. கே. ஆர். கோவிந்தன் :** மாநிலங்களுக்கே அதிக அதிகாரங்கள் பகிர்ந்து கொடுக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரைக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு இராமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். குழுவின் அறிக்கை வந்தபிறகு அதுபற்றிச் செயல்படுத்தலாம்.

*Cheats in securing seats in Medical Colleges*

*110 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. Chief Minister be pleased to state—

(*a*) whether any special drive was launched by the Police to book cheats indulging in securing seats in Medical Colleges in this State this year; and

(*b*) if so, the number of them so booked?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

(இ) இருவர்மீது வழக்கு புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

THIRU T. MARTIN: May I request the Hon. Chief Minister to state when this case was booked, when the charge-sheet was filed and why there has been such a long delay in investigating this case?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** புலன் விசாரணை நடைபெற்று வருகிறது என்று மாத்திரம்தான் என்னால் சொல்ல முடியும். தாமதத்திற்கான காரணங்களை இனிமேல்தான் ஆராய வேண்டும்.

**திரு. கே. போஜன்:** தலைவர் அவர்களே, இம்மாதிரி கல்லூரியொன்றில் இடம் வாங்கித் தருவதாகச் சொல்லியது குறித்து முன்னாள் அமைச்சர் ஒருவர் கைது செய்யும்படியாக இருந்ததே, அதனுடைய நிலைமை என்ன? அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தக் கேள்வியுனுடைய அடிப்படையே அதுதான். அதைத்தான் திரு மார்டின் அவர்கள் தொடர்ந்து கேட்டார்கள். அதற்கான பதில் சொல்லியிருக்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அந்த இரண்டு பேர்கள் யார் யார்? என்ன குற்றம் செய்தார்கள் என்பதற்காகவேண்டி இந்தத் தாவாவில் நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது ஏற்கனவே பத்திரிகையில் செய்தியாக வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் படித்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவர் அவர்களே, அரசியலிலே முக்கியப் பதவிகளில் இருப்பவர்கள் வைத்தியக் கல்லூரியில் இடம் வாங்கித் தருவதாகப் பணம் வாங்கி, இடம் வாங்கித் தராமல், பணத்தையும் திருப்பித் தராமல் இருப்பதைப்பற்றி அரசாங்கத்திற்குத் தகவல் வந்ததா? தகுந்த ஆதாரத்துடன் அவர்களைப்பற்றி இங்கு எடுத்துக் கூறினால் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தகுந்த ஆதாரங்களுடன் எடுத்துக் கூறினால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

*Name boards in public Offices and Schools in Hosur taluk*

*111 Q.—Thiru B. VENKATASWAMY: Will the Hon. Chief Minister be pleased to state :—

(*a*) whether there is any proposals to introduce Telugu and Kannada name boards in addition to Tamil in public offices and schools in Hosur taluk in view of the recognized minorities in our State; and

(*b*) if so, when it will be implemented?





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) & (இ). சிறுபான்மை மொழி பேசுகின்ற மக்கள் குறிப்பிடத்தக்க அளவில் வாழ்கின்ற பகுதிகளில், உள்ளாட்சி மன்றப் பெயர்ப் பலகைகளும், அவற்றின் ஆட்சிக்குள்ளடங்கிய நிறுவனங்களின் பெயர்களும் பெயர் பலகைகளும் தமிழில் மட்டுமின்றி முறையே அந்தந்தச் சிறுபான்மை மொழிகளிலும் எழுதப்பட வேண்டுமென அரசு பொது ஆணைகள் பிறப்பித்துள்ளது. எனவே, ஒசூர் வட்டத்தில் தெலுங்கு பேசுகின்ற மக்கள் வாழும் பகுதிகளில் தமிழிலும் தெலுங்கிலும், கன்னடம் பேசுகின்ற மக்கள் உள்ள பகுதிகளில் தமிழிலும் கன்னடத்திலும் பெயர்ப்பலகைகளை நிறுவவேண்டுமென தலைமையாசிரியர்களுக்கு மாவட்டக் கல்விச் சிறப்பு அலுவலர் கட்டளை பிறப்பித்தார்.

THIRU B. VENKATASWAMY: In the recognised areas where minorities live, in public offices like Taluk Office, Collector's Office and other offices, people are unable to locate which office is which because local language is not mentioned in those offices. Will this Government come forward to publish the local language also in the public offices including those of Highways and other departments?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதையும் ஆராய்ந்து உரிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும்.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, இந்த அரசாங்கக் கணக்குப்படி சிறுபான்மையினர் மொழிகள், தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் எத்தனை மொழிகள் இருக்கின்றன? எத்தனை மொழிகள் இருக்கின்றன என்பதற்கு அரசாங்கம் வழி செய்யும் குறிப்பு ஏதாகிலும் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது ஆகிய மொழிகள் மட்டும்தான்.

**திரு. எம். சுரேந்திரன் :** இந்த மாநிலத்தில் சிறுபான்மை மொழியினர்கள் இருக்கின்ற பகுதிகள் என்று ஏதாவது குறிப்பிட்ட பகுதிகள் பிரிக்கப்பட்டு, அறிவிக்கப்பட்டிருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** செங்கற்பட்டு மாவட்டத்தில் திருத்தணி, திருவள்ளூர், பொன்னேரி ஆகிய வட்டங்களும், கன்யாகுமாரி மாவட்டத்தில் கல்குளம். விளவங்கோடு ஆகிய வட்டங்களும், வட ஆற்காடு மாவட்டத்தில் வாணியம்பாடி சப்-தாலுக்கா, வேலூர் ஆகிய வட்டங்களும், ராமநாதபுரம் மாவட்டத்தில் இராஜபாளையம் சப்-தாலுக்கா, சாத்தூர் ஆகிய வட்டங்களும், மதுரை மாவட்டத்தில் கொடைக்கானல், பழனி ஆகிய வட்டங்களும், நீலகிரி மாவட்டத்தில் உதகை, குனூர், கூடலூர் ஆகிய வட்டங்களும், சேலம் மாவட்டத்தில் ஹொசூர் வட்டமும், கோவை மாவட்டத்தில் கோயம்புத்தூர், உடுமலைப்பேட்டை, பல்லடம், அவினாசி, தாராபுரம், பொள்ளாச்சி, கோபி ஆகிய வட்டங்களும் இந்த நிலையில் ஒதுக்கப்பட்டுள்ளன.

**திரு. கே. விநாயகம் :** தமிழகத்தில் எப்படிச் சிறுபான்மையினர் வாழ்கின்றார்களோ, மற்ற மொழியினர்கள் வாழ்கின்றார்களோ, அதே மாதிரி ஆந்திரப் பிரதேசத்தில் நெல்லூர், திருப்பதி, சித்தூர் ஆகிய இடங்களில் எத்தனையோ தமிழர்கள் வாழ்கிறார்கள். அங்கெல்லாம் இந்தச் சலுகை இப்பொழுது தரப்படுகிறதா? நம்மைப்போல் அவர்கள் தாராள உள்ளம் (குறுக்கீடு)—ஐ ஆம் கமிங் டு தி பாயிண்டு—அதேமாதிரி அவர்கள் அங்கு விட்டுக் கொடுக்கவில்லை என்பது தெரியும். எப்படி அவர்களுக்கு நாம் சலுகை தருகிறோமோ, அதே மாதிரி நம் மக்களுக்கும் அவர்கள் சலுகை தர வேண்டும். அதற்கு நமது அரசாங்கம் தக்க

நடவடிக்கை எடுத்துக் கொண்டு, அந்த அரசாங்கத்திற்கு எழுதி, அவர்கள் நம் கோரிக்கையை நிறைவேற்றினார்களா என்பது தெரிந்த பிறகு எங்களுக்குத் திரும்பவும் சட்ட மன்றத்தில் பதில் சொல்வார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய தகவல் உண்மையாக இருந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கு மாறு அந்த அரசுக்கு இந்த அரசின் சார்பில் வேண்டுகோள் விடப்படும்.

Dr. H.V. HANDE : The Hon. Chief Minister while answering the main question said that orders had been passed to recognise some languages as minority languages and even name boards would be in those languages. May I know when that order was issued and from what date it would be given effect to ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்படிப்பட்ட உத்தரவுகள் 1961-ம் ஆண்டிலேயே அரசு ஆணையின்படி போடப்பட்டிருக்கின்றன.

Thiru B. VENKATASWAMY : Is it a fact that officers are not implementing the recommendation of the Minority Commissioner and the State Government's recommendations in the concerned areas will this Government come forward to instruct such officers to strictly implement the orders passed by our State Government ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தக் கேள்வியையும், அளிக்கப் படுகின்ற பதிலையும் பயன்படுத்திக் கொண்டே கூட இந்த அதிகாரிகள் செயல்படுவார்கள் என்று நம்புகிறேன். அங்கு ஒன்றும் இங்கு ஒன்று மாகச் செயல்படுத்தப்படாமல் இருக்குமானால், உறுப்பினர் அதைச் சுட்டிக் காட்டுவார்களேயானால், அரசு உடனே நடவடிக்கை எடுக்கும்.

### *English medium in Pre-University Course*

* 112 Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the Government has passed orders to have only one section in Pre-University Course in Government Colleges for English medium ; and

(*b*) if so, for what reasons ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :—**

(அ) ஆம்.

(இ) கல்வியின் ஒவ்வொரு நிலையிலும் தமிழ் மொழியைப் பயிற்சி மொழியாகத் தீவிரமாகப் பயன்படுத்துவதற்குரிய அரசின் திட்டத்தை ஒட்டியதாகும்.

**திரு கே. விநாயகம் :** கல்லூரிக் கல்வி நம்முடைய தாய் மொழியிலேயே பயில வேண்டும் என்பதில் எனக்கு அபிப்பிராய பேதமில்லை. ஆயினும், அதைப் படிக்கின்ற மக்கள், மாணவர்கள், அவர்கள் தங்களுடைய தாய் மொழியை நேசித்தாலும், தங்களுக்கு ஆங்கிலம்தான் வேண்டும் என்று வற்புறுத்தி, உள்ளே வந்த பிறகு, தமிழ் மொழி வகுப்பில் சேர்ந்த பிறகு, தங்களுக்குத் தமிழ் மொழி வேண்டாம், ஆங்கிலம்தான் வேண்டும் என்று கிளர்ச்சி செய்து, அவர்கள் வேண்டுகோள் விடுத்ததாக எனக்குத் தெரிய வருகிறது. அதைப்பற்றி அரசாங்கம் என்ன நினைக்கிறது? அதனால், ஆங்கிலமும் இருக்க வேண்டும், தமிழும்



இருக்க வேண்டும், போதிய அளவுக்கு ஆங்கில வகுப்புகள்—நாட் ஒன் செக்ஷன்—எத்தனை பிள்ளைகள் வருகிறார்களோ அத்தனை பிள்ளைகளுக்குத் தகுந்தாற்போல் வகுப்புகளை அதிகப்படுத்துவதற்கு அமைச்சு யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தமிழ் மொழியைப் பாட பயிற்சி மொழியாக்க வேண்டும் என்ற எண்ணம் நீண்ட நெடுங்காலமாக இருந்து கொண்டு வருகிறது. அதை நடைமுறைப் படுத்தும் கடப்பாட்டில் நாம் அனைவரும் இருந்து வருகிறோம். ஆங்கிலம் படிப்பதற்கு வாய்ப்புகளே இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால், அரசாங்கக் கல்லூரிகளில்தான் இது தீவிரமாக அமுல்படுத்தப்பட்டு வரு கிறது. தனியார் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், நாம் அவர்களைக் கேட்டுக்கொள்கிற நிலை இருக்கிறதே தவிர, சட்டத்தின் மூலம் கட்டாயப் படுத்தி, தமிழைத் தான் பயிற்சி மொழியாக வைக்க வேண்டும் என்ற நிலை இல்லை. புகுமுக வகுப்புகளிலுள்ள 60,000 இடங்களில் 46,000 47,000 இடங்கள், ஆங்கிலத்தில் எடுத்துப் படிப்பதற்கு வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன. ஆங்கிலத்தில் படிக்க வேண்டும் என்று விரும்புகிற மாணவர்களுக்குத் தனிப்பட்ட கல்லூரிகளில் அதற்கான வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன. தமிழைப் பாட மொழியாக ஆக்குகின்ற முயற்சியை என்றாவது, எந்தக் கட்டத்திலாவது எடுத்துக் கொண்டுதான் தீரவேண்டும். ஆகையினால், அரசாங்கக் கல்லூரிகளில் ஹ்யூமானிடீஸ் என்று சொல்லப்படுகிற கலை இயல் பாடங்கள் தமிழில் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. இதைப் படிப்படியாகக் கொண்டு செல்கின்ற வகையில் அறிவியல் துறைப் பாடங்களில் ஒரு வகுப்பு கட்டாயம் தமிழில் இருந்தே தீரவேண்டும் என்று வகுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று ஆங்கிலம் படிக்க வேண்டும் என்று விரும்புகின்ற மாணவர்களுக்கு வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன. தமிழைப் படிப்படியாக பாட மொழியாக ஆக்கவேண்டும் என்ற முயற்சியில் அரசாங்கம் பொறுப்பு உணர்ச்சியோடு செய்ய வேண்டிய காரியமாக, அரசாங்கக் கல்லூரிகளில் இதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், சிறுபான்மையினர் இருக்கின்ற இடங் களிலும், மற்ற மாநிலங்களின் எல்லை ஓரங்களில் இருக்கிற கல்லூரிகளி லும், வேறு சில இடங்களிலும், வேறு மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள், அடியிலிருந்தே ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் ஆகியோர்களுக்கு வசதி செய்யும் வகையில், அங்கெல்லாம் ஒரு வகுப்பு கட்டாயமாக ஆங்கிலத்தில் இருக்க வேண்டும் என்று சில கல்லூரிகளில் இத்தகைய வசதி செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. எல். கணேசன் :** தலைவர் அவர்களே, தமிழையும், ஆங்கிலத் தையும் ஒரே சமயத்தில் பயிற்சி மொழியாகக் கொள்ளலாம் என்ற விதி இருக்கும் வரையில் ஆங்கிலத்தில்தான் பயில வேண்டும் எனும் ஆர்வம் அதிகம் இருக்கிறது. எப்படியாவது தமிழைப் பயிற்சி மொழியாக்க வேண்டும் என்று விரும்புகிற காரணத்தினால், எந்தப் பாடத்தை எந்த மட்டத்தில், தமிழைப் பாடமொழியாகக் கொண்டு வரமுடியும் என்ற நிலை உளதோ, அந்தப் பாடத்தை அந்த மட்டத்தில் தமிழை மட்டுமே பயிற்சி மொழி ஆக்கினால்தான் தமிழ் மொழியில் பயிற்சி பெறுவதற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவதால், அப்படிக் கொண்டு வருவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிக் கட்டாயப்படுத்தும் சூழ்நிலை இல்லை. ஒவ்வொரு கல்லூரியில் சிலபல பாடங்கள் இருக்கின்றன. சிலபல பாடங்கள் இருக்காது. எல்லாக் கல்லூரிகளிலும் எல்லாப் பாடங்களும் இல்லை. எந்தெந்தப் பாடத்தை யார் யார் விரும்புகிறார்களோ, அந்தந்தக் கல்லூரியை அவரவர்கள் நாடிச் செல்கிறார்கள். அரசாங்கக் கல்லூரிகளில் புகுமுக வகுப்புகளில் கலையியல் துறைப் பாடங்கள் அத்தனையும் தமிழிலேயே இருக்கும். இதை விரும்பிப் படிக்கிறவர்கள், இதிலே சேர விரும்புகிறவர்கள் இந்தப் பாடத்தை எடுத்துப் படிக்கலாம். ஆங்கிலத்தில் படிக்க வேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கு வாய்ப்புகள் இருக்கின்றன வேறு சில கல்லூரி

களில் ; ஒரேடியாக அதற்கு வாய்ப்பே இல்லாமல் இல்லை. ஆங்கிலத்தில் படிக்க விரும்புகிறவர்கள் அந்தக் கல்லூரிகளை நாடிப் படிக்கலாம். எந்த மாணவரையும் அல்லது பெற்றோரையும் இதைத்தான் எடுத்துப் படித்துத் தீர வேண்டும் என்று வற்புறுத்துவதோ அல்லது வலுக்கட்டாயப்படுத்துவதோ, அப்படிப்பட்ட நிலை இல்லை. அரசாங்கக் கல்லூரிகளில் இதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆங்கிலத்தில் படிக்க விரும்புகிறவர்களுக்கு, அதற்கான வசதி செய்யப்பட்டிருக்கிறது. எந்தவிதமான கட்டாயத்திற்கோ, வற்புறுத்தலுக்கோ இடமில்லை. படிப்படியாக இதைக் கொண்டுவந்தாக வேண்டும். ஏதேனும் ஒரு கட்டத்தில் துவங்கியேதான் தீரவேண்டும், அதற்கான கஷ்ட நஷ்டங்களை இந்தத் தலைமுறையினர் தாங்கித்தான் தீரவேண்டும். இந்த நோக்கங்கள் ஈடேற வேண்டும் என்ற அடிப்படையில், இருள் அகன்று பகல் வருவது போன்று, படிப்படியாக மாற்றங்கள் செய்யப்படுகின்றன. ஸ்விச் ஓவர் என்ற முறையைக் கூட கைக்கொள்ளவில்லை. அதாவது பொத்தானை அழுத்தியவுடன் இருள் நீங்கி, உடனே எல்லா ஒளியும் வந்துவிடும் என்ற முறை கூட இல்லை. இருள் நீங்கி பகல் வருவது போன்று படிப்படியாக, ஆனால் திட்டவட்டமாக, அழுத்தந்திருத்தமாக இதைக் கொண்டு வருகிற நிலையில், அதன் மூலம் இது நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகிறது.

**திரு. ம. பொ. சிவஞானம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழும் படிக்க வேண்டும், ஆங்கிலமும் படிக்க வேண்டும் என்று இரண்டு ஜாதிகளைத் தோற்றுவிக்கின்ற அளவில் நடைபெறுவதாகத் தெரிகிறது. தமிழை எடுத்துப் படிக்கும் மாணவர்கள் தங்களுக்கு உத்தியோகம் கிடைக்காதோ என்று பயப்படுகிறார்கள். எந்த அளவில் அவர்களுக்குச் சலுகை கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது ? அப்படிச் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை யொட்டி எந்த எந்த அலுவலகங்களில் தமிழில் அலுவல்கள் நடக்கின்றனவோ அங்கெல்லாம் தமிழைப் பாடமொழியாக எடுத்துப் படித்தவர்களுக்கு முதல் சலுகை கொடுக்கப்படுகிறது. அந்த வகையிலும் முயற்சிகள் செய்யப்படுகின்றன.

**திரு. கே. விநாயகம் :** தமிழ் போதனா மொழி என்று சொல்லிக் கொண்டு வருகிறோமே தவிர, அமைச்சர்களும், சட்ட மன்ற உறுப்பினர்களும் வெகு நாட்களாகச் சொல்லிக் கொண்டு வருகிறோம் என்றாலும் கூட, நம்முடைய அமைச்சர்களுடைய பிள்ளைகளும், மன்ற உறுப்பினர்களுடைய பிள்ளைகளும் எத்தனை பேர்கள் தமிழைப் படிக்கிறார்கள், எத்தனை பேர்கள் ஆங்கிலத்தைப் படிக்கிறார்கள் என்பதற்கான கணக்கு இருக்கிறதா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விக்கும் தங்கள் துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

Thiru K. VINAYAKAM: It is against our policy.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது வேறு. ஆனால், கேள்வி நேரத்தில், எந்தவிதமான குற்றச்சாட்டும் இருக்கக் கூடாது.

Thiru K. VINAYAKAM : I am only asking for information. குற்றச்சாட்டே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படிக் கேட்கும் இன்பர்மேஷன் மூலக் கேள்விக்குக் கொடுத்திருக்கும் விடையை ஒட்டியதாக இருக்க வேண்டும். அதற்கு அப்பால் போகக் கூடாது.

**திரு. கே. விநாயகம் :** போகவில்லை.



DR. H. V. HANDE : On a point of order, Sir, please allow a half-hour debate or a little more time for this very important question. I have been raising my hand for the last three or four minutes.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் எல்லாக் கேள்விகளுக்கும் துணைக் கேள்விகள் கேட்க இடமளிக்க முடியாது. ஒரு மணி நேரந்தான் கேள்விகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றது. 20 கேள்விகள் இருக்கின்றன. ஒரு கேள்விக்கு ஐந்து நிமிடம் என்று வைத்தாலும் கூட, அவற்றை முடிக்க முடியாது. தாங்கள் குறிப்பிடும் கருத்துக்களை இன்றைக்குப் பேரவைமுன் வைக்க இருக்கும் நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது குறிப்பிடலாம். அதற்கு வாய்ப்பு இருக்கிறது. இன்னமும், கல்வி மானியத்திற்கு இரண்டு நாள் போதுமா, அதிகம் வேண்டுமா என்பதை பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் தீர்மானிக்க இருக்கிறோம்.

DR. H.V. HANDE : I will ask only one supplementary question.

MR. SPEAKER : No. No.

### மதிய உணவுத் திட்டம்.

*** வினா 113.—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதிய உணவுத் திட்டத்திற்காக "கேர்" நிறுவனம் இதுவரை (1969 மார்ச் வரை) தமிழகத்திற்கு எவ்வளவு பணம் தந்துள்ளது ?

(இ) இந்தப் புதிய திட்டம் எந்தெந்த மாவட்டங்களில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) 17,57,20,000 ரூபாய்.

(இ) இந்தப் புதிய திட்டம் தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும், நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

**திரு. பெ. மலைச்சாமி :** இந்த நிறுவனத்தின் உதவியால் எத்தனை மாணவர்கள் பயன் பெறுகிறார்கள் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ரூ. 17 லட்சம் அளவில் 29,000 மாணவர்கள் 200 நாட்களுக்குப் பயன் பெறுகிறார்கள்.

**திரு. வி. எஸ். கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, மதிய உணவிற்காக சர்க்கார் ஆறு பைசாவும், பொதுமக்கள் நன்கொடை பஞ்சாயத்துக்கள் மூலம் 4 பைசாவும், ஆக 10 பைசா என்று கணக்கு வைத்துச் செய்வதில், பொதுமக்களிடமிருந்து வருவதில்லை. ஆகவே, கணக்கு பத்து பைசா என்று இருந்தாலும், ஆறு பைசாவையே செலவழித்து விட்டு, கணக்குக் கொடுத்து விடுகிறார்கள். ஆகவே, இந்த நான்கு பைசாவையும் அரசாங்கமே கொடுத்து, 10 பைசாவிற்கும் மதிய உணவு கொடுக்க முயற்சி செய்யப்படுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்வி "கேர்" நிறுவனத்தின் உதவி பற்றியது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மதிய உணவுக்காகப் பொதுமக்கள், ஊராட்சி மன்றங்கள் கொடுப்பது குறைவாக இருக்கிறது. அதோடு "கேர்" நிறுவனத்தின் சார்பில் ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு மத்திய சமையல் அறை கட்டப்பட வேண்டும் என்று திட்டம் இருக்கிறது. இப்பொழுது செங்கற்பட்டில் அது நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த ஆண்டு 30 ஊராட்சி ஒன்றியங்களில் இப்படி மத்திய சமையல் அறை கட்டத் திட்டமிட்டிருக்கிறது. இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகளில் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் இந்த சமையல் அறை வந்துவிட்டால், இந்தக் குறைபாடு பெரும் அளவிற்குக் குறைந்துவிடும். ஆறு பைசா என்று, கொடுக்கும்போதே சர்க்கார் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் மதிய உணவிற்காகச் செலவழிக்கிருர்கள்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** சபாநாயகர் அவர்களே, மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்க "கேர்" ஸ்தாபனமும், சர்க்காரும் உதவி அளிக்கிருர்கள். ஆனாலும் இந்த வேலையில் ஆசிரியர்கள் பயன் படுத்தப்பட்டு, தங்கள் ஆசிரியக் கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, ஆசிரியர்கள் பொறுப்பு இல்லாமல் இந்த மதிய உணவுத் திட்டத்தை அமுல் படுத்த சர்க்கார் முயற்சிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** அத்தகைய குறைகள் பெரும் அளவிற்குக் குறைக்கப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்கள் தங்கள் ஓய்வு நேரங்களில், இந்தத் திட்டத்திற்குத் தூண்டுகோலாக இருந்து சமூகப் பணி என்ற வகையில் பணிபுரிகிருர்கள். முன்பு குறிப்பிட்டது போல, மத்திய சமையல் அறை வந்துவிட்டால், இவர்களுக்கு மேற்பார்வை பார்க்கும் பொறுப்புத்தான் இருக்கும். அவர்கள் இதைப் பொதுத் தொண்டில் ஒன்ருகச் செய்வது பாராட்டப் பெறும், போற்றப் பெறும். எங்கும் வற்புறுத்தும் நிலை இல்லை.

**திரு. ஆலடி அருணு :** தலைவர் அவர்களே, "கேர்" நிறுவனம் தவிர, வெளிநாடுகளிலிருந்து வேறு பல நிறுவனங்களிலிருந்து, அரசுக்கு நேரிடைத் தொடர்பு இல்லாமல், பல்வேறு வகையில் உதவி பெறுவதைத் தடுத்து, எல்லாம் அரசாங்கத்தின் மூலமாகத்தான் பெற வேண்டும் என்று ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல, புகார் இருப்பதாகத் தெரியவில்லை. கூடுமான வரையில் கல்வித் துறையின் மூலமாகத்தான் எல்லாம் செயல்படுத்தப்படுகின்றன. ஏதாவது ஊழல்கள் இருந்தால், அதைச் சுட்டிக் காட்டினுல், அவற்றை அகற்றி எல்லாவற்றையும் கல்வித் துறைமூலம் செயல்படுத்த, ஏற்பாடுகள் செய்யப்படும்.

## பரமக்குடிக்கு வட்டமைய மருத்துவ மனை.

* **114 விஞ.—திரு. வீ. மலைக்கண்ணன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பரமக்குடியில் வட்ட மைய மருத்துவமனை (Taluk Headquatrers Hospital) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) அண்ட் (இ) : சுமார் ரூ. 9·62 லட்சம் செலவில் 38 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை பரமக்குடியில் கட்ட செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையிலுள்ளது.



**திரு. வீ. மலைக்கண்ணன் :** அவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி பகுதி வரட்சியான பகுதி. ஆகவே, மக்கள் செலுத்த வேண்டிய பங்குத் தொகையை அவர்களால் செலுத்த முடியவில்லை. ஆகவே, அதையும் அரசாங்கமே கொடுத்து, மருத்துவ மனையைக் கட்ட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பொதுமக்களிடத்தில் ரூ. 4 லட்சம், ரூ. 9 லட்சத்தில் சுமார் பாதித் தொகை, வசூல் செய்யவேண்டும் என்று, மாவட்ட ஆட்சித் தலைவரைக் கொண்ட குழு அமைக்கப்பட்டிருக்கிறது. நன்கொடை முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைமையாகக் கொண்டு, அந்த அடிப்படையில் முயற்சி செய்யப்படுகிறது. அதில் உறுப்பினர் போன்றவர்கள் முயன்ருல் முடியாதது ஒன்றும் இல்லை. இதைவிட சிறிய ஊர்களில் கூட, மக்கள் நன்கொடைகள் கொடுத்திருக்கிருர்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் போன்றவர்கள் முயன்று செயல்பட்டால், நான்கு லட்சம் ரூபாய் திரட்டுவது கடினம் இல்லை. ஆகவே, இதில் அவர்களும் ஈடுபட வேண்டும். அரசாங்கமும் தன் பங்கைச் செய்யும் என்று கூற விரும்புகிறேன்.

## வேலூரிலுள்ள மீனளத்துறை.

* **115 விஞ.—திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம் வேலூரிலுள்ள "மீன் இலாகாவுக்கு" ஆண்டொன்றுக்கு ஆகும் செலவு என்ன ?

(இ) மீன் விற்பனை மூலம் ஆண்டொன்றுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) 1968–69-ம் ஆண்டுக்கான மொத்தச் செலவு ரூ. 14,509·72.

(இ) 1968–69-ம் ஆண்டில் கிட்டிய மொத்த வருவாய் ரூபாய் 17,544·62.

**திரு. மா. பா. சாரதி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இலாகாவை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற அளவில் செயல்படும்போது, நஷ்டத்தில் போகிறதே. அதைத் தடுத்து, லாபகரமாகச் செய்ய, திட்டத்தை விரிவுபடுத்த முயற்சி செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, நான் கூறியிருப்பது நஷ்டம் இல்லை. பதினேழாயிரம் சொச்சம் வரவு என்றும், பதினாலாயிரம் சொச்சம் செலவு என்றும் சொன்னேன். மூவாயிரம் லாபத்தில் இருக்கிறது. நஷ்டம் இல்லை.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, மீன் இலாக்கா மூலமாக பஞ்சாயத்து யூனியன்களுக்கு விரால் போன்ற மீன் குஞ்சுகள் சரியான முறையில் வழங்கப்படுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கக்கூடிய ஈ.ஓ.ஏ.எச்-சுக்கும் கால்நடை விஸ்தரிப்பு அதிகாரிகளுக்கும் சரியான தொடர்பு இல்லாததனுலே சரியான முறையில் பஞ்சாயத்து யூனியன்களிலே மீன் வளர்ப்பதற்கு இடையூருக இருக்கிறது என்பது தெரியுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அது பற்றி விவரம் இல்லை. மீன் வளர்ப்பில் ஆண்டு ஒன்றுக்கு ஆகின்ற செலவைவிட அதிகமான வருமானம் வரக்கூடிய அளவுக்கு எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

## இந்திய-நார்வே மீன் பிடித் தொழிலாளர்கள்.

* 116 வினா.—**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்டபத்தில் இருக்கும் இந்திய-நார்வே மீன்பிடித் திட்டத் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகள் அடங்கிய மனுவை அரசுக்கு அனுப்பியுள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) சட்ட மன்றப் பேரவைமுன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** மேசையின் மீது வைக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் சாதாரண இலாக்காவில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு எப்படி உள்ளதோ அந்தச் சட்டத்தைப் பற்றிய விவரம்தான் கொடுக்கப்பட்டுள்ளது. பாலைவனம் போன்று எவ்வித வசதியும் இல்லாத கடற்கரைகளில் வேலை செய்யும் மீன் பிடி தொழிலாளர்கள்.. ................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைப் போடுங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** படகு கட்டும் தொழிலாளர்களுக்கு விபத்து ஏதாவது ஏற்பட்டால் அங்கிருந்து பல மைல்களுக்கு அப்பால் உள்ள மருத்துவ மனைகளுக்கு எடுத்துச் செல்வதற்குமுன் பலர் உயிரிழக்கும்படியான நிலை இருக்கிறது என்பது தெரியுமா ? ஆகவே, உடனடியாக மருத்துவ மனை கட்டுவதற்கான முயற்சி செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இப்போது அந்தத் தொழிற்கூடத்தில் பணிபுரிகிற தொழிலாளர்களுக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டால் உடனடியாக முதல் உதவி அளிக்க வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. அச் செலவுகளை எல்லாம் அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது.

ஊராட்சி ஒன்றிய மருத்துவ அதிகாரியை, தொழிலாளர்களைக் கவனித்துக் கொள்வதற்காக நியமிப்பதற்கான செயற்குறிப்பை மீனளத் துறை இயக்குநர் இராமநாதபுரம் மாவட்ட மருத்துவ அதிகாரியுடன் கலந்து ஆலோசித்து வருகிறார். அருகிலுள்ள மருத்துவ மனைகளுக்கு நோயாளிகளை எடுத்துச் செல்ல மண்டபத்திலுள்ள படகு கட்டும் தளத்திற்காக ஆம்புலன்ஸ் வண்டி வாங்குவதற்கான செயற்குறிப்பும் உள்ளது என்கிற நல்ல விவரங்கள் எல்லாம் அந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## சேரணி அலுவலகங்கள்.

* 117 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் எத்தனை இடங்களில் சேரணி அலுவகங்கள் திறக்கப்பட்டுள்ளன ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தமிழகத்தில் சென்னை மாநகரில் மட்டும் சேரணி அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களில் சேரணியின் பணிக்காக மாவட்ட ஆட்சியாளரின் வளர்ச்சிப் பிரிவில் மண்டலத் தலைவரின் உபயோகத்திற்காக இடம் கொடுக்க வகை செய்யப்பட்டுள்ளது.

---

நூல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மற்ற எல்லா மாவட்டங்களிலும் இதுபோன்று தனி அதிகாரியை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அதைப்பற்றி இப்போது உத்தேசம் ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவருடைய நிர்வாகத்தில் வளர்ச்சிப்பணிப் பார்வைக்கு ஒரு தலைவர் இருந்தார். அவரிடமே சேரணிப்படைப் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. வினாயகம் :** சேரணிப்படை அதிகாரியாக மாவட்ட அளவில் நியமிக்கப்படுகிற தலைவர்கள் — அரசியல்வாதிகளாக நியமிக்கப்படுகிறார்களா ? உத்தியோகப்பற்றுள்ளவர்களே நியமிக்கப்படுகிறார்களா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** நாட்டுக்கு நல்ல பணி செய்யக்கூடிய உள்ளம் படைத்தவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

THIRU K. VINAYAKAM: Sir, on a point of information, My question is specific, namely, are they officials or non-officials or are they politicians. I want a direct answer from the Government.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தொண்டு உள்ளம் படைத்த உத்தியோகப் பற்றற்றவர்களை நியமித்திருக்கிறோம்.

## தவிடு விநியோகம்.

* 118 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாடுகளுக்குக் கார்டு பெர்மிட் முறை மூலமாக தவிடு விநியோகம் செய்யப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் ? ஒரு மாட்டுக்கு எவ்வளவு தவிடு தரப்படுகிறது ?

(உ) அதைப்போல் வைக்கோலும் விநியோகிக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(உ) இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்தக் கேள்வி நீண்ட காலத்திற்கு முன் போடப்பட்டது. பஞ்ச நிவாரண வேலைகள் நடந்து கொண்டிருந்தபோது மற்ற மாநிலங்களில் இருந்து மாட்டுத் தீவனம் கொண்டுவந்து விநியோகம் செய்யவேண்டிய சூழ்நிலை இருந்ததே, அது உண்மைதானா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, கோதுமைத் தவிடு விநியோகம் 1966 பிப்ரவரியில் இருந்து 1968 வரை இருந்தது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி போட்டு நீண்ட காலம் ஆயிற்று என்று சொன்னீர்கள். லாப்ஸ் ஆகியிருந்த கேள்வியை நீங்கள்தான் 1970-இல் புதுப்பித்திருக்கிறீர்கள்.

[1970 பிப்ரவரி 26

தஞ்சாவூர் மாவட்ட அரிசி ஆலேச் சொந்தக்காரர்கள்.

* 119 விஞ :—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உணவு வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த அரிசி ஆலேச் சொந்தக் காரர்கள் 1968 நவம்பர் மூன்ருவது வாரத்தில் முன்ஞள் முதலமைச்சர் அவர்களேச் சந்தித்தார்களா ?

(இ) அந்தச் சந்திப்பின் விளேவாக எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) ஆடுதுறை 27 குறுவை நெல்லுக்கு 64·5 சதவீதம் அரிசி கொடுக்கப்படவேண்டுமென்று நிர்ணயித்த ஆணே, 64 சதவீதம் அரிசி அரசுக்கு கொடுத்தால் போதுமென்று மாற்றப்பட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தஞ்சை மாவட்டம் உள்பட பல்வேறு மாவட்ட அரிசி ஆலேச் சொந்தக்காரர்கள் அரசுக்குக் கொடுக்க வேண்டிய அரிசியைக் கொடுக்காமல் அதிக விலேக்கு விற்றிருக்கிருர்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அவர்கள்மீது தீவிரமான நடவடிக்கை எடுப்பார்களா ? இன்னமும் கணக்கு முடிக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிருர் கள் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 64 சதவீதம் அரிசி கொடுக்க வேண்டுமென்று ஆணே போட்டிருக்கிருேம். அதற்குக் குறைவாகக் கொடுக்கிறபோது அப்போதே 1-க்கு $1\frac{1}{2}$ மடங்கு 'பெனல்டி' அபராதம் போட்டு வசூலிக்கிருேம். இன்னமும் கணக்குகள் முடியவில்லே என்பது உண்மைதான். விரைவில் கணக்குகள் முடிக்கப்பட்டு எவ்வளவு பணம் அரசுக்கு வரவேண்டுமோ அதை வாங்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: கண்டிரோல் இருக்கும்போது இந்த அரிசி ஆலேச் சொந்தக்காரர்கள் 64 சதவீதம் அரிசி கொடுக்க வேண்டுமென்று நெல்லே ஊற வைத்து, ஊறவைத்து நாற்றம் அடிக் கின்ற நிலேயில் அரிசி கொடுத்தார்கள். கண்டிரோல் நீங்கிவிட்டது. நீங்கியும் கூட அந்த மாதிரியான நாற்றம் அடிக்கின்ற அரிசிதான் இப்போதும் கொடுக்கப்பட்டு வருகிறது. அதைத் தடுக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரிசியின் தரத்தைச் சோதிக்க க்வாலிடி ஆபீசர் என்று போட்டிருக்கிருேம். தரக்குறைவாக இருக்கு மாஞல் 1 சதவீதம் 'கட்' போடுகிருேம். அதையும் வசூல் செய் கிருேம்.

திரு. டி. மார்டின் : 64·5 சதவீதம் என்று இருந்ததை 64 சதவீதம் என்று குறைத்ததால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பாக்கியிருக்கிற மில்களுக்கு இந்த ஆண்டு அரைவைக்கு நெல் கொடுக்கக் கூடாது என்ற உத்தரவை அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அது பற்றி தனியாகக் கேள்வி கேட்க வேண்டும். அம்மாதிரியான ஆணே எதையும் அரசு பிறப்பிக்கவில்லே.



1970 பிப்ரவரி 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விஞ எண் 120 பிறகு எடுத்துக் கொள்ளப்படும். அடுத்த விஞ 121.

போலி முடிகள் தயாரிப்பு.

* 121 விஞ.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசுத் துறையில் போலி முடிகள் (டோப்பாக் கள்) தயாரிக்கப்படுகின்றனவா ?

(இ) ஆம் எனில், ஆண்டுதோறும் எவ்வளவு மதிப்புள்ள போலி முடிகள் தயாரிக்கப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லே.

(இ) கேள்விக்கு இடமில்லே.

திரு. வி. கே. கோதண்டராமன்: பேரவைத் தலேவர் அவர்களே, இந்தப் போலி முடிகளே (டோப்பாக்கள்) நம் நாட்டில் யார் யார் உபயோகப் படுத்துகிருர்கள், யார் யாருக்கு எல்லாம் உபயோகப்படுத்தக் கூடிய நிலைமை இருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

(விடை இல்லே.)

பக்கிங்ஹாம் கால்வாய் மேம்பாட்டுத் திட்டம்.

* 122 விஞ—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) பக்கிங்காம் கால்வாய் மேம்பாட்டுத் திட்டத்திற்காக மத்திய அரசின் உதவி ஏதேனும் கேட்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) ஆம்.

(இ) (1) பக்கிங்ஹாம் கால்வாய் மேம்பாட்டிற்காக ரூபாய் 470 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் பெரிய திட்டம் ஒன்று 1964–65-இல் தயாரிக்கப் பட்டு, நான்காவது திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்காக இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இத்திட்டத்திற்கு இந்திய அரசு இதுவரை இசைவு அளிக்கவில்லே.

(2) மாற்றியமைக்கப்பட்ட நான்காவது திட்டத்தில் ரூ. 44 லட்சம் செலவில் பக்கிங்ஹாம் கால்வாயில் சில சிறு மேம்பாடுகள் செய்வதற்கான திட்டம் ஒன்று, மாநிலத் துறையின்கீழ் அரசிஞல் மேற்கொள்ளப் பட்டது. எனினும், மேற்கண்ட திட்டத்தை மத்திய அரசுத் திட்டமாகக் கருத வேண்டுமென்று இந்திய அரசு கேட்கப்பட்டுள்ளது. ரூபாய் 20 லட்சம் செலவில் பக்கிங்ஹாம் கால்வாயின் தெற்கு, வடக்குப் பகுதிகளில் மேற்கொண்டும் தூர் எடுப்பதற்காக மற்ருெரு திட்டமொன்றும் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் குறித்த செலவு—பயன் விகித ஆய்வு அறிக்கையை அனுப்புமாறு இந்திய அரசு கேட்டுள்ளது. எனவே, இத்திட்டங்கள் ஒப்பளிப்பை எதிர்நோக்கியுள்ளன.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலேவர் அவர்களே, திருத்தி யமைக்கப்பட்ட திட்டத்தின்கீழ் என்ன என்ன அபிவிருத்திகளே அரசாங்கம் செய்திருக்கிறது ? இந்த அபிவிருத்தி வேலேகள் எப்பொழுது முடிவடை யும் ? இதற்கு எவ்வளவு செலவாகும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலேவர் அவர் களே, மாநில அரசுத் துறையின் சார்பாக சில வேலேகளேத் தொடங்கி இருக்கிருேம். அந்த வேலேகளுக்கு இதுவரை, 31—12—1969 வரை 11.12 லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்க்கிருேம்.

[1970 பிப்ரவரி 26

**திரு. இராம. அரங்கண்ணல் :** பேரவைத் தலைவர் அவர்களே, பக்கிங்ஹாம் கால்வாயைச் சீர்திருத்தம் செய்வது என்பது சென்னை மாநிலத்தை மட்டும் பொறுத்த விஷயம் அல்ல. பக்கிங்ஹாம் கால்வாய் உற்பத்தியாவது ஆந்திரப் பிரதேசத்திலாகும். இங்கே, நம் மாநிலத்தில் எப்படி முன்னேற்ற வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவோ, அம்மாதிரி ஆந்திரப் பிரதேசத்திலும் இந்தக் கால்வாயை சீர்திருத்தி மேம்பாடு செய்வதற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா ? இது குறித்து நம் மாநில அரசு ஆந்திர அரசுக்குக் கடிதம் ஏதாவது எழுதியிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பக்கிங்ஹாம் கால்வாய் தென்ளுர்க்காடு மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டம் ஆகிய மாவட்டங்களின் வழியாகச் செல்கிறது. சென்ற புயலுக்கு முன்னல் பல படகுகள் அங்கிருந்து சரக்குகளைப் படகுகளில் ஏற்றிக்கொண்டு சென்னைக்கு வந்துகொண்டிருந்தன. கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக இந்தக் கால்வாயில் தூர் எடுக்காததால், ஆயிரத்திற்கு மேற்பட்ட படகுகள் போக்கு வரத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்தக் கால்வாயில் தூர் எடுத்து, மீண்டும் படகுப் போக்குவரத்தை ஏற்படுத்தும் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, சுமார் 20 லட்சம் ரூபாய் செலவில் பக்கிங்ஹாம் கால்வாயின் தெற்கு, வடக்குப் பகுதிகளில் மேற்கொண்டும் தூர் எடுப்பதற்கான திட்டம் ஒன்று ஒப்புதலுக்காக இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. கே. விநயகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, பக்கிங்ஹாம் கால்வாய் ஒரு “ இன்ட்டர் ஸ்டேட் கெனல் ”. இது ஆந்திரப் பிரதேசத்திலுள்ள மசூலிப்பட்டணத்திலிருந்து நமது மாநிலத்திலுள்ள வேதாரண்யம் வரை செல்கிறது. இந்தக் கால்வாயின் அபிவிருத்தி வேலைகளை நம் மாநிலத்தில் மட்டும் செய்தால் போதாது. மத்திய அரசின் உதவியுடன் ஆந்திர மாநிலத்துடன் சேர்ந்து இதை அபிவிருத்தி செய்ய வேண்டும். இதை “ நேவிகேஷன் கெனலாகச் ” செய்ய ஒரு “ காம்ப்ரஹன்ஸிவ் ஸ்கீம்” போட்டு அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள, மத்திய அரசாங்கத்திடம் உதவிகேட்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா ? இந்தக் கால்வாயில் படகுப் போக்குவரத்து சீராக நடைபெற அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, இப்படி ஒரு ஸ்கீம் ஏற்கனவே போட்டு இதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம்.

## மீனம்பாக்கம் விமான நிலையம்.

***123 விஞ.—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விளுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு அறிஞர் அண்ணு விமான நிலையம் என்று பெயர் மாற்றும்படி மாநில அரசு மத்திய அரசுக்கு எழுதியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்பேரில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.



1970 பிப்ரவரி 26]

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மீனம்பாக்கம் விமான நிலையத்திற்குப் பேரறிஞர் அண்ணு அவர்களின் பெயரை வைக்கவேண்டுமென்று, மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணுநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலுள்ள விமான நிலையங்களுக்கு எந்தத் தலைவர்களின் பெயரையும் வைக்கவில்லை. அந்த அந்த இடத்தின் பெயரால்தான் விமான நிலையங்கள் அழைக்கப்படுகின்றன. எந்த விமான நிலையத்திற்காவது தலைவர்களின் பெயரை வைப்பார்களேயானுல், அதன்பிறகு இதுபற்றி யோசிக்கலாம் என்று சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சர் அவர்கள் நேரிலே பேசியபோது, என்னிடம் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறுர்கள்.

## *Stenographers of Madras Corporation*

* 124 *Q*.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the pay scales of the stenographers working in the Madras Corporation ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** சுருக்கெழுத்தாளர் சம்பள வீதம் பின்வருமாறு :—

| பதவிப் பெயர். (1) | சம்பள வீதம். (2) ரூபாய் |
|---|---|
| 1 மேயரின் சுருக்கெழுத்தாளர் .. .. | |
| 2 மேயரின் நேர்முக எழுத்தர் .. .. | |
| 3 பொறுப்பு அதிகாரியின் நேர்முக எழுத்தர். | 200—10—250—15—400 |
| 4 தலைமை நிருபர் மன்றப் பிரிவு .. .. | |
| 5 நிருபர்கள் (ஆங்கிலம்) மன்றப் பிரிவு .. | |
| 6 நிருபர்கள் (தமிழ்) மன்றப் பிரிவு .. .. | |
| 7 பல்வேறு துறைகளில் 1—6—1960-க்கு முன்னர் வேலையில் எடுத்துக்கொள்ளப் பட்ட சுருக்கெழுத்து தட்டச்சர். | 100—5—160—10—200 |
| 8 பல்வேறு துறைகளில் 1—6—1960-க்கு பின்னர் வேலையில் எடுத்துக்கொள்ளப் பட்ட சுருக்கெழுத்துத் தட்டச்சர். | 100—5—150—8—190 |
| 9 மன்றப் பிரிவின் சுருக்கெழுத்து தட்டச்சர். | 100—5—150—8—190 |

**திரு. நா. காசிராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள பல்வேறு நிலைகளிலுள்ள சுருக்கெழுத்து தட்டச்சர்கள் ஆகியவர்களின் கார்ப்பொரேஷன் சம்பள விகிதங்களையும், நமது மாநில சர்க்காரிலே உள்ள சுருக்கெழுத்து தட்டச்சர்கள் ஆகியவர்களுடைய சம்பள விகிதங்களையும் பார்க்கும்போது, பாகுபாடு இருக்கிறது. அரசாங்கத்திலே வேலை செய்பவர்களுக்கு ரூ. 90—4—110—3—140 என்ற சம்பள விகிதம் இருக்கிறது. ஆனுல் கார்ப்பொரேஷனில் உள்ளவர்களுக்கு சம்பள விகிதங்கள் உயர்ந்த அளவில் இருக்கின்றன. ஆகவே கார்ப்பொரேஷனில் எந்த அளவுக்கு இருக்கிறதோ அதற்குச் சமமாக அரசாங்கத்திலே இருக்கிறவர்களுக்கும் உயர்த்த அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு, அதாவது மாநில அரசாங்கத்திலே உள்ள சுருக்கெழுத்து தட்டச்சர்களுக்கு சம்பள விகிதம் உயர்த்தப்பட வேண்டும் என்ற கேள்விக்கு நான் விடையளிக்க வேண்டியதில்லை. கார்ப்பொரேஷனில் பணியாற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர்கள் அதாவது ஸ்டெனோகிராபர்ஸ் ஆகியவர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பு அதிகம் இல்லை. அரசாங்கத்திலே இருப்பவர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பு இருக்கிறது. கார்ப்பொரேஷனில் பணியாற்றுபவர்களுக்கு இந்தப் பதவி உயர்வு வாய்ப்பு இல்லையென்று 1964-ல் இருந்தே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்த அளவில் கொடுத்தால்தான் இம்மாதிரியான வேலைக்கு வருகிறார்கள். இல்லாவிடில் வேலைக்கு ஆட்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆகவே, இந்த நிலைமை நீடித்து வருகிறது.

### உதகை நகராட்சி மன்றம்

*** 125 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 12—3—1969-ல் நடைபெற்ற உதகை நகராட்சி மன்றக் கூட்டத்தில் எல்லா உறுப்பினர்களும் சபையை விட்டு வெளிநடப்புச் செய்தனரா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) அந்நாள் ஆணையரது போக்கைக் கண்டிக்கும் வகையில் வெளிநடப்பு நிகழ்ந்தது. அவ்வாணையர் வேறிடத்துக்கு தற்பொழுது மாற்றப்பட்டிருக்கிறார்.

### *Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act*

***126 *Q*.–Dr. H. V. HANDE, Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR and Thiru K. VINAYAKAM :** Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that this Government has constituted a five-member committee to examine the provisions of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act and make suitable suggestions for amendment; and

(*b*) the details thereof and the terms of reference ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு 1960-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளை ஆய்வு செய்து, தகுந்த திருத்தங்களைச் செய்வது குறித்து கருத்து வழங்க அதிகாரிகள் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. உள்துறையின் அரசுச்செயலாளர் இக்குழுவின் தலைவராவார். இடவசதிக் கட்டுப்பாடு குறித்து பொறுப்பு வகிக்கும் உள் துறை துணைச் செயலாளர் இக்குழுவின் செயலாளர் ஆவார். சட்டத் துறையின் அரசுச் செயலாளர், சென்னையிலுள்ள இடவசதிக்கட்டுப்பாட்டு அதிகாரி, சென்னை தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்), சென்னையிலுள்ள அரசு வழக்குரைஞர் ஆகியவர்கள் இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

இந்தக் குழு 1960-ம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் நியாய வாடகையை முடிவு செய்வதற்கான கோட்பாடுகளை மாற்றியமைப்பது குறித்து ஆய்வு செய்து, 4-ம் பிரிவிற்குத் திருத்தங்களைச் செய்வது குறித்து கருத்துரைகளை வழங்குவதோடு, 3-வது பிரிவில் கண்டுள்ள இடவசதிக்கட்டுப்பாட்டு விதித்துறைகள் உட்பட இந்தச் சட்டம் முழுவதும் செயல்படுவதை மதிப்பிட்டு, 1970-ம் ஆண்டு செப்டம்பர் திங்களுக்குப் பிறகு இந்தச் சட்டத்தின் செல்திறன் கால அளவை நீட்டிப்பதற்கான தேவையைப்பற்றியும் ஆய்வு செய்யும். நன்கு விளம்பரப்படுத்திய பிறகு ஆய்விலுள்ள பொருள் குறித்து, இக்குழு பொது மக்களிடமிருந்தும் வழக்கறிஞர் சங்கங்களிடமிருந்தும் கருத்துக்களைப் பெற்று வருகிறது. இக்குழு 30—4—1970-க்குள் தனது அறிக்கையை அரசுக்குப் பணிந்தனுப்ப வேண்டும்.



**திரு கே. விநாயகம் :** தற்போது அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட இந்தக் குழுவிலே உத்தியோகஸ்தர்கள்தான் இடம் பெற்றிருக்கிறார்களே தவிர இந்த மசோதாவாலே பாதிக்கப்பட்ட வீட்டுச் சொந்தக்காரர்களோ, குடியிருப்பவர்களோ அல்லது அவர்களுக்காக வாதாடுகின்ற வழக்கறிஞர்களோ இல்லை. இதன் காரணமாக இந்தச் சட்டம் ஓட்டையாக இருக்கிறது, பயன்படாமல் இருக்கிறது. ஆகவே பிரதிநிதிகளாக இவர்களில் இருந்தும் போடவேண்டும். வழக்கறிஞர்கள், எங்களைப் போன்றவர்கள் அல்ல, யாராக இருந்தாலும் அவர்களையும் போட்டு இந்தச் சட்டத்தை ஒரு காம்ப்ரஹென்ஸிவ் சட்டமாக ஆக்கக்கூடிய முறையிலே—ஏனென்றால் இந்தச் சட்டம் மூன்று ஆண்டுக்கொருமுறை நீடிக்கப்பட்டுக்கொண்டு வருகிறது. எனவே காம்ப்ரஹென்ஸிவ் சட்டமாக வரக்கூடிய முறையிலே..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைப் போடுங்கள்.

Thiru K. VINAYAKAM : I am trying to safeguard the Government. They bring forward a Bill and we tear it into pieces in the Court of law.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதலிலே இந்தச் சபையைக் காப்பாற்றுங்கள்.

**திரு. கே. விநாயகம் :** நல்ல எண்ணத்தோடு நான் சொல்கிறேன். அரசாங்கத்திற்கு உதவி செய்வதற்காகத்தான் நான் இதைக் கூறுகிறேன். அவர்களையெல்லாம் இந்தக் குழுவிலே போட்டு இந்தச் சட்டத்தை ஒரு காம்ப்ரஹென்ஸிவ் சட்டமாகக் கொண்டுவர முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** இதைப்பற்றி எல்லா பார் அசோஸியேஷன்களுக்கும் வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. குடிசை வாழ் சங்கங்களுக்கும் வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. குடிசை வாழ்வோருக்கும் வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. பொதுமக்களுக்கும் பத்திரிகை மூலமாக வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. எனவே, அவர்களுடைய கருத்துக்களை அங்கே சொல்லலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### திருமயத்திலுள்ள காட்டுப் புறம்போக்கு நிலங்கள்

***127 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் தொகுதியில் பரம்பரை பரம்பரையாக வேளாண்மை செய்துவரும் காட்டுப் புறம்போக்கு நிலங்களைப் பயிரிடுவோருக்கே அடைமானம் செய்துகொடுக்க வேண்டி, அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அது எந்நிலையிலுள்ளது ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாலே இருந்த மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் திருமயத்திற்குச் சுற்றுப்பயணம் வந்திருந்தபொழுது அந்தக் காட்டுப் புறம்போக்கு நிலத்தைப் பயிரிடுவோருக்கு அடைமானம் செய்வதாகச் சொன்னார்கள். எனவே, அரசு அதனை ஆராய்ந்து ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் :** நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அந்தத் தொகுதியிலிருந்து எந்தவிதமான விண்ணப்பங்களும் இங்கே வரவில்லை. திருமயம் வட்டத்திலே இருந்து திருச்சி மாவட்டக் காட்டு இலாகா அதிகாரிக்கு 5 விண்ணப்பங்கள் வந்துள்ளன. அந்தப் பகுதியிலுள்ள இடங்களை செக்‌ஷன் 4 பாரஸ்ட் ஆக்ட், 1882-ன் கீழ் நோட்டிபை செய்து பாரஸ்ட் பிளான்டேஷனுக்கு ஒதுக்கப்பட்டது. இன்னும் 97 ஏக்கர் மட்டும் இருக்கிறது. அதை வருவாய்த் துறை இலாகா அதிகாரிகள் மூலமாகப் பகிர்ந்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

*Compulsory Insurance Scheme for the unemployed*

*120 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for industries be pleased to state—

(*a*) whether the Government of India have consulted our Government on the desirability of introducing compulsory insurance for unemployed in our State ; and

(*b*) if so, the views of this Government expressed thereon ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** (அ) ஆம்.

(இ) கொள்கையளவில் இந்த அரசு வேலையில்லாதோருக்குரிய ஈட்டுறுதித் திட்டத்தை உருவாக்குவதற்கு ஏற்றுக்கொண்டது. இன்றையப் பொருளாதாரச் சூழ்நிலையில் ஏற்கனவே சில காலம் வேலைசெய்து பயன் இழந்தவருக்கே (retrenched) இந்த ஈட்டுறுதித் திட்டம் மூலம் பயன் கிடைக்கும் என்று மத்திய அரசுக்கு எடுத்துக்காட்டப்பட்டது. ஆனால் இதன்மூலம் வேலையே இல்லாமல் இருக்கும் ஏராளமானவர்களுக்குப் பயன் இல்லாததால் அவர்களின் விரக்தி உணர்வு அதிகமாகும். மேற்கொண்டு வேலை நீக்கம் செய்யப்பட்ட (retrenched) தொழிலாளர்களைப் பதிவுசெய்வது போன்றவற்றில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் சில சிக்கல்களும் இருக்கின்றன. மேலும் இத்திட்டத்தில் தொழிலதிபர்களும் தொழிலாளர்களும் தரும் எம்ப்ளாயிஸ் பிராவிடண்ட் பண்ட் பங்குத் தொகையும் அதிகமாவதாலே தொழிலதிபர்கள் தரப்பிலிருந்து இதற்கு ஆட்சேபணையும் கிளம்பும். ஜவுளித் தொழிலும் மற்றத் தொழில்களும் இன்றைக்கு நெருக்கடியான நிலையில் இருப்பதால் அந்தத் தொழிலதிபர்கள் குறிப்பாகப் பாதிக்கப்பட்டு உள்ளார்கள்.

THIRU K. VINAYAKAM : Whereas this problem of unemployment of the educated as well as the un-educated is agitating the minds of almost all politicians in our State irrespective of their political colour, what concrete steps have this Government taken? It is one of their electoral promises that they will solve this unemployment problem. They have promised so much to the people to win and come into this House. What concrete steps have been so far taken to alleviate the grievances of the unemployed even as lip sympathy ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, கேள்வி மத்திய அரசாங்கம் வேலையில்லாதோருக்கு இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வந்திருக்கிறார்களா என்பதைப்பற்றி. பிராக்டிகலாக, இதிலே செய்ய முடியாத நிலைமைகளையெல்லாம்பற்றி இந்த அரசாங்கம் எழுதியிருக்கிறது. மேற்கொண்டு அரசாங்கம் இதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறது. கனம் உறுப்பினர் அவர்களும் தங்களுடைய மேலான யோசனைகளை இந்த மன்றத்திலே தரலாம்.





**அறுவைச் சிகிச்சைக் கருவிகள் தயாரிப்புத் தொழிற்சாலையில் கதவடைப்பு**

*128 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

சென்னைக்கு அருகாமையிலுள்ள சர்ஜிக்கல் பாக்டரி கதவடைப்பு செய்துள்ளதைப்பற்றி, நமது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** இதுகுறித்து நல்லிணக்க உடன்பாட்டைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளைத் தொழிலாளர் துறை ஆணையாளர் மேற்கொண்டு பல்வேறு தேதிகளில் விவாதங்களை நடத்தினார். இதன் விளைவாக, 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்படி இருதரப்பாரிடையே 21—10—1969 அன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. தொழிற்சாலையில் 22—10—1969 முதல் வேலை தொடங்கியது.

**திரு. கே. விநாயகம்:** சார், இந்தக் கதவடைப்பு எதனால் செய்யப்பட்டது ? அந்தத் தொழிலாளர்கள் பக்கத்திலேயிருந்து வந்த கோரிக்கைகள் என்ன என்ன ? அவர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்கள் என்ன, என்ன ? கேட்டதற்காகக் கதவடைப்புச் செய்த அந்தத் தினங்களுக்கும் சேர்த்து நஷ்ட ஈட்டுத் தொகை கொடுக்கப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, நந்தம்பாக்கம் அறுவைச் சிகிச்சைத் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களில் ஏறத்தாழ 1,000 தொழிலாளர்கள் தேர்வு நடத்திப் பதவி உயர்வு கொடுப்பது சம்பந்தமாக ஏற்பட்ட சிக்கலினால் அதைத் தொடர்ந்து 2—9—1969 முதல் உண்ணாவிரதம் மேற்கொண்டார்கள். 10—9—1969 முதல் கதவடைப்புச் செய்வதாக நிர்வாகம் அறிவித்தது. தொழிலாளர் நல ஆணையரும், தொழிலாளர் நல அமைச்சராக இருக்கிற நானும் இருதரப்பாரையும் கலந்து பேசினோம். அதன்பிறகு ஆணையர் முன்னால் இருதரப்பாரிடையேயும் ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி 22—10—1969 முதல் வேலைக்குப் போக ஆரம்பித்தார்கள். இப்பொழுது அங்கே நிலைமை சுமுகமாக இருப்பதாலே அவர்கள் கோரிக்கைகள் கவனிக்கப்படுகின்றன. எனவே, மீண்டும் அதைப்பற்றிய பிரச்சினையை இங்கே எழுப்ப வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, இந்த கதவடைப்பு காரணமாக எத்தனை தொழிலாளர்கள் எத்தனை நாட்களுக்கு வேலையிழந்து இருப்பதன்மூலம் எத்தனை ஊதிய இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கூற முடியுமா ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, இது ஓர்க் லோட் பற்றிய கேள்வி. எனவே தனியாகக் கேட்டால் பதில் சொல்கிறேன்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** நான்-டெக்னிக்கல் ஸ்டாஃப்க்கு டெஸ்ட் தேவையில்லை என்று இருந்தும் அதைமீறி நடத்தப்பட்டிருக்கிறது. இதைத் தவிர சீனியர் டிரைவர்களுக்குப் ப்ரமோஷன் கொடுத்து பிறகு ரிவர்ஷன் செய்திருக்கிறார்கள். இந்தக் காரணங்களுக்காகத்தான் அந்தத் தொழிலாளர்கள் உண்ணாவிரதம் செய்திருக்கிறார்கள். அதற்குப் பரிகாரம் இன்றுவரை காணப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, சென்னையிலே இருக்கிற தொழிற்சங்கம் மட்டுமல்ல, கனம் அங்கத்தினர் அவர்களுக்கே தெரியும், அந்தத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளோடு மற்றத் தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் கலந்துபேசி நடவடிக்கை எடுக்கிறார்கள்.

குறிப்பிட்டு எந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் சொல்வார்களானால் அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, 1970–71ம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அவை முன் அளிப்பார்கள்.

## (2) நடைமுறைக் கேள்வி

*அமைச்சர்கள் பொறுப்பு வகிக்கும் துறைகள் மாற்றம்.*

DR. H. V. HANDE : Sir, on a point of order. The matter relates to a change in the Cabinet. Before the Hon. Minister for Finance reads out his Budget speech, we are entitled to know about the sudden change of portfolios. As a result of the change in portfolios the whole Transport Department is in a total mess and the former Hon. Minister for Transport would not be able to answer a question intended for him and another Minister who has taken up his portfolio would say that he has just now taken up the Transport portfolio, and he would require time to consider it. Thus as a result of the sudden change in the portfolio, passengers are at a disadvantage. So, I want the Hon. Chief Minister to treat this House with courtesy and not with contempt......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதலிலே பாயின்ட் ஆப் ஆர்டர் எந்த விதியின் கீழ் வருகிறது என்று சொன்னால் போதும். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து எதையாவது இந்த அவையிலே சொல்லக் கூடாது. இலாகா மாற்றம் அமைச்சரவையைப் பொறுத்தது. அது முதலமைச்சர் அவர்களைச் சார்ந்தது. அதற்கும் இந்த அவைக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இந்த அவையின் நடைமுறை விதிகள் மீறப்பட்டிருந்தால் அதைச் சுட்டிக்காட்ட மட்டுமே பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப வேண்டும்.

DR. H. V. HANDE : Sir, the House is entitled to know......

THIRU K. VINAYAKAM : Sir, on a point of information.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்று ஒன்றும் கிடையாது.

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எந்த விதி மீறப்பட்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டிவிட்டுப் பிறகு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புங்கள்.

THIRU K VINAYAKAM : Sir, please listen to me. All the rules have been infringed. It lies within the power of the Government to oblige us.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் பலமுறை இந்த மன்றத்திலே கூறியிருக்கிறேன். விதிமுறைகளுக்கு மாறாக இந்த அவையிலே அலுவல்கள் நடந்தால் அப்போதுதான் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பவேண்டும்.



நீங்கள் ஒரு செய்தியைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது என்பது முறையாகாது. ஒழுங்குப் பிரச்சினை என்று கூறி, தாங்கள் கூற வேண்டிய கருத்துக்களை எல்லாம் கூறிவிடுவது முறையாகாது. இப்போது எழுப்பப்பட்ட பிரச்சினையிலே எந்த விதமான ஒழுங்குப் பிரச்சினையும் இல்லை.

**திரு. கே. விநாயகம் :** சட்டசபை நடக்காத நாட்களில் அரசாங்கம் என்ன செய்கிறது என்று செய்திப் பத்திரிகைகளில் படித்துத் தெரிந்து கொள்ளுகிறோம். அது சரிதானா, உண்மைதானா என்பதை இங்கே கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இங்கே எழுந்து கேட்கிறோம். நாங்கள் படித்தது தவறாக இருக்கலாம். அச்சிலே தவறாக வந்திருக்கலாம். ஆகவே, கேள்வி நேரம் முடிந்த பிறகு இந்த மாதிரி தகவல் வேண்டுமென்று கேட்க உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** (சட்டப் பேரவை விதிகள் புத்தகத்தைக் காட்டி) இதிலே இல்லையே.

THIRU K. VINAYAKAM : They are all conventions observed in the House.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த இலாகா மாற்றம்பற்றி அச்சிலே வந்தது சரிதானா என்று மாண்புமிகு உறுப்பினர் விநாயகம் அவர்கள் கேட்டார்கள். அச்சிலே வந்ததற்குப் பிறகு அதுபற்றி நான் கொடுத்து இருக்கிற விளக்கம் சரியானதுதான்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதலமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். நாங்கள் ஒரு பிரச்சினையை இந்த அவையிலே எழுப்ப முயன்றால் "விதியிலே இருக்கிறதா" என்று கேட்பது சபாநாயகர் அவர்களுக்குப் பழக்கமாகிவிட்டது. (குறுக்கீடு). "Regular Practice" என்ற முறையில்தான் கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "Regular Practice" என்று எதைக் கூறுகிறார்? பழக்கம் இல்லாத ஒன்றைப் புகுத்துவதாகக் கூறுகிறாரா எதிர்கட்சித் தலைவர் அவர்கள்? இப்படி விதிகளைச் சுட்டிக் காட்டுவது பேரவைத் தலைவருக்கு முறையானதுதான் என்பதையாவது ஏற்றுக் கொள்ளுகிறாரா அல்லது முறையற்றது என்று கருதுகிறாரா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முறையற்றது என்று நான் சொல்லவில்லை; முறையானதுதான். "பழக்கமாகிவிட்டது" என்று நான் சொன்னதை வேறு விதத்தில் எடுத்துக் கொள்ளக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் முன்பே ஒரு முறை சொல்லி இருக்கிறேன். சொல்லை ஆளுகின்ற சூழ்நிலைக்கேற்ப பொருள் உண்டாகும். "எந்தப் பிரச்சினையை எடுத்தாலும் இப்படிச் சொல்லுவது பழக்கமாகி விட்டது" என்று சொல்லுவது உயர்ந்த பொருளில் கூறுவதாக இருக்கமுடியாது. குற்றம் சாட்டுவதாகத்தான் இருக்கமுடியும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அது அவரவர்கள் மனப்பான்மையைப் பொருத்தது. உயர்ந்தவர்கள் உயர்ந்த முறையிலே எடுத்துக் கொள்ளுவார்கள். நம்முடைய விதியில் இடம் இல்லையென்றாலும் மரபு என்று இருக்கிறது. பாராளுமன்றத்தில் என்ன நடைமுறை இருக்கிறதோ அதைக் கையாள வேண்டும். "மேஸ் பார்லிமெண்டரி பிராக்டிஸ்"ல் கூறப்பட்டிருப்பதைக் கையாள வேண்டும். அமைச்சர்களிடையே இலாகா மாற்றம் ஏற்படும்போதோ அல்லது புது அமைச்சர் வரும்போதோ அவர்களைப் பிரதம மந்திரி அவர்கள் அவைக்கு அறிமுகப்படுத்துவது என்பது லோக் சபாவில் கையாளப்படும் மரபாகும். அந்த மரபைத்தான் நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மரபு, முறை என்று எதை வேண்டுமானாலும் பின்பற்றத் தயாராக இருக்கிறேன். அதற்கான விதி முறைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். இப்போதிருக்கும் விதிமுறை களில் அப்படிப்பட்ட நிலைமை இல்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அமைச்சர்களுடைய இலாகாக்களை மாற்றுவது என்பது முதலமைச்சருடைய முழுப் பொறுப்பாகும். பழைய காலத்தில் உணவு அமைச்சர் மாற்றப்பட்டார். அதற்காக இந்த மன்றத் திலே அறிக்கை ஒன்றும் வைக்கப்படவில்லை. அமைச்சர்களுடைய இலாகாக் கள் மாற்றப்படும்போதெல்லாம் அறிக்கை வைக்கும் வழக்கம் இந்த அவையிலே என்றைக்கும் இருந்தது இல்லை. நிர்வாக சவுகரியங்களை முன்னிட்டு முதலமைச்சர் இப்படிப்பட்ட மாறுதல்களைச் செய்வது என்பது தொன்றுதொட்டு இருந்து வரும் வழக்கமாகும். அந்த அடிப்படையில் தான் இலாகா மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. பத்திரிகைகளில் தவருக வந்த செய்தியைப் பற்றி நிருபர்கள் கேட்ட நேரத்தில் விளக்கத்தையும் உடனே தந்திருக்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, I shall prove how my point of order arises according to the Assembly Rules. There is a gross breach of privilege of the House. This House is entitled to know why the Hon. Chief Minister has given a statement to the Press.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லுகிறீர்கள், பிறகு பிரிவிலேஜ் என்று சொல்லுகிறீர்கள். எந்த முறையில் அது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்லது பிரிவிலேஜ் என்று தாங்கள் சொல்லவில்லை.

இப்போது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்........

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அமைச்சர்களின் இலாகாக்களை மாற்றும் பூரண பொறுப்பு முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்தக் காலத்தில் உணவு அமைச்சரின் இலாகா மாறியபோது அறிக்கை வைக்கவில்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னர்கள். முன்பு தவறு செய்திருந்தால் அதே தவறை இப்போதும் செய்ய வேண்டுமா ? இதைப்பற்றிப் பிரதம காரியதரிசி ஒரு அறிக்கை கொடுத்திருக்கிருர். இதைப் பற்றிச் சொல்ல அவருக்கு அதிகாரம் இல்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பிரதம காரியதரிசி அவர்கள் அப்படி எதுவும் அறிக்கை தரவில்லை என்று உடனடியாக மறுத்திருக் கிருர்.

THIRU K. VINAYAKAM : Let them clear it. The Transport Department is not working in an efficient manner. That is what everybody is saying.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் இதைப்பற்றிய விவாதத்தை மேலும் அனுமதிக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் 1970–71ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையைப் பேரவைக்கு இப்பொழுது அளிப்பார்கள்.



## (3) 1970–71ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை.—அளித்தல்.

### தோற்றுவாய்

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1970–71ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை இப் பேரவையின் கண் வைக்க நான் முன் வந்துள்ளேன். இத்துடன் 1969–70 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளும் 1968–69 ஆம் ஆண்டிற்கான கணக்குகளும் மன்றத்தின் முன்னர் வைக்கப்பட்டுள்ளன. 1969–70 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப் பீடுகளுக்கும் 1969–70 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப் பீடுகளுக்கும் இடையே யுள்ள மாறுதல்களின் விரிவான சிறப்புக் கூறுகளையும், 1968–69 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளுக்கும் 1968–69 ஆம் ஆண்டிற்கான கணக்குகளுக்கும் இடையேயுள்ள மாறுதல்களின் விரிவான தனிக் கூறுகளையும் இவ் வரவு-செலவு திட்ட விளக்கக் குறிப்பு விளக்குகிறது.

2. வரவு-செலவுத் திட்டத்தை இக் மன்றத்தின் முன் வைக்கும் காலையில், இதற்கு முந்தைய ஆண்டுகளில் அரசின் பொருளாதார சாதனைகளைக் குறித்து மறு ஆய்வு செய்வதற்கும், அதன் வருங்கால கொள்கைகளுக்கு இசைவளிப்பதற்கும் ஏற்ற ஒரு வாய்ப்பு கிட்டுகிறது. எனவே, வரவு-செலவுத் திட்டம் என்பது நிதிக் கணக்குகளின் பட்டியல் அல்லது நிதி ஒதுக்கங்களின் சுருக்கம் மட்டும் அல்ல. மக்கள் நலனைப் பெருக்குவதில் அரசு தன்னை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்ளுவதற்கான ஒரு வாய்ப்பு என்றுதான் இதனைக் கருதவேண்டும். இப் பின்னணியில்தான் கடந்த மூன்றாண்டுகளில் இவ்வரசின் சாதனை களை மறு ஆய்வு செய்யவும், வரும் ஆண்டுகளுக்காக, நாம் வகுத் துள்ள வேலைத் திட்டத்தின் சில முக்கிய விவரங்களை இங்கு விவக்கவும் நான் முன்வருகிறேன்.

### மத்திய-மாநில அரசுகளுக்கிடையே அதிகாரங்கள் பிரிவினை பற்றிய பெரும் ஏற்றத்தாழ்வுகளும் அதன் விளைவுகளும்.

3. பொருளாதாரக் கொள்கை குறித்த பெரும் முடிவுகளில் பெரும்பாலனவை, இம் மாநிலத்திற்கு வெளியே, அதாவது புது டில்லியிலும் பம்பாயிலும் மேற்கொள்ளப்படுவதால், வளர்ச்சி பணியில் மாநில அரசின் முயற்சிகள் பெரிதும் தடைபடுகின்றன வென்பதை நான் முதற்கண் அழுத்தமாகக் கூற விரும்புகிறேன். 1967–இல் நடந்த பொதுத் தேர்தல்கள் இந்திய ஆட்சி அமைப்பில் எல்லைக்கோடு ஒன்று உருவாகி உள்ளதை எடுத்துக் காட்டியுள்ளன. மத்தியிலுள்ள அரசு எந்த அரசியல் கட்சியைச் சார்ந்ததோ அதனின்றும் வேறுபட்ட அரசியல் கட்சிகளைச் சார்ந்த அரசுகள் பல மாநிலங் களில் அமைந்துள்ளன. இதன் விளைவாக, அரசியல் சட்டத்தின் கட்டுக்கோப்பு, பலவிதமான நெருக்கடிகளுக்கும் அழுத்தங்களுக்கும் ஆளாகி உள்ளது. குறிப்பாக, அண்மை மாதங்களில், தற்போதைய ஏற்பாட்டில் கரந்துநின்ற பலவீனம் புறத்தே தலைகாட்டியது. நிதி வாயில்களைத் திரட்டும் அதிகாரம் பெருமளவில் மத்திய அரசியம் நிலைத் துள்ளது. மாநிலங்களுக்கிடையே வெவ்வேறு திட்டங்களுக்கான நிதி வாயில்களை ஒதுக்குவது குறித்து முடிவுகள் மேற்கொள்ளும் அதிகா ரத்தையும் மத்திய அரசே இதுகாறும் வைத்து வந்துள்ளது. இன்றைய சமுதாயத்தில் ஒரு மாநிலத்தில் உள்ள உற்பத்தி அமைப்பின் இயக்கத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரக் கொள்கைகளை முடிவு செய்யும் கருவிகளான வங்கிகள், நாணயச் செல்ாவணி, நிதிக் கொள்கை ஆகிய அனைத்தும் இந்திய அரசினுலேயே கட்டுப்படுத்தப் படுகின்றன. முக்கிய வரிகளை விதிப்பதற்கும் வட்டி வீதங்களை மாற்றுவதற்கும் நாட்டின் நாணயச் செலவாணி மதிப்பைச் சரிகட்டு வதற்கும் உரிய அதிகாரங்கள் அனைத்தும் இந்திய அரசிடமே ஒருங்கு குவிந்துள்ளன. எனவேதான் மத்திய அரசு மேற்கொள்ளும் முடிவுகளின் துரதிர்ஷ்டவசமான விளைவுகளை மாநில அரசு அடிக்கடி

* இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

** நிதியமைச்சரின் உரையின் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைப்புகளும் மூன்றுவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

எதிர் நோக்கி நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதிகாரமும் பொதுப் யும் இவ்வாறு பிரிந்து நிற்கும் நிலை, நமது கூட்டாட்சி முறையில்— பொருளாதார முறையிலும் அரசியல் முறையிலும் ஏற்பட்டுள்ள கேட்டிற்குக் கருவாக அமைந்துள்ளது. நாட்டில் அண்மையில் பொருளாதார மந்த நிலை ஏற்பட்டதற்கு மத்திய அரசின் பணக் கொள்கைகளும் நிதிக் கொள்கைகளும் ஓரளவு காரணமாகும். இதன் காரணமாக நாட்டில் வாங்கும் சக்தி பெரிதும் குறைந்து ஒரு தொழிலிற்குப்பின் பிறிதொன்றாக நின்று போகும் ஒரு நச்ச வட்டம் தோன்றியது. உணவு உற்பத்திப் பெருக்கத்தின் அடிப்படை யில் நாடு முன்னேறியிருக்கவேண்டிய நேரத்தில் நாட்டின் பொருளா தார நிலை உண்மையாகவே அசைவற்று நின்று விட்டதை நாம் கண்டறிந்தோம். பஞ்சாலைத் தொழில் முடங்கிவிட்டது. பொறியியல் தொழிலின் உற்பத்திப் பொருள்களை வாங்குவோரின்மையால் அது பெரிதும் மெலிந்தது. ஐந்தாண்டுத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டதால், அரசு முதலீடு செய்யும் அளவு குறைந்து நிலைமை மேலும் சீர்கேட டைந்தது. மேற்சொன்ன நிலைமைக்குக் காரணமான இந்த முக்கிய முடிவுகள் குறித்து மாநில அரசுகளைக் கலந்து ஆலோசிக்கவில்லை. மற்றும், விலைவாசிக் கொள்கைகள் பற்றியவரை, மத்திய அரசு மேற்கொள்ளும் முடிவுகளில் பெரும்பாலனவை, பற்பல மாநிலங்களில் நிலவிவரும் சூழல்களைக் கருத்தில் கொள்ளாமலே மேற்கொள்ளப்பட்டன. நாட்டில் நிலவும் விலைவாசி நிலை மொத்தத் தேவையையும் வழங்கலையும் (Demand and Supply) பெரும்பாலும் எதிரொலிக்கின்றது. வாங்கும் சக்தியை நிர்ணயிப் பதில் மத்திய அரசின் நிதிக் கொள்கைக்கு முக்கிய இடம் உண்டு. வழங்கல் நிலையைப் பொறுத்த மட்டில் உருக்கு, பருத்தி, நெட்டிழை (Staple fibre) போன்ற முக்கியமான மூலப்பொருள் களை உரிய காலத்தில் இறக்குமதி செய்வதற்கு வகைசெய்யும் வகையில் மத்திய அரசு கொள்கை முடிவெடுத்திருந்தால், வாணிகத் துறையில் சூதாட்டப் போக்குகளைத் தடுத்திருக்கலாம். மத்திய அரசு, அவ்வப் போது மேற்கொள்ளும் கொள்கைகளின் சீரமைப்புப்பற்றி மாநில அரசுக்கு எதும் தெரிவதில்லை.

4. இத்தகைய சூழ்நிலையில்தான் தேசிய, பொருளாதாரக்கொள்கை களை நிர்ணயிப்பதிலும் அவற்றை நடைமுறையில் கொண்டுவரு வதிலும் மத்திய அரசுடன் மாநில அரசுகள் மேலும் நெருக்கமான இணக்கம் கொண்டு இயங்க வேண்டுமென்று இம் மாநில அரசு வேண்டு கோள் விடுத்து வருகின்றது. இவ்வாறு கூறுவதன்மூலம், தேசிய வளர்ச்சி மன்றம் எப்போதோ ஒரு முறை கூடி இரண்டொரு நாள் பற்பல விவாதங்களுக்குப் பிறகு கலைவதைப்பற்றி நாம் குறிப்பிடவில்லை. கூட்டமைப்புப் பொருளாதாரத் திட்ட மன்றங் கள் ஏற்படுத்தப்பட்டு அவை வங்கிகள், நிதிக் கொள்கைகள், வாணிபம் போன்றவற்றைக் கவனிக்கவேண்டும் என்று நாங்கள் கருது கிறோம். இத்தகைய மன்றங்களை அமைப்பது குறித்து அரசிய லமைப்பின் 263-வது பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது. நாம் நியமித்துள்ள மத்திய, மாநில அரசு உறவுகள்பற்றிய ஆணைக்குழு தற்போதைய ஆட்சி அமைப்பில் காணப்படும் இப் பெரும் பள்ளத்தைத் தூர்ப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து பொருளாதாரத்தைச் சீரான அடிப்படையில் நிர்வகித்துச் சீரமைப்பதற்கான பரிந்துரை களைச் செய்யுமென நாம் நம்புகிறோம்.

5. பொருளாதார முடிவுகளை மேற்கொள்ளுதல், அவற்றை மையப் படுத்துதல் ஆகிய பொதுவான இச் சிக்கலைப்பற்றி இப்போது சில சொல் கூற விழைகின்றேன். அண்மையில் வங்கிகள் நாட்டுடைமை யாக்கப்பட்டதால், கருதா விளைவுகள் சில ஏற்பட்டுள்ளன. பொருளா தார அதிகாரங்கள் குவிக்கப்படும் நடைமுறைக்கு மேலும் ஆக்கமேற் பட்டுள்ளது. ஆதிக்கமற்ற சமுதாயத்தை உருவாக்கும் ஒரு நட வடிக்கையாக வங்கிகளை நாட்டுடைமையாக்கும் ஏற்பாட்டை மாநில அரசு என்ற முறையில் நாங்கள் வரவேற்றாலும், நாட்டுடைமையாக்கப்பட்ட



வங்கிகள் அதிகார வர்க்கத்தின் ஆதிக்கத்திற்கும் அதிகாரங்கள் குவிக்கப்படுவதற்கும் இடம் கொடுக்காமல் தடுப்பதற்கு வேண்டிய எச்சரிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் நாங்கள் எடுத்துக் கூறியிருந்தோம். சில வங்கிகளின் நிர்வாகிகளால் காட்டப்பட்ட ஆக்கமும், ஊக்கமும் வரம்பு மீறிய அதிகாரக் குவியலால் நெரிக்கப் பட்டு விடும் என்று நாங்கள் அஞ்சினோம். இத்தைய அச்சங்கள் உண்மையானவை என்பதை நாங்கள் உணர்ந்து வருகிறோம். சமூகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளூர்த் தேவைகளுக்கேற்ப ஓரளவு வளைந்தும் இசைந்தும் நெகிழும் வகையில் இருந்த முறை, நாட்டுடைமையின்கீழ் வலுப்படுத்தப்பட வேண்டும். வங்கி நிர்வாகம், உள்ளூர் மக்களின் விருப்பங்களையும், பற்பல பகுதிகளில் தோன்றும் பல் வகையான நலன் களையும் எதிரொலிக்க வேண்டுமென்று இந்த அரசு இதற்குமுன் தெரிவித்துள்ள கருத்தை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இந்த சிக்கல்களை அதிகாரவர்க்க முறையிலோ கண்டிப்பான ஒரே மாதிரியான முறையிலோ பார்க்கக் கூடாது. உள்ளூர் மக்களின் ஆர்வத்திற்கும் நலனுக்கும் ஆக்கம் அளிப்பதால் புதிய சேர்க்கையில வங்கி முறை ஒன்று உருவாவதற்கு வழிகோலப்படும். நாட்டுடைமை யாக்கப்பட்ட பற்பல வங்கிகளின் வட்டார வாரியங்களில், மாநில அரசு களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப் பட்டால், வங்கி நிர்வாகத்தி னருக்கும், அவ் வங்கிகள் செயல்படும் பகுதிகளின் தேவைகளுக்கும் இடையே நிலவ வேண்டிய தொடர்பு, பயனுடையதாக விளங்கும் என்பது உறுதி. வேளாண்மை உற்பத்தியை விரைவு படுத்துவ தற்கும் உள்ளூர்த் தொழில்களை வளர்ப்பதற்குமான புதிய முறைகளைப் புனைவதற்கு வங்கி நிர்வாகத்தினருக்கு முழு உரிமையளிப்பதும் இன்றியமையாததாகும்.

6. மத்திய அரசின் தற்போதைய தொழிற் கொள்கை குறித்து மாநில அரசின் கருத்துக்களை நான் இங்கு குறிப்பிட விழைகிறேன். தொழிற் கொள்கையைக் குறித்து எடுக்கப்படும் முடிவுகளை மேற் கொள்வதற்கு முன் மாநில அரசைக் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்பது இம் மாநில அரசின் கருத்து ஆகும். உரிமைகள் வழங்குவதில் மேற்கொள்ளப்படும் நடை முறை தளர்த்தப்பட வேண்டும் என்றும் நாங்கள் வற்புறுத்தி வந்துள்ளோம். அண்மையில் இந்த நடை முறைகளில் மத்திய அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள மாற்றங்கள் வரவேற்கத் தக்கவையே. உரிமங்கள் வழங்குவதில் இன்னமும் சிக்கலான நடைமுறையே பின்பற்றப்பட்டு வருகிறது எனும் உண்மையை நாங்கள் அனுபவத்தில் கண்டுள்ளோம். தடை செய்யப்பட்ட பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ள தொழில்களும் இருந்தாலும் பற்பல சிறிய அனுமதிகளும் ஒப்புதல்களும் பெற வேண்டியிருக்கின்ற நிலைமையின் காரணமாக, தொழில் முனைவர்களின் வழியில் சிக்கல்கள் பல எழுப்பப்படுகின்றன. இத்தகைய அதிகா ரங்களில் சிலவற்றைப் பிரித்து, தொழில் முனைவர்களின் மனுக் களைச் சரிபார்த்து, பொதுவாக ஒப்புதல் அளிக்கும் அதிகாரங்களை மத்திய அரசு வழி மாநில அரசுகளிடம் ஒப்புவிப்பது குறித்து தான் நம்புகிறேன். மாநில நிதி வகைகளை வகுக்குமென்று மாநில அரசுகளிடமோ அந்நியச் செலவாணி குறித்துச் சிறுதொகைகளை ஒதுக்குவதன் மூலம் இத் துறையில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்க்க வகை செய்ய முடியும். பல்வேறு தொழில்களின் தேவைகளுக்கேற்ப முடிவுகளை விரைந்து எடுக்கும் வகையில் அதிகாரங்களைப் பரவலாக்கி தற்போதைய ஏற்பாட்டினை முழுமையாகச் சீரமைப்பதற்குக் காலம் வந்துவிட்டதென மாநில அரசு கருதுகின்றது. தொழில் துறையில் மத்திய அரசிடம் உரிமங்கள், ஒப்புதல்கள் முதலியன பெறுவதில் கடும் தாமதம் ஏற்படுகின்ற காரணத்தால் பொதுவாக, மன நிறைவற்ற நிலைமை நிலவி வருகிறது. இந்தச் சூழ்நிலையில் தொழில் முனைவர்களுக்கும் புதிய தொழில்களில் முதலீடு செய்வதில் அக்கறை குறைந்துவருவ தற்குக் கவலைக்கிடம் அளிப்பதாய் உள்ளது.

### மத்திய மாநில நிதி உறவு

7. இந்தியப் பொருளாதார அமைப்பில் இன்று முதன்மையாக விளங்கும் மத்திய, மாநில அரசுகளின் நிதி உறவுகளின் சில முக்கிய கூறுகளைப் பற்றி நான் எடுத்துக் கூற விழைகின்றேன். ஐந்தாவது நிதி ஆணைக் குழுவின் அறிக்கை வெளியிடப் பட்டது நடப்பு ஆண்டில் இத் துறையிலேற்பட்டுள்ள மிக முக்கிய நிகழ்ச்சியாகும். வெளிப் படையாகவே நியாயமற்றதெனத் தோன்றும் அந்த அறிக்கை யைப்பற்றி மாநில அரசின் கலக்கத்தையும் அதிருப்தியையும் இம் மன்றத்தின்கண் நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். தேசிய வரவின் வாயில்களின் மொத்தத் தொகுப்பில் இம் மாநிலத்தின் பங்கு, இதற்கு முன்பிருந்த 7·2 சதவீதத்திலிருந்து 6·9 சதவீதத்துக்குக் குறைந்துள்ளது. பின்தங்கியவை என்று சொல்லப் படும் மாநிலங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய கோட்பாடுகளுக்குத் தனி முக்கியத்துவம் தரும் காரணமாகவே இது இங்ஙனம் குறைந்துள்ளது. வருமான வரிப் பங்கும் 8·34 சத வீதத்துலிருந்து 8·18 சத வீதத் துக்குக் குறைந்துள்ளது. ஆயத் தீர்வையைப் பொறுத்த வரையில் 7·18 சத வீதத்திலிருந்து 6·5 சத வீதத்துக்குக் குறைந்துள்ளது. கூடுதல் ஆயத் தீர்வைகளைப் பொறுத்த மட்டில் 11 சத வீதத்திலி ருந்து 9·63 சத வீதத்துக்குக் குறைந்துள்ளன. இவற்றிற் கெல்லாம் சிகரமாக 1969 முதல் 1974 வரையிலான ஐந்தாண்டு காலத்திற்கான பற்றுக்குறை மானியம் 34 கோடி ரூபாயிலிருந்து 23 கோடி ரூபாய்க்குக் குறைக்கப்பட்டுள்ளது. பீஹார், உத்தரப் பிரதேசம், குஜராத், பஞ்சாப், ஹரியாணு, மத்தியப்பிரதேசம், மகாராட்டிரம் போன்ற மாநிலங்களுக்கு, சுமார் 1,300 கோடி ரூபாய் அளவிற்கு வரவின மிகுதி வரும் வகையில் நிதி ஆணைக் குழு தாராளமாக மானியங்கள் அளித்திருப்பதைப் பார்க்குமிடத்து, இது பன்மடங்கு வியப்பாக உள்ளது. தியாகி அறிக்கையை நாம் படிப்போமானல், அந்த அறிக்கை நமது பணியாளர்களின் ஊதியங்களை மேம்பாடு செய்வது குறித்து நமக்குள்ள உண்மையான பொறுப்பினை ஈடுசெய்ய வேண்டுமென்கிற நியாயமான கோரிக்கையை ஏற்கவில்லை யென்பது தெரியும். ஒரு புறம், மாநில அரசு தனது நிதி வசதிகளை விவேகத்துடன் சிக்கனமாக நிர்வகித்து வந்திருப்பது, நமது செலவின மதிப்பீடுகளை உண்மைக்கு மாருன மிகக் குறைந்த அளவில் நிதி ஆணைக் குழு மதிப்பிடுவதற்கு வழி வகுத்துள்ளது. மறுபுறம், இம் மாநிலத்தின் வரி திரட்டும் முயற்சிகளை, அடிப்படையாகப் பயன் படுத்தி நமது வரவினங்களை உண்மை நிலைக்கு மாருக மிக அதிக அளவில் மதிப்பீடு செய்துள்ளது. இவ்வாறு நாம் இருவித இடையூறுகளுக்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறோம். இதைப்பற்றி நாம் மத்திய அரசுக்கு இடைவிடாமல் முறையீடு செய்து வந்துள்ளோம். குறிப்பிட்ட சில மாநிலங்களுக்குக் கூடுதல் நிதி வாயில்கள் சேருவதற்குத் தொடர்ந்து அனுமதியளிக்கப்பட்டு அதற்கு நிகரான நிதிவாயில் அதிகரிப்பு தமிழ் நாடு போன்ற மாநிலங்களுக்கு அளிக்கப் படவில்லை யென்ருல், அநீதியும், சமனற்ற நிலையும் தொடர்ந்து நிலவிவரும் என்பதை நாம் மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டியுள்ளோம்.

### மத்திய அரசுக்கு மாநில அரசு கொடுக்கவேண்டிய கடன் சுமை

8. மாநிலங்கள் மத்திய அரசுக்குக் கொடுக்க வேண்டிய கடன், சுமை, மத்திய—மாநில உறவுகளின் அடிப்படைக்கு ஒரு அறிகுறியாக விளங்குகிறது. நான்காம் திட்டக் காலத்தில் இம் மாநிலத்திற்கு மத்திய அரசு வழங்க முன் வந்துள்ள கடன் தொகைகள் 140 கோடி ரூபாயாகும். இதற்கு மாருக, அக் கால அளவில் இம் மாநிலம் மத்திய அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தொகைகள் 150 கோடி ரூபாயாகும். நமது வேண்டுகோள் நியாயமானதா என்பதை எடுத்து விளக்குவதற்கு இப் புள்ளி விவரங்களே போதிய சான்ருகும். மத்திய அரசுக்குச் சேர வேண்டிய நமது கடன்



தவணைத் தொகைகளை மாற்றியமைக்கும்படி நாம் இடைவிடாமல் இந்திய அரசை வேண்டியுள்ளோம். இதர மாநிலங்களின் கடன் தவணைகளை 800 கோடி ரூபாய் அளவுக்கு மாற்றியமைக்க மத்திய அரசு முடிவு செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. மத்திய உதவி யைப் பகிர்ந்து அளிப்பது குறித்துத் தற்போதுள்ள நமக்குச் சாதக மாயிராத கோட்பாட்டின் கீழ்கூட இத் தொகையைப் பகிர்ந்து கொடுத் தால் தமிழ்நாட்டிற்கு 50 கோடி ரூபாய் அளவிற்குக் கூடுதல் நிதி வாயில் கள் கிடைத்திருக்கும். ஆகவே கடன் தவணைகளைத் தளர்த்திக் கொடுக்கும் வாயிலாக இவ்வளவில் கணிசமான உதவியை நாம் எதிர்பார்ப்பது நியாயமான நிலைமைதான். கடன் தவணைகளை மாற்றியமைப்பது குறித்து நாம் மத்திய அரசுக்கு விடுத்துள்ள வேண்டுகோள் அத் தொகைகளை எந்தெந்தத் துறைகளில் பயன் படுத்தினேமோ அந்தந்தத் துறைகளின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு தவணை முறையையும் தளர்த்த வேண்டுமென்பதுதான. இரண்டாவது, மூன்ருவது திட்டக் காலங்களில் நாம் பெற்றுக் கொண்ட கடன்களில் சில நீண்ட காலம்கழித்துப் பயனளிக்கும் பாசன, மின்சாரத் திட்டங்களுக்காகவே செலவழிக்கப்பட்டன. இக் கடன்கள் 10 ஆண்டுக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டி யவை என்ற இப்போதுள்ள தவணை முறையை மாற்றி அவைகளை 20, 25 ஆண்டளவில் திருப்பி அளிப்பதற்கு ஒப்புதல் அளிக்குமாறு நாம் வேண்டியிருக்கிறோம்.

### அனைத்து மாநிலக் கடன் ஆணைக் குழு ஒன்றை நிறுவுதல்

9. மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்குக் கிட்டும் நிதி வாயில் கள், திட்டத்திற்கு ஓரளவிற்கே நிதி உதவியளிக்கப் பயன்படுகின்றன என்பதை இதற்கு முன் இம் மன்றத்திலும், மேலவையிலும் நான் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறேன். மாநிலங்களுக்கு அளிக்கப் படும் நிதி வாயில்களில் கணிசமான பகுதி, அம் மாநிலங்கள் மத்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கே பயன்படுகின்றன. இச் சிக்கலைத் தாற்காலிகமாக அணுகுவதற்குப் பதிலாக பற்பல மாநிலங்களின் கடன் நிலையை மறு ஆய்வு செய்து, சீரான அடிப்படையில் கடன் தவணைகளை மாற்றி யமைக்கும் வழிவகை ஒன்றினை முடிவு செய்வதற்கு உயர் அதிகாரக் குழு தேவையென நான் கருத்துத் தெரிவித்திருந்தேன். மாநிலங்கள் மூலதனச் செலவுகளை ஏற்பதற்காகப் பொதுமக்களிட மிருந்தும், மத்திய அரசிடமிருந்தும் கடன்களைத் திரட்டுகின்றன. இக் கடன்களில் சிலவற்றை மத்திய அரசு, உலக வங்கியிடமிருந்து பெயரளவிலான வட்டி வீதங்களில் 40 முதல் 50 ஆண்டுத் தவணைக் காலங்களில் திருப்பிச் செலுத்தும் வசதிகளுடன் பெறப்பட்ட கடன்களைக் கொண்டு மீண்டும் கடன்களாக வழங்குகிறது. இக் கடன்கள் எந்த நடைமுறையின்படி அதிக வட்டி வீதத்திற்கும் குறைந்த கால அளவில் திருப்பிச் செலுத்தும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு மாநிலங்களுக்கு மீண்டும் கடனுக அளிக்கப்படுகின்றனவோ அந்த நடைமுறை எவ்வாற்ரு ஹும் நியாயமான அடிப்படையில் செய்துகொண்ட ஏற்பாடாக அமையாது. மற்றும், இக் கடன்கள் எந்த நோக்கங்களுக்காகச் செலவழிக்கப்படுகின்றனவோ அந்த நோக்கங்களைப் பொறுத்து அவற்றைத் திருப்பிச் செலுத்தும் முறையை வகுப்பதும் இன்றியமையாத தாகும். திட்டக் காலங்களில் உதாரணமாக, அடிப்படைத் தேவை களின் அமைப்புகளுக்காகக் கடன்கள் வகை செய்யப்பட்டிருந்தால், அக் கடன்களைக் குறுகிய கால அளவுகளுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டு மென்று வற்புறுத்துவது விவேகமான முறையல்ல. எனவே, கடன் வழங்கு முறைகளையும், திருப்பிச் செலுத்தும் முறைகளையும் சீரமைக்கும் நோக்கத்துடன் இச் சிக்கல் முழுவதையும் ஆய்வு செய்வதற்கென அனைத்து மாநிலக் கடன்கள் ஆணைக் குழு ஒன்றை நியமிக்க மத்திய அரசுக்கு ஏற்ற தருணம் இதுவேயென்று நான் மீண்டும் வற்புறுத்திக் கூறுவேன்.

யாகும். இவற்றின் விளைவாக, 5·88 கோடி ரூபாய் செலவில் 34,263 கிணறுகள் தோண்டப்பட்டன. கடந்த மாதம் ஆளுநர் பேருரையின் பேரிலான விவாதத்திற்குப் பதிலளிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் இந்த விவரங்களைக் குறித்து முழுமையாக எடுத்துக்கூறியிருப்பதால் நான் மேலும் இவற்றைப்பற்றிக் குறிப்பிடுவது தேவையில்லை எனக் கருதுகிறேன். இம்மாநிலத்தைத் தாக்கிய வறட்சி இந்த அரசின் நிர்வாக, அரசியல் துணிவிற்கும் விவேகத்திற்கும் ஓர் அறைகூவலாக எழுந்தது என்பதை மட்டும் நான் இங்குக் குறிப்பிடுவது தேவையென நினைக்கிறேன். இந்த அறைகூவலை நாம் வெற்றியுடன் சமாளித்தோம் என்பதையும் கூறிக்கொள்ள விழைகின்றேன். வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசு இம் மாநில அரசுக்கு அளிக்க முன்வந்துள்ள உதவியைக் குறித்து ஒரு தப்பான கருத்தை அரசியல் நோக்கத்துடன் சில வட்டாரங்களில் சொல்லி வருகிறார்கள். இந்தக் கருத்தைத் திருத்துவது மிக அவசியமாக இருக்கிறது. நமது மாண்புமிகு முதலமைச்சர் ஆளுநர் உரைமீது நடந்த விவாதத்திற்குப் பதில் அளிக்கையில் இதைக் குறிப்பிட்டார். மத்திய அரசின் வல்லுநர் குழு வறட்சி நிலைமைகளை ஆய்ந்தாராய்ந்த பிறகு கொடுத்த பரிந்துரைகளின்மீது கொடுக்கப்பட்டது தான் நமக்குக் கிடைத்த உதவி. நம் மாநிலத்துக்காகச் தனிச் சலுகை காட்டப்பட்டுள்ளது என்றோ வடக்கேயுள்ள சில மாநிலங்களுக்குக் கொடுக்காமல் நமக்குக் கொடுக்கப்பட்டது என்றோ சொல்லப்படுவது நம் மாநிலத்துக்குக் கெடுதலாக அமையும் என்று சுட்டிக்காட்ட நான் கடமைப் பட்டுள்ளேன்.

14. இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி முதலிய மாநிலத்தின் சில பகுதிகளில் மழை பெய்யாது போனமை குறித்த சில அறிக்கைகளை இந்த நிலையில் குறிப்பிடுவது பொருத்தமானதாகும் என நான் கருதுகிறேன். வறட்சி நிலைமைகளைச் சமாளிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

## வேளாண்மை.

15. அண்மை ஆண்டுகளில் வறட்சியின் காரணமாக வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்பட்டது. எனினும், கடந்த மூன்றாண்டுகளில் உணவு தானிய மொத்த உற்பத்தி 1966–67-ல் 57·9 லட்சம் டன்னுக இருந்ததற்கு மாறாக 1969–70-ல் 63 லட்சம் டன்னுக உயர்ந்துள்ளது. தற்போதைய அரசு செயல்படுத்திவரும் பசுமைப் புரட்சி வேளாண்மைத் துறையில் புதுமைத் தொழில் நுட்பங்களுக்கும் இம் மாநிலம் வழிவழியாகக் கையாண்டு வரும் வேளாண்மை முறைகளுக்குமிடையே ஓர் இணைப்பை ஏற்படுத்தியுள்ளது. இத் திட்டம் மன நிறைவளிக்கிற வகையில் செயல்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான நமது முயற்சிகளின் முக்கிய அடிப்படையாயுள்ள மிகு பயன் தரும் பயிர் வகைகள் திட்டத்தின் கீழ் 1966–67-ல் 5·27 லட்சம் ஏக்கர் நிலங்கள் பயிரிடப்பட்டதற்கு மாறாக, 1968–69-ல் ஏறத்தாழ 17·08 லட்சம் ஏக்கர் நிலங்கள் பயிரிடப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் சுமார் 24 லட்சம் ஏக்கர் நிலங்கள் இத் திட்டத்தின் கீழ் பயிரிடப்படுமென நாம் எதிர்பார்க்கிறோம். அடுத்த ஆண்டில் மிகு பயன் தரும் பயிர் வகைத் திட்டத்தின்கீழ், இம் மாநிலத்தில் நெற்பயிர் விளைவிக்கப்படும் பரப்பளவில் பாதியளவைக் கொணர இயலும் என எதிர்பார்க்கிறோம். ஐ.ஆர். 8-ன் கீழ் நடப்பு ஆண்டில் 7 லட்சம் ஏக்கர் பரப்பளவைக் கொணர இயலும் என நம்புகின்றோம். 1966–67-ல் எந்தப் பரப்பளவிலும், இவ்வகைப் பயிர் பயிரிடப்படவில்லை. சுவர்ணவாரி, குறுவைப் பருவங்களில் ஐ.ஆர். 8, அதன் துணை வகைகள் ஆகியவற்றின்கீழ் பெரும் பரப்பளவுகளைக் கொண்டு வர இயலும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். 1970–71 வரவு-செலவுத் திட்டம் வேளாண்மைப் பகுதி மும்முரத் திட்டத்தை திருச்சி மாவட்டத்திற்கு நீட்டிக்க வகை செய்கிறது. நமது வேளாண்மைத் துறை, விதைகளைத் தரக்கட்டுப்பாடு செய்யும் திட்டத்தைச் செயல்படுத்தி, விதைகளுக்குச் சான்றளிக்கும் திட்டத்தை இப்போது தொடங்கியுள்ளது. அடுத்த ஆண்டில் குடுமியாமலையிலும், சாக்கோட்டையிலும் விதை பக்குவப்படுத்தும் பிரிவுகள் நிறுவப்படும். மதுரையில் விதைப் பரிசோதனை,



ஆய்வுக்கூடம் ஒன்று துவக்கப்படும். பரமக்குடியிலும், திருச்சியிலும் மண்வளப் பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் 1970–71-ல் செயல்படத் தொடங்கும். நைட்ரஜன் உர வகைகளைப் பயன்படுத்தும் அளவு 1966–67-ல் 85,000 டன்னுக இருந்ததற்கு மாறாக, 1969–70-ல் 1,33,000 டன் அளவிற்கு உயர்ந்துள்ளது. மிகு பயன்தரும் பயிர் வகைகள் திட்டத்தின் காரணமாகப் பூச்சிக்கொல்லிகள், மருந்து தெளிப்பான்கள் இவற்றைப் பயன்படுத்தும் அளவும் உயர்ந்துள்ளதென ஒப்புக்கொள்ளப்படுகிறது. 1966–67-ல் விமானம் மூலம் 28,000 ஏக்கர் நிலங்கள் மருந்து தெளிக்கப்பட்டதற்கு மாறாக, நடப்பு ஆண்டில் சுமார் 2 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு விமானம் மூலம் மருந்து தெளிக்கப்படுமென்று நாம் எதிர்பார்க்கிறோம். 1970–71-ல் 10 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு இம் முறையில் மருந்து தெளிக்க நாம் திட்டமிட்டுள்ளோம். உணவு தானிய உற்பத்தி குறித்துப் பெருமளவு நாம் வலியுறுத்தும் அதே நேரத்தில், இம் மாநிலத்தில் பல்வகைப் பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டாலொழிய தனியொருவரின் வேளாண்மை வருமானத்தைப் பெருக்குவதென்பது இயலாது. எனவே, இம் மாநிலத்தில் வாணிபப் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, பல வேலைத் திட்டங்களை நாம் மேற்கொண்டுள்ளோம். பருத்தி விளைவின்கீழ் உள்ள பரப்பளவு 1966–67-ல் 7·73 லட்சம் ஏக்கராவிலிருந்து அடுத்த ஆண்டில் 9·5 லட்சம் ஏக்கராவாக உயரும் என்றும், கரும்புப் பயிரின்கீழ் உள்ள பரப்பளவு 1966–67-ல் 2·22 லட்சம் ஏக்கர் என்பதிலிருந்து, நடப்பு ஆண்டில் 2·51 லட்சம் ஏக்கராக உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆம்பலூர், பிரம்மபுரம் ஆகிய இடங்களில் இரண்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை நிறுவ நாம் முடிவு செய்துள்ளோம் என்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமென நான் நினைக்கிறேன்.

## கோவையில் வேளாண்மைக் பல்கலைக்கழகம்.

16. விஞ்ஞானத்தின் அடிப்படையில் வேளாண்மை நடத்துவதுதான் நம் உழவர் பெருமக்களின் வருமானத்தைப் பெருக்குவதற்குரிய வழியாகும். புதிய முறைகளை ஆராய்ச்சி செய்வதிலும் ஆராய்ச்சியின் வாயிலாகக் கிட்டியுள்ள தகவல்களைக் குடியானவர்களுக்குப் பரவலாகக் கிடைக்கச் செய்வதிலும் நமது வல்லுநர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும். ஆராய்ச்சியும், ஆராய்ச்சியின் பலன்களை விரிவாக்குவதும் வேளாண்மைப் பல்கலைக் கழகமொன்றை நிறுவுவதால்தான் நன்கு முன்னேற முடியும் என்று அரசு கருதுகிறது. ஆகவே வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்றைக் கோவையில் நிறுவுவதற்கு இம் மதிப்பீடுகளில் அடையாளத் தொகை ஒதுக்கியுள்ளோம்.

## மலைத்தோட்ட மேம்பாட்டுக் கழகம்.

17. அரசின் மற்றொரு முக்கியமான முடிவு, மலைத்தோட்ட மேம்பாட்டுக் கழகமொன்றை நிறுவுவதாகும். இக் கழகம் 10 கோடி ரூபாய் மூலதனத்துடன், கூடலூரில் உள்ள நிலங்களை மேம்படுத்தி இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்க உதவி செய்யும். இக் கழகம் பற்றிய விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அடையாள நிதி ஒதுக்கம் மூலம் இதற்குச் சட்டமன்ற ஒப்புதலை நாம் வேண்டியுள்ளோம்.

## வேளாண்மைக் கடன் உதவி.

18. வேளாண்மைக்குப் போதிய நிதி உதவி கிடைக்காதது நமது வேளாண்மைப் பண்ணைகளைப் புதுப்பிப்பதில் இருந்த இடையூறுகளில் ஒன்றாகும். நாம் ஆட்சிப் பொறுப்பை மேற்கொள்ளுகிறவரை மாநில அரசிடம் உள்ள குறைந்த நிதிவாயில்களைக் கொண்டு நிலைமையைச் சரிக்கட்டுவதிலேயே நாட்டம் செலுத்தப்பட்டது. நமது வேளாண்மைப் பெருமக்களின் தேவைகளுக்காக நிறுவனக் கடன் உதவியைப் பெறுவதற்கான பல ஏற்பாடுகளை நாங்கள் செய்துள்ளோம். கூட்டுறவுக் கடன் துறையில் மட்டும் 1966–67-ல் குறுகிய காலக் கடனுகவும் நடுத்தரக் காலக் கடனுகவும் வழங்கப்பட்ட 31·44 கோடி ரூபாய் கடன் தொகை, 1968–69-ல் 44·12 கோடி ரூபாய்க்கு உயர்ந்தது. நடப்பு ஆண்டில் அது 62·50 கோடி ரூபாயாக மேலும் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. அரசின்

1970 பிப்ரவரி 26]

அயரா முயற்சியால் இந்த ஆண்டு நிலவள வங்கிகளின் எண்ணிக்கை
105-லிருந்து 166 ஆக உயர்ந்துள்ளது. 1966–67-ல் வழங்கியுள்ள நீண்ட
காலக் கடன்கள் 4·27 கோடி ரூபாயிலிருந்து 1968–69-ல் 14·67 கோடி
ரூபாய்க்கு உயர்ந்துள்ளது. 1970–71-ல் இது ரூபாய் 16 கோடிக்கும்
அதிகமான அளவுக்கு மேலும் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.
இவற்றிற்குமேல், வேளாண்மைக் கடன் உதவித் துறையில்
வணிக வங்கிகளும் பங்கேற்கும்படிச் செய்யப்பட்டுள்ளது. நடப்பு
ஆண்டில் இம் மாநிலத்தின் பற்பல மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட
சோதனை நடவடிக்கையின் காரணமாக, மாநில அரசு அளிக்கும் உத்தர
வாதப்படி இவ்வங்கிகள் உழவர்களுக்கு ஏறக்குறைய 80 லட்சம் ரூபாய்
அளவுக்குச் கடன் வழங்க முன்வந்துள்ளன. நாங்கள் பயன் படுத்திக்
கொண்டுள்ள மூன்றாவது வகை நிறுவனக் கடன் உதவி, வேளாண்மை
சார்ந்த தொழில்கள் கழகத்தின் மூலம் அளிக்கப்படுபவையாகும். இக்
கழகத்தின் வாயிலாக விசையேற்றங்களையும் டிராக்டர்களையும் தவணைக்
கொள்முதல் திட்டப்படி வாங்குவதற்கு 1968–69-ல் 121 லட்சம் ரூபாய்
அளவுக்கும், நடப்பு ஆண்டில் 127 லட்சம் ரூபாய் அளவுக்கும் நாங்கள்
கடன் வழங்கியுள்ளோம். 1966–67-ல் 209 டிராக்டர்கள் வழங்கப்
பட்டதற்கு மாறாக, கடந்த மூன்றாண்டுகளில் இம் மாநில முன்னேற்ற
நோக்குள்ள உழவர் பெருமக்களுக்கு 1,368 டிராக்டர்களை நாங்கள்
வழங்கியுள்ளோம். கிராமங்களில், முந்தைய மூன்று திட்டக் கால அளவு
களில், அதாவது 15 ஆண்டுகளில், 2·9 லட்சம் விசையேற்றங்களுக்கு
மின் இணைப்பு வழங்கப்பட்டது. ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளில்
மட்டுமே கிராமங்களில் மின் இணைப்பு வழங்கப்பட்ட விசையேற்றங்களின்
மொத்த எண்ணிக்கை 1·7 லட்சம் ஆகும். மற்றும் மொத்தம் 72
கோடி ரூபாய் செலவில் 25,500 கிணறுகள், 13,200 குழாய்க் கிணறுகள்,
15,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் ஆகியவற்றைத் தோண்டுவதற்
கும், 34,600 விசையேற்றங்களை நிறுவுவதற்கும், 3,000 டிராக்டர்களை
வழங்குவதற்குமான திட்டத்தைப் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.
இவற்றுக்காக நாங்கள் தயாரித்துள்ள திட்ட அறிக்கையை வேளாண்மை
மறுகடன் உதவிக் கழகம் ஆய்வு செய்து வருகிறது. இத் திட்டத்தினால்
இம் மாநிலத்தின் உணவு தானிய மொத்த உற்பத்தி 3·89 லட்சம் டன்
அளவுக்கும், ரொக்கப் பயிர்களின் (Cash Crop) மொத்த உற்பத்தி
2·58 லட்சம் டன் அளவிற்கும் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்
திட்டத்திற்காக வேளாண்மை மறுகடன் உதவிக் கழகம் தனது இசைவை
விரைந்து அளிக்குமென நாங்கள் நம்புகிறோம். நிலவள வங்கிகள்
இதற்காக வெளியிடவிருக்கும் கடன் ஈட்டு ஆவணங்களுக்குத் தேவையான
அளவுக்கு மாநில அரசு நிதி அளிக்க வகை செய்யும்.

### உணவுக் கொள்கை.

19. 1967 மார்ச்சு மாதம் நாங்கள் பதவியேற்ற காலத்தில் இம்
மாநிலத்தை எதிர்நோக்கியிருந்த கடுமைமிக்க உணவு நிலையைப்பற்றி
மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். அரசின் கைவசமிருந்த இருப்பு
கள் குறைந்து குறிப்பாக சென்னை மாநகரில் பொதுப் பங்கீட்டு முறை
பெரும்பாலும் அறவே செயலற்றுப் போய்விட்டது. மாநகரில் அப்
பொழுது ஒரு சில நாட்களுக்குப் போதுமான அளவே அரிசி இருப்பு
இருந்தது. அப்போது நிலவிய சூழல்களைக் கருதி, கட்டுப்பாடுகளைத்
தொடர்ந்து நீடிக்கவும் இம் மாநிலத்தில் திறமையான பொதுப்பங்கீட்டு
முறையை உருவாக்கவும் நாங்கள் முடிவு செய்தோம். கடந்த 3 ஆண்டு
களில் 24 லட்சம் டன் அரிசிக்கு மேல் எங்களால் கொள்முதல் செய்ய
முடிந்தது. அவ்வாறு கொள்முதல் செய்த இருப்புக்களைக் கொண்டு,
சென்னை மாநகரிலும், கோவையிலும் செயல்படுத்தப்பட்ட படி அரிசித்
திட்டத்தின் தேவைகளுக்காக மட்டுமின்றி, மரபிலாப் பங்கீட்டு முறையின்
(Informal Rationing) கீழ் அடங்கும் பற்பல பகுதிகளுக்கும்
நாங்கள் உணவு தானியங்களைத் திறம்பட வழங்க முடிந்தது.
ஆனால் நாங்கள் பதவியேற்ற காலத்திலேயே கட்டுப்பாடுகள் இனிமேல்
தேவையில்லையென்று எங்களுக்குத் தெளிவாகத் தோன்றிய உடனே
அவற்றை நீக்குவதற்குத் தயங்கமாட்டோம் என்பதையும் தெரிவித்திருந்



1970 பிப்ரவரி 26]

தோம். இதற்கிணங்க கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டுமென்கிற துணி
வான முடிவைக் கடந்த திங்களில் எங்களால் எடுக்க முடிந்தது. அதே
சமயத்தில் சமுதாயத்தின் எளிய பிரிவினருக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி
அளிக்கும் சீர் நல்கும் திட்டத்தையும் நாங்கள் தொடர்ந்து நீடித்துள்
ளோம். உணவு உற்பத்தி முனையில் நாம் ஆற்றியுள்ள சாதனையின்
காரணமாகவே கட்டுப்பாடுகளை நீக்க முடிந்தது என்பதை நாம் உணர
வேண்டும்.

### கால்நடை வளர்ப்புத் துறை.

20. கால்நடை வளர்ப்புத் துறையில் நடப்பு ஆண்டுவரை வெவ்வேறு
செயற்கூறுகளுக்குத் தனித்தனி அதிகாரிகள் இருந்து வந்தார்கள். வட்
டார அடிப்படையில் இல்லாமல் செயல் கூறுகளடிப்படையில் இத்துறை
இயங்கி வந்தது. இந்த முறையை மாற்றியமைத்து வட்டார வாரியாக,
பல பிரிவுகளையும் சீரமைத்து ஒரு புதிய ஏற்பாட்டை அரசு செய்துள்ளது.
இவ்வேற்பாட்டின்படி கால்நடை வளர்ப்புத் துறையின் பற்பல பிரிவுகளி
லும் அதன் பணிகளிலும் மேலும் அதிக அளவுக்கு அதிகாரங்களைப்
பரவலாக்கவும் ஒழுங்கை ஏற்படுத்தும் பொருட்டும் இத்துறை இவ்வாறு
சீரமைக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக, கால்நடை மருத்துவப் பணிக
ளின் பலன்கள் மேலும் சீரான வகையில் அனைத்துக் கிராமங்களுக்கும்
கிட்டும் வகையில் விரிவாக்கப்பட்டுள்ளன. சிக்கனமாக, பொருளாதார
முறையில் உருப்பெற முடியாத கால்நடைப் பிரிவுகளை மூடவும் எஞ்சிய
பிரிவுகள் சிக்கனமாகச் செயலாற்றுவதற்கான எளிய நடைமுறைகளை
வகுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வளர்ச்சித்
திட்டங்களும் கால்நடைக் கல்வித்துறைக்கென்றே ஏற்படுத்தப்பட்டுள்ள
துறைத் தலைவர் ஒருவரின் மேற்பார்வையில் செயல்படும் வகையில்
தனித் துறை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளமையும் கால்நடை பற்றிய
கல்வி, ஆராய்ச்சி, வளர்ச்சி ஆகியவை வருங்காலத்தில் இத்துறை மேனி
லையும் மேம்பாடும் அடைவதற்கான நல்ல அறிகுறிகளாகும்.

### பாற்பண்ணைத் திட்டம்.

21. பாற்பண்ணைத் திட்ட மேம்பாட்டைப் பொறுத்தவரையில், சென்னைப்
பாற்பண்ணை—பால் வழங்கு திட்டம் செவ்விய முறையில் தொடர்ந்து
பணியாற்றி வருகிறது என்பதை ஈண்டு நான் குறிப்பிட்ட விழைகிறேன்.
சென்னை மாநகரில் பால் பெருக்கத்திற்கும் அதனை வழங்குவதற்கும்
உள்ள தேவையை ஈடு செய்யும் பொருட்டு தென் சென்னையில், கிண்டி
யின் அருகே, இரண்டாவது பால் பண்ணை ஒன்றை நிறுவ நாம் நட
வடிக்கை எடுத்துள்ளோம். பால் மிகுதியாகக் கிடைக்கும் காலத்தில்
உபரிப் பாலை, பொடியாக மாற்றுவதற்காக மதுரையில் பாற்பொடித்
தொழிற்சாலை ஒன்றை நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஆயினும்,
கிராமங்களிலிருந்து கிடைக்கும் பாலை வைத்துக்கொண்டு சென்னை மாநகரின்
தேவைகள் முழுவதையும் ஈடுசெய்ய இயலாது. எனவே, பால்பண்ணை
மேம்பாட்டுத் தேசிய வாரியத்தைக் கலந்து ஆலோசித்து சென்னையிலும்,
சென்னை மாநகரைச் சுற்றிலும் பால் விற்பனையையும் பால்பண்ணை மேம்
பாட்டையும் ஊக்குவிக்க வகை செய்யும் திட்டம் ஒன்றை வகுக்க மாநில
அரசு திட்டமிட்டுள்ளது. உலக உணவுத் திட்டத்தின் மூலமாக பல்வேறு
நாடுகள் நம் நாட்டிற்கு நன்கொடையாக வழங்கவிருக்கும் ஆடை எடுக்
கப்பட்ட பாற்பொடியும், தூய வெண்ணெயும் (butter oil) சென்னை
மாநகர மக்களுக்கு வழங்கப்படும். இதிலிருந்து தயாரிக்கப்படும் பால்,
சென்னை பாற்பண்ணைத் திட்டங்கள் மூலம் வழங்கப்படும். பாற்
பொடி விற்பனையிலிருந்து கிடைக்கும் தொகையைக் கொண்டு சூழல்
நிதி ஒன்று அமைக்கப்பட்டு, அதில் நமக்கு ஒரு பங்கு கிடைக்கும்.
இம்மாநிலத்தின் பால் வளத்தைப் பெருக்கும் நோக்குடன், மாநிலத்தில்
உள்ள கால்நடைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக இந்த நிதி
பயன்படுத்தப்படும்.

## மீனளம்.

22. மீனளத் திட்டங்களின் கீழ் நாம் இது வரையில் கடந்த மூன்று ஆண்டுகளில் மாநிலம் முழுவதிலும் 382 விசைப் படகுகளை வழங்கியுள்ளோம். வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத்திடமிருந்து நிதி உதவிபெற்று மீனவர் கூட்டுறவுக் கூட்டமைப்பின் வாயிலாக 275 விசைப் படகுகளை வழங்கவும் நாம் கருதியுள்ளோம். விசைப்படகுகளை வழங்கும் திட்டத்தைப் பெருமளவில் நாம் செயல்படுத்தி வருவதால் படகுகளைக் கரை சேர்ப்பதற்கான வசதிகளையும், படகுகளை நிறுத்தி வைப்பதற்கான வசதிகளையும் நாம் மேம்பாடு செய்யவேண்டியுள்ளது. இந்தக் கருத்துடன் ராயபுரத்திலும், தூத்துக்குடியிலும் மீன்பிடித் துறைமுகங்களைக் கட்டுவதற்கான பணி இப்போது விரைவாக நடந்து வருகிறது. இவ்விரு திட்டங்களும் 1971–72-க்குள் முடிவடையக்கூடும்.

## பாசனம்.

23. இம் மாநிலத்தின் பாசனத் திட்டங்கள் செம்மையாக மறு ஆய்வு செய்யப்பட்டுள்ளன. தற்போதைய பாசன ஏற்பாடுகளில் கிட்டும் நீர் வசதியைப் பெரும்பாலான உழவர் பெருமக்களுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில் அந்த ஏற்பாடுகளைப் புதுப்பிக்கும் பணிகளுக்கு மிகச் சிறப்பான இடம் அளிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் காவிரி கழிமுகத்தில் உள்ள கால்வாய்களையும், வடிகால்களையும் மேம்பாடு செய்யும் பணி முதலிடம் பெறுகின்றது. நாற்பத்தைந்து கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு உலக வங்கி அனுப்பிய சிறப்புக் குழு ஒன்றினால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கு விரைவில் இசைவு அளிக்கப்படுமென நாம் நம்புகிறோம். பழைய காவிரி கழிமுகப் பகுதியில் பாசன ஏற்பாடுகள் மிகத் தொன்மையானவை என்பதை இம் மன்றத்தினர் உணர்வர். கால்வாய்களுக்குக் காரை பூசுதல், மதகுகளையும், பொறி மதகுகளையும் கட்டுதல், குழாய்க் கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகளின் வாயிலாக நில அடிமட்ட நீர் வளங்களை முற்றிலும் பயன்படுத்துதல் போன்ற திட்டங்கள் நாம் தயாரித்துள்ள திட்ட அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. கழனிகளில் வடிகால் வசதிகளை அறிவியல் முறையில் வகுத்து உழவர் பெருமக்களுக்கு உதவி அளிக்கக் கருதப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கழனிகள் அவ்வப்போது வெள்ளப் பெருக்கினால் சேதமடையாமல் இருக்க புதிய வெள்ளத் தடுப்பு முறைகள் பின்பற்றப்படும். இத் திட்டத்தின்கீழ் கல்லணைக்கும் கீழணைக்கும் செய்யப்படவேண்டிய மிகத் தேவையான மேம்பாட்டுப் பணிகளையும் மேற்கொள்ளும் கருத்துள்ளது. பண்ணைகளையும் முக்கிய அங்காடி நிலையங்களையும் இணைக்கும் சாலைகளையும் பாலங்களையும் அமைக்கவும் புதுமுறைச் சேமிப்புக் கிடங்குகளைக் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. இம் மேம்பாட்டுப் பணிகளுடன் தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்களுக்குக் கடன் வசதிகள் போதிய அளவிற்கு உயர்த்தப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. கடைகோடிப் பகுதிகளில் வடிகால் வசதிகளை மேம்பாடு செய்வதனால் அப்பகுதியில் நெல் விளைச்சலும் வாணிகப் பயிர் அறுவடையும் பெருகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இருபோகம் விளைவிக்கும் பரப்பளவைக் கணிசமான அளவில் பெருக்கும் வண்ணம் தற்போதுள்ள நீர் வசதியை இயன்ற அளவு மேலும் திறம்படப் பயன்படுத்துவதுதான் இத் திட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

24. பரம்பிக்குளம்-ஆழியாறு போன்ற திட்டங்களில் பெரும் பாசன வளத்தை முழுமையாகப் பயன்படுத்துவதும் முக்கியமான தேவையாகும். நாங்கள் பதவி ஏற்ற பின்னர் இது குறித்து நமது அண்டை மாநிலமான கேரள மாநிலத்துடன் இசைவான திட்டம் ஒன்றை வகுக்கும் முயற்சியைப் புதுப்பித்து உரமூட்டியுள்ளோம். கேரள, தமிழ் நாடு முதலமைச்சர்கள் இருவரும் சந்தித்து ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள் என்பதை இம் மன்றம் அறியும். இதற்கான விவரங்கள் அலுவலர்களால் இப்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதன்மீது விரைவில் இறுதியான, நட்புச்சூழ்நிலையிலான ஒரு ஏற்பாடு உருவாகுமென நான் எதிர்பார்க்கிறேன். அடுத்த ஆண்டு வரவு-செலவுத்திட்டத்



தில் நமது மாநிலப் பெரும் பாசனத் திட்டங்களுக்காக ஏறத்தாழ ஐந்து கோடி ரூபாய் நாம் ஒதுக்கியுள்ளோம். இதில் 2·7 கோடி ரூபாய் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்துக்கு உரியதாகும். சித்தார்-பட்டணங்கால் (Chittar-Pattanamkal) திட்டம், மணிமுத்தா நதித் திட்டம் ஆகிய இவ்விரு முக்கிய திட்டங்களும் அடுத்த ஆண்டில் நிறைவேறுமென எதிர்பார்க்கப்படுகின்றன. இவை தவிர, நான்காம் திட்டத்தில் நாம் சேர்த்துள்ள புதிய பாசனத் திட்டங்களைத் தொடங்கிவைக்கும் வகையில் 50 லட்சம் ரூபாய்க்கு மேல் ஒதுக்கியுள்ளோம்.

## மின் சக்தித் திட்டங்கள்.

25. மின்சாரத் திட்டங்களின் வளர்ச்சியைக் காண்போமாயின், கடந்த இரு ஆண்டுகளில் 6,705 கிராமங்களுக்கு மின் வசதி அளித்துள்ளோம். 1970 மார்ச் திங்களுக்குள் மேலும் 4,160 கிராமங்களுக்கு மின்வசதி அளிக்க முடியுமென எதிர்பார்க்கிறோம். 1967–68-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 25,022 கிராமங்களுக்கு மட்டுமே மின்வசதி அளிக்கப்பட்டிருந்ததற்கு மாறாக, 1970–71 இறுதிக்குள் 42,387 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின்வசதி அளித்துவிடுவோம். இம் மாநிலத்திலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் இயன்றவரை குறுகிய கால அளவிற்குள் மின்வசதியை ஏற்படுத்த நாம் திட்டமிட்டு வருகிறோம். நம்முடைய இந்த முடிவு 1970–71 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கிராம மின்வசதித் திட்டத்திற்காகப் பெருமளவில் 21·5 கோடி ரூபாய்க்கு முதலீடு செய்திருப்பதன் வாயிலாக எதிரொலிக்கின்றது. ஆனால், 1966–67-ஆம் ஆண்டில் இத் திட்டங்களுக்காக நமது செலவினம் 8·26 கோடி ரூபாய் அளவிலேயே நின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. நடப்பு ஆண்டில் 5,857 கிராமங்களில் தெரு மின் விளக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும். அடுத்த ஆண்டில் 8,514 கிராமங்களில் இத்தகைய வசதிகளைச் செய்து கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதற்கும் மின்சாரம் வழங்குவது எவ்வாறு முக்கியமானதோ அவ்வாறே நமது மின் இணைப்பில் போதிய மின் உற்பத்தித் திறனை அமைப்பதும் முக்கியமானதாகும். நெய்வேலி உட்பட தற்போது நிறுவியுள்ள நமது மின் உற்பத்தித் திறன் 1,570 மெ. வா. ஆகும். நடப்பு ஆண்டின் இறுதிக்குள் இதை 1,720 மெ.வா. ஆக உயர்த்தவும், 1970–71 இறுதிக்குள் 2,295 மெ. வா. ஆக உயர்த்தவும் நாம் எதிர்பார்க்கிறோம். நடப்பு ஆண்டில் ஆழியாறு மின்நிலையம் (60 மெ. வா.) சென்னை மின்நிலைய விரிவு நான்காம் நிலை (30 மெ.வா.) எண்ணூர் (60 மெ. வா.) ஆகிய இந்த மின்சார உற்பத்தித் திட்டங்களின் மூலம் நமது மின் இணைப்பில் கூடுதல் உற்பத்தித் திறன் சேர்க்கப்பட்டுள்ளது. 1970–71-ல் சோலையாறு முதல் மின் நிலையம் (70 மெ. வா.), சோலையாறு இரண்டாம் மின் நிலையம் (25 மெ. வா.), கோதையாறு முதல் மின் நிலையம் (60 மெ. வா), கோதையாறு இரண்டாம் மின் நிலையம் (40 மெ. வா.), நெய்வேலி (100 மெ. வா) எண்ணூர் (280 மெ.வா.) ஆகிய திட்டங்களின் வாயிலாகக் கூடுதல் உற்பத்தித் திறன் கிட்டும்.

## தொழில் வளர்ச்சி.

26. கடந்த மூன்றுண்டுகளில் இந்தியப் பொருளாதாரத்தில் நிலவி வந்த பொது மந்த நிலை காரணமாக இந்நாடு முழுவதிலும் உள்ள தொழில் முனைவர்கள் புதிய தொழில்களைத் தொடங்கப் பெரிதும் விருப்பமில்லாமல் இருந்தனர். எனினும், இம் மாநிலத்தில் உள்ள ஆர்வமுள்ள தொழில் முனைவர்கள் பலரைப் புதிய திட்டங்களைத் தொடங்கும் வண்ணம் நம்மால் ஊக்கப்படுத்த முடிந்தது. இம் மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும் 1966 இறுதியில் 6,993-ஆக இருந்ததற்கு மாறாக 1968 இறுதியில் 7,394-ஆக அதிகரித்துள்ளது. தூத்துக்குடியில் 52 கோடி ரூபாய் செலவில் கூட்டுத்துறை (Joint Sector) உரத்திட்டம் ஒன்றிற்கான பணிகளைத் தொடங்கியுள்ளோம். நாக்பால் பெட்ரோ கெமிக்கல் ரிஃபைனிங் லிமிடெட் (Nagpal Petro-Chemical Refining Project என்கிற 5 கோடி ரூபாய் அளவிலான

மற்றொரு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் நடப்பு ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கியுள்ள சென்னை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையின் (Madras Oil Refineries) பொருள்களைப் பயன்படுத்தும். சென்னை உரத் தொழிற்சாலை மீதான பணிகளும் விரைந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தனியார் துறையில் பிளாஸ்டிக் பொருள்கள் ரெசின்கள், ரசாயனப் பொருள்கள் இவற்றை உற்பத்தி செய்வதற்கான புதிய திட்டப்பணி ஒன்று தூத்துக்குடியில் நிறுவப்பட்டு வருகிறது.

27. இவை தவிர சென்னையில் பெட்ரோ-கெமிக்கல் பல்வகைப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ இயலுமா என்பதைப் பற்றியும் அரசு ஆய்வு அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளது. இத் திட்டம் இயன்ற விரைவில் நிறைவேற்றப்படுவதற்கு உறுதி அளிக்கும் வகையில் இந்திய அரசுடன் நாம் விவாதங்களை மேற்கொண்டுள்ளோம். ஏராளமான படித்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் இதனால் வேலை வாய்ப்பு கிடைக்கும். இத் திட்டத்தை விரைவாக மேற்கொள்ள வேண்டிய அவசியம் பற்றி நாம் இந்திய அரசிடம் வற்புறுத்தியுள்ளோம். இத் திட்டத்திற்கு ரூ. 90 கோடி முதல் ரூ. 100 கோடி வரையில் முதலீடு செய்ய வேண்டியிருக்கும். இது குறித்து இறுதியான முடிவு எடுக்கும் வரையில் நைலான் தொழிற்சாலை, ரப்பர் வட்டைச் சரடு ( Tyre cord plant) தொழிற்சாலை, கார்பன்-பிளாக் என்று சொல்லப்படும் ரசாயனப் பொருள் தயாரிப்பதற்கான தொழிற்சாலை போன்ற நடுத்தரத் தொழிற் பிரிவுகளை பெட்ரோ-கெமிக்கல் தொழிலில் தொடங்குவதற்கு இந்திய அரசு அதிகாரமளிக்குமென நாம் நம்புகிறோம்.

28. சேலம் உருக்காலைத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் முதல் நிலைப் பணியாக, கஞ்சமலையில் முதல் சுரங்கத்தை வெட்டும் பணியை தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் மேற்கொள்ளும். இக் கழகம் அரக்கோணத்தில் கன்காஸ்ட் தொழிற்சாலையையும் (Concast plant), ஆலங்குளத்தில் சிமிட்டித் தொழிற்சாலையையும் நிறுவி வருகிறது. மற்றும் இக் கழகம் இயந்திரக் கருவிகள் தொழிற்சாலை, துணுக்கு இரும்புத் தொழிற்சாலை (Sponge iron plant), சோடியம் ஹைட்ரோ சல்பேட், சோடா காரம் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை, அம்மோனியம் குளோரைடு தொழிற்சாலை ஆகியவற்றை நிறுவுவதற்கான செயற் குறிப்புகளை விரைந்து மேற்கொண்டு வருகிறது.

29. பல்வேறு அடிப்படைத் தொழில்களை நிறுவுவதற்கு இசைவளிக்குமாறு இந்திய அரசினை நாம் வலியுறுத்தி வந்துள்ளோம். இவற்றில், கூட்டுத்துறையில், தொடங்கப்படவிருக்கிற துருப்பிடிக்காத உருக்கு உற்பத்தித் தொழிற்சாலை, அரக்கோணத்தில் தொடங்கப்படவிருக்கிற விளிம்பற்ற உருக்குக் குழாய்கள் உற்பத்தித் தொழிற்சாலை, பிலிப்ஸ் நிறுவனத்தின் உடனுழைப்புடன் மின் கருவிகள் உற்பத்தித் திட்டம் ஆகியவை அடங்கும். இத்தொழிற் திட்டங்களைத் தொடங்குவது குறித்து இந்திய அரசு விரைவாகத் தனது முடிவை அறிவிக்குமென நம்புகிறோம்.

30. அம்பத்தூர்-கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கும் 1970–71 வரவுசெலவுத் திட்டம் வகை செய்கிறது. சரிகை உற்பத்தி செய்வதற்காகக் காஞ்சீபுரத்தில் தொழிற்சாலை ஒன்றை ரூ. 25 லட்சம் செலவில் நிறுவத் திட்டமிட்டுள்ளோம். மாநிலத் துறையில் நிறுவப்படவிருக்கும் தொழில்களுள் இது முக்கியமான ஒன்றாகும். கைத்தறித் துறையைப் பொறுத்தவரையில், கைத்தறித்துணி விற்பனைக்குக் கழிவுத் தொகை வழங்கும் திட்டத்தின் வாயிலாக அத் துறைக்கு அரசு தொடர்ந்து உதவியளித்து வரும். 1970–71-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கென 90 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது.

### பஞ்சாலைத் தொழில்.

31. நான் இதற்கு முன்னர் குறிப்பிட்டிருந்ததைப் போல 1966 முதல் 1968 வரையுள்ள ஆண்டுகளில் இந்தியப் பொருளாதாரம் மிகக் கடுமையான மந்த நிலையைக் காணநேரிட்டது. தமிழ் நாட்டைப் பொறுத்த



வரையில் பஞ்சாலைகள் மூடப்பட்டது இதன் உடனடி விளைவாகும். முக்கியமாக வடபுல மாநிலங்களில்தான் நம்முடைய நூல் விற்கப்படுகின்றது. இங்கு நம் நூலுக்கான தேவை பெரிதும் குறைந்ததே மேற்குறிப்பிட்ட ஆலைகள் மூடப்பட்டதற்குக் காரணமாகும். மூடப்பட்ட பஞ்சாலைகளை மீண்டும் திறப்பதற்கு மாநில அரசு தொடர்ச்சியாகப் பல ஏற்பாடுகளை மேற்கொண்டது. நொடித்த பல ஆலைகள் மீண்டும் திறக்கப்படுவதற்கு உதவி அளிக்கும் வகையில் 222 லட்சம் அளவிற்கு நாம் உத்தரவாதங்கள் அளித்துள்ளோம். இதற்குமுன் நூல் துணிகள்மீது விதிக்கப்பட்டு வந்த உயரிய ஆயத் தீர்வைகளைத் தளர்த்தும்படி இந்திய அரசின் நிதி அமைச்சகத்தை வற்புறுத்தி இதில் நாம் வெற்றி கண்டோம். நம்மைப் பொறுத்த வரையில், நூலின் மீதான விற்பனை வரியில் 50 சத வீதத் தொகையை ஐந்தாண்டுகளுக்கு வட்டியில்லாக் கடனாகப் பயன்படுத்திக் கொள்ள நொடித்த துணி ஆலைகளுக்கு நாம் அனுமதி அளித்துள்ளோம். மேலும், துணி ஆலைகள் அனைத்துக்கும் மின்சக்தி பயன்படுத்துவதற்கான வரியை 40 சத வீதத்திலிருந்து 30 சத வீதமாகக் குறைத்துள்ளோம். தமிழ் நாடு பஞ்சாலைக் கழகம் ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளோம். இக் கழகம் நான்கு ஆலைகளை எடுத்து நடத்தி வருகிறது. தமிழ் நாடு அரசு மேற்கொண்ட இந்த ஏற்பாடுகளின் விளைவாக, இதற்கு முன் மூடிக்கிடந்த 27 ஆலைகளில் 13 ஆலைகள் மீண்டும் திறக்கப்பட்டன. 1969-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் வேலையற்று இருந்த பஞ்சாலைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், இத்தகைய தொழிலாளரின் மொத்த எண்ணிக்கையைக் கணிசமான அளவில் நாம் குறைத்துள்ளோம்.

32. நமது பஞ்சாலைகளைக் குறித்து மற்றொன்றும் சொல்ல விழைகின்றேன். இப்பொழுதுதான் இவ்வாலைகள் மத்திய அரசு வரி விதிப்புகளின் பெருஞ் சுமையிலிருந்து விடுபட்டு இயங்கத் தொடங்கியுள்ளன. அண்மையில் பஞ்சு முதலிய மூலப்பொருள்களின் மீது கொடுக்கப்படும் கடன்களைக் கட்டுப்படுத்தி மத்திய அரசு ஆணையிட்டுள்ளது. இதன் உள் நோக்கம் விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவது என்பது உண்மையேயானாலும், பஞ்சாலைகளை, சிறப்பாக மூடிக்கிடந்து தற்போதுதான் திறந்துள்ள பஞ்சாலைகளை—இக்கட்டுப்பாடுகள் பாதிக்குமோ என இவ்வரசு அஞ்சுகிறது. வங்கிகளிலிருந்து வாங்கும் கடன் வசதிகள்தான் பஞ்சாலைகளின் அன்றாட ரொக்கத்தேவைகளுக்குப் பயன்படுபவை. இவ்வண்ணம் நிலைமை இருப்பதால் தற்போதைய கடன் கட்டுப்பாடுகளின் விளைவாக ஆலைகள் திரும்பவும் மூடப்படாமலிருக்க மத்திய அரசு ஆவன செய்ய வேண்டும். மூலப் பொருள்களைப் பொறுத்தவரையில் தேவைகளைக் கணக்கிலெடுத்து அதிகப் படியாக பஞ்சு முதலியன இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்வதால் வாணிகச் சூதாட்டங்களை தடுத்து விலை வாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று இவ்வரசு கருதுகிறது. இந்த ஏற்பாட்டினால் பொதுமக்களின் அன்றாடத் தேவைப் பொருளான துணி வகைகளின் விலைகளை நிலைக்கச் செய்ய முடியும்.

### சாலைகள்.

33. இம்மாநிலச் சாலைகளை அமைக்கவும் மேனிலைப் படுத்தவும் உரிய திட்டம் விரைந்து செயல்படுத்தப்பட்டு வந்துள்ளது. சாலை பேணுதல் பணிக்கான செலவு 1966–67-ல் 581 லட்ச ரூபாயாக இருந்ததற்கு மாறாக, 1970–71-ல் 719 லட்ச ரூபாய்க்கு உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர, சாலை பேணுதல் மானியத்தைப் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்குவது குறித்து சாலைகளின் மைல் நீள அடிப்படையில் மேலும் சீரான ஒரு ஏற்பாட்டைக் கடைபிடிக்க நாம் வகை செய்துள்ளோம். நகராட்சிகளின் அதிகார வரம்புக்குள் உள்ள சாலைப் பணிகளுக்கு முதல் முறையாக நிதி உதவி அளிக்கக் கருதியுள்ளோம். இதற்கென வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 10 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்திருக்கிறோம். 1966–67-ஆம் ஆண்டில் சாலைகளுக்கான முதலீடு 124 லட்சம் ரூபாயாக இருந்ததற்கு மாறாக, 1970–71-ஆம் ஆண்டில் இம் முதலீடு ரூ. 161 லட்சமாக அதிகரித்துள்ளதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களின் நாட்டத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

### சமூகப் பணிகள்.

34. நிதிவாயில்கள் கிட்டும் நிலை மிகக் கடுமையாக இருந்தபோதிலும் நாங்கள் பதவியிலிருந்துவரும் ஆண்டுகளில் சமூகப் பணிகளுக்கான செலவினத்தைக் கணிசமான அளவுக்கு உயர்த்த வகை செய்துள்ளோம். கல்விக்கான செலவினம் 1966–67-ல் 43·86 கோடி ரூபாயாக இருந்ததற்கு மாறாக, 1970–71-ல் 66·83 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. வருங்கால மக்களுக்கு இன்றியமையாத இந்த முதலீட்டில் மாநில அரசு எந்த அளவுக்குப் பொறுப்பேற்றுள்ளது என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும். 6—11 வயதுத் தொகுதி மாணவர்களுக்காக 2,720 ஆசிரியர்களையும், 11—14 வயதுத் தொகுதி மாணவர்களுக்காக 1,930 ஆசிரியர்களையும், 14—17 வயதுத் தொகுதி மாணவர்களுக்காக 1,320 பி.டி. ஆசிரியர்களையும் நியமிக்க 1970—71 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு பள்ளிகளில் கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு வகை செய்வதே இதன் நோக்கமாகும். கல்வி வசதிகளை விரிவு படுத்துவதற்காக போதிய அளவுக்கு வகை செய்துள்ள அதே சமயத்தில் கல்வியின் தரத்தைப் பேணி வருவதற்கும், மேம்படுத்துவதற்கும், குறிப்பாகப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்துவதற்கும் நாம் சிறப்பிடம் அளிக்க வேண்டியுள்ளது.

35. கடந்த பல ஆண்டுகளாக நிதிப்பற்றுக்குறை காரணமாக சுகாதாரப் பணிகளை நிறைவேற்றுவதில் கட்டுப்பாடுகள் இருந்தன. நமக்குள்ள நிதி நிலை வரம்புக்குள் நாம் இந்த வரையறைகளைத் தளர்த்தி 1967–70-ஆம் ஆண்டுக்கால அளவில் 113 தொடக்கச் சுகாதார நிலையங்களைத் தொடங்கியுள்ளோம். பல்லடம், கள்ளக்குறிச்சி, ஓமலூர், பண்ணுருட்டி, ஜலகண்டபுரம், பட்டுக்கோட்டை, பண்ணைக்குளம், ஜல்லிப்பட்டி, மாயூரம், கன்னியாகுமரி, வத்திராயிருப்பு, ஆலங்குடி, வளவனூர், பழனி போன்ற பற்பல இடங்களில் புதிய வார்டுகளைத் திறப்பதன் வாயிலாக மருத்துவ வசதிகளை விரிவுபடுத்திவதற்கு அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்துள்ளோம் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கவனித்திருக்கலாம். திருவண்ணாமலை, நாமக்கல், திருவாரூர், ஆகிய இடங்களில் உள்ள மருத்துவ மனைகளுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டும் திட்டத்தையும் நாம் மேற்கொண்டுள்ளோம். ஈரோடு, விழுப்புரம், ஆகிய இடங்களில் மார்பு சிகிச்சை மருத்துவ மனைகள் திறக்கப்படும். ஆத்தூர், அரியலூர், சிவகங்கை, ஆகிய இடங்களில் எக்ஸ்-ரே தொகுதிகள் அமைக்கப்படும். கண்விழி விறைப்பு நோய் மருத்துவமனை (Glaucoma unit) ஒன்று மதுரையில் நிறுவப்படும். இம்மாநிலத்தில் தொழுநோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் இரண்டு நிறுவப்படும். இம்மாநிலததிலுள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கு பற்பல மேம்பாடுகள் செய்வதற்காகவும் வகை செய்துள்ளோம். இக்காரியத்திற்காக 1970–71-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மொத்தம் ரூ. 35 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம்.

36. உழைக்கும் மக்களின் நலனுக்கான தொழிலாளர் நல ஈட்டுறுதி திட்டத்தை செயல்படுத்துவதில் நாம் பெருமளவு முன்னேறியுள்ளோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இத் திட்டத்தில் மேன் மேலும் பல தொழிலாளர்களைச் சேர்த்துக் கொள்வதன்மூலம் மருத்துவ வசதிகளை மேம்பாடு செய்துள்ளோம். மருத்துவ மனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்துவதன் வாயிலாக அகப்பிணியாளர்களுக்கு (In-patient) மேலும் வசதிகளைச் செய்து கொடுத்துள்ளோம். இத்திட்டம் பிற தரங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்குப் பயன்படும்படியும் அதனை விரிவாக்கியுள்ளோம். ஆனால், தொழிலாளர் நல ஈட்டுறுதித் கழகம் நமக்கு ஏமாற்றமளிக்கும் வகையில் செலவைப் பகிர்ந்து கொள்வதில், ஒரு தொழிலாளிக்கு 50 ரூபாய் என்று உச்ச வரம்பு கட்டியுள்ளது. இது அக்கழகம் தன்னிச்சையாக மேற்கொண்டுள்ள உண்மைக்கு மாறான ஒரு நிலையாகும். இதன் காரணமாக நடப்புச்





செலவின அளவிலும் மாநில அரசு இதற்கென ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 70 லட்சம் ரூபாய் கூடுதல் பொறுப்பை ஏற்க வேண்டி வரும். இப்புதிய வரையறை, கழகமும், மாநில அரசுகளும் செய்து கொண்ட ஏற்பாட்டின் மெய்க் கருத்துக்கு மாறாக உள்ளது. இது குறித்து இந்திய அரசுடன் தனியாகக் கலந்து ஆலோசிக்கலாமென நாங்கள் கருதுகிறோம்.

### பின்தங்கிய வகுப்பினர் நலன்

37. சமூகத்தில் வசதி குறைந்த பிரிவினர்களின் நலன் அரசின் சிறப்பான நாட்டத்தைத் தொடர்ந்து ஈர்த்து வந்துள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் பின் தங்கிய வகுப்பினர்களின் நலனுக்கான முதலீடுகளை 1966–67-இல் ஒதுக்கியிருந்த 184 லட்சம் ரூபாயிலிருந்து 1969–70-இல் 314 லட்சம் ரூபாயாக அரசு உயர்த்தியுள்ளது. பின்தங்கிய வகுப்பினர்களுக்கு வழங்கப்படும் படிப்பு உதவிச் சம்பளங்களுக்கான தொகை 1966–67-இல் 94 லட்சம் ரூபாயிலிருந்து 1969–70-இல் 246 லட்சம் ரூபாய்க்கும், 1970–71-இல் 260 லட்சம் ரூபாய்க்கும் உயர்த்தப்பட்டுள்ளது. பின் தங்கிய வகுப்பினர்களின் நலனுக்காக, நீண்டகாலத்திட்டங்களை உருவாக்கும் தேவையை உணர்ந்து பின் தங்கிய வகுப்பினர் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதை இம் மன்றத்தினர் அறிவர். அரிசன நலனுக்கான முதலீடும் 1966–67-இல் 405 லட்சம் ரூபாய்க்கு வகை செய்யப்பட்டிருந்ததற்கு மாறாக, 1970–71-இல் 519 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 1970–71-ஆம் ஆண்டில் புதிதாக 22 அரசு மாணவர் இல்லங்களைத் திறக்கவும், தற்போது தனியார் துறையினால் நடத்தப்பட்டுவரும் மானியம் பெறும் 20 மாணவர் இல்லங்களை எடுத்துக் கொள்ளவும் நாங்கள் கருதியுள்ளோம் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

38. இது குறித்து ஒரு முக்கிய கருத்தை இம்மன்றத்தினரின் நாட்டத்துக்குக் கொண்டுவர எண்ணுகின்றேன். அரிசன நலனுக்கான முதலீட்டில் பெரும்பகுதி இந்திய அரசிடமிருந்து பெறப்படுகிறதென்றும் இந்த அரசு இத் திட்டங்களுக்காகப் பெருமளவில் உதவி அளிப்பதில்லையென்றும் சிலநேரங்களில் சொல்லப்படுகிறது. நடப்பு ஆண்டில் அரிசன நல, படிப்பு உதவிச் சம்பளங்களுக்காக 143 லட்சம் ரூபாய் முதலீடு செய்திருப்பதில், படிப்பு உதவிச் சம்பளங்களுக்குக்காக இந்திய அரசு ஒதுக்கியுள்ள உதவித் தொகை 5 லட்சம் ரூபாய் மட்டுமே என்பதை நான் இங்கு திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன். 1970–71-ஆம் ஆண்டிலும் அரிசன நல, படிப்புதவித் தொகைகளுக்கான செலவு ரூ. 148 லட்சத்தில் மத்திய உதவி நடப்பாண்டின் அளவிலேயே இருக்கக்கூடும். அரிசன நலத் திட்டத்தை மொத்தமாக எடுத்துக்கொண்டால், 1969–70-ஆம் ஆண்டில் ரூ. 519 லட்சம் செலவிடப்படவிருக்க, மத்திய அரசிடமிருந்து ரூ. 25 லட்சமே உதவியாகக் கிடைக்கும். இத் திட்டத்திற்காக 1970–71-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 539 லட்சம் ஒதுக்கியுள்ளபோதிலும், மத்திய அரசிடமிருந்து நடப்பாண்டு அளவைவிடக் கணிசமாக உயர்ந்த உதவியேதும் கிட்டவாய்ப்பில்லை. அரிசன நலனுக்காக இந்திய அரசு ஒதுக்கிய உதவித் தொகையின் அளவு கணிசமாகக் குறைந்துள்ள போதிலும் இம் மாநிலம் தனது சமூகக் கொள்கைக்கு இணங்க இத் திட்டங்களுக்காக முதலீடுகளைத் தொடர்ந்து வகை செய்து வந்துள்ளதென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக்கொள்வார்களெனக் கருதுகின்றேன்.

### கிராமங்களில் வேலையின்மையை நீக்கும் சமூக நலத்திட்டம்.

39. கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு வசதிகள் பெருகவேண்டுமென்ற நோக்கத்துடன் புதியதொரு திட்டத்தை இம் மதிப்பீடுகளில் சேர்த்துள்ளோம். இத் திட்டத்தின்கீழ் இணைப்புச்சாலைகள் அமைத்தல், மகப்பேறு நிலையங்கள், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், நீர்வழங்கல் பணியை விரிவு படுத்துதல் ஆகியவற்றிற்கென 1970–71-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் ஒரு கோடி ஒதுக்கியுள்ளோம். இப் பணிகள் மேற்கொள்ளப்படும் பகுதிகளில் நிலவிவரும் பொருளாதார சூழ்நிலையைப் பொறுத்து,

பற்பல பணிகளுக்காகும் செலவில் 35 முதல் 50 சதவீதம் வரையில் வெவ்வேறு வீதங்களில் உதவித்தொகை அளிப்பதற்காக இத்தொகை பயன்படுத்திக்கொள்ளப்படும். இப் பணிகளுக்காகும் எஞ்சிய செலவு, உள்ளூர் மக்களின் நன்கொடைகள்மூலம் சரிக்கட்டப்படும். ஒதுக்கப்பட்டுள்ள ஒரு கோடி ரூபாயில், ரூபாய் 25 லட்சம் குறிப்பாக அரிசனக் குடியிருப்புகளில் மேம்பாட்டுப்பணிகளை நிறைவேற்றுவதற்காகச் செலவிடப்படும். இப்பணிகளுக்கான செலவு முழுவதையும் அரசு ஏற்கும். சமூகத்தின் தடைகளால் அவதிப்பட்டுவரும் அரிசனங்களின் குறைபாடுகளைக் களைவதற்குப் படிப்படியான திட்டம் ஒன்றை மேற்கொள்ளவேண்டுமென்று அரசு உணர்ந்துள்ளது. இம் மாநிலம் முழுவதிலும், அரிசனங்களுக்கு நன்மை பயக்கும் வகையில் இணைப்புச் சாலைகள், தூயநீர்வழங்கல், வீட்டு மனைகள் ஆகியவற்றிற்கு வகை செய்வதற்காக கால எல்லை வரையறுக்கப்பட்ட இணைந்த திட்டமொன்றை வகுக்க வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. அரிசன–நல–கிராம வளர்ச்சித் துறைகளுக்கான முறையான வரவு–செலவுத் திட்டங்களில் இப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகைகளைக் கருத்தில் கொண்டோமாயின், 1970–71ஆம் ஆண்டில் மேலே குறிப்பிடப்பட்ட ரூபாய் 25 லட்சத்தையும் சேர்த்து மொத்தம் ரூபாய் 100 லட்சத்திற்குமேல் இத் திட்டங்களில் செலவு செய்யப்படும் என்பதைக் காணலாம். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் இம் மாநிலம் முழுவதிலுமுள்ள அரிசனக் குடியிருப்புகள் அனைத்திலும் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துவதற்கும், தூய நீர் வழங்கல் போன்ற வசதிகள் அளிப்பதற்கும் ஏற்ற வகையில் இத் திட்டத்தை விரைவுபடுத்த நாம் திட்டமிட்டுள்ளோம்.

### குடிசைப் பகுதிகள்.

40. சென்னை மாநகரில் உள்ள குடிசை வாழ் மக்களின் பிரச்சினை அரசின் நாட்டத்தை ஈர்த்து வந்துள்ள மற்றொரு சிக்கலாகும். சென்னை மாநகரின் மக்கள் தொகையில், ஏறத்தாழ நான்கில் ஒரு பகுதியினர் இத்தகைய குடிசைப் பகுதிகளில் வாழ்கின்றனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு முந்திய மூன்று திட்டங்களின் கால அளவில் மொத்தம் 2,302 குடியிருப்புகள் மட்டுமே கட்டிக்கொடுக்கப்பட்டிருக்க, 1967 முதல் 1970 வரையுள்ள கால அளவில் 5,828 குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டும் ஒரு திட்டத்தையும் நாம் மேற்கொண்டு இதுகாறும் 3,895 வீடுகள் கட்டப்பட்டு விட்டன. இவ்வாறு இருப்பினும், இச்சிக்கலின் விளிம்பையே இதுவரை தொட்டுள்ளோம் என்பதை நாம் அறிகிறோம். சென்னை மாநகரில் குடிசைக் குடியிருப்புகள் அச்சுறுத்தும் வகையில் வளர்ந்து வருவதைத் தடுப்பதற்குத் துணிவான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வது அவசியமாகும். இந்த கருத்துடன் சென்னை மாநகரில் குடிசைகளை அகற்றுவதற்கான படிப்படியான திட்டம் ஒன்றை அடுத்த ஏழு ஆண்டுகளுக்குள் மேற்கொள்ள வேண்டுமென்கிற கொள்கை முடிவை நாம் எடுத்துள்ளோம். 1970–71-இல் குடிசை மாற்றத் திட்டத்திற்காக ஒரு கோடி ரூபாய் வகை செய்துள்ளோம். ஈண்டு நாம் செய்யவிருக்கும் முதலீடுகளிலிருந்து இன்னும் அதிக அளவில் நலம் பெறும் பொருட்டு, இத் துறையில் நாம் நிறைவேற்றி வந்துள்ள பற்பல திட்டங்களைச் சீரமைப்பது அவசியமாகும். சென்னை மாநகரில் தற்போது இருக்கும் குடிசை வாழ் மக்களின் வாழ்க்கைச் சூழ்நிலையை மாற்றியமைப்பதோடு, புதிய குடிசைகள் தோன்றுமல் இருக்க ஆவன செய்வதும் இன்றியமையாததாகும்.

### தலை நகர வளர்ச்சி.

41. குடிசைவாழ் மக்களின் பிரச்சினையைத் தலைநகர வளர்ச்சியின் ஒரு பகுதியாகத்தான் அணுகவேண்டும். தலைநகரச் சிக்கல்கள் பற்றிய திட்ட அறிக்கை யொன்றை உலக வங்கிக்கு அனுப்பும் நோக்கத்துடன் அரசு தீட்டிவருகிறது. திருவள்ளூர், செங்கற்பட்டு, கும்மிடிபூண்டி ஆகிய இடங்களில் சிறு நகரங்களை வளர்ப்பதும், எண்ணூர், அரக்கோணம், ஆவடி



ஆலந்தூர், பல்லாவரம், பூவிருந்தவல்லி, தாம்பரம் போன்ற இடங்களில் வளர்ச்சி வட்டாரங்களை (Growth Centres) மேம்பாடு செய்வதும் இந்தத் திட்ட அறிக்கையில் ஆலோசிக்கப்பட்டுள்ள முக்கிய முறைகளாகும். அடுத்த சில மாதங்களில் திட்ட அறிக்கை தயாராகிவிடுமென நாம் எதிர்பார்க்கிறோம். வீட்டு வசதித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுவரும் 20 முதல் 40 கோடி ரூபாய் அளவிலான சுழல் நிதியை (Revolving Fund) நலம் பயக்கும் வகையில் பயன்படுத்திக் கொள்ளலாமென்றும் நாம் நம்புகிறோம். சென்னை மாநகரில் நில மேம்பாடு, வீட்டு வசதிச் சிக்கல்களை ஒருமுகமாக எதிர்த்துப் போராடுவதற்கு இது வகை செய்யுமென்றும் நாம் எதிர்பார்க்கிறோம். சென்னை மாநகராட்சி, ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து நடப்பாண்டில் மூன்று கோடி ரூபாய் அளவிற்கு உதவி பெற்றுள்ளது. அடுத்த ஆண்டிலும் இந்த அளவு உதவி கிட்டக்கூடும். இதன் துணைகொண்டு மாநகராட்சி தனது மூலதனத் திட்டங்களின் மீதான முதலீடுகளைப் பெருமளவில் உயர்த்திடக் கூடும்.

### நீர்வழங்கல் வடிகால் திட்டம்.

42. இம் மாநிலத்தில் பற்பல பகுதிகளுக்குத் தூய நீர் வழங்கும் திட்டங்களுக்காக நாம் முதன்மையிடம் அளித்து வந்துள்ளோம். வீராணம் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். 1970–71-ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தில், இத் திட்டத்திற்கென 734 லட்சம் ரூபாய் அளவுக்குப் பெருமளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. கேரள மாநில நீரினைப் பகிர்ந்து கொள்வது குறித்து அந்த மாநிலத்துடன் ஏற்பட்ட இணக்கமான முடிவின் விளைவாக சிறுவாணி நீர் வழங்குத் திட்டத்தினை மேற்கொள்ளும் நிலையில் நாம் இருப்போம். இந்தத் திட்டத்திற்காக ஏறக்குறைய 5 கோடி ரூபாய் முதலீடு தேவைப்படும். இத் திட்டம் கோயம்புத்தூருக்கு மட்டுமின்றி வழியிலுள்ள 9 கிராமங்களுக்கும், கோயம்புத்தூரின் புற எல்லையிலுள்ள பல கிராமங்களுக்கும் பயன்படும். ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் உதவியுடன் நகர நீர் வழங்குத் திட்டங்களுக்காகவும் வடிகால் திட்டங்களுக்காகவும் கணிசமான முதலீடுகளை நம்மால் பெற முடிந்துள்ளது. 1966–67-இல் 214 லட்சம் ரூபாய் மட்டுமே ஆண்டு முதலீடாக ஒதுக்கப்பட்டிருந்ததற்கு மாறாக, நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படும் முதலீடு 362 லட்சமாக உள்ளது. இதில், ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் நமக்கு வழங்கியுள்ள 192 லட்சம் ரூபாயும் அடங்கும். இதுவரை நகராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்கும் நீர் வழங்கல், வடிகால் திட்டங்களுக்கென மொத்தம் 14 கோடி ரூபாய் அளவிலான திட்டம் ஒன்றுக்கு ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து நாம் கடனுதவிக்கு ஒப்புதல் பெற்றுள்ளோம். அத்தகைய திட்டங்களுக்காக 1970–71-ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் 396 லட்சம் ரூபாய் முதலீடு செய்ய வகை செய்துள்ளோம். மற்றும் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்துக்கு நாம் விரைவில் அனுப்பிவைக்கவிருக்கும் பல புதிய திட்டங்களுக்காக அக்கழகத்திடமிருந்து கடனுதவி பெற்று இந்த முதலீட்டை மேலும் உயர்த்த முடியுமென நாம் எதிர்பார்க்கிறோம். கிராமப்புற நீர் வழங்கல் திட்டங்களின் கீழும், 1966–67-இல் வகை செய்திருந்த 74 லட்சம் ரூபாய் முதலீடுகளிலிருந்து நடப்பாண்டில் 140 லட்சம் ரூபாய் அளவுக்கு அந்த முதலீட்டை நாம் உயர்த்தியுள்ளோம். நீர்வழங்கல்-வடிகால் துறைகளில் பற்பல பணிகளை ஒருமுகப்படுத்துவதற்காக நடப்பாண்டில் நாம் மேற் கொண்டுள்ள முக்கிய முடிவு நீர்வழங்கல்-வடிகால் வாரியம் ஒன்றை அமைப்பது குறித்ததாகும். விரைவில் சட்டப்படி அமைக்கப்படவிருக்கும் இவ்வாரியம் மேலும் நிதி வாயில்களைத் திரட்டி ஒவ்வொரு கிராமத்திற்கும் படிப்படியான ஒரு திட்டத்தின்கீழ் போதிய நீர் வழங்கல் வசதியை ஏற்படுத்த வேண்டுமென்கிற நமது நோக்கம் ஈடேறும் வகையில் தனது பணிகளை நிறைவேற்றும்.

### 1970–71 ஆண்டுத் திட்டத்தின் சிறப்புக் கூறுகள்.

43. 1970–71-ஆம் ஆண்டுத் திட்டத்தின் சிறப்பான சில கூறுகள் பற்றி இம் மன்றத்தில் விளக்க விழைகிறேன். வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கண்டுள்ளவண்ணம் உருவாக்கப்பட்டுள்ள திட்டத்திற்காக

மொத்தம் ரூ. 106.25 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதில் கிராமப்புறங்களில் மின்சக்தி வழங்கும் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 21.5 கோடி ரூபாயையும் சேர்த்து ரூ. 43.53 கோடி மின்சக்தித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆண்டுத் திட்டத்தில் வேளாண்மைக்காகவும், வேளாண்மை சார்ந்த திட்டப் பணிகளுக்காகவும் ரூ. 12.19 கோடியும், தொழில் வளர்ச்சித் திட்டப்பணிகளுக்காக ரூ. 7.62 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தில் சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்காக 2.29 கோடி ரூபாயும், கல்விக்கென 7.38 கோடி ரூபாயும், மருத்துவ, பொதுச் சுகாதாரத் திட்டங்களுக்கென 2.43 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. முதலீடுகளைப் பற்றி ஆய்கையில் திட்டமில்லாக் கணக்கில் பெருந்தொகைகளை ஒதுக்கியிருப்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். நீர் வழங்கல்–வடிகால் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் 11.16 கோடி ரூபாயான மிகப் பெரிய முதலீட்டினைக் குறித்துச் சிறப்பாகக் குறிப்பிட விரும்புகிறேன். இதில் வீராணம் திட்டத்திற்கான நிதிஒதுக்கமும் அடங்கும். 106.25 கோடி ரூபாயுள்ள திட்ட முதலீட்டிற்கு இது வரை வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்ட மத்திய உதவி 36.6 கோடி ரூபாய் மட்டுமேயாகும். வெளிப்படையாகவே இது குறைவெனத் தெரிகிறது. இந்திய அரசு நமது தேவைகளைக் குறித்து உண்மை நடைமுறைக்கேற்ற ஒரு கருத்தினை மேற்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அடிப்படையில் வரவு-செலவுத் திட்டத்தில் மத்திய உதவி 45 கோடி ரூபாய் அளவிற்குக் கிட்டுமென்று நாம் கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளோம். பொதுமக்களிடமிருந்து திரட்டும் கடனின் கீழ் 23 கோடி ரூபாய் திரட்டலாமென நாம் எதிர்பார்க்கிறோம். திட்ட முதலீட்டின் எஞ்சிய பகுதி தமிழ் நாடு மின் வாரியம் திரட்டும் நிதி வாயில்கள் வாயிலாகவும் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து திரட்டப்படும் நிதி வாயில்கள் மூலமாகவும் மாநில அரசின் மற்ற நிதிவாயில்களிலிருந்தும் ஈடு செய்ய வேண்டியிருக்கும். வரவு-செலவுத் திட்டம் 106.25 கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டத்தை எதிரொலித்த போதிலும் நிதி வழங்கும் நிறுவனங்களிடமிருந்து நிதி வசதி கிடைக்குமளவுக்கு உண்மையில் திட்ட முதலீடு (Actual Plan Outlay) உயர்ந்திருக்கும் என்பதை இம் மன்றத்தினரின் நாட்டத்திற்குக் கொண்டுவர விழைகிறேன்.

## வரவு செலவுத் திட்ட நிலைமை 1969—70 திருத்த மதிப்பீடு.

44. 1969–70 வரவு-செலவுத் திட்ட உரையில் நடப்பாண்டில் வருவாய்க் கணக்கில் செலவினம் 285.37 கோடி ரூபாயாக இருக்குமென்றும், வரவினம் 268·66 கோடி ரூபாயாக இருக்குமென்றும், இதன் விளைவாக வரவினத்தில் ·16.71 கோடி ரூபாய் அளவுக்குப் பெரும் துண்டு விழுமென்றும் நான் மதிப்பிட்டிருந்தேன். வருவாய் இனத்தில் விழும் துண்டு அச்சமூட்டும் வகையில் பெரிதாகத் தோன்றினும் இது திட்டத்தில் சேராத பொறுப்புகளாலேயே முழுமையும் ஏற்பட்டுள்ளது என்றும் இதை ஐந்தாம்நிதி ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையில் கணக்கில் கொள்ளுமெனவும் நாம் எதிர்பார்க்கிறோம் என்றும் நான் கூறியிருந்தேன். துரதிருஷ்டவசமாக, நிதி ஆணைக் குழுவின் முடிவு நமக்குப் பாதகமான வகையில் உள்ளது என்பதை இம் மன்ற உறுப்பினர் அறிவர். மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள திருத்த மதிப்பீடுகள் வருவாய் இனத்தில் ரூ. 16.64 கோடி துண்டு விழுவதைக் காண்பிக்கின்றன. இத் தொகை கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழுந்த தொகையை விடச் சிறிதளவே குறைவாகும்.

## 1970—71 வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

45. அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட வாய்ப்புகளை பொறுத்த வரை நடை முறையில் உள்ள வரி விதிப்புகளின் மூலமாக ரூ. 288.04 கோடி வருவாய் கிடைக்குமென்று இம்மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளிலிருந்து அறியலாம். வருவாய்க் கணக்கில் செலவு ரூ. 296.98 கோடியாகும். எனவே, வருவாய்க் கணக்கில் ரூ. 8.94 கோடி துண்டு விழுகின்றது. மத்திய அரசு தானளிக்கும் உதவி குறித்து நம் கோரிக்



கைக்கிணங்க உண்மையின் அடிப்படையில் நேரிய முடிவொன்றைக்கொள்ளுமென்றும், ஆகவே 1970–71-ல் அது ரூ. 45 கோடியேனும் உதவியாக நல்குமென்றும் நாம் நம்புகிறோம். நம்மிடமிருந்து அவர்களுக்குச் சேர வேண்டிய கடன் தொகையின் தவணை முறை வைப்புகளை மாற்றியமைப்பதன் மூலம் நமக்கு ரூ. 7 கோடிக்கு உதவி கிட்டும் என்றும் நாம் கணக்கிற் கொண்டுள்ளோம். இந்த அளவில் உதவிகளைக் கணக்கில் எடுத்துக்கொண்ட போதிலும் 1970–71-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம், எல்லாக் கணக்குகளையும் சேர்த்துப் பார்க்கும்போது ரூ. 6 கோடியளவுக்கு மொத்தத் துண்டு விழுவதைக் காண்பிக்கின்றது. ஆக்கப் பணிகளின் வளர்ச்சி வேகம் விரைவு படுத்தப்பட்டிருப்பதையும், நான் முன்னர்க் கூறிய புதிய பல திட்டங்களை அரசு மேற் கொண்டிருப்பதையும் தான் இத்துண்டு எதிரொலிக்கின்றது. கூடுதல் நிதி வாயில்களைத் திரட்டி இத்துண்டினை அடைக்க முயல வேண்டியது தவிர்க்க முடியாப் பணியாக உள்ளது. இதற்கான வழிவகைகளை இம்மன்றத்தின் முன்னர் இப்போது வைக்க விரும்புகிறேன்.

46. ஒருமுனை விற்பனை வரிக்குட்பட்ட பொருள்களின் மீது விதிக்கப்படும் வரி வீதங்களில் சில மாற்றங்களை முதற்கண் இம்மன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன். 1959-ஆம் ஆண்டுத் தமிழ் நாடு பொது விற்பனைச் வரிச் சட்டத்தின் முதல் அட்டவணையில் கண்டுள்ள 1 முதல் 14 இனங்களின் மீதான விற்பனை வரி வீதம் 1967-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் 11 சத விகிதத்திலிருந்து 12 சத வீதத்திற்கு உயர்த்தப்பட்டது. இவை மோட்டார் வண்டிகள், குளிர் சாதனப் பெட்டிகள், கடிகாரங்கள், கைக் கடிகாரங்கள், ரேடியோக்கள், திரைப்பட, புகைப்படக் கருவிகள் கிராமபோன்கள் முதலியனவாகும். இவ்விகிதத்தை 15 சதவிகிதமாக உயர்த்த முடிவு செய்துள்ளளோம். இவை பெரும்பாலும் ஆடம்பரக் பொருள்கள் அல்லது வசதி படைத்தோர் பயன் படுத்தும் பொருள்களேயாகும். இதன் விளைவாக நமக்கு 1·3 கோடி ரூபாயளவிற்குக் கூடுதல் நிதி கிட்டுமென்று எண்ணுகிறோம். ஒரு முனை வரி விதிப்புக்குட்பட்ட மற்றும் சில பொருள்களின் மீதும் நாம் விகிதங்களை உயர்த்த முடிவு செய்துள்ளோம். சிமிட்டியின் மீதான வரி விகிதத்தை 6 சதவிகிதத்திலிருந்து 8 சத விகிதமாக உயர்த்த முடிவு எடுத்துள்ளோம். மின்சாரப் பொருள்கள், விலையுயர்ந்த கற்கள், நுரை ரப்பர் விரிப்புகள், நறுமணப் பொருள்கள், டிராக்டர்கள், புல்டோசர்கள் ஆகியவற்றின் மீது இப்போது 7 சதவீதத்தில் வரி விதிக்கப்படுகிறது. இது 9 சதவிகிதமாக உயர்த்தப்படும். தேயிலை, காப்பி, மண்ணெண்ணெய், சோப்பு, பாற்பொடி ஆகியவற்றின் மீதான விகிதங்கள் உயர்த்தப்படமாட்டா. (ஆரவாரம்). அவ்வாறே உரங்கள், பயிர் நோய்க்கொல்லிகள் ஆகியவற்றின் மீதும் மாறுதலேதும் இராது. மேற்கூறிய வரிவிகித உயர்வின் விளைவாக நமக்கு ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் கிடைக்கலாம். ஏழை எளியவர்களின் மீது சுமையேற்படாவகையில் வசதி படைத்தவர்கள் மீதே இவ்வரி விதிக்கப்பட்டிருப்பதையும் கண்ணுறுமாறு மாண்புமிகு மன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

47. ரூ. 5 லட்சத்துக்கு மேற்பட்ட அளவில் ஆண்டொன்றுக்கு வாணிபம் செய்து வரி விதிப்பிற்கு உட்பட்டவர்கள்மீது (Turn-over Tax) கூடுதல் விதிப்பொன்றையும் விதிக்க முடிவு செய்துள்ளோம். ஒவ்வொரு ஆண்டிலும் வணிகரின் மீது விதிக்கப்படும் விற்பனை வரியின் மீது $7\frac{1}{2}$ சத விகித அளவில் இவ்விதிப்பு மேல் வரியாக (Surcharge) இருக்கும். இது 1969–70 வரி விதிப்பு ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வரும். தமிழ் நாடு மோட்டார் எண்ணெய் விற்பனை மீதான வரிச் சட்டத்தின்கீழ் அடங்கும் வணிகரின் மீது $7\frac{1}{2}$ சதவிகித அளவில் மேல் வரியொன்றும் விதிக்கப்படும் ஆனால் இவ்வரிகளைத் துய்ப்போரிடமிருந்து (Consumers) வசூல் செய்ய எந்த வணிகருக்கும்

உரிமையில்லை. இந் நடவடிக்கையினால் நமக்கு ரூ. 1·1 கோடி அளவிற்குக் கூடுதல் வருமானம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

48. மோட்டார் வண்டி வரிச் சட்டத்தின்கீழ் பயணிகள் வண்டிகளுக்கான (Stage carriages) வரி விதிப்பு வீதங்களில் சில மாறுதல்களைச் செய்வதன் மூலம் கூடுதல் நிதி திரட்ட மற்றொரு முடிவு கொண்டுள்ளோம். தற்போது புறநகர் வழித்தடங்களில் நாள் தோறும் 270 கிலோ மீட்டர்கள் அல்லது அதற்குக் குறைவாக ஓடும் பஸ்களில் உள்ள ஒவ்வொரு இருக்கைக்கும் (Seat) காலாண்டிற்கு 50 ரூபாயாகவும் 270 கிலோ மீட்டர்களுக்குமேல் ஓடும் பஸ்களுக்கு ஒவ்வொரு இருக்கைக்கும் 55 ரூபாயாகவும் வரி விதிப்பு உள்ளது. இவ்விரு பிரிவுகளுக்கும் 10 ரூபாய் அளவில் மேலும் வரி விதிப்பு உயர்த்தப்படும். நகர் வண்டிகள் புறநகர் வண்டிகளைப் போன்று ஆதாயம் தருவன அல்ல. ஆதலால் இவ்வழித்தடப் பணிகளுக்கான வரி வீதங்களை உயர்த்தும் எண்ணம் இல்லை. இதன் வாயிலாக 1·6 கோடி ரூபாய் அரசுக்குக் கிட்டலாம். நாம் கருதியிருக்கும் இவ்வரி வீத உயர்வின் விளைவாக பயணக்கட்டணங்கள் எவ்வகையிலும் உயரா என்று இம்மன்றத்திற்கு உறுதி கூறுகிறேன். (ஆரவாரம்.)

49. பெட்ரோல், விமான எரிபொருள் எண்ணெய், டீசல் தவிர்த்த பிற மோட்டார் எண்ணெய்கள் ஆகிய வற்றின் மீதான வரி விகிதத்தை ஒவ்வொரு லிட்டருக்கும் 2 பைசா அளவில் உயர்த்தக் கருதியுள்ளோம். இதன் மூலம் ரூபாய் 50 லட்சம் கிட்டும். மாநிலத்தில் உள்ள பஸ், லாரி இவைகளை இயக்குபவர்களின் மீதும் உழவர்களின் மீதும் கூடுதல் சுமை விழாதவண்ணம் அவர்கள் பயன்படுத்தும் டீசல் எண்ணெய் மீதான வரி விகிதத்தை இப்பொழுது இருக்கும் நிலையிலிருந்து உயர்த்தவேண்டாமென்று அரசு முடிவு செய்துள்ளது.

50. இறுதியாக இம்மன்றத்தின் முன் நான் குறிப்பிட விரும்பும் செயற்குறிப்பு, திரைப்பட மாளிகைகளின் மீது விதிக்கப்படும் காட்சி வரி ( Show Tax ) யை உயர்த்துவதாகும். தற்போது, நடைமுறையில் உள்ள வரி வீதங்களும் திருத்தக் கருதப்பட்டுள்ள வரி வீதங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| இடம். | தற்போதைய வரி விகிதம். | விதிக்கக் கருதியுள்ள வரி விகிதம். (காட்சியொன்றிற்கு) |
|---|---|---|
| | ரூபாய். | ரூபாய். |
| 1 சென்னை மாநகரத்தில் நடைபெறும் காட்சிகள். | 2·50 | 5·00 |
| 2 குறிப்பிட்டு அறிவிக்கப்பட்ட நகராட்சிகளில் நடைபெறும் காட்சிகள். | 2·00 | 4·00 |
| 3 மற்ற நகராட்சிகளில் நடைபெறும் காட்சிகள் | 1·50 | 3·00 |
| 4 பிற இடங்களில் நடைபெறும் காட்சிகள் .. .. | 1·00 | 2·00 |

இந்த நடவடிக்கையின் மூலம் தமிழ் நாடு கேளிக்கை வரிச்சட்டத்தின் கீழ் ரூ. 14 லட்சமும், தமிழ் நாடு உள்ளாட்சிகள் நிதிச் சட்டத்தின் கீழ் ரூ. 36 லட்சமும் நமக்குக் கூடுதலாகக் கிடைக்கும்.





## பணியாளர்க்கு நலன்கள்.

51. கடந்த மூன்றாண்டுகளில் நம் நிதி நிலைமை நெருக்கடியாக இருந்த போதிலும் நமது பணியாளர்களுக்குப் போதிய நலன்களை நாம் நல்கியிருப்பதை இம்மன்றம் அறியும். அரசுப் பணியாளர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் ஊதியங்கள் பற்றி ஆய்வு செய்ய சம்பள ஆணைக்குழு ஒன்றினை அண்மையில் அமைத்துள்ளோம். சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளினால் ஏற்படக்கூடிய விளைவுகளை நிதி ஆணைக்குழு கணக்கில் எடுத்துக்கொள்ளாததால் நமக்கேற்பட்டுள்ள தடங்கல்களைப் பற்றி நான் முன்னரே குறிப்பிட்டுள்ளேன். இவ்வாறிருப்பினும், தற்போதைய வாழ்க்கைச் செலவை கருத்திற்கொண்டு திங்களொன்றுக்கு ரூபாய் 500 வரை சம்பளம் பெறும் எல்லா அரசாங்கப் பணியாளர்களுக்கும் சிறப்பு ஈட்டுப்படியாகத் திங்களொன்றிற்கு ரூபாய் 10 அளிப்பதென அரசு முடிவு செய்துள்ளது. (ஆரவாரம்) இது 1970 ஏப்ரலில் கொடுக்கப்படும் மார்ச் திங்களுக்குரிய சம்பளத்துடன் வழங்கப்பெறும். இம் முடிவைச் செயற்படுத்துவதற்கு ஆகும் செலவு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்ததைவிட 6 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்திருக்கும் எனக் கணக்கிடப்படுகின்றது. வரவினத் துண்டையும் அந்த அளவிற்கு இது அதிகமாக்கும். இதன் விளைவால் எழுந்துள்ள பொறுப்பினை நிறைவு செய்யும் வகையில் தற்காலிக உதவி அளிக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்ள எண்ணியுள்ளோம். ஓய்வு தியத்தை அளவிடும் பொது ஓய்வூதியம், ஓய்வூதியக் கொடை (Gratuity) முதலியவற்றிற்காக 1966 டிசம்பர் திங்கள் வரை நடைமுறையில் உள்ள அகவிலைப்படி சம்பளம், ( Pay ) என்றே கொள்ளப்படும். இது 1970-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 26-ம் நாளிலிருந்து ஓய்வுபெறும் எல்லா அரசாங்கப் பணியாளர்களுக்கும் பொருந்தும். (ஆரவாரம்).

52. ஆசிரியர்களின் நலன் பற்றி இவ்வரசின் ஆர்வத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். அரசு, மாநிலத்தில் உள்ள பல்வேறு பள்ளி ஆசிரியர்களின் பணி நிலைமைகள் குறித்து ஆய்வு செய்ய, குழுவொன்றினை அமைத்துள்ளது. இக் குழுவின் அறிக்கை அண்மையில் எதிர் பார்க்கப்படுகிறது. இதற்கிடையில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ( Aided Schools ) பணியாற்றும் ஆசிரியர்களுக்குச் சில சலுகைகளை அறிவிக்க முடிவு செய்துள்ளோம். அரசு மருத்துவ மனைகளிலும் மருந்தகங்களிலும் இவ்வாசிரியர்களுக்கும் அவர்தம் குடும்பங்களுக்கும் இலவச மருத்துவ உதவி பெறும் உரிமையினை நல்க அரசு முடிவு செய்துள்ளது. (ஆரவாரம்). உள்ளூராட்சிகளிலுள்ள பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் வீதங்களில் வீட்டு வாடகைப் படியை அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும் அளிக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். (ஆரவாரம்) இதனால் ஆண்டொன்றுக்கு அரசுக்கு ரூபாய் 35 லட்சம் செலவாகும். இவற்றுடன் அரசு வழங்க முடிவு செய்துள்ள பிற சலுகைகள் சுருக்கமாகக் கீழே சொல்லப்பட்டுள்ளன. தனியார் நிர்வாகத்தில் உள்ள அரசுதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு விழாக்கடனும் (Festival Advance) கைத்தறித் துணிகளை வாங்குவதற்கான உதவியும் அளிக்கப்படும். இவற்றிற்கென வருங்கால வைப்பு நிதிச் ( Provident Fund Accumulations) சேர்ப்பிலிருந்து அவர்கள் ஒரு எல்லைக்குட்பட்டுத் தொகைபெற அனுமதிக்கப்படுவர். அட்டவணைப் படுத்தப் பட்டுள்ள மலைப் பகுதிகளில் இருக்கும் அரசுதவி பெறும் பள்ளியாசிரியர்களுக்கு நான்கு திங்கள்களுக்கு குளிர் காலப்படி (Winter Allowance) வழங்கப்படும். அரசுதவி பெறும் எல்லாப் பள்ளிகளிலும் உள்ள தகுதியுடைய ஆசிரியர்களுக்கு ரூபாய் 500-க்கு மேற்படாமல் திருமணக்கடன் வசதியளிக்கப்படும்.

[1907 பிப்ரவரி 26

53. கிராம நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான வழிவகைகளைப் பற்றி அரசு ஆலோசித்து வந்திருப்பதை இம் மன்றம் உணரும். வருவாய்த் துறை நிர்வாகத்திற்குக் கிராம அலுவலர்கள் ஆற்றும் முக்கியமான பணியைக் கருத்திற் கொண்டு கிராம அலுவலர்களின் ஒரு புதிய பணியமைப்பை ( A New Service ) ஏற்படுத்துவதற்கான விதிகளை அறிவிப்பதைப் பற்றி அரசாங்கம் கருதி வருகிறது. 1893, 1894-ஆம் ஆண்டு கிராம அலுவலர்களின் சட்டத்தை ரத்து செய்ததன் மூலம் பரம்பரைப் பதவி உரிமைக் கொள்கை ( Heriditary Succession ) நீக்கப் பட்டிருந்தாலும் வருவாய்த் துறை நிறுவனத்தின் அடிப்படை அமைப்பைப் பேணி வரவேண்டுமென்று அரசு கருதுகிறது. இவ் வலுவலரின் சம்பள அமைப்பு, பணி விதிகள், முதலிய தொடர் புடைய பொருள்களைப்பற்றி, தற்போது பணியாற்றி வரும் சம்பள ஆணைக்குழு முதன் முறையாக ஆராயும். இத்துடன், அவர்கள் அலுவல் பொருட்டு மேற்கொள்ளும் பயணச் செலவை நியாயமான அளவில் ஈடுகட்ட வேண்டுமென்றும் அரசு தீர்மானித்துள்ளது. இதைக் கருத்திற்கொண்டு 1970–71 ஆம் ஆண்டில் இதற்காக ரூபாய் 20 இலட்சம் ஒதுக்க அரசு எண்ணியுள்ளது. இதற்கென்று மொத்தத் தொகைப்படி யொன்று அளிக்கப்பட வேண்டுமென்பது அரசின் கருத் தாகும். இதற்கான விவரங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. பிற அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுவதைப் போன்று விழாக் கடன் கிராம அலுவலர்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமென்று அரசு முடிவெடுத்துள்ளது. ஜமாபந்தி முறை படிப்படியாக நீக்கப்படுவது எல்லாக் கிராம அலுவலராலும் வரவேற்கப்படும்.

54. ஓய்வூதியம் பெறுவோரின் வேண்டுகோளையும் அரசு பரிசீலனை செய்து வந்துள்ளது. தற்போதுள்ள நிதி நெருக்கடியில் அரசு இன்று செய்யக்கூடியது ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் குறைந்த அளவு ஓய்வூதியத்தைத் திங்களொன்றுக்கு ரூ. 20 லிருந்து ரூ. 30-ஆக உயர்த்துவதேயாகும். (ஆரவாரம்). இது 1970, மார்ச் திங்களுக்கான ஓய்வூதியத்தை 1970, ஏப்ரல் திங்களில் வழங்குவதிலிருந்து செயலுக்கு வரும். ஓய்வூதியத்தை அளவிடுவதற்கான விதி முறையைத் தளர்த்துவ தென்றும் அரசு முடிவு செய்துள்ளது. அரசு ஊழியர் தனது பணிக்காலத்தில் இறுதி முப்பத்தாறு திங்களில் பெற்ற சராசரிச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டே இதுகாறும் ஓய்வூதியம் கணக்கிடப்பட்டு வந்தது. இனி, ஓய்வு பெறுவதற்கு முன்பு பணியின் இறுதிப் பன்னிரெண்டு திங்கள் களில் அவர் வாங்கிய சம்பள அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படும். இது உடன் செயலுக்கு வரும்.

55. அரசாங்கப் பணியாளர்கள், உள்ளூராட்சிப் பணியாளர்கள், ஆசிரியர்கள் முதலியோரின் நலன் கருதி இது காறும் என்னால் சொல்லப்பட்ட பல்வேறு நலன்களை இம் மன்றத்திலுள்ள எல்லாப் பிரிவினரும் வரவேற்பர் என்று திண்ணமாக எண்ணுகிறேன்.

## நில உச்சவரம்பைக் குறைத்தல்

56. சமூகப் பொருளாதாரக் கொள்கை குறித்த ஒரு சிறப்பான அறிவிப்பைப்பற்றி ஈண்டு குறிப்பிட எண்ணுகிறேன். என் பெருமைக் குரிய ஏற்ற மிக்க கட்சியாகவும், தற்போது ஆளுங்கட்சியாகவும் உள்ள திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த பொதுத் தேர்தலின் போது மக்கள் முன்னர் வைத்த அறிக்கையை உங்கள் நினைவிற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எங்களுடைய தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட சிறப்பான கொள்கைகளின் அடிப்படையில் சமூக, பொருளாதார நிர்வாகச் சிறப்பு வாய்ந்த பல முடிவுகளை இயன்றளவு பெருமளவில் அரசு இதுகாறும் நிறைவேற்றியுள்ளது. எஞ்சி நிற்கும் சில கோட்பாடு களைத் தற்போது நிலவி வரும் பொருளாதார, சமூக நிலைமைகளுக் கிணங்க நிறைவேற்றும் தருணத்தில் நாம் உள்ளோம். வேளாண்மை



1970 பிப்ரவரி 26]

உற்பத்தியை ஊக்கப்படுத்தும் முறையில் ஏற்கெனவே பல நடவடிக்கை களை அரசு மேற்கொண்டதைப்பற்றி முன்னர் நான் குறிப்பிட்டுள்ளேன். வேளாண்மை உற்பத்தி பெருக வேண்டுமேயானால் நிலவார உரிமை களிலும் (Land Tenure) நிலவுடைமை உரிமைகளிலும் அடிப்படை மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென்பதை இவ்வரசு உணர்கிறது. நிலத்தை உழுபவனின் வார உரிமையைப் பேணிக் காக்கவும் நிலமற்ற பண்ணையாட்களுக்குக் குறைந்த அளவுக் கூலியை நிர்ணயிப் பதிலும் அரசு அவ்வப்போது முடிவுகள் எடுத்து வந்துள்ளது. குத்தகைக் காரர்கள், சிறு நிலக் கிழார்கள், பண்ணையாட்கள் முதலியோருக்கு உதவியளிக்கும் வகையில் அடங்கல் நிலச் சட்டம் (Comprehensive Land Legislation) ஒன்றை அரசாங்கம் இறுதி செய்து வருகிறது. இந்த அரசின் நெடு நாளைய உறுதி மொழியைக் கருத்திற் கொண்டு நில உச்சவரம்பை 30 ஸ்டாண்டர்டு ஏக்கராவிலிருந்து 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா அளவிற்குக் குறைக்கும் (ஆரவாரம்) வண்ணம் 1961 தமிழ் நாடு நில உச்ச வரம்புச் சட்டத்தைத் திருத்த அரசு முடிவு செய்துள்ளதென்பதை நான் அகம் மலர அறிவிக்கின்றேன். இந் நடவடிக்கை நான் முன்பு குறிப்பிட்டுள்ள அடங்கல் நிலச் சட்டத்தின் வாயிலாகச் செயற்படுத்தப்படும். இத்துணிவான முடிவு மக்களின் எல்லாப் பிரிவினராலும் வரவேற்கப்படும் என்று எண்ணுகிறேன்.

ஐயா, இவை கூறி, 1970–71-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை இம்மன்றம் ஏற்க வேண்டுமாறு வேண்டிக் கொள்கிறேன். (ஆரவாரம்).

## 4. அறிவிப்பு.

### அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 25–2–1970-ம் நாள் அன்று அலுவல் ஆய்வுக் குழு எடுத்த முடிவின்படி சட்டப் பேரவையின் நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி விவரம்:—

| | |
|---|---|
| 27– 2–1970 .. .. | பேரவையின் கூட்டம் இல்லை. |
| 28– 2–1970 .. .. | வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—ஆரம்பம். |
| 1– 3–1970 .. .. | விடுமுறை. |
| 2– 3–1970 .. .. | வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம். |
| 3– 3–1970 .. .. | |
| 4– 3–1970 .. .. | |
| 5– 3–1970 .. .. | |
| 6– 3–1970 .. .. | |
| 7– 3–1970 .. .. | 1. வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—கடைசி நாள்.<br>2. 1970–71-ம் ஆண்டின் மானியங்களுக்கான முன் பணம் பற்றிய கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.<br>3. நிதி ஒதுக்க (கணக்கு வாக்கு) மசோதாவை அறிமுகப்படுத்துதல். |
| 8– 3–1970 .. .. | விடுமுறை. |
| 9– 3–1970 .. .. | தமிழ் நாடு நிதி ஒதுக்க (கணக்கு வாக்கு) மசோதாவையும், மற்ற அரசினர் மசோதாக்கள் எவையேனும் இருப்பின் அவைகளையும் ஆய்வுக்கு எடுத்தலும், நிறைவேற்றுதலும். மு. ப. 11–32 |

நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்று, பேரவை மீண்டும் 28–2–1970 காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

5. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

@152. Notification issued with G.O. Ms. No. 2065, Home, dated the 19th August 1969, in regard to exemption from payment of tax, leviable in respect of the Jeep MDB 9840 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Medical Officer, Primary Health Centre, Sundakkamuthur, Coimbatore district. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Tamil Nadu Motor Vehicles Taxation Act*, 1931 (*Tamil Nadu Act III of* 1931)].

153. Notification issued with Rc. No. 20364/69-E3, dated the 19th May 1969, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act 1920, in the entire area of Kambainallur Town Panchayat. [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act V of* 1920).]

@154. Notification issued with G.O.Ms. No. 2356, Home, dated the 22nd September 1969, in regrad to exemption from payment of tax leviable in respect of Willys Jeep bearing registration number MSR 9139 belonging to the Victoria Hospital, Manapad, Tirunelveli district. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Tamil Nadu Motor Vehicles Taxation Act*, 1931 (*Tamil Nadu Act III of* 1931).]

@155. Notification issued with G.O.Ms.No. 1106, Home, dated the 9th May 1969 in regard to extension of certain provisions of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960 to Ganapathi Panchayat area in Coimbatore District. [*Laid on the Table of the House under section* 34 (4) *of the Tamil Nadu Buildings* (*Lease and Rent Control*) *Act*, 1960 (*Tamil Nadu Act*, 18 *of* 1960).]

B. *Reports, Notifications and other papers.*

@43. Notification issued with G.O. Ms. No. 2299, Revenue, dated the 2nd December 1968 in regard to remission of duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the gift deed to be executed by Key Village Livestock Improvement Association to the Animal Husbandry Department.

*44. Demands for Grants and Detailed Budget Estimates for 1970-71 (three volumes).

*45. Statement of Posts and Scales of Pay.

*46. Detailed Public Works Budget.

*47. Detailed Irrigation Budget.

*48. Government Commercial Undertakings.

*49. Plan Supplement (English and Tamil).



50. Review of Progress for 1969-70 and Programme for 1970-71 (English and Tamil).

*51. Introduction to Budget (English and Tamil).

*52. Detailed Budget Estimates of Revenue for 1970-71.

53. Budget Memorandum (English and Tamil).

54. Notice of Demands (English and Tamil).

55. Appendices to the Budget Speech (English and Tamil).

56. The Budget Speech of the Hon. Minister for Finance (English and Tamil).

57. Annual Financial Statement (English and Tamil).

@ Laid on the table of the House on 25th February 19..

* Despatched to Members on 24th February 1970.

## இணைப்பு I

(24-ம் பக்கத்திலுள்ள 116–ஆம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக் காண்க.)

(இ) மண்டபம், படகு கட்டும் தளத்தின் தொழிலாளர்கள் 1–6–1967 தேதியிட்ட முறையீட்டில் கீழ்க்காணும் கோரிக்கைகளைச் செய்து கொண்டனர்:—

(1) நாள் சம்பளம் பெறும் தொழிலாளரை மாதச் சம்பளம் பெறும் தொழிலாளராக மாற்றுதல்.

(2) நாள் சம்பளம் பெறும் தொழிலாளர்களுக்கு ஞாயிறு பிற விடுமுறை நாட்களுக்குச் சம்பளம் கொடுத்தல்.

(3) மண்டபத்தில் தொழிலாளர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளைச் செய்து கொடுத்தல். இப்போது மண்டபத்திற்கு அருகில் மருத்துவ மனைகள் எதுவுமில்லை. எதிர்பாராத விபத்துகள் ஏற்பட நேரின், நோயாளிகளை இராமநாதபுரத்திற்கு எடுத்துச் செல்லவேண்டியுள்ளது. இதற்கும் போக்குவரத்து வசதிகள் எதுவும் கிடையாது. மண்டபத்தில் மருத்துவமனை ஏற்படுத்திக் கொடுக்க இயலாது என்றால் அவசரமான நேர்வுகளில் நோயாளிகளை அருகில் உள்ள மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்ல, படகு கட்டும் தளத்தில் வண்டிக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(4) தொழிலாளர்களுக்கு பலருக்கு அன்றாடக் கூலி வீதங்களில் குறைந்த கூலி கொடுக்கப்படுகிறது. குறைந்த கூலி கொண்டு தங்கள் குடும்பத்தை இதனால் பேணிக் காக்க அவர்களால் இயலவில்லை. எனவே அவர்கள் வேறிடங்களில் வேலை தேடிச் செல்கின்றனர். ஆகவே அவரவர்களின் தகுதி, வேலையின் தன்மை ஆகியவற்றைப் பொருத்து அவர்களுக்குக் கூலி கொடுக்கப்படவேண்டும்.

(5) எதிர்பாரா விபத்துகளின் காரணமாக தொழிலாளர் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும்போது, மருத்துவம் பெற மருத்துவ மனையில் தங்கியிருக்கும் காலத்திற்கு அவருக்குக் கூலி கொடுக்கப்பட மாட்டாது. அத்தகைய நேர்வுகளில், தொழிலாளர்கள் மருத்துவ மனைகளில் தங்கி வேலைக்கு வராதிருக்கும் காலத்திற்குக் கூலி கொடுக்கப் படவேண்டும். மேலும், துயர் தணிப்பு ஏற்பாடாக பணிக்கொடையும் அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும்.

(6) தொழிலாளருக்குகான வருங்கால வைப்பு நிதித் திட்டத்தைக் கொண்டுவருதல்.

இந்தக் கோரிக்கைகளின் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

(1) நாள் சம்பளம் பெறும் தொழிலாளர்களை மாதச் சம்பளத தொழிலாளர்களாக ஆண்டுதோறும் படிப்படியாக மாற்றுவதற்கு அரசு ஆணை பிறப்பித்தது. இதுவரையில் மண்டபம் படகுகட்டும் தளத்தைச் சேர்ந்த மொத்தம் 128 தொழிலாளர்களில் 69 நாட் சம்பளம் பெறும் தொழிலாளர்கள் மாதச் சம்பளம் பெறும் தொழிலாளர்களாக மாற்றப் பட்டுள்ளனர்.

(2) நாட் சம்பளம் பெறும் தொழிலாளர்கள், தொழிற்சாலைகள் சட்டத்தின்படி ஞாயிறுகளிலும் விடுமுறை நாட்களிலும் ஊதியம் பெறும் தகுதி யுடையவராகார்.

(3) தொழிலாளருக்கு முதலுதவி வசதிகள் இப்போது செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இயல்பாக தொழிலாளர் இத்தகைய வசதிகளைத் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் பெற்று வருகின்றனர். மண்டபம் படகுகட்டும் தளம் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் வரவில்லை.



பணிமேலாளர், நோய்வாய்ப்படும் தொழிலாளர்களை உள்ளூர் மருந்தகம் அல்லது ராமேஸ்வரம் அல்லது ராமநாதபுரத்தில் உள்ள அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்துவருகிறார்.

மருத்துவ அதிகாரிகள் எழுதும் மருந்துகளுக்காகும் செலவுகளை பணி மேலாளர் (Works Manager) ஏற்று வருகிறார்.

ஊராட்சி ஒன்றிய மருத்துவ அதிகாரியை தொழிலாளர்களைக் கவனித்துக் கொள்வதற்காக நியமிப்பதற்கான செயற்குறிப்பை மீனளத் துறை இயக்குநர் ராமநாதபுரம் மாவட்ட மருத்துவ அதிகாரியுடன் கலந்து ஆலோசித்து வருகிறார். அருகிலுள்ள மருத்துவ மனைகளுக்கு நோயாளிகளை எடுத்துச் செல்ல மண்டபத்திலுள்ள படகுகட்டும் தளத்திற்காக "ஆம்புலன்ஸ்" வண்டி வாங்குவதற்கான செயற்குறிப்பும் உள்ளது.

(4) இப்பொழுது தொழிலாளர்களுக்கு காலமுறை சம்பள ஏற்ற முறையில் அன்றாடம் கொடுக்கப்பட்டு வரும் சம்பள வீதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| பயிற்சி பெறாதவர்கள் .. .. | ரூ. 2·00/0·10/3·00 |
| ஓரளவு பயிற்சி பெற்றவர்கள் .. | ரூ. 3·00/0·20/4·00/0·25/4·50 |
| பயிற்சி பெற்றவர்கள் .. .. | ரூ. 4·00/0·25/6·00 |

பயிற்சி பெறாத தொழிலாளர்களுக்கான நாள் கூலியை 1–4–1969 தேதியிலிருந்து ரூ. 2·00/0·10/3·00 லிருந்து ரூ. 2·40/0·15/3·00 ஆக மாற்றியமைத்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. மூன்றாண்டு அல்லது மூன்றாண்டுக்குக் குறைந்த காலத்திற்குப் பணியாற்றிய எல்லாத் தொழிலாளர்களுக்கும் அவரவர் நிலைகளுக்கேற்ப ஒரு ஊதிய உயர்வு முன்னதாக அனுமதித்து ஆணையும் பிறப்பிக்கப்பட்டது. மூன்று ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்த தொழிலாளர்கள் எல்லோருக்கும் இரண்டு ஊதிய உயர்வு முன்னதாக அனுமதித்தும் ஆணை பிறப்பிக்கப் பட்டது. மாதச் சம்பளத் தொழிலாளர்களுக்கு அகவிலைப்படி உயர்த்திக் கொடுக்கும் போதெல்லாம் நாட் சம்பளத் தொழிலாளர்களுக்கும் ஊதிய உயர்வு முன்னதாக அனுமதித்து ஆணை பிறப்பிக்கப் பட்டது. இவ்வாணை 1–6–1968 தேதியிலிருந்து செயல்படுத்தப்பட்டது. மற்ற வேண்டுகோள்களை நிறைவேற்ற இயலாது.

(5) தொழிற்சாலை சட்டத்தின் விதித்துறைகளைப் பின்பற்றி தொழிலாளர்களுக்கு விடுப்பு அளிக்கப்படுகிறது. தாம் தொடர்ந்து 20 நாட்களுக்குச் செய்த வேலைக்காகத் தொழிலாளர் ஒருவர் ஒரு நாள் விடுப்பு எடுத்துக் கொள்ளலாம். இந்த விடுப்பை 30 நாட்கள் வரை சேர்த்துக் கொள்ளலாம். இந்த விடுப்பு ஓராண்டுக்குள் எடுத்துக் கொள்ளப்படாதவிடத்து அடுத்த ஆண்டுக் கணக்கில் சேர்த்துக் கொள்ளலாம். தொழிலாளர்கள் மருத்துவம் பெறும் காலத்தில் ஊதியத்துடன் சிறப்பு விடுப்பு கொடுப்பதற்கு ஈட்டிய விடுப்பு எதுவும் இல்லாதவிடத்து, மருத்துவம் பெறும் காலத்தில் தாங்கள் ஈட்டிய தங்கள் கணக்கில் உள்ள விடுப்பை எடுத்துக் கொள்ளலாம். தொழிலாளர் ஒருவருக்கு அவர் கணக்கில் ஈட்டிய விடுப்பு எதுவும் இல்லாதவிடத்து, மருத்துவம் பெறும் காலத்தில் சிறப்பு மருத்துவ விடுப்பு எதுவும் பெறுவதற்கு உரியவராகார்.

(6) மண்டபம், படகு கட்டும் தளத்தில் வருங்கால வைப்பு நிதித் திட்டம் 1968 பிப்ரவரி முதல் செயலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

(*b*) The workers of the Boat Building Yard at Mandapam have made a representation, dated 1st June 1967 containing the following requests :—

(1) Conversion of daily paid workers into monthly paid workers.

(2) Payment of wages to daily paid workers for Sundays and other holidays.

(3) Provision of necessary medical facilities to the workers at Mandapam as there are at present no hospitals nearby and in case of unexpected accidents, the patients have to be taken to Ramanathapuram and even for that there are no transport facilities. If it is not possible to provide a hospital at Mandapam at least a covered vehicle may be provided at the yard for carrying the patients to the nearby hospital in case of emergencies.

(4) Many workers are paid low wages at daily rates and consequently they are not able to maintain their family with the low wages and they seek jobs elsewhere. They should therefore be paid wages according to their merit and nature of their duties.

(5) Due to unexpected accidents when a worker is admitted in the hospital he is not paid wages for the period of his absence in the hospital for treatment. In such cases, the workers should be paid wages for the period of their absence for treatment and they should also be paid some exgratia grant by way of of relief.

(6) Introduction of Employees Provident Fund Scheme for the workers.

The action taken on the requests are indicated below :—

(1) The Government have issued orders for the conversion of daily rated workers to monthly time scales gradually every year. So far 69 daily rated workers out of the total number of 128 workers have been converted to monthly time scales in the Mandapam Boat Yard.

(2) Daily paid workers are not entitled for wages on Sundays and holidays according to the Factories Act.

(3) The facilities for first aid to workers have been provided now. Normally the workers get these benefits under the Employees State Insurance Scheme. The Mandapam Yard is not covered by the Employees State Insurance Scheme.

The Works Manager is arranging to send the workers to the Local Dispensary or to the Government Hospital at Rameswaram or Ramanathapuram and is meeting the expenses for the medicines prescribed by the Medical Officers.

The proposal to appoint the Medical Officer in the Panchayat Union to attend on the workers is being separately considered by the Director of Fisheries in consultation with the District Medical Officer at Ramanathapuram. There is also a proposal to purchase an ambulance van for the Boat Building Yard at Mandapam to carry the patients to the nearby hospitals.

(4) The daily rates on time scale for the workers now in force are as follows :—

| | |
|---|---|
| Unskilled .. .. .. .. | 2·00/0·10/3·00 |
| Semiskilled .. .. .. .. | 3·00/0·20/4·00/0·25/4·50 |
| Skilled .. .. .. .. | 4·50/0·25/6·00 |



Orders have since been issued revising the rates of unskilled workers on daily wages from Rs. 2·00/0·10/3·00 to 2·40/0·15/3·00 with effect from 1st April 1969. Orders have also been issued sanctioning one advance increment in the respective grade to all the workers who have put in a service of three years or less and two advance increments in the respective grade to the workers who have put in more than three years. Orders have also been issued sanctioning one advance increment to all daily rated workers, whenever there is increase in the rates of Dearness Allowance payable to montly paid workers. The order has been given effect to from 1st June 1968. It is not possible to comply with the other requests.

| Agriculture .. .. .. .. | 3·12 | 1,91·75 | 2,26·68 | 2,80·74 |
| Animal Husbandry .. .. .. | 1·02 | 11·49 | 21·51 | 16·95 |
| Co-operation .. .. .. .. | 4·18 | 37·62 | 36·29 | 35·04 |
| Industries .. .. .. .. | 18·85 | 1,84·51 | 2,95·84 | 3,46·90 |
| Community Development Projects, National Extension Service and Local Development Works .. .. | * | 29·28 | 2·12 | 2·57 |
| Miscellaneous, Social and Developmental Organizations .. .. .. | .. | (a) | 27·46 | 23·62 |
| Irrigation— | | | | |
| Direct receipts‡ .. .. .. | 6·31 | 11·52 | 11·70 | 9·02 |
| *Deduct*—Working expenses .. .. | —38·39 | —1,23,70 | § | § |
| Net receipts .. | —32·08 | —1,12·18 | 11·70 | 9·02 |
| Direct receipts ‡ .. .. .. | 1·99 | 2·52 | 2·93 | 2·10 |
| Public Works .. .. .. .. | 25·12 | 1,13·86 | 1,20·68 | 1,14·56 |
| Receipts from Electricity Schemes (Gross). | 42·51 | .. | .. | .. |
| *Deduct.*—Working expenses .. | —24·81 | .. | .. | .. |
| Net receipts .. | 17·70 | .. | .. | .. |
| Road and Water Transport Schemes— Gross Receipts (b) .. .. .. | .. | 3,69·27 | 4,34·80 | 5,18·73 |
| Working expenses .. .. .. | .. | —3,46·89 | § | § |
| Net receipts .. | .. | 22·38 | 4,34·80 | 5,18·73 |

| Major heads. | 1964–5. | 1965–6. | 1966–7. | 1967–8. | 1968–9. | 1969–70. Budget Estimate. | 1969–70. Revised Estimate. | Budget Estimate, 1970–71. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| | RS. LAKHS. | RS. LAKHS. | RS. LKAHS. | RS. LAKHS. | RS. LAKHS. | RS. LAKHS. | RS. LAKHS. | RS. LAKHS. |
| REVENUE—*cont.* | | | | | | | | |
| Miscellaneous departments | 39·47 | 45·32 | 53·54 | 60·57 | 2,35·75 | 2,08,16 | 2,47·78 | 2,45·[illegible] |
| Ports and Pilotage | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| Education | 1,09·93 | 91·20 | 1,09·79 | 1,80·14 | 2,64·52 | 1,14·37 | 1,67·90 | 1,59·98 |
| Medical | 1,02·50 | 1,12·52 | 1,18·20 | 1,86·09 | 1,02·39 | 2,05·21 | 3,88·89 | 2,44·36 |
| Public Health | 28·34 | 16.66 | 13·36 | 15·08 | 18·07 | 9·91 | 14·50 | 13·51 |
| Agriculture | 3,30·32 | 3,84·40 | 4,51·78 | 6,12·85 | 6,01·02 | 5,97·64 | 7,04·04 | 6,52·19 |
| Animal Husbandry | 19·06 | 30·65 | 32·34 | 41·50 | 41·19 | 37·63 | 35·39 | 36·29 |
| Co-operation | 36·90 | 59·33 | 64·84 | 59·79 | 60·91 | 47·66 | 55·91 | 59·46 |
| Industries | 4,88·86 | 3,39·93 | 1,49·04 | 2,67·15 | 3,81·71 | 3,15·42 | 3,33·49 | 3,50·35 |
| Community Development Projects, National Extension Service and Local Development Works | 3·81 | 6·78 | 9.93 | 17·39 | 12·10 | 7·21 | 6·01 | 6·41 |
| Miscellaneous, Social and Developmental Organizations | 30·24 | 33·41 | 36·92 | 82·99 | 3,55·11 | 3,06·84 | 3,72·77 | 4,20·63 |
| Irrigation— | | | | | | | | |
| Direct receipts‡ | 10·60 | 14·80 | 13·26 | 20·43 | 1,93·16 | 31·44 | 50·75 | 50·88 |
| *Deduct*—Working expenses | § | § | § | § | § | § | § | § |
| Net receipts | 10·60 | 14·80 | 13·26 | 20·43 | 1,93·16 | 31·44 | 50·75 | 50·88 |
| Direct receipts ‡ | 2·88 | 5·13 | 6·18 | 23·60 | 1,60·19 | 7·87 | 6·53 | 5·85 |
| Public Works | 1,24·34 | 1,52·35 | 1,51·55 | 1,31·20 | 1,45·81 | 1,40·76 | 1,40·09 | 1,59·23 |
| Receipts from Electricity Schemes (Gross). | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| *Deduct.*—Working expenses | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| Net receipts | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| Road and Water Transport Schemes— Gross Receipts (b) | 6,23·65 | 7,95·94 | 9,30·11 | 11,59·50 | 15,66·85 | 16,93·77 | 17,72·70 | 19,44·84 |
| Working expenses | § | § | § | § | § | § | § | § |
| Net receipts | 6,23·65 | 7,95·94 | 9,30·11 | 11,59·50 | 15,66·85 | 16,93·77 | 17,72·70 | 19,44·84 |

* Shown under " LI.A. Receipts from Community Development Projects, National Extension Service and Local Development Works ".
† Included under " Miscellaneous, Social and Developmental Organizations "—(Rs. 38·65 lakhs in Accounts 1960–61).
‡ Excludes land revenue.
§ Shown under expenditure side with effect from 1st April 1962.
// The subvention from Central Government for the development schemes relating to these [d]epartments have been shown under " LVI. Grants-in-aid from Central Government ".
(a) Included under " XXI. Miscellaneous Departments ".
(b) Prior to 1949–50, the receipts were included under the revenue head " Miscellaneous " and [w]orking expenses were shown under the expenditure head " Miscellaneous ".

## மதுராந்தகம் வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்

*137 வினா—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் வட்டத்தை மதுராந்தகம் வட்டம், செய்யூர் உப வட்டம் என்று பிரிக்க 1966-ல் ஏதேனும் ஆய்வு நடத்தப்பட்டதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மதுராந்தகம் வட்டத்தை, மதுராந்தகம் வட்டம், செய்யூர் உப வட்டம் என்று பிரிக்க அந்த மாவட்டக் கலெக்டர் ஆர்.டி.ஓ-விடம் அது பற்றிய பரிந்துரையை அனுப்பும்படி கேட்டிருக்கிறார். அவரிடமிருந்து பரிந்துரை மாவட்டக் கலெக்டருக்கு வரவில்லை.

## அரசு ஊழியர்களுக்குத் திருமணக் கடன்

*138 வினா—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு ஊழியர்களின் திருமண செலவிற்காக முன்பு ஒதுக்கப்பட்ட தொகையைவிட தற்போது அதிகப்படியாகத் தமிழ்நாடு அரசு ஒதுக்கி உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** ஆம். வரவு-செலவுத் திட்ட நிதிஒதுக்கமாகிய ரூபாய் பத்து லட்சத்திற்கு மேற்பட்டு கூடுதலாக ரூபாய் பத்து லட்சத்தை அரசு ஒதுக்கியுள்ளது.

**திரு. ஆர். கருப்பையா:** தலைவர் அவர்களே, திருமணக் கடனுக எவ்வளவு ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்; இதிலே கிராம அதிகாரிகள், கிராம முன்சீப் போன்றவர்கள் பணியாளர்களா அல்லவா என்பது குறித்து வருத்தப்படுகிறார்கள். அவர்கள் பெயரையும் அரசாங்கப் பணியாளர்கள் என்று மாற்றியமைக்க சர்க்கார் உத்தேசிக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** திருமணக் கடனுக, பெண்கள் அலுவலர்களாக இருந்தால், அவர்களுடைய திருமணத்திற்கோ, அல்லது அவர்களுடைய பெண்கள் திருமணத்திற்கோ, 15 மாதச் சம்பளம் அல்லது ரூ. 2,000 அதிலே எது குறைவோ அந்தத் தொகை என்ற அளவிலும், ஆண் ஊழியர்கள் என்று சொல்லக்கூடாது, அலுவலர்களாக இருந்தால், அவர்களுடைய திருமணத்திற்கோ அல்லது அவர்களுடைய ஆண் குழந்தைகள் திருமணத்திற்கோ ரூ. 1000 அல்லது 15 மாதச் சம்பளம் இதிலே எது குறைவோ அந்த அளவிற்கு, திருமணத்திற்காக முன் பணமாகக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. இந்தத் திருமணக் கடன் அரசாங்க அலுவலர்கள் கடைநிலை ஊழியர்கள் வரையில் எல்லோருக்குமே கொடுக்கப்படுகிறது. தற்போது, நேற்றைய வரவு-செலவுத் திட்ட அறிக்கையின்படி, 'எய்டெட்' பள்ளிக்கூடங்களில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் ரூ. 500 வரையில் கொடுக்கப்படும்.





**திரு. பி. வேலுசாமி:** தலைவர் அவர்களே, திருமணங்களுக்காகச் செலவிட்டு, பல குடும்பங்கள் அழிந்தே போய்விட்டன. ஆகவே, இப்படிப்பட்ட செலவுகளில் அதிகபட்சம், குறைந்த பட்சம் என்று ஏதாவது வரம்பு கட்ட சர்க்கார் முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு உறுப்பினர் போன்ற முற்போக்குவாதிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள், திருமணங்கள் சிக்கனமாக நடத்தப்படவேண்டும், எளிமையாக நடத்தப்படவேண்டும் என்று ஒரு இயக்கமே நடத்த வேண்டும்.

**திரு. வ. ஜார்ஜ்:** அவைத் தலைவர் அவர்களே, திருமணக்கடன்கள், இப்பொழுது ஒரு சிலருக்கு மட்டும் வெறும், விளம்பரத்திற்காகக் கொடுக்கப்படுகிறது. தேவைப்படுகிறவர்கள் எல்லோருக்கும் கொடுக்கப்படவில்லை. தேவைப்படுகிறவர்கள் எல்லோருக்கும் கொடுக்க அவர்களுடைய பிராவிடெண்ட் பண்ட் போன்ற நிதியிலிருந்தாவது கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** விளம்பரத்திற்காக என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். விளம்பரத்திற்காகக் கேள்வி கேட்கிறார்போலும் (சிரிப்பு). முதலில் நாம் நிதிநிலை அறிக்கையில் ரூ. 10 லட்சம் முன்கடன் கொடுப்பதற்காக ஒதுக்கினோம். அதில் நான்கு மாதங்களில், ரூ. 6 லட்சம் முன்பணமாகக் கொடுத்துவிட்டோம். அந்தப் பத்து லட்ச ரூபாயும் 4-10-1969-ஓடு மொத்தம் ஆறு மாதத்தில் இதற்காக நம்முடைய பட்ஜட்டில் செலவாகிவிட்டது. அது நம்முடைய முதல் வருட அனுபவம். மீண்டும் ஒரு பத்து லட்ச ரூபாய், ஏற்கனவே நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியதோடுகூட, 27-10-1969 அன்றைய நிதி இலாகா ஆணைப்படி, இன்னொரு பத்து லட்சமும் ஒதுக்கப்பட்டது. இதற்கு இன்னமும் சட்ட சபை அனுமதி பெறமுடியாமல், கண்டின்ஜெண்ட் பண்டிலிருந்து ஒதுக்கியிருக்கிறோம். அந்த 27-10-1969 அன்று ஒதுக்கிய பணமும் 21-11-1969-ஓடு கொடுத்து முடிந்துவிட்டது. இந்த இரண்டு மாதங்களில் போக்கு அப்படியிருப்பதைப் பார்த்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது முற்றிலும் தவறானது. மொத்தம் ரூ. 22,60,022 முன்கடனுகக் கொடுத்திருக்கிறோம். அதனால் 1,846 பேர்கள் நடத்திய திருமண வைபவத்தில் அரசாங்கம் பங்கு கொண்டிருக்கிறது.

## பர்கூர் மலையிலுள்ள பள்ளி

*139 வினா—திருமதி வி. ப. பழனியம்மாள்: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பர்கூர் மலையிலுள்ள மலைவாசிகளின் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இல்லை

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** தலைவர் அவர்களே, இந்த பர்கூர் மலைவாசிகள் ஐந்தாம் வகுப்புகூட படிக்காதவர்கள். அவர்கள் உயர்நிலைப் பள்ளிக்குப் போக வேண்டுமானால், குறைந்தது 25 மைல் நடக்க வேண்டியிருக்கிறது. போக்கு வரத்தும் சரிவர கிடையாது. ஆகவே, இதைத் தனிப்பட்ட முறையில், தனிச் சலுகை கொடுத்துக் கவனித்து, அங்கு உயர் நிலைப் பள்ளி வைக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இப் பொழுது பர்கூரில் இருப்பது தங்கிப் படிக்கும் துவக்கப் பள்ளி. அங்கே 50 மாணவர்கள் இருக்கிறார்கள். அதை அப்படியே உயர்த்த வேண்டும் என்றாலும், அதை ஒரு உயர் துவக்கப் பள்ளியாகத்தான் உயர்த்த முடியும். உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த முடியாது. அங்கே, 50 மாணவர்களுக்கான, அவர்களுக்குத் தேவையான வசதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வேறு புதிய செயற்குறிப்பு எதுவும் வரவில்லை அதற்கு அவசியம் இல்லை என்றும் அரசாங்கம் கருதுகிறது.

## கால்நடைப் பண்ணைகள்

* 140 வினா—**திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள ' கால்நடைப் பண்ணைகளை விரி வாக்கும் திட்டம் உண்டா?

(இ) 1967-68-ம் ஆண்டு இத் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி உதவி எவ்வளவு கிடைத்தது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) இத் திட்டத்திற்கு 1967-68-ம் ஆண்டுக்கான மத்திய அரசு நிதி உதவி வரையறுக்கப்படவில்லை. ஆனால், 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1969-74) நிதி உதவி ரூ. 30 லட்சம் தமிழ் நாட்டிலுள்ள கால்நடைப் பண்ணைகளை விரிவாக்கும் திட்டத்திற்கு ஒதுக்கப் பட்டுள்ளது.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ் நாட்டில் கால் நடைப்பண்ணைகள் எத்தனை இருக்கின்றன? அவை எங்கெங்கே இருக்கின்றன? அதனால் விவசாயிகள் அடைந்த நன்மைகள் யாவை என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தமிழகத்தில் 11 பண்ணை கள் இருக்கின்றன--ஓசூர், புதுக்கோட்டை, ஒரத்தநாடு, அபிசேகப் பட்டி, உதகமண்டலம், அலமாடி, காட்டுப்பாக்கம், சின்னசேலம், சாத்தூர் போன்ற 11 இடங்களில் இருக்கின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, last year there was a proposal to start a Central Cattle Farm in the Hosur taluk. About 1,000 acres of good land are available in the Sholagiri



Panchayat Union area free of cost. Mr. B. Sivaraman, Secretary, Ministry of Agriculture, Governmentof India, visited that place and recommended the scheme. So, may I know from the Hon. Minister whether any step has been taken to press the Government of India to start the new Farm in the Hosur taluk?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அதுபற்றி விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, ஒரு கால்நடைப் பண்ணை வைக்க வேண்டிய சாத்தியம் கூறுகள் என்னென்ன? இயற்கை வசதிகள், இன்னும் என்னென்ன தேவை என்று அரசாங்கம் நிர்ணயிருக்கிறது ? வட ஆர்க்காடு மாவட்டத்தில் கால் நடைப் பண்ணை வைக்கவேண்டும் என்று மாவட்ட அபிவிருத்திக் கவுன்சிலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அரசாங்கத்தின் பரிசீலனைக்கு வந்ததா ? அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அதுமாதிரி அரசாங்கத் திற்குத் தகவல் இல்லை. எதாவது வந்தால் பரிசீலிக்கலாம்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** சென்ட்ரல் அஸிஸ்டென்ஸ் அபிவிருத்திக்கா? அல்லது மீண்டும் புதிதாக ஆரம்பிக்கவா? ' மிக்ஸட்ஃபார்ம் ' ஆகச் செய்யலாம் என்பதற்காகவா ' சென்ட்ரல் எய்ட் ' கொடுக்கப்படுகிறது? நம்முடைய திட்டம் வேறு இருக் கிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ரூ. 30 லட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அது அபிவிருத்திக்கும், புதுப் பண்ணை வைக்கவும் உபயோகப்படுத்தலாம். இருக்கின்ற பண்ணை சரிவர நடக்கவில்லை என்றால், அதை மூடிவிட்டு, புதுப் பண்ணை துவங்கவும் செய்ய லாம்.

## ஆடுகள் மீது விற்பனைவரி விதிப்பு

* 141 வினா—**திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆடுகள்மீது போட்டிருக்கும் விற்பனை வரியை நீக்க அரசு உத்தேசித்திருக்கிறதா?

(இ) ஆம் என்றால், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) & (இ) 1969-ம் ஆண்டு செப்டம்பர் 24-ம் தேதி முதல் இறைச்சிக்காக விற்பனை செய்யப் படும் செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள், பசுக்கள், காளைகள், எருது கள், பன்றிகள் முதலிய மிருகங்கள்மீது 1959-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்படி செலுத்த வேண்டிய வரி யினின்றும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

[1970 பிப்ரவரி 28

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், தமிழ் நாட்டில், நான்-வெஜிடேரியன்களுடைய தொகை அதிகமாகிக் கொண்டு வருகிறது என்பதனால், இந்த இறைச்சியின் விலையும் அதிகமாகிக் கொண்டு வருகிறது என்கிறார்கள். இப்பொழுது கிலோ ரூ. 6-50 என்று சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி விற்பனை வரி பற்றியது.

**திரு. டி. மார்டின் :** ஆகவே, விலையைக் கட்டுப்படுத்த, வரியிலிருந்து விதிவிலக்கு அளித்தும், விலை இறங்காமல் இருக்கிறது. இதைக் கட்டுப்படுத்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அதிகமாகச் சாப்பிடலாம். அதுவும் உணவுப் பற்றாக்குறையைக் குறைக்கும். இப்பொழுதே வரி விதிவிலக்கு அளிக்கப்படுகிறது.

**திரு. கே. விநாயகம் :** இந்த இனத்திலே சேல்ஸ் டாக்ஸ். ஏற்கனவே வந்த வருவாயைவிட இப்பொழுது, ஏற்பட்டிருக்கும் நஷ்டம் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இந்த வரி விலக்கின் காரணமாக ரூ. 1,40,000 நட்டம் ஏற்பட்டிருக்கிறது.

**திரு. என். எஸ். வி சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்றால், ஆட்டு இறைச்சியையும், ஆட்டு உரோமத்தையும் வெளிநாடுகளுக்கு அனுப்புவோம் என்று 1967-க்கு முன்னால் சொல்லப்பட்டதே—இப்பொழுது திராவிட முன்னேற்றம் கழகம் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் மூன்று ஆண்டுகளில் வெளிநாடுகளுக்கு எவ்வளவு அனுப்பப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினால் அப்படி எங்கே, எப்பொழுது சொல்லப்பட்டது என்கிற தகவல் இல்லை. ஆட்டு இறைச்சியையும், ரோமத்தையும் வெளி நாடுகளுக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இருந்தால், உற்பத்தி அதிகமாக இருந்தால், அப்படி அனுப்புவோம்.

**திரு. எஸ். பரமசிவம் :** பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு உரம் வாங்கக் கடன் கொடுப்பதைப்போல, ஆடு மேய்ப்பவர்களுக்கு ஆடு வாங்கக் கடன் கொடுப்பதில்லை. அப்படி அவர்களுக்கும் கடன் கொடுப்பதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, அது பற்றி ஒன்றும் அரசின் யோசனையில் இல்லை.



1970 பிப்ரவரி 28]

## தஞ்சாவூர் மாவட்டத்தில் கயிறு தொழிற்சாலை

*142 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் நார்-கயிறு தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆம்.

**திரு. என். கிட்டப்பா :** பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நார் கயிறு தொழிற்சாலை நிறுவுவதற்காக அனுமதிக்கப்பட்டிருப்பது தனியார்த் துறையிலா? அல்லது கூட்டுறவுத் துறையிலா? தஞ்சை மாவட்டத்தில் எந்த இடத்தில் நிறுவ அனுமதிக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தொழிற்சாலை தஞ்சை மாவட்டத்தில் அரசாங்க உதவியுடன் பட்டுக்கோட்டையில் நிறுவப்பட இருக்கிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, நார்-கயிறு தொழிற்சாலை ஆரம்பிக்க தஞ்சை மாவட்டத்தில் தனியார் விண்ணப்பம் செய்திருக்கிறார்களா? அப்படியென்றால், எத்தனை விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன? எத்தனை அனுமதிக்கப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, தேங்காய் நாரினால் கயிறு தொழிற்சாலை ஆரம்பிக்கலாம் என்று அரசாங்கம் முடிவு செய்தது. அதற்கென ஒரு தனி அதிகாரியை நியமித்து, இந்தத் தொழிற்சாலை மற்ற மாநிலங்களில் எப்படி இயங்குகின்றது என்பதைக் கண்டுவர அவர் அனுப்பப்பட்டார். அவர் தந்த அறிக்கையிலே 6 அரசுத் துறையிலே மெக்கனைஸ்டு டீஃபைபரிங் டெமான்ஸ்ட்ரேஷன் யூனிட் ஆரம்பிக்கலாம் என்றும், தனியார்க்கு-து. 20 மெக்கனைஸ்டு டீஃபைபரிங் டெமான்ஸ்ட்ரேஷன் யூனி 86,450 கொடுக்கலாம் என்றும் தரப்பட்டிருக்கிறது. மொத்தச் செலவு இல 24 லட்சம் ரூபாய் ஆகும். முதன் முதலிலே தஞ்சை மாவட்ட பட்டுக்கோட்டையிலே இதனை ஆரம்பிக்கலாம் என்ற எடுத்திருக்கிறார்கள். தனியார்த் துறைக்கு உதவி ேவர் அவர்களே, பற்றிப் பின்னாலே முடிவு செய்து கொள்ளலாம் சயல்படுத்த, இல பட்டிருக்கிறது. புமா?

*Potassium Chlorate Factory* தலைவர் அவர்களே,

ம, வள்ளுவர் ஈராயிரம்

*143 Q.—THIRU K. VINAYAKAM : W ரறிஞர் அண்ணா அவர்

Minister for Industries be pleased to state யாட்டியும் விசேஷமான

(a) whether a potassium chlorate fac வழங்கப்பட்டனவே தவிர,

Cudalur near Periyar lower camp under டிகையின்போதும் வழங்கப்

and

(b) if so, the estimated cost the

### பொன்னமராவதியை நகரசபையாக மாற்றியமைத்தல்

*146 வினு. புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் தொகுதியிலுள்ள பொன்னமராவதி பேரூராட்சியை நகரசபையாக மாற்றியமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இல்லே.

புலவர் பொ. பொன்னம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, இனிமேலாவது பொன்னமராவதியை நகரசபையாக மாற்றியமைக்க அரசு ஆய்வு செய்யுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, இது குறித்து திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர், ஊராட்சி நகராட்சி இயக்குநர் ஆகியவர்களைக் கலந்து பேசியதில் அப்படி ஒரு செயற் குறிப்பு இல்லையென்று தகவல் கிடைத்தது. மேலும் 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள், ஒரு லட்சம் ரூபாய் வருமானம் வந்து, அதுவும் இரண்டு மூன்று ஆண்டுகளாக நிலையாக வந்தால்தான் அப்பகுதிகளைப் பரிசீலித்து அரசாங்கம் நகராட்சியாக உயர்த்துகிறது. அந்த அடிப்படையில் பொன்னமராவதி வருமானுல், உரிய நேரத்தில் பரிசீலனை செய்து அரசு அதை நகராட்சியாக உயர்த்தும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் இப்படிப்பட்ட நகரசபையாக மாற்றப்பட்டுள்ள பேரூராட்சி இருக்கிறதா? இன்னும் எத்தனை மாற்றப்பட இருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே 6 பேரூராட்சிகள் நகராட்சிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. மேற்கொண்டு எத்தனை என்பதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

### *George Town Co-operative Bank*

*147 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the George Town Co-operative Bank has exceeded its maximum borrowing limit in violation of bye-law No. 18 and the rule 43 of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963;

(b) if so, the extent of such borrowing during the years from 1961–62 to 1968–69 (year-wise); and

(c) the action proposed to be taken against those responsible for the mismanagement?



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: (அ) இல்லே.

(இ) ஆண்டுவாரியாக வாங்கிய கடன் விவரம் அடங்கிய விவர அறிக்கை* ஒன்று சட்ட மன்றப் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

(உ) இவ்வினு எழவில்லை.

DR. H. V. HANDE: Is it not a fact that the total borrowing power of the bank both by way of deposit and members' savings shall not at any time exceed 8 times the paid up share capital? The bank seems to have adopted a clever method, viz., the loans adjusted by the credit branch to its monthly savings and loan fund, had been omitted in calculating the maximum borrowing power. In view of this, will the Government re-examine the subject-matter of the whole question and see whether such an omission has been made by this particular bank?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் 18-வது துணை விதியைப்பற்றிச் சொன்னுர்கள். ஷேர் கேப்பிடல் மீது 8 மடங்கு கடன் வாங்க உச்ச வரம்பு என்பதல்ல. பங்குத் தொகையையும், ரிசர்வ் நிதியையும் சேர்த்து, அதைப்போல 8 மடங்கு கடன் வாங்க உச்ச வரம்பு. விதிகள் மீறப்படவில்லையென்பது விவர அறிக்கையில் கண்டிருக்கிறது.

DR. H. V. HANDE: That particular point I understood. My supplementary question was whether the Credit Branch had given loans to the monthly savings department and whether this amount had been calculated in arriving at the figures given in the answer or whether the bank had cleverly withheld this information. From the answer it seems as though this particular information has been withheld.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் கெட்டிக்காரத்தனமாக விட்டிருக்கிறுர்கள் என்று சொல்வது இருக்கிறதே அது முறை அல்ல.

DR. H. V. HANDE: I asked whether the Bank had cleverly withheld the information.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலைவர் அவர்களே, விதியில் என்ன கூறப்பட்டிருக்கிறதோ அது மாறுபட்டிருக்கிறதா என்பதைத் துருவித் துருவிப் பார்த்து உண்மையில் இல்லை என்று கண்டுகொண்டேன். மாண்புமிகு உறுப்பினர் 43-வது விதி என்று தவருகக் குறிப்பிட்டிருக்கிறுர்கள். 42-வது விதிதான் அந்த வங்கி வாங்குகின்ற கடனை முறைப்படுத்துகிறது. 43-வது விதி, கொடுப்பது சம்பந்தப்பட்டது. 43-வது விதியின் அடிப்படையில் எவ்வளவு வாங்கியிருக்கிறது என்று கேட்டால், அது பொருத்தம் இல்லாததாக இருக்கிறது.

---

*261-ம் பக்கத்தில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**திரு. கொடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி:** தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான கீழ்க்கண்ட காரியத்தை நான் மாண்புமிகு உணவு-வணிக வரித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"தஞ்சாவூர் மாவட்டத்தைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் உணவு தானியங்கள் மீதான கட்டுப்பாட்டை நீக்கியதன் விளைவாக ஆலைச் சொந்தக்காரர்கள், நெல்லை உடனடியாகக் கொள்முதல் செய்ய முன்வரமாட்டார்களென்றும், அதன் விளைவாக உழவர்களிடத்தில் இருப்பு தேக்கமடையுமென்றும், நெல் குறித்துச் சரியான விலையை அவர்கள் பெற மாட்டார்களென்றும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள உழவர்கள் அச்சமுற்றுள்ளதால் இச் சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்".

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தஞ்சை மாவட்டத்தில் நெல்லின் விலை வீழ்ச்சி ஏற்படாமலிருக்கவும், விவசாயிகளிடம் நெல்லிருப்பு அதிக அளவில் தேக்கம் அடையாமல் தடுக்கவும், நெல் வாங்கும் கொள்முதல் மையங்கள் ஏற்படுத்துவதுபற்றி யோசிக்கப்பட்டு, அரசினரே கொள்முதல் செய்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள. இந்த ஏற்பாட்டின்படி, இந்திய உணவுக் கூட்டு நிறுவனமும், தஞ்சாவூர்க் கூட்டுறவு விற்பனை சங்கமும் விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்ய வேண்டிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலைக்கும் குறைவாக, விவசாயிகள் அஞ்சுவது போல் பொதுச் சந்தை விலைகள் சரியுமானால், விவசாயிகள் இந்திய உணவுக் கூட்டு நிறுவனத்தின் 375 சேகரிக்கும் மையங்களிலோ அல்லது 500-க்கும் மேற்பட்ட கிராமங்களிலுள்ள தஞ்சாவூர்க் கூட்டுறவுவிற்பனைச் சங்கத்தின் தனியான கிளைகளிலோ கொடுத்து, அவர்களுடைய நெல்லிற்குக் கட்டுப்பாட்டு விலையில் பணம் பெற்றுக் கொள்ளலாம். இதைத் தவிர, தாலுகா சப்ளை அதிகாரிகள் மூலமாகவும், சிவில் சப்ளை இலாகாவின் அங்கீகாரம் பெற்ற ஆலைக்காரர்கள் மூலமாகவும் கொள்முதல் விலையில் நெல் வாங்கப்படும். இதைத் தவிர, தேவையெனில் அரசு அங்கீகாரம் பெற்ற மொத்த வியாபாரிகளும் நியமிக்கப்படுவார்கள். அதனால் விவசாயிகளுக்குக் கட்டுப்பாட்டு விலையில் அரசுக்கு நெல் கொடுப்பதில் எவ்வித சிரமமும் இருக்காது. இந்த நடவடிக்கைகள் வியாபாரிகள் [illegible] து நெல் எடுத்துச் செல்வதில் மந்தம் ஏற்பட் [illegible] விலைகள் குறைந்தாலும் அவைகளைத் தவிர்த்து [illegible] கொள்ளும்.

**திரு. கொ[illegible]ல் சி. கிருஷ்ணமூர்த்தி:** தலைவர் அவர்களே, இப்பொழுது [illegible] மாவட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய [illegible] வர்கள் சிவில் சப்[illegible]லாகாவுக்கு நெல் போட்டால்தான் வெளி

அ[illegible]
மற்ற [illegible]
கள் மின்சார[illegible]





மாவட்டத்திற்கு 50 சதவிகிதம் எடுத்துச் செல்லலாம் என்று இருக்கிறது. அதே போன்று கூட்டுறவு நாணயச் சங்கங்களிலேயும் நெல் போட்டால் 50 சதவிகிதம் வரை வெளி மாவட்டத்திற்கு எடுத்துச் செல்லலாம் என்ற உத்திரவை அரசாங்கம் பிறப்பிக்க யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்திய உணவுக் கூட்டு நிறுவனத்திற்கும் கூட்டு நிறுவனத்திற்கும் இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்த மாவட்டத்திலே விலை ஏறுமல் இருக்க கிளைச் சங்கங்களிலே கொடுக்கலாம் என்று இருக்கிறது. அவர்களும் வெளி மாவட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று கோருவார்களானால் அது கவனிக்கப்படும்.

## (ஆ) புதுக்கோட்டைப் பகுதியில் விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கும் திட்டத்தை விரைவுபடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. பொன்னம்பலம் அவர்கள் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு உடனடி பொது முக்கியம் வாய்ந்த காரியம் ஒன்றைக் கொண்டு வருவார்கள்.

**புலவர் பொ. பொன்னம்பலம்:** தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ், திருச்சி மாவட்டம் புதுக்கோட்டை பகுதியில் (ஆலங்குடி, திருமயம், குளத்தூர் வட்டங்களில்) விசையேற்றங்களுக்கு (பம்புசெட்டுகளுக்கு) மின் இணைப்பு கொடுக்கும் திட்டத்தை, வீதி விளக்குத் திட்டத்தோடு இணைத்து விரைவுபடுத்தி நிறைவேற்றித் தரவேண்டியது குறித்த அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இம் மாநிலத்திலுள்ள நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வகை செய்யப்பட்டுள்ள வேலைத் திட்டத்தின்படி ரூ. 12.50 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஆண்டொன்றுக்கு 3,000 ஊர்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின்சார வசதியளிப்பதும் 55,000 வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதும் இதற்காக வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டத்தின்படி புதுக்கோட்டை கோட்டத்தில் 1969-70 நடப்பு ஆண்டில் 84 ஊர்களுக்கும், 330 சிற்றூர்களுக்கும் மின்சார வசதியளிக்கவும், 723 விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கோட்

டத்தில் அடங்கிய மூன்று வட்டங்களில் 1—1—1970 நிலவரப்படி, விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ள விவரம் கீழ்க்கண்டவாறாகும் :—

| வட்டத்தின் பெயர். | 1—1—1970 நிலவரப்படிமின் இணைப்புக் கொடுக்கப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கை. | 1969–70-ல் (1—4—1969 முதல் 1—1—1970 வரையில்) |
|---|---|---|
| ஆலங்குடி .. .. | 801 | 190 |
| குளத்தூர் .. .. | 1,384 | 261 |
| திருமயம் .. .. | 895 | 174 |
| | 3,080 | 625 |

முடிவுறுமலுள்ள மனுக்களின் நிலை வருமாறு :—

| | மனுக்களின் எண்ணிக்கை. | | | |
|---|---|---|---|---|
| | ஆலங்குடி. | குளத்தூர். | திருமயம். | மொத்தம். |
| 1. நிறைவேற்றப்பட்டு வருபவை. | 324 | 688 | 141 | 1,153 |
| 2. அனுமதிக்கப்பட்டவையும், மேற்கொள்ளப்பட விருப்பவையும். | 622 | 794 | 309 | 1,725 |
| 3. உருவாக்கப்பட்டு வரும் செயற் குறிப்புகள். | 1,147 | 1,267 | 365 | 2,779 |
| | 2,093 | 2,749 | 815 | 5,657 |

3. நிதிநிலைக்கு உட்பட்டும், மின்சாரம் வழங்குவதைப் பயன் படுத்திக்கொள்ள முன்வரும் உழவர்களைப் பொறுத்தும் புதுக் கோட்டை கோட்டத்தில் இயன்றவரையில் அதிக அளவு விசை யேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க மின்சார வாரியம் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

4. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கண்ட முடிவை யொட்டி இதற்கு முன் நான் குறிப்பிட்ட இயல்பான வேலைத் திட் டத்துடன் கூட 1971, டிசம்பர் முடிவிற்குள் எல்லா ஊர்களுக்கும், சிற்றூர்களுக்கும் மின்சார வசதியளிக்கும் அதாவது தெரு விளக்கு களுக்கும், வீட்டு மின் இணைப்புகளுக்கும் மட்டும் மின்சாரம் வழங்கும் சிறப்புத் திட்டத்தை மின்சார வாரியம் செயல்படுத்த முனைந்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இந்தச் சிறப்புத் திட்டத்துக்கு ஏறத்தாழ ரூ. 50 கோடி செலவாகுமென மதிப்பிடப்படுகிறது. விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு





அளிப்பதும் இச் சிறப்புத் திட்டத்தில் அடங்குமாயின் செலவு மேற்கொண்டும் அதிகரிக்கும். நிதி வாயில்கள் குறைவாக உள்ளதாலும் போதிய அவகாசமில்லாமையாலும், சிறப்புத் திட்டத்தின் கீழ் தெருவிளக்குப் போடும் பணியுடன்கூட விசை யேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கும் பணியையும் மேற்கொள்ள இயலாது. எல்லா ஊர்களுக்கு, சிற்றூர்களுக்கும் மின்சாரம் வழங்கும் இணைப்புகள் போடப்பட்டு விட்டால் அப் பகுதியில் அமைக்கப்படும் வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பது எளிதாகிவிடும். இவ்வாறு இம் மாநிலத்தில் எல்லா விசையேற்றங்களுக்கும் மின் இணைப்புக் கொடுப்பதற்கு இச் சிறப்புத் திட்டம் ஒரு முன்னோடியாக விளங்கு விளங்குவதாக எடுத்துக் கொள்ளமுடியும்.

**புலவர் பொ. பொன்னம்பலம்:** தலைவர் அவர்களே, மழையில் லாத காரணத்தால் வறட்சியான பகுதிகளில் தொடர்ந்து நடத்தி வருகிற விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்குச் சில இடங்களில் கம்பங்கள் நடப்பட்ட நிலையில் இருக்கின்றன. காரணம் கேட்டால் கம்பிகள் இன்னும் வரவில்லையென்று சொல்கி றார்கள். எனவே கம்பிகளை உரிய காலத்தில் கொடுத்து விரைவிலே மின் இணைப்புக் கிடைக்கச் செய்ய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் அமைகிறேன்.

## (5) அறிவிப்புகள்.

### (அ) பேரவையில் சில உறுப்பினர்கள் பார்வார்ட் பிளாக் கட்சி உறுப்பினர்களாகத் தனித்து இயங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பி. கே. மூக்கையாத் தேவர், சௌடி. எஸ். சுந்தர பாரதி, ஏ. ஆர். பெருமாள், வி. தவமணித் தேவர், எஸ். பரமசிவம், ரா. இரத்தினத் தேவர், எஸ். அழகுத் தேவர் ஆகியோர் தமிழகச் சட்டப் பேரவையில் திரு. மூக்கையாத் தேவர் அவர்களது தலைமையில் ஃபார்வார்ட் பிளாக் உறுப்பினர்களாகத் தனித்து இயங்கப் போவதாக எனக்குக் கடிதம் வந்திருக்கிறது. இக்கடி தத்தில் திரு. மூக்கையாத் தேவர் அவர்களது கையெழுத்து இல்லை. ஆதலால், அவருக்கு இதுகுறித்துக் கடிதம் எழுதியுள்ளேன். அவ ரிடமிருந்து பதில் வந்ததும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### (ஆ) பேரவையில் சில உறுப்பினர்கள் திரு. பூவராகன் தலைமையில் தனிக் கட்சியாக இயங்கத் தனி இடம் ஒதுக்குதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ரா. கனகசபை, கோ. பூவராகன், பி. வெங்கிடாசலத் தேவர், அ. சேனாபதிக் கவுண்டர், டி. தீர்த்தகிரி கவுண்டர், என். தீர்த்தகிரி ஆகியோர் திரு. கோ. பூவராகன் அவர்களது தலைமை யில் தனிக் கட்சியாகச் சட்டப் பேரவையில் இயங்குவார்கள்

[1970 பிப்ரவரி 28

என்றும், அவர்களுக்குத் தனி இடம் ஒதுக்கக் கோரியும் எனக்குக் கடிதம் வந்துள்ளது. இதன்மீதும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆலடி அருணா:** அந்தக் கட்சியின் பெயர் என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஒரு தனிக்கட்சி.

**திரு. ப. மகாதேவன்:** பெருமதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, 1970–71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை . . . . .

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. பூவராகன் தலைமையில் தனிக் கட்சி இயங்கும் என்று குறிப்பிட்டீர்கள். அந்தக் கட்சியின் பெயர் என்ன என்று பேரவைத் தலைவர் அவர்கள் அறிவிப்பார்களா? லோக்சபாவில் ஆளும் தரப்பில் காங்கிரஸ் ரூலிங் என்றும், எதிர்த்தரப்பில் காங்கிரஸ் அப்போசிஷன் என்றும் கூறுகிறார்கள். இங்கே தி.மு.க. ஆளுங்கட்சியாக இருக்கிறது. ஆகவே, அந்தக் கட்சியின் பெயர் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உங்களுக்கு ஏன் அந்தக் கவலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு கட்சிக்குப் பெயரிடுகின்ற பொறுப்பு பேரவைத் தலைவர் அவர்களுக்கு இல்லை. அவர்கள் பெயரை அறிவித்ததும் நான் அவைக்கு அறிவிக்கிறேன்.

## (6) 1970-71-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கைமீது பொது விவாதம்

* **திரு. ப. மகாதேவன்:** பெருமதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தைத் துவக்கி வைக்கும் வாய்ப்பை எனக்குக் கொடுத்த சபாநாயகர் அவர்களுக்கும், எங்கள் கட்சித் தலைவர்களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த பட்ஜட்டைப் பற்றிப் பல கட்சித் தலைவர்கள் கூறிய கருத்துக்களை எல்லாம் செய்திப் பத்திரிகையில் பார்த்திருக்கலாம். இதைப்பற்றி பொதுமக்களும், ஆளும் கட்சி உறுப்பினர்களும்கூட, மக்களைப் பற்றிச் சிந்திக்காத மன்னர்கள் காலத்தில் வரி விதிப்பது போன்று வரிகள் நிறைந்த கொடுமையான பட்ஜட் என்று கூறுகிறார்கள். ஒரு நண்பர் என்னிடம், 'இந்த பட்ஜட்டில் ஒரு வரி கூட இல்லை', என்று சொன்னார். இதிலே ஆறு கோடிக்கும் அதிகமாக வரி போட்டிருக்கிறார்களே, நீங்கள் இல்லை என்று சொல்லுகிறீர்களே, என்று நான் கேட்டேன். அவர் கூறினார், 'இந்த நிதிநிலை அறிக்கையில் வரி என்று சொல்லாத ஒரு வரி கூட இல்லை' என்று. அவர் அவ்வாறு வேடிக்கையாகச் சொன்னது உண்மைதான். வரிக்கு மேல் வரி, வரிக்கு வரி போடப்பட்டிருக்கிறது. இதை நான் மட்டும் சொல்லவில்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே



1970 பிப்ரவரி 28] [திரு. ப. மகாதேவன்]

47-வது பாராவில் சொல்லுகிறார்கள். ரூ. 5 லட்சத்துக்கு மேற்பட்ட அளவில் ஆண்டொன்றுக்கு வாணிபம் செய்து வரி விதிப்பிற்கு உட்பட்டவர்கள் மீது கூடுதல் விதிப்பொன்றையும் விதிக்க முடிவு செய்துள்ளோம். ஒவ்வொரு ஆண்டிலும் வணிகரின் மீது விதிக்கப்படும் விற்பனை வரியின்மீது 7½ சதவிகித அளவில் இவ் விதிப்பு மேல்வரியாக இருக்கும் என்றுதான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த வரி அமைப்பைப் பார்க்கும்போது இது நிதிநிலை அறிக்கையா அல்லது வரப்போகும் வறுமையையும் வாட்டத்தையும் காட்டக்கூடிய அபாய அறிக்கையா என்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது. எவ்வளவுதான் இது துய்ப்போரைப் பாதிக்காது என்று நிதியமைச்சர் அவர்கள் கூறினாலும், இந்த வரியின் போக்கைப் பார்க்கும்போது நிச்சயமாகத் துய்ப்போரைத் தான் பாதிக்கும்.

இவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது தங்களுடைய சாதனை எதுவாக இருக்கும் என்று சொல்லக்கூடிய நேரத்தில் 1966-ம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் 15-வது பிரிவில் வரிகளைக் கண்டித்துக் கூறி 'நாங்கள் வரிப் பளுவைக் குறைப்போம்' என்று சொன்னார்கள். ஆனால் இப்போது திட்டங்களைப் போட்டுவிட்டு அதற்கு வருவாயைத் தேடும் வகையில் வரிகளைப் போட்டிருக்கிறார்கள். காலுக்குத் தகுந்த செருப்பை வாங்காமல், செருப்பை வாங்கிவிட்டு காலை வெட்டிக்கொள்ளும் நிலைபோல், திட்டங்களைப் போட்டுவிட்டு வருவாயைத் தேடும் வழியில் இறங்கி இந்த வரிகளைப் போட்டிருக்கிறார்கள்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், கனம் அங்கத்தினர் அவர்கள் பட்ஜட்டைப் பற்றிக் குறிப்பிடும்போது 'செருப்பு' என்று குறிப்பிட்டார்கள். 'செருப்புக்குத் தகுந்த கால்' என்று சொல்லுவது தகுந்த உபமானம் அல்ல. அந்த வார்த்தையைக் கனம் அங்கத்தினர் உபயோகப்படுத்தியது சரியா என்பதுபற்றித் தங்களுடைய 'ரூலிங்' வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மரபு எப்படி என்றால்—'பூனை போல் பாய்ந்தான்' என்று இல்லாமல் 'புலி போல் பாய்ந்தான்' என்று உபமானம் உயர்ந்த பொருளில் இருக்க வேண்டும். சொல்லுகின்ற சொல் நல்ல சொல்லாக இருந்தால் மன்றத்தின் மரபு கெடாது இருக்கும்.

**திரு. ப. மகாதேவன்:** பட்ஜட்டைச் செருப்பு என்று சொல்லவில்லை. செருப்புக்குத் தகுந்தாற்போல் காலை வெட்டிய கதை போல்தான் என்று சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'மிதியடி', 'காலணி' என்று சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** காலுக்குத் தகுந்தபடி செருப்பை வெட்டுவதைத்தான் பார்த்திருக்கிறோம். செருப்புக்குத் தகுந்தபடி காலை வெட்டியவர்களை நான் கண்டதில்லை.

[1970 பிப்ரவரி 28

* **திரு. ப. மகாதேவன் :** முதலமைச்சர் அவர்கள் காணுததற்கு நான் பொறுப்பல்ல. பழமொழியாகச் சொல்லி வருவதைச் சொல்கிறோம். அந்த வரிசையில் நானும் கேட்டதைச் சொன்னேன்.

டர்ன் ஓவர் வரி என்று போட்டிருப்பது துய்ப்போர்களைப் பாதிக்காது என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். இன்று கேள்வி நேரத்தில், ஆட்டுக் கறிக்கு டாக்ஸ் எடுத்துவிட்ட நிலையில் அதன் விலை குறைவதற்கு யத்தனங்கள் செய்து குறைக்க முடிந்ததா என்று திரு. மார்ட்டின் அவர்கள் கேட்டார்கள். இப்போது கடைகளில் விலை ஒவ்வொரு கடைக்கும் ஒரு விலையாக இருக்கிறது. யாரும் கேட்பார் இல்லை. பட்ஜட் வருகிறது என்றால் சிகரட்டுகள் பதுக்கி வைக்கப்படுகின்றன. ஒரு பாக்கெட்டின் மேல் 15 பைசாவுக்கு மேல் வைத்து விற்க ஆரம்பிக்கிறார்கள். எந்தப் போலீஸ்காரரும், எக்சைஸ் வரி அதிகாரியும் இதைப்பற்றி கேட்பதே இல்லை. தைரியமாக விற்கிறார்கள். அரசு போட்டிருக்கும் டர்ன் ஓவர் வரியை அவர்கள் தங்கள் கையிலிருந்து கொடுக்கப் போவதில்லை. வீட்டிலிருந்து கொடுக்கப் போவதில்லை. விவசாய வருமான வரி ஒன்றுதான் சொந்த வருமானத்திலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் எல்லாம் இதை எப்படி ஈடுகட்டுவது என்று பார்த்துச் செய்வதால் கடைசியில் மக்கள் பேரில்தான் வரும். ஏழை மக்கள் வாங்கிச் சாப்பிடுகின்ற பொருள்கள் கொண்ட மளிகைக் கடைக்காவது இதிலே ஒரு எக்ஸம்ப்ஷன் கொடுத்திருக்கலாம்.

இதிலே விதிக்கப்பட்டிருக்கும் பெரும்பாலான வரிகள் ஆடம்பரப் பொருள்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் வரி என்று சொல்லி அது பணக்காரர்களைத்தான் பாதிக்கும் என்று கூறியிருக்கிறார்கள். கடிகாரம், ரேடியோ போன்றவை எல்லாம் சாதாரண மக்களும் பயன்படுத்தக்கூடிய பொருள்கள். கடிகாரம் இன்று அத்தியாவசியமான பொருள்களில் ஒன்று என்று சொல்லலாம். வேலைக்குச் செல்லும் தொழிலாளி அலாரம் கடிகாரம் வைத்து அது அலருகிற சத்தத்தில் விழித்து வேலைக்குப் போகும் நிலை இருக்கிறது. பெண்கள் எல்லாம்கூட கைக்கடிகாரம் அணிகிறார்கள். முன்பெல்லாம் பெண்கள் நகை கேட்டால், நகை எதற்கு உன் புன்னகை போதும் என்று சொல்லலாம். காதிலே வைரம் இல்லையென்று சொன்னால் நெஞ்சிலே வைரம் இருக்கிறது என்று சொல்லலாம். இன்று அவர்கள் கடிகாரம் இல்லை என்று சொன்னால் உன் முகம் விகாரமாக இருக்கிறது என்று சொல்ல முடியும்? கடிகாரம் எதற்கு என்று சொல்லி தப்பித்துக்கொள்ள முடியாது. சிமெண்டை எடுத்துக் கொண்டால் அது குடிசைக்குக்கூடப் பயன்படக்கூடிய பொருள். ரிப்பேருக்கு சிமெண்ட் வேண்டும். அது நடுத்தர மக்கள், ஏழை மக்களுக்குத் தேவையான ஒன்று. மின்சாரத்தை எல்லா இடங்களுக்கும் விஸ்தரித்திருக்கிறோம் என்று பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய நேரத்தில் மின்சாரக் கருவிகளுக்கு வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. சாதாரண மக்கள் பயன்படுத்துகிற பல்பு



970 பிப்ரவரி 28] [திரு. ப. மகாதேவன்]

ளுக்காவது விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் ல்லை. டிராக்டர்களை அரசு வாங்கி விவசாயிகளுக்கு வாடகைக்குக் காடுக்கிறது என்றாலும் வரி உயர்வின் காரணமாக அதை ாடகைக்கு எடுத்து உபயோகப்படுத்துகிற விவசாயிகளுக்கு ட்டணம் உயரும். ஆகவே, அதுவும் ஏழை விவசாயிகள், தாழிலாளர்களுடைய தலையில் விழக்கூடிய ஒன்றாகத்தான் ருக்கிறது.

நாற்பது சதவிகிதம் வரியைக் குறைப்போம், 60 சதவிகிதம் வசலையைப் பெருக்குவோம் என்று சொன்னீர்கள். அன்று அண்ணா அவர்கள் சொல்லும்போது, நாட்டிலுள்ள பொருளாதார மேதைகள் எல்லாம் இந்தச் சட்டத்தைப் புரிந்து கொள்ளாமல் தவிக்கிறார்கள் என்று சொன்னார்கள். உங்களுடைய வரிவிதிப்பைப் பார்க்கும்போது, அவருடைய தம்பிகளாகிய நீங்கள், எங்களுக்குப் புரிந்துகொள்ள முடியாமலிருப்பதால், அதைப் புரிந்துகொண்டிருந்தால் அதைப்பற்றி எங்களுக்கு விளக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை விலைவாசி ஏற்றத்தை எந்த முறையில் கொண்டுவரும் என்று பார்க்க வேண்டும். மக்கள் எதிர்பார்த்தபடி விலைவாசியேற்றத்தைக் குறைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே விலைவாசியேற்றத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள், விலைவாசிகள் கூடியிருக்கின்றன என்று. அதைக் குறைப்பதற்கு என்ன செய்திருக்கிறார்கள் என்று பார்க்கும்போது ஒன்றையும் காணோம்.

முன்பெல்லாம் சொன்னார்கள்,—வால் போஸ்டர்கள் கூட அடித்தார்கள்—விலைவாசிகள் இறங்கும் வரை நாங்கள் சம்பளம் வாங்க மாட்டோம் என்று. நீங்கள் சம்பளம் வாங்க வேண்டாம் என்று சொல்லக்கூடிய கடின உள்ளம் படைத்தவர்கள் அல்ல நாங்கள். நீங்கள் சம்பளம் வாங்கத்தான் வேண்டும், சம்பளம் வாங்கித்தான் பணி புரிய வேண்டும். இன்று விலைவாசிகள் எந்தளவிற்கு ஏறியிருக்கின்றன என்று அமைச்சரவைக்குத் தெரியுமா என்று கேட்கிறேன். முன்பெல்லாம் சாமான் விலைகளைப்பற்றி சாதாரணமாகச் சொல்லும்போது, அன்றிருந்த அமைச்சர்களின் பெயரால் முதலில் 'அ' இருந்தால் 'அ' போட்டு, 'க' இருந்தால் 'க' போட்டு கூறி வந்தது எல்லோருக்கும் தெரியும். இவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது புளி பட்ட பாட்டைச் சொல்லிமுடியாது. அன்று ஆங்கிலேயன் காலத்தில் ஆறு காசுக்குப் புளி வாங்கினால் அந்தத் தலைவரின் தலை கனத்திற்கு இருக்கும். ஆனால் இன்று ஆறு காசுக்கு வாங்கினால் அமைச்சரின் கண் அளவிற்குத்தான் இருக்கிறது என்று காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இவர்கள் சொல்லிவந்தார்கள். இன்று கடைகளுக்கு எந்த அமைச்சராவது சென்றதுண்டா? சென்று, பொதுமக்களின் கஷ்டங்களை உணர்ந்தது உண்டா? இன்று கடைக்குப் பத்து காசை எடுத்துச் சென்றால்— நண்பர் விநயகம் அவர்கள் அழகாகச் சொல்வார்கள், கடையிக்

உள்ளவர் சொல்வார், தம்பீ, கையை நீட்டு, கையில் புளியைத் தடவி விடுகிறேன், அது வோட்டு போடச் செல்லும்போது போடப்படும் சீல் மாதிரி இருக்கும், அதை வீட்டுக்குச் சென்று நக்கிப் பார் என்று சொல்லும்படியாக இருக்கிறது.

மிளகாய் விலையை எடுத்துக்கொண்டால் கிலோ ஐந்து ரூபாயாக இருந்தது இன்று 16 ரூபாய் என்றளவிற்கு ஏறியிருக்கிறது. நாட்டு மக்களின் நா இன்னும் சுரணை கெட்டுவிடவில்லை, காரம் வேண்டியிருக்கிறது. பத்து காசைக் கொண்டு சென்றால் இரண்டு பச்சை மிளகாய் வாங்கி நான்கு பேர்கள் அதைப் பார்த்துக் கொண்டு சாப்பிடவேண்டிய நிலை இருக்கிறது. உள்ளபடியே காரம் கண்டிப்பாக வேண்டும் என்று விரும்புகிறவர்கள் அந்த மிளகாயைக் கடித்துவிட்டு நாவில் வரும் உரப்போடு கண்ணீரிலிருந்து வரும் தண்ணீரை உப்பாக்கிக் கொண்டு கஞ்சி குடிக்கவேண்டிய நிலைதான் இன்று இருக்கிறது. இது அமைச்சரவையின் கவனத்திற்கு வந்ததுண்டா?

இன்று வாழ்க்கைப் புள்ளியை எடுத்துப் பார்த்தால், 1967 மார்ச்சில் 685 புள்ளி என்றிருந்தது; அது 1968 மார்ச்சில் 701 என்று மாறியது; 1969-ல் அது 696 ஆகக் குறைந்தது, 1970 பிப்ரவரியில் 774 ஆக அதிகரித்துள்ளது. மார்ச்சில் 804 ஆகுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. இப்படி வாழ்க்கைப்புள்ளி அதிகரித்துள்ளதைப் பார்க்கிறோம். ஆனால் இந்த பட்ஜெட்டில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று பார்த்தால், 3-வது பக்கத்தில் இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. "மறறும், விலைவாசிக் கொள்கைகள் பற்றியவரை, மத்திய அரசு மேற்கொள்ளும் முடிவுகளில் பெரும்பாலானவை, பற்பல மாநிலங்களில் நிலவிவரும் சூழல்களைக் கருத்தில் கொள்ளாமலே மேற்கொள்ளப்பட்டன." என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிக் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். இது உண்மையான குற்றச்சாட்டா அல்லது ஊடலா என்ற சந்தேகம் பொது மக்களுக்கு வருகிறது. ஏனென்றால், முன்பெல்லாம் பத்து பக்கங்கள் மத்திய சர்க்காரைக் குறை கூறி, அதைத் தரவில்லை, இதைத் தரவில்லை என்று சொல்லி மக்களும் அதை நம்பி வந்தார்கள். ஆனால் இன்று இவர்கள் கேட்டால் கொடுப்பார்கள், தட்டினால் திறக்கப்படும், அழைத்தால் வருவார்கள் என்று இருக்கக் கூடிய நிலையிலுள்ள அமைச்சர்கள் மத்திய மாநில உறவைப் பற்றி அவ்வளவு அழகாகச் சித்தரிக்கும்போது மத்திய அரசிடம் கேட்டுப் பாருங்களேன், தட்டிக் கேளுங்களேன். அப்படிக் கேட்டீர்களா என்று கேட்கிறேன். எங்கள் பிரதமரைப் பார்த்து "அம்மா, வணக்கம்" என்று சொல்வதற்குப் பதிலாக "நமஸ்தே" என்று சொன்னால் அவர்கள் சிறிது மனம் இளகிக் கூடுதல் கொடுப்பதற்கு வாய்ப்பிருக்கிறதே, அதைக் கேட்டீர்களா? (குறுக்கீடு.) இம்மாநில முதல் அமைச்சர் அவர்களை எங்கள் முதல் அமைச்சர் என்று சொல்கிறோமே, அதுபோல்தான் எங்கள் பிரதமர் என்றும் கூறுவது. அதில் கசப்பு ஒன்றுமில்லை.



மத்திய அரசு கூடுதல் கடன் உதவி அளிக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். வட்டியைக் குறைத்துத் தரவேண்டும் என்று கேட்டிருப்பதை நானும் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இதைப் பற்றி நான் சொல்லும்போது அமைச்சர்கள் கேட்கலாம், இவர் யார் சொல்வதற்கு என்று. கணவன் மனைவிக்கு அல்லது அண்ணன் தம்பிக்கு சண்டை வரும்போது நடுவில் சென்று அதை விலக்கப் போகிறவன் கதி ஆபத்தாகப் போய் விடுகிறது சில சமயங்களில். இரண்டு பேர்களும் சேர்ந்து கொண்டு விலக்க வருபவனை உதைக்கும் நிலை ஏற்படும். அதைப்பற்றிச் சொல்ல உங்களிடம் தகுந்த தோழர்கள் இருக்கும்போது நான் அதைப் பற்றிச் சொல்லாமலேயே நீங்கள் வேண்டியதை வாங்கிக் கொள்ள முடியும்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது, கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் எவை நிறைவேற்றப் பட்டிருக்கின்றன என்று பொது மக்கள் கேட்கிறார்கள். முன்பு வருமானம் ரூ. 200 கோடியாக இருந்தது, இன்று ரூ. 300 கோடியாக பெருகி இருக்கிறது. அவ்வளவு வருமானம் பெருகியிருந்தும் ப்ரபோர்ஷனேட்டாக அதற்குத் தகுந்தபடி வசதிகள் பெருகியிருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம், கதவடைப்புகளினால் தொழிலாளர்களின் பாதிப்பு, மாணவர்களிடையே அமைதியின்மை, கல்லூரிகள் நிரந்தர அடைப்பு, இவைகளையெல்லாம் மாற்ற முடியவில்லை. அன்று அழகாகச் சொன்னார்கள், ஆமைக் கறி சமைப்போம். அவற்றை டப்பாவில் அடைப்போம், அமைத்து அவற்றை அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அனுப்பி அன்னியச் செலாவணி பெறுவோம் என்று அன்று சொன்னார்கள். கடல் பாசியைக் கொண்டு அல்வா செய்வோம் என்றும் அன்று சொன்னார்கள். அவற்றைச் செய்தாகிவிட்டதா? அதை நாங்கள் பார்க்கவில்லையே. அட்டையால் வீடுகள் கட்டிக் கொடுப்போம் என்று சொன்னார்கள். எங்கே அந்த வீடுகள் என்று கேட்கிறேன். இவற்றையெல்லாம் தேர்தல் காலத்தில் கூறி, அதற்குப் பிறகு மூன்று படி அரிசி எங்கள் லட்சியம், ஒரு படி அரிசி உறுதி என்று சொன்ன வாக்குறுதியைக்கூட இன்று நழுவ விட்டு விட்டார்கள். டீ-கண்ட்ரோல் என்ற பெயரால். உண்மையில் கண்ட்ரோல் எடுக்கப்பட்டு விட்டதா, ரேஷன் சிஸ்டம் எடுக்கப்பட்டு விட்டதா என்று பார்த்தால் எங்கள் மாவட்டத்தில் ரேஷனும் கொடுக்கப்படவில்லை, கல்குளத்திலிருந்து விளவங்கோடுக்கு நெல் கொண்டு போக முடியாத நிலையும் இருக்கிறது. இது அமைச்சரவைக்குத் தெரியுமா? எங்கள் பக்கத்தில் ஒரு படி அரிசி ரூ. 2.90, 3.30 என்றளவில் விற்கப்படுகிறது. படி அரிசி கொடுக்கவில்லையென்றாலும், படி ஒன்றுக்கு ரூ. 1.20 பைசா அல்லது ரூ. 1.30 பைசா என்று வரக்கூடிய அரிசி கூட கொடுக்கப்படுவதில்லை. மக்களின் உள்ளத்தைக் கொந்தளிக்கச் செய்யும் பிரச்சினையாக இது அமைந்துள்ளது. என் நண்பர் திரு. பாலன் அவர்கள் கூட இதை மறுக்கமாட்டார் என்று நினைக்கிறேன். இப்படியிருக்க, டீ-கண்ட்ரோல் செய்துவிட்டு 85-வது

சாதனையாக அதைச் சொல்கிறீர்கள். மக்களின் மனதில் ஒரே ஒரு சாதனைதான் படுகிறது. அதுதான் உண்மையில் அவர்கள் கண்ணுக்குப் படுகிறது. குமரி மாவட்டத்திற்குச் சென்றாலும் சரி, அல்லது இங்கு சென்னையிலானாலும் சரி, எங்கு சென்றாலும் நெய்வேலி மாதிரி ஒரு ஊர் புதிதாக டெவலப் ஆகியிருக்கிறது என்று பார்க்கிறவர்கள் சொல்கிறார்கள். அந்த ஊர் எது? எங்கு சென்றாலும் அது கண்ணில் அடிபடுகிறது. ஒரு மணி நேரமாக பஸ்ஸுக்கு காத்திருக்கிறவர்கள் கண்களுக்கு அது அடிக்கடி படுகிறது. அது என்ன ஊர் என்று கேட்டால் சொல்கிறார்கள், அது பாரி முனை என்று நினைத்தோம்—எங்கள் ஊரில் அரமனை என்ற இடம் இருக்கிறது—ஆனால் பணிமனைக்குச் செல்கிறது அவை, இது தான் சாதனையா என்று கேட்கிறார்கள். நல்லவேளை அந்த இலாகா மாற்றமாகியிருக்கிறது. ஸ்பேர் பார்ட்ஸ் வாங்காமல், ரிப்பேர் செய்யாமல் இருந்தால் லாபம் வரும் என்று மேதாவிலாசத்தோடு புதுக் கண்டுபிடிப்பு. அதை அந்தரங்கமாக வைத்திருந்தார்கள், யாரிடமும் சொல்லமாட்டோம், லாபம் காட்ட ஒன்றை வைத்திருக்கிறேன் என்று கூறினார்கள். பிறகு அது மாடி பஸ் என்ற நிலைக்கு வந்து இன்று அது அம்மாடி பஸ்ஸாக இருக்கிறது. பஸ்ஸில் டிக்கட் வாங்கிக்கொண்டு ஏறினால் தலையில் ஒரு இடி பட்டு அம்மாடி என்று சொல்லும் விதத்தில் அவ்வளவு மோசமாக இன்று அந்த இலாகா போய்க்கொண்டிருக்கிறது. பணிமனை என்ற பெயரைப் பார்த்து அதுவும் ஒரு சாதனை என்று மக்கள் மனதைத் தேற்றிக்கொள்கிறார்கள்.

அடுத்தபடியாக, பொதுமக்கள் இந்த பட்ஜட்டில் நில வரி நீக்கத்தை எதிர்பார்த்தார்கள். ஏனென்றால் இன்று நிதிப் பொறுப்பில் இருக்கிற அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது அதைக் காரசாரமாகத் தாக்கியிருக்கிறார்கள், அதாவது நில வரியை நீக்கவேண்டுமென்று. ஆறு கோடி ரூபாய் லாபத்திற்காக இந்த அநியாயமான வரி அமைப்பு வேண்டுமா, என்று அன்று பேசியிருக்கிறார்கள். ஆகவேதான் அதைப் பொதுமக்கள் எதிர்பார்த்திருந்தார்கள். நிச்சயமாக அது 1971-ல் வரும் என்று எண்ணுகிறேன். ஏனென்றால் மக்களுக்கு ஞாபக சக்தி கொஞ்சம் குறைவு. இப்போது செய்துவிட்டால் 1972-ல் மக்கள் அதை மறந்துவிடப் போகிறார்களே என்று பக்கத்தில் வைத்துக்கொள்ளலாம் என்று எண்ணியிருந்தால் அது வரவேற்கத் தக்கது.

எங்கள் மாவட்டத்தில் உள்ள ஒரு பிரச்னை ரயத்துவாரி சிஸ்டம். சபாநாயகர் அவர்களுக்கும், அமைச்சர்களுக்கும், குறிப்பாக மாண்புமிகு திரு. மாதவன் அவர்களுக்கெல்லாம் அந்தப் பிரச்சினையைப்பற்றி நன்கு தெரியும். அவர்கள் அன்று அரும்பாடு பட்டார்கள். எல்லோரும் அதைப் பேசி, அது ஒரு வேண்டாத திட்டம் குமரி மாவட்டத்திற்கு என்று சொன்னார்கள். அதைப்பற்றிச் சொல்ல இப்பொழுது எனக்கு நேரம் இல்லை என்றாலுங்கூட, மற்ற





வர்களுக்குத் தெரியவேண்டுமென்பதற்காக ஓரிரு வார்த்தைகள் சொலல விரும்புகிறேன். அங்கு திரு. சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் காலத்தில் 30 ரூபாய், 40 ரூபாய் ஏக்கருக்கு வரி என்று கொடுக்க முடியாத நிலைமை இருந்தது. பேசிக் டாக்ஸை ஏக்கருக்கு 2 ரூபாய் என்று கொடுத்திருந்தார்கள். பண்டாரவகை என்று ஒன்று இருந்தது. அது மக்களை வாட்டிக்கொண்டிருந்தது. முன்பிருந்த அரசாங்கம் அதை மாற்றும்பொழுது, ரயத்துவாரியாக மாற்றியது காரணம் சுப்ரீம் கோர்ட் அந்த பேசிக் டாக்ஸ் செல்லாது என்று சொல்லிவிட்டதால். ஆனால் அன்று எங்களுக்கு எதிர்க்கட்சியிலே அமர்ந்திருந்த அங்கத்தினர்கள் வாதாடினார்கள். இப்பொழுது நிதியமைச்சராக இருப்பவர்கள் அன்று காங்கிரஸ்காரர்களுக்கு குமரி மாவட்ட மக்கள் பாடம் கற்பிப்பார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அதன்படி அவர்கள் பாடம் கற்பிக்கத் தவறியதாலோ என்னவோ அது அப்படியே இருக்கிறது. 25 ரூபாய் 30 ரூபாய் வருஷத்திற்கு வருகிறது. அதை 4 வருஷங்களுக்குச் சேர்த்துக்கொடுக்கும்படிக் கேட்கும்பொழுது சிறிய விவசாயிகள் அல்லல் உறுகிறார்கள். அமைச்சரவர்கள் அன்று பேசியிருந்தார்கள். நானும் இப்பொழுது மெமோரண்டம் அனுப்பியிருந்தேன். ஏதோ காங்கிரஸ்காரர்கள் தானே அனுப்பியிருந்தான் என்று விட்டு விடாமல் செய்வார்கள் என்று நம்புகிறேன். இந்தப் பிரச்சினை மனிதாபிமானத்தோடு அணுக வேண்டிய ஒன்று. குறிப்பாகத் தமிழகம் பூராவும் நில வரியை நீக்கம் செய்யவேண்டும். அப்படியில்லாவிட்டாலும் பேசிக் டாக்ஸுக்காவது கொண்டு வரலாம். சுப்ரீம் கோர்ட், வெறும் பூமிக்கும், பயன்தரும் பொன் விளையும் பூமிக்கும் ஒன்றாகப் போடுவது சரியல்ல என்று சொல்லியிருக்கிறது. கேரளாவில் 3 ரூபாய், 2 ரூபாய், 1 ரூபாய் என்று தரம் குறித்து இருப்பதைப்போல் செய்யவேண்டும். குமரி மாவட்டத்தில் ரயத்துவாரி வரி பாக்கிகளை வசூலிப்பதற்காக இன்றைய விவசாயிகளை கசக்கிப் பிழியாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வசூலிப்பதை உடனடியாக நிறுத்திவைக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, பாங்கு தேசிய மயமாக்கப்பட்டதைப்பற்றி வரவேற்றிருக்கின்றார்கள். அது பாராட்டத்தக்கது. அதோடு, மாநில சர்க்காருக்குத் தகுந்த பிரதிநிதித்துவம் வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதுகூட வேண்டியதுதான். அதோடு மாநிலத்தின் பொறுப்பும் இருக்கிறது. ஏனென்றால் பேங்குகளிலே கடன் கேட்டால் ஜாமீன் இல்லாமல் கடன் கொடுப்பதில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். ஜாமீன் இல்லாமல் முன்பும் கொடுக்கப்படவில்லை. ஜாமீன் இருந்தால் அன்றும் கொடுத்துக்கொண்டு இருந்தார்கள். எனவே, ஏழை விவசாயிகள், சிறு கடைக்காரர்கள் இவர்களுக்குப் பேங்குகள் கடன் கொடுத்தால் அதற்கு மாநில அரசு பொறுப்பேற்க வேண்டும். 2 எக்கர், 1 ஏக்கருக்குக் குறைந்த

நிலமுடைய ஏழை விவசாயிகள், 1,000 ரூபாய்க்குக் குறைந்த முதலீட்டில் வியாபாரம் செய்யும் சிறு வியாபாரிகள் ஆகியோர்களுக்கு மாநில அரசு ஜாமீன் வசதி செய்து கொடுக்கவேண்டும்.

மன்னர்களின் மானியங்களை ஒழிப்பதைப்பற்றியும், விசேஷ சலுகைகளைப் பற்றியும் முதலமைச்சரவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அதோடு நாமும் கொஞ்சம் அக்கறையோடு இருக்க வேண்டியதாக இருக்கிறது. மன்னர்களின் மானியம் எதற்காக ஒழிக்கப்படவேண்டுமென்று சொன்னார்கள்? அவர்கள் ஃபாரின் கார்கள், அதாவது வெளியூர்க் கார்கள் வைத்துக்கொள்கிறார்கள் என்று சொன்னார்கள். இன்று நம்முடைய நிலை என்ன? பார்லிமெண்டில் சட்டம் கொண்டு வருகிறோம், பார்லிமெண்ட் உறுப்பினர்களுக்குப் படி அதிகம் வேண்டுமென்று. அமைச்சர்கள் எந்தக் காரில் போகிறார்கள்? ஃபாரின் காரில் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. உடம்பிற்காக அவ்வாறு போகிறார்கள் என்றால் ஒத்துக்கொள்ளுகிறேன். அப்படி இல்லாமலிருந்தால் அது சரியாகாது. ஆனால் இன்று அப்படி அவர்கள் காரில் போகும்பொழுது, முன்பு முதல் அமைச்சராகயிருந்து, இன்று உங்கள் நிரந்தரப் படத் திறப்பாளராகவும், ஆசி கூறுபவராகவும், நண்பராகவும், இருக்கின்ற திரு. பக்தவச்சலம் அவர்கள் 'போட்' காரில் போகிறார் என்று சொன்னவர்கள் இன்று திரு. கருணாநிதி கப்பல் போன்ற காரில் போகிறார்களே என்று அதைப்பார்ப்பவர்கள் கருதுகிறார்கள். கும்பி எரியுது, குளுகுளு ஊட்டி வேண்டுமா என்று கேட்டவர்கள் இன்று கோட்டையிலே அந்தக் குளுகுளு வசதியைக் கொண்டு வந்துவிட்டார்களே என்று திரு. மார்ட்டின் அவர்கள் கேட்கிறார்கள். உண்மையாகவே உடம்பிற்காக என்றிருந்தால் ஒத்துக்கொள்ளுகிறேன், அது வேண்டியதுதான். அதை வேண்டாமென்று சொல்லக்கூடிய கடின உள்ளம் படைத்தவனல்ல. உழைப்பு அதிகமாகத்தான் இருக்கிறது, அலுப்பு இருக்கிறது என்றால் சரிதான். ஒன்றுமே உழைப்பில்லாமல் பணம் சேமிக்கும் பணக்காரர்கள் ஏர்-கண்டிஷன் வைத்துக் கொள்ளக்கூடிய ஒரு நாட்டில், உழைக்கின்ற நீங்கள் வைத்துக் கொண்டால் தவறு என்ற அந்த நினைப்பில் நான் சொல்லவில்லை. ஆனால் உச்சவரம்பு சட்டத்தால் 15 எக்காராவுக்குக் குறைவாக நிலம் வைத்துக்கொள்ளும் நிலை ஏற்பட்ட ஒரு விவசாயி, 150 ரூபாய் மாத வருமானம் என்று சொல்லக்கூடிய ஒருவர் இந்த குளுகுளு காரைப் பார்த்தால் என்ன நினைப்பார்? கப்பல் போன்ற கார், அதற்கு உள்ளே இருக்கின்றவர் யார் என்று தெரியவில்லை என்று சொல்லும் அளவுக்கு இருந்தால் என்ன சொல்வது? என். ஜி. ஓ. வினர் 30 ரூபாய் நிவாரணம் கேட்டார்கள். ஆனால் அந்த 30 ரூபாய்க்குப் பதிலாக 10 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் என்ன கேட்பார்கள், இந்தக் காரைப் பார்த்துவிட்டு?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நண்பரவர்கள் என்னுடைய காரில் குளு குளு வசதி இருப்பதைப்பற்றி மிகுந்த ஆயாசப்படுகிறார்கள். என்னுடைய நோயின் காரணமாக,



கண் நோயின் காரணமாக நான் குளிர்ந்த அறையிலே இருக்க வேண்டும், குளிர்ந்த காரிலே பயணம் செய்யவேண்டுமென்று டாக்டர்கள் கூறியிருக்கிறார்கள். நண்பரவர்களுடைய யோசனைக்குப் பிறகு அதை என்னுடைய காரிலிருந்து எடுத்துவிடத் தயாராக இருக்கிறேன்.

**திரு. ப. மகாதேவன் :** தலைவரவர்களே, நான் பேசும்பொழுதே சொன்னேன். உடம்பிற்காக என்றால் நான் வேண்டாமென்று சொல்லவில்லை, அந்த அளவுக்குக் கடின உள்ளம் படைத்தவனல்ல என்று நான் கூறியதை அவர்கள் கேட்டார்களோ இல்லையோ தெரியவில்லை. அப்படியில்லாமல் இருந்தால்தான் என்று சொன்னேன். ஏனென்றால் நான் இவைகளையெல்லாம் சொல்லும்பொழுது முதலமைச்சர் மீது கசப்பாகச் சொல்வதாக நினைத்து விடக்கூடாது. எங்கள் ஊரிலேகூட நான் பேசுகின்ற கூட்டங்களில், யாராவது தரக்குறைவாகப் பேசினால் நான் கண்டித்திருக்கிறேன். எங்கள் கட்சியிலே காமராஜைப் 'படிக்காத மேதை' என்று சொல்வதைப்போல், அவர்கள் கருணாநிதியை 'படிக்காத மேதை' என்று சொன்னால், அதில் தவறு இல்லை என்று சொல்வேன். ஆகவே, மக்கள் நினைப்பதைச் சொன்னேன். அது உங்கள் காதில் விழாமல் இருக்கலாம், மக்கள் சொல்கிறார்களே என்பதற்காகத் தான் சொன்னேன். அந்த விளக்கத்திற்கு நன்றி.

முப்பது ரூபாய் நிவாரணமாகக் கேட்டவர்களுக்கு 10 ரூபாய் கொடுத்திருக்கிறது. அதற்கு எந்த விளக்கமும் கொடுக்கப்படவில்லை. பணம் இல்லை என்றோ, அல்லது அடுத்த மாதம் கொடுக்கப் போகிறோம் என்றோ இல்லை. முப்பது ரூபாய் கேட்டவர்களுக்குக் குறைத்துக் கொடுத்திருப்பதற்கான விளக்கம் தேவை. கொடுத்ததைக் கொடுத்தோம், இதை ஆசையோடு, அன்போடு கொடுத்திருக்கலாம். முதலமைச்சரவர்கள், அவர்கள் வந்தபொழுது சரியாகப் பார்த்து மதிப்புக் கொடுக்கவில்லை என்று புரட்டுக்களைக் கிளப்பி விடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் ஒரு நோட்டீஸிலே, அதன் தலைவர் தேவநாதன் என்று போட்டு வெளியிடப்பட்ட நோட்டீஸிலே அவர்களும், முதலமைச்சரவர்களும் பேசிய வசனமே வந்திருக்கிறது. அப்படியிருந்தால் நான் உண்மையாகவே வருந்துகிறேன். ஆசிரியர்களை, மாணவர்களைச் சரியாகப் பார்ப்பதில்லை, பேசுவது இல்லை என்று சொல்கிறார்கள். உண்மையில் உங்களுக்கு, உழைத்த அலுப்பு இருக்கலாம், ஆகவே சுற்றுப் பயணத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளலாம். இதையெல்லாம் சொல்லும்பொழுது, "இவன் யார் உபதேசம் செய்ய? என்று கேட்காதீர்கள். நண்பர் திரு. எம். எஸ். மணி அவர்க எங்களுக்கு உபதேசம் கூறினார்கள், போன செஷனிலே 3 மா மாவது சிறைக்குச் செல்லக்கூடாதா, விலைவாசிப் போராட்ட நடத்தக்கூடாதா என்று சொன்னார்கள். ஆட்சி அவருக்கே அலுப்புத் தட்டி விட்டதோ என்று வியக்கும் அளவுக்குச் சொ னார்கள். எனவே, சுற்றுப் பிரயாணத்தைக் குறைத்துக் கொ ளுங்கள். முன்பு போர் அபாய அறிவிப்பு வந்தவுடனே எல்லோ

மெட்ராஸை விட்டுப் போனார்கள். அதைப் போல் சமயத்தில் ஒரு அமைச்சரும் தலைநகரில் இல்லை என்று சொல்லும் அளவுக்கு இருக்கிறது. முன்பு திரு. எல்லப்ப பாகவதர் அவர்கள் பேசும்பொழுது கூறினார்கள், காதுகுத்து, சீமந்தம் இவைகளுக்கெல்லாம் அமைச்சர்கள் போகக்கூடிய நிலைமை இருக்கிறது என்று. உண்மையிலேயே நண்பர்களாயிருந்தால் போக வேண்டியதுதான். அப்படியில்லாமல் அடிக்கடி சுற்றுப்பிரயாணம் செய்தால் களைப்பின் காரணமாக பொறுமையில்லாத நிலை வரலாம். அந்தப் பொறுமையில்லாத மனப்பான்மையினாலே, வந்தவர்களுக்குச் சரியாகப் பதில் சொல்லமுடியாத நிலைமை ஏற்படுகிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதையே வலியுறுத்திச் சொல்லி வருகிறார்கள். நான் இரண்டு முறை, பத்திரிகைகளில் அதுபற்றிய விளக்கத்தைத் தந்திருக்கிறேன். வந்தவர்களில் யாரையும், எந்த அமைச்சரும் அலட்சியப்படுத்தி அனுப்பி வைக்கவில்லை என்பதை நான் இங்கு உறுதியாகக் கூறுகிறேன். என்.ஜி.ஜி.ஓ. சங்கத்தைச் சேர்ந்த தலைவர், பிரதிநிதிகள் 15 பேருக்கு மேற்பட்டவர்கள், என்னையும், மாண்புமிகு அமைச்சர்களையும் சந்தித்து என்னுடைய அறையில் ஒரு மணி நேரம் பேசியிருக்கிறார்கள். அன்று, கேபினெட் மீட்டிங்கைக்கூட ஒரு மணி நேரம் ஒத்திவைத்துவிட்டுப் பேசியிருக்கிறோம். நோட்டீசில் வந்ததும், எழுதியிருப்பதும் மிகத் தவறானவை, உண்மைக்கு மாறுபட்டவை.

**திரு. ப. மகாதேவன் :** தலைவர் அவர்களே, தேவநாதன் என்பவர் பெயரில் நோட்டீஸ் போடப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் நன்றாக நடந்து கொள்வார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். அவர்கள் நன்றாக நடந்துகொள்ளவேண்டும், நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. நான்கூட சந்தேகப்பட்டேன், அப்படி இருக்காது என்று.

நான் ஒரு அழைப்பைப் பார்த்தேன் சமீபத்தில். கார்ப்பரேஷன் கமிஷனர் அழைப்பு விடுத்திருக்கிறார். எல்லோரும் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கவேண்டும் என்று அழைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேதி 6--1--1970 ஒருவர் தலைமையில், ஒருவர் முன்னிலையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் ஒருவர், திரு. சாதிக் பாட்சா என்று நினைக்கிறேன், திறப்பு விழா நடத்தி வைக்கப்போகிறார். இடம் கிருஷ்ணாம்பேட்டை விழா-ஈமச் சடங்கு நிலையத் திறப்பு. அமைச்சர் அவர்களை நல்ல சோஷலிசவாதி என்று பாராட்டுகிறேன். எல்லோருக்கும் கடைசியில் அந்த 6 அடி மண்தான் சொந்தம் என்ற கருத்தில் அந்தத் திறப்பு விழாவுக்கு அமைச்சர் சென்றிருக்கிறார் போலும்! ஆனால், எனக்கு இருக்கிற கவலையெல்லாம் திறப்பு விழாவின்போது கல்லில் பெயரை செதுக்கி வைப்பார்களே என்பதுதான். அதைப் பார்க்கும் பொழுது மக்கள் தப்பு அபிப்பிராயம் கொள்ளக்கூடாதே என்பதுதான் என்னுடைய கவலையெல்லாம் . . . .



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பொது மக்களுக்குச் செய்துகொடுக்கபடுகின்ற ஒரு வசதி அது என்பதை உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா?

**திரு. ப. மகாதேவன் :** பொதுமக்களுக்குச் செய்துகொடுக்கப்படுகிற வசதிதான். அமைச்சர் உண்மையான சோஷலிசவாதி என்பதை நான் முன்னாலேயே சொன்னேன். வேறு ஒன்றும் தப்பாகச் சொல்லவில்லை.

திறப்பு விழாக்களுக்கு அமைச்சர்கள் செல்லும்பொழுது, மக்களிடையே அமைச்சர்களிடையே உள்ள கொள்கை குழப்பம் உண்டாகிறது. ஏனென்றால், முதல் அமைச்சர் அவர்கள் 'கடவுளை கற்பித்தவன் முட்டாள்' என்று அடியில் பொறிக்கப்பட்டிருக்கிற பெரியார் அவர்களுடைய சிலையையும் திறந்து வைக்கிறார். பெரியார் அவர்களுடைய சிலையைத் திறந்து வைக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. மயிலாப்பூர் கோவில் தெப்பக் குளத்தைச் செப்பனிடும் வேலையையும் துவக்கி வைக்கிறார். பெரியார் சிலையைத் திறந்தது பற்றி யாராவது கேட்பார்களோ என்னவோ, என்னவோ என்று, அதற்குப் பிராயச்சித்தமாகவோ என்னவோ, திருவாரூர் தேருக்கு ரூ. 2½ லட்சம் அல்லவா கொடுக்க முன்வந்திருக்கிறார் . . .

* **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்திரிகையில் வந்ததையெல்லாம் வைத்துப் பேசிக்கொண்டிருக்கிறார். பட்ஜெட்டைப்பற்றிப் பேசவில்லை. திருவாரூர் தேரைச் செப்பனிட்டு ஓட்டுவதற்காக அரசாங்கம் கஜானாவிலிருந்து எந்தப் பணத்தையும் எடுத்துக்கொடுக்கவில்லை. பத்திரிகையில் வந்தது தவறான செய்தி, கருணாநிதி ரூ. 2½ லட்சத்தை முதல் அமைச்சர் நிதியிலிருந்தோ அல்லது சர்க்கார் கஜானாவிலிருந்தோ எடுத்துக்கொடுத்துவிடவில்லை. 'டெம்பில் பண்டு' என்ற ஒரு நிதி இருக்கிறது. அதற்குரிய அதிகாரிகள், கமிஷனர், அந்தப் பணத்தைக் கொடுக்க அனுமதித்திருக்கிறார். அரசாங்கத்திலிருந்து தனியாக எந்தப் பணமும் தரப்படவில்லை.

**திரு. ப. மகாதேவன் :** பணம் கொடுத்ததற்காகச் சொல்லவில்லை. மக்களிடையே கொள்கைக் குழப்பம் ஏற்படுகிறது என்பதைத் தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'ஏரோட்டும் தோழர்கள் ஏங்கி நிற்க, தேரோட்டம் உனக்கு எதற்கு தியாகராஜா?' என்று அன்று பேசினார்கள். இன்று திருவாரூர் தேர் ஓடுவதற்கு ரூ. 2½ லட்சம் கொடுக்க முன்வந்திருக்கிறார், பெரியார் சிலையைத் திறந்ததற்குக் கழுவாயாக . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 'ஏரோட்டும் தோழர்கள் ஏங்கி நிற்க தேரோட்டம் உனக்கு எதற்கு தியாகராஜா?' என்று இப்பொழுதும் தான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவர் இல்லாத காரணத்தினாலோ அல்லது இருக்கிற காரணத்தினாலோ, தெரியா

[1970 பிப்ரவரி 23

**திரு. ப. மகாதேவன் :** அதில் உள்ள மற்ற விஷயங்களையும் எங்களால் தெரிந்துகொண்டுவிட முடியும். ஆனால், அவ்வளவு அவசரமாகக் கிடைத்துவிடாது. திரு. பத்மநாபன் என்பவருக்கு 6 ஏக்கர், 108 கிரளண்ட்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதா? திரு. சித்தன் அவர்கள் ரூ. 10 லட்சம் பெறும் என்று சொன்னார். அமைச்சர் ரூ. 9 லட்சம் என்று சொன்னார். ரூ. 20 லட்சம் பெறும் என்று சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பத்மநாபன் என்பவருக்கு 6 ஏக்கர் நிலம் குத்தகைக்கோ, விலைக்கோ கொடுக்கப்படவில்லை.

**திரு. ப. மகாதேவன் :** இடத்தைக் கூடச் சொல்கிறேன். அடையாறில் சத்யா ஸ்டுடியோவுக்குப் பக்கத்தில் பத்மநாபன் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** முதல் அமைச்சர் அவர்கள் அப்படிக் கொடுக்கப்படவில்லை என்று சொன்ன பிறகு அந்தப் பிரச்சினையையே மேற்கொண்டு சொல்லக் கூடாது.

**திரு. ப. மகாதேவன் :** சட்டமன்ற உறுப்பினராக இருக்கக் கூடிய திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களுடைய பி.ஏ. அல்லது எலக்டிரிஷியன் என்று சொல்லக்கூடிய பத்மநாபன் என்பவருக்கு

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த பத்மநாபனுக்கும் கொடுக்கப்படவில்லை. மேலே விவரம் இருந்தால் உறுப்பினர் அவர்கள் சொல்லலாம்.

**திரு. ப. மகாதேவன் :** இந்த பட்ஜெட் யாருக்கும் திருப்தி அளிக்கவில்லை, மக்கள் தலையிலே மிகவும் வரிப்பளு சுமத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மேற்கொண்டு பேசுகிற உறுப்பினர்கள் 10 நிமிஷங்களுக்கு அதிகப்படியாகப் பேச வேண்டாம் என்று வேண்டிக் கொள்கிறேன்.

*** திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைத் தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அவைமுன் வைத்திருப்பதைப் பாராட்டுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கை ஆண்டுதோறும் வைக்கப்படும் அறிக்கை என்பது மட்டுமல்லாமல், ஓர் உண்மையான சோஷலிச சமுதாயத்தில் அடிப்படையில் கொள்கைத் திட்டமாக அமைந்திருப்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். மக்கள் ஆட்சியில், மக்களுக்காக விளக்கப்பட்டுள்ள பொருளாதாரக் கொள்கைத் திட்டம் என்றே இந்த அறிக்கையை எடுத்துக் கூறினால், அது மிகையாகாது. அமைந்த ஆண்டு வெளியிடப்பட்டிருக்கும் நிதிநிலை அறிக்கையை ஒன்று வகையாகப் பிரிக்கலாம். ஒன்று நல்ல திட்டங்களுக்கு, நிதிகள் ஒதுக்குவதும், அரசுத் துறையிலும் மற்ற வகையிலும்



1970 பிப்ரவரி 28] [திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்[

பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு நிவாரணம் கொடுப்பதும், புதிய வரிகளை விதிப்பதும் என்று பிரித்துப் பார்க்கலாம். அப்படிப் பார்க்கும்போது, இது கடந்த மூன்று ஆண்டுகாலமாக அரசுப் பொறுப்பில் இருக்கும் கழகத்தின் நான்காவது நிதிநிலை அறிக்கை என்பதைப் பார்த்தோமானால், அது உண்மையாக ஒரு சோஷலிச சமுதாயத் திட்டத்தை உருவாக்கப் பலவிதமான கொள்கைகள் சேர்க்கப்பட்டுள்ள ஒன்று என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தத் திட்டத்தில் வேளாண்மைத் துறைக்கும், கல்வித் துறைக்கும், தொழில் துறைக்கும், அதிகமாக நிதிகளை ஒதுக்கி இருப்பதைப் பாராட்ட வேண்டும். கடந்த ஆண்டு இதே மன்றத்தில், இப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேசும்போது வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கியிருப்பதைப் பாராட்டி, அடுத்த ஆண்டு இன்னும் அதிகமாக ஒதுக்க உள்ளதாகவும், அதனால் நல்ல நல்ல வளர்ச்சியை வேளாண்மைத் துறை அடையுமென்றும் மிகத் தெளிவாக சொல்லியிருந்தார்கள். அதேபோல வேளாண்மைத் துறைக்கு மிக அதிகமாகத் தொகையை ஒதுக்கியிருப்பதோடு மட்டுமல்லாமல், இந்த ஆண்டு நல்ல வகையில் இயற்கை ஒத்துழைத்தாலும், வேளாண்மைத்துறையில் உணவு உற்பத்தி அதிகமாக ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக வேளாண்மைத் துறைக்கு அதிகமான கவனம் செலுத்தி, அதற்காகப் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி, அதன் மூலம் அதிகமாக வேளாண்மை உற்பத்தி கிடைத்திருப்பதைக் கண்டு, மக்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

கல்வித் துறைக்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டிருப்பது குறிப்பிட்டுச் சொல்லத்தக்க ஒன்று. 1967 பொதுத் தேர்தலுக்கு முன்னால், காங்கிரஸ் கட்சியின் பெருந் தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களித்தால், வோட்டுப் போட்டால், அவர்கள் கல்லூரிகளை மூடிவிடுவார்கள், உயர் நிலைப் பள்ளிகளை மூடிவிடுவார்கள் என்றெல்லாம் மக்களிடத்தில் பிரசாரம் செய்தார்கள். நாம் பார்ப்போம். அந்தக் காலத்தில், 1966-67-ம், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அவர்கள் கல்விக்கு ஒதுக்கியிருந்த தொகை, ரூ. 4,386 லட்சம்; ஆனால், கடந்த மூன்று ஆண்டு காலத்தில் படிப்படியாகத் தொகையை அதிகரித்து, இந்த ஆண்டு ரூ. 6,683 லட்சம் ஒதுக்கியிருக்கிறது, இந்த அரசு. காங்கிரஸ் ஆட்சியில் ஒதுக்கிய தொகையைவிட ரூ. 23 கோடி அதிகமாக ஒதுக்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த மூன்று ஆண்டுக் காலத்தில் பல ஊர்களில் பல மாவட்டங்களில், புதிய புதிய கல்லூரிகள், ஆண்கள் கல்லூரிகளும், பெண்கள் கல்லூரிகளும், தனிப்பட்டோர் கல்லூரிகளும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதேபோல, பல இடங்களில், பல உயர்நிலைப் பள்ளிகளும் நிறுவப்பட்டிருக்கின்றன. பல பழைய கல்லூரிகளில் அதிகமாக இடங்களைக் கொடுக்க வசதிகள்

செய்யப்பட்டிருக்கின்றன. மருத்துவக் கல்லூரியிலும் அதிகமாக இடங்கள் வேண்டும் என்று வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்படிக் கல்விக்காக அதிகமாகச் செலவழித்ததோடு மட்டுமல்லாமல், செகண்டரி, பி.டி. போன்ற ஆசிரியர்களுக்கு, 5970 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கக்கூடிய வகையில் கல்வித் திட்டத்தை அமைத்திருப்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த அளவிற்கு அபிவிருத்தி செய்திருக்கக்கூடிய அரசை, இவர்களுக்கு வாக்களித்தால் படிப்பு வராது, கல்லூரிகளை மூடிவிடுவார்கள் என்ற வாதத்தை எந்த அளவு பொய்யாக்கியிருக்கிறோம் என்பதை அரசில் இருக்கும் நாங்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு, வேளாண்மைத் துறைக்கு என்று பார்க்கும்போது, எந்த அளவிற்கு ஆர்வத்தைக் காட்டியிருக்கிறோம் என்பதையும் யோசிக்க வேண்டும். 1966–67-ல் மிகு பயன் தரும் விதைகள் 5.27 இலட்சம் ஏக்கர்களில் பயிர் செய்யப்பட்டிருந்தது. 1968–69-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 17.3 லட்சம் ஏக்கர் பயிர் செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். 1970-71-ல் 24.0 லட்சம் ஏக்கரில் பயிர் செய்யத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், நைட்ரஜன் உரம் சம்பந்தப்பட்ட வரையில், 1966-67-ல் 85,000 டன் பயன்படுத்தப்பட்டது; 1969-70-ல் 1,33,000 டன் உரம் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதோடு, விமானம் மூலம் பயிர்களுக்கு உரம் தெளிப்பதில், 1967-ல் 28,000 ஏக்கர்களுக்கும், 1969-70-ல் இரண்டு லட்சம் எக்கர்களுக்கும் தெளிக்கப்பட்டிருக்கிறது. 1970-71-ல் 10 லட்சம் ஏக்கர்களுக்கு விமானம் மூலம் மருந்து தெளிக்கத் திட்டம் உருவாக்கப்பட்டிருப்பதையும் அறிவித்திருக்கிறார்கள். இவ்வளவும் செய்ததால், இந்த ஆண்டு வேளாண்மை அதிகரித்து, தமிழ் நாட்டில் 4 கோடி மக்களும் மகிழ்ச்சியோடு திருப்தியோடு இருக்க, ரேஷனையும் நீக்கிவிட்டு இருப்பதைத் தமிழ் நாட்டு மக்கள் வரவேற்று இருக்கிறார்கள். எந்த மாவட்டத்திலிருந்தும், எந்த மாவட்டத்திற்கும் நெல்லை, அரிசியைத் கொண்டு போகலாம், விற்பனை செய்யலாம் என்கிற திட்டத்தையும் கடந்த ஒரு மாதகாலமாகத் தமிழக அரசு ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம், கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக வேளாண்மை பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த மாண்புமிகு மறைந்த திரு. கோவிந்தசாமி அவர்கள் அல்லும் பகலும், ஓயாமலும் அயராமலும் உழைத்து, கிராமங்களுக்குச் சென்று, அவர்களுடைய குறைகளைக் கேட்டு, தேவையான நேரத்தில், தேவையான இடத்தில், தேவையான அளவு உரத்தைக் கொடுத்து, விவசாயிகளை ஊக்குவித்ததின் காரணமாகத்தான் என்பதை நாம் எல்லோரும் உணருகிறோம். அதன் காரணமாக இன்றைய தினம் நல்ல விளைச்சலும் நல்ல நிலை



மையும் இருப்பதைக் கண்டு தமிழக மக்கள் நான்கு கோடிப் பேர்களும் இதை வரவேற்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், வேளாண்மைத் துறைக்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த அளவில் கடன்கள் கொடுத்திருக்கிறது என்று பார்த்தால், குறுகிய காலக் கடன், நடுத்தரக் கடன் இவற்றைப் பார்த்தால், 1966-67-ல் ரூ. 31.44 கோடி மட்டும் கொடுக்கப்பட்டிருந்தது. 1970-71-க்கு ரூ. 62.50 கோடி ஒதுக்கியிருப்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். நீண்ட காலக் கடனுக்கு காங்கிரஸ் ஆட்சியில் கொடுத்தது ரூ. 4.27 லட்சம்தான். ஆனால் 1970-71-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒதுக்கியிருப்பது ரூ. 16 கோடி. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் விவசாயிகளுக்கு டிராக்டர்கள் கொடுத்தது 209 தான். கடந்த மூன்று ஆண்டுகளில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், விவசாயத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் டிராக்டர்கள் 1,368 என்பதையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். கடந்த 15 ஆண்டுக் காலமாகக் காங்கிரஸ் ஆட்சியில் பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்புக்கள் கொடுத்தது. 2.9 லட்சம் பம்பு செட்டுகளுக்கு; ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கடந்த 3 ஆண்டுக் காலத்தில் 1.7 லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுத்திருப்பதைப் பெருமையாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இவ்வளவும் கடந்த மூன்று ஆண்டுக் கழக ஆட்சிக் காலத்தில் நடந்திருக்கிறது.

இவற்றின் காரணமாக இன்றைய தினம், அரிசிப் பஞ்சம், நெல் பஞ்சம் எல்லாம் நீங்கி, விலைவாசிகள் குறைந்து, கோவை மாவட்டத்திலிருந்து சேலம் மாவட்டத்திற்கு அரிசி, தானியங்கள் வரும் நிலை உருவாகியிருப்பதைப் பெருமையோடு சொல்ல விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல், இந்த வரவு-செலவு அறிக்கையில், வேளாண்மைக்கு ஒதுக்கியிருக்கும் தொகை ரூ. 72 கோடி. இதற்காக நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ரூ. 72 கோடியில், 25,500 கிணறுகள், 13,200 குழாய்க் கிணறுகள், 15,000 வடிமுனைக் குழாய்கள்; 3;000 டிராக்டர்கள் கொடுக்க, விவசாயத்தை வளர்க்க இந்த ரூ. 72 கோடி ஒதுக்கியிருப்பதை நாம் எல்லோரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். நாடு பூராவும் வேளாண்மைத் துறையில் இருக்கும் மக்கள் எல்லோரும் இந்த ஆட்சியைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அதே நேரத்தில், இந்த அரசு கடந்த மூன்று ஆண்டுக் காலத்தில், மின்சாரத் துறையில் எவ்வளவு அக்கறை காட்டியிருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும்.

1967-68-ம் ஆண்டுத் துவக்கத்தில் 25,022 கிராமங்களுக்குத்தான் மின்சார விளக்குகள் போடப்பட்டிருந்தன. 1970-71-ம் ஆண்டு இறுதிக்குள் 42,387 கிராமங்களுக்கு மின்சார விளக்குகள் அமைத்

துத் தருவதற்கான திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். காங்கிரஸ ஆட்சிக் காலத்தில் மின்சாரத்திற்காக, 8.26 கோடி ரூபாய் மட்டும் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனல் நாங்கள் 1970-71-ல் கழக ஆட்சியில் 21.5 கோடி ரூபாய் அளவு மின்சாரத் திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிறோம்.

அது மட்டுமல்ல, இந்த ஆண்டு இறுதிக்குள் 2,295 மெகவாட் அளவுக்கு மின்சார உற்பத்தியை உயர்த்த வழி செய்யப்படுகிறது. இது நாட்டிலே ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சிக்கு அறிகுறியாக விளங்குகிறது. வேளாண்மைத் தொழில் முன்னேற்றத்திற்கு அறிகுறியாகத்தான் இது விளங்குகிறது. மற்றும், சாலைகள் பராமரிப்பு, பொதுச் சுகாதாரம் மற்றும் மக்களுடைய முன்னேற்றத்திற்கான அபிவிருத்தி வேலைகள் போன்றவற்றில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அதிக அக்கறை காட்டி வந்திருக்கிறது.

இன்னென்றையும் சொல்ல விரும்புகிறேன். நீண்ட நாட்களாக, அதாவது இருபது ஆண்டுகளாக தமிழக சட்டமன்றத்தில் ஏற்படாத ஒரு புதிய சம்பிரதாயத்தை, ஒரு புதிய திட்டத்தை நமது கலைஞர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். பின்தங்கியவர்களின் நலனைப் பாதுகாக்கவும், பின்தங்கியவர்களை முன்னேற்றுவதற்கும் ஒரு தனி இலாகாவை ஏற்படுத்தி, அதற்கென ஒரு தனி டைரக்டரைப் போட்டு, ஒரு தனிக் குழுவையும் அமைத்து, அதற்கென ஒரு தனி அமைச்சரையும் போட்டிருக்கிறார்கள். பின்தங்கியவர்களின் நலனுக்காக 5.19 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நாம் இதைப் பாராட்டுகிறோம், இப்படிச் செய்ததற்காக நல்லவர்கள், படித்தவர்கள் எல்லோரும் கட்சிப் பாகுபாடு இல்லாமல் முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறார்கள். இந்த இலாக்கா இந்த ஆண்டு இந்த மாநிலத்தில் 22 ஹாஸ்டல்களைப் புதியதாக ஏற்படுத்தவும், தனியார் நடத்தும் 20 ஹாஸ்டல்களை எடுத்துக் கொள்ளவும், தக்க ஏற்பாடுகளை அரசு செய்திருப்பதை நாம் அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இது அனைவரும் பெருமை கொள்ளும் திட்டமாகும்.

அதுமட்டுமல்ல, இந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையில் புதுமையான திட்டத்தை உருவாக்கிக் காட்டியிருக்கிறோம். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இந்த இலாகாவுக்கென்று ஒரு நிதியை ஒதுக்கியதில்லை. மற்றும் கிராம நல சமூகத் திட்டம் என்பதற்காக 1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்' என்றுதான் பழமொழி சொல்வார்கள். ஆனல் 'ஒரே கல்லில் மூன்று மாங்காய்' என்று சொல்லத்தக்க விதத்தில் கிராமங்களிடையே இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துதல், பள்ளிக் கூடங்கள் கட்டுதல், நல்ல குடிநீர் வழங்குதல் போன்றவற்றைச் செய்து வருகிறோம். இதற்காகத்தான் அரசு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. கிராமங்களில் நல்ல வசதிகளை ஏற்படுத்துதல்,





கிராமங்களிலே வேலை வாய்ப்பு ஏற்படுத்துதல், சேரிப் பகுதிகளின் முன்னேற்றம் என்ற வகையில் ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, நம் மாநிலத்தில் கிராமங்களிலே இருக்கக் கூடிய சாலை வசதிகள், மக்களுடைய முன்னேற்றத்திற்கான திட் டங்கள் ஆகியவற்றைப் பார்க்கும்போது, இந்தியாவில் இருக்கக் கூடிய பல்வேறு மாநிலங்களுடைய முன்னேற்றத்தைக் காட்டிலும், நம் மாநிலத்தின் முன்னேற்றம்தான் அதிகம் என்பதற்கான புள்ளி விவரத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கிராமங்களில் எங் கெங்கு சாலை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்த்தால், யூனியன் டெரிடரி என்று சொல்லக்கூடிய பகுதிகளில் 6 சதவிகிதம் அளவுதான் வசதிகள் செய்துதரப்பட் டிருக்கின்றன. இன்னும் அமைக்கப்பட வேண்டியது 94 சத விகிதம். மற்றும் மத்தியப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருப்பது 10 சதவிகிதம்; இன்னும் அமைக்கப்பட வேண்டியது 90 சத விகிதம்; ஒரிசா மாநிலத்தில் அமைக்கப்பட்டிருப்பது 14 சத விகிதம்; இன்னும் அமைக்கப்பட வேண்டியிருப்பது 86 சதவிகிதம்; பீகார் மாநிலத்தில் இதுவரை அமைக்கப்பட்டிருப்பது முப்பது சதவிகிதம், இன்னும் பாக்கி இருப்பது 70 சதவிகிதம். அஸ்ஸாம் மாநிலத்தில் அமைக்கப்பட்டிருப்பது 37 சதவிகிதம்; இன்னும் அமைக்கப்பட இருப்பது 63 சதவிகிதம். அண்டையிலுள்ள ஆந்திர மாநிலத்தில் அமைக்கப்பட்டிருப்பது 37 சதவிகிதம், இன்னும் அமைக்கப்பட வேண்டியிருப்பது 63 சதவிகிதம். மேற்கு வங்காளத்திலே அமைக்கப்பட்டிருப்பது 40 சதவிகிதம்; இன்னும் அமைக்கப்பட வேண்டியது 60 சதவிகிதம். குஜராத் மாநிலத்தில் அமைக்கப்பட்டிருப்பது 18 சதவிகிதம்; இன்னும் பாக்கியிருப்பது 82 சதவிகிதம். உத்திரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருப்பது 23 சதவிகிதம், இன்னும் அமைக்கப்பட வேண்டியிருப்பது 77 சத விகிதம். ராஜஸ்தான் மாநிலத்தை எடுத்துக்கொண்டால் 22 சத விகிதம்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அமைக்கப்பட வேண்டியது 78 சதவிகிதம். மகாராஷ்டிரத்தில் இதுவரை அமைக் கப்பட்டிருப்பது 24 சதவிகிதம், இன்னும் அமைக்கப்பட வேண்டியது 76 சதவிகிதம், பஞ்சாப் மாநிலத்தில் அமைக்கப்பட் டிருப்பது 28 சதவிகிதம்; இன்னும் அமைக்கப்பட வேண்டியது 72 சதவிகிதமாகும். ஆனல் தமிழ் நாட்டை எடுத்துக் கொண்டால், இங்கு அமைக்கப்பட்டிருப்பது 58 சதவிகிதமாகும். இன்னும் அமைக்கப்பட வேண்டியது 42 சதவிகிதம்தான். இவ்வாறாக தமிழ கத்தில்தான் அதிக அளவில் சாலை வசதிகள் செய்து கொடுக்கப்பட் டிருக்கின்றன என்பது நன்கு விளங்கும். கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த அளவு கவனம் செலுத்தி வந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற் காகத்தான் இந்த விளக்கத்தைக் கூறினேன். அண்மையில் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர் எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள், நகர் மக்களுடைய நல்வாழ்விற்காக,

கிராம மக்களுடைய தலையில் கல்லைப் போடுகிறது' என்ற வகையில் சொல்லியிருக்கிறார்கள். கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் கிராமப் பகுதிகளில் ஏற்பட்டிருக்கின்ற அபிவிருத்தி வேலைகளைப் பார்க்கும்போது, இந்தியாவில் இருக்கக்கூடிய மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில்தான் அதிக வசதி செய்து தரப்பட்டிருக்கின்றது என்ற உண்மை நன்கு விளங்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அரசு பணியாளர்களுக்காகப் பத்து ரூபாய் இடைக்கால நிவாரணமாக, சிறப்புப் படியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த அரசிலும் இப்படிச் சிறப்புப் படி கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இரண்டாவது சம்பளக் கமிஷன் அமைக்கப்பட்டு, அதன் விவர அறிக்கை வருவதற்குள்ளாக இடைக் காலத்தில் சிறப்பு ஊதியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் கூறுகிற மாதிரி இது பிச்சைக் காசு இல்லை. நேற்றைய தினம் கேரள மாநில சட்டமன்றத்தில் வரவு செலவு அறிக்கை வைக்கப்பட்டது. அந்த அறிக்கையில் கேரள ராஜ்யத்திலுள்ள என்.ஜி.ஓ.களுக்கு ஏதாவது சலுகை அளிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அதில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை என்பதை இங்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். என்.ஜி.ஓ.-க்களின் குறைகளை அகற்ற நாம் சிறப்பு ஊதியம் அளித்திருக்கிறோம். இந்த அரசு என்.ஜி.ஓ.-க்களுடைய அரசு, இது ஏழை மக்களுடைய அரசு, இது பாட்டாளி மக்களுடைய அரசு, இது தொழிலாளர்களுடைய அரசு என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்குத் தாராளமாக வேண்டியதைச் செய்யும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும் ஆசிரியர்களுக்கும் இந்த அரசு வகை செய்திருக்கிறது. தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் இந்த வரவு செலவு அறிக்கையில் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆசிரியர் பெருமக்கள் மருத்துவ மனைகளில் இலவச சிகிச்சை பெற வகை செய்திருக்கிறது. மற்றும் வீட்டு வாடகைப்படி, விழாக் கடன், திருமணக் கடன் முதலிய சலுகைகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன. மேலும், மலைப் பகுதிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் குளிர்காலப் படி போன்றவற்றையும் கொடுத்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

தமிழக அரசை மக்கள் ஆதரிக்கிறார்கள். திராவிட முன்னேற்ற கழக அரசை மக்கள் ஆதரிக்கிறார்கள். எந்தத் தேர்தல் வந்தாலும்—இடைக்காலத் தேர்தலாக இருந்தாலும், நகரசபைத் தேர்தலாக இருந்தாலும்—மக்கள் இந்த ஆட்சியை ஆதரிக்கிறார்கள். இந்த அரசு பெயருக்கு முன்னேற்றக் கழகம் என்று இருப்பதைப் போல, செயல் முறையிலும் முன்னேற்றகரமான பணிகளை கட்சி பாகுபாடு இல்லாமல் செய்து வருகிறது. மாற்றாரை மதிப்பது, பெருந்தன்மை, கண்ணியம், விட்டுக் கொடுத்தல், சகிப்புத் தன்மை, நல்ல உள்ளம், பண்பாடு முதலிய நற்குணங்கள் அனைத்தும் பொருந்திய பேரறிஞர் அண்ணா அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்





திலே, இன்றைக்கு நமது முதலமைச்சராக கலைஞர் அவர்கள் உட்கார்ந்திருப்பதுதான் இதற்குக் காரணமாகும். கலைஞர் அவர்கள் கடந்த ஓராண்டுக் காலமாக முதலமைச்சராக இருந்து நல்ல பலத் திட்டங்களைச் செய்து வருகிறார்கள். அப்படி என்ன செய்துவிட்டார்கள் என்று காங்கிரஸ்காரர்கள் கேட்பார்களேயானால், அவர்களுக்கு இந்த விளக்கத்தைக் கொடுக்க விரும்புகிறேன். தேசியக் கவி என்று போற்றப்படும் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு 250 ரூபாய் என்ற அளவில் அவர் வாழ்நாள் முழுவதும் உதவித் தொகை அளித்துவர வகை செய்திருக்கிறது. மற்றும் பரலி சு. நெல்லையப்பர் என்ற தியாகிக்கு மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் என்ற அளவில் நிதி உதவியை திராவிட முன்னேற்றக் கழக அரசு அளித்து வருகிறது. தில்லையாடியில் வள்ளியம்மை நகர் ஒன்று அமைக்க 5 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மக்கள் உரிமைக்காகத் தென்னாப்பிரிக்காவிலே போராட்டம் செய்து தன்னுடைய இன்னுயிரை மாய்த்துக் கொண்ட அந்தத் தியாகியின் நினைவுச் சின்னமாகத்தான் தில்லையாடி வள்ளியம்மை நகர் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது மட்டுமல்ல, 'தமிழ்நாடு' என்று இந்த மாநிலத்திற்குப் பெயரிடப்பட வேண்டுமென்பதற்காக விருதுநகரில் 77 நாட்கள் வரை உண்ணாவிரதம் இருந்து தன் இன்னுயிரை மாய்த்துக் கொண்ட காங்கிரஸ் தியாகி சங்கரலிங்க நாடார் அவர்களுடைய குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் என்ற அளவில் தமிழக அரசு உதவியளிக்க வகை செய்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த அளவிற்குப் பரந்த நோக்கத்தோடு, நல்ல உள்ளத்தோடு நடந்து கொள்கிறது என்பதை நாம் அனைவரும் ஒத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இதையெல்லாம் நான் சொல்லும்போது, 'எங்களுக்கு என்ன செய்து விட்டீர்கள்?' என்று காங்கிரஸ் எம்.எல்.ஏ.-க்கள் கேட்கலாம். அவர்களுக்கு இந்த அரசு பல காரியங்களைச் செய்திருக்கிறது என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மதிக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்த அரசு பல சலுகைகளை அளித்திருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவருக்கு ஒரு கார், அவருக்கு ஒரு ப்யூன், ஒரு பி.ஏ. அவருடைய வீட்டில் ஃபர்னிச்சர், தொலைபேசி போன்ற வசதிகளை இந்தச் சர்க்கார் அளித்திருக்கிறது. இந்த வசதிகளையெல்லாம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்களா என்று நீங்கள் கேட்கலாம். சர்க்கார் அளிக்கும் வசதிகளை ஏற்றுக்கொள்வதும், ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதும், அவருடைய விருப்பம். எதிர்க் கட்சித் தலைவருக்கு உரிய வசதிகளையெல்லாம் அரசு செய்து கொடுக்கிறது. ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதும் அவருடைய விருப்பத்தைப் பொறுத்தது. இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசுதான், கடந்த இருபதாண்டு காலமாக நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்தபோது நாட்டை ஆண்டு வந்த காங்கிரஸ் கட்சி சிறிதும் சிந்திக்க முடியாத, சிந்தித்துச் செய்ய எண்ணாத, எண்ண முடியாத, செய்ய முடியாத காரியங்களை

[திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்] [1970 பிப்ரவரி 28

எல்லாம் செய்திருக்கிறது என்றால், நாட்டு மக்கள் எங்களைப் பாராட்டுகிறார்கள் என்றால் என்ன தவறு? கிராமங்களில் உள்ளவர்கள் எல்லாம் முன்னேற்றக் கழகத்தைப் பாராட்டுகிறார்கள். நகரங்களில் உள்ளவர்கள் எல்லாம் முன்னேற்றக் கழகத்தைப் பாராட்டுகிறார்கள். இடைத் தேர்தல் வருகிறது என்றால் முன்னேற்றக் கழகமே வா என்று கூவி அழைக்கிறார்கள். இவற்றுக்கெல்லாம் காரணம் என்ன? நாங்கள் செய்திருக்கிற நல்ல காரியங்கள்தான். செய்து கொண்டு வருகிற நல்ல காரியங்கள்தான். செய்ய நினைத்திருக்கிற நல்ல காரியங்கள்தான்.

இது மட்டுமா? கதர்த் திட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள். காங்கிரஸ்காரர்கள் ஆண்ட காலத்தில் வருடத்திற்கு 1½ கோடி ரூபாய்க்கு மேல் விற்றது இல்லை. புள்ளி விவரங்கள் இருக்கின்றன. எங்களுக்குக் கதர் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு அந்தத் துறையைப் படிப்படியாக வளர்த்து இந்த ஆண்டு 3 கோடிக்கு கதர் விற்பனையாகியிருக்கிறது என்றால் எந்த அளவுக்கு இந்த ஆட்சி ஜனநாயக அடிப்படையில் நேர்மையாக நடைபெற்று வருகிறது என்பதை நான் எடுத்துக் காட்டாமல் இருக்க முடியாது.

அது மட்டுமல்ல, தொழில்துறையில் பல முன்னேற்றங்களை முன்னேற்றக் கழக ஆட்சி கண்டிருக்கிறது. சேலம் இரும்பாலையை அமைத்தே தீருவோம் என்ற உறுதியில் இன்றைக்கு சேலம் கஞ்சமலை இரும்பாலைத் திட்டத்தின் முதல் கட்ட வேலை துவங்கப்பட்டு விட்டது. இதன்மூலம் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். மத்திய அரசும் இதற்குப் பச்சைக் கொடி காட்டி விட்டது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, நீண்ட காலமாக சேலம் மாவட்டத்திலிருந்து வந்து கொண்டிருக்கக்கூடிய குறை ஒன்றுண்டு. அங்கே ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். சேலம் மாவட்ட ரயில்வே செஸ் நிதியை எடுத்துக் கொண்டால் 35 லட்சத்திற்குச் சேர்ந்து அப்படியே இருக்கிறது. ஆகவே, அதைக் கொண்டு இந்த ஆண்டிலாவது அங்கே ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டும் என்கிற நல்ல கருத்தினை இந்த அரசு செயல்படுத்த முனைய வேண்டும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக நான் கூறிக்கொள்ள விரும்புவது எல்லாம், மிகவும் இக்கட்டான நேரத்தில் மிகவும் நல்ல முறையில் இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து நமது நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள் என்றால் நாம் அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. மத்திய சர்க்கார்—டெல்லி சர்க்கார்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக 140 கோடி என்று நமக்கு ஒதுக்கி விட்டு, அதில் 160 கோடியை பழைய கடன் கணக்கில் வசூலிக்க நினைக்கிறார்கள் என்கிறபோது நாம் ஒரு துர்ப்பாக்கியமான



1970 பிப்ரவரி 28] [திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்]

நிலைக்கு உந்தப்பட்டிருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. மத்திய சர்க்கார் உண்மையில் மார்வாடி வேலைதான் செய்கிறார்கள். உலக பாங்கு நிறுவனத்திடம் இருந்து மிகக் குறைந்த வட்டிக்கு நீண்டகால 40 ஆண்டு, 50 ஆண்டுத் தவணையில் கடன் பெற்று நமக்கு அதிக வட்டிக்கு குறைந்த காலத் தவணையில் கொடுக்கிறார்கள் என்றால் இது நியாயமான வேலையா, மார்வாடி வேலையா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்பாகவே நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் இவற்றை எல்லாம் ரீ-ஷெட்யூல் பண்ண வேண்டும் என்பதாகக் கேட்டார்கள். அப்போது நிதியமைச்சராக இருந்த மொரார்ஜி தேசாய் அவர்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை. இப்போது அந்தக் கொள்கையை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருப்பதன் மூலமாக, நமக்கு 50 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் இதற்காக இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

அடுத்தபடியாக, பொதுவாக, விசேஷமாக நாட்டு மக்கள் எல்லோரும் பாராட்டக்கூடிய நிலையில் இந்த அறிக்கையில் ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுதான் நிலச் சீர்திருத்தச் சட்டம். முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்ச வரம்பு என்பதை 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று குறைத்திருப்பது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விவசாயிகளின் தலையில் கையை வைத்துவிட்டதாகச் சொல்கிறார்கள். நான் கேட்க ஆசைப்படுகிறேன். அவர்கள் சோஷலிசம் சோஷலிசம் என்று பேசுகிறார்களே, எது சோஷலிசம்? தங்களுடைய தலைவர் தூங்குகிறபோது குறட்டை விட்டார் என்றால் அதைக்கூட சோஷலிச பாணியில் இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள முற்படுகிற அவர்கள், நில உச்சவரம்பை 15 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைத்திருப்பதை எதிர்க்கிறார்
என்றால் அவர்கள் மறைமுகமாக டாட்டாக்களுக்கும், பிர
களுக்கும் கையாட்களாக இருக்க நினைக்கிறார்களே தவிர, திருக்
யாக நாட்டு மக்கள் நலம் பெற நினைக்கவில்லை என்பதைத் வியா
கொள்ளலாம். இன்று இந்த அரசு செய்கின்ற த்திற்கு
நாட்டு மக்கள் வரவேற்கிறார்கள். அவர்கள்
ல போட்டு
அன்றைக்குக் காங்கிரஸ்காரர்கள் உச்சவரம்பு நம்முடைய
போவதாக அடிக்கடி சொல்லி, நிலச்சுவான்தா வார்கள். மல
தங்கள் நிலங்களை எப்படி எப்படிப் பங்கிடு ப்படித் தேனைப்
வேண்டுமோ அப்படிப் பங்கிடு செய்து கொண் ல வரியை வாங்க
டர்டு ஏக்கர் என்று வைத்தார்கள். தான் இந்த அரசாங்
இருந்த எங்கள் கட்சித் தலைவர் அண்ண தலைமைச்சர் அவர்கள்
'அது உச்ச வரம்புச் சட்டம் அல்ல, மிச ந்த வரி போடப்பட்டு
சொன்னார்கள். இப்போது திராவிட சோஷலிச சமதர்ம சமுதா
யாரிடத்தும் முன்கூட்டிச் சொல் ழகளின் பட்ஜெட், பாட்
பேசாது—நிதி நிலை அறிக்கையில் 1

[திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்] [1970 பிப்ரவரி 28

டாளிகளுடைய பட்ஜெட். இந்த பட்ஜெட்டினுல் நாட்டு மக்களுக்குக் குறையில்லை, தொல்லையில்லை. மக்கள் நல்ல முறையிலே இதை வரவேற்கிறார்கள். எனவே இரட்டை வேடமல்ல, ஏழையின் தலையிலே கல்லைத் தூக்கிப் போடுவதும் அல்ல. மாறாக, நான்கு கோடி மக்களுக்கும் பயன்தரக்கூடிய சர்வரோக நிவாரணி என்று சொல்வார்களே, அதைப்போன்று எல்லா வியாதிகளுக்கும் ஒரு மருந்து குணம் அளிப்பதைப் போன்று எல்லாத் தரப்பினருக்கும் இது நல்ல முறையிலே பயனளிக்கக்கூடியது என்பதைச் சொல்லிக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் உறுப்பினர் அவர்கள் பேசும் பொழுது என்னைப்பற்றிக் குறிப்பிட்டதால் சில விளக்கங்களைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பீகார், உத்திரப் பிரதேசம் என்று எல்லாம் சொன்னார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இவ்வளவு ரோடுகள் எல்லாம் போட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அது இப்பொழுது இவர்கள் போட்டார்களா அல்லது 1967-க்கு முன்னாலே போட்டார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தலையிலே கல்லைப் போட்டுவிட்டார்கள், விவசாயிகள் தலையிலே போட்டுவிட்டார்கள் என்று நான் சொன்னதாகச் சொன்னார்கள். எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில் நிலச் சீர்திருத்தத்தை நாங்கள் எதிர்ப்பவர்கள் அல்ல. உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்பதையும் அதே நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் சொன்னார்கள், பணக்காரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று. இப்பொழுது கொண்டுவந்திருக்கும்படியான சட்டத்தினால் நான் பாதிக்கப்படப் போவதில்லை. எனவே அதைப் பற்றி ஒன்றும் அவர்கள் நினைத்துக்கொள்ள வேண்டாம். முப்பது ஏக்கரிலிருந்து 15 ஏக்கராகக் குறைத்திருக்கிறார்கள். உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் பார்க்க வேண்டும். விவசாயிகள்தான் சுகமாக உட்கார்ந்துகொண்டிருக்கிறார்களா ? நகரத்திலே உள்ளவர்கள் கோடிக்கணக்கில் பெருகிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் கொண்டு வர வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆயிரம் ரூபாய் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவற்றையெல்லாம் நீங்கள் பேசும்பொழுது பேசிக் கொள்ளலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் சொல்லித்தான் ஆக வேண்டியிருக்கிறது . . .



1970 பிப்ரவரி 28]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்படியே ஒவ்வொருவருக்கும் பதில் சொல்லிக் கொண்டிருந்தால் முடிக்க முடியாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அமைச்சர்கள் குறுக்கிடுகிறார்கள். . :

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர்களுக்கு உரிமை இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எனக்கும் உரிமை இருக்கிறது. நிலச் சீர்திருத்தத்தை நாங்கள் பூரணமாக ஆதரிக்கிறோம். ஆனால், திடீரென்று குறைப்பதினாலே என்ன நிலைமை ஏற்படும் என்பதையும் பார்க்க வேண்டும். நகரச் சொத்துக்களுக்கும் அதைப் போல் வரம்புகள் ஏன் வைக்கக்கூடாது ? பதினைந்து ஏக்கரின் மூலம் என்ன வருமானம் வருமோ அதைவிட வருமானம் உள்ள உத்தியோகஸ்தர்களிடம் என்ன செய்யப் போகிறீர்கள் ? எல்லோருக்கும் அதுமாதிரி கொண்டுவர வேண்டுமென்பதைத்தான் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திடீரென்று இதைக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வருத்தப் பட்டார்கள். முன்புபோல் 10 ஆண்டுகளுக்கு முன்பே சொல்ல வேண்டியவர்களிடம் சொல்லிவிட்டுப் பிரிக்க வேண்டியதைப் பிரித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டுப் பிறகு சட்டம் கொண்டுவந்து, ஒன்றும் இல்லை என்று கடைசியில் அவர்கள் சொல்லியதைப் போல் செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படிக் கொண்டுவந்து கடைசியிலே ஒன்றும் இல்லை என்று சொல்லாத முறையிலேதான் திடீரென்று கொண்டுவந்திருக்கிறோம். பொதுவாக, இந்த மாதிரியான புரட்சித் திட்டங்கள் திடீரென்றுதான் வரும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** வாய்மையே வெல்லும் என்று முதலமைச்சர் அவர்கள் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். கொஞ்ச நாளைக்கு முன்னாலே நிலச் சீர்திருத்தம் கொண்டுவரப் போவதில்லை என்று சொன்னார்கள். இப்பொழுது கொண்டுவந்திருக்கிறார்கள். என்ன வாய்மையோ, என்ன சத்தியமோ தெரியவில்லை. திடீரென்று கொண்டு வந்தோம் என்கிறார்கள். விவசாயி மட்டும்தான் இளிச்சவாயனா ? எல்லோருக்கும் கொண்டுவருவதுதானே என்று சவால் விடுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கொண்டுவரப் போவதில்லை என்று அப்பொழுது சொன்னதற்குக் காரணம் திடீரென்று கொண்டுவருவதற்காகத்தான்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எல்லோருக்கும் அப்படிக் கொண்டு வாருங்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதை வரவேற்காமல் நிதியமைச்சர் அவர்கள் கொண்டுவந்த நிதிநிலை அறிக்கை ஒப்பாரி என்று பொதுவாகச் சொல்லியிருக்கிறார்கள். யாருக்கு ஒப்பாரி வைத்தார்கள் என்பது புரியவில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன்: பழைய காங்கிரஸ் ஆட்சி இருந்தபொழுது 600 பள்ளிகள் இப்பொழுது 700 பள்ளிகள், முன்பு 200 கோடி ரூபாய் வருமானம் இப்பொழுது 300 கோடி என்றெல்லாம் சொல்வது இருக்கிறதே அதுதான் ஒப்பாரி. இதோ எங்கள் திட்டம், இது எங்கள் அபிவிருத்தி என்று அவர்கள் சொல்லவில்லை. பம்புசெட் பற்றியெல்லாம் புள்ளி விவரம் கொடுத்தார்கள். நாங்கள் ஜெனரேஷன் செய்து வைத்துவிட்டோம். நீங்கள் இப்பொழுது கம்பியை நீட்டியிருக்கிறீர்கள். எல்லாம் எங்களுடைய திட்டமே தவிர வேறு ஒன்றும் இல்லை. எனவே ஒரு தரம் அல்ல ஆயிரம் தடவை ஒப்பாரி என்று சொல்வேன்.

*திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்கு நான் மகிழ்ச்சியுறுகிறேன். இந்த அறிக்கையிலே நிறைய விஷயங்கள் இருக்கின்றன. ஆனால் நான் ஒரு சில முக்கிய விஷயங்கள் மீது மாத்திரம் எனது கருத்துக்களைக் கூறி அமைவு பெறுகிறேன். முதற்கண் கோவை மாவட்டத்திலே வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவத் திட்டமிட்டு இருப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இப்படிப்பட்ட பல்கலைக் கழகம் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே வந்திருக்க வேண்டும். அங்கு ஒரு பெரிய வேளாண்மைக் கல்லூரியை நிறுவி 50 ஆண்டுகள் ஆகிவிட்டன என்று நினைக்கிறேன். இப்பொழுதாவது அந்தப் பல்கலைக் கழகம் துவக்கப்பட்டு, வரும் கல்வி ஆண்டிலிருந்தே அது நடைபெறும் சாத்தியக் கூறுகள் இருப்பதுபற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். கோவை நகரிலே பொறியியல் கல்லூரிகள் 3, கலைக் கல்லூரிகள் 5, மருத்துவக் கல்லூரி 1, ஆக இவைகளும், மாவட்டத்திலேயும் ஆறுக்கு மேற்பட்ட கல்லூரிகள் இருப்பதாலே சென்னை, மதுரை பல்கலைக் கழகங்களைப் போன்ற ஒரு பல்கலைக் கழகம் அங்கே ஏற்படுத்தப்பட வேண்டுமென்று மக்கள் ஆசைப்படுகிறார்கள். அதையும் விரைவிலே நிறைவேற்றுவதற்கு மாநில அரசு ஆவன செய்யும் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக சாலைகளைப் பொறுத்தவரையில் கிராம பஞ்சாயத்து ஒன்றியப்புச் சாலைகள், சர்க்காருடைய சாலைகள் இருந்தாலும், முக்கியத்துவம் நேஷனல் ஹைவேஸ் சாலைகளுக்குத்தான் கொடுக்கப்படுகிறது.

(திரு. ந. தருமலிங்கம்—தலைமை)

பெங்களூருக்கும் கோவைக்கும் இடையே கிருஷ்ணகிரி வழியாக 220 to 240 மைல் நீள சாலையை நேர் செய்ய, சீர் செய்ய 10 கோடி





ரூபாய் உலக பாங்கு கடன் கொடுக்கிறது. உலக பாங்கு கொடுப்பது கடன்தான். நாம் திருப்பி வட்டியுடன் கட்ட வேண்டும். பெங்களூருக்கும் கோவைக்கும் இடையிலுள்ள பாதை அகலமானது. நன்றாகவும் அமைந்துள்ளது. பெங்களூருக்கும் கோவைக்கும் இடையே நீளம் குறைவான சாலை வேண்டுமென்றால் 240 மைல் நீளத்தைக் குறைத்து 140 மைலுக்குள் ஒரு சாலை அமைக்க முடியும். பெங்களூருக்கும் மைசூருக்கும் இடையேயுள்ளது சீரான, நேரான பாதை. மைசூரிலிருந்து கோவை வருவது மாநில நெடுஞ்சாலை. அது சரியாக, அகலமாக அமைக்கப்படவில்லை. அதை எடுத்துச் சீர்படுத்தினால் செலவு மூன்றில் இரண்டு பங்கிற்கு மேல் ஆகாது.

பத்து கோடி ரூபாய் உலக பாங்கு கடன் கொடுக்கிறது. அந்தக் கடன் சாங்ஷன் ஆகிவிட்டதால் அது முடிந்துபோன விஷயம் என்று நெடுஞ்சாலைப் பொறியியல் துறையினர் நினைக்கிறார்கள். அது மானியம் அல்ல. உலக பாங்கியிடமிருந்து கடன்தான் வாங்குகிறோம். அப்படிக் கடனைப் பெற்று ஏற்கனவே நன்றாக இருக்கும் சாலையையே சீர்திருத்துவதைவிட, ஒரு மாநிலத்தையும் மற்றொரு மாநிலத்தையும் இணைக்கும் சாலையை, கோவை மாவட்டத்திலிருந்து மைசூர் மாநிலத்தை இணைக்கும் சாலையை, மலைப் பகுதியில் இயற்கை அழகைக் கண்டு செல்லக்கூடிய அந்தச் சாலையை அமைத்துக் கொடுப்பதன் மூலம் 80 மைல் குறுகிய பாதையாக அது அமைய முடியும். உலக பாங்கின் அனுமதி பெற்றே, மீதியாகும் 3, 4 கோடி அளவு தொகையைச் சீர் கெட்ட வேறொரு பாதைக்குப் பயன்படுத்தலாம்.

அடுத்தபடியாக, கிராமங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க குடிநீர், மகப்பேறு நிலையங்கள், பள்ளிக் கட்டடங்கள், இணைப்புச் சாலைகள் இவைகளுக்கே தொகை ஒதுக்கப்படுகிறது. கிராமங்கள் முன்னேற வேண்டுமென்றால், அரிசன மக்கள் முன்னேற வேண்டுமென்றால் இந்தச் சமுதாயத் திட்டங்கள் மட்டும் போதா. குடிசைத் தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் பரவலாக வளருவதற்கு ஆவன செய்ய வேண்டும். இப்போது கிராமங்களிலுள்ள இணைப்புச் சாலைகள் நல்ல முறையில் அமையவும் இல்லை. பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்துச் சாலைகள், பெரும்பாலானவை குண்டும் குழியும்தான்; அவைகளை நன்றாக அமைக்க வேண்டும். கிராமங்களிலே குடிசைத் தொழில்கள் வளருவதற்கு வேண்டிய திட்டங்களைத் தீட்ட வேண்டும். கிராமங்கள் வளர வேண்டுமென்றால், அங்கு கைத்தொழில்கள் வளர வேண்டும். சேலம் மாவட்டத்தில் உருக்காலை ஏற்படுவதன் மூலம் கஞ்சமலைப் பகுதி பெரிய நகரமாகலாம்; நெய்வேலி நிலக்கரியின் காரணமாக அந்தப் பகுதி பெருநகரமாகியிருப்பதைப்போல.

[திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்[ [1970 பிப்ரவரி 28

கிராமங்களிலுள்ள சிறு சிறு தொழில்கள் ஏற்படுவதற்கான வழி வகைகளைச் சர்க்கார் மேற்கொள்ள வேண்டும். அப்பொழுது இம்மாநில ஜனத்தொகையில் முக்கால்வாசிப் பேர்களின் பொருளாதார நிலை உயரும். நாடு முன்னேறும்.

மோட்டார் வண்டி வரி சட்டத்தின் கீழ் பாரபட்சம் காட்டப் பட்டிருக்கிறது. தாரதம்மியம் காட்டப்பட்டிருக்கிறது. பணக்காரர்களுக்கு அதிக வரி போடுகிறோம். சக்தி உள்ளவர்களுக்கு வரி போடுகிறோம் என்று சொல்லிவிட்டு நகர்ப்புறங்களில் ஓடும் வண்டிகளுக்கு வரி உயர்வு இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். இதனால் தேசிய உடைமையாக்கப்பட்ட சர்க்கார் வண்டிகளுக்கு வரி ஏற்றவில்லை. இதனால் தேசீயமயத்தால் சர்க்கார் உடைமையால் ஏற்பட்டுள்ள ஆபத்தும் தெரிகிறது. சர்க்காருக்கு வரியும் வராது. வருவாயும் வராது. புற நகர் வழித்தடங்களில் வயபிள் யூனிட் ஆக இல்லாத சிறு சிறு மோட்டர் கம்பெனிகள் எல்லாம் இந்த வரி உயர்வால் மிகவும் பாதிக்கப்படும். அவர்கள் வருஷத்திற்கு வண்டி ஒன்றுக்கு மூவாயிரம் அதிக வரி செலுத்த வேண்டுமென்றால் நசித்துவிட வேண்டியதுதான். சிறுமீன், பெருமீனுக்கு இரையாகின்ற அநியாய நியதிக்கு அவர்கள் ஆளாகி பெருமுதலாளிகளுக்கு விற்றுவிட வேண்டியதுதான். ஆகவே, லாபம் இல்லாத சிறு மோட்டார் கம்பெனிகளுக்காவது வரியை அதிகப்படுத்தாது இருக்க வேண்டுமென்பதை நிதியமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

நில உச்சவரம்புச் சட்டத்தைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது புரட்சிகரமான திட்டம், சமதர்மத்திற்கு அடிப்படை இதிலே அமைந்திருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. இன்று 30 ஏக்கர் வைத்துக்கொண்டிருப்பவர்களுடைய குடும்ப நிலை என்ன? அவர்களில் பெரும்பாலோர் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். இதனால் பொது நன்மை ஏற்படுமா? 1961-ல் உச்சவரம்பை ஏற்படுத்திய காலத்தில் நன்மை ஏற்பட்டதா? பதினைந்து ஏக்கரிலிருந்து 30 ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கக் கூடியவர்களின் எண்ணிக்கை 44,000. அவர்கள் மட்டும்தான் பாதிக்கப்படுவார்கள் என்றால் கவலைப்படவேண்டிய அவசியம் கூட இல்லை. மாநில ஜனத்தொகையில் ஏறக்குறைய ஒரு சதவிகிதத்தினர்தான் பாதிக்கப்படுவார்கள் என்று விட்டுவிடலாம். பதினைந்து ஏக்கர் வைத்திருக்கக்கூடியவர்களின் குடும்ப நிலை என்ன? ஒரு ஏக்கருக்கு 500 ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு வருமானம் என்றால் 15 ஏக்கர் வைத்திருந்தால் 7,500 ரூபாய் வரும். விவசாய வருமான வரி, நில வரி எல்லாவற்றையும் நீக்கிப் பார்த்தால் ஐந்தாயிரம் அல்லது ஆறாயிரம் ரூபாய்தான் வரும். பெரிய நிலச்சுவான்தார்கள் என்று சொல்லக்கூடிய அவர்களுடைய குடும்பத்தில், நாலைந்து பெண் குழந்தைகள், மூன்று நான்கு ஆண் குழந்தைகள் என்று உள்ள நிலையில் எப்படிக் குடும்பத்தை நடத்த முடியும்? நகர் புறச் சொத்துக்களுக்கு உச்ச வரம்பு நிர்ணயிக்காமல், அங்கு மாட



1970 பிப்ரவரி 28]

மாளிகைகளை ஒன்றுக்குப் பத்தாக, நூறாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாய நிலங்களுக்கு மட்டும் உச்சவரம்பா? இது பாரபட்சம் அல்லவா? பதினைந்து ஏக்கர் என்றால் அது எகனாமிக் யூனிட்டாக, வயபிள் யூனிட்டாக இருக்குமா என்பதை யோசித்து பார்க்க வேண்டும். நிச்சயமாக இருக்க முடியாது. பதினைந்து ஏக்கரை வைத்துக்கொண்டு, டிராக்டரை வைத்துக்கொள்ள முடியாது. நான்கு பேர் கூட்டுச் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டுமென்றால், கூட்டிலே இருக்கும் சிக்கல் அனைவருக்கும் தெரிந்ததுதான். "கொள்ளைக்குப் போனாலும் கூட்டு ஆகாது" என்பது பழமொழி. மலைப் பிரதேசங்களில் டீ எஸ்டேட், காபி எஸ்டேட் என்று வைத்திருப்பவர்கள் 200 ஏக்கர், 500 ஏக்கர் என்று வைத்துக் கொள்ளலாம். இந்த உச்ச வரம்பால் கிராமங்களில் இருக்கும் சாதாரண குடியானவர்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் உணவுப் பொருள்கள் உற்பத்தியும் பெரிதும் பாதிக்கப்படும். இந்த உச்ச வரம்பை ஆரம்பத்தில் நிர்ணயிக்கும்போது உத்தரப் பிரதேசத்தில் 40 என்று நிர்ணயித்தார்கள், இப்பொழுது அதை 30 என்று குறைத்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் முன்பே 30 ஏக்கர் என்று வைத்தார்கள். இதைச் சரிபாதியாகக் குறைக்காமல் முக்கால் பங்காகச் செய்தால் விவசாய மக்களுக்கு ஓரளவு கஷ்டம் குறையும்.

நிலச் சொத்துக்களைப் பொறுத்தவரை வேறு சில நல்ல காரியங்களைச் செய்திருக்கலாம். சென்ற ஆண்டு புன்செய் நிலத்திற்கான வரியை எடுத்ததுபோல, இந்த ஆண்டு நன்செய் நிலங்களுக்கு இவ்வளவு வரம்பிற்கு உட்பட்டவர்களுக்காவது, உத்தரப் பிரதேசத்தில் 3-1/8 ஏக்கருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்களுக்கு வரி இல்லை என்று செய்ததுபோல செய்திருந்தால், அது உண்மையான சோஷலிச சாதனையாக இருந்திருக்கும். அது ஏழை மக்களுக்கு பெருத்த உற்சாகத்தைக் கொடுத்ததாக இருந்திருக்கும். பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், குத்தகை நியாய வாரச் சட்டம், 60-40 என்றெல்லாம் முன்னரே சட்டம் இருக்கிறது. இப்போது பதினைந்து ஏக்கர் வைத்திருப்பவர்கள்கூட சொந்தப் பண்ணை செய்ய வழி வகை இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். மேலும் உச்ச வரம்புச் சட்டத்தைத் திருத்தும்போது வருகிற சிக்கல்கள், இன்னல்கள் இவற்றையெல்லாம் தீர்க்கும் வகையில் சட்டம் அமைய வேண்டும், பாரபட்சம் இல்லாத வகையில் நல்லதொரு சட்டமாக இயற்றவேண்டும். உச்சவரம்பை இன்னும் சற்று உயர்த்திச் சட்டம் செய்யவேண்டும் என்ற கோரிக்கையை விடுத்து அமர்கிறேன்.

திரு. மா. இராசாங்கம்: தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின்மீது என் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள விரும்புகிறேன். நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள இந்த நிதி நிலை அறிக்கையில் முன் பகுதி மத்திய-மாநில அரசுகளின் அதிகார பூர்வமான ஏற்றத்தாழ்வுகளையும், அதனால்

ஏற்படும் கேடுகளையும் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. மத்திய அரசிடம் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரம் குவியல்கள் மாநில அரசுகளின் முன்னேற்றத்திற்கும், அவற்றின் முயற்சிகளுக்கும் நடுவில் தேர் சக்கரமாக முட்டுக்கட்டை போடுவதுபோல் அமைந்திருக்கிறது.

தேர் சக்கரம் என்றவுடன் எனக்கு ஒன்று நினைவிற்கு வருகிறது. அருமை நண்பர் மகாதேவன் பிள்ளை அவர்கள் திருவாரூர் தேர் பற்றிச் சொன்னார்கள். எல்லாத் தேருக்கும் இரண்டு கட்டைகள் தேவை. தேர் குறித்து எங்களுக்குப் பழக்கம் இல்லை; இருந்தாலும் பக்கத்தில் உள்ளவர்களின் பழக்கத்தால் தெரிய வந்திருக்கிறது. தேர்த் திசையைத் திருப்பவேண்டுமானால் அதற்கும் இரண்டு 'குடில் கட்டைகள்' தேவை. அவர்கள் தன் கையிருப்புகளையெல்லாம் சொன்னார்கள், காலில் இருப்பதைக்கூடச் சொன்னார்கள். இருதயத்தில் இருப்பதையெல்லாம் வெட்டிப் பார்த்தவர்கள். ஆனால் மேலே இருந்து ஒன்றும் சொல்லவில்லை. ஒருவேளை அங்கு இல்லையோ என்னவோ, சாதாரணமாக கடைகளில் வரவு-செலவுக் கணக்கு போடும்போது முன்னால் ஒரு பிள்ளையார் சுழி போட்டுக் கொள்வார்கள். இந்த பட்ஜட்டுக்கு அப்படிப் பிள்ளையார்சுழி போன்றுள்ளது பற்றி ஒரு வார்த்தை சொல்லலாம் என்று நினைக்கிறேன். அதுதான், "டாப் தி ரிச் அன்ட் பாட் தி புவர்" என்ற பொருளாதார சுலோகம். அதை வைத்துக்கொண்டுதான் இந்த பட்ஜட் ஆரம்பமாகிறதே தவிர, அது இல்லாமல் ஆரம்பிக்கவில்லை என்ற கருத்தைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக மத்திய அரசின் தொழில் கொள்கை மாநில தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் பாதகமாக இருக்கிறது என்பதை என்னால் சொல்லாமல் இருக்கமுடியாது. இந்த அறிக்கையில் அமைச்சர் அவர்கள் மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். "தொழில் துறையில் மத்திய அரசிடம் உரிமங்கள், ஒப்புதல்கள் முதலியன பெறுவதில் கடும் தாமதம் ஏற்படுகின்ற காரணத்தால், பொதுவாக மன நிறைவற்ற நிலைமை நிலவி வருகிறது. இந்தச் சூழ்நிலையில் தொழில் முனைவர்களுக்குப் புதிய தொழில்களில் முதலீடு செய்வதில் அக்கறை குறைந்துவருவது, மாநில அரசுக்குக் கவலைக்கு இடம் அளிப்பதாய் உள்ளது." என்று கூறியுள்ளார்கள். இதைப் படித்தபோது எனக்குக் கலைஞரின் புதுக் கோஷம்தான் நினைவிற்கு வந்தது. "மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி" என்பது. இதுதான் அதற்கான மருந்தாகும். புதிதாக மணம் முடித்துக் கொண்டுள்ள பெண்ணுக்கு தன் கணவனுக்குப் பிடித்த பல பண்டங்களைத் தயாரித்துக் கொடுக்க வேண்டுமென்பது ஆசைதான். அந்த ஆசை எல்லோருக்கும் வருவதுதான். ஆனால் அந்த வீட்டு மாமியார் கொஞ்சம் அதிகாரம் படைத்தவளாக இருந்து, பெட்டிச் சாவியைத் தன் இடுப்பில் செருகிக் கொள்பவளாக இருந்தால், மருமகள் என்ன செய்ய முடியும்? மத்திய அரசு அப்படிப்பட்ட மாமியாராக இருக்கும் நிலை மாறவேண்டும். இல்லாவிட்டால் அதைத்





தொடர்ந்து மருமகளுக்குத் தனிக் குடித்தனம் போக வேண்டுமென்ற எண்ணம் தோன்றினாலும் தோன்றும். இது ஒரு எச்சரிக்கை. இந்த அறிக்கையில் அது தொனிக்கிறது. இந்த பட்ஜட்டைப் பார்த்து நமது சுதந்திராக் கட்சி உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு தப்புக் கணக்கு போட்டிருக்கிறார்கள். பத்திரிகைகளில் நான் பார்த்தேன். பொருளாதாரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் இந்திரா கட்சியை ஆதரிக்கிறது, இங்கே குறை காண்கிறது, எனவே திராவிட முன்னேற்றக் கழகம் மாறுபட்ட கொள்கைகளைக் கொண்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி: உறுப்பினர் அவர்களின் முதல் பேச்சு அல்ல இது. அவர் தமது பேச்சைப் படித்துக்கொண்டிருக்கிறார்கள். மேலே ஏதோ இல்லையென்று சொன்னார்கள். எது இல்லை என்று புரியவில்லை.

திரு மா. இராசாங்கம்: நாங்கள் இருவரும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள். ஒருவருக்கு இல்லாமலிருக்கலாம், இருக்கிறவர் அதைச் சொல்லிக் காட்டலாம். நான் சொல்லிக் காட்டியது அப்படியிருக்கலாம். உறவுக்கும் உரிமைகளைக் கோருவதற்கும் வித்தியாசம் உள்ளது. உறவு வேறு, உரிமை வேறு. நாங்கள் உரிமையைக் கேட்கிறோம். டாக்டர் ஹான்டே அவர்களுக்கு அது புரிந்திருக்கும், வேண்டுமென்றே உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். உரிமைகளைப்பற்றிச் சொல்லும்போது அதைத் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். உரிமைகளைக் கேட்பதற்கு எங்களுக்கு உறவு தேவைப்படுகிறது. எங்களது இந்த உறவு பிறக்கும்போதே ஏற்பட்ட உறவு அல்ல. டாக்டர் ஹான்டே அவர்கள் அதைப் பத்திரிகைகளுக்குச் சொல்லியிருக்கிறார்கள். பெரிய பெரிய பத்திரிகைகள் எல்லாம் அதுபற்றி விமர்சனங்கள் கூடச் செய்திருக்கின்றன. கல்லூரி ஆசிரியர்கள் அதை எடுத்துக் காட்டியுள்ளார்கள். இது பிறக்கும்போதே ஏற்பட்ட உறவு அல்ல. எப்போதும் பிரியாதிருக்கும் உறவும் அல்ல. உரிமைகளை மதிக்கிற வரையில்தான் உறவு நிற்கும். அந்த வகையில்தான் இந்த உறவு.

அடுத்தபடியாக, நிதி அமைச்சர் அவர்கள் இந்த பட்ஜட்டில் ஒரு வேடிக்கை நிகழ்ச்சியைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுதான் சேலம் உருக்காலைத் திட்டம் என்பது. "கடந்த பத்தாண்டுகளாகவே சேலம் உருக்காலைத் திட்டத்தைத் தொடங்க அனுமதியளிக்குமாறு இந்திய அரசை வற்புறுத்தி வந்துள்ளோம். இந்த வேலைத் திட்டம் குறித்து ஒரு முடிவெடுக்கும்படி இன்னும் மத்திய அரசை நாம் கேட்டுக்கொண்டிருக்கும் நிலை வரலாற்றில் வேடிக்கைமிக்க நிகழ்ச்சியாகும்." என்று உரையிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். இது வேடிக்கையாகவே வருகிறது. நகைச்சுவை என்பது வேறு. சுவை மாறிவிடக்கூடாது. ஆராய வேண்டியவர்கள் ஆராய வேண்டும், சொல்ல வேண்டியவர்கள் சொல்ல வேண்டும்.

இந்த அறிக்கையில் துணிச்சலாக ஒன்றைச் சொல்லியிருக்கிறார்
கள். அதுதான் நில உச்சவரம்புச் சட்டம். சிறிது நேரத்திற்கு
முன்புகூடச் சொல்லப்பட்டது, நில உச்சவரம்புச் சட்டத்தை திடீ
ரென்று செய்யலாமா என்று கேட்டார்கள். அது திடீரென்று
தான் வரும். திடீரென்று வருவதுதானே பட்ஜட்? "சீக்ரசி
ஆஃப் தி பட்ஜட்" உங்களுக்குத் தெரியாததல்ல. இந்தக் காரி
யத்தை நாங்கள் சொல்லாமலேயே திடீரென்று செய்திருக்கிறார்
கள். இந்த மன்றத்தில் முன்பே எழுப்பப்பட்டிருக்கிறது. 30
ஏக்கர் என்று வரும்போது அதை 15 ஏக்கர் என்று ஆக்கவேண்டு
மென்று பொதுவுடைமைத் தோழர்கள் அன்றே எழுப்பியிருக்கிறார்
கள். அதையொட்டித்தான் 15 ஏக்கராக கொண்டு வந்திருக்கி
றோம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பத்திரிகையாளர்களிடம்
கூறியிருக்கிறார்கள். அவர்கள் இங்கு இன்னும் பேசவில்லை. நகர்ப்
புறச் சொத்துக்களுக்கு உச்சவரம்பு கொண்டுவரவில்லையே
என்பது அவரது குற்றச்சாட்டு. சோஷலிச மார்க்கத்தில் அதைச்
சென்றடைய பல மைல் கற்கள் உள்ளன. இது முதல் மைல் கல்
லாக உள்ளது. அந்த மைல் கல்லையும் நாளடைவில் அடைவோம்.
இன்று ரஷ்யாவில்கூட, நாங்கள் சோஷலிசத்தை நோக்கி நடந்து
கொண்டிருக்கிறோம் என்றுதான் சொல்கிறார்கள். சோஷலிசத்தை
நாங்கள் அடைந்து விட்டோம் என்று சொல்லவில்லை. சோஷலி
சத்தை அடைவதற்குள் பல மைல் கற்களில் இதுதான் முதல் மைல்
கல். அந்தக் கல்லை அடையும் காலம் வந்தாலும் வரலாம். அப்படி
வரவேண்டுமென்று ஆசைப்படுகிறோம். பழைய ராஜாக்களை
ஒழித்து விட்டோம், ஆனால் இப்போது பல புது ராஜாக்கள் உரு
வாகிக்கொண்டு வருகிறார்கள். மணி முடிதான் இல்லையே தவிர...
(குறுக்கீடு) மக்கள் வைக்கும் முடியைப்பற்றி நான் சொல்லவில்லை.
நான் வீட்டுக்குள் வைப்பதைச் சொல்கிறேன். அவர்களுக்கு
அரண்மனைகளும் அந்தப் புறங்களும் கூட இருக்கின்றன. அவ்வளவு
சுகபோகங்களும் இருக்கின்றன. அந்த ராஜாக்களை ஒழிக்க
வேண்டும். பணக்கார ராஜாக்களின் சொத்துக்களுக்கு ஒரு உச்ச
வரம்பு வந்தே தீரவேண்டும். நில உச்சவரம்புச் சட்டத்தினால்
நான் நேரடியாகப் பாதிக்கப்படாவிட்டாலும் கூட பக்கத்தில்
பாதிக்கப்பட்டிருக்கிறேன். அதையும் பாதிப்பு என்று நான்
சொல்லவில்லை. விரும்பித்தான் கொடுக்கிறோம். நிலத்தை
விரும்பிக் கொடுப்பவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அதைப்
போல விவசாயப் பெருங்குடி மக்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள்.
தலைவர் அவர்கள் காலையிலே எதை எப்படி எப்பொழுது செய்ய
வேண்டுமோ, அதை அப்படித்தான் செய்யப்படும். செய்ய
வேண்டிய காரியத்தைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்கிறார்
கள். இன்னும் பல காரியங்களைப்பற்றிச் சொன்னார்கள்.

குடிசைவாசிகளைப்பற்றி நமது பெருமதிப்பிற்குரிய ஹாண்டே
அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'இன்ஹ்யூமன்' என்ற வார்த்
தையைப் போட்டிருக்கிறார்கள். மனிதாபிமானம் உள்ளவர்கள்.





ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி, 7 ஆண்டுக்காலம் தவணை கொடுத்திருக்
கிறது. குடிசைவாழ் மக்கள் எங்கள் பங்காளிகள். சென்னை
யைப் பொறுத்தமட்டிலும், இந்த நகரத்தைச் சுத்தம் செய்ய
வேண்டுமென்று கேட்கிறார்கள். அதையும் பார்க்க வேண்டும்.
நகரத்தைச் சுத்தம் செய்யும் நேரத்தில் இதை மறுக்க முடியாது,
தடுக்க முடியாது.

* * *

உணவுக்கட்டுப்பாட்டை எடுத்துக்கொண்டால் அதை நீக்கியவர்
களுக்குத்தான் அது தெரியும். திரு. ராஜாஜி அவர்களுக்குக்
கிடைத்த பல நல்ல பெயர்களுக்கும் உள்ள பல காரணங்களில்
உணவுக் கட்டுப்பாட்டை நீக்கியவர் என்பதும் ஒன்றாகும். அவர்கள்
பெரியவர்கள், அவர்கள் உணவுக் கட்டுப்பாட்டை நீக்கி பெரிய
பெயர் பெற்றார்கள். சாமான்யர்களாகிய நாங்கள் நீக்கியிருக்கி
றோம். எங்களுக்குச் சாமான்யமான பெயர் கிடைத்தாலும்
போதும். ஒரு காரியத்தை செய்கிறபொழுது இருக்கும் கடினம்
சொல்பவர்களுக்கு இருக்காது. எங்களுக்கு இரண்டு அனுபவங்
கள் இருக்கின்றன. நாங்கள் அங்கேயும் இருந்திருக்கிறோம். இங்
கேயும் இருக்கிறோம். அங்கேயிருந்த அனுபவமும் இருக்கிறது.
இங்கேயிருக்கும் அனுபவமும் இருக்கிறது. திரு. விநாயகம் அவர்
களுக்கு இடைவெளி இருந்தது. எங்களுக்கு அந்த இடைவெளி
இல்லாமல் இருக்கிறது. உணவுத் துறை புலிமேல் ஏறி இருப்ப
வரின் நிலையைப் போன்றது. இறங்கினாலும் செத்தான், இருந்
தாலும் செத்தான். ஆனால் நாங்கள் இறங்கியும் வாழ்கிறோம். புலியி
லிருந்து கீழே இறங்கியிருக்கிறோம். உணவுக் கட்டுப்பாட்டை
எடுத்திருக்கிறோம். மக்கள் வரவேற்கிறார்கள், விவசாயிகள் ஆதரிக்
கிறார்கள், இருந்தாலும் வாழ்கிறோம், உணவுக் கட்டுப்பாட்டை
நீக்கியிருக்கிறோம்.

*

பல காரியங்களில் பின் தங்கிய சமுதாயத்திற்குப் பெரிய ஏற்
பாடுகள் செய்திருக்கிறது. பெரிய கண்மாயிலிருந்து, அதைப்
பிரித்து வாய்க்கால்களாகப் பிரித்து, ஹரிஜனங்களுக்காகவும், பின்
தங்கிய சமுதாயத்திற்காகவும் அவர்களுக்கு என்று பணம்
ஒதுக்கி, எதையெதை எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச்
செய்யப்படுகிறது. பின்தங்கிய சமுதாயத்தின் தலைவராக முதல
மைச்சரவர்கள் இருக்கிறார்கள். இந்த பட்ஜெட்டில் நல்ல காரி
யங்கள் இருக்கின்றன. அந்தக் காரியங்கள் நடைமுறைக்கு
வரும்பொழுதும் இன்னும் பல நல்ல காரியங்கள் ஏற்படும் என்று
கருதி முடித்துக் கொள்ளுகின்றேன்.

* *

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை நண்பகல் 12-00
அறிக்கையின்மீது என்னுடைய கட்சியின் கருத்துக்களைக் கூற
விரும்புகிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மன்றத்திலே மன்றத் தலைவர் எழுந்து நின்று பேசும்பொழுது எந்த அங்கத்தினரும் எழுந்து நின்று குறுக்கே பேசக்கூடாது என்ற மரபு இருக்கிறது. ஆனால் தொடர்ந்து இந்த மரபு கடைப்பிடிக்கப்படவில்லை. மன்றத் தலைவர் நின்றுகொண்டு பேசிக்கொண்டே இருக்கிறார், அதே சமயத்தில் உறுப்பினரும் நின்று பேசிக்கொண்டே இருக்கிறார். இதுபோன்று இனி நடக்காமல், இனிமேலாவது இந்த மரபை கண்டிப்பாக கடைப் பிடிப்பதற்கு ஒரு முடிவு செய்யவேண்டும். தாங்கள் அதுபற்றி தீர்ப்பு வழங்க வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந. தருமலிங்கம்) : திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

* திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கும்பொழுது எடுத்த எடுப்பிலேயே ஒரு விஷயத்தைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். "பொருளாதாரக் கொள்கை குறித்த பெரும் முடிவுகளில் பெரும்பாலானவை, இம் மாநிலத்திற்கு வெளியே, அதாவது புது டில்லியிலும், பம்பாயிலும் மேற்கொள்ளப்படுவதால், வளர்ச்சிப் பணியில் மாநில அரசின் முயற்சிகள் பெரிதும் தடைப்படுகின்றன" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வெளி இடங்களில் இந்த முடிவுகள் எடுக்கப்படுவது என்று கூறும்போது, இந்திய அரசினுடைய கொள்கையைப்பற்றி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். இந்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கைக்கும், இதற்கும் சம்பந்தம் இருக்கிறது. இந்திய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை வெளிநாட்டைச் சார்ந்த கொள்கையாக இருக்கிறது என்பதை இன்று நேற்று அல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தேர்தல் அறிக்கையிலே கூட அதைப்பற்றி கூறியிருக்கிறது. எனவே, இந்தப் பொருளாதாரக் கொள்கை, மேலும், மேலும் அன்னிய நாட்டை சார்ந்திருக்கக்கூடிய கொள்கை, அன்னிய மூலதனத்தை மேலும் மேலும் இந்த நாட்டில் வரவழைக்கக்கூடிய கொள்கை, அன்னிய நாடுகளிலிருந்து மேலும் மேலும் கடன் பெறும் கொள்கை, நம்முடைய நாட்டின் பொருளாதாரப் பிடிப்பு முழுவதும் அன்னிய நாட்டின் கையில் இருப்பதன் காரணமாக, அவர்களை நம்பி வாழக்கூடிய சூழ்நிலை இருப்பதன் காரணமாக, ஆண்டு தோறும் அவர்களுக்கு வட்டி செலுத்துவதிலேயே நம்முடைய பணம் முழுவதும் விரயமாகிறது. இந்தப் பொருளாதாரக் கொள்கையை மாற்றி அமைக்க நாம் என்ன செய்யவேண்டும் என்பதைத்தான் நாம் இன்று சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுதான் இப்பொழுது இருக்கக்கூடிய பிரச்சினை. அன்னிய மூலதனம் நம் நாட்டில்



நுழைவதைத் தடுக்கக்கூடிய பொருளாதாரக் கொள்கையை நாம் உருவாக்க வேண்டும், நம்முடைய மக்களுக்குச் சாதகமான கொள்கையை உருவாக்க வேண்டும், அன்னிய பாங்குகளை நாட்டுடைமையாக்கவேண்டும், ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தை மத்திய அரசே மேற்கொள்ளுவதற்கு நாம் இயக்கத்தை நடத்தவேண்டும். பொது இன்ஷூரன்ஸ் கம்பெனிகளை நாட்டுடைமையாக்கவேண்டும். மாஜி மன்னர்களுக்குக் கொடுக்கக்கூடிய மானியத்தை நிறுத்திவிட வேண்டும். அது மட்டுமல்ல, தனிப்பட்டோர் சொத்துக்களை எடுத்துக் கொள்வதற்கு நஷ்ட ஈடு கொடுக்கக்கூடாது, தனி சொத்துரிமையை அகற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அண்மையில் பஞ்சாப் மாநில சட்டமன்றத்தில் இப்படிப்பட்ட தீர்மானம் ஒன்று மத்திய அரசுக்கு சிபார்சு செய்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனவேதான், மத்திய அரசு, மாநில அரசு உறவுகள், பொருளாதார நிதி வசதிகள் இவைகளையெல்லாம் பார்க்கும்பொழுது, இது ஒரு அரசியல் பிரச்சினையே தவிர, சட்டப் பிரச்சினை அல்ல. இந்தப் பிரச்சினையைப்பற்றி முடிவு கட்டுவதற்கு மூவர் கொண்ட குழு ஒன்று போடப்பட்டிருக்கிறது. இந்த அரசியல் பொருளாதார சிக்கலைத் தீர்ப்பதற்கு, ஜனநாயக அரசியல் கட்சிகளின் சார்பில், அக்கட்சிகளுடைய பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழு போட்டு இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். இது சட்டப் பிரச்சினை என்று கருதி, சட்ட நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்றை இதற்காக போட்டிருப்பது இதற்குப் பொருத்தமாக இருக்காது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஐந்தாண்டுத் திட்டத்திற்காக நாம் கேட்கக்கூடிய ரூ. 575 கோடியையும் எப்படி நாம் பெறுவது என்று பார்க்கக்கூடிய நிலைமையும் இருக்கிறது. சேது சமுத்திரம் கால்வாய்த் திட்டம், நெய்வேலி இரண்டாவது திட்டம், கல்பாக்கத்தில் அணு மின்சார இரண்டாவது நிலைத் திட்டம் ஆகியவைகளை நிச்சயமாக நிறைவேற்றவேண்டும், இதற்கெல்லாம் அடிப்படையாக நாம் மத்திய அரசாங்கத்திடமிருந்து எந்த அளவுக்குப் பணத்தைப் பெறுகிறோமோ அந்த அளவுக்குத்தான் திட்டத்தை நிறைவேற்ற முடியும். அவர்களுடைய பொருளாதாரக் கொள்கைக்கும் இதற்கும் நிச்சயம் தொடர்பு இருக்கிறது. ஆகவே, மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையை மாற்றி அமைப்பதற்கு இந்த மாநிலத்தில் நாம் ஒரு பெருத்த கிளர்ச்சியை உண்டாக்க, அதற்காக நடவடிக்கையை எடுக்கக்கூடிய நிலைமையை உருவாக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய அரசாங்கத்தின் தொழில் கொள்கை சம்பந்தப்பட்ட வரையில் ஏற்கெனவே ஆளுநர் அவர்களின் உரையின் மீது பேசும்பொழுது எங்களுடைய கட்சியின்

சார்பாக எங்களுடைய கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தினிடமிருந்து மேலும் மேலும் கடனாகவும், மானியமாகவும் தொகைகளைப் பெற்று நம்முடைய மாநில அரசு மேலும் பொதுத் துறையை விஸ்தரிக்க வேண்டும், பொதுத் துறை நிறுவனங்களில் தனியார் முதலாளிகளைச் சேர்த்துக்கொண்டு, கூட்டு முறையில் நடத்துவது சரியல்ல என்ற விஷயங்களை அவர்களே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதை நாம் இப்பொழுது கூறுவது மட்டும் அல்ல. ஏற்கெனவே, தனிப்பட்ட முதலாளிகளின் கையில் பொருளாதார ஆதிக்கம் குவியும் போக்கினைத் தடுக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது நிச்சயம் நிறைவேறவேண்டும் என்று நாங்கள் வற்புறுத்துகிறோம்.

தூத்துக்குடியில் 52 கோடி ரூபாய் செலவில் கூட்டுத்துறை உரத் திட்டம் ஒன்றிற்கான பணிகளைத் தொடங்கியுள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது. இதில் தனியாரைச் சேர்த்துக்கொண்டு அவர்களுக்கும் பங்கு கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது. பணம் தேவைப்படுமானால் மேலும் எந்த இடத்திலிருந்து நாம் பணத்தைப் பெற முடியும் என்பதை ஆராயவேண்டும். குறிப்பாக, மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு முயற்சி செய்யவேண்டும். அதேபோல் நாக்பால் பெட்ரோ கெமிக்கல் ரிஃபைனிங் பிராஜக்ட் என்கிற ஐந்து கோடி ரூபாய் அளவிலான மற்றொரு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதிலும் தனியார் துறையைச் சேர்ந்தவர்களைச் சேர்க்கவேண்டிய அவசியம் கிடையாது. தவிர, சென்னையில் பெட்ரோ-கெமிக்கல் பல்வகைப் பொருள்களை உற்பத்தி செய்யும் ரூ. 100 கோடி அளவில் உருவாக்கக்கூடிய திட்டத்திலும் தனியாரை இணைக்கவேண்டிய அவசியம் கிடையாது என்பதை நான் வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக சட்டமன்றத்தில் எங்கள் கட்சியின் சார்பாக பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மேட்டூரில் இருக்கும் ஆண்டு தோறும் ஒரு கோடி ரூபாய் மானியமாக பெறக்கூடிய அலுமினியம் பாக்டரியை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதை சர்க்காரே எடுத்து நடத்த, அதாவது நாட்டுடைமையாக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் சேலம் உருக்குத் தொழிற்சாலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருப்பது பாராட்டத்தக்கது. திட்டப்படி அங்கே உருக்குத் தொழிற்சாலை நடத்தப்படவேண்டுமே தவிர, அங்கிருக்கும் மூலப்பொருள்களை வெளி நாடுகளுக்கு அனுப்புவதோ அல்லது வெளி நாட்டில் இருக்கக்கூடிய முதலாளிகளைச் சேர்த்துக் கொண்டு அங்கு ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதோ கூடாது.





இங்கேயே மூலப்பொருள்களை உபயோகப்படுத்தி, இங்கேயே உருக் காலை அமைப்பதற்கான திட்டத்தை உருவாக்க மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தொழில் கொள்கையைப் பொறுத்தவரையில், ஏற் கனவே 75 மைல்களுக்கு அப்பாற்பட்ட பஸ் போக்குவரத்துத் துறையைத்தான் நாட்டுடைமையாக்கப்பட்டது. அந்த ரூட்களைத் தான் அரசாங்கம் ஏற்று நடத்தத் தொடங்கியது. அதற்குப் பிறகு நாட்டுடைமையாக்கப்படவில்லை. நமது மாநிலத்தில் பெரிய பஸ் ரூட்டுகளை ஏராளமாக நடத்திக்கொண்டிருக்கக்கூடிய டி.வி.எஸ்., ஏ.பி.டி. போன்ற நிறுவனங்கள் இருக்கின்றன: அந்த ரூட்டுகள் பூராவும் நாட்டுடைமையாக்குவதற்கு வேண்டிய ஏற் பாடுகள் செய்யவில்லை. நாட்டுடைமையாக்குவதன் நோக்கம் என்ன? மேலும் அரசாங்கத்துக்கு வருமானம் வரக்கூடிய அள வுக்கு அந்த ஏற்பாடு இருக்கவேண்டும். ஏராளமாக பஸ் ரூட்டு களை வைத்திருப்பவர்களை இந்த நாட்டுடைமையாக்கும் கொள்கை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை. எந்த அடிப்படையில் நாம் தேர்தல் திட்டத்திலே நாட்டுடைமையாக்கவேண்டும் பஸ் போக்கு வரத்தை என்று சொன்னோமோ அந்த அடிப்படையில் பஸ் ரூட்டு களை நாட்டுடைமையாக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவுக் கொள்கை சம்பந்தமாக கூறப்பட்டிருக்கிறது, 1966-67-ல் 57.9 லட்சம் டன்னாக இருந்த உணவு தானிய மொத்த உற்பத்தி, இப்பொழுது 1969-70-ல் 63 லட்சம் டன்னாக உயர்ந் துள்ளது. உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில் தீவிர விவ சாய அபிவிருத்தித் திட்டம், வீரிய விதை உற்பத்தித் திட்டம், உரத்திட்டம், இன்னும் டெக்னிகல் இம்ப்ரூவ்மெண்ட்ஸ் இவை களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத் தக்கது. ஆனால் நாங்கள் ஒரு விஷயத்தை வற்புறுத்திக்கொண்டே வந்திருக்கிறோம். என்ன விஷயம் என்று சொன்னால், விஞ்ஞான முறைகளின் மூலம் உணவு உற்பத்தியை அபிவிருத்தி செய்கிற அதே சமயத்தில், மனித உழைப்புக்கு நாம் அதிகமாக வாய்ப்பு அளிக்கவேண்டும். ஏராளமான மனிதர்கள் விவசாய அபிவிருத்தி யில் ஈடுபட்டிருக்கிறார்கள். அக்ரிகல்சரல் ரீ-பினான்ஸ் கார்பரேஷன் போன்ற ஸ்தாபனங்கள் தமிழ் மாநிலத்தில் ஏராளமான பணக் காரர்களுக்கும், முதலாளித்துவ நிலச்சுவான்தார்களுக்கும்தான் பயன்படுகிறதே தவிர, ஏழை விவசாயிகளுக்கு அல்ல என்பதை இந்த சமயத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். உணவு அபி விருத்தித் திட்டங்களின் பயனாக பசுமை புரட்சி ஏற்பட்டிருக் கிறது என்று சமீப காலமாக பேசப்பட்டு வருகிறது. இந்த சம யத்தில் மத்திய அரசு உள்துறை அமைச்சர் அவர்கள் சொல்லி யதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த பசுமைப் புரட்சி பற்றி சட்டமன்றத்தில்

[திரு. சி. கோவிந்தராசன்] [1970 பிப்ரவரி 28

பேசிக்கொண்டிருக்கிறோம், நாடாளு மன்றத்தில் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட பசுமைப் புரட்சியைக் கீழ் தளத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் உணரவில்லை, ஏழை எளிய மக்கள் உணரவில்லை என்று மத்திய அரசின் உள்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

மேல் தளத்தில் உள்ளவர்கள் கீழ் தளத்தில் உள்ளவர்களை சட்டத்தைக்கொண்டு அடக்கிக்கொண்டு இருக்கக்கூடிய காரணத்தினால், கிராமப்புறங்களில் மிகப் பெரிய கொந்தளிப்புகள் (டென்ஷன்) இருக்கின்றன. நாளடைவில் அது வேறு புரட்சியாக, ஒரு சிவப்பு புரட்சியாக மாறக்கூடிய அபாயம் இருக்கிறது என்று உள்துறை அமைச்சருடைய சுற்றறிக்கை எடுத்துக்காட்டுகிறது. எனவேதான், பசுமைப் புரட்சி என்று சொல்லப்படுவதெல்லாம் மேல்தட்டுக்காரர்கள் உணவு அபிவிருத்தி செய்வதில் ஏற்பட்டிருக்கிறதே தவிர, விவசாய அபிவிருத்தி, பசுமைப் புரட்சி ஏற்பட்டிருப்பதை கீழே உள்ள மக்கள் உணரவில்லை, அவர்களுக்குத் தெரியவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, கிராமப்புறத்திலே, விவசாயிகளின் மேம்பாட்டிற்காக, நில உடைமைக்கு உச்ச வரம்புச் சட்டத்தைத் திருத்தி, ஏற்கனவே இருக்கும் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதை, 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று கொண்டு வரப்பட்டிருப்பதை, மாநிலத்திலுள்ள உழவர் பெருமக்கள் மகிழ்வோடு வரவேற்பார்கள். நாங்களும் வரவேற்கிறோம். ஆனால், இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்போது, இந்த மகிழ்ச்சி தரக்கூடிய அறிவிப்பைச் சட்டமாக்கும்போது, ஒரு காரியத்தில் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 1961-ம் ஆண்டு இதைச் சட்டமாக்கும்போது, இந்த சட்டத்தை எப்படி எப்படியெல்லாம் பயன்படுத்தி, பெரிய பெரிய நிலச்சுவான்தார்கள் சலுகைகளைப் பெற்று, சட்டத்தின் ஓட்டைகளில் புகுந்து கொண்டார்கள் என்பது தெரியும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலேயே இதன் போலித் தன்மை அம்பலமாக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் இந்த திருத்த அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் நாங்கள் கூறுகிறோம். இந்தத் திருத்தத்தில் 15 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று சொன்னாலும், இந்த நிலம் தனி நபருக்கு என்றில்லாமல், ஒரு குடும்பத்திற்குச் சொந்தமானது என்று செய்ய வேண்டும். அதோடு ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதை நிர்ணயிப்பது கட்டும் வரியின் அடிப்படையில் இல்லாமல், நிலத்தில் கிடைக்கும் வருமானத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட வேண்டும். அதோடு பழைய சட்டத்தில் ஏராளமான விதிவிலக்குகள் இருக்கின்றன. அவற்றில் முக்கியமானது, பண்ணைகள். பண்ணைகளாக உள்ள நிலங்களுக்கு விதி விலக்கு அளித்திருக்கிறது. டி.வி.எஸ். போன்றவர்கள் அப்படிப் பண்ணையை நடத்துகிறார்கள்.



1970 பிப்ரவரி 28] [திரு. சி. கோவிந்தராசன்]

அங்கே ஏராளமான விவசாயிகள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏறுவாடி என்ற இடத்தில் பண்ணை இருக்கிறது. அந்தப் பண்ணையை நமது அமைச்சர் ஒருவர் பாராட்டியிருக்கிறார். அதேபோல, மதுரை மாவட்டத்தில், கங்கா நாயுடு என்பவரின் குடும்பத்திற்கு சொந்தமாக 6,000 ஏக்கர், பழமுதிர் சோலையில் இருக்கிறது. அங்கே பண்ணை அமைக்கப்பட்டு, நமது கவர்னர் கூட அதில் கலந்து கொண்டு பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பண்ணை நிலங்கள் ஏராளமாக இருப்பதால், அவைகளுக்கு விதிவிலக்கு அளித்தால் உச்சவரம்புச் சட்டத்தின் நோக்கமே சீர்கெடுகிறது என்பதை அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். அதேமாதிரி, கரும்புத் தோட்டங்கள், பழத் தோட்டங்கள், மேய்ச்சல் நிலங்கள், கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள், மடத்திற்குச் சொந்தமான நிலங்கள் என்றெல்லாம் இருக்கின்றன. கோவில்களுக்கு ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட விதிவிலக்குகள் இருந்தால், 30 ஏக்கராக இருந்தாலும், 15 ஏக்கராக இருந்தாலும் இரண்டும் ஒன்றுதான். உச்சவரம்புச் சட்டத்தின் நோக்கமே ஈடேறாது என்பதை சொல்ல விரும்புகிறேன்.

ஒரு முக்கியமான விதி விலக்கைப்பற்றிச் சொல்ல வேண்டும். தஞ்சை மாவட்டத்திலும், இன்னமும் வேறு இடங்களிலும், குடும்ப சொத்துக்களை 'ட்ரஸ்ட்' என்ற பெயரில் அமைத்து தங்களுக்குச் சொந்த நிலம் இல்லை என்று சொல்கிறார்கள். ட்ரஸ்டுக்கு விதிவிலக்கு இருப்பதால் ட்ரஸ்ட் அமைப்பைப் பல இடங்களில் செய்கிறார்கள். ஆகவே, 15 ஏக்கரிலிருந்து தப்பித்துக்கொள்ள ட்ரஸ்ட் என்றும் செய்வார்கள். ஆகவே, ட்ரஸ்டுக்கு விதிவிலக்கு இருப்பதை எடுத்து விடவேண்டும்.

அடுத்து, பினாமி ட்ரான்சாக்ஷன்கள் அப்பொழுதே 1959-லேயே நடந்தன. திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் 1959-லேயே, அந்தச் சட்டம் விவாதத்தில் இருந்தபோது, இதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பினாமி மாற்றங்கள் இப்பொழுது நடவாதவாறு நிர்வாக உத்தரவோ அல்லது அவசரச் சட்டமோ கொண்டு வந்து, அப்படி நடக்காமல் தடுக்க வேண்டும். இப்படியெல்லாம் செய்தால் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பது உண்மையிலேயே மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். 'பாலோ-அப் ஆக்ஷன்' என்று சொல்லுகிறோமே அப்படி, இவற்றையெல்லாம் உடனடியாக செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயிகளுக்கு நிலம் கொடுப்பதில், அவர்கள் பயிர் செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். கடன் வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். கடன் நிவாரணச் சட்டமும் கொண்டுவர வேண்டும். புறம்போக்கு நிலங்களைக் கொடுக்கும்போது, சொந்த நிலம் இல்லாதவர்களுக்கே கொடுக்க வேண்டும். இரண்டு ஏக்கர் நிலம் உள்ள

[திரு. சி. கோவிந்தராசன்] [1970 பிப்ரவரி 28

வர்களுக்கும் சர்க்கார் நிலம் கொடுக்கப்படக் கூடாது. அப்படி
ஏற்கனவே கொடுத்திருந்தாலும், அவற்றைத் திரும்பிப் பெற ஏற்
பாடு செய்யவேண்டும்.

கிராமப் புறத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க
அறிக்கையில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கே
யிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பார்த்தால், இந்த
ஒரு கோடி ரூபாய் போதாது என்பதைத் தெரிவிக்கிறேன்.
குறைந்த பட்சம், பத்து கோடி ரூபாயாவது ஒதுக்க வேண்டும்.
வரட்சி நிவாரணத்திற்கு செய்தது போல், எங்கெங்கிருந்தோவெல்
லாம் பணம் திரட்டியது போல, மத்திய சர்க்காரை வற்புறுத்தி
பணம் வாங்கியது போல, இப்பொழுதும் வாங்கி, கிராமங்களில்
நிவாரணம் அளிக்க ரூ. 10 கோடியாவது ஒதுக்க வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில், டிராக்டரைப்பற்றி ஒரு வார்த்தை
சொல்லவேண்டும். இந்த டிராக்டர்களை கொள்கை ரீதியாக நாங்
கள் எதிர்க்கவில்லை. ஆனால், மனித சக்தியைப் பயன்படுத்தவேண்
டும் என்று சொல்லுகிறோம். நம் நாட்டிற்கு தற்போதுள்ள நிலை
யில் டிராக்டர் தேவையில்லை என்று சொல்லுகிறோம். டிராக்டர்
கள், கம்ப்யூட்டர்கள், மனித சக்தியைப் பயன்படுத்த முடியாமல்
செய்து விடுகின்றன என்பதால் அவற்றை நாங்கள் எதிர்க்கிறோம்.
இதுபற்றி திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையிலும்
இருக்கிறது.

அதே நேரத்தில் படித்தவர்களிடையே நிலவும் வேலையில்லாத்
திண்டாட்டம் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். உறுப்பினர்
களுக்கெல்லாம் தெரியும். எலெக்ட்ரிசிடி போர்டில் 1,500 குமாஸ்
தாக்கள் வேண்டும் என்றதற்கு 1,30,000 விண்ணப்பங்கள் வந்தன.
அதற்கு பி.ஏ., பி.காம்., பி.இ: முதலிய பட்டம் பெற்றவர்களெல்
லாம் மனுப் போட்டிருந்தார்கள். இது எதைக் காட்டுகிறது?
பட்டதாரிகளிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அந்த அளவில்
இருக்கிறது. ஆகவே, படித்தவர்களின் வேலையில்லா நிலையைப்
போக்கவும் அரசு ஒரு திட்டம் கொண்டுவர வேண்டும்.

இப்படிப்பட்ட நிலையில், எலெக்ட்ரிசிடி போர்டில் மின் பொறி
யாளர்கள் 'ஒர்க் டு ரூல்' என்ற இயக்கத்தை நடத்துகிறார்கள் என்
பதும் உறுப்பினர்களுக்குத் தெரியும். அவர்கள் கோருவது என்ன?
1966-ல் வேலைப் பளுவு நிர்ணயிக்கப்பட்டது. அப்பொழுது அவசர
நிலை காரணமாக அதிகமாகச் செய்தோம். இன்றைக்கு அதே
வேலைப்பளுவை சுமக்க முடியாது. என்கிறார்கள். அது பொருத்த
மான கோரிக்கை. அப்படி அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்
கொண்டால், இன்னும் ஆயிரக்கணக்கான இஞ்சினியர்களை வேலை
யில் அமர்த்த முடியும்.

அடுத்து, ஆரம்பப் பள்ளிகளில், டீச்சர்-ப்யூபிள் ரேஷியோ
திருத்தி அமைக்கப்படவேண்டும். ஒரு ஆசிரியருக்கு 30 பிள்ளை
கள் என்றாலும், 40, 50 வரையில் இருக்கிறார்கள். இதை மாற்றி,



1970 பிப்ரவரி 28] [திரு. சி. கோவிந்தராசன்]

யமைத்தால், வேலையின்றியிருக்கும் செகண்டரி, ஹையர் கிரேட்
ஆசிரியர்களுக்கும், பதினேழு ஆயிரம் பேர்களுக்கும் வேலை கொடுக்
கக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

அரசு ஊழியர்களுக்கு சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.
ரூ. 10 சிறப்புப் படி என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த
சிறப்புப் படி குறித்து எங்கள் சட்டமன்ற கட்சித் தலைவர் இது
'பிட்டன்ஸ்' என்று சொன்னதை, 'பிச்சைக் காசு' என்று தவறாக
அர்த்தம் செய்திருக்கிறார்கள் சில பத்திரிக்கைக்காரர்கள். 'பிட்
டன்ஸ்' என்றால், சிறு தொகை என்ற நோக்கத்தில்தான் சொல்லப்
பட்டது. பத்து ரூபாய் இன்றைக்கு இருக்கும் நிலையில் போதுமா
என்றால், போதாது. கடந்த இரண்டு மாதங்களில் மட்டும்,
சென்னை, கோவை போன்ற நகரங்களில் 32 புள்ளி விலைவாசி,
அதாவது 'காஸ்ட் ஆப் லிவிங் இண்டெக்ஸ்' உயர்ந்திருக்கிறது. இந்த
நிலையில் அவர்கள் கேட்கும் ரூ. 30 நியாயம் அற்றது என்று சொல்ல
முடியாது. ஆகவே, அவர்கள் கேட்கும் அளவிற்குக் கொடுக்க,
அரசு மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளு
கிறேன். அப்படிச் செய்து அவர்களையும் திருப்திப் படுத்த
வேண்டும். அப்படிச் செய்வதுதான் நலமாக இருக்கும் . . .

(மணியடிக்கப்பட்டது)

■ **திரு. எம். வில்லியம்.** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
சபைமுன் வைக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையின்மீது என்னு
டைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த அறிக்கையில்
மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் உள்ள அதிகாரங்
களைப் பற்றியும், மாநிலத்திற்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் பற்றியும்
எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அவற்றை இந்த நிதிநிலை
அறிக்கையில் சொல்லாமல், பாராளுமன்றத்தில் இதை வற்புறுத்
பேசினால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொ[...]தை
கிறேன். மத்திய சர்க்கார் உலக பாங்கிலிருந்து பெரிய அ[...]ற
தொகையை நாற்பது, ஐம்பது வருஷ கால தவணைக் கடன்கள[...]ம்
குறைந்த வட்டிக்கு வாங்கி, அதை மாநில சர்க்காருக்குப் பிரித்[...]ம்
கொடுக்கின்றது. அப்படி மாநில சர்க்கார்களுக்குக் கொடுக்கு
போது மிகவும் குறைந்த தவணைகளில் அதிக வட்டிக்குக் கொடுக்
கிறது. இது சரியல்ல. ஆகவே, இந்த நிலைமைகளை மாற்றி
யமைக்க மத்திய சர்க்காருடன் வாதாடியாக வேண்டும். அப்படி
வாதாடுவதற்கு இதுதான் சரியான சந்தர்ப்பம் என்பதைத் தெரி
வித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றப்படி இந்த பட்ஜெட்டில் சிறப்பான அம்சம் என்று சொல்
லக்கூடிய வகையில் எதுவும் இல்லை. முன்பு காங்கிரஸ் சர்க்கார்
நாட்டில் என்னென்ன திட்டங்களை ஆரம்பித்தார்களோ, அந்தத்
திட்டங்கள்தாம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கூற
விரும்புகிறேன். 1966-67-ம் ஆண்டு, 1970-71-ம் ஆண்டு கணக்கு
களைத் தாரதம்மியப்படுத்தி நிதிநிலை அறிக்கையில் கூறியிருக்கிறார்
கள். 1966-67-ல் நாட்டு வருவாய் 209 கோடி ரூபாயாக இருந்தது.

இப்போது 300 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இந்த அடிப்படையில்தான் ஒவ்வொரு இலாகாவிற்கும் பணம் ஒதுக்கப்பட்டு, வேலைகள் நடந்து வருகின்றன. 1966-67-ல் 200 கோடி ரூபாய் வருவாயாக இருந்த சமயத்தில் ஆரம்பித்த வேலைகள் 300 கோடி ரூபாய் வருவாய் வருகின்ற சமயத்தில் விஸ்தரிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றனவே தவிர புரட்சிகரமான வேலைகள் ஒன்றும் ஆரம்பிக்கப்படவில்லையென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சமூகப் பணிகளுக்கான செலவிற்காக 1966-67-ல் 43.86 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. 1970–71-ல் 66.83 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1966--67-ல் நமது வருவாய் 200 கோடி ரூபாயாக இருந்தது. இப்போது 300 கோடியாக உயர்ந்திருக்கிறது. கூடுதல் வரவு இருப்பதால் கூடுதல் செலவு காட்டப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு துறையிலும் இவ்வாறான கூடுதல் வரவுக்கேற்ற கூடுதல் செலவு என்ற அடிப்படையில்தான் வேலைகள் நடத்தப்பட்டு வருகின்றனவே தவிர புதுமையும் காணப்படவில்லை.

அடுத்தபடியாக, 'பசுமைப் புரட்சி'. 1966-67-ம் ஆண்டில் 57.9 லட்சம் டன் தானியம் உற்பத்தியானது. 1969-70-ல் 63 லட்சம் டன் தானியம் உற்பத்தியானது என்று சொல்லப்படுகிறது. 1966-67-ல் 5.27 லட்சம் ஏக்கர் நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டன. 1968-69-ல் 17.8 லட்சம் ஏக்கர் நிலங்களில் பயிரிடப்பட்டதாகச் சொல்கிறார்கள். முன்பு சுமார் 5 லட்சம் ஏக்கர், தற்போது சுமார் 17 இலட்சம் ஏக்கர் பயிரிடப்படுகின்றன. முன்பு விளைந்ததானியம் 57 லட்சம் டன் தானியம். தற்போது விளைந்திருப்பது தாக்கலட்சம் டன் தானியம். நிலத்தின் பரப்பளவு மூன்று மடங்கு அதற்குகரித்திருக்க, உற்பத்தியான தானியம் அதிகமாகக் கிடைத்லாம் மப்பது 9 லட்சம் டன் தானியம்தான். இவ்வளவு அதிக ஏக்கர் பட்டதாகள் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டபோதிலும் மூன்று இருக்கிங்கு தானியம் அதிகப்படுவதற்கு மாறாக 9 லட்சம் டன்தான் போக்கப்பட்டிருக்கிறது. இதற்கான காரணம் என்ன என்பதைக்கார் ஆராய்ந்து பார்க்க வேண்டும். மேலும் ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் நீண்டகாலக் கடன் உதவிகளைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். 1966-67-ல் விவசாயிகளுக்குக் கடனை அளித்திருப்பது 4.27 கோடி ரூபாய். தற்போது 1968-69-ல் 14.67 கோடி ரூபாய் என்று சொல்கிறார்கள். இப்படி அதிக அளவில் கடன் உதவிகளை அளித்த பிறகும் இதனால் உற்பத்தி அதிகப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். நிலவள வங்கிகளை அமைத்து, அதன்மூலம் விவசாயிகளுக்குக் கடன் அளவை அதிகப்படுத்தினால், விவசாயி உற்பத்தியைப் பெருக்கவேண்டும். விவசாயிக்குத் தக்கபடி கடன் உதவி அளித்தும் உற்பத்தி பெருகாவிட்டால் அதற்குள்ள காரணத்தை ஆராய வேண்டும்.





கல்வி விஷயத்தைப்பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஐயாயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களை நியமிக்கப் போவதாகச் சொல்கிறார்கள். இன்றைய தினம் இருந்து வரும் கல்வியின் தரம் என்ன? கல்வியின் தரத்தை உயர்த்த என்ன வேண்டும் என்பதைப்பற்றி அரசு தக்க கவனம் செலுத்தவேண்டும். கல்வி கற்றவர்கள் தற்பொழுது வேலையில்லாமல் இருக்கிறார்கள். கல்வியின் தரம் மிகவும் குறைந்துபோய் விட்டது. தற்போது ஆசிரியர்களுக்கு எட்டாவது ஸ்டாண்டர்டு படித்தவர்களுக்கு ஒரு டிரெயினிங், எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு ஒரு டிரெயினிங் என்று நடத்துகிறார்கள். ஆசிரியர் ட்ரெயினிங்குக்கு குறைந்த பட்சம் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்தவர்களையேதான் எடுக்க வேண்டும். எட்டாவது வகுப்பு படித்துவிட்டு, டிரெயினிங் படித்துவிட்டு வந்து, மாணவர்களுக்குக் கற்பித்தால் கல்வியின் தரத்தை எப்படி உயர்த்த முடியும்? ஆகவேதான் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களை டிரெயினிங்குக்கு அனுப்பி, அப்படிப்பட்டவர்களையேதான் பள்ளிக்கூடங்களில் நியமிக்க வேண்டும் என்று அரசு வரையறை செய்துகொள்ள வேண்டும். தற்போது படித்த பட்டதாரிகளுக்கும் வேலை கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட பட்டதாரிகளை, பி.டி.க்களை ப்ரைமரி பள்ளிக்கூடங்களில் ஏன் அரசு நியமிக்கக்கூடாது? பட்டதாரிகளுக்கு சம்பளத்தை அதிகப்படுத்தி அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கலாம். அப்போது கல்வியின் தரமும் உயரும் என்பதில் சந்தேகமில்லை. அமெரிக்கா போன்ற மேல் நாடுகளில் அப்படித்தான் செய்கிறார்கள். பட்டதாரிகளுக்கு சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்போது ஆசிரியர்களும் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு, மாணவர்களை நன்கு கவனிக்க ஆரம்பித்தால் நிச்சயமாகக் கல்வியின் தரம் உயரும்.

அடுத்தபடியாக, ஆசிரியர்கள்-மாணவர்கள் விகிதாசாரத்தை மாற்றம் செய்யவேண்டும். ஒரு வகுப்புக்கு 25 மாணவர்கள் என்ற அளவில் இருக்கவேண்டும். ஆசிரியர் ஒவ்வொரு மாணவனிடமும் அதிக கவனம் செலுத்தமுடியும். இதனால் கல்வியின் தரமும் உயருவதற்கு வழி ஏற்படும். அப்போதுதான் இக்கால மாணவர்கள் பிரயோஜனமான எதிர்கால பிரஜைகளாக மாறக்கூடும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கலாம். இவ்வாறான முறைகளில் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் இப்போதுள்ள முறையைச் சீரமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்— தலைமை)

இப்போது உணவுக் கட்டுப்பாடு நீக்கப்பட்டிருக்கிறது. உணவுக் கட்டுப்பாடு நீக்கப்பட்டிருப்பது நல்லதுதான். ஆனால் மீண்டும் விலை அதிகமாக ஏறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்போது அறுவடைக் காலமானதால் விலை சற்றுச் சீராக இருக்கிறது. மீண்டும் விலை ஏறலாம். அப்படி விலை ஏறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ரேஷன் ஏற்பாட்டைத் திரும்பவும் கொண்டு வராமல் உணவுத் தானியப் பொருள்களை தாராளமாக வாங்கும்படியான

[திரு. எம். வில்லியம்] [1970 பிப்ரவரி 28

நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். குமரி மாவட்டத்தில் லைசென்ஸ் கிடைக்க வேண்டும் என்று மனுப் போட்டிருக்கும் அனைவருக்கும் லைசென்ஸ் வழங்க வேண்டும். கட்சிக் கண்ணோட்டத்துடன் லைசென்ஸ் வழங்காமலிருக்க ஏற்பாடு செய்யவேண்டும். சிலர் கள்ளத்தனமாக உணவு தானியப் பொருட்களை கேரளத்திற்கு கடத்திக்கொண்டு போகிறார்கள். அப்படிச் செய்பவர்களை அரசு கண்டுபிடிக்க வேண்டும். கடத்தலைத் தடுக்க பறக்கும் படையை எல்லையில் ரோந்து செய்ய ஏற்பாடு செய்வதுடன் செக் போஸ்டுகளை எல்லையில் மாற்றவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விளவங்கோடில் மாத்திரம் 3½ லட்சம் ஜனத் தொகை இருக்கிறது. அங்கே வெளிமார்க்கெட்டில் அரிசி விற்கத் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் ரீ-சர்வே வேலை நடந்து வருகிறது.
பி.ப. 12-30 உடைமையாளர்களுக்குத் தகுந்த நோட்டீசும் இன்றி அவசரம் அவசரமாக ரீ-சர்வே நடக்கிறது. பட்டா கொடுப்பதில் தவறு நடந்திருக்கிறது. இப்படி அவசரம் அவசரமாகச் செய்வதனால் உடமையாளர்களுக்குப் பல சங்கடங்கள். அதன் காரணமாக பல வழக்குகள் எல்லாம் ஏற்பட்டுவிடும். ஆகவே, நல்லமுறையில் ரீ-சர்வே நடப்பதற்கான உத்தரவை அரசாங்கம் போடவேண்டுமென்றும், தவறுகளை உடனுக்குடன் அதிகாரிகள் சரிப்படுத்தி நியாயம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. செஞ்சி வெ. முனுசாமி : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசின் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 1970-71-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருப்பதை வரவேற்று சில கருத்துக்கள் வழங்கலாம் என்று விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில்--முதல் பகுதியில் மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இருக்கின்ற உறவு நிலையையும், எந்த எந்தக் காரணங்களால் நிதி கூடுதலாக நமக்குக் கிடைக்கவில்லை என்ற காரணங்களையும், ஒருதலைப்பட்சமாகச் செயல்பட்டிருக்கிற தன்மையையும் தீட்டப்பட்டிருக்கிறது. அப்படித் தீட்டியுள்ளது பற்றித் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்கிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள்—குறிப்பாக சுதந்திராக் கட்சி உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்களும், காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. வில்லியம்ஸ் அவர்களும், "அதை இங்கே பேசிப் பயன் என்ன? நாடாளுமன்றத்தில் சொல்ல வேண்டும்" என்று சொன்னார்கள்.

இங்கே மாநில அரசு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் நல்ல நோக்கத்தோடு ஆட்சி செய்ய வேண்டும் என்று ஆட்சிக்கு வந்திருக்கிற நேரத்தில் பல திட்டங்களைச் செய்ய முடியவில்லை என்று சொன்னால், எங்களது பல கொள்கைகளை நிறைவேற்ற முடியவில்லை என்று சொன்னால் அதற்கு நாங்கள் காரணமா, அல்லது மத்திய அரசு காரணமா என்கிற காரண காரிய விளக்கங்களை இந்த அவைக்குத் தெரிவிக்க மாநில அரசு கடமைப்பட்டிருக்கிறது.



1970 பிப்ரவரி 28] [திரு. செஞ்சி வெ. முனுசாமி]

இன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையில் காங்கிரஸ் பிரதான எதிர்க் கட்சியாக விளங்குகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கருத்திருமன் தலைமையில் அது இயங்குகிறது. மாநில அரசு தன்னுடைய நிதி நிலை அறிக்கையில் இருக்கக்கூடிய உண்மையான நிலவரங்களை எடுத்து விளக்கியிருப்பதை அவர்கள் முழுக்க முழுக்க வரவேற்பார்கள் என்று நினைத்தேன். அதுவும் இந்திரா காந்தி அம்மையார் இப்போது இந்தியப் பிரதமராக இருப்பதன் காரணமாக இதை ஸ்தாபன காங்கிரஸ்காரர்கள் வரவேற்பார்கள் என்ற எண்ணத்தில் இருந்தேன். ஆனால் விவாதத்தைத் துவக்கி வைத்த திரு. மகாதேவன் பிள்ளை இதை ஏதோ ஒப்புக்காகச் சொல்வது என்று குறிப்பிட்டார்கள். தமிழ்த்தாயின் தலைமகன், எங்கள் இயக்கத்தின் தனித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை இந்த மன்றத்தில் சமர்ப்பித்த போதே தெள்ளத் தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாட்டுக்கு நல்லது செய்யவேண்டுமென்று நாம் எல்லாம் வந்திருக்கிறோம். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்—கட்சி மாச்சரியத்தை விட்டு விட்டு நாட்டுக்கு நல்லது செய்ய வேண்டுமென்ற உணர்வோடு தயவுசெய்து இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றிப் பேசினார்கள். விலைவாசி ஏற்றத்தைப்பற்றிப் பேசினார்கள். தொழில் மந்தம் ஏற்பட்டிருப்பதைப்பற்றிப் பேசினார்கள். இவற்றுக்கு எல்லாம் காரணம் யார், இந்த அரசுதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏதோ டெல்லியில் கூடி, பம்பாயில் கூடி முடிவு செய்து வருகிறார்களே அந்த மத்திய அரசுதான் காரணமாகும். அவர்கள் வகுக்கின்ற பொருளாதாரக் கொள்கைதான் காரணமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாடாளுமன்றத்தில் சொல்லவேண்டிய கருத்துக்களை இங்கே சொல்வானேன், அங்கே சொல்ல வேண்டும் என்பதை ஒத்துக் கொள்கிறோம். இங்குள்ளவர்களுக்கும் உண்மையான நிலை தெரிந்தாக வேண்டும் என்பதை மறுக்க முடியாது. மேலும் நாடாளுமன்றத்தில் நாங்கள் 25 பேர்களே இருக்கிறோம். வறட்சி நிவாரணப் பணிக்குச் சரியான முறையில், நியாயமான முறையில் மத்திய அரசு நமக்குத் தந்த உதவியை ஒருதலைப்பட்சமாக இந்த ஆட்சியாளரிடம் காட்டக்கூடிய சலுகைபோன்றதுபோல எதிர்க் கட்சி பேசுவது சரியானதல்ல.

[திரு. செஞ்சி வெ. முனுசாமி] [1970 பிப்ரவரி 28

இன்றைக்கு மத்திய அரசிடம் அதிகாரம் குவிந்திருக்கிறது என்பதை இந்த அரசு சுட்டிக்காட்டியிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி ஏற்றம், தொழில் மந்தம் என்கிற போதெல்லாம் நாம் வேதனைப்படுகிறோம். முன்பு வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று நாங்கள் சொல்லிவந்தபோது காங்கிரஸ்காரர்கள் நையாண்டி செய்து வந்தார்கள். ஆனால் இன்றைக்கு நமது அண்டைமாநிலமான கேரள அரசாங்கத்து நிதி அமைச்சர் திரு. எம். கே. சேஷன் அவர்கள் நிதிநிலை அறிக்கையை நேற்று அந்த அவையில் சமர்ப்பிக்கிறபோது — ஐந்தாவது நிதி ஆணைக்குழு கேரளத்திற்கு மட்டுமல்ல, தென்னக ராஜ்யங்களுக்கே தரவேண்டிய நியாயத்தைத் தரத் தவறியிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைவிட வட ராஜ்யங்களுக்கு ஒருவிதமாகவும், தென் ராஜ்யங்களுக்கு ஒருவிதமாகவும் பாரபட்சம் காட்டியிருக்கிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். குறிப்பாக வடக்கே இருக்கிற 7 மாநிலங்களுக்கு 15 கோடியில் இருந்து 419 கோடிவரை அதிகமாகக் கிடைக்கும்படியாகவும் தென் ராஜ்யங்களுக்குப் பற்றாக்குறையாகவும்—அதுவும் தமிழகத்திற்கு மிகவும் குறைவாகவும்—துண்டு விழுகின்ற நிலையில் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதைச் சொல்லியிருக்கிறார்கள்.

ஒருதரப்பட்ட மக்களுக்காக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி நடத்தவில்லை. பலதரப்பட்ட மக்களுக்காகத் திட்டம் தீட்டி வந்திருக்கிறது. இருக்கக்கூடிய நிதி ஆதாரங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொண்டு வருகிறது. வேண்டுமென்றால் அரசியல் லாபத்திற்காக இதைக் குறை கூறி வெளி மேடைகளில் பேசலாமே தவிர சட்டமன்றத்தில் பேசுவது அவ்வளவு சிறப்பாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கவேண்டுமென்றால் வேலை வாய்ப்புக்களைப் பெருக்கவேண்டும். வேலை வாய்ப்புக்கள் பெருக நிறைய தொழிற்சாலைகள் ஏற்பட்டாகவேண்டும். ஒரு பக்கம் விலை உயர்வினால் ஊதிய உயர்வு கோரப்பட்டு வருகிறது. ஊதிய உயர்வு கொடுக்கக் கொடுக்க விலைவாசிகளும் ஏறிக்கொண்டே போகின்றன. கட்சிமாச்சரியமற்று இதற்கு ஒரு நல்ல முடிவை எல்லாக் கட்சிகளும் சேர்ந்து எடுத்தாகவேண்டும். ஒவ்வொரு பட்ஜெட்டிலும் ஊதிய உயர்வு கொடுத்துக்கொண்டே போனால் மட்டும் போதுமா ? மற்றத் திட்டங்களை எப்படி உருவாக்கமுடியும்? இடைக்கால நிவாரணமாக 30 ரூபாய் தாவேண்டுமென்று அரசு சிப்பந்திகள் கேட்டார்கள். அவர்கள் நடத்திய கூட்டத்தில் கலந்துகொண்ட எதிர்க்கட்சி வரிசையில் உள்ளவர்கள் அன்றைக்குப்பேசிய பேச்சுக்கள் அவர்களை மேலும் தூண்டிவிட வேண்டும் என்கிற ரீதியில் இருந்ததே தவிர நாட்டு மக்களுடைய பிரதிநிதிகள் தாம் என்கிற உணர்வோடு பேசியதாகக் காணோம். இன்றைக்கு அவர்களுக்கு அரசு 10 ரூபாய் உயர்த்திக் கொடுத்திருக்கிறது.



1970 பிப்ரவரி 28] [திரு. செஞ்சி வெ. முனுசாமி]

வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி ஏற்றம், தொழில் மந்தம் இவற்றை எல்லாம் கருத்தில்கொண்டு இவை நீங்க செம்மையான முறையில் மாநில அரசுகள் செயல்படவேண்டுமென்றால் என்ன வழி என்பதைச் சிந்தித்தாக வேண்டும். அண்மையில் திருச்சியில் நடந்த எங்கள் மகாநாட்டில் கலைஞர் அவர்கள் ஒரு கொள்கையைச் சொல்லியிருக்கிறார்கள். மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்றார்கள். இது எவ்வளவு நியாயமான கோரிக்கை என்பதை எல்லாக் கட்சியினர்களும் சிந்தித்ததாக வேண்டும். இதற்கு ஆதரவு அளித்தாகவேண்டும்.

அடுத்து, நில உச்சவரம்பை 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரில் இருந்து 15 ஸ்டாண்டர்ட் ஏக்கராகக் குறைத்திருக்கிறார்கள். இதை வரவேற்கின்ற நேரத்தில் சுதந்திராக் கட்சிக்காரர்கள், கம்யூனிஸ்ட்டுக் கட்சிக்காரர்கள், காங்கிரஸ் கட்சிக்காரர்கள்—எல்லோருமே—ஏழைகள் — பணக்காரர்கள் இவர்களுக்கிடையே உள்ள பெரும் பள்ளம் தூர்ந்தாகவேண்டும், உச்சவரம்பு கிராமங்களுக்கு மட்டும் அல்ல, நகர்ப்புற நிலங்கள், சொத்துக்களுக்கும் ஏற்படுத்தியாகவேண்டும் என்பதை ஒப்புக் கொண்டாகவேண்டும். கிராமப்புறத்திலே விவசாயிகளைப் பாதிக்காத வகையில், நாட்டு மக்களுக்கும் ஏற்றதொரு கொள்கையாக இந்தக் கொள்கை இருக்கிறது. பல பஸ்களை வைத்துக்கொண்டிருக்கின்ற மோட்டார் மன்னர்கள் யாராக இருந்தாலும் அதற்கும் உச்ச வரம்பை ஏற்படுத்தவேண்டும். அதே போன்று பல லட்சக்கணக்கான ரூபாய்களுக்கு வீடுகளை வைத்துக்கொண்டு நகரத்திலே வாடகைக்குவிட்டு வாடகை வாங்கிக்கொண்டிருக்கின்றவர்களுக்கும் ஒரு உச்சவரம்பைக் கொண்டுவரவேண்டும். ஒரு ஆள் பல தொழில்களை வைத்துக்கொண்டிருக்கிற நிலைமையும் இருக்கிறது. ஒரு ஆள் ஒரு தொழில்தான் வைத்துக்கொள்ளலாம் என்ற அளவிலே அதற்கும் உச்சவரம்பு விதிக்கவேண்டும். ஒரு பெரிய அதிகாரி 5 ஆயிரம் அல்லது 6 ஆயிரம் என்று சம்பளம் வாங்கும் அதே நேரத்திலே கீழே வேலை பார்க்கிறவர் 100 ரூபாய் 150 ரூபாய்தான் பெறக்கூடிய நிலைமை மேட்டுக்கும் பள்ளத்திற்கும் உள்ள வேறுபாட்டைப் போன்று இருக்கிறது. இவற்றையும் மாற்ற வேண்டும். உச்ச வரம்பு என்பது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏற்ற கொள்கை, காங்கிரஸுக்கும் ஏற்ற கொள்கை, கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஏற்ற கொள்கை. அதை ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையிலேதான் இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது. ஏதோ விவசாயிகள் மத்தியிலே தவறான முறையிலே எண்ணம் ஏற்பட வேண்டுமென்பதற்காகக் கூறவேண்டாம் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்** : தலைவர் அவர்களே, 1970-71-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்பேரில் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நிதிநிலை அறிக்கையிலே உண்மை நிலவரங்கள் உரைக்கப்பட்டிருக்கின்றன. வாங்கும் சக்தி குறைந்திருக்கிறது, தொழில்கள் நின்றுவிட்டன. பஞ்சாலை

முடங்கியிருக்கின்றது, உற்பத்திப் பொருளை வாங்குவோர் இல்லாமல் ஒரு மந்தமான நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இதற்கெல்லாம் முக்கியமான காரணம் மத்திய மாநில அரசுகள் உறவு என்று சொல்லப்படுகிறது. ஒரு பக்கம் அது உண்மையாக இருந்தாலும் அவர்களை மட்டும் குற்றம் சுமத்திக்கொண்டு இராமல் நாம் எப்படி முன்னேறலாம் என்பதையும் நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டிய நிலைமை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. காரணம் என்னவென்றால் மத்திய சர்காருடைய பொறுப்பு தளரக்கூடிய நிலைமையிலே இருக்கிறது, அவர்கள் கொள்கையை மாற்றவேண்டிய நிலைமையிலே இருந்துகொண்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் திருச்சியிலே சொன்ன கொள்கையை வரவேற்கக்கூடிய நிலைமை அங்கே இருக்கிறது. பெடரல் எக்கனமிக் பிளானிங் கவுன்சில் மூலமாகச் செய்யலாம் என்று இருந்தாலும் கட்சி சார்பற்ற முறையிலே பொருளாதார வல்லுநர்களைக் கொண்டு ஒரு அறிக்கையைப் பெற்றுக்கொண்டு செயல்படவேண்டும். அதற்குப் பிறகு மத்திய ஆட்சியை வற்புறுத்திச் செயல்படச் செய்யவேண்டும். நம்முடைய நாட்டில் மட்டுமல்ல, பொருளாதார மந்தம் என்பது உலகத்திலே ஆங்காங்கு இருக்கக்கூடிய செயல்முறைக்குத் தகுந்தபடி, உற்பத்திக்குத் தகுந்தபடி, மாறியிருக்கிற சூழ்நிலைக்குத் தகுந்தபடி பொருளாதார மந்தம் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய நாட்டிலே உள்ள குறைந்த பொருளாதாரத்தை வைத்துக்கொண்டு எப்படி நாட்டிலே வாழலாம் என்பதைப்பற்றி ஒரு அறிக்கை பெற வேண்டும். நாம் எவ்வளவு செய்யமுடியுமோ அதை நாம் செய்துவிட்டு அதுபோக மற்றவற்றினைச் செய்வதற்கு மத்திய சர்க்காரிடத்திலே வற்புறுத்தலாம். அந்த அறிக்கையை உடனடியாக வாங்குவதன் காரணமாக மத்திய சர்க்காருக்கும் ஒரு விழிப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

படித்தவர்களிடையே வேலை வாய்ப்பு இல்லை என்று சொல்லப்படுகின்றது. அது உண்மைதான். எம். ஏ., எம். எஸ்ஸி., படித்தவர்களுக்குக்கூட வேலை வாய்ப்பு இல்லை. இப்பொழுது வங்கிகளிலே படித்தவர்களைக் கூப்பிடுகிறார்கள், அவர்கள் தொழில் நடத்துவதற்குப் பணம் கொடுக்கிறார்கள். ஆறு மாதங்கள் பயிற்சி கொடுக்கிறோம், பணத்தை உங்களிடத்திலே கொடுத்து விடுகிறோம் தொழில் செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். பெர்டிலைசர் சம்பந்தப்பட்டவரையில் 10 ஆயிரம் ரூபாய் அல்லது 5 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம், எங்களுக்குப் படித்தவர்கள்தான் தேவை. படித்தவர்கள் வந்தால் ஆறு மாதம் டிரெயினிங் கொடுத்து மக்களுக்கு பெர்டிலைசர் எப்படி யூஸ் பண்ணுவது என்பதுபற்றிப் போதித்து அவர்களை 'பெர்டிலைசர் மைன்டட்' ஆக மாற்றுவதற்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இதுபோன்ற திட்டத்தை வங்கிகளில் செய்து கொடுக்கிறார்கள். நாம் ஏன் செய்யக்கூடாது? கோடிக்





கணக்கான பணம் கான்ட்ராக்டுக்குச் செலவழிக்கிறோம். பல திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. பெரிய பெரிய கம்பெனிகளிடம் அவற்றைக் கொடுக்கிறோம். அதன் காரணமாக 100 ரூபாய் வேலையை 130 ரூபாய் அளவிலே செய்யக்கூடிய நிலைமையெல்லாம் ஏற்படுகிறது. லீட் என்று சொல்லப்படுகிறதே அதைக் கூட்டுவதற்குத்தான் வழி செய்யப்படுகிறது. படித்தவர்களில் இரண்டு விதமான பாகுபாடு இருக்கிறது. ஒன்று எக்கனமிக் சைடில் வருகிறவர்கள், அடுத்ததாக இருப்பது தொழில் செய்வதில் வருகிறார்கள். இரும்பு, சிமின்ட், தளவாடங்கள் இவை இருக்கின்றன. இவற்றையெல்லாம் கொடுத்து வேலை செய்யச் சொல்லலாம். பி.இ. படித்தவர்களுக்கு என்ன வேலை கொடுப்பது டிப்ளமா பெற்றவர்களுக்கு என்ன வேலை கொடுப்பது என்றெல்லாம் பார்த்து அவர்களுக்கு முன் பணம் கொடுத்து வேலை வாய்ப்பைக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யலாம்.

உணவுதானியக் கன்ட்ரோலைத் தளர்த்தியிருக்கிறார்கள், ஒரு குடியானவன் என்ற முறையிலே நான் அதை வரவேற்கிறேன். தஞ்சாவூர் பகுதியிலே விலையிறங்கிவிட்டது என்று சொல்கிறார்கள். உண்மை அதுவல்ல. தஞ்சாவூரிலே கட்டுப்பாடான நிலச்சுவான்தார்கள் இருக்கிறார்கள். இறங்கிவிட்டது என்று சொல்வார்கள். ரெகுலேட்டட் மார்க்கெட் மூலமாக உணவு தானியங்களைப் பெற வேண்டுமென்று வைத்துவிட்டால் தவறு நடக்காது. அப்படிச் செய்யும்பொழுது ரசீது போடவேண்டும். சாதாரணமாக எடுத்துக்கொண்டால் மக்காச் சோளம், ஹைபிரிட் சோளத்திற்கு மார்க்கெட் இல்லை. ஆனால் மிடில்மென் இருக்கிறார்களே அவர்களுக்கு பிராபிட் இருந்துகொண்டிருக்கிறது. இடையில் இருக்கிற தரகர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். ரெகுலேட்டட் மார்க்கெட்டிலே எடுத்துக்கொண்டால் தவறுகள் நடக்காது. மில்காரர்களும் வாங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். மெய்ஸிலிருந்து ரவை, மாவு இவற்றைத் தயாரித்துப் பயன்படுத்தலாம். இதற்காகச் சட்டரீதியாக ஆங்காங்கு 5 மைலுக்கு அல்லது 3 மைலுக்கு என்ற வீதத்தில் சென்டர்கள் ஏற்படுத்தி விலையைக் கட்டுப்பாடு செய்யலாம்.

கால்நடை வளர்ச்சித் துறையில் சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றது. செயல்முறைகளில் உள்ள குறைபாடுகளை ஆறு மாதங்கள் கழித்துப் பரிசீலனை செய்ய வேண்டும். ஆரம்பத்தில் குறைபாடுகள் இருப்பது இயற்கைதான். ஆறு மாதங்கள் கழித்து என்ன கஷ்டம் இருக்கிறது, என்ன குற்றம் இருக்கிறது என்று தெரிந்துகொண்டால் நீங்கள் எடுத்திருக்கின்ற சிக்கன நடவடிக்கை பயனுள்ளதாக இருக்கும். கால்நடைகளைப் பொறுத்தவரையில் மிக்ஸட் பார்ம் ஆக வைத்தால் நல்லது. பல காரணங்கள் சொல்வார்கள், வைக்கோல் வெளியிலிருந்து வாங்கவேண்டியிருக்கிறது, பருத்திக்கொட்டை வெளியிலிருந்து வாங்கவேண்டியிருக்கிறது என்றெல்லாம் சொல்வார்கள். அதிகாரிகள் அதிகமாக

[திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்] [1970 பிப்ரவரி 28

இருக்கிறார்கள். இதைப் பொறுத்தவரையில் மிக்ஸட் பார்ம் ஆக வைத்து நடத்தினால் பிராபிட் ஆக நடக்கும். இதிலே இரண்டு வகை இருக்கிறது. ஒன்று மேய்ச்சலுக்காக என்றும், அபிவிருத்திக்காக என்றும் இருக்கின்றது . . . (மணியடிக்கப்பட்டது).

அடுத்தபடியாக, வறட்சி சம்பந்தமாக இரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த அறிக்கையிலே 14-வது பாராவிலே வறட்சி நிலைமைகளைப்பற்றிச் சொல்லும்பொழுது "இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி முதலிய மாநிலங்களின் சில பகுதிகளில் மழை பெய்யாது போனமை குறித்த சில அறிக்கைகளை இந்த நிலையில் குறிப்பிடுவது பொருத்தமானதாகும் என நான் கருதுகிறேன். வறட்சி நிலைமைகளைச் சமாளிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்" என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இது வருந்தத்தக்கது. அங்கே ஐந்து வருடமாகக் கஷ்டப்படுகிறோம். சமீபத்திலே சீப் செகரட்டரி அவர்கள் சுற்றிப் பார்த்துவிட்டு திட்டமும் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. இன்னும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றுதான் இருக்கிறது. இந்த பட்ஜெட் முடிவதற்குள்ளாவது என்ன என்ன திட்டம் நடை முறைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைச் சொல்ல வேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட பிளான்கள் எல்லாம் இருக்கின்றன.

எங்கள் பகுதியை எடுத்துக்கொண்டால் கருப்பானேத் திட்டம் என்ற ஒன்று இருக்கிறது. அந்தத் திட்டத்தை முன்னோடியாக எடுத்து நடத்தலாம் என்ற அபிப்பிராயம் கூட சீஃப் செகரட்டரி கொடுத்ததாகக் கேள்விப்படுகிறேன். "ரூரல் மான்பவர்ஸ்" ஐப் பயன்படுத்தி ஒரு கோடி 80 லட்சம் ரூபாய் செலவாகக் கூடிய திட்டம். ஐந்து வருஷ காலமாக நாங்கள் தவித்துக் கொண்டிருக்கிறோம். இதனால் மூன்று பகுதிகளுக்குப் பலன் ஏற்படும். வாசுதேவநல்லூர் சட்டசபைத் தொகுதி, கடையநல்லூர் சட்டசபைத் தொகுதி, ஆலங்குளம் சட்டசபைத் தொகுதி இதனால் பலன் பெறும். 13,000 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யும் மக்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். பிளானே அட்வான்ஸ் பண்ணி கருப்பானேத் திட்டத்தை நிறைவேற்ற ரூரல் மான் பவரைப் பயன்படுத்துவதன் மூலம் வேலை வாய்ப்பும் ஏற்படும் என்று சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே சில வரவேற்கத்தக்க அம்சங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். நில உடைமைக்கு உச்சவரம்பைக் குறைப்பது, கிராமப் புறங்களில் வேகமான முறையில் குடிநீர் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது, மின்சார வசதிகளைப் பெருக்கி விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கான காரியங்களைச் செய்வது என்ற முறையில் அரசாங்கம் திட்டமிட்டிருப்பதை நான் பொதுவாக வரவேற்கிறேன். ஆனால்



1970 பிப்ரவரி 28] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொருத்தவரையிலே பொதுவாகப் பார்க்கிறபோது கடந்த ஆண்டுகளைப் போல் வளர்ச்சியுற்றதாக இருக்கவில்லை என்பது என்னுடைய கருத்து. அந்த வகையிலே இது பிற்போக்கானதாக இருக்கிறது என்று கூற விரும்புகிறேன்.

கடந்த பத்து ஆண்டுகளை எடுத்துப் பார்க்கிறபோது, ஆண்டுக்கு ஆண்டு எவ்வளவு தூரம் பட்ஜட் உயர்ந்துகொண்டு வந்திருக்கிறது என்பதைப் பார்க்க முடியும். 1962-63-ல் இருந்ததைவிட 1963–64-ல் 13 கோடி, அடுத்த ஆண்டு 17 கோடி, அடுத்த ஆண்டு 19 கோடி, அடுத்த ஆண்டு 20 கோடி, பிறகு 32 கோடி, அதற்குப் பிறகு 27 கோடி என்று அதிகமாகிக் கொண்டே வந்திருக்கிறது. இந்த ஆண்டு பத்து கோடி ரூபாய்தான் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகரிப்பிலே உள்ள 'டெம்போ' இந்த ஆண்டு குறைந்திருக்கிறது. (மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: நான்காவது திட்டம் 'ஃபைனலைஸ் ஆகவில்லை'). நான்காவது திட்டம் ஃபைனலைஸ் ஆகாத நிலையிலே சென்ற ஆண்டு 27 கோடி ரூபாய் அதிகரித்திருக்கிறது, இந்த ஆண்டு அந்த டெம்போ குறைந்திருக்கிறது. அந்த 'டெம்போ' குறையாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இதிலே ஆறு கோடி ரூபாய் இடைக்கால நிவாரணமாக அரசாங்கச் சிப்பந்திகளுக்குக் கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. இரண்டு சதவிகிதம் என்ற வீதத்தில் ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டே போகும்போது பட்ஜட் அதிகரிப்பு போதாது. சென்ற பட்ஜட்டில் அடிஷனல் மொபிலிசேஷன் என்று 5 கோடி 60 லட்சம் ரூபாயைச் சரிக்கட்டாத நிலையில் 14, 15 கோடி ரூபாய் துண்டு விழுவதை ஈடு கட்ட முடியாமல் விட்டிருக்கிறார்கள். இதை மத்திய அரசாங்கத்தோடு போராடிப் பெறவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இதிலே அரசாங்கத்தின் முயற்சியைப் பாராட்டுகிறேன். இந்தத் தொகையை ஈடுகட்ட புதிய வரிகளைப் போடவேண்டுமென்ற எண்ணத்தை விட்டு விட்டு மத்திய அரசாங்கத்தில் இருந்துதான் பெறவேண்டுமென்ற முறையில் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். சென்ற ஆண்டு வேஸ் அண்டு மீன்ஸ் பட்ஜட்டில் கன்டின்ஜென்சி பண்டில் இருந்து 5 கோடி 14 லட்சம் ரூபாய் எடுக்கப்பட்டது ஈடு செய்யப்படாமல் இருக்கிறது. அவசர கால நிதியில் இருந்து எடுத்துக்கொள்ளுவது தவறு இல்லை என்றாலும் அது ஈடு செய்யப்படாமல் இருப்பது நடைமுறைக்குப் பொருத்தமானது அல்ல. அது உடனடியாகச் சரி செய்யப்பட வேண்டும்.

காபிடல் சைடில் பார்க்கும்போது 1968-69-ல் 45 கோடி ரூபாய் மூலதனம், 1969–70-ல் 36 கோடி ரூபாய்தான். இந்த ஆண்டு 37 கோடி ரூபாய்தான். மூலதன முதலீடு குறைவதன் காரணமாக வேலை வாய்ப்பு கிடைப்பது அரிதாகிறது. மூலதன முதலீட்டை அதிகமாகச் செய்திருக்க வேண்டும். அவுட்சைட் தி ரெவின்யூ அக்கவுண்ட் 37 கோடி ரூபாய் என்று போட்டாலும் ரெவின்யூ அக்கவுண்டுக்குள்ளேயும் முதலீட்டை அதிகரிக்கவில்லை. அஸெட்டை எடுத்துக் கொண்டால் 1969-70-ல் 59 கோடி ரூபாய் அதிகரிப்பு என்

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாநில சுயாட்சி என்பதால் மத்தியில் பலஹீனமோ அல்லது இந்தியாவின் பாதுகாப்பிற்கு பலஹீனமோ ஏற்படுத்தாத வகையில் அதிக அதிகாரங்களைப் பெற்ற நிலையில் அமையவேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில சுயாட்சித் திட்டத்திற்கான விளக்கம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மகிழ்ச்சி. அடுத்து, அன்னியச் செலாவணி காரணமாக சில தொழில்களை ஆரம்பிப்பதற்கு மத்திய அரசை நம்பி இருக்கவேண்டியிருக்கிறது. அதனால் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே நாம் மத்திய அரசை வற்புறுத்தி நம் மாநிலத்திற்கு என்று அவர்கள் இவ்வளவு அன்னியச் செலாவணி என்று கொடுத்துவிட்டால் அதைக் கொண்டு நாம் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலம் பல காரியங்களைச் செய்ய வசதியாக இருக்கும். அந்த முறையில் மத்திய அரசோடு நாம் போராடி அதிகப்படியான அன்னியச் செலாவணியைப் பெற முயற்சிக்க வேண்டும். சிறு தொழில்களுக்கான லைசென்ஸ் வழங்குவதற்கும் மத்திய அரசாங்கத்திடம் சென்று வருவதற்கு கால தாமதம் ஆகிறது. ஆகவே அப்படிப்பட்ட தொழில்களுக்கு லைசென்ஸ் வழங்கும் அதிகாரம் மாநில அரசுக்கு வரவேண்டும் என்பதை ஆதரிக்கிறேன்.

அடுத்து, இப்போது சில பாங்குகளை நாஷனலைஸ் செய்திருக்கிறார்கள். அப்படி நாஷனலைஸ் செய்யப்பட்டிருப்பதால் மத்தியில் எல்லா அதிகாரங்களும் குவிந்து கிடக்கின்றன. ஆகவே மாநிலத்திலுள்ள வங்கிகளை அணுகி விவசாயிகளுக்கு அல்லது தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. நமக்கு அதில் அதிகாரம் இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அவற்றில் மாநில அரசாங்கங்களுக்கு ஓரளவு பிரதிநிதித்துவம் கொடுத்து மாநிலங்களின் கருத்துக்களை வற்புறுத்த வாய்ப்பு அளிக்கப்படவேண்டும்.

நில சீர்திருத்தச் சட்டத்தைப் புரட்சிகரமான முறையில் வேகமாகச் செய்திருக்கிறீர்கள்; அதைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் கன்சாலிடேட்டட் ஆக்டில் நாம் பலவிதமான திருத்தங்களைக் கொண்டுவரவேண்டியிருக்கிறது. 15 ஏக்கர் என்று செய்துவிட்டால் மட்டும் போதாது. நிலத்தில் உழுகிறவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் யாரும் இருக்கக்கூடாது. (மணியடிக்கப்பட்டது) வெளி மாநிலங்கள் சிலவற்றில் குத்தகை நிலங்களை யார் யார் சாகுபடி செய்கிறார்களோ, இவ்வளவு என்று நஷ்டயீடு நிர்ணயித்துவிட்டு குத்தகைதாரர் தன் கையில் பணம் கிடைக்கும்போது நேரடியாக அதை நிலச் சொந்தக்காரரிடம் கொடுத்து அந்நிலத்தை தன்னுடையதாக ஆக்கிக்கொள்ளலாம் என்றிருக்கிறது. அப்படிச் செய்தால் அரசாங்கத்திற்கும் பாரம்



இல்லாமல் உழுபவருக்கும் நிலம் வந்து சேர்ந்து விடும், நிலச் சொந்தக்காரர்களுக்கும் பணம் வந்து சேர்ந்துவிடும். ஆகவே, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் அல்லது ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் மூலமாகவோ பணம் கிடைப்பதற்கு வழி செய்தால் கூடிய சீக்கிரம் உழுபவர்களுக்கு நிலம் வந்து சேரக் கூடிய நிலை ஏற்படும். அதற்கேற்றபடி அதைச் சட்டத்தில் புகுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குத்தகைதாரர்கள் ஐந்து ஆண்டுகளுக்குள் நிலச் சொந்தக்காரர்களாக ஆகவேண்டும். குத்தகைதாரர்கள் என்று சொல்லும்போது கோவில் நிலங்களுக்கும் ட்ரஸ்ட்களுக்கும் அது பொருந்தும்படிச் செய்யவேண்டும். ட்ரஸ்ட் என்று எழுதி வைத்து சிலர் ஏமாற்றுவதாகச் சொல்லுகிறார்கள். கோவில்களில் உற்சவங்கள் போன்றவை நடக்க நிலம்தான் இருக்க வேண்டும் என்றில்லை. எல்லாச் சொத்துக்களையும் நில உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் கொண்டு வரவேண்டும். எந்த நிலத்திற்கும் அதிலிருந்து விலக்கு அளிக்கக்கூடாது. 60—40 என்பதை 80—20 என்று மாற்றியமைக்கவேண்டும் என்பது என் கருத்து. அப்படிச் செய்தால் நிலத்தின் மீதுள்ள இச்சை இருக்காது. அதனால் ஆப்ஸென்டி லான்ட் லார்ட்ஸுக்கும் நமக்கு எதற்கு இந்த நிலம் என்று தோன்றும். மனைக்கட்டுகளை விட்டு யாரையும் வெளியேற்றக்கூடாது. கன்ஸாலிடேஷன் ஆஃப் ஹோல்டிங்க்ஸ்-ம் மிக அவசியமானது. அதையும் இந்தச் சட்டத்தில் கொண்டுவர வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

கடைசியாக, விவசாயப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்க இருப்பதை வரவேற்கிறேன். தஞ்சையில் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டும். இப்போது டிக்ரி கோர்ஸ்தான் வைத்திருக்கிறார்கள். டிப்ளமா கோர்ஸும் வைக்க வேண்டும். விவசாயிகள் நவீன முறையைத் தெரிந்துகொள்ள டிப்ளமா கோர்ஸ் வைக்கவேண்டும். நிலத்தின் அடியிலுள்ள தண்ணீரை மேலே கொண்டுவருவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். டெரோ மீட்டர் என்ற கருவி 25,000 ரூபாயிருக்கும். அவற்றில் 20 கருவிகளை வாங்கி வைத்து அக்ரிகல்ச்சரல் என்ஜினியர்ஸ் போரிங் செய்யும்போது அவர்களுக்கு கொடுத்து உதவவேண்டும்.

**திரு. அ. சேனாபதி :** கனம் சபாநாயகர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த நிதிநிலை அறிக்கை மீது நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். (குறுக்கீடு) நான் காங்கிரஸ் கட்சியிலிருந்துதான் பேசுகிறேன். கோவை மாவட்டம் ஒரு அதிருஷ்டமான மாவட்டம். பத்தாண்டுகள் எங்கள் ஜில்லாவைச் சேர்ந்தவர் நிதியமைச்சராக இருந்தார்கள். அவர்கள் மதி, நிதி என்ற பொறுப்பில் கல்வி அமைச்சராகவும் நிதி அமைச்சராகவும் இருந்தார்கள். இன்றும் எங்கள் ஜில்லாவைச் சேர்ந்தவர் நிதி அமைச்சர் பொறுப்பில் இருப்பது பொருத்தமானது. அதே நேரத்தில் நாங்கள் எங்கள் குறைகளைச் சொல்லிக் கொள்ளவும் அதைத் தீர்த்துக் கொள்ளவும் எங்களுக்கு உரிமை

உண்டு. கோவை மாவட்டத்தில் வறண்ட பகுதிகள் பல இருக்கின்றன. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனத்திற்கு தண்ணீர் பாயக்கூடிய இடங்கள் போக தண்ணீர் பாய வேண்டிய பகுதிகள் நிறைய இருக்கின்றன. ஆகவே, நிதி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், பி.டப்ளியூ.டி. அமைச்சர் அவர்களும்—நிதி அமைச்சர் அவர்களும், பி.டப்ளியு.டி. அமைச்சர் அவர்களும் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் என்ன சொல்வார்களோ என்று விட்டுவிடாமல்—சேர்ந்து தண்ணீர் பாய வேண்டிய பகுதிகளில் தண்ணீர் கிடைக்கும்படிச் செய்யவேண்டும். எங்கள் ஜில்லா முழுமைக்கும் இதைவிஸ்தரிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர் நிதி அமைச்சராக இருக்கிறார் என்ற பெருமை மட்டும்தான் இருக்கிறது. எங்கள் பகுதிகளில் இன்னும் குடி தண்ணீர் பிரச்னை தீர்ந்தபாடு இல்லை. காங்கேயம் வட்டாரத்தில் இன்னும் பத்து காசு கொடுத்துத்தான் தண்ணீர் வாங்குகிறார்கள். அந்த வட்டாரம் முழுவதிலுமுள்ள குடி நீர்ப் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும். 12,000 ஏக்கர்களுக்கு புதுப் பாசன வசதி செய்து கொடுப்பதற்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், பி.டப்ளியு.டி. அமைச்சர் அவர்களும் எங்களுக்கு அனுமதி அளித்ததற்கு இச்சபை மூலம் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கொண்டு இன்னும் பல வறண்ட பகுதிகளைக் கொண்ட எங்கள் பகுதிக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு பல திட்டங்கள், தாராபுரம் தாலுக்காவிலே, குறைந்தது சுமார் 100 திட்டங்கள், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆராய்ச்சி செய்யப்பட்டு முடிவடைந்திருக்கின்றன. ஆனால் அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. அதற்குக் காரணம் போதுமான சிப்பந்திகள் இல்லை என்ற குறையோ அல்லது வேறு ஏது காரணத்தினாலோ இன்றும் தடைப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவைகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

தாராபுரம் தாலுக்காவிலே, இப்பொழுது புதிய ரீ-ஆர்கனைசேஷன் ஸ்கீம், கால்நடை இலாக்காவிலும், மருத்துவ இலாக்காவிலும் புதிய உத்தரவுகள் போட்டிருக்கிறார்கள். அதன் மூலமாக, மாநிலம் முழுவதும் பரவலாக, புதிய சப்-செண்டர்கள், அதாவது கிளை கால்நடை அபிவிருத்தி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஏற்கனவே நடைபெற்றவற்றில் சில குறைபாடுகள் ஏற்பட்டிருப்பதை நேற்று அமைச்சரவர்களிடத்தில் கூறியிருக்கிறேன். கால்நடை அபிவிருத்தி ஏற்படக்கூடிய பகுதியாக கோவை மாவட்டத்தில் தாராபுரம், ஈரோடு தாலுக்காவில் ஒரு பகுதி, பல்லடத்தில் ஒரு சில பகுதிகள் இருக்கின்றன. இவைகளிலே தீவிர கால்நடை





அபிவிருத்தித் திட்டம் வைத்திருந்து, இன்று சில கிளை நிலையங்கள் மூடப்படும் நிலையில், 'கீ வில்லேஜ் செண்டர்'கள் மூடப்படும் நிலையில் இருக்கின்றன. இந்த நிலை அங்கிருக்கக்கூடாது. அதைத் திருத்தி அமைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகின்றேன். ஏனென்றால், அங்குள்ள விவசாயிகள் எல்லாம் சேர்ந்து ஒரு செண்டர் அமைக்க வேண்டுமென்று, 25,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாய்வரை நிலமும் பணமும் கொடுத்து கட்டப்பட்டிருக்கின்றன. அந்தக் கட்டடங்களையெல்லாம் ரீ-ஆர்கனைசேஷன் செட்டப்பிலே மூடப்படுமோ என்ற அச்சம் இருக்கிறது. அந்த நிலையை மாற்றி 'வெட்டர்னரி அசிஸ்டெண்ட் சர்ஜன்' கவனிக்க வேண்டிய நிலையிலே இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பல கோழிப் பண்ணைகள் திறக்கப்பட்டு, செயலற்றிருக்கின்றன. அதுபற்றி என்னுடைய ஒரு சிறிய யோசனையை எடுத்துக் கூற விரும்புகின்றேன். அந்த வட்டாரத்திலே வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கும் பகுதிகளிலே, கோழிப் பண்ணைகளைச் சரியாக நடத்தி, டிரெயினிங் கொடுக்கலாம். பத்து மாதங்கள் பயிற்சி கொடுக்கலாம். படித்த வாலிபர்களை, பள்ளியை விட்டு வேலையில்லாமல் இருப்பவர்களை ஈடுபடுத்தி வேலைகொடுக்கின்ற ஒருவகையில் கோழிப்பண்ணைகளில் ஒரு பயிற்சியைக் கொடுத்து கோழி வளர்ப்புச் செய்யலாம். இந்த 'கீ வில்லேஜ் சென்டர்கள்' கால்நடை அபிவிருத்தித் திட்டத்திலே பங்குகொண்டு அதை விவசாயம் சம்பந்தப்பட்ட ஒரு தொழிலாகக் கருதி வளர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். கீ வில்லேஜ் சென்டர்களையெல்லாம், வளர்ச்சி அபிவிருத்தி நிலையங்களை, கால்நடை வளர்ச்சி, கோழி வளர்ப்புப் பயிற்சி நிலையங்களாக மாற்றி அங்கு வேலையில்லாத வாலிபர்களுக்கு வேலை தெரிந்து கொள்ள பயிற்சி அளிப்பது நல்லது என்று கருதுகிறேன்.

இப்பொழுது கோவை மாவட்டம், மூலனூர், அரவக்குறிச்சி, ஒட்டன்சத்திரம் பகுதிகள் வறண்ட பகுதிகளாக இருக்கின்றன. அங்கு நீர்ப்பாசன வசதி இல்லை. அமைச்சரவர்களிடத்திலும் கூறியிருக்கிறேன். இருந்தாலும் அந்தப் பகுதிக்கு விமோசனம் ஏற்படுவதாகத் தெரியவில்லை. இந்த ஆண்டிலேயாவது அவர்கள் மனது வைத்து அந்த வட்டாரங்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நிலப் பிரச்சினை சம்பந்தமாக, நிலச் சீர்திருத்தச் சட்டம் ஓரளவுக்கு கோவை மாவட்டத்திலே உள்ள விவசாயிகளைப் பெரிதும் பாதித்தாலும் கூட சட்டத்தை முடிவு செய்யும்பொழுது கவனிக்க வேண்டிய விஷயம் இருக்கிறது. ஒரு பகுதியை எடுத்து யாருக்குக் கொடுத்தாலும், துண்டு துண்டாகப் போட்டு வழங்குவதைவிட, அதைப் பிரித்துக் கொடுக்கும் நேரத்தில் அவனுக்குக் கட்டுப்படியாகக் கூடியதாக இருக்குமா என்று பார்க்க வேண்டும். மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசம் இருக்கிறது. தஞ்சை மாவட்

டத்தை எடுத்துக் கொண்டால் 15 ஏக்கரா என்பது அங்கு சரியாக இருக்கும். நீர்ப்பாசன வசதியில்லாத இடங்களிலும் 100 அல்லது 200 ஏக்கராக போட்டாலும் ஈடு செய்ய முடியாது. ஆகவே, பிரித்துக் கொடுக்கும்பொழுது கட்டுபடியாகக்கூடிய அளவில் விவசாயம் செய்யமுடியுமா என்பதை மனதில் வைத்துக்கொண்டு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அப்படியே கொடுத்தாலும்கூட, கிணறு வெட்டுவதற்கும் வசதி செய்து தர வேண்டும். அப்படி வேண்டிய வசதி செய்து கொடுத்தால்தான் அந்தப் பூமிகளின் வளப்பம் கெடாமல் விருத்தி செய்து கொள்ள முடியுமென்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

குடிநீர் விஷயத்தை மீண்டும் வலியுறுத்தி, காங்கேயம், குன்னத்தூர், ஊத்துக்குளி ஆகிய இடங்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்ளுகின்றேன்.

* திரு. வீ. மலைக்கண்ணன்: மதிப்பிற்குரிய அவைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நல்ல நறுமணம் வீசக்கூடிய சமதர்ம நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கை என்பது வரவு செலவுப் புள்ளி விவரங்களை மட்டும் காட்டக்கூடிய வெறும் அறிக்கையல்ல. ஒரு அரசு எந்தப் பாதையிலே செல்லுகிறது என்பதை நிர்ணயிக்கும் முக்கியமான கொள்கை விளக்கமாக இந்த நிதிநிலை அறிக்கை இன்று இங்கு இருக்கிறது. அந்த வகையில் தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை சமதர்ம மணம் வீசும் நிதிநிலை அறிக்கையாகும். வரலாற்றிலேயே இல்லாத வகையில் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஏழைகளுக்குப் பெரும் சலுகைகள் புரியப்பட்டிருக்கின்றன.

ரூபாய் ஆறு கோடி வருவாய் வரத்தக்க அளவில் வரிகள் விதிக்கப்பட்டிருந்தாலும் அந்த வரிகள் ஏழைகளை எந்த வகையிலேயும் பாதிக்காது என்பதும் இங்கு வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நினைவுறுத்த விரும்புகிறேன். அவர்கள் சொன்னார்கள், "டேப் தி ரிச் அண்ட் பேட் தி பூவர்" என்று கூறியிருக்கிறார்கள். அதைப்போல இப்பொழுது விதிக்கப்பட்ட வரிகள் ஏழைகளைத் தட்டிக் கொடுத்தும், தாங்கக் கூடியவர்கள்மேல் வரி விதித்தும் இந்த வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தமாதிரி சமதர்மம் வீசுகின்ற நிதிநிலை அறிக்கையை நம்முடைய தமிழகத்திலுள்ள எல்லா வகை மக்களும் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்த வரவு செலவுத் திட்டம் சமூகத்தின் பாராட்டை நிச்சயமாகப் பெற்றே தீரும்.



கடந்த இரண்டாண்டுகளாக இந்த மாநிலத்தில் நமக்கு வேளாண்மைத் துறையில் பல இடைஞ்சல்கள் ஏற்பட்டன. இதனால் உற்பத்தி குறைந்ததோடு, வேலை வாய்ப்புக்களும் குறைந்தன. விவசாயம் செய்வதில் தொடர்ந்து இடையூறுகள் நேரிட்டன. வறட்சியால் நேர்ந்த இடையூற்றினையும் மக்களுக்கு நலம் பயக்கும் வகையில் அதனை மாற்றும் வகையில், தொண்டாற்றக் கிடைத்த ஒரு வாய்ப்பாகக் கருதி இந்த அரசு துணிவுடனும், விழிப்புடனும் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள், தமிழக அரசின் மிகப் பெரிய சாதனைகளில் ஒன்றாகும். அதனை மக்கள் பாராட்டுகிறார்கள். 13,400 சிறுபாசனப் பணிகள், 5,500 சாலைப் பணிகள், குடிதண்ணீர் வழங்கும்பொருட்டு 5 கோடியே 88 லட்ச ரூபாய் செலவில், 34,265 கிணறுகள் தோண்டப்பட்டன. இதையெல்லாம் மக்கள் பாராட்டாமல் இருக்க முடியாது.

இந்த மாநிலத்தைத் தாக்கிய வறட்சி, தமிழக அரசுக்கு ஓர் அறைகூவலாய் எழுந்தது. அந்த அறைகூவலை நிர்வாகத் திறமையோடும், அரசியல் துணிவோடும், விவேகத்தோடும் தமிழக அரசு சமாளித்தது என்பதை எண்ணி எண்ணி பொதுமக்கள் பாராட்டுகிறார்கள்.

கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் 23 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட சாலைகள் எல்லாம் மாட்டு வண்டிகள் கூட போக முடியாத நிலைமை இருந்தது. இப்பொழுது அந்த நிலைமை மாறி துயர் துடைப்பு வேலையில் மெட்டல் அடித்து 10 மைல் நீளமுள்ள சாலையில் பஸ் போவதைப் பார்க்கிறோம். பேரறிஞர் அண்ணாவின் ஆட்சியில், கலைஞரின் ஆட்சியில் நமக்குக் கிடைத்த நன்மை இது என்று மக்கள் கருதுகிறார்கள். பாராட்டுகிறார்கள்.

மேலும் தமிழகத்தில் உள்ள இரண்டாவது பெரிய ஏரி இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ராஜசிங்கமங்கலம் ஏரி. அந்த ஏரிக்கு வைகை ஆற்றிலிருந்து 14 மைல் கால் செல்லுகிறது. அதைச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று 1960-ம் ஆண்டில் பொதுமக்கள் கேட்டுக்கொண்டார்கள். அதைச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று பத்தாண்டுகளாகக் கேட்டும்கூட செய்யப்படவில்லை. ஆனால், இப்பொழுது, பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் நேரில் பார்த்து, இன்று 9 லட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயாரிக்க அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது, அந்தக் காலை சீர்திருத்தம் செய்ய. இப்படியெல்லாம் செய்து, அதிலும் இராமநாதபுரம் மாவட்டத்தின் கிழக்குப் பகுதி சீரும், சிறப்புமாக, தமிழகத்தின் மற்றப் பகுதிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் அளவுக்கு வளர்ந்து வருகிறது. இவ்வாண்டு இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் சில பகுதிகளில் மழை பெய்யவில்லை, அதனால் ஏற்பட்ட வறட்சி நிலையை சமாளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. அதற்காக இராமநாதபுரம் மாவட்ட மக்களின் சார்பில் அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்

கிறேன். மேலும், வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்ல முறையில் வேளாண்மையை அபிவிருத்தி செய்வதற்காக கடன் உதவி செய்து, கிணறு வெட்டுவதற்காகவும், பம்பு செட்டுகளை வாங்குவதற்காகவும் ஏற்பாடு செய்திருக்கிறது இந்த அரசு. இதற்காக நிலவள வங்கிகளின் எண்ணிக்கை முன்பு 105 ஆக இருந்தது. இப்பொழுது 166 ஆக உயர்ந்துள்ளது. 1968-69-ல் ரூ. 14.67 கோடி நீண்ட காலக் கடனாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை 1966-67-ல் கொடுக்கப்பட்ட தொகையைவிட ரூ. 10 கோடி அதிகமாகும். 1970-71-ல் ரூ. 16 கோடிக்கும்மேல் கொடுத்து உதவ ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் எப்படி பாராட்டாமல் இருக்க முடியும்? தமிழகத்தில் 100-க்கு 90 சதவிகிதத்தினர் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறவர்கள். விவசாயப் பெருங்குடி மக்கள் நல்ல முறையில் விவசாய உற்பத்தியைச் செய்து, நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக தமிழக அரசு நீண்டகாலக் கடன்கள் அளிப்பதற்கு வேண்டிய வாய்ப்பு, வசதிகளை ஏற்படுத்தியிருக்கிறது. மேலும் ஆற்று நீரையே நம்பி இருக்காமல், கிணற்று நீரை, ஊற்று நீரை மேலே கொண்டுவந்து, அந்தத் தண்ணீரின் மூலம் பாசன வசதி செய்து கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

மேலும் முந்தைய மூன்று திட்டக் கால அளவில், அதாவது 15 ஆண்டுகளில் 2,90,000 விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்ற கடந்த மூன்று ஆண்டுகளில் 1,70,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் 6,705 கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. கிராம மின்வசதித் திட்டத்திற்காக 1970-71 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 21.5 கோடி முதலீடு செய்திருப்பது பாராட்டுக்குரியது. 1966–67-ல் கிராம மின்வசதித் திட்டத்திற்காக செலவினம் ரூ. 8.26 கோடி அளவிலேயே நின்றது. இதையெல்லாம் பார்க்கிறபொழுது விவசாய வளர்ச்சிக்காக, மின் வசதிக்காக, எவ்வளவு வேகமாக இந்த அரசு அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும் என்ற கவலையோடு சிறந்த ஏற்பாடுகளைச் செய்துகொண்டு வருகிறது என்பது தெரிய வருகிறது. இதற்காக இந்த அரசை நான் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு ஊழியர்கள் ஊதியம்பற்றி ஆய்வு செய்ய சம்பள ஆணைக்குழு ஒன்றினை இந்த அரசு அமைத்துள்ளது. சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளினால் ஏற்படக்கூடிய விளைவுகளை நிதி ஆணைக் குழு கணக்கில் எடுத்துக் கொள்ளாததால், நமக்கேற்பட்டுள்ள கடன்சல்களைப் பற்றி மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இவ்வாறிருப்பினும், தற்போதைய வாழ்க்கைச் செலவைக் கருத்தில் கொண்டு, திங்கள் ஒன்றுக்கு ரூ. 500 வரை சம்பளம் பெறும் எல்லா அரசின் பணியாளர்களுக்கும்



சிறப்பு ஈட்டுப்படியாக ரூ. 10 அளிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 6 கோடி வேண்டியிருக்கிறது. இது மிகவும் பாராட்டக்கூடிய ஒரு சிறப்பான அம்சமாகும்.

மேலும், வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள மாபெரும் கொள்கை நிலச் சீர்திருத்த அறிவிப்பாகும். நில உச்சவரம்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கராக இருந்ததை 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவாக குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் கழகத்தின் கடந்த தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்படுகிறது. அந்த வகையில் இது பெரும் சோசலிச நடவடிக்கையாக அமைந்துள்ளதை உண்மையான முற்போக்கு வாதிகள் வரவேற்பார்கள்.

இது மட்டுமின்றி, நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த பெருங்குடி மக்கள் அயல் நாட்டிற்குச் சென்று, இலங்கையில் அந்த நாட்டினுடைய வளர்ச்சிக்காக பாடுபட்டவர்கள் இன்று அகதிகளாக இங்கே தாய்நாட்டுக்குத் திரும்ப அனுப்பப்பட்டு அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு புனர் வாழ்வு அளிக்கும் திட்டமாக ரூ. 10 கோடி மூலதனத்தில் மலைத்தோட்ட மேம்பாட்டுக் கழகம் ஒன்றும் அமைக்கப்பட இருக்கிறது என்று நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்கது.

மேலும், அரசு உதவி பெற்ற பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவ வசதி, திருமணக் கடன், துணிக் கடன் இது போன்ற வசதிகளை செய்து கொடுத்திருப்பதன் மூலம், அவர்களுடைய நீண்ட காலக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய நீண்டகாலக் கனவு நினைவாக்கப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் பார்த்து ஆசிரிய பெரு மக்கள், அரசு ஊழியர்கள், வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் பெருங்குடி மக்கள், தமிழகத்தைச் சார்ந்த எல்லாத் துறை மக்கள் அனைவரும் 'தமிழக அரசு வாழ்க, வாழ்க' என்று பாராட்டுகிறார்கள். நானும் 'தமிழக அரசு வாழ்க' என்று கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. நா. காசிராமன்: தலைவர் அவர்களே, 1970–71-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நமது தமிழக சர்க்கார் சபையின் முன்பு சமர்ப்பித்திருக்கிறார்கள். அதன் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்க்கும்பொழுது சர்க்கார் நமது தமிழ் நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு அளித்த ஊக்கத்தையும், அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிற ஒரு நல்ல போக்கையும் பாராட்டுகிறேன். 1966-67-ல் 57.9 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ் நாட்டு விவசாயிகள் இப்பொழுது 1969-70-ல் 63 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு நாட்டில் உள்ள உணவுப் பஞ்சத்தைப் போக்க வேண்டும், பசிப் பிணியை நீக்க வேண்டும் என்று மிகவும் கஷ்டப்பட்டு, ஊக்கத்தோடு பாடுபட்ட தமிழக விவசாயிகளுக்கு இந்தச் சபையின் முன்பு நன்றி தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த

[திரு. நா. காசிராமன்] [1970 பிப்ரவரி 28

15, 20 வருஷங்களில் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக, முதலில் கொஞ்சம் தயக்கம் காட்டினாலும், பிறகு மிகவும் வேகமாக ஊக்கத்தோடு பாடுபட்டு, தமிழ் நாட்டில் விவசய அபிவிருத்தி ஏற்படுவதற்கு பெறும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக உணவு உற்பத்தி பெருகி இருக்கிறது. முன்வருஷங்களைப் போல் அல்லாமல் ஆற்றுப் பாசனத்தை மட்டும் நம்பி இருந்தால் நல்லது அல்ல என்ற ஒரு உண்மையை நன்கு புரிந்துகொண்டு 2.9 லட்சமாக இருந்த பம்பு செட்டுகளைவிட மேலும் மேலும் அதிகமான பம்பு செட்டுகளை வாங்கி உபயோகப் படுத்திக்கொண்டு வர ஆரம்பித்திருக்கிறார்கள். அதன் காரணமாக நல்ல முறையில் விவசாயத்தை அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். ஆகையினால்தான் பல கிராமங்களுக்கு 1972-ம் வருஷத்திற்குள்ளாக மின்சாரத்தை அதிகப்படுத்தி, விநியோகத்தை அதிகப்படுத்தி, விஸ்தரிப்பு செய்ய வேண்டும் என்று முயற்சி எடுத்துக்கொள்ளக் கூடிய ஒரு நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த அளவுக்கு உணவுப் பஞ்சத்தை நீக்குவதற்கு, பசிப் பிணியைப் போக்குவதற்கு கஷ்டப்பட்டு வருகிற தமிழக விவசாயிகளுக்கு இந்த சர்க்காரால் செய்யப்படும் கைமாறு என்ன என்பதை சற்று கவனிக்க வேண்டும்.

புஞ்சை நிலங்களுக்கு வரி விலக்கு அளிப்பதாக 1967-68-ம் ஆண்டிலேயே அப்பொழுதிருந்த மறைந்துபோன நமது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், நடந்திருப்பது என்ன? புஞ்சை நிலங்களுக்கு வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டாலும்கூட, 1966-67-ம் வருஷத்தில், நான் ஏன் 1966-67-ம் வருஷத்தை எடுத்துக் கொள்கிறேன் என்றால், நமது நிதி அமைச்சர் அவர்கள் கூட தனது நிதி நிலை அறிக்கையிலே உதாரணம் காட்டுவதற்கு 1966-67-ல் இப்படி இருந்தது, இப்பொழுது இப்படி இருக்கிறது என்று உதாரணமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதனால்தான் நானும் அதே வருஷத்தை ஆதாரமாக எடுத்துக் கொள்கிறேன். 1966-67-ம் வருஷத்தில் நிலவரி மூலம் வருமானம் வந்தது மாத்திரம் ரூ. 337 லட்சம். நிலவரியிலிருந்து புஞ்சை நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது என்று சொல்லிவிட்ட பிறகும்கூட, 1970-71-ல் ரூ. 416 லட்சம் வரக்கூடும் என்ற அளவுக்கு மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது, சுமார் 78 லட்சம் ரூபாய் நிலவரி மூலம் வருமானம் அதிகமாக வரும் என்று கணக்குப் போடப்பட்டிருக்கிறது. ஏதோ மறைமுகமாக பல வழிகளின் மூலம் நில வரி உயர்த்தப்பட்டு, தமிழக விவசாய மக்களின் வரிச் சுமை நன்கு உயர்ந்திருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேமாதிரி பாசன வசதிக்காக வாட்டர் செஸ் என்று தமிழக விவசாயிகள் மீது [illegible] இவ்வாறியின் அளவு எப்படி இருக் வாழ்க்கைச் [illegible] கருத்தில் கொண்[illegible] ரூபாயாக இருந்த 500 வரை சம்பளம் பெறும் எல்லா அரசின் ப[illegible] அளவுக்கு உயர்ந் யர்ந்திருக்கிறது.



1970 பிப்ரவரி 28] [திரு. நா. காசிராமன்]

இதற்கு முன்பிருந்ததைவிட 40 சதவிகிதம் உயர்வாக இருக்கிறது. இதுதான் நாம் தமிழக விவசாயிகளுக்குச் செய்கின்ற கைமாறு என்பதை நாம் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, விவசாய வருமான வரி, 1966-67-ம் ஆண்டில் ரூ. 145 லட்சமாக இருந்தது, இப்பொழுது ரூ. 192 லட்சமாக உயர்ந்திருக்கிறது. அந்த அளவுக்கு விவசாய வருமான வரி விகிதங்களில் தமிழக அரசு சில ப்ரொஸிஜர் மாற்றங்களை ஏற்படுத்தியதன் விளைவாக, ரூ. 46 லட்சம் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. 32 சதவிகிதம் அதிகமாக உயர்ந்திருக்கிறது. 40 சதவிகிதம் வரியைக் குறைப்போம் என்று சொன்னார்கள். அரசாங்கத்திற்கு வந்த பிறகு தமிழக விவசாயிகளின் பேரில் 30 சதவிகிதம் அதிகமாக வரி விதிக்கப்பட்டிருக்கிறது, பட்ஜெட்டின் மூலம். நாங்கள் வைத்திருக்கிற புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு நான் சொல்லவில்லை. சர்க்கார் கொடுத்த புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு பார்த்தாலே இதெல்லாம் நன்றாகத் தெரியவருகிறது.

விற்பனை வரியை உயர்த்தியிருப்பதன் காரணமாக விவசாயிகளும் சரி, பொதுமக்களும் சரி இவர்கள் வாங்கும் பண்டங்களின் விலை ஓரளவுக்கு உயரத்தான் செய்யும். நிதி நிலை அறிக்கையிலே இந்தப் பண்டங்களைப் பொறுத்தவரையில் பொதுமக்கள் மீது இந்த வரி சுமத்தப்படமாட்டாது என்று கூறப்பட்டிருக்கிறது. இப்படி பட்ஜெட் அறிக்கையில் கூறுவதற்கு வேண்டுமானால் சௌகரியமாக இருக்குமே தவிர, கேட்பதற்கு இனிமையாக இருக்குமே தவிர, நடைமுறைக்கு வரும்பொழுது, பல ரூபங்களில் பல வரிகளின் மூலமாக பொது மக்கள் உபயோகப்படுத்தும் பண்டங்களின் விலை உயர்வதை நடைமுறையில் காணத்தான் போகிறோம்.

விவசாயிகள் மின்சாரத்தின் அவசியத்தை உணர்ந்து, அவர்கள் அதை அதிகமாக உபயோகப்படுத்துவதற்கு முன் வந்து, பம்பு செட்டுகளை அதிகமாகப் பயன்படுத்த வேண்டும் என்று நினைக்கிற காலத்தில், ஒரு ஏழைக் குடியானவன் தன் வீட்டிற்கு மின் விளக்கு வேண்டும் என்று ஆசைப்பட்டு, அதற்கு ஆவன செய்து கொண்டிருக்கிற சமயத்தில், மின்சாரப் பொருள்களின் மீது 7 சதவிகிதம் இருந்த விற்பனை வரியை 9 சதவிகிதம் ஆக உயர்த்தியிருக்கிறோம் என்றால், அவர்களுடைய நிலைமை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோமா என்பது தெரியவில்லை. அத்தியாவசியமான பொருள்களின் விலை எப்படி உயராமல் இருக்கும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. பி.ப. 1-30

ஒவ்வொரு வருஷமும், மத்திய சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய வட்டியைப்பற்றி மிக அதிகமாக இருக்கிறது என்றும், அதைக் குறைக்க வேண்டும் என்றும், அதிகமான பக்கங்கள் இருப்பது வழக்கம். ஆனால், வழக்கத்திற்கு விரோதமாக, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வட்டியைப்பற்றி ஒன்றும் காணவில்லை. ஆனால், கடன்பற்றிக் குறிப்பிட்டு, கடன்களை மாற்றியமைக்கும் விதம்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

[திரு. நா. காசிராமன்] [1970 பிப்ரவரி 28

இதுவும் தற்கால சூழ்நிலைக்கு ஏற்ப, ஏற்பட்டிருக்கும் மாறுதல்களுக்கு ஏற்ப, கைவிடப்பட்டிருக்குமோ என்ற சந்தேகம் வருகிறது. அதே சமயத்தில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவில் முடிவுற்று, மீண்டும் 2—3—1970, திங்கட்கிழமை காலை 9 மணிக்குப் பேரவை கூடும். அன்று திரு. காசிராமன் அவர்கள் தொடர்ந்து பேசுவார்கள்.

பி.ப. 1–31 பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

## (7) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

*156. Amendments to the Schedule IX of the Delimitation of Parliamentary and Assembly Constituencies Order, 1966 relating to the Tamil Nadu. [Laid on the Table of the House under Section 10 (3) of the Delimitation Commission Act, 1962 (Central Act 61 of 1962).]

*157. Notification issued with G.O. Ms. No. 1953, Local Administration, dated the 10th October 1969 in regard to inclusion of certain Municipalities in Schedule IX to Tamil Nadu District Municipalities Act, 1920. [Laid on the Table of the House under Section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

### B. Reports, Notifications and other papers.

*58. An Economic Classification of Tamil Nadu Government Budgetary Transactions 1970–71.

* Laid on the Table of the House on 26th February 1970.



## Appendix I

[*Vide* answer to Starred question No. 130 at page 152]

### I. STATEMENT SHOWING THE RECOMMENDATIONS OF THE SPECIAL OFFICER FOR REORGANISATION OF DISTRICT POLICE OFFICES.

| | Recommendations. | Decision. |
|---|---|---|
| 1 | Formulation of revised yardstick for various Police offices. | Deferred. |
| 2 | Employment of additional staff with reference to fair yardstick suggested by Special Officer. | Partly accepted. Orders issued sanctioning 60 Assistants and 60 Junior Assistants in District Police Offices. |
| 3 | Conversion of posts of Managers and Accountants into Superintendents (Selection Grade and Ordinary Grades). | Proposed to be placed before the Pay Commission, Madras for consideration of the request. |
| 4 | Promotion prospects to posts of Ministerial Personal Assistants to Superintendents of Police, etc. | Accepted. |
| 5 | Improving of ratio of number of posts between Assistants and Junior Assistants. | Not accepted |
| 6 | Sanction of vacancy reserve of 10 per cent of the total number of Assistants and Junior Assistants limited to a maximum of 4 Junior Assistants for each office in the Police Department. | Not accepted. |
| 7 | Promotion of Assistants on Range basis. | Accepted. |
| 8 | Promotion of Assistants as Superintendents on State basis. | Accepted. |
| 9 | Direct recruitment of Assistants in Police Department. | Dropped. |
| 10 | Imparting of training to raw hands before they are taken into regular Ministerial Service. | Not necessary. |
| 11 | Departmental Tests during the period of probation. | The Inspector-General of Police was informed that he may come up with his recommendations. |
| 12 | Reservation of 10 per cent of posts of Sub-Inspectors and Assistant Sub-Inspectors for [ ] Ministerial Staff of District Police Offices. | Not necessary. |
| 13 | Sanction of temporary advance from G.P.F. by the appointing authority. | Not accepted. |
| 14 | Inspection of Offices of Superintendents of Police by Sub-divisional Officers. | The Inspector-General of Police was asked to examine them and to send copies of orders passed by him. |

| Recommendations. | Decision. |
|---|---|
| 15 Discontinuance of the practice of offering para-war remarks on appeals against the orders of Superintendents of Police, etc. | The Inspector-General of Police has since decided that offering para-war remarks should be continued. |
| 16 Elimination of certain superfluous returns and introduction of certain new returns. | The Inspector-General of Police was asked to examine them and to send copies of orders passed by him. |
| 17 Changes in tappal distribution system. | Do. |
| 18 Simplification of the work relating to action on petitions. | On examination, the Inspector-General of Police has decided that there is no need to issue instructions as suggested by the Special Officer. |
| 19 Work relating to the checking up as to whether the candidates appearing for recruitment as Police Constables possess the required age limit, educational qualifications, etc. to be done by the Ministerial Staff in the District Police offices. | The Inspector-General of Police was asked to examine them and to send copies of orders passed by him. |
| 20 Preparation of block-pending list. | Do. |
| 21 Direct submission of files by section heads to officers. | The Inspector-General of Police was asked to examine them and to send copies of orders passed by him. |
| 22 The codification of printed circulars. | Do. |
| 23 Simplification of pension application forms. | Orders will issue separately in Finance Department. |
| 24 Discontinuance of the practice of exhibiting warrant amount in the T.A. Bills. | Status quo be continued. |
| 25 Elimination of preparation of annual indents for forms and stationery at the District level. | Existing system should continue. |
| 26 Standardisation of forms .. .. | Accepted. |
| 27 Supply of electric duplicator paper cutting machines, dictaphones, etc. | Supply of electric duplicator sanctioned. |
| 28 Money reward for Ministerial Staff of District Police Offices in the Police Department. | Not accepted. |
| 29 Decimilisation of earned leave at 1/10 of the duty period instead of 1/11. | Not accepted. |
| 30 Housing facilities for Ministerial Staff. | Not accepted. |



| Recommendations. | Decision. |
|---|---|
| 31 Maintenance of detailed arrear list in form X to contain only currents pending over six months. | It was left to the Inspector-General of Police to continue the *Status quo* or to follow the suggestion of the Special officer. |

## II. STATEMENT SHOWING THE RECOMMENDATIONS OF THE SPECIAL OFFICER FOR REORGANISATION OF CITY POLICE OFFICE.

| Recommendations. | Decision. |
|---|---|
| 1 The posts of Head Clerks and Cash-keepers may be converted into posts of Superintendents and posts of Superintendents may be converted into Superintendents (Selection grades). | Deferred for better times. |
| 2 The present yardstick may be revised. | Deferred for better times. |
| 3 Earned leave may be calculated revising the same from 1/11 of duty to 1/10 of duty. | Not accepted. |
| 4 Each section of the City Police office may be inspected once in six months by a Gazetted officer, the Assistant Commissioner, the Deputy Commissioner and Personal Assistant taking turns. | The Government accepted this proposal and directed that each branch of the City Police office be inspected on the basis of a questionnaire once in six months by a Gazetted Officer, the Personal Assistant the Assistant Commissioner and the Deputy Commissioner taking turns. |
| 5 In cases where discussion of rules and procedure is required to pass orders, this can be put up simply asking for orders. In matter of a routine nature notes and drafts can be roneoed so that particulars of a given case could be filled up. The Clerk must be trained and guided by the section heads on these lines. | Accepted. |
| 6 (a) The following returns may be eliminated :— | The Government directed that the following periodicals be eliminated :— |
| (1) Monthly statements of compassionate gratuity. | (1) Monthly statements of compassionate gratuity. |
| (2) Police Officers living more than 100 years. | (2) Police officers living more than 100 years. |
| (3) Official language—Tamil—Compulsory training of Government typists in Tamil typewriting and compulsory service. | (3) Official language—Tamil—compulsory training to Government typists in Tamil typewriting and compulsory service. |

| Recommendations. | Decision. |
|---|---|
| (4) Official language—Tamil—Progress report—first stage. | (4) Official language—Tamil—Progress report—first stage. |
| (5) Indent for bulbs. | (5) Indent for bulbs. |
| (6) Superannuation statements. | (6) Continued. |
| (b) The following returns may be reduced in periodicity :— | |
| (1) Employment—Market information Scheme—Collection of employment data in Madras City Police ; | Continued. |
| (2) Family Planning—Monthly statistical return—Sterlisation for each month. | Regarding the submission of return Family Planning-*status quo* shall continue. |
| 7 The centralised system obtaining in Bombay regarding the drawal of pay bills may be introduced and necessary additional staff of one Assistant and one clerk for the first 500 strength plus one additional Assistant and one clerk for every additional 500 strength or half thereof may be sanctioned. | Deferred for better times. |
| 8 Regarding the disposal of petitions and maintenance of block pending list, office shall put up a detailed report to the concerned Deputy Commissioner. | The Commissioner of Police was informed that he can issue necessary instructions in this regard. |
| 9 Section heads may submit files direct to the officer. | The Government directed that *status quo* shall continue. |
| 10 A vacancy reserve of 10 per cent of total number of Assistants and Clerks limited to a maximum of 10 for City Police office may be allowed. | Not accepted. |
| 11 New hands should be given training before they are taken into regular service in the Police Department. | The Government are of the view that it is not necessary to give training to clerks recruited to the Police Department. The Commissioner of Police has been referred to G.O. No. 394, Public (Service), dated 23rd February 1967 in which Government ordered that no training either in service training or formal training in an institution by separate staff appointed for purposes need be given to clerks recruited for appointment in Departments other than Revenue. |



| Recommendations. | Decision. |
|---|---|
| 12 To assess a Clerk's acquisition of knowledge during the period of probation and also to improve the efficiency of office work, a pass in the Departmental test in Police orders and practice may be prescribed as a condition for declaration of probation. | The proposal will be considered if and when the Inspector-General of Police comes up to Government with specific proposal. |
| 13 (a) The Ministerial staff may be provided with residential quarters. | Not accepted. |
| (b) New buildings for the office of the Commissioner of Police may be constructed with necessary amenities. | The Inspector-General of Police may examine this suggestion and come up to Government with definite proposals. |
| 14 The tax licence for non-transport vehicles, i.e. motor cars and motor cycles may be issued annually. | The proposal of collecting half-yearly tax instead of quarterly tax from owners of non-transport vehicles was examined by Government and it was dropped in Memo No. 29731/Tr. I/64-1, dated 28th October 1964. |
| 15 The period of grace for paying of tax may be extended up to 15th of the first month of each quarter in respect of all cases of motor vehicles. | The Government directed that the *status quo* shall continue. |
| 16 At present, there is no penalty for persons who pay the tax after the expiry of grace period. In order to see that all persons who own motor vehicles who put them on the road pay tax regularly within the grace period a scale of penalty is fixed for all late payments. | Orders will be issued separately. |
| 17 All Superintendents in the Office of the Commissioner of Police (Commissioner who is also the R.T.O. for Madras City) who have served for a period of three years in the traffic branch may be eligible for promotion to the rank of Joint Regional Transport Officer. | The Transport Commissioner did not agree to this proposal on the grounds that it could be considered only if the staff of the Office of the Deputy Commissioner (Traffic and Licensing) dealing with transport is made part of the Transport Commissioner's establishment and subject to State-wide transfer, Government agreed with the views of Transport Commissioner and informed the Commissioner of Police in Memo. No. 126997/Tr. II/66-4, Home, dated 30th November 1966. |

[1970 பிப்ரவரி 28

| Recommendations. | Decision. |
|---|---|
| 18 The temporary additional staff of Deputy Commissioner (Traffic and Licensing) may be sanctioned to deal with the large increase in the traffic problems in the City. | The proposal has been deferred in Government Memo. No. 147307/Tr. II/68-1, Home, dated 12th September 1967. The attention of the Inspector-General of Police was invited to the orders in Government Memo. cited. |

**சென்னை மாவட்டக் காவல் துறை அலுவலகங்களைச் சீரமைப்பதற்காக நியமிக்கப்பட்ட சிறப்பு அதிகாரி செய்துள்ள பரிவுரைகளைக் காட்டும் விவர அறிக்கை.**

| பரிந்துரைகள். | முடிவு. |
|---|---|
| 1. பல்வேறு காவல் துறை அலுவலகங்களுக்கு திருத்தி அமைத்த பணி அளவுகோலை வகுத்தல். | ஒத்திவைக்கப்பட்டது. |
| 2. சிறப்பு அதிகாரியால் கருத்தறிவிக்கப்பட்ட சரியான பணி அளவு கோலுக்கு ஏற்ப கூடுதல் பணியாளர்களை நியமித்தல். | ஒரு பகுதி ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாவட்ட காவல் துறை அலுவலகங்களில் 60 உதவியாளர்களையும், 60 இள நிலை உதவியாளர்களையும் நியமிக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. |
| 3. நிர்வாகிகள், கணக்கர்கள் பதவிகளை கண்காணிப்பாளர் (தேர்வு நிலை, சாதாரண நிலை) பதவிகளாக மாற்றுதல். | ஒத்திப்போடப்பட்டது. |
| 4. காவல் துறைக் கண்காணிப்பாளரின் நிலைப்பணியிலுள்ள தனி உதவியாளர் பதவிக்கு, பதவி உயர்வு வாய்ப்பு ஏற்படுத்துதல். | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. |
| 5. உதவியாளர்கள், எழுத்தர்கள் ஆகியோரிடையுள்ள பதவிகளின் எண்ணிக்கை விகிதாசாரத்தை மேம்படுத்துதல். | ஏற்றுக்கொள்ளப்படவில்லை. |
| 6. காவல் துறையிலுள்ள ஒவ்வோர் அலுவலகத்திற்கும் நான்கு எழுத்தர்கள் பேரளவிற்கு வரையறுக்கப்பட்டு உதவியாளர்கள், எழுத்தர்கள் மொத்த எண்ணிக்கையில் 10 சதவீத இடங்களை ஒதுக்கிவைப்பதற்கு ஒப்பளிப்பு வழங்கல். | ஏற்றுக்கொள்ளப்படவில்லை. |
| 7. சரக அடிப்படையில் உதவியாளர்களுக்கு பதவி உயர்வளித்தல். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |



1970 பிப்பரவரி 28]

| பரிந்துரைகள். | முடிவு. |
|---|---|
| 8. மாநில அடிப்படையில் உதவியாளர்களுக்கு கண்காணிப்பாளர்களாகப் பதவி உயர்வு அளித்தல். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 9. காவல் துறையில் உதவியாளர்களை நேரடியாக நியமித்தல். | கைவிடப்பட்டது. |
| 10. பயிற்சி பெறுமல் புதிதாக வருபவர்களுக்கு முறையான நிலைப்பணியில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னர் பயிற்சியளித்தல். | அவசியமில்லை. |
| 11. தகுதிகாண் பருவத்தில் துறைத் தேர்வு நடத்துதல். | அவரது பரிந்துரைகளை அரசுக்கு அனுப்புமாறு காவல் துறை தலைவர் கேட்கப்பட்டார். |
| 12. உதவி நேடுநர் பதவிகள், இளநிலை உதவி நேடுநர் பதவிகள் ஆகியவற்றில் 10 சதவீதம், மாவட்டக் காவல் துறை அலுவலகங்களின் நிலைப்பணித் தொகுதியினரை நியமிப்பதற்காக ஒதுக்கிவைத்தல். | அவசியமில்லை. |
| 13. நியமன அதிகாரியால் பொது வருங்கால வைப்பு நிதியிலிருந்து தற்காலிக முன்பணம் அளிக்கப்படுதல். | ஏற்றுக்கொள்ளப்படவில்லை. |
| 14. காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகங்களை துணைக்கோட்ட அதிகாரிகள் நேடுதல் செய்தல். | காவல் துறைத் தலைவர் இது பற்றி ஆராய்ந்து, அவர் பிறப்பிக்கும் ஆணைகளின் நகல்களை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். |
| 15. காவல் துறை கண்காணிப்பாளர்களின் ஆணைக்கு எதிராகச் செய்துகொள்ளும் மேற்முறையீடுகளின் பேரில் பத்தி வாரியான குறிப்புரைகள் அளிக்கும் வழக்கத்தை நிறுத்துதல். | பத்தி வாரியான குறிப்புரைகள் வழங்கும் வழக்கம் தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டும் என்று காவல் துறைத் தலைவர் முடிவு செய்துள்ளார். |
| 16. அதிகப்படியுள்ள சில விவரக குறிப்புகளை நீக்கிவிட்டு சில புதிய விவரக் குறிப்புகளைப் புதிதாகக் கொண்டு வருதல். | காவல் துறைத் தலைவர் இது பற்றி ஆராய்ந்து, அவர் பிறப்பிக்கும் ஆணைகளின் நகல்களை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். |
| 17. " தபால் " வழங்கும் முறையில் மாற்றங்கள். | ஷை |
| 18. மனுக்கள்மீது நடவடிக்கை எடுக்கும் பணியை எளிதாக்குதல். | இதனை ஆராய்ந்து பிறகு, சிறப்பு அதிகாரி குறிப்பிட்டுள்ளபடி கட்டளைகள் பிறப்பிக்கவேண்டியது தேவையற்றது என்று காவல் துறைத் தலைவர் முடிவு செய்துள்ளார். |

| பரிந்துரைகள். | முடிவு. |
|---|---|
| 19. காவலர்கள் பணிக்கு வருபவர்களுக்குத் தேவையான வயது வரம்பு கல்வித் தகுதி முதலியன உள்ளனவா என்பதைச் சரிபார்க்கும் பணியை, மாவட்டக் காவல் துறை அலுவலகங்களிலுள்ள நிலைப்பணியாளர்கள் செய்யவேண்டும். | காவல் துறைத் தலைவர், இது பற்றி ஆராய்ந்து அவர் பிறப்பிக்கும் ஆணைகளின் நகல்களை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். |
| 20. மொத்த நிலுவைப் பட்டியலைத் தயாரித்தல். | ஷை |
| 21. பிரிவுத் தலைவர்கள், அதிகாரிகளுக்கு நேரடியாகக் கோப்புகளைத் பணிந்தளித்தல். | ஷை |
| 22. அச்சடித்த சுற்றறிக்கைகளைக் குறிப்புடன் வகைப்படுத்திக் தொகுத்தல். | ஷை |
| 23. ஓய்வூதியத்திற்கு விண்ணப்பிக்கும் படிவங்களை எளிதாக்குதல். | இத்துறையில் ஆணைகள் தனியே பிறப்பிக்கப்படும். |
| 24. பயணப்படிப்பட்டிகளில் பிடி ஆணைத்தொகையைக் காட்டும் வழக்கத்தை நிறுத்திவிடுதல். | தற்போதுள்ள நிலை தொடரப்படலாம். |
| 25. மாவட்ட நிலையில் படிவங்களுக்கும், எழுதுபொருள்களுக்கும் ஆண்டுத் தேவைப் பட்டியல் தயாரிப்பதை நீக்கிவிடுதல். | தற்போதுள்ள முறை தொடரப்படும். |
| 26. படிவங்களை ஒருவகைப்படுத்துதல். | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. |
| 27. மின்சாரப் படிபெருக்கி, காகிதம் வெட்டும் இயந்திரங்கள், ஒலிப்பதிவுப் பொறி முதலியவற்றை வழங்குதல். | மின்சாரப் படிபெருக்கி வழங்குவதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. |
| 28. காவல் துறையிலுள்ள மாவட்டக் காவல் துறை அலுவலகங்களின் நிலைப் பணியாளர்களுக்குப் பணமாகப் பரிசு கொடுத்தல். | ஏற்றுக்கொள்ளப்படவில்லை. |
| 29. 11 நாட்களுக்கு 1 நாள் என்பதற்குப் பதிலாக 10 நாட்களுக்கு 1 நாள் என்னும் வீதத்தில் ஈட்டிய விடுப்பைக் கணக்கிடுதல். | ஷை |
| 30. நிலைப் பணியாளர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்துதல். | ஷை |
| 31. ஆறு திங்களுக்கு மேல் முடிவுறுமல் உள்ள நடப்புக் கோப்புகள் அடங்கியிருக்கும் வகையில் X படிவத்தில் விரிவான நிலுவைப் பட்டியலைப் பேணி வருதல். | தற்போதுள்ள முறையைத் தொடர்ந்து வைத்திருப்பதோ அல்லது சிறப்பு அதிகாரியின் கருத்துரையைப் பின்பற்றுவதோ காவல் துறைத் தலைவரின் விருப்பத்திற்கு விடப்பட்டுள்ளது. |



**சென்னை மாநகரக் காவல் துறை அலுவலகங்களைச் சீரமைப்பதற்கு சிறப்பு அதிகாரி செய்துள்ள பரிவுரையைக் காட்டும் விவர அறிக்கை.**

| பரிந்துரைகள். | முடிவு. |
|---|---|
| 1. தலைமைக் காவலர்கள், பணப் பாதுகாப்பாளர் ஆகியோரின் பதவிகள் கண்காணிப்பாளர் பதவிகளாகவும், கண்காப்பாளர் பதவிகள் முதுநிலைக் கண்காணிப்பாளர் பதவிகளாகவும் மாற்றப்படலாம். | காலம் சீர்பெறும் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. |
| 2. இப்போதுள்ள வரையறை திருத்தியமைக்கப்படலாம். | ஷை |
| 3. பணியிலுள்ள 11 நாளுக்கு ஒரு நாள் என்பதனின்று 10 நாளுக்கு ஒரு நாள் என்று திருத்தியமைத்து ஈட்டிய விடுப்பு கணக்கிடப்படலாம். | ஏற்றுக்கொள்ளப்படவில்லை. |
| 4. காவல் துறை ஆணையாளரின் அலுவலகப் பிரிவு ஒவ்வொன்றையும் ஆறு திங்களுக்கு ஒரு முறை அரசிதழ்ப் பதிவுபெற்ற அதிகாரி, உதவி ஆணையாளர், துணை ஆணையாளர், நேர் உதவியாளர் ஆகியோர் பணி மாற்று முறையில் பார்வையிடவேண்டும். | இச்செயற்குறிப்பை அரசு ஏற்றுக்கொண்டு காவல் துறை ஆணையாளர் அலுவலகப் பிரிவு ஒவ்வொன்றும் கேள்விபட்டி அடிப்படையில் ஆறு திங்களுக்கு ஒரு முறை அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரி, நேர் உதவியாளர், உதவி ஆணையாளர், துணை ஆணையாளர் ஆகியோரால் பணி மாற்று முறையில் பார்வையிடப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது. |
| 5. ஆணைகள் பிறப்பிக்கப்பட விதிகள், நடைமுறை விதிகள் பற்றி விவாதிப்பது அவசியப்படும் நேர்வுகளில், ஆணைகள் கேட்டுக்கொள்ளப்பட்டு, இது தவிர்க்கப்படலாம். வாலாயமான தன்மை குறித்த விவகாரங்களில் குறிப்பிட்ட ஒரு நேர்வின் விவரங்கள் நிரப்பப்படும் வகையில் குறிப்புகளும் வரைவுகளும் இது போன்ற முறையில் பிரிவுத் தலைவர்கள் எழுத்தர்களுக்குப் பயிற்சிதந்து துணை புரிய வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 6. கீழ்க்காணும் விவரக் கணக்குகள் நீக்கப்படலாம்:- | கீழ்க்கண்ட அறிக்கைகள் நீக்கப்படலாமென்று அரசு கட்டளையிடுகிறது:- |
| (அ) (1) கருணைப்பணிக் கொடையின் மாதாந்தர அறிக்கைகள். | (1) கருணைப் பணிக்கொடையின் மாதாந்திர அறிக்கைகள். |
| (2) 100 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து வரும் காவல் துறை அதிகாரிகள். | (2) 100 ஆண்டுகளுக்கு மேல் வாழும் காவல் துறை அதிகாரிகள். |

| பரிந்துரைகள். | முடிவு. |
|---|---|
| (3) ஆட்சி மொழி—தமிழ்—தமிழ்த் தட்டெழுத்தில் அரசுத் தட்டெழுத்தர்களுக்குக் கட்டாயப் பயிற்சியளித்தல்— கட்டாயமாகப் பணி செய்தல். | (3) ஆட்சி மொழி—தமிழ்—தமிழ்த் தட்டெழுத்தில் அரசு தட்டெழுத்தர்களுக்குக் கட்டாயப் பயிற்சியளித்தல்—கட்டாயப்பணி செய்தல். |
| (4) ஆட்சி மொழி—தமிழ்—முன்னேற்ற அறிக்கை—முதல் நிலை. | (4) ஆட்சி மொழி—தமிழ்—முன்னேற்ற அறிக்கை—முதல் நிலை. |
| (5) மின்குமிழ்கள் குறித்த தேவைப்பட்டியல். | (5) மின் குமிழ்கள் குறித்த தேவைப் பட்டியல். |
| (6) வேலையினின்று ஓய்வு பெறுவோர் பற்றிய அறிக்கை. | (6) தொடர்ந்து இருக்கலாம். |
| (இ) கீழ்க்காணும் விவர அறிக்கைகளின் கால அளவு குறைக்கப்படலாம். | |
| (1) வேலைவாய்ப்பு நிலவரத் தகவல் அறிதல் திட்டம்—சென்னை மாநகரைக் காவல் துறையில் வேலை வாய்ப்புப் புள்ளிவிவரம் சேகரித்தல். | தொடர்ந்து இருக்கலாம். |
| (2) குடும்ப நலத்திட்டம்—மாதாந்திரப் புள்ளிவிவர அறிக்கை ஒவ்வொரு மாதத்திலும் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளுபவர்கள் பற்றிய புள்ளி விவரங்கள். | குடும்ப நலத்திட்டம் குறித்த விவரக் கணக்கு அனுப்புதல் குறித்து இப்போதுள்ள நிலையே தொடர்ந்து இருக்கலாம். |
| 7. சம்பளப்பட்டியல்களைப் பெறுவது சம்பந்தமாக பம்பாயில் செயலில் உள்ள ஒருமுகப் படுத்தும் முறை செயலாக்கப் படலாம். முதல் 500 பேருக்கு ஓர் உதவியாளரும் ஓர் எழுத்தரும் கூடுதலாக அமர்த்தப் படவும் மேற்கொண்டு கூடுதலாக 500 பேருக்கு அல்லது பகுதியினருக்கு கூடுதலாக ஓர் உதவியாளரும் ஓர் எழுத்தரும் அமர்த்தப்படவும் ஒப்பளிக்கப்படலாம். | காலம் சீர்பெறும்வரை ஒத்திவைக்கப் பட்டுள்ளது. |
| 8. மனுக்களை விசாரித்து முடிவு செய்வது குறித்தும் மொத்த நிலுவைப்பட்டியல் வைத்து வருவது பற்றியும் சம்பந்தப் பட்ட துணை ஆணையாளருக்கு விரிவான அறிக்கையை அலுவலகம் அனுப்பவேண்டும். | இதுகுறித்து அவசியமான கட்டளை அவரே பிறப்பிக்கலாமென காவல் துறை ஆணையாளர் அறிவிக்கப்பட்டுள்ளார். |
| 9. பிரிவுத் தலைவர்கள் கட்டளைகளை நேரடியாக அதிகாரிக்கு அனுப்பலாம். | இப்போதுள்ள நிலைமையை தொடர்ந்திருக்குமாறு அரசு கட்டளையிட்டது. |



| பரிந்துரைகள். | முடிவு. |
|---|---|
| 10. மொத்தமுள்ள உதவியாளர்கள், எழுத்தர்கள் எண்ணிக்கையில் 10 சத வீத இடம் அதிக அளவு 10 பேருக்கு உட்பட்டு, காவல் துறை ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுமதிக்கப் படவேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படவில்லை. |
| 11. காவல் துறையில் முறையான பணிக்கு எடுத்துக்கொள்ளப் படுவதற்கு முன்னர் புதிதாக வேலைக்கு வருவோருக்குப் பயிற்சி அளிக்கப்படவேண்டும். | காவல் துறையில் வேலைக்கமர்த்தப் படும் எழுத்தர்களுக்கு பயிற்சி அளிப்பது அவசியமில்லையென்று அரசு கருதுகிறது. வருவாய்த்துறை அல்லாத பிற துறைகளில் வேலைக்கு நியமிக்கப்படும் எழுத்தர்களுக்கு, இக்காரியத்திற்காக நியமிக்கப்பட்ட தனி பணியாளர்களால் பணியிலுள்ளபோது பெறும் பயிற்சியோ அல்லது முறைசார்ந்த பயிற்சியோ அளிக்கப்பட வேண்டியதில்லை யென்று பொதுத் துறையில் 23—2—1967-ல் வெளியான 394 எண் அரசு ஆணையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. |
| 12. தகுதி காண் பருவத்தில் எழுத்தர் ஒருவரின் அறிவாற்றலை மதிப்பிடவும் அலுவலக பணியின் திறனை மேம்படுத்தவும் காவல் துறை ஆணைகள் நடைமுறை இவற்றில் நடத்தப் படும் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறவேண்டுமென்பது தகுதிகாண்பருவம் சிறப்பாக முடிக்கப்பட்டதென்று அறிவிக்கப்படுவதற்கு நிபந்தனையாகக் குறிப்பிடலாம். | இதுகுறித்து திட்டவட்டமான செயற் குறிப்பை காவல் துறைத் தலைவர் அரசிற்கு அனுப்பும்போது இச் செயற்குறிப்பு பற்றி ஆலோசிக்கப் படும். |
| 13. (அ) நிலைப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் அளிக்கப்படலாம். | ஏற்றுக்கொள்ளப்படவில்லை. |
| (ஆ) காவல் துறை ஆணையாளர் அலுவலகத்திற்குப் போதிய வசதிகளுடன் புதிய கட்டிடங்கள் கட்டப்படலாம். | காவல் துறைத் தலைவர் இக்கருத்தை ஆராய்ந்து குறிப்பிட்ட செயற் குறிப்புகளை அரசுக்கு அனுப்பலாம். |
| 14. மோட்டார் கார்கள், மோட்டார் சைக்கிள்கள் ஆகிய வண்டிகளுக்கான வரி உரிமம் ஆண்டுதோறும் வழங்கப் படலாம். | இத்தகைய வண்டிகளின் சொந்தக்காரர்களிடமிருந்து காலாண்டுக்கு ஒருமுறை வரி வசூலிப்பதற்குப் பதிலாக அரையாண்டுக்கு வரி வசூலிக்கும் செயற்குறிப்பை அரசு ஆராய்ந்தது; 28—10—1964-ம் நாளிட்ட 29731 / போக்குவரத்து I/64–1, அரசுக் குறிப்பில் இது கைவிடப்பட்டது. |

| பரிந்துரைகள். | முடிவு. |
|---|---|
| 15. மோட்டார் வண்டிகள் குறித்து வரி செலுத்துவதற்கு அளிக்கப்படும் சலுகைக் கால அளவு ஒவ்வொரு காலாண்டின் முதல் திங்களின் 15-ம் தேதி வரையில் நீட்டிக்கப்படலாம். | இப்போதுள்ள நிலையே தொடர்ந்து இருக்க அரசு கட்டளையிட்டது. |
| 16. சலுகைக் கால அளவு முடிந்து வரி செலுத்துவோருக்கு தற்போது அபராதம் எதுவுமில்லை. மோட்டார் வண்டிகளை உடைமையாகக் கொண்டு அவற்றைப் பயன்படுத்தி வரும் அனைவரும் சலுகை அளவுக்குள் முறையாக வரி செலுத்துவதற்காக, காலம் தாழ்த்திச் செலுத்தப்படுவதற்கு அபராத தொகை வீதம் குறிப்பிடப்பட்டுள்ளது. | தனியாக ஆணைகள் பிறப்பிக்கப்படும். |
| 17. காவல் துறை ஆணையாளரின் அலுவலகத்திலுள்ள (ஆணையாளர், சென்னை மாநகருக்கு வட்டாரப் போக்குவரத்து அதிகாரியாகவும் உள்ளார்) போக்குவரத்துப் பிரிவில் 3 ஆண்டுகளுக்குப் பணியாற்றியுள்ள கண்காணிப்பாளர் அனைவரும் வட்டாரப்போக்குவரத்து இணை அதிகாரிகளாகப் பதவி உயர்வு பெற தகுதியுள்ளவராக வேண்டும். | போக்குவரத்து சம்பந்தமாக அலுவலாற்றும் (போக்குவரத்து—உரிமம் வழங்குதல்) துணை ஆணையாளர் அலுவலகப் பணியாளர்கள், போக்குவரத்து ஆணையாளர் பணியாளர்களின் ஒரு பகுதியாக ஆக்கப்பட்டால் அன்றியும் மாநிலத்தில் எங்கும் மாற்றம் செய்யப்படுவதற்கு உட்பட்டால் அன்றியும் இது குறித்து ஆலோசிக்க முடியாதென்றும் காரணம் காட்டி போக்குவரத்து ஆணையாளர் இச் செயற்குறிப்பிற்கு இசைவு தரவில்லை. போக்குவரத்து ஆணையாளரின் கருத்தை அரசு எற்றது. இதுகுறித்து 30—11—1966-ம் நாளிட்ட 126997/போக்குவரத்து 2/66–4, உள்துறை/குறிப்பில் காவல் துறை ஆணையாளருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 18. சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசல் பெருமளவில் அதிகரித்துள்ளதையொட்டி (போக்குவரத்து–உரிமம் வழங்கல்) துணை ஆணையாளர் அலுவலகத்தில் தற்காலிகமாக கூடுதல் பணியாளர்கள் நியமிக்க ஒப்புதல் வழங்கப்படலாம். | இச் செயற்குறிப்பு 12—9—1967-ம் நாளிட்ட உள்துறையின் 147307/போக்குவரத்து 2/66–1-ம் எண் அரசாங்கக் குறிப்பில் ஒத்திப் போடப்பட்டது. மேற்சொன்ன அரசுக் குறிப்பைப் பார்க்குமாறு காவல் துறைத் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டார். |



## APPENDIX II

[Vide answer to Starred Question No. 147 at page 173]

*Details of the borrowings during the period from* 1961-62 *to* 1968-69 (*yearwise*).

| Year. | | | Borrowings. | | Maximum borrowing power. | |
|---|---|---|---|---|---|---|
| (1) | | | (2) | | (3) | |
| | | | RS. | P. | RS. | P. |
| 1961-62 | .. | .. | 97,57,143 | 17 | 1,41,24,179 | 12 |
| 1962-63 | .. | .. | 1,03,19,989 | 04 | 1,55,30,914 | 88 |
| 1963-64 | .. | .. | 1,12,42,702 | 15 | 1,69,40,856 | 40 |
| 1964-65 | .. | .. | 1,09,64,509 | 52 | 1,80,90,196 | 16 |
| 1965-66 | .. | .. | 1,07,77,514 | 23 | 1,82,33,708 | 16 |
| 1966-67 | .. | .. | 1,03,51,167 | 08 | 1,84,73,268 | 16 |
| 1967-68 | .. | .. | 1,32,86,585 | 86 | 2,05,24,990 | 24 |
| 1968-69 | .. | .. | 1,62,72,012 | 55 | 1,94,87,388 | 88 |

(Unaudited).

1961-62 முதல் 1968-69 வரை (ஆண்டுவாரியாக) வாங்கிய கடன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு | | | வாங்கிய கடன் அளவு | | வரையறுக்கப்பட்டுள்ள கடன் அளவு | |
|---|---|---|---|---|---|---|
| (1) | | | (2) | | (3) | |
| | | | ரூ. | காசு. | ரூ. | காசு. |
| 1961-62 | .. | .. | 97,57,143 | 17 | 1,41,24,179 | 12 |
| 1962-63 | .. | .. | 1,03,19,989 | 04 | 1,55,30,914 | 88 |
| 1963-64 | .. | .. | 1,12,42,702 | 15 | 1,69,40,856 | 40 |
| 1964-65 | .. | .. | 1,09,64,509 | 52 | 1,80,90,196 | 16 |
| 1965-66 | .. | .. | 1,07,77,514 | 23 | 1,82,33,708 | 16 |
| 1966-67 | .. | .. | 1,03,51,167 | 08 | 1,84,73,268 | 16 |
| 1967-68 | .. | .. | 1,32,86,585 | 86 | 2,05,24,990 | 24 |
| 1968-69 | .. | .. | 1,62,72,012 | 55 | 1,94,87,388 | 88 |

(தணிக்கை செய்யாதது)

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

*திங்கட்கிழமை, 1970 மார்ச் 2.*

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

## *(1) வினாக்கள்—விடைகள்.*

### *வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.*

### *Death of two persons in Cinema Theatre at Madurai.*

* 149. Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether two persons were crushed to death and two other persons were admitted into the Government Erskine Hospital for treatment of fracture, in a cinema theatre at Madurai in August 15, 1968; and

(*b*) if so, the details thereof?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :*

*(அ) இருவர் இறந்தனர்; அவர்களுக்கிருந்த பிணியின் காரணமாகவே அவர்கள் இறந்தனர்.*

*(இ) மதுரை, தங்கம் திரைப்பட அரங்கத்தின் நுழைவுச் சீட்டு விற்கும் இடத்தில் குழுமியிருந்த கூட்ட நெரிசலில் தங்களுக்கிருந்த பிணியின் காரணமாகக் கூட்டத்தில் ஏற்பட்ட சோர்வைத் தாங்க முடியாமல் 15–8–1968-ல் மாலை 6-30 மணிக்கு இந்த இருவரும் இறந்து விட்டனர் என்று மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலின் விளைவாக எலும்பு முறிந்து, மதுரை எர்ஸ்கின் அரசு மருத்துவ மனையில் மற்றும் இருவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.*

THIRU T. MARTIN : In most of the cinema theatres in Tamil Nadu, the passages leading to the ticket-counters are so narrow that many of the persons who go there to buy tickets have to succumb to such injuries due to suffocation and other accidents. May I therefore request the Hon. Chief Minister to issue necessary directions to the Collectors to have an immediate inspection of these theatres and see that the passages are enlarged so that the people who go to the ticket-counter could do so easily and buy tickets without difficulty and so that such mishaps could be avoided?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, க்யூ வரிசை நிற்கும் இடத்தில் குழுமியிருந்த கூட்டத்தினுடைய நெரிசலால் இந்த விபத்து ஏற்பட்டது. தியேட்டருடைய எல்லாப் பகுதிகளும் சீராக இருந்தன. ஆனால் 80 காசு டிக்கெட் விற்கும்*

பகுதியில் உள்ள தடுப்புச் சுவர் விதிமுறைகளுக்கு மாறுபட்ட நிலையில் இரண்டு அடி அகலத்துக்குக் குறைவாக இருந்த காரணத்தினால் கூட்ட நெரிசலில் இந்த விபத்து ஏற்பட்டது என்று ரெவின்யூ ஆபீசர் தெரிவித்துள்ளார். அந்தத் தியேட்டரின் அனுமதிக் காலம் 30-9-68 ஆக இருந்தது. அடுத்த அனுமதி வழங்கும் தேதிக்குள்ளாக, அந்தத் தியேட்டரில் உள்ள குறைபாடுகள் அகற்றப்பட்டால்தான் மீண்டும் அனுமதி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அவ்வாறே அங்குள்ள குறைபாடுகள் அகற்றப்பட்டன. க்யூ வரிசை பற்றிச் சொல்லப்பட்ட குறைபாடுகள் நீக்கப்பட்ட பின்னர்தான் அனுமதி வழங்கப்பட்டது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். இதேபோல் எல்லாத் தியேட்டர்களையும் ஆங்காங்குள்ள அதிகாரிகள் மேற்பார்வையிட்டு, அனுமதி வழங்க வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : உறுப்பினர்கள் துணைக் கேள்விகளைக் கேட்கும்போது, அக் கேள்விகள் மூலக் கேள்விக்கு விளக்கம் கேட்பதாக அமையவேண்டுமே தவிர, யோசனை சொல்லக்கூடிய வகையில் இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, இறந்தவர்களுக்கு ஏதாவது நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டதா? நஷ்ட ஈட்டை அரசாங்கம் கொடுத்ததா? அல்லது எம்.ஜி.ஆர். அவர்கள் கொடுத்தார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, இறந்தவர்களைப்பற்றி நஷ்ட ஈடு கேட்டு யாரும் மனுச் செய்துகொள்ளவில்லை.

**திரு. கே. விநாயகம்** : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சம்பவம் நடந்த அன்று அந்தத் தியேட்டரில் என்ன படம் வெளியாகியது? அந்தப் படத்தில் நடித்த பிரபல நடிகர் யார்? நம்மைப் பார்க்கத்தானே, நம்மை நாடித்தானே அவர்கள் வந்து கூட்ட நெரிசலில் சிக்குண்டு இறந்து விட்டார்கள் என்று அனுதாபப்பட்டு இறந்தவர்களுக்கு ஏதாவது நஷ்ட ஈடு அவர் தருவதற்கு இந்த அரசாங்கம் சிபாரிசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, அந்தத் தியேட்டரில் அன்று நடைபெற்றது 'கணவன்' என்ற படமாகும். அந்தப் படத்தில் நடித்தவர் புரட்சி நடிகர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள். இறந்தவர்களுக்கு எம்.ஜி.ஆர். நஷ்ட ஈடு ஏதாவது கொடுத்தாரா என்று கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இறந்தவர்களுடைய குடும்பத்தினர் நஷ்ட ஈடு கேட்டு யாரும் மனுச் செய்து கொள்ளவில்லை. இறந்தவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அவர்கள் இறந்துவிட்டார்கள். ஆகவே, அவர்களுக்கு கொடுக்க முடியாது.



**திரு. என். வரதராஜன்** : பேரவைத் தலைவர் அவர்களே, சில சினிமா தியேட்டர்களில் உயர்ந்த வகுப்பு டிக்கெட்டுகள் விற்க வேண்டுமென்பதற்காக, சாதாரண டிக்கெட்டுகளைக் கொஞ்சம் கால தாமதம் செய்து வினியோகம் செய்கிறார்கள். இதனால்தான் சினிமா கொட்டகைகள் முன் ஜனநெரிசல் ஏற்படுகின்றது. அப்படிச் சாதாரண வகுப்பு டிக்கெட்டுகளைக் காலந்தாழ்த்தி விற்பதை நிறுத்த அரசாங்கம் ஏதாவது புது முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, அரசு முயற்சி எடுப்பதைவிடப் படம் பார்ப்பவர்கள் இரண்டு நாட்கள் பொறுத்து இந்தப் படத்தைப் பார்க்கலாமே என்று நினைத்தால் போதும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்** . பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சம்பவம் நடந்த இடத்தில் சுவர் குறுகலாக இருந்ததால்தான் விபத்து ஏற்பட்டது. ஆகவே, அந்தத் தியேட்டர் சொந்தக்காரர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது? வேறு தியேட்டர்களிலும் இம்மாதிரிச் சம்பவம் நடைபெறாமல் இருக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: பேரவைத தலைவர் அவர்களே, அந்தக் குறை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும், அந்த இடத்தைப் பழுது பார்க்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. அந்தக் குறைபாடுகள் எல்லாம் அகற்றப்பட்ட பின்னர்தான் மீண்டும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல் மற்ற இடங்களிலும் நடைபெறாமல் இருப்பதற்காக, வேண்டிய ஆங்காங்குள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஆங்காங்குள்ள அதிகாரிகள் அதைப் பார்த்துக் கொள்வார்கள் என்று முதலிலேயே குறிப்பிட்டுள்ளேன்.

**திரு. கே. என். குமாரசாமி**: பேரவைத் தலைவர் அவர்களே, கூட்ட நெரிசலைத் தவிர்ப்பதற்காக இரண்டு மணி நேரத்திற்கு முன்னதாகவே டிக்கெட் கொடுப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா? கடைசி நேரத்திலே டிக்கெட் கொடுப்பதால்தான் இப்படி நேரிடுகிறது. எனவே, முன்கூட்டியே டிக்கெட் கொடுப்பதுபற்றி அரசாங்கம் யோசித்து முடிவு செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: பேரவைத் தலைவர் அவர்களே, 'முன்னதாகவே ரிசர்வ் செய்யப்படுகிறது' என்ற விளம்பரங்கள் பத்திரிகைகளில் வருவதை கனம் உறுப்பினர் அவர்கள் பார்த்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

THIRU T. MARTIN : Whenever pictures in which prominent actors like the Hon. Member Thiru M. G. Ramachandran, Sivaji Ganesan or whoever it may be, act, are released, there is such heavy crowd and such incidents naturally take place. So, may I know whether there is any standing order issued to the Collectors and the cinema theatre owners concerned to take police protection to regulate the crowd?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அன்றைய தினம் அந்தப் படம் வெளியானபோது, அந்தத் தியேட்டரில் ஒரு தலைமைக் காவலரும், நான்கு காவலர்களும் இருந்தார்கள். வெளியே ஆயுதம் தாங்கிய பத்து போலிசார் இருந்து கூட்டத்தைக் கட்டுப்படுத்தினார்கள் என்று தெரியவருகிறது.

### அரசுப் பணியாளர் சங்கங்கள்

* 150 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்கார் ஊழியர்களில், எந்தெந்த ஊழியர்களுக்கு சங்கம் அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது?

(இ) எந்தெந்த ஊழியர்களுக்கு அனுமதிக்கப்படவில்லை?

(உ) அதற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (அ) அரசு ஊழியர்கள் சங்கங்கள் அமைத்துக் கொள்வதற்கு அரசின் அனுமதி தேவையில்லை. அரசு ஊழியர்களின் எத்தொகுதியினரும் சங்கம் அமைத்துக் கொள்ள உரிமை பெற்றவர் ஆவர். ஆனால் அத்தகைய சங்கங்களுக்கு, அரசு 'ஏற்பளிப்பு' (ரிகக்னிஷன்) வழங்க, அல்லது மறுக்க அரசுக்கு அதிகாரம் உண்டு. 'ஏற்பளிப்பு' வழங்கும் போது, 21—11—1960-ம் நாள் வெளியிட்ட 1835-ம் எண்ணுள்ள அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை ஒப்புநோக்கி ஏற்பளிப்பு வழங்கப்படுகிறது. இதுவரை இம் மாநிலத்தில் எண்பது (80) பணியாளர் சங்கங்களுக்கு 'ஏற்பளிப்பு' வழங்கப்பட்டு உள்ளது.

(இ) & (உ) தமிழக அரசு சிற்றெழுத்தர் சங்கம், வாட்ச்மென் அசோசியேஷன், திருச்சி, இண்டியன் டெய்ரி டிப்ளமோ ஹோல்டர்ஸ் அசோசியேஷன் போன்ற சங்கங்களுக்கு அரசு 'ஏற்பளிப்பு' அளிக்கவில்லை. இதில் உள்ள உறுப்பினர்கள் குறைவாக இருந்ததாலும், இப் பகுதியினர் ஏற்பளிப்பு அளிக்கப்பட்டுள்ள பிற சங்கங்களில் சேர்ந்து தங்கள் கோரிக்கைகளைத் தெரிவித்துக் கொள்ள உரிமை இருப்பதாலும் இச் சங்கங்களுக்கு ஏற்பளிப்பு வழங்கவில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** தலைவர் அவர்களே, வாழ்க்கைச் செலவுப் புள்ளி ஏறிக் கொண்டே வருவதால், படித்த சர்க்கார் சிப்பந்திகளும் தங்களுடைய உரிமைக் குரலைக் கிளப்புவதற்காக இருக்கக்கூடிய இந்த நேரத்தில் சங்கத்தை அங்கீகாரம் செய்யவில்லையென்பது ஒரு முட்டுக்கட்டையாக இருக்கிறது. அந்த முட்டுக்கட்டை நிலையைத் தவிர்ப்பதற்காக எல்லாச் சிப்பந்திகளின் சங்கங்களையும் அங்கீகாரம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இம் மாநிலத்தில் இதுவரை 80 பணியாளர் சங்கங்களுக்கு ஏற்பளிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. நான் முதலில் கூறியதை உறுப்பினர்





அவர்கள் கவனிக்கவில்லையென்று தெரிகிறது. அண்மையில், தமிழக அரசு சிற்றெழுத்தர் சங்கத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் ஏற்பளிப்பு தேவையில்லை எனக் கருதி, அச் சங்கத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது. வாட்ச்மென் அசோசியேஷன், திருச்சி, சங்கத்தில் 75 உறுப்பினர்கள் மட்டுமே இருப்பதாலும், ஏற்கனவே இவர்கள் ஏற்பளிப்பு அளித்துள்ள கடைநிலை ஊழியர் சங்கத்தில் சேர்ந்துகொள்ள உரிமை இருப்பதாலும் அனுமதி மறுக்கப்பட்டது. மற்றும் 'இண்டியன் டெய்ரி டிப்ளமோ ஹோல்டர்ஸ் அசோசியேஷன்' என்பதில் 52 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர். இவர்கள் அனுமதிக்கப்பட்ட என்.ஜி.ஜி.ஓ. யூனியன் மூலமாகத் தங்கள் கோரிக்கைகளைத் தெரிவிக்கலாம். ஆகவே, அதற்கும் அனுமதி மறுக்கப்பட்டது.

**திரு. சி. கோவிந்தராசன் :** அந்தச் சங்கங்கள் எல்லாம் எந்த அடிப்படையில் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கின்றன? இரண்டாவது, அவர்கள் நீண்ட நாட்களாகத் தங்களுக்கு தொழிற் சங்க உரிமைகள் வேண்டும் என்று கோரி வருகிறார்களே, அந்த உரிமைகள் வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதற்கென்று சில விதிமுறைகள் அரசாங்கத்தில் இருக்கின்றன. அந்த விதிமுறைகளின் முழு விவரமும் என்னிடத்தில் இல்லை.

**திரு. பெ. மலைச்சாமி :** சில அரசு ஊழியர் சங்கங்கள் அரசியல் சங்கங்களாக மாறி வருகின்றன என்று பொதுமக்கள் கருதுகிறார்களே, அதைத் தடுத்தாக வேண்டியது அவசியமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படி மாறி வருவதாகப் பத்திரிகையில் செய்திகள் வருகின்றன. அதை அரசு ஊழியர்கள் தான் தடுத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** டிரான்ஸ்போர்ட்டில் பணிபுரிகிற ஊழியர்கள் முதலில் தொழிலாளர்கள் என்று கருதப்பட்டு ஹை பவர் கமிட்டி அமைக்கப்பட்டது. அந்த ஹை பவர் கமிட்டி தன் அறிக்கையை அளித்தது. அந்த அறிக்கையை மேசையின் மீது வைக்கவில்லை என்று சொன்னாலும் இப்போது அவர்கள் சர்க்கார் சிப்பந்திகளாகக் கருதப்பட்டு—செகண்டு பே கமிஷனுக்கு விடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைப் போடுங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** நான் கேள்வி தான் போடுகிறேன். ஒரு நிமிஷம் கூட அவகாசம் கொடுக்கவில்லை என்று சொன்னால் என்ன பயன்? டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள் சர்க்கார் சிப்பந்திகளாகக் கருதப்படாது தொழிலாளர்களாகக் கருதப்படுவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சர்க்கார்ப் போக்குவரத்தில் அலுவல் புரிகின்றவர்கள் தொழிலாளர்களாகக் கருதப்படுவார்கள்.

DR. H. V. HANDE : Sir, is it a fact that a few representatives of the N.G.Os. met the Hon. Chief Minister and the Hon. Chief Minister did not treat them courteously ? Such a 'puhar' (complaint) has been made by them. Will he clarify whether that is true or not?

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* மூலக் கேள்வி, அனுமதி வழங்கப்பட்ட சங்கங்கள், அனுமதி வழங்கப்படாத சங்கங்கள் பற்றியது தான். துணைக் கேள்வி மூலக் கேள்வியை ஒட்டியதாக இருக்க வேண்டுமே தவிர எதைப்பற்றி வேண்டுமானாலும் கேட்கலாம் என்ற ரீதியில் போகக் கூடாது.

DR. H. V. HANDE : Will the Hon. Chief Minister clarify it?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* நான் இதற்கு விளக்கம் கொடுத்துவிடுகிறேன். இதுபற்றி அன்றையதினமே திரு. மகாதேவன் அவர்கள் பேசும்போது விளக்கம் அளித்திருக்கிறேன். என்.ஜி.ஓ. சங்கப் பிரதிநிதிகள் என்னையும், அமைச்சர் அவையில் இருக்கின்றவர்களையும் சந்தித்து ஒரு மணிக்கும் மேலாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். பத்து மணிக்கு நடக்க வேண்டிய காபினெட் மீட்டிங் கூட இந்தப் பேச்சு வார்த்தைகளால் தாமதப்பட்டு, 11 மணிக்கு மேல்தான் நடந்தது. அவர்கள் எந்த நேரத்தில் சந்தித்திருந்தாலும் நாங்கள் ஒருபோதும் அலட்சியப்படுத்தி அனுப்புவதில்லை. ஆணவமாகப் பேசி அனுப்புவதில்லை. அக்கறை காட்டாமல் இருந்ததும் இல்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* இனி துணைக் கேள்வி, மூலக் கேள்வியை ஒட்டியதாக இருக்க வேண்டுமே தவிர எல்லாப் பொருள் பற்றியும் கேட்டு விடலாம் என்கிற போக்கை அனுமதிக்க முடியாது. **கேள்வி 151.**

*திரு. கே. விநாயகம் :* சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். நீங்கள் சொல்கிற விளக்கம் எங்களுக்கு நன்கு தெரியும். மூலக் கேள்வியை ஒட்டி துணைக் கேள்விகளுக்கு அமைச்சர் அளிக்கிற விடையின் மீது உப கேள்வி போடுகிற உரிமை எங்களுக்கு இருக்கிறதா, இல்லையா ?

" இப்படித்தான் வருகிறதா என்னிடத்தில்"? என்று அமைச்சர் அவர்கள் என்.ஜி.ஓ. சங்கத்தாரிடம் கூறியதாகக் கூறப்படுவது உண்மையா, இல்லையா ?

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. விநாயகம் அவர்கள் பாயிண்ட் ஆஃப் ஆர்டர்தான் எழுப்பினார்கள். அதோடு நிற்க வேண்டும். மேலே விவரங்களுக்குப் போக வேண்டாம். அடுத்த கேள்வி 151.



## *Posts of District Judges.*

* 151. Q. THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether selections to a number of posts of District Judges are to be made by direct recruitment shortly?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* ஆம்.

*திரு. என். எஸ். வி. சித்தன் :* பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நீதிபதி பதவிகளில் எத்தனை இடங்கள் காலியாக இருக்கின்றன ? அவற்றிற்கு எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன ? எப்போது நிரப்பப் போகிறார்கள் ? நேரிடைத் தேர்வுகளின் மூலம் எடுக்காது, இப்போது பதவியில் உள்ளவர்களுக்கே ப்ரமோஷன் கொடுக்க அரசு முடிவு செய்யுமா ?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* மாவட்ட நீதிபதிகள் பதவிக்கு 293 மனுக்கள் வந்திருக்கின்றன. ஏற்கெனவே பதவியில் உள்ளவர்களுக்கு ப்ரமோஷன் கொடுப்பார்களா என்று இரண்டாவதாகக் கேட்டார். விதிகள் அப்படி இல்லை. மொத்தம் 24 இடங்கள் இருக்கின்றன. 17 இடங்களுக்கு ப்ரமோஷன் மூலம் ஃபில்லப் செய்யலாம். 7 இடங்கள் நேரிடைத் தேர்தல் மூலமே பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார் :* தகுதியின் அடிப்படையிலேயே இந்த நியமனங்கள் நடைபெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* இது தகுதியின் அடிப்படையில்தான் உயர்நீதிமன்ற நீதிபதியையும் கலந்து முடிவு செய்வார்கள் என்று நம்புகிறேன்.

*திரு. கரு. சீமைச்சாமி :* மாவட்ட நீதிபதிகள் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படும்போது பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சலுகை—திறமையில் இல்லை—ஸ்தானங்கள் இரண்டு, மூன்று என்று ஒதுக்குவதில் கவனம் செலுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* இதில் தகுதி என்று கூறி விட்ட பிறகு சலுகை என்பதற்கு இடம் இல்லை.

*திரு. பி. எஸ். தனுஷ்கோடி :* மாவட்ட நீதிபதிகள் 24 பேர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறியலாமா ?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* இன்னும் தேர்வு முடிவு பெறவில்லை.

*திரு. என். கிட்டப்பா :* மாவட்ட நீதிபதிகள் நியமனத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை அமுலாக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* இல்லை.

திரு. கே. விநாயகம்: இப்படி நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப் பட இருக்கிற மாவட்ட நீதிபதிகள் பதவிக்கு "எங்கள் கட்சிக் காரர்களுக்குத்தான் சுலபமாகக் கிடைக்கும்" என்பதான பிரச் சாரம் வெளியில் நடைபெறுகிறதே, அந்தப் புகார்களுக்கு இடமில் லாது, திறமையை அடிப்படையாக வைத்துத் தேர்வு நடை பெறுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆண்டாண்டு காலமாக நடந்து வருகிற வழியை யொட்டித்தான் இதுவும் நடைபெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டு இருக்கக் கூடாது என்பது விதி. திரு. விநாயகம் அவர்கள். . . . .

THIRU K. VINAYAKAM: Sir, there is a rumour about it. The Government must be careful...........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. விநாயகம் அவர்களிடம் ரூல்ஸ் புத்தகம் இல்லை என்றால் நான் ஒரு புத்தகம் கொடுக்கச் சொல்கிறேன்.

THIRU K. VINAYAKAM: Sir, that is an insinuation.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒன்றும் இன்சின்யு வேஷன் இல்லை.

THIRU K. VINAYAKAM: The Chair should not assume that I do not know the rules and that is too much for him to say. I am only asking a question to elicit information and it is the job of the Ministry to educate me or furnish me with more facts. The Chair should not run to the aid of the Government at every stage and try to save them. What are all these things? Does the Chair imagine for one moment that I do not know the rules? I know the rules long before the Chair became a Member of the Assembly. So do not try to insult me...........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீண்ட நாட்களாக இருப்பத னாலேயே எல்லோருக்கும் எல்லாம் தெரிந்து விடும் என்று சொல்ல முடியாது. விதிமுறைகளில், கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு இருக்கக் கூடாது என்று இருக்கிறது. போடுகிற போதே குற்றச் சாட்டுடன் கேள்வி பிறந்தால் விதிமுறைகளை நன்றாகப் படித்தவர் என்று எப்படி நினைத்துக் கொள்ள முடியும்?

திரு. கே. விநாயகம்: ஆளும் கட்சி ஹைக்கோர்ட் வக்கீல்கள் எல்லாம் அப்படித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படிப்பட்ட குற்றச்சாட்டு கள் இங்கே கேள்வி நேரத்தில் வரக் கூடாது.

திரு. கே. விநாயகம்: அவர்கள் பெயர் கெடுகிறதே என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். அடுத்த கேள்வி 152.



*Course under Leprosy Eradication Scheme*

* 152. Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Health be pleased to state:

(*a*) the number of candidates who have completed the Para-Medical and Non-Medical Supervisors' Course under the Leprosy Eradication Programme;

(*b*) whether they are paid any stipend during the tenure of their training;

(*c*) if so, the details thereof; and

(*d*) the number of candidates absorbed in the Government Hospitals and Dispensaries so far?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:

**1969–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31–ஆம் நாள் வரை**

| | | |
|---|---|---|
| (அ) | துணை மருத்துவப் பணியாளர்கள் .. | 446 பேர்கள். |
| | நிர்வாக மேற்பார்வையாளர்கள் .. | 16 பேர்கள். |
| (இ) | ஆம். | |
| (உ) | துணை மருத்துவப் பணியாளர் பயிற்சி பெறுபவர். | ஒவ்வொருவருக்கும் மாதம் 50 ரூபாய் வீதம் ஆறு மாதங்களுக்கு. |
| | நிர்வாக மேற்பார்வையாளர்களாகப் பயிற்சி பெறுபவர்கள். | ஒவ்வொருவருக்கும் மாதம் 100 ரூபாய் வீதம் ஒன்பது மாதங்களுக்கு. |
| (எ) | துணை மருத்துவப் பணியாளர்கள் .. | 306 பேர்கள். |
| | நிர்வாக மேற்பார்வையாளர்கள் .. | 15 பேர்கள். |

DR. H. V. HANDE: From the answer given by the Hon. Minister it is evident that a few more para-medical personnel have to be absorbed. I hope more para-medical personnel will be absorbed to cope up with expansion programme for prevention of leprosy. Will the Government come forward to tell us clearly what expansion programme in regard to prevention and spread of leprosy is in the minds of Government and what concrete steps they propose to take for the same? Every rupee spent on this is worth Rs. 10 spent on other schemes, since it prevents a number of cases getting infected. So will the Hon. Minister give us an assurance and declare a 'War on Leprosy' and to fight it in an effective manner?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த லெப்ரசி கன்ட்ரோல் யூனிட்ஸ் இரண்டு ராசிபுரத்திலும், அரக்கோணத்திலும் வைக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மாநிலம் முழுவதிலும் Service Education and Treatment Units 32 வைத்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர, மதுரை மாவட்டத்திலே part of the integrated scheme for leprosy control 12 நிலையங்கள் வைக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த வகையிலே 74 துணை மருத்துவப் பணியாளர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்புக் கிடைக்கலாம்.

மற்றவர்களுக்கு சீனியாரிடியின்படி அவர்கள் பயிற்சி பெற்ற காலத்தினை அடிப்படையாக வைத்து வேலை வாய்ப்புகள் தொடர்ந்து கிடைக்கும். 1966-ம் ஆண்டிலே பயிற்சி பெற்றவர்கள் அனைவரும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** இந்தத் தொழு நோய் சிகிச்சை தடுப்பு முறைகளைக் கையாள்வதற்காக அது சம்பந்தப்பட்ட சில தனிப்பட்ட ஸ்தாபனங்கள் வேலை செய்து வருகின்றன. சேலம் ஜில்லாவிலே ஒரு ஸ்தாபனம் அப்படி வேலை செய்து வருகிறது. இம்மாதிரி ஸ்தாபனங்களுக்கு அரசாங்கத்திலிருந்து ஊக்கமோ உதவியோ அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற துணைக் கேள்வி, மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக இல்லை. ஓரளவிற்கு மானியங்கள் அளிக்கப்படுகின்றன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தக் குறிப்பிட்ட ஸ்தாபனத்திற்கு அளிக்கப்பட்டு இருக்கிறதா என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தரலாம்.

DR. H. V. HANDE : In his answer the Hon. Minister gave an indication of a few more centres being started for leprosy campaign. There are a few centres like EPM centre in Dharmapuri. Will the Hon. Minister tell us whether there is any programme for giving Central assistance to such centres ? If so, will the Hon. Minister give us greater details about them ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதைப் பற்றிய விவரக் குறிப்பு இல்லை. எவ்வளவு வருகிறது, என்ன விவரம் என்பதுபற்றி என்னிடத்திலே இப்பொழுது தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்தத் தொழு நோய் வியாதிக்கு என்னதான் சிகிச்சையளித்துத் தடுப்பதற்கு முயற்சி செய்தாலும் அது மேலும் மேலும் வளர்ந்து கொண்டுதான் போகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் வறுமை என்று சொல்லப்படுகிறது. எனவே வறுமையைப் போக்குவதன் மூலமாக இந்த வியாதி மேலும் பரவாமல் தடுக்க முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் உணருகிறார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தொழுநோய் வருவதற்கு வறுமைதான் காரணம் என்று எந்த டாக்டரும் கண்டு பிடித்திருப்பதாகத் தெரியவில்லை. அதைக் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதற்கு வறுமை காரணம் என்று வேண்டுமானால் சொல்லலாம். இந்தத் தொழு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நலம் பயக்கின்ற வகையிலே அரசாங்கத்துறையிலேயிருந்து மருத்துவ மனைகள் வைக்கப்படுகின்றன. **அதைப்**



போன்று தனியார் துறையிலிருந்தும் மருத்துவ மனைகள் அமைக்கப்படுகின்றன. இதைத் தவிர வெளி நாடுகளிலிருந்து வருகின்ற அறச்செயல் புரிகின்றவர்கள் இந்தப் பணிகளிலே ஈடுபடுகின்றார்கள். எந்த அளவுக்கு இப்படிப்பட்ட தடுப்பு முறைகளை விரிவுபடுத்த முடியுமோ அந்த அளவுக்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன. இப்பொழுது ஓரளவு அறுவைச் சிகிச்சை முறையும் இதிலே புகுத்தப்பட்டிருக்கின்றது. இதன் மூலம் மருத்துவம் பெற்று வருகின்றவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கின்ற முறையிலே சிலபல வேலைகள் அவர்களுக்குப் பழக்கித் தர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சென்னைக்கருகாமையிலே 750 பேர்கள் அப்படிப்பட்டவர்களை வைத்து எந்த வகையிலே அவர்களுக்குப் புனர் வாழ்வு தரலாம் என்பது பரிசீலனையில் இருந்து வருகிறது.

*Directorate for Indigenous system of medicine.*

* 158. Q.—THIRU K. VINAYAKAM :

THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(a) whether the Government have decided to constitute a separate Directorate for indigenous systems of medicine; and

(b) if so, how soon?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) ஆம். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

THIRU K. VINAYAKAM : I refuse to put any more supplementary questions, since I feel that I have not been treated properly in view of the pungent remarks passed by you against me.

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டுக்குச் சித்த வைத்திய முறை மிக மிக அவசியம் என்பதால் இதைச் சீக்கிரமாகப் பரிசீலனை செய்து விரைவிலே ஆரம்பிக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சித்த மருத்துவ முறைக்குத் தனியாக இயக்குநர் துறையொன்று வைக்க அரசாங்கம் பரிசீலித்துத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும். இதற்கென்று தனித் துறை ஒன்று அமைக்கப்பட்டு ஒரு இயக்குநர் நியமிக்கப்படுவார்.

DR. H. V. HANDE : Will this proposed Directorate take into consideration the grievances of students of Palayamkottai that they should be treated on a par with graduates of modern medicine? What is the present position? What is the method which the Government are going to adopt to redress the grievances of these boys and girls?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தனியாக இயக்குநர் போட்டு தனித்துறை அமைக்கப்படவேண்டுமென்ற கருத்து அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி முடிவு செய்ததற்குப் பிறகு பாளையங்

கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரியில் இருக்கின்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன—மாவட்டத் தலைநகரிலே இதற்காக ஒரு தனி விங் ஏற்படுத்தக்கூடிய அளவிலும் ஆராயப்பட்டு வருகிறது. தனி இயக்குநர் அமைக்கப்பட்டதற்குப் பிறகு இந்தப் பிரச்சினைகளில் அதிகமாகக் கவனம் செலுத்தப்பட வேண்டியது எது என்பதைப் பார்த்து மேற்கொண்டு கவனம் செலுத்த அரசு முன்வரும்.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்திலே உள்ள சித்த மருத்துவ மனை நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது. திருச்சியிலே உள்ள சித்த மருத்துவ மனையும் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. குறைந்த செலவில் நிறைந்த சிகிச்சை அளிக்கும் இப்படிப்பட்ட சித்த மருத்துவ மனைகளை எல்லா மாவட்டங்களிலும் திறக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி இவை யெல்லாம் பரிசீலனையில் இருந்து வருகின்றன.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பரையாக சில குடும்பத்திலிருக்கிறவர்கள் நாட்டு மருந்துகள் தயாரித்து நல்ல முறையிலே சில பிணிகளைப் போக்குகின்ற முறையிலே இருக்கின்றார்கள். அவற்றை யெல்லாம் மாவட்ட அடிப்படையில் ஒரு ஆய்வாளர் நியமித்துத் தகவல்கள் சேகரித்து எல்லாப் பொது மக்களுக்கும் பயன்படச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இதற்காகத் தனியாக இயக்குநர் போடப்பட்ட பிறகு ஆராய்ச்சி நிலையம் வைப்பது, உற்பத்தி நிலையம் வைப்பது போன்றவை பற்றிய நிலைமைகளைப் பரிசீலிக்கலாம். அப்படிப்பட்ட நிலைமையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போன்ற முயற்சிகளையும் மேற்கொள்ளலாம்.

### *Physically handicapped qualified in typewriting*

* 154 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether representations have been received from handicapped people requesting recognition of the examinations passed in typewriting from English Institutions some time in October, 1967; and

(*b*) if so, the details of the representations?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) இங்கிலாந்தில் 'லண்டன் பிட்மன் தேர்வு நிலையம்' நடத்தும் தட்டெழுத்துத் தேர்வு குறித்து சில விளக்கம் அளிக்குமாறு உடல் ஊனமுற்ற திரு. பி. சங்கரநாராயணன் அவர்கள் அவரது 15–2–1967-ம் நாளிட்ட கடிதத்தில் கேட்டிருந்தார். தமிழ் நாடு அரசாங்க தட்டெழுத்துத் தேர்வுகளுக்கு நிகராக அந்நிய நாட்டுத் தேர்வுகளைக் குறிப்பிட்டுள்ள அரசாங்க ஆணையின் அல்லது விதியின் நகலை அனுப்புமாறு அவர் கேட்டிருந்தார். இந்தியாவிற்கு வெளியேயுள்ள தேர்வுக் கழகங்கள் சார்பில் இந்தியாவில் உள்ள முகவர் நிறுவனங்களால் நடத்தப்படும் வணிக இயல் பாடங்கள் எதிலாகிலும் தேர்ச்சி பெறுவது அரசாங்க ஒப்புதலைப் பெறுதென்று அவருக்கு அறிவிக்கப்பட்டது.



**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்ற சகோதர சகோதரிகள் நம்முடைய அனுதாபத்திற்குரியவர்கள். அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிவுடன் கவனிக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். இதற்கு முன்னாலே இதுபற்றி நடவடிக்கைகள் எடுக்காவிட்டாலும் இனிமேலாவது அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிவுடன் அரசு கவனிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்ற திரு. பி. சங்கரநாராயணன் என்பவர் எந்தக் கோரிக்கையையும் அனுப்பவில்லை. தகவல்தான் கேட்டிருந்தார். அதாவது இங்கிலாந்தில் இருப்பதைப் போன்று இங்கேயும் இருக்கிறதா அதற்கு ஈடாக இருக்கிறதா என்ற தகவலைத்தான் கேட்டிருந்தார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று கோரிக்கைகள் வைக்கப்பட்டால் அவற்றை அனுதாபத்துடன் கவனித்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் பரிசீலிக்கும்.

**திரு. வ. ஜார்ஜ் :** உடல் ஊனமுற்றவர்கள் பல இன்னல்களுக்கு மு.ப. 2–30
ஆளாகிறார்கள். படித்த பிறகும் வேலையில்லாது திண்டாடி வாட்டமுறும் நிலைமையைப் பார்க்கிறோம். அவர்களுக்கெல்லாம் சலுகை அளித்து வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லையென்றாலும், உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் தனியார் நிறுவனங்களும், அரசாங்க நிறுவனங்களும் ஓரளவு கவனம் செலுத்தித்தான் வருகின்றன. தனியார் துறையில் உள்ள தொழிற்சாலைகளில் உடல் ஊனமுற்றவர்கள் செய்யக்கூடிய பணிகளுக்கேற்றவாறு சில பல இடங்களில் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். அரசாங்க அமைப்புகளிலும் அவர்களுக்கு ஏற்ற வேலைகள் கொடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுத் தான் வருகின்றன.

### தனியார் நிறுவனங்களின் கீழ் உயர்நிலைப்பள்ளிகள்

* 155 வினா—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தனியார் நடத்தும் ஸ்தாபனங்களின் மூலமாக உயர்நிலைப்பள்ளிகள் திறக்க வேண்டி மனுக்கள் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : 1969-70ம் ஆண்டில் தனிப்பட்டோரிடமிருந்து 25 மனுக்கள் வந்தன. அதிலே 13 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்** : வந்த மனுக்களில் அரிசனங்களின் சார்பில் தனியார் பள்ளி நடத்துவதற்கான மனுக்கள் வந்தனவா? ஜாதி இந்துக்கள் பள்ளிகளைத் தொடங்க வேண்டுமென்றால் இருக்கின்ற நிபந்தனைகளில் இருந்து அரிசனங்களுக்கு விதிவிலக்கு கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : அனுமதி கொடுக்கப்பட்ட பள்ளிகளின் விவரங்கள்தான் இருக்கின்றன. அரிசனங்களுக்கு என்று தனியாக வந்ததா என்ற விவரக் குறிப்பு இல்லை. பொதுவாக எல்லா உயர்நிலைப்பள்ளிகளுக்கும் எந்த நிபந்தனையின் பேரில் அனுமதி வழங்கப்படுகின்றதோ அதே அடிப்படையில்தான் அரிசனங்கள் சார்பாக வந்தாலும் வழங்கப்படும். இப்படிப்பட்ட பள்ளிகளை ஆரம்பிக்க வேண்டுமென்றால் ஐந்து ஏக்கர் நிலம் வேண்டும், கட்டிடம் வேண்டும் என்பது போன்ற விதிமுறைகளில் மாற்றம் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Education the terms and conditions required to start private high schools and the financial aid that the Government are going to give for such high schools?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தனியார் துறையில் உயர்நிலைப் பள்ளிகளை அமைக்க வேண்டுமென்றால், ஆண்கள் பள்ளியாக இருந்தால் ஐந்து ஏக்கர் நிலம் இருக்க வேண்டும், பெண்கள் பள்ளியாக இருந்தால் மூன்று ஏக்கர் நிலம் இருக்க வேண்டும்; கட்டடம், சுகாதார வசதிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்; எழுபதாயிரம் ரூபாய் முன்பணமாகச் செலுத்தவேண்டும்; அதிலே முதல் தவணையாக 35,000 ரூபாயும், பாக்கி 35,000 ரூபாயை ஆண்டு ஒன்றுக்கு ஏழாயிரம் வீதம் ஐந்து ஆண்டு காலத்திலும் கட்ட வேண்டுமென்று விதி இருக்கிறது.

**திரு. வ. ஜார்ஜ்** : தனியார் பாடசாலைகளைத் திறப்பதற்கான விதிமுறைகளின்படி என்டௌமென்ட் கட்டும் நிலைமை இருக்கிறது. கிறித்துவ ஸ்தாபனங்கள் போன்றவற்றுக்குப் பணமாக என்டௌமென்ட் கட்டுவதில் இருந்து விதிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இப்போது காஷ் என்டௌமென்ட் கட்ட வேண்டுமென்றுதான் விதி இருக்கிறது. கிறித்துவ சமூகத்தினரால் தனியாக நடத்தப்படுகின்ற பள்ளிகளுக்கு பணமாகக் கட்டுகின்ற நிலைமையை மாற்றி வேறுவகையில் செக்யூரிடி கட்டும் முறையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அந்த விண்ணப்பங்கள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றன. விரைவில் தக்க முடிவு மேற்கொள்ளப்படும்.



**திரு. என். கிட்டப்பா** : தனியாரால் நடத்தப்படும் உயர்நிலைப் பள்ளிகள் லாப நோக்கம் கருதி வணிக முறையில் நடத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்த நிலைமையை மாற்ற அரசு தனியார் பள்ளிகளை எடுத்து நடத்த முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தனியார் நடத்தும் பள்ளிகளில் பெரும்பாலானவை இலாப நோக்கோடு இருக்கின்றன வென்று சொல்லுவதற்கில்லை. ஒரு சில அப்படி இருக்கலாம், அதைக் கட்டுப்படுத்த விதிமுறைகள் இருக்கின்றன. அண்மையில் ஒரு குழு அமைக்கப்பட்டு எந்த எந்த வகையில் சீர்திருத்தலாம் என்பதுபற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. குழு அறிக்கை சமர்ப்பித்த பிறகு சிலபல குறைபாடுகள் இருந்தாலும் நீக்குவதற்கான வழிவகைகளைத் தேடலாம். பெரும்பாலான உயர்நிலைப் பள்ளிகள் அந்த நோக்கத்தோடு இல்லை; நல்ல முறையில் இருக்கின்றன.

**திரு. எம். பூபதி** : தனியாரால் நடத்தப்படுகின்ற கல்வி ஸ்தாபனங்களில் அநியாயமாக முன்கூட்டியே ராஜிநாமா கடிதம் வாங்கி வைத்துக் கொள்ளுவது, சம்பளத்தில் ஒரு பகுதியைப் பிடித்துக் கொள்ளுவது போன்ற முறைகள் இருக்கின்றன. அந்த நிலைமைகளைப் போக்கும் வகையில் சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று முறைகேடான செயல்கள் நிகழும்போது பாதிக்கப்பட்டவர்கள் முறையீடு செய்து கொள்ளுகிறார்கள். கல்வி அதிகாரிகள் அந்தந்த மாவட்டங்களில் தக்கபடி ஆராய்ந்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறார்கள். இப்போது இருக்கும் சட்டதிட்ட அடிப்படையில் பள்ளிகளுக்குத் தரும் மானியத்தைத்தான் நிறுத்த முடியுமே தவிர, நிர்வாகத்தை எடுத்துக் கொள்ள வழி இல்லை. இப்போது அமைக்கப்பட்ட குழுவினர் ஆங்காங்குள்ள நிலைமைகளைப்பற்றியெல்லாம் கருத்துக்களைத் திரட்டி வருகிறார்கள். குழுவின் அறிக்கைக்குப் பிறகு எந்தெந்த வகையில் தீவிரமான முறைகளை மேற்கொள்ளலாம் என்று முடிவு செய்யலாம். தற்போது மாவட்ட கல்வி அதிகாரிகள் இத்தகைய முறைகேடான செயல்கள் நடக்கும்போது தக்க நடவடிக்கை எடுத்து நீதி வழங்க ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி கேள்வி எண் 156, 157 ஒத்திவைக்கப்படுகின்றன.

### *Vegetable Marketing Society*

*158 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether the Government propose to start a vegetable marketing society; and

(b) whether its function is to purchase vegetables from growers within a radius of 80 K.M. from the City?

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். நண்பர்கள் சில நேரத்தில் கொஞ்சம் தவறிப் போய்விட்டால் எப்படி நடத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

“பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்
றேதம் பலவுந் தரும்.”

என்றும் கூறியுள்ளார். வீட்டுக்குச் சென்ற பிறகு, பேரவைத் தலைவர் மீது இப்படிப்பட்டதொரு குற்றச்சாட்டைச் செய்தோமே என்று அவர்களுக்குத் தோன்றும்.

*திரு. கே. விநாயகம்:* எனக்கும் பேசத் தெரியும். நேரம் கொடுத்தால் நானும் எவ்வளவோ குறள்களைச் சொல்லிக் கொண்டிருப்பேன். நீங்கள் தலைவராக இருப்பதால் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* உறுப்பினர் அவர்களே அதை உணருவார்கள். ஆகவே, நான் அதைப் பெரிதுபடுத்தவில்லை. சட்டசபையில் இருக்கிறவர்கள், கோர்ட்டுக்குப் போகிறவர்கள் கூட இந்தப் புத்தகத்தைத் திறந்து பார்க்க வேண்டியிருக்கிறது. அவர்கள் இதைப் படிக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. அவர்களுக்குத் தெரியாதது அல்ல. கேள்வி கேட்க விரும்புகிறவர்கள் கையைத் தூக்க வேண்டும். அப்படிச் செய்யாமலே அவர்களைக் கூப்பிடவேண்டும் என்று சட்டமன்ற விதிமுறைகளில் சொல்லவில்லை, அதற்கு இடம் கொடுக்கவும் இல்லை.

*திரு. கே. விநாயகம்:* நான் கையைத் தூக்கும்போதெல்லாம் என்னைக் கூப்பிடுகிறீர்களா?

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அதுவும் இல்லை.

*திரு. கே. விநாயகம்:* உப கேள்விகள் கேட்க நான் தயாராயிருக்கிறேன். எனக்கு அதற்கு அனுமதி தரவேண்டும்.

*திரு. என். எஸ். வி. சித்தன்:* அண்மையில் சில காலமாக காய்கறிகளின் விலை இரண்டு மூன்று மடங்கு உயர்ந்திருக்கிறது. இது மாதிரி ஒரு சங்கத்தை வைத்து விடுவதால் அதன் விலை குறைந்து விடாது. ஆகவே காய்கறிகளின் விலைகளைக் குறைக்க மேலும் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? அரசாங்க மாளிகையில், சட்ட மன்ற உறுப்பினர்கள் விடுதிக்குப் பக்கத்தில் அரசாங்கக் காய்கறித் தோட்டம் இருக்கிறதே அதற்கு எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது? அதில் காய்கறிகள் உற்பத்தி செய்வதற்கு எவ்வளவு செலவாகிறது? விற்பனை எவ்வளவுக்கு ஆகிறது? லாபமா அல்லது நஷ்டமா?

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:* உயர்ந்து வரும் காய்கறிகளின் விலையைக் குறைப்பதற்காகன ஏற்பாட்டை அரசாங்கம் செய்துகொண்டு வருகிறது. இப்படி ஒரு சங்கத்தின் மூலம் காய்கறி விற்பதன் மூலம் கொத்தவால்சாவடியில் உள்ள மொத்த விலையில் 4 சதவிகிதம் குறைவான விலைக்கு இங்கு காய்கறிகள் வாங்குபவர்களுக்குக் கொடுக்கப்படும். விடுதியின் முன்னால் இருக்கிற காய்கறித் தோட்டத்தின் வரவு செலவு பற்றிய விவரம் தற்சமயம் என் கைவசம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.



*திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:* சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு எதிர்ப்புறமுள்ள காய்கறித் தோட்டத்திற்குப் போடப்பட்டுள்ள முள்வேலி, கம்பம் இவற்றிற்கான செலவிற்காவது அது சம்பாதித்துக் கொடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:* கேள்வி, ‘காய்கறி விற்பனைச் சங்கம் ஒன்றை அமைக்க அரசு கருதியுள்ளதா?’ என்பதாகும். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு முன் உள்ள காய்கறித் தோட்டத்தைப் பற்றியதல்ல. ஆகவே அது குறித்துத் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அத்தனையும் சேகரித்துத் தரப்படும்.

### அரிசி ஆலைகளுக்கான அனுமதிகளை எதிர்த்து ரிட் மனுக்கள்

**159 வினா—திரு. பி. எஸ். மணியன்:* மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1968-ம் ஆண்டில் அரிசி ஆலைகள் துவக்குவதற்கு கொடுத்த அனுமதியை எதிர்த்து எத்தனை ரிட் மனுக்கள் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* முப்பது.

### மதுரை பால்பண்ணைத் திட்டத் தொழிலாளர்கள்.

** 160 வினா—திரு. என். சங்கரய்யா:* மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வார விடுமுறை, 8 மணி நேர வேலை, வருடாந்திர லீவு வசதிகள் கேட்டு, மதுரை பால்பண்ணைத் திட்டத் தொழிலாளர்களிடமிருந்து 1–9–1968-ம் தேதியிட்ட மனு ஒன்று பால்திட்ட ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில் அம்மனுவின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாவை?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* (அ) ஆம்.

(இ) இம்முறையீடு அரசின் ஆய்வில் உள்ளது.

*திரு. என். சங்கரய்யா:* இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக இந்த மனு அவர்களால் கொடுக்கப்பட்டும் இந்த ஆரம்ப உரிமைகள், வார விடுமுறை, எட்டு மணி நேர வேலை போன்றவை பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்கு அந்த உரிமைகள் வழங்குவதற்கு விரைவில் நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வருமா?

[1970 மார்ச் 2

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** வார விடுமுறை, எட்டு மணி நேர வேலை குறித்து அரசாங்கம் ஏற்கெனவே ஒத்துக் கொண்டு ஆணை பிறப்பித்து விட்டது. பாக்கியுள்ள கோரிக்கைகள் பலவற்றை ஒத்துக்கொண்டிருக்கிறது. மிச்சமுள்ளவை ஆய்வில் இருக்கின்றன.

## கைத்தறித் துணிக்குப் பயன்படும் சாயம்

161 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1967-68, 1968-69-ம் ஆண்டுகளில் கைத்தறித் துணிக்குப் பயன்படும் 'சாயம்' வெளி நாடுகளிலிருந்து எவ்வளவு ரூபாய்க்குத் தமிழ்நாடு அரசால் இறக்குமதி செய்யப்பட்டது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சாயங்களும், ரசாயனப் பொருள்களும் அரசினால் நேரடியாக இறக்குமதி செய்யப்படுவதில்லை. ஆனால் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு நிலையம், கைத்தறி இயக்குநரின் மூலமாகப் பணியாற்றி, இப் பொருள்களை இறக்குமதி செய்கிறது. 1967–68, 1968–69-ம் ஆண்டுகளில் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சாயப் பொருள்கள், ரசாயனப் பொருள்களின் விலை காப்புறுதி—சரக்குக் கட்டணத்தின் மதிப்பு முறையே 18.74 லட்சம் ரூபாய், 72.45 லட்சம் ரூபாய் ஆகும்.

162 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெளிநாடுகளிலிருந்து தமிழ்நாடு அரசு இறக்குமதி செய்யும் சாய விநியோகத்தைத் தடை செய்து 1968 டிசம்பர் 3-வது வாரத்தில் சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இந்தச் சாயம் இறக்குமதி செய்கிற உரிமையைக் கூட்டுறவு சங்கத்தினிடமிருந்து திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குக் கொடுத்ததால்தான் இதுமாதிரி தடை உத்தரவு செய்யப்பட்டது என்பது அவருக்குத் தெரியுமா ? அப்படிக் கொடுக்கவேண்டிய அவசியம் என்னவென்று விளக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சாயம் இறக்குமதி செய்வதற்கு யாருக்கும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை. அரசாங்கத்தின் சார்பில், டைரக்டர் ஆஃப் ஹாண்ட்லூம்ஸ் சார்பில், ஸ்டேட் சொஸைட்டி ஏஜென்ட் என்ற முறையில் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டது. ஸ்டேட் சொஸைட்டிதான் இறக்குமதி செய்கிறது. வேறு யாரும் இறக்குமதி செய்யவில்லை.



1970 மார்ச் 2]

**திரு. நா. வீராசாமி :** சாயம் இறக்குமதி வழங்குவதில் இருக்கிற விதிமுறைகள்படிதான் அரசாங்கம் அந்த அனுமதியை வழங்கியுள்ளது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இதற்குமுன் இருந்த அரசாங்கம் இதைப் பயன்படுத்தாதவர்களுக்குக்கூட இந்த அனுமதிகளை வழங்கியது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பழைய சரித்திரத்தைப் பற்றி என்னிடம் குறிப்பு இல்லை.

**திரு. சு. துரைசாமி :** நம் நாட்டிற்கு, குறிப்பாக கைத்தறிகளுக்குத் தேவைப்படுகிற சாயம் கிடைக்காத காரணத்தினால் தமிழ்நாட்டில் 'ஹைட்ரஸ்' போன்ற பொருள்கள் கிடைக்காமல் சிரமப்படுகிறார்கள். ஆகவே அதை அதிகமாகப் பெற்றுத்தர அரசு முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** டெக்ஸ்டைல் இன்டஸ்ட்ரிக்கு ஏராளமான கெமிக்கல்ஸ் தேவைப்படுகின்றனவென்றாலும் அதில் சில சங்கடங்கள் உள்ளன . எனவே, 'ஹைட்ரஸ்' என்ற இரசாயனப் பொருளை உடனே நம் மாநிலத்தில் உற்பத்தி செய்யவேண்டுமென்று ஒரு கோடி ரூபாயில் ஒரு தொழிற்சாலை அமைக்கலாம் என்ற முடிவிற்கு அரசு வந்திருக்கிறது. மத்திய அரசும் அனுமதிக்கும் தறுவாயில் இருக்கிறது. இது தவிர வேறு பொருள்கள் என்னென்ன தேவை என்பதை ஆராய்ந்து அந்தப் பொருள்களையும் இங்கு உற்பத்தி செய்வதற்கு இம்மாதம் 7, 8 தேதிகளில் இரசாயனத் தொழிலில் உள்ள நிபுணர்களையெல்லாம் அழைத்து, கெமிக்கல் எக்ஸ்பர்ட்ஸ், ஒரு செமினார் நடக்கயிருக்கிறது. அதற்குப் பின்னால் என்னென்ன பொருள்களை நாம் உற்பத்தி செய்யலாம் என்று முடிவு எடுக்கவேண்டும்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** இந்த சாயம் இறக்குமதி செய்வதில் டைரக்ட் கலர் (Direct Colour) வாட் கலர் (Watt Colour) என்று சொல்லப்படுகிறது. டைரக்ட் கலர் சாயம் சீக்கிரத்தில் தேய்ந்துவிடும். வாட் கலர் சாயம் நீண்டநாட்கள் இருக்கும். இந்த வாட் கலர் சாயம் நமக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது. ஆகவே இந்த வாட் கலர் ( (Watt Colour) சாயத்தை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய தடை இல்லாமல் இருக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இறக்குமதி பற்றிய கொள்கைகளை மத்திய அரசு வகுக்கிறது.

**திரு. கி. ஜயராமன்:** இந்த நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பின்னால் அரசாங்கம் தற்போது எடுத்திருக்கும் முடிவு என்ன ? அந்த முடிவின்படி புதிய சங்கங்களுக்கும் இறக்குமதி செய்யப்பட்ட சாயங்கள் கொடுக்கப்படுமா ? அல்லது தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ள பழைய சங்கங்களுக்கு மட்டும்தான் அது கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எந்தெந்த சங்கங்கள் சட்டப்படி உரிமைபெறுகின்றனவோ அந்தச் சங்கங்களுக்கெல்லாம் கொடுக்கப்படும்.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவரவர்களே, இந்தச் சாய இறக்குமதியைத் தமிழக அரசே சொந்தமாக மேற்கொண்டு எந்தவித வேறுபாடும் இன்றி, ஒவ்வொரு சங்கத்தின் நிலைமைக்கேற்ப பட்டுவாடா செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அத்தனை சங்கங்களையும் அழைத்து மாநாடு கூட்டப்பட்டது. அதன் கருத்துக்களை அறிந்து யார் யாருக்கு எவ்வளவு தேவை என்று சான்றுகளோடு வருகிறார்களோ அவர்களுக்கு (Pro rata basis) -இல் கொடுக்கப்படும் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவரவர்களே, சாய இறக்குமதியை உயர்நீதிமன்றம் எந்தக் காரணத்தினால் தடை செய்தது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சாய இறக்குமதியைத் தடை செய்வதாக உயர்நீதிமன்றம் எங்கேயும் சொல்லவில்லை.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஹைட்ரஸ் தொழிற்சாலை துவக்க இருப்பதாகத் தெரிவித்தார்கள். அது எப்பொழுது துவக்கப்படும்? இதுவரையில் நம்முடைய தமிழகத்திற்குத் தேவையான சாய கெமிகல்களைப் பெற, மத்திய சர்க்காரிடமிருந்தோ, வெளிநாடுகளிலிருந்தோ பெற முயற்சி எடுக்கப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நம்முடைய கைத்தறி இயக்குநர் அவர்கள் இந்தப்பிரச்சினையில் ஈடுபட்டு மத்திய சர்க்காருடன் தொடர்புகொண்டு சாயப்பொருள்கள் கிடைக்க வழிவகை செய்கிறார்கள்.

**திரு. கே. விநாயகம் :** சார், ஹைகோர்ட், சாயம் இறக்குமதி செய்வதற்குத் தடை செய்யவில்லை. ஆனால் விநியோகம் செய்வது தவறு என்று தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். என்ன தவற்றைக் கண்டார்கள்? அதற்காகத்தான் தடை செய்தார்கள் என்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, மத்திய அரசு அனுமதித்த ஆணையின்படி நாம் கிட்டத்தட்ட 73 லட்சம் ரூபாய்க்குச் சாயப்பொருள்களை இறக்குமதி செய்ய அனுமதி பெற்றோம். Export Promotion Incentive Scheme -இல் பயன்பெறுகின்றவர்கள் என்று கணக்கு எடுத்து வழங்கப்பட்டது. அப்படி வழங்கப்படும்பொழுது, சங்கங்கள் வைத்திருக்கிறார்கள். அவைகள் மூலம் வழங்கப்படுகிறது. ஒரு சங்கம், அனுமதிக்கப்பட்ட பொருளை அவர்களுக்குத் தேவையில்லை என்று திருப்பித் தந்து விட்டார்கள். அந்தச் சங்கத்திலுள்ள சில அங்கத்தினர்கள் எங்களுடைய சங்கம் திருப்பித் தந்துவிட்டதால் எங்களுடைய உரிமை பாதிக்கப்படக்கூடாது, எங்களுக்குத் தனிப்பட்ட முறை



யில் வழங்கவேண்டுமென்று கேட்டார்கள். அதை அரசாங்கம் அனுமதித்தது. நம்முடைய உயர்நீதிமன்றம், அப்படி வழங்குகின்றபொழுதுகூட, வழங்கக்கூடாது என்று சொல்லவில்லை, வழங்கப்படும்பொழுது அவர்களுக்கு எந்த அளவுக்கு உபயோகத்திற்குத் தேவை என்று சான்றிதழ் பெற்று வழங்குங்கள் என்று யோசனை சொன்னார்கள். அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

## தமிழ்நாட்டில் தங்கம் கண்டுபிடிப்பு

*163 வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தங்கம் (Gold) கிடைப்பதுபற்றி இந்திய கனி வளத்துறையினர் ஆய்வு செய்கின்றனரா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) தங்கம் கிடைக்கக்கூடிய பகுதி என்று நீண்ட நாளாக அறியப்பட்டு வந்த நீலகிரியிலுள்ள வயநாடுப்பகுதியில், இந்திய கனிவள ஆராய்ச்சித்துறை, நிலத்தை அகழ்ந்து பார்த்துள்ளது. இதன் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. கீழ்க்கண்ட பகுதிகளில் இந்தியக் கனிவள ஆராய்ச்சித்துறை தொடக்க ஆய்வுகள் நடத்தியுள்ளது :—

(1) கோத்தகிரிக்கு 5 கிலோ மீட்டர் தென்மேற்கிலுள்ள ஆடுதுறை:

இந்தப்பகுதியில் கிடைக்கக்கூடிய தங்கத்தின் உலோக மதிப்பு அதிகமாயிருப்பதால், இப்பகுதியில் மேற்கொண்டு ஆய்வுகள் நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது.

(2) தேவலூர்—பந்தலூர்ப்பகுதி:

இங்கு உலோக மதிப்பீடு சராசரி 2 (Dwt Ton) ஆகும் ஆனால் சில நேரங்களில், 4 (Dwt Ton) மதிப்பீடு தருகின்ற சில குவியல்களையும் இங்கு காணமுடிகிறது. இந்தத் தங்கமூலங்களைச் சிக்கனமான பொருளாதார அடிப்படையில் தோண்டியெடுப்பது, சிறு சிறு குவியல்களை எடுப்பதற்கான வாய்ப்பினைப் பெருமளவில் சார்ந்திருக்கின்றது. இந்தியக் கனிவவ ஆராய்ச்சித்துறை இப்பகுதியில் மேற்கொண்டு பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

(3) கோபிச்செட்டிப்பாளையம் வட்த்தைச் சேர்ந்த மோடிக்கம், பென்சிமலை, இம்பிக்கொம்பை என்னும் பகுதிகளும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் சிங்கிலியன் கோம்பை, இசுவாணி முத்துப்பாளையம் என்னும் பகுதிகளும் :

இங்கு கிடைக்கக்கூடிய உலோகத்தின் உலோக மதிப்பீடு மிகவும் குறைவாக இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. உறுதியான மூலப் பொருள் பரப்புகள் எதையும் நேரடியாகக் காண முடியவில்லை.

[1970 மார்ச் 2

திரு. பெ. மலைச்சாமி: தலைவரவர்களே, வேறு தென் மாவட்டங்களில் உள்ள மலைத் தொடர்களில் தங்கம் கிடைக்கிறதா என்பது பற்றி ஆய்வு செய்ய இந்தக் குழு விரும்புகிறதா? அதுபற்றி நமது அரசு மேலும் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதைப்பற்றிக் குறிப்பு இல்லை.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவரவர்களே, இந்தத் தங்கத்தை எடுப்பதற்கு இவ்வளவு செலவு ஏற்படுகின்ற காலத்திலே, நம்முடைய தமிழ்நாட்டில் அந்தக் காலத்தில் சித்தர்கள் செம்பைத் தங்கமாக மாற்றியதாக ஏட்டிலே இருப்பதாக, தஞ்சாவூர் சரஸ்வதி மகாலில் இருப்பதாகக் கேள்விப்பட்டோம். அதைப் பற்றி அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து, இருக்கும் செம்பைத் தங்கமாக மாற்றி இந்த நாட்டை வளப்படுத்த செயல்திட்டம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சித்தர்கள் பின்பற்றிய முறையைப்பற்றி இலக்கியங்களில் ஆராய்ச்சி செய்தார்கள், நிபுணர்களும் ஆராய்ச்சியைத் தொடர்ந்து வருகிறார்கள்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் தங்கம் மட்டுமல்லாமல், பிற கனிவளங்களும் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறதே, வேறு என்னென்ன பொருள்கள், எங்கெங்கு இருக்கின்றன என்பதைக் கண்டு பிடிக்க தமிழக அரசு தனி ஆய்வுக்குழுவை ஏற்படுத்திப் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுதே நம்முடைய தொழில்துறையில் ஒரு பகுதியில் ஆய்வு செய்யும் குழு வேலை செய்து வருகிறது. நாடு முழுவதும் எங்கெங்கு இப்படிப்பட்ட வாய்ப்புக்கூறுகள் தென்படுகின்றனவோ அங்கெல்லாம் சென்று ஆராய்ந்து வருகிறார்கள்.

அவினாசி பாசனத்திட்டம்

*164 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி பாசனத்திட்டம் பற்றிய செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்?

(உ) அத்திட்டத்தின் மூலம் எவ்வளவு ஏக்கர் பாசனவசதி பெறும்?



1970 மார்ச் 2]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (ஆ) & (உ) அவினாசி பாசனத்திட்டம் தற்போதைக்குத் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அவினாசி பாசனத்திட்டம் தற்போதைக்குத் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். இந்த அவினாசித் திட்டத்தோடு, பாண்டியார்-புன்னம்புழா என்ற இரண்டு ஆறுகளையும் சேர்த்து பெரிய அணை கட்டினால் கோவை தாலுக்கா, அவினாசி, பல்லடம் வட்டங்களில் உள்ள செட்டிபாளையம் போன்ற ஊர்கள் பயனடையும். அந்த அளவுக்கு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பாண்டியார்-புன்னம்புழா திட்டம் மின்சாரத்திற்காக ஏற்பட்ட திட்டமாகும். அதுபற்றி மின்சாரத்துறை அமைச்சர்களிடத்தில் கேட்டால் விளக்கமாகப் பதில் சொல்வார்கள்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தற்காலிகமாக அவினாசி திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். என்ன காரணத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது? அவினாசித் திட்டத்தை விரிவுபடுத்தினால் 3 தாலுக்காக்களுக்கு, கோவை, பல்லடம், அவினாசி தாலுக்காக்களிலுள்ள குட்டை குளங்கள் மூலம் தண்ணீரை உபயோகப்படுத்தி விவசாயிகள் பலனடையச் செய்யமுடியும் என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்த ஆலோசனை எந்த மட்டத்தில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கீழ்க்கண்ட காரணங்களுக்காக அவினாசித் திட்டத்தைத் தற்போதைக்கு தள்ளிப் போடவேண்டியிருக்கிறது.

கீழ்ப்பவானி ஆயக்கட்டில் ஆண்டுக்காண்டு நீர்ப்பற்றுக்குறை—தற்போது கூட இருந்து வருகிறது.

இரண்டாவதாக, கேரளத்தோடும், மைசூர் மாநிலத்தோடும், உள்ள நல்லெண்ணப் பிரச்னை காரணமாகவும் இப்பொழுது முடிவு எடுக்க முடியவில்லை.

அடுத்தபடியாக, குந்தா நீர் மின்சக்தி நீர்த்தேக்கங்கள் செயல்படுவது கீழ்பவானித் திட்டம் செயல்படுமுறையில் கணிசமான அளவுக்குத் தடை விளைவிக்கிறது. இதுபற்றி மின்சார வாரியத்திற்கும், தலைமைப் பொறியாளருக்குமிடையே (பாசனம்) மன நிறைவு தரும் வகையில் தீர்வு காணப்பட்டாலன்றி தற்போதுள்ள பாசன வசதிகூட உறுதியாக இருக்காது என்பதாலும் தள்ளிப் போடவேண்டியுள்ளது.

மேலும் பொதுப் பணித்துறைச் செயலாளரும் பின்வரும் கருத்தைத் தெரிவித்துள்ளார் :—

" பில்லூர் அணைக்கட்டுக்குக் கீழே உள்ள நெல்லித்துறை நீர் மின்சாரத் திட்டத்திற்குத் தனியே ஒப்பளிப்பு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நீர் கிடைக்கும்பொழுது, இந்த நீர்த் தேக்கத்திற்குமேல் வரையறுத்த அவினாசித் திட்டக் கால்வாயை அமைப்பது குறித்து பிறிதோர் தேதியில் கருதிப் பார்க்கலாம். தற்போது கிடைக்கும் நீர் அளவைப்பற்றி அறிந்து கொள்ளாமல் பணத்தை முதலீடு செய்வது உகந்ததல்ல".

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : தலைவரவர்களே, இந்த அவினாசித் திட்டம் 10, 15 ஆண்டுகளாகவே சொல்லப்பட்டு வருகிறது, ஓட்டு வாங்க உபயோகப்படுத்தப்பட்டுக் கொண்டு இருக்கிறது. இப்பொழுது தண்ணீர் இல்லை. இப்பொழுது மாத்திரம் அல்ல, முன்னேயும் முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். பாண்டியார், புன்னம்புழாவையும் சேர்த்தால் பயன் கிடைக்குமென்று சொன்னார்கள். நெடு நாட்களாக அங்கத்தினர்களும், விவசாயச் சங்கங்களும் கேட்டு வருகின்றன. அதனால் அவ்வாறு செய்யும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் கேட்ட கேள்விக்கான பதிலை நான் ஏற்கெனவே அளித்தேன். பாண்டியார், புன்னம்புழாத் திட்டம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம். அதுபற்றிய கேள்வியை மின்சாரத்துறை அமைச்சரவர்களிடத்தில் கேட்க வேண்டும்.

## குடிநீர் வழங்கு வாரியம்

*165 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடிநீர் வாரியம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதுபற்றி அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) தமிழ்நாடு நீர் வழங்கு கழிவு நீர், வாரியம் ஒன்றை அரசு அமைத்துள்ளது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, பொதுப்பணித் துறை என்று, பப்ளிக் ஹெல்த் என்ஜினியரிங் என்று இருக்கும்பொழுது இந்தக் குடிநீருக்காக ஒரு வாரியம் அவசியமா? அவ்வாறு ஏற்படுத்துவதனால் ஆண்டு ஒன்றுக்கு என்ன செலவு ஏற்படப் போகிறது என்று அறிவிக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவரவர்களே, குடிநீர் வழங்கல் திட்டங்கள் தற்போது பல்வேறு துறைகளால் கவனிக்கப்பட்டு வருகின்றன. கிராமப்புறங்களுக்கு நீர் வழங்கும்



திட்டம் கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையில் கவனிக்கப்பட்டு வருகிறது. நகராட்சிப் பகுதிகளுக்கும் 10,000-க்கும் மேற்பட்ட மக்கட்தொகையைக் கொண்ட பேரூராட்சிகளுக்கும் குடிநீர் வழங்கு திட்டங்கள் சுகாதார-குடும்ப நலத்திட்டத் துறையினரால் கவனிக்கப்பட்டு வருகிறது. சென்னை மாநகருக்கு நீர் கொண்டு வருவதற்கான வீராணம் திட்டமும் ஊற்றுநீர் திட்டமும் பொதுப் பணித்துறையினரால் செயல்படுத்தப்படுகிறது. மேற்கூறிய துறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது குறித்து அரசு கடந்த சில காலமாக ஆலோசித்து வருகிறது. இவ்வாறு ஒருங்கிணைப்பதால் 1972-ஆம் ஆண்டு இறுதிக்குள் நகராட்சிகள் அனைத்திற்கும் முக்கியமான ஊராட்சிகளுக்கும் ஏற்கெனவே ஒப்பளிப்பு வழங்கப்பட்ட நீர் வழங்கு—கழிவு நீர்த் திட்டங்களையும், அடுத்து வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்களையும் திறம்படச் செயல் படுத்துவது இயலும். இந்த நகராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும் குடிநீர் வழங்குவதே இதன் நோக்கமாகும். இக்காரியத்திற்காக நகராட்சிகள், ஊராட்சிகள் அனைத்திற்கும் நீர் வழங்கு—கழிவுநீர் அகற்று திட்டங்களை நிறைவேற்றும் பணி ஒரு நிறுவனத்தின் அதிகாரத்தின்கீழ் இருக்கவேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது. எனவே, தமிழ்நாடு நீர்வழங்கு—கழிவுநீர் வாரியம் ஒன்றை அரசு அமைத்துள்ளது.

இந்த வாரியத்தில் அரசு, கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைவராகவும், அரசுச் செயலாளர், வருவாய்த்துறை, அரசுச் செயலாளர், பொதுப்பணித்துறை, அரசுச் செயலாளர், நிதித்துறை, அரசுச் செயலாளர், கிராம வளர்ச்சி—உள்ளாட்சித் துறை, அரசுச் செயலாளர், வேளாண்மைத்துறை, அரசுச் செயலாளர், சுகாதார, குடும்ப நலத்துறை ஆகியவர்கள் உறுப்பினர்களாகவும் செயல்படுவார்கள். தலைமைப்பொறியாளர் (பொதுச் சுகாதாரப் பொறியியல்—நகராட்சிப் பணிகள்) உறுப்பினராக செயல்படுவார். அரசுச் செயலாளர், பொதுத்துறை (அலுவல் முறையில்) உறுப்பினர்—செயலாளர். அரசுச் செயலாளர் பதவித் தரத்தில் முழுநேர அதிகாரி ஒருவர் இவ்வாரியத்தின் உறுப்பினர்—செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்ற விவரங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இப்பொழுது இருக்கிற அரசு தமிழகமெங்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுப்பது என்று முடிவு செய்திருக்கிறது. இதற்காக மத்திய அரசிடமிருந்து இப்பொழுது நமக்கு ஏதாவது மானியம் கிடைக்கிறதா ? அப்படிக் கிடைக்கவில்லை என்றால், அதை வற்புறுத்தி மாநில அரசு மத்திய அரசிடமிருந்து பெற முயற்சிக்குமா ? மு.ப. 10-00

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதைப்பற்றி நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேற்கொண்டு விவரங்கள் தற்பொழுது என்னிடம் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, தற்பொழுது அமைக்கப்பட்டுள்ள இந்தக் குடிநீர் வாரியம் மக்களுக்குக் குடிநீரோடு பாம்பு, விலங்கு இவற்றையும் சேர்த்துக் கொடுக்கக்கூடாது என்று உறுதியாக இந்த அரசாங்கம் தெரிவிக்குமா ?

(விடை இல்லை.)

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த வாரியத்தின் உறுப்பினர்களாக மறுபடியும் அதிகாரிகளே முழுமையாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எல்லா போர்டுகளிலும் அவர்களே இருப்பதினால், அவர்களுடைய முழு கவனத்தையும் செலுத்தி, முழு நேரத்தையும் செலவிட்டு, வேலை செய்ய இயலாமல் இருப்பதினால், அதிகாரப் பற்றற்றவர்களையும் இத்தகைய வாரியத்தில் சேர்த்துக் கொள்வதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 1972-ம் ஆண்டுக்குள் நாம் எல்லா இடங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீரை வழங்க வேண்டும் என்ற திட்டத்தை விரிவாக செயல்படுத்துவதற்கு, பல்வேறு துறைகளும் தனித்தனியாக இயங்குவதை ஒன்றாக இணைத்துச் செயல்படவேண்டும் என்ற முறையிலே இந்த வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதிலே அதிகாரப் பற்றற்றவர்களை நியமிக்கவேண்டிய அவசியமில்லை என்று அரசு கருதுகிறது.

### வடஆர்க்காடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி

* 166 வினா—திரு. எஸ். ஜே. ராமசாமி : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி 1967 மார்ச் முதல் 1968 பிப்ரவரி முடிய சென்னை உயர்நீதி மன்றத்திற்கு வழக்குக்காகச் செலவிட்ட தொகை எவ்வளவு?

(இ) இந்த வழக்குகள் சம்பந்தமாக செலவு செய்ய மேற்படி வங்கியின் சிப்பந்திகளின் சம்பளத்திலிருந்து 4 சதவிகிதம் வசூலிக்கப்பட்டது உண்மையா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஒன்றுமில்லை.

(இ) இல்லை.

### பாண்டியாறு—புன்னம்புழா திட்டம்

* 167 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டியாறு—புன்னம்புழா நதியில் கட்டப்படும் அணையின் மூலம் பாசனம் பெறும் பகுதிகள் யாவை ?

(இ) இப்பாசன வசதிகளுக்கென்ச் செலவழிக்கத் திட்டமிடப்பட்டுள்ள தொகை என்ன ?



மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :(அ) இம் மாநிலத்திலிருந்து கேரள மாநிலத்தில் பாயும் பாண்டியாறு, புன்னம்புழா மற்றும் சில சிற்றாறுகளின் நீரை மின்சக்தி உற்பத்தி செய்வதற்காக மட்டும் பயன்படுத்துவதே நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்திலுள்ள பாண்டியாறு—புன்னம்புழா புனல் மின்சக்தித் திட்டத்தின் நோக்கமாகும். கேரள அரசுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி மின்சக்தி உற்பத்திக்காக விடப்படும் இந்த ஆறுகளின் நீரை கேரள மாநிலத்திற்கு மீண்டும் திருப்பிவிட வேண்டுமேயன்றி நம் மாநிலத்தில் பாசன வசதிக்காகப் பயன்படுத்த முடியாது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இந்தப் பாண்டியாறு, புன்னம்புழா அணை கட்டி, அதன் மூலம் மின்சக்தியை எடுத்துக் கொண்டு, அந்தத் தண்ணீரை மேற்கே நாம் விடுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி அந்த அணையைக் கட்டி மின்சக்தி எடுத்துபோக, தண்ணீர் மேற்கே செல்வதினால் கேரள அரசுக்கு எந்தவிதப் பயனும் ஏற்படவில்லை. எனவே, கேரள அரசோடு நம்முடைய அரசு ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி அந்தத் தண்ணீரை, கேரளத்திற்கு மேற்கே போகிற தண்ணீரை, பெரியாறுக்குக் குறுக்கே அணை கட்டி, கிழக்கே திருப்பினால், அதன் மூலம் அவினாசி, பல்லடம் தாலுகாக்கள் பயனடையும். ஆகவே, இந்த ஒப்பந்தத்திற்கான முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வாரா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற ஒப்பந்தம் 14—10—1965-ல் மாண்புமிகு திரு. வெங்கட்டராமன் இருக்கும்பொழுது இரண்டு அரசும் சேர்ந்து செய்துகொண்ட ஒப்பந்தமாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற யோசனைப்படி பேச்சு வார்த்தைகள் நடைபெறுவதற்கான செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. பி. வேலுசாமி : மின்சாரமானது, ஆயில், அணு இது போன்ற பல்வேறு வகையிலே எடுக்கப்படுகிறது. தண்ணீர் இம் மாதிரி செயற்கை முறை மூலம் கிடைக்காது. தண்ணீர்ப் பற்றாக்குறை நமது மாநிலத்தில் அதிகமாக இருக்கிற காரணத்தினால் பாண்டியாறு, புன்னம்புழா அணையிலிருந்து வருகிற தண்ணீரை வைத்து மொய்யாற்றின் குறுக்கே ஒரு அணை கட்டி கோவை ஜில்லாவுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : நான் ஏற்கெனவே சொன்னேன். அப்படி ஒரு திட்டத்திற்கான பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கான செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

## தொழில் சங்கங்களுடன் கடிதத் தொடர்பு

*168 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா:

தொழிலாளர் நல இலாகாவிலிருந்து தொழிற் சங்கங்களுக்கு அனுப்பப்படுகின்ற எல்லா விதமான தாக்கீதுகளும் தமிழில், ஓர் குறிப்பிட்ட காலத்திற்குள் கொண்டுவர அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: தொழிற் சங்கங்களிட மிருந்து தமிழில் அனுப்பப்படும் எல்லாக் கடிதங்களுக்கும் தமிழில் பதில் அனுப்பப்பட்டு வருகின்றன. விசாரணைகள், தகவல்கள் முதலியன பற்றிய அறிவிப்புகள் அனைத்தும் தமிழில் தமிழ் வரைவுகளின் வடிவத்தில் தொழிற் சங்கங்களுக்கு அனுப்பப்படுகின்றன. மேலும் தொழிற்சங்கங்களுக்கும் ஆண்டு விவர அறிக்கையின் படிகள் தமிழில் அளிக்கப்பட்டு வருகின்றன.

திரு. சு. துரைசாமி: தொழிற்சங்கங்களுக்கு கன்சிலியேஷன் ரிபோர்ட்டுகளை லேபர் ஆபீசர்கள் அனுப்புகின்ற நேரத்தில் ஆங்கிலத்தில் அனுப்புகிறார்கள். அதையும் தமிழிலேயே அனுப்புவதற்கான ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டு வந்தால், அதனால் தொழிற்சங்கங்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். ஆகவே, தொழிற்சங்கங்கள் சம்பந்தப்பட்டவரையில் எல்லாவிதமான நடவடிக்கைகளையும், ஒரு காலவரை குறிப்பிட்டு, அதற்குள்ளாகத் தமிழிலேயே கொண்டுவர அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் சொல்லுகிற பேச்சு வார்த்தைகளுடைய விவரங்களைப் பற்றிய அறிக்கை அரசாங்கத்திற்கு அனுப்பப்படுகிறது. அதையும் தமிழிலேயே அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (■) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## (2) அவையுரிமைக் கேள்வி

### நிதிநிலை அறிக்கை இரகசியம் வெளியிடப் பட்டதாகக் கருதப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் பேரில் ஓர் உரிமைப் பிரச்னையைக் கொண்டு வருவதற்கு அறிவிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதைபற்றிச் சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.



* Thiru N. S. V. CHITHAN: Under Rule 184 of the Tamil Nadu Legislative Assembly Rules I give notice of the following privilege motion against the Hon. the Minister for Finance.

"On 25—2—1970 the N.G.G.O.s of the Tamil Nadu Government staged demonstration and held a public meeting at Madras City. The intention of the public meeting was to express their resentment of the attitude of the employer. State Government, to the refusal to grant interim relief to them. The meeting was addressed by the representatives of all the political parties. The representatives of all the parties criticised the Government, for not offering the much needed interim relief, but an Hon. Member of this House belonging to the ruling D.M.K. and who is held to be a close associate of the Hon. the Chief Minister, Mr. Era. Ilamvazhuthi, who spoke last at the meeting cautioned the audience who were present there, not to be in a haste in criticising the Government in this issue, but await till the next day' (that is 26th Budget Day) and expect relief."

The Hon. Member made it very clear and gave the impression to every person present there and readers of the Newspaper based on the report in the Tamil Daily "Dinamani" and the "Hindu" dated 26—2—1970 that the Government was going to announce the interim relief in the Budget and that the Hon. Member being a Member of the Ruling Party knew about it.

Therefore the following questions arise for examination:—

1. Whether the Hon. Member of this House Mr. Era. Elamvazhuthi had been informed already about the budget proposals.

2. The basis on which the Hon. Member was discriminated and given an advance information about this interim relief of the N.G.G.Os. forming part of the Budget proposals.

3. If so, the responsibility of the Hon. Member of the Cabinet in-charge of Finance for this leakage.

4. The action that is called for in this breach of the right of the House to be informed about the proposals before it was leaked out.

5. The Hon. Finance Minister has thus committed a gross breach of privilege.

As this involves the rights of the House, this Motion of Privilege may be referred to the entire House for discussion and this matter may be given precedence over every other business.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் இந்தியாவிலேயே நிர்வாகம் சிறந்த முறையிலே நடைபெற்று வருகிறது என்பதை அகில இந்தியத் தலைவர்கள் பலமுறை குறிப்பிட்டிருக்கிறார்கள். நிர்வாகம் சிறந்த முறையில் நடப்பதற்கு

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பார்லிமெண்டரி ஜனநாயகம் . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 'ப்ரீச் ஆப் பிரிவிலேஜா' இல்லையா என்று நான் முடிவு செய்வதற்கு முன்னால், தாங்களே ஜட்ஜுமெண்டுக்குப் போகிறீர்களே. எப்படி ப்ரீச் ஆப் பிரிவிலேஜ் இருக்கிறது என்று மட்டும் காட்ட வேண்டும். மற்ற முடிவுகளுக்குப் போகவேண்டாம்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். தலைவர் அவர்களே, அவர்கள் கொண்டு வந்திருக்கிற உரிமை பிரச்சினை மீது தங்களுடைய தீர்ப்புக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால், அதற்கு இடையில், அவர்களே நீதிபதியாகி, அமைச்சர்கள் ராஜினாமா செய்ய வேண்டும் என்று சொல்லியிருப்பது, அவர்கள் சொல்லிவரும் சட்டப் பேரவையின் பெருமைக்கு உகந்தது இல்லை என்பதால், அந்த வார்த்தைகளை 'எக்ஸ்பஞ்ஜ்' செய்ய தாங்கள் உத்தரவு கொடுக்கவேண்டும் என்று கோருகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** எப்படி உரிமை மீறியிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டச் சொல்ல வேண்டியிருக்கிறது. பார்லிமெண்டரி ஜனநாயகத்தில் உள்ள எந்த நாட்டிலும் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது "பட்ஜட்டிலே வருவதற்கு முன்பு, அவர்கள் கூறிவிட்டார்கள். அதுவே பட்ஜட்டிலே வந்திருக்கிறது" என்று இதைச் சொல்லி விட்டால் எப்படி இது ப்ரீச் ஆப் பிரிவிலேஜ் என்பது முடிந்து விட்டது. வேறு என்ன? தாங்கள் சொல்ல வேண்டிய கருத்து அவ்வளவுதான்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆளுங்கட்சியை சார்ந்த உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும்போது, "என்.ஜி.ஓ.-க்களுக்கு அரசு ஏதாவது தரும். இடையில் காத்திருங்கள்" என்றார்; "அப்படியே நிதிநிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, முன்கூட்டியே, நிதி அமைச்சர் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு அதைக் கூறி, வெளியிட்டதற்காக மாண்புமிகு நிதியமைச்சர் மீது உரிமைப் பிரச்சினை" என்று சொல்லுகிறார்கள். பத்திரிகைச் செய்தியைப் படித்துப் பார்க்கும்போது, எந்த அளவிற்கு திரு. சித்தனுடைய வாதத்திற்கு ஆதாரம் இருக்கிறது என்பதைப் பார்க்கலாம். அவர்கள் சொன்னதாக வெளிவந்திருக்கும் செய்தியில், "இடைக்கால நிவாரண அறிவிப்பை ஏற்றுக்கொள்ளத் தயாராகுங்கள். முதலமைச்சர் ஸ்ரீ கருணாநிதியோ அல்லது நிதியமைச்சர் ஸ்ரீ மதியழகனோ இதை அறிவிக்கக் கூடும்" என்று பேசியதாக இருக்கிறது. அப்படியே பட்ஜட்டில் நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையடுத்து, அவர்களே, 'பட்ஜட்டிலே என்ன இருக்கும் என்பதைப் பேசக் கூடாது. ஆகையால் நாளை சட்டசபையில் தாக்கல் செய்யப்படும் பட்ஜெட்டில் இடைக்கால நிவாரணம் இருக்குமா இராதா என்பதை நான் சொல்ல முடியாது' என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதே பத்திரிகையில் இதுவும் போட்டிருக்கிறது. அதோடு, கோரிக்கைகள் வருகிற நேரத்தில் ஏதாவது தருகிறார்களா இல்லையா என்பதை பொறுத்திருந்து பார்த்து விடுங்கள் என்று சொல்லுவதை, அதைக் கொடுப்பார்கள் என்று முன்கூட்டியே சொல்லிவிடுவதாக எடுத்துக்கொள்ள முடியாது. கேட்கிறார்கள். கொடுக்கிறார்களா இல்லையா என்று நாளைவரை பொறுத்திருந்து பாருங்கள் என்று சொல்வதில் எந்தவிதமான உரிமைப் பிரச்சினையும் கிடையாது. 1962-லே இந்த அவையிலேயே ஒரு தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள்.



'There is no question of privilege involved in a mere statement that taxes would be levied. This does not amount to Budget disclosure because the secrets contained in the Budget have not been disclosed.'

இப்படி வரி விதிக்கப்படும் என்று சொல்லுவது, வரி விதிக்கப்பட்டிருந்தும் கூட, ஒரு உரிமை மீறிய நிகழ்ச்சியாக, இரகசியம் வெளியிட்டதாக ஆகாது என்று இந்தப் பேரவையிலேயே தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தெளிவாக, என்.ஜி.ஓ.-க்களுக்கு இவ்வளவு ரூபாய் கொடுக்கப் போகிறார்கள் என்று கூறுவதுதான், பட்ஜட்டில் இருக்கும் இரகசியத்தை வெளியிட்டதாக இருக்கும். கொடுக்கிறார்களா, இல்லையா என்று பொறுத்திருந்து பாருங்கள். கொடுப்பதைப் பெற்றுக்கொள்ள தயாராகுங்கள் என்று சொல்வது நிதி நிலை அறிக்கையில் இருக்கும் இரகசியத்தை வெளியிட்டதாக ஆகாது. அப்படிச் சொன்னார் என்று செய்தி கொடுத்திருக்கும் அதே பத்திரிகையில் அடுத்த வரியில், தெளிவாக பட்ஜட்டில் வருவதைச் சொல்லக்கூடாது என்றும் அவர்களே சொல்லியிருப்பதாகவும் வெளிவந்திருக்கிறது.

அதோடு, கோரப்படும் நிவாரணம் பட்ஜட்டில்தான் கொடுக்கப்படவேண்டும் என்பதில்லை. பட்ஜட்டுக்கு முன்பேகூட, நிதி அமைச்சரோ, முதல் அமைச்சரோ, என்.ஜி.ஓ-க்களுக்கு இவ்வளவு கொடுக்கப்படும் என்று சொல்ல முடியும். ஆக, என்ன என்று பொறுத்திருந்து பாருங்கள் என்பதாக சொல்லியிருப்பது நிதிநிலை அறிக்கையில் இருப்பதை முன்னாலேயே வெளியிட்டதாகாது. ஆகவே, இதில் எந்தவிதமான உரிமைப் பிரச்சினையும் இல்லை என்று தீர்ப்பு அளிக்கிறேன்.

### (3) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

### (அ) தமிழ் நாடு மின்சார வாரிய அலுவலர்களும் பொறியாளர்களும் "விதிமுறைப்படி வேலை செய்" கொள்கையைப் பின்பற்றுவதால் ஏற்பட்டுள்ள நிலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, நம்முடைய உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள்,

"The situation in the State arising out of the 'Work to Rule' policy that is being followed by the Engineers and Employees of the Tamil Nadu Electricity Board".

என்ற பொருள் குறித்து விவாதிக்க ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். மின்சார வாரியத் தலைவர் அவர்களோடு பேசி ஒரு முடிவுக்கு வரக்கூடிய சூழ்நிலை உருவாகியிருப்பதாலும்

அதோடு இது அரசினரின் அன்றாட நிர்வாகத்தில் வரக்கூடிய ஒரு நிகழ்ச்சி என்பதாலும், இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, on a point of order . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' என்று சொல்லும்போது, எந்த விதி மீறியிருக்கிறது என்று சொல்லிவிட வேண்டும்.

DR. H. V. HANDE : On a point of order, Sir. Several hon. Members have given notice of adjournment motions and they have got letters privately from the Hon. Speaker to the effect that they could not be raised in the Assembly. But now in the case of the hon. Member, Thiru Ramamurthy, the Hon. Speaker has allowed him to read it out. I am not saying that there has been discrimination in regard to this matter. I am only trying to draw the attention of the Hon. Speaker to the way in which the rules have not been followed in all cases. I want to know the standard or basis on which adjournment motions are allowed and I request the Hon. Speaker to explain it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதெதற்கு எப்படி முடிவு செய்யவேண்டும், என்ன தீர்ப்பு வழங்கவேண்டும் என்பதெல்லாம் பேரவைத் தலைவருக்கு உள்ள உரிமையாகும். அதை எப்படிக் கொடுப்பீர்கள், கொடுத்த தீர்ப்பு முறைதானா என்ற வகையில் இங்கு உறுப்பினர்கள் கேட்கக் கூடாது. உறுப்பினர்களுக்கு ஏதாவது குறையிருந்தால் அதனைப் பேரவைத் தலைவர் அவர்களு டைய அறையிலே வந்து கொடுக்க வேண்டுமென்பதுதான் மரபு.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நானும் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். தாங்கள் ஒரு தீர்ப்பு கொடுத்து விட்டீர்கள். இன்ஜினியர்கள் வெளிநடப்பு நடத்தியிருக்கிறார்கள் என்ற விவரத்தைத்தான் சொல்ல வந்தோம் . . . . (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயிண்ட் ஆப் ஆர்டர் இருந் தால் சொல்லுங்கள். குறிப்பிட்ட நிகழ்ச்சி எந்த நிலையில் நடந் தது என்பதைப்பற்றியெல்லாம் சொல்ல வேண்டாம். நீங்கள் எந்த வகையில் இந்த அவையின் விதிமுறைகளை மீறியிருக்கிறது என்பதை மட்டும்தான் சொல்ல வேண்டும்.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே. 1972-க்குள் மின்சாரம் எல்லாக் கிராமங்களுக்கும் பரவ வேண்டும் . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்படிப்பட்டவைகளையெல் லாம்பற்றி பேசுவதற்கு நிதிநிலை அறிக்கையின்மீது பேசும் பொழுது வாய்ப்பு இருக்கிறது. அவையெல்லாம் பாயிண்ட் ஆப் ஆர்டரின் கீழ் வராது.



## (ஆ) மேலவை உறுப்பினர் ஒருவர்மீது போலீஸ் தடியடி நடத்தியதாகக் கூறப்படுவது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களும், திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களும் கடலூரில் மேலவை உறுப்பினர் ஒருவரை போலீஸ் லத்தி சார்ஜ் செய்தார்கள் என்றும் அதுபற்றி விவாதிக்க இப்பேரவையின் பிற அலுவல்களை ஒற்றி வைக்க வேண்டுமென்றும் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றி ஏற்கெனவே மேலவையில் எழுபப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். போலீஸ் கூட்டத்தைக் கலைக்க லத்தி சார்ஜ் செய்வது போன்றவை அரசின் அன்றாட நிர்வாக நிகழ்ச்சிக்குட்பட்ட காரியமாகும். ஆகவே, இதுபற்றி விவாதிக்க இப்பேரவையின் பிற அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டிய அவசியமில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மேலவையில் நடந்ததை வைத்து, இங்கே இப்பேரவையில் எடுத்துக்கொள்ளக்கூடாது என்பது எந்த விதி முறையில் வருகிறது? மேலவையில் நடந்தவைகளை இந்த மன்றத்தில் விவாதிக்கக் கூடாது என்பதற்கு எந்த விதிமுறை இருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மேலவையில் நடந்தது என்ற ஒரு காரணத்தை மட்டும் சொல்லி நான் அதற்கு அனுமதி மறுக்க வில்லை. கூட்டத்தைக் கலைப்பது போன்ற விஷயங்கள் எல்லாம் அரசின் அன்றாட நிர்வாக நிகழ்ச்சிக்குட்பட்ட காரியம். அரசின் அன்றாட நிர்வாக நிகழ்ச்சிக்குட்பட்ட காரியம் என்ற காரணத்தை காட்டித்தான் அனுமதியை நான் மறுத்திருக்கிறேன். மேலவை யில் நடந்தது என்ற ஒரு காரணத்தை மட்டும் சொல்லியிருந்தால், எந்த விதியில் இடம் இருக்கிறது என்று நீங்கள் கேட்கலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, இது அன்றாடம் நடைபெறுகின்ற நிகழ்ச்சியா? சட்டமன்ற உறுப்பினர் அடி படுவது எல்லாம் அன்றாட நிகழ்ச்சிக்குட்பட்ட காரியமா? நாங்கள் எல்லாம் அடிபடவா இருக்கிறோம்? இது அன்றாட நிகழ்ச்சி என்று சொல்வது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டமன்ற உறுப்பினர் என்று சொல்லும்போது, சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய நேரத்திலே அந்த உறுப்பினருடைய உரிமைகளைக் காப்பது எல்லாம் பேரவைத் தலைவருக்கு உள்ள உரிமையாக இருக்கிறது. ஆனால், சட்டமன்ற உறுப்பினர் வெளியே சென்று, மக்கள் சமுதாயத்தோடு கலந்திருக் கிற நேரத்திலே அவரும் மக்களில் ஒருவர் என்றுதான் கொள்ள வேண்டும். மக்கள் கூட்டத்தில் அவருக்கென்று ஒரு தனி நிலை மையை தர முடியாது. அப்படி தனி அந்தஸ்து தரவேண்டு மென்று சட்டம் இருக்கிறதா என்றால் இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று கேட்கும்போது, இந்நிகழ்ச்சி குறித்து எந்த விதத்தில் சட்டமன்ற விதிமுறைகளை மீறியிருக்கிறது? எந்த முறையில் சட்டமன்ற மரபுகள் கைவிடப்பட்டிருக்கின்றன என்பதைத்தான் சொல்ல வேண்டும். ஆகவே உறுப்பினர்கள் சட்டமன்ற விதிமுறைகளை நன்கு கடைப் பிடிக்க வேண்டும்.

*திரு. க. இராமமூர்த்தி:* தலைவர் அவர்களே, விதி 42-ன் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் வருகிறது. பேரவைத் தலைவர் அவர்கள் சொல்கின்ற நேரத்தில், சட்டமன்ற உறுப்பினர் பொதுமக்கள் மத்தியில் இருக்கும்போது பொதுமக்களுக்கு என்ன நடக்கிறதோ அதுவேதான் அவர்களுக்கும் நடக்கும் என்று சொல்லி ஒத்தி வைப்புத் தீர்மானத்தை மறுத்திருக்கிறார்கள். அவர் செய்த ஒரே தவறு சட்டமன்ற உறுப்பினராக இருப்பதுதான். அவர் பொது மக்களிலிருந்து பிரிக்கப்பட்டு அடிக்கப்பட்டிருக்கிறார்.

THIRU J. JAMES: Rule 50, sub-rule (8) provides that a matter to be discussed must involve more than administration of law. My adjournment motion is . . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* எதெதற்கு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரலாம் என்பதற்கு விதிமுறைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. எந்தெந்த நிகழ்ச்சியை இங்கே மேற்கொள்ள லாம் என்று சொல்கிற நேரத்தில் . . .

THIRU J. JAMES: Since it involves more than administration of law, I have given notice of the adjournment motion. You are bound to give us an opportunity . . . . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* எந்த நிகழ்ச்சியை இங்கே மேற்கொள்ளலாம் என்று சொல்கிற நேரத்தில்,

the matter to be discussed must involve more than administration of law

என்று இருக்கிறது. இந்த விதிமுறை எங்கேயும் மாறவில்லை. எந்த நிகழ்ச்சியை ஒப்பிட்டுப் பார்ப்பது என்பதெல்லாம் பேரவை தலைவருக்குத்தான் உரிமை உண்டு.

### (இ) வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்வு

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள், வாழ்க்கைச் செலவுப் புள்ளி 30 ஆக உயர்ந்திருக்கிற தென்றும், இது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை யென்றும் கூறி, இப்பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். வாழ்க்கைச் செலவுப் புள்ளி ஒரே நேரத்தில் 30 ஆக உயர்ந்துவிடுவதில்லை. சிறுகச் சிறுகத்தான் உயரும். இதைப்பற்றியெல்லாம் நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இதற்கும் அனுமதி மறுக்கிறேன்.



அடுத்து, விதி 41-ன் கீழ் டாக்டர் ஹாண்டே அவர்கள் உணவு-வணிக வரி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு உடனடிப் பொது முக்கியம் வாய்ந்த ஒரு காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

### (4) கவன ஈர்ப்பு

### தஞ்சை மாவட்ட விவசாயிகள் லெவி நெல்லை அரசுக் கிடங்குக்கு கொண்டு செல்ல போதிய போக்குவரத்து இன்மை

DR. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Food and Commercial Taxes, to a matter of urgent public importance, namely, the hardship experienced by the agriculturists in Thanjavur in transporting their 50 per cent levy paddy to the Government Godowns, due to lack of proper transport and the need to make necessary arrangements to collect the levy paddy from the field itself.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* தலைவர் அவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் திரு. டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் தம் கவன ஈர்ப்பு அறிக்கையில், தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் 50 சதவீத லெவி நெல்லை அரசு கிடங்குக்கு கொண்டு செல்ல போதிய போக்குவரத்து இல்லாமையால், விவசாயிகளுக்கு இடர்பாடான நிலை ஏற்பட்டுள்ளதென்றும், அதனால் மேற்படி நெல்லை தலத்திலேயே, வாங்கிக் கொள்ளவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென குறிப்பிட்டுள்ளார். உணவுப் பொருள் கட்டுப்பாடு நீக்கத்திற்கு பிறகு, கொண்டுவரப்பட்டுள்ள புது கொள்முதல் முறைப்படி தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் 50 சத லெவி அரசிற்கு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆதலால், அவர்களுக்கு தலத்திலிருந்து லெவி நெல்லை அரசு கிடங்குகளுக்கு எடுத்துச் செல்ல போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யவேண்டிய அவசியமில்லை.

ஐம்பது சத லெவி முறை தஞ்சாவூரிலிருந்து மற்ற மாவட்டங் களுக்கு மொத்த வியாபாரிகளால் எடுத்துச் செல்லப்படும் நெல் லுக்குத்தான் விதிக்கப்படுகிறது, இந்த 50 சதவீத லெவி, தஞ்சை யிலிருந்து எடுத்துச் செல்லும் மொத்த வியாபாரிகளின்மேல் விதிக் கப்படும். ஆகவே, இந்த மொத்த வியாபாரிகளுக்கு 50 சதவீத லெவி கொடுப்பதில் எந்தவித சிரமமும் இராது. இருந்தபோதிலும் மொத்த வியாபாரிகள், லெவி நெல்லை அதிக தூரம் எடுத்துச் செல்ல வேண்டிவரும் சூழ்நிலையை தடுக்க இந்திய உணவு கார்ப்பரேஷன் 130 இடங்களில் சேகரிக்கும் இடங்களை ( (Collection Depots) ஏற்படுத்தி இருக்கிறது. மேலும், மொத்த வியாபாரிகள் வட்டார வினியோக அதிகாரிகளிடமோ சர்க்கார் கிடங்கிலோ அல்லது நெல் அரைக்கும் நிலையங்களிலோ, லெவி நெல்லைக் கொடுக்கலாம். மேற் கொண்ட ஏற்பாட்டினால், மொத்த வியாபாரிகள் 10 மைலுக்கு மேல், தங்கள் செலவில் லெவி நெல்லை எடுத்துச்செல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது. அப்படி, 10 மைலுக்கு மேல் எடுத்துச் செல்லும் மொத்த வியாபாரிகளுக்கு அரசாங்கம் வண்டிச் சத்தத்தை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கொள்முதல் விலைக்கே அரசுக்கு விற்க முன்வரும் விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்க T.C.M.F. நிறுவனத்தின் 500 கிராமக் கிளை அமைப்புகள் மூலமாகவும் F.C.I. நிறுவனத்தின் 35 சேகரிப்பு நிலையங்கள், 135 அங்கீகாரம் பெற்ற உரிமைதார் நிலையங்கள், ஆகியவற்றின் மூலமாகவும், தாலுகா சப்ளை அதிகாரிகள் மூலமாகவும், சிவில் சப்ளை இலாகாவின் அங்கீகாரம் பெற்ற ஆலைக்காரர்கள் மூலமாகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆகவே, நெல்லைக் குறைவான விலைக்கு விற்கவேண்டிய நிர்ப்பந்தம் வருமென்றோ, வாங்குவோரின்றி நெல் தேங்கி விடுமென்றோ, அஞ்சத் தேவையில்லை.

DR. H. V. HANDE : At present procurement is taking place in district of Thanjavur. Supposing a person has got five acres and he does not come under 'wholesale big land lord.' Suppose he wants to transport his paddy. Will the Government make some arrangement? I think from the answer given by the Hon. Minister there has been change in the programme, and that the system has improved after I put the question.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்ட விவசாயிகள் மட்டும்தான் கொள்முதலுக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்று நினைப்பது சரியல்ல. தஞ்சை மாவட்ட விவசாயிகளும் கொள்முதலுக்குக் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. தாங்களே எடுத்துக்கொண்டு செல்லலாம். வியாபாரிகள் வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்கிறபோதுதான் 50 சதவீதம் கொடுக்க வேண்டுமென்ற ஏற்பாடு செய்திருக்கிறோம். விவசாயிகள் தங்களிடம் உள்ள நெல்லை அரசாங்கத்திற்கு கொடுக்க வேண்டுமென்று நினைத்தாலும் அதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஏற்பாட்டிலும் எவ்வித இடைஞ்சலும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்ததாக, திரு. மா. இராசாங்கம் அவர்கள் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு விதி 41-ன் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர் தம் இடத்தில் இல்லை.

அடுத்து நிதிநிலை அறிக்கை விவாதத்தில் திரு. காசிராமன் அவர்கள் தம் பேச்சைத் தொடர்வார்கள்.

### (5) 1970–71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது பொதுவிவாதம்—தொடர்ச்சி

■ **திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, சென்ற சனிக்கிழமை அன்று பேசும்போது தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், ஒருபுறம் உணவு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது, வரிச்சுமையும் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று கூறினேன். அவர்களிடம் இருந்து அதிகமான வரிகள் வாங்கும்போது பதிலுக்கு வேளாண்மைத்துறையில் அவர்களுக்கு அதிகமான சௌகர்யங்களாவது செய்து கொடுக்கப்



படுகிறதா என்று பார்த்தால் இல்லை. எந்த வருஷத்தை அவர்கள் ஆதாரமாக எடுத்துக்கொண்டு கூறினார்களோ அதே 1966-67-ஆம் வருட நிதிநிலை அறிக்கையை இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையோடு எடுத்துக்கொண்டு பார்க்கலாம். 1966-67-ஆம் ஆண்டில் அக்ரிகல்சுரல் ப்ரொடக்ஷனுக்காக 369 லட்சம் ரூபாய் ஒதுக்கினார்கள் என்றால் இந்த ஆண்டு 303 லட்சம்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். 66 லட்சம் ரூபாய் குறைவு. சிறிய நீர்பாசனத் திட்டங்களுக்காக 1966-67-இல் 762 லட்சம் ஒதுக்கப்பட்டது என்றால் இவ்வாண்டு 499 லட்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதிலும் குறைவு.

இம்மாதிரிப் பல இனங்களில் விவசாயிகளுக்கு சௌகரியம் அளிக்கிற இனங்களில் எல்லாம் நிதிக் குறைவு செய்யப்பட்டிருக்கிறது. இது எதைக் காட்டுகிறது என்றால் பசுமைப் புரட்சி என்று பேசுவது எல்லாம் வெறும் பேச்சளவில் இருக்கிறதே தவிர செயலில் அவர்களுக்கு எந்தவிதமான அனுகூலமும் செய்யப்படவில்லை என்பதைத்தான் காட்டுகிறது.

அடுத்து, அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் என்று இருக்கிறது. பலவிதமான விவசாயப் பொருள்களுக்கு கொட்டேஷன் கொடுத்து அதன்படி அவர்கள் மூலம் விவசாயிகளுக்கு பல சாதனங்கள் சப்ளை செய்யப்படுகின்றன. போன ஆண்டு கொடுக்கப்பட்ட கொட்டேஷன் இதுவரை ஏற்றுக்கொள்ளப்படவும் இல்லை. நிராகரிக்கப்படவும் இல்லை. அந்தக் காரணத்தினால் ஒரு நிலையற்ற தன்மை இப்போது நிலவுகிறது. மார்ச் 31-ஆம் தேதி நெருங்கிக் கொண்டிருக்கிறது. கொட்டேஷன் காலாவதி ஆகிவிடும். இனி திரும்ப விலையேற்றத்தினால் புதுக் கொட்டேஷன்தான் கொடுப்பார்கள், இது விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கும். இந்த அளவிற்குத்தான் பசுமைப் புரட்சி என்பது இருக்கிறது. விவசாயிகளுக்கு பசுமைப் புரட்சி என்ற பெயரால் பலவிதமான தொந்தரவுகளைத்தான் அளித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பல தொழில்களுக்கு நேரிடையாகவும், மறைமுகமாகவும் பல வரிகள் போடப்பட்டிருக்கின்றன. ஆயினும் சினிமா படத் தயாரிப்பாளர்கள் வெளிக்காட்சி ஷூட்டிங்கிற்கு ஒரு நாளைக்கு 1,500 என்று பணம் கட்டிக்கொண்டிருந்ததை 300 ரூபாயாகக் குறைத்துச் சலுகை காட்டியிருக்கிறார்கள். அந்த ஒரு தொழிலுக்கு மாத்திரம் சலுகை காண்பிக்கவேண்டுமென்ற எண்ணம் இருக்கும்போது, மற்ற தொழில்களுக்கு சலுகை காண்பிக்காவிட்டாலும் தொந்தரவு கொடுக்காமலாவது இருந்திருக்கலாம். அதற்குமாறாக பலவிதமான தொந்தரவுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போது போட்டிருக்கிற ஷோ டாக்சை தாங்க முடியாது என்று தூதுக் குழுக்கள் வந்து கொண்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. காசிராமன் : காட்சி வரி சினிமாக் கொட்டகைக் காரர்கள்மீது போடப்பட்டிருப்பது. நான் சலுகை காட்டியிருப்பதாகச் சொன்னது சினிமா பட அதிபர்களைப்பற்றித்தான்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஷோ டாக்சை கழித்துக் கொண்டுதான் பட அதிபர்களுக்கு அவர்கள் பணம் அனுப்புகிறார்கள்.

திரு நா. காசிராமன்: இந்த விவாதத்தில் நான் ஈடுபட்டால் எனக்கு ஒதுக்கியுள்ள காலம் முடிந்துவிடும்.

அடுத்து, 5 லட்சத்திற்கு மேல் வாணிபம் செய்கிற வியாபாரிகள் மீது ஒரு வரி விதிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நான்கைந்து வருஷங்களுக்கு முன் கேரள ராஜ்யத்தில் இது போன்ற ஒரு வரி விதிக்கப்பட்டது. அவ்வாறு விதிப்பது சரியல்ல என்று கோர்ட்டார் தீர்ப்புக் கொடுத்திருப்பதாக ஞாபகம். அதைப்பற்றியும் அரசு ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அதுபோல சர்சார்ஜ் விதிப்பது சரி அல்ல என்கிற வாதம் கேரள உயர்நீதிமன்றத்திற்குச் சென்றது, அப்படி விதிப்பது செல்லும் என்று அங்கே அளிக்கப்பட்ட தீர்ப்பு இருக்கிறது.

திரு. நா. காசிராமன் : நான் ஞாபகத்தில்தான் சொன்னேன். அதுபற்றிய விவரங்களையும் சர்க்கார் பரிசீலித்துப்பார்க்க வேண்டும். இந்த வரியானது வருமானத்தின் மீது போடப்படுகிற வரியாகும். வருமானத்தின்மீது வரி போட மத்திய சர்க்காருக்குத் தான் உரிமை உண்டு, நமக்கு அந்த உரிமை இல்லை என்பதையும் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

மோட்டார் வாகனங்கள், அது சம்பந்தப்பட்ட பொருள்கள் எல்லாவற்றின் மீதும் சர்க்காரும் சரி, மத்திய சர்க்காரும் சரி அதிகமாக வரியைப் போட்டுவிட்டார்கள். இதன்காரணமாக கார் வைத்திருப்போர்களுக்கு செலவு கடுமையாக உயரக் கூடும். தனியார் துறையில் மிகவும் நல்லமுறையில் இயங்கி வந்த டிரான்ஸ்போர்டுகள் எல்லாம் கூட சர்க்கார் டிரான்ஸ்ப்போர்ட் வாங்கியுள்ள பெயரையே வாங்கும் நிலை வந்துவிடும். அந்தத் தொழில் வெகுவாக பாதிக்கப்படும்.

கடைசியாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தஞ்சை ஜில்லா விவசாயத்திலேயே ஈடுபட்டிருக்கக் கூடியது. அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டும். கோயம்புத்தூரில் அக்ரிகல்சுரல் யுனிவர்சிடி ஏற்படுத்தப் போவதாக நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை தஞ்சை ஜில்லாவில் ஏற்படுத்தவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களுடைய தேர்தல் பிரச்சாரத்தில் முக்கியமாக என்ன சொன்னார்களோ சமுக, பொருளாதார, நிர்வாகச் சிறப்பு வாய்ந்த அமைப்புக்கள் எல்லாம் பொதுமக்களை பெரிதும் பாதிக்கக்



கூடியன. மக்களால் தாங்க முடியாத அளவுக்கு உயர்த்தப்பட்டியிருக்கிறது. 1972 பொதுத் தேர்தல் வரை வேறு வரியே போட வேண்டிய அவசியம் இல்லை. அவ்வளவு அதிகமாகப் போடப்பட்டிருக்கின்றன என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, generally speaking about the budget that has been presented yesterday, it is a very good treatise on public finance, on State vs. Centre. I have thoroughly gone through the first ten pages of the speech. What does it mean? Here on the floor of the House you are indicting the Central Government. You want impeachment of Central Government. Of course this may be the proper forum to do so. But it does not end there. What are your electoral promises? Just before elections, you said that you will get more powers by threatening the Central Government. But what are you now doing? You are appealing. Why are you now appealing to them? You know that we have been elected to this House under the existing Constitution and the provisions of the Constitution must be very clear to you with what powers State and Centre are clothed. So if you want things to be done in the proper way, you have got to ask your 25 MPs. in Delhi to agitate properly on the floor of Parliament instead of voicing forth your vehement vigour against them here and then safe-fiddle them and toe their line in Delhi when it suits you. My quarrel with the present Government is this. You are playing Dr. Jekkle and Mr. Hyde. Dr. Jekkle remains so during day and he becomes Dr. Hyde during nights. I believe our Finance Minister must have read that novel by Mr. R. L. Stevenson. It is 'split personality' speaking with one voice here and speaking with another voice there. Where exactly you have got to agitate, you forget to agitate. Where exactly you should not agitate, you simply give an image to the people that you are fighting with the Centre. In the budget speech (I have gone through para by para) in one line you blame the Central Government and in the second line you appeal. What exactly does it mean?

What exactly did the Finance Commission do? Did they do anything wrong. We must know it. What was the arithmetical formula which they applied? Why can't you take the Opposition into confidence and tell us the whole thing? What was the simple arithmetical formula which they applied and which made only States like Maharashtra, Orissa and Northern States to get more? Why did Tamil Nadu not get anything? I have told this on a former occasion also. You must take us into confidence so that we can also strengthen your hands. My appeal to the State Government is that instead of telling us that the Central Government had not treated Tamil Nadu properly (I know you never mean it) that is not the correct approach—you must adopt another better approach. Why can't you tell them to modify the provisions in the Constitution. Shedding 'crocodile tears" I do not

want to use strong words but that is the only term I can think of —will not solve the problem. Why do you cry here? You have got 25 MPs. and you can boldly tell them that unless they acceded to your requests, you will not support them. You say that Salem Plant had been hanging in the balance for over a decade. That means that we have been agitating for the installation of this Plant. Why don't you tell the Madam Prime Minister 'Unless you give me this plant, I am not going to support you'. With 25 votes, you have your influence. But without doing so, you give a different impression to the people here but you are all good boys—I do not want to use that expression—you are all good Members and tell her ' we will support you and continue to support you '. But on coming to Trichy, you talk of ' autonomy for States and loose Federation at the Centre '. Why don't you tell it there in Delhi? I know then, the Prime Minister will call Thiru Karunanidhi and tell him ' Look here, this is our Constitution and how can we have loose Federation at the Centre ?' So you do not say anything in Delhi but only here in Tamil Nadu at Trichy. That is why I say you are playing Dr. Jekkle and Mr. Hyde. You give impression to the local people that you are very good but that Centre is not giving you help. But in Delhi, when you go there, you give your sympathy to her, the Central Government. That is my quarrel with you.

The 10 pages of the Budget speech is a good treatise on public finance. I read it with so much interest. The person who prepared it, may be it is the Hon. Finance Minister who prepared it, is intelligent. You are blaming somebody for your wrongs. For what you cannot achieve, you are blaming others. You are trying to name the dog and trying to hang it.

Coming to the proposals, I mean taxation proposals, I may say that I have gone through them paragraph by paragraph. You have been saying that you had come to power only since the last three years. You have been comparing that this much amount had been allotted for this head by the previous regime and that you have allotted something more. You are trying to evoke the sympathy of the people. (Thiru Rama Arangannal: You know peoples' verdict is with us) I also know the verdict. Peoples' verdict may also change. You rely on people. I can also rely.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படிப் பார்த்துப் பேசுங்கள்.

திரு. கே. வினாயகம்: அப்படித்தான் பேசவேண்டும். ஆனால் அவர்கள் நடுவிலே குறுக்கிட்டார்கள்.

I am not going into details. Details are there in the hands of Hon. Minister and Finance Secretary. I accept what they say as God's Truth. It may be right or wrong.

They only say that before 1967, this much has been spent on agriculture, etc., and that this year they have allotted something more. What else are you expected to do? You are expected to



spend more. We have laid the foundations and basement and it is for you to build. What is the use of your saying that you are spending more? You are expected to do it. If you don't do it, you do not deserve to sit here in power. You can't run away from responsibility. You can't be blaming others for your difficulties. That impression should not be created among the people. Let me ask you, what exactly is your policy. As a political party, what did the D.M.K. promise to the people, when the Congress party was in power? You made tall promises. Did you translate them into action ? That is the vital question. Here and there in the budget you say you have provided Rs. 4 crores for Veeranam Is it any wonder? (The Hon. Thiru K. A. Mathialagan: Is ' Veeranam ' a small thing ) Then there is the Cooum. When I was in the Opposition and in the ruling party, I was agitating for the clearance of Cooum.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: ஏன் நடத்தவில்லை?

திரு. கே. வினாயகம்: ஏன் நடத்தவில்லை என்பதற்குத்தான் வருகிறேன்.

■ மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கூவம் திட்டத்தைப்பற்றி நாங்கள் அரசுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபொழுது இருந்த நிலைமை என்ன என்பதை ஆராய்ந்து பார்த்தபொழுது எங்களுக்குக் கிடைத்த தகவலை இப்பொழுது இங்கே சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். கூவம் சீர்செய்யப்பட வேண்டுமென்றும் அந்த வேலையை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் மத்திய அரசுக்கு மாநில அரசு அப்பொழுது கடிதம் எழுதியிருக்கிறது. மத்திய சர்க்காரிடத்திலே இருந்து, அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வது என்றால் 1 கோடிக்கு மேல் செலவாகும், இப்பொழுது பண உதவி செய்யமுடியாது என்று தகவல் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்கள் அந்தத் திட்டத்தைக் கூவத்திலே போட்டுவிட்டார்கள். இப்பொழுது நாம் வந்த பிறகு அவர்கள் நடத்த முடியாததை, செலவு நமக்கு ஆனாலும் பரவாயில்லை என்று மிகத் துணிவோடு இந்தத் திட்டத்தை அமல் நடத்த முன்வந்திருக்கிறோம்.

THIRU K. VINAYAKAM: So, these schemes which they are thinking of putting into action are not new schemes. If at all there is any new scheme, it is the Raffle Scheme and that is a new achievement to your credit. Now let us forget about it.

Sir, the Party in power promised reduction in level of taxation. After you came to power, what is the position? Did you reduce it? To quote some common saying, you said :
60 சதவிகிதம் குறைப்பது Have you dont it anywhere? But you told the people that you are going to reduce taxes when you come to power. That is how you misguided them. Now, what were the finances three years ago? It was Rs. 200 crores but now it is Rs. 300 crores. Where did you get it? It is all due to the

taxation measures but you will say that it is due to the efficient working of the departments and the stiff collection work. I do not mind giving that credit to you to a little extent. When the finances have increased, you have come forward to implement the Cooum Scheme. It is a good scheme but do not run away with the impression that you are the only people that are capable of doing these things. But do you tell me and the people that you have not taxed. I remember the speeches of your Friends last year and the year before. *வரி இல்லாத பட்ஜட்டை எங்கள் அண்ணா சமர்ப்பித்தார்கள் என்றீர்கள். இப்போது என்ன சொல்லப் போகிறீர்கள் தம்பி* . .' Taxless budget has been presented. ' Therefore, only when you come to power and take up responsibility, you know the difficulties. Now you are running the Government. . . . .

*சொன்னதெல்லாம் மாறிவிட்டது.*

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எனது அண்ணன் விநாயகம் (நான் சண்முகம் என்ற முறையில்) வரி இல்லாத பட்ஜட்டைச் சமர்ப்பித்தீர்களா என்று கேட்டார்கள். வரி போட வேண்டியவர்கள் மீது போட்டிருப்பது உண்மைதான். இதை அண்ணன் விநாயகத்திற்குத் தம்பி சொல்லிக் கொள்ளுகிறேன்.*

THIRU K. VINAYAKAM : He is now well trapped. When you present a Budget you should not levy taxes. That is what we read as students of public finance in our college days. You should not propose taxes in the Budget speech but during the course of the year you convene a meeting of the Assembly and get the Bills proposing taxes (1), (2), (3), (4), etc., passed and then you amass about Rs. 10 crores. That is how our Anna did. He was a very clever man. I know that he was a super-human being. He gave an impression to the people that he was not levying any tax and everybody was saying, ' No tax, no tax '. After two months he convened a meeting to pass Bills levying taxes on motor spirit, motor vehicles, etc. That was the tactics adopted by him. So, do not tell us that you are running the Government without levying any tax. Let the people understand that what you have stated at the time of elections is utter falsehood. By deceiving them you came to power. Never mind about that issue. You have stated :

*' வசதிகளைப் பெருக்குவோம் '*

What exactly is the ' vasathi ' that you have given to the people? What about food and let not my younger brothers get disturbed. Be honest to our people. We are all middleclass people living in Madras, and do you know at what price we are purchasing vegetables, rice and other food commodities? Their prices have risen. You have stated that you want to usher in an egalitarian society. Mark the word ' egalitarian '. In an egalitarian society, there would be plenty for the mere asking for the largest number of people. Is there such a situation now ? Please go and meet your constituents and find out whether the prices have gone up





or not. You have carried on an agitation against my former Government on this issue and you have courted imprisonment. About 1,500 persons had undergone imprisonment under the leadership of our late Anna just to foment trouble against our Government and create public opinion against us at that time and when we say something against you, you are flabbergasted. I am sorry to say that that has fallen upon you like a boomerang. I realise that it is very difficult to run the Government with the existing finances. If you make it clear—

*' நாங்கள் சொன்னோம். வாஸ்தவந்தான். ஆனால், எங்களால் செய்ய முடியவில்லை ' என்று ஒரு வார்த்தை சொல்லிவிடுங்கள். பிறகு பேசுகிறோமா பாருங்கள்.*

You have promised one-rupee-a-measure rice for all the people (Interruption). All right, tomorrow I will get that pamphlet containing your election promises and show it to you. You have promised one-rupee-a-measure rice for all the people but you have restricted it to two towns and now you have thrown even that to the winds. Do you know how the poor people are suffering and you must have an idea about all these things. That is the position. So you should not run away with the impression that you have done so much good to the country. But we are here to pay you any tribute whenever you do any good thing and we are very honest about it. Do not think for one moment that we are harsh towards you and we are hard-hearted people.

Sir, take any item. Even in respect of Education, the Hon. Minister for Finance in his Budget speech has stated that he has increased the allotment for it by so many crores of rupees. What is expected of you? After all what is the achievement within these three years ? Allotting more money to different items it not a wonderful thing. Any same Government is expected to do such things. So, do not run away with the impression that you have done some wonderful things.

Sir, coming to taxation proposals, when the Bills relating to them come up for discussion. I will speak on them. Generally speaking about taxation, you have not left even the poor people in the matter of taxation. You have been saying that there is no tax on coffee, tea, milk, etc. You know evidently that your bosses at Delhi are going to levy it.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I want the hon. Member to withdraw the word ' bosses '.

THIRU K. VINAYAKAM : Sir with due deference to the Hon. Minister for Finance, I withdraw it.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : They are your bosses and not our bosses.

THIRU K. VINAYAKAM : Let us not waste our time over it. The word ' boss ' is an English expression which does not mean any offence. The word ' boss ' means *' மேலே இருப்பவர்கள் '*.

கப்பட்டுள்ள இந்தத் தொகையைப்பற்றி, இந்த இன்டரிம் ரிலீப் பற்றிய இரகசியம் வெளியிடப்பட்டு விட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்கள். திரு. இளம்வழுதி அவர்கள் மிக ஜாக்கிரதையாக தெரியாமலேயே சொல்லியிருக்கிறார்கள். பட்ஜட் வருகிறது, நீங்கள் எதிர்பாருங்கள் என்றுதான் சொல்லி இருக்கிறார்களே தவிர ரூபாய் பத்து கொடுக்கப்பட இருக்கிறது என்று அவர்கள் சொல்லவேயில்லை. கொடுக்கப் போகிறார்கள் என்பதையும் அவர்கள் சொல்லவில்லை. என்.ஜி.ஓ.-க்களுக்கு ஆறு கோடி ரூபாய் இன்டரிம் ரிலீப் ஆக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பிற்பட்ட வகுப்பினர் நலனுக்காக என்று 5.19 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஹரிஜன நல முன்னேற்றத்திற்காக 5.39 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிராமப்புற வேலை வாய்ப்பைப் பெருக்க ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் உள்ள குடிசைகளை மாற்றுவதற்காக ஒரு கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஓய்வு பெற்ற ஊழியர்களின் பென்ஷனை உயர்த்தியிருக்கிறார்கள், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இலவச வீட்டு வாடகை போன்ற நல்ல காரியங்களுக்காகப் பல கோடி ரூபாய்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, இந்த மூன்று வருட முன்னேற்றக் கழக ஆட்சியில் விவசாயத் துறையில் எந்த அளவிற்கு பிரமாதமான முன்னேற்றத்தை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள் என்பதை விவசாயிகள் உணருவார்கள். 1966-67-ல் இங்கு உற்பத்தியானது 57.9 இலட்சம் டன் என்றிருந்தது ; 1969-70-ல் 63 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள், இதற்காக விவசாயிகளைப் பாராட்டுகிறோம் என்று சொன்னார்கள். உணவு உற்பத்தி அதிகரித்துள்ளது. என்பதை அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் அதற்காக விவசாயிகளைப் பாராட்டியிருக்கிறார்கள், நாமும் அவர்களைப் பாராட்ட வேண்டியதுதான், 1966-லும் இதே விவசாயிகள்தான் உற்பத்தி செய்தார்கள். ஆனால் 1966-க்குப் பிறகு இந்த அரசு கொடுத்த உதவி, ஊக்கம் காரணமாகத்தான் இந்த உற்பத்தி பெருகியுள்ளது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். 1966-ல் இருந்த அதே அளவு நிலம்தான், அதே நிலங்கள்தான், 1966-ல் இருந்தே அதே அதிகாரிகள்தான் இப்போதும் இருக்கிறார்கள். ஆகவே இந்த உற்பத்தி அதிகரிப்புக்கு அரசும் காரணமாகும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஆறு லட்சம் டன் அளவிற்கு அப்போதிருந்ததை விட இப்போது உற்பத்தி பெருகியிருக்கிறது. 1966-லும் சர்க்கார் கடன் கொடுத்தது. 1966-லும் எரு கொடுத்தது. 1967-68-லும் சர்க்கார் கடன் கொடுத்தது. இப்போதும் கொடுக்கிறோம். ஆனால் கொடுக்கப்படுவதை காலாகாலத்தில் கொடுக்கிறோம். தேவையான எருவகைகளைக் காலாகாலத்தில் கொடுக்கிறோம். அதன் விளைவாகத்தான் விவசாய உற்பத்தி பெருகியிருக்கிறது. கடைசியாக, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் உள்ள ஒரு முக்கியமான அம்சம் நில உச்சவரம்பை 30 ஸ்டான்டேர்ட் எக்கராவிலிருந்து 15 ஸ்டேன்டர்ட் ஏக்கராக குறைக்கப்பட்டிருப்பதாகும்.





மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் நண்பர்கள் கூட தேர்தலுக்குப் பிறகு நாங்கள் எல்லோரும் பூர்ஷ்வாக்கள், பணக்காரர்களின் கட்சி என்றெல்லாம் வெளி மேடைகளில் பேசி வந்தார்கள். அவர்கள் இன்றைய தினம் எண்ணிப் பார்க்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏழை எளிய மக்களின் ஆட்சி, தொழிலாளர்களுடைய ஆட்சி, அண்ணா அவர்களின் வழி வந்துள்ள கலைஞர் அவர்களின் ஆட்சி, அண்ணா அவர்களின் எண்ணங்களுக்கு ஏற்ப ஏழை எளியவர்களுக்காக நல்ல பல திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு சான்று, ஒரு முத்திரை, 30 ஏக்கர் என்றிருந்ததை 15 ஸ்டான்டேர்ட் ஏக்கர் என்று செய்திருப்பதாகும். 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று காங்கிரஸ்காரர்கள் கொண்டு வந்தார்கள். ஆனால் அதற்கு முன்பே திருடன் வருகிறான், உஷார், உஷார் என்று கூறி, திருடன் வருகிறான், அவனைப் பிடிக்க வேண்டும் என்று ஊர் முழுக்க சொல்லிவிட்டு எப்படித் திருடன் அகப்படமாட்டானோ அதேபோல் உச்சவரம்பு வரப்போகிறது, வரப் போகிறது என்று பத்தாண்டு காலமாகச் சொல்லி வந்தார்கள். அதன காரணமாக 200 ஏக்கர், 300 ஏக்கர் என்று வைத்திருந்தவர்கள் வயிற்றில் உள்ள பிள்ளைகளுக்கும், வண்டி ஓட்டுகிறவர்களுக்கும், கார் ஓட்டுகிறவர்களுக்கும் எல்லாம் முப்பது ஏக்கர் என்று பிரித்து வைத்துவிட்டு சட்டம் வந்தபிறகு உச்சவரம்பா அல்லது மிச்சவரம்பா என்று அண்ணா அவர்கள் கேட்கிற அளவிற்கு இருந்தது. இன்றைய தினம் அந்த உச்சவரம்பு 15 ஏக்கராகக் குறைக்கப்பட்டுள்ளது. அதுபற்றி யாருக்கும் எதுவும் தெரியாது. அந்த அளவிற்கு திடீரென்று சட்டத்தைக் கொண்டு வந்ததால் தான் அதனால் நல்ல பலன் ஏற்படும் என்ற முறையில் அதை அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகையால் 30 ஏக்கராவிலிருந்து 15 ஏக்கராவிற்குக் கொண்டுவந்திருப்பதை வரவேற்பதைவிட, திடீரென்று, முன்னறிவிப்பின்றி, ஜாக்கிரதையாக இந்தச் சட்டத்தை, இந்த தமிழக அரசு, கலைஞர் கருணாநிதி அவர்களின் ஆட்சியில், நிதி அமைச்சரவர்களும், மற்ற அமைச்சர்களும் மிக இரகசியமாக வைத்திருந்து கொண்டு வந்திருப்பது ஏழை எளிய மக்களுக்கு நல்ல பலன் அளிக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, என்னுடைய விருப்ப மெல்லாம், 15 ஏக்கராக நிலத்தில், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 15 ஏக்கரா என்று வைத்தாலும், அதுகூட இல்லாமல், நிலச்சொந்தகாரரின் நேரடி சாகுபடியில்லாமல் இருக்கிறது. ஆகவே, குறைந்த பட்சமாக, நிலச்சொந்தக்காரருக்கு நேராக உழைப்பதற்காக ஒரு ஐந்து ஏக்கரா நிலத்தையாவது உழுவதற்கு வாய்ப்பளிக்கக்கூடிய அளவில் வருகின்ற சட்டத்தில் வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அதற்குக் காரணம், மற்ற மாவட்டங்களிலெல்லாம் 15 ஏக்கராயிருந்தாலும், 30 எக்கராயிருந்தாலும் நேரடியான சாகுபடியை நிலச் சொந்தக்காரர்களே வைத்திருக்கிறார்கள். ஆனால், தஞ்சை மாவட்டத்தில், குத்தகைக்கு விட்ட காரணத்தால், அவர்களை வெளியேற்ற முடியாத நிலச்சொந்த

[திரு. கொடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி] [1970 மார்ச் 2

காரர்கள், குத்தகைதாரர்களை நம்பி இருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே சாகுபடி செய்யக்கூடியவர்களுக்கு, நேரடியான சாகுபடி இல்லாதவர்களுக்கு, பாக்கியிருக்கின்ற நிலங்களிலிருந்து ஐந்து ஏக்கரா நிலத்தை, சொந்தக்காரர்கள் நேரடியாக உழுவதற்குக் கொடுக்க வேண்டுமென்ற வகையில் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, குறிப்பாக இந்த நிதிநிலை அறிக்கையை நாட்டு மக்கள் எல்லோரும், ஏழை எளியவர்களும், விவசாயிகளும், நடுத்தர வகுப்பினரும் பாராட்டுகின்ற அளவிற்கு இந்த வரவு-செலவுத் திட்டம் அமைந்திருக்கின்றது என்பதை கூறிக் கொண்டு நான் அமர்கிறேன்.

* திரு. எஸ். ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்துச் சில கருத்துகளை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமன், விநாயகம் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் கூறினார்கள். குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் இது ஒப்பாரி பட்ஜெட் என்று கூறினார்கள். ஆம், நான் ஒப்புக் கொள்ளுகின்றேன், இது ஒப்பாரி பட்ஜெட்தான். குறை சொல்ல வழியில்லாமல் ஒரு நிறைவான பட்ஜெட்டைத் தயாரித்து விட்டார்களே என்று கருத்திருமன் அவர்களும், அவரது காங்கிரஸ் உறுப்பினர்களும் ஒப்பாரி வைக்கச் செய்துவிட்ட பட்ஜெட்தான் என்பதை நான் நினைவுபடுத்திக் கொள்ளுகின்றேன்.

என்.ஜி.ஓ.-க்களைத் தூண்டிவிட்டு அதனால் அரசியல் லாபம் பெற எண்ணியிருந்ததைக் கெடுத்துவிட்டார்களே என்று ஒப்பாரி வைக்க வைத்த பட்ஜெட்தான் இது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஆசிரியர்களை நம் பக்கம் இழுத்துவிடலாம் என்று எண்ணியிருந்தோமே, படுபாவிகள் அந்த எண்ணத்திலே மண்ணை அள்ளிப் போட்டுவிட்டார்களே என்று ஒப்பாரி வைக்கும் அளவுக்குச் செய்த பட்ஜெட்தான் இது என்பதை ஒப்புக்கொள்ளுகின்றேன். நிலச்சீர்திருத்தச் சட்டம் கொண்டுவர மாட்டார்கள், அதனால் விவசாயிகளை இவர்களுக்கு எதிராகத் திருப்பி விடலாம் என்று கனவு கண்டு கொண்டிருந்தோமே, பாவிகளிலும் பெரும் பாவிகள் அந்த இன்பக் கனவுகளைக் கலைத்து விட்டார்களே என்று கருத்திருமன் ஒப்பாரி வைக்கக்கூடிய அளவுக்குச் செய்த பட்ஜெட் தான் இது. தூத்துக்குடி துறைமுகம் வந்தது, சேலம் இரும்பாலை வந்து கொண்டிருக்கிறது. மில்கள் திறக்கப்படுகின்றன. ஐயோ தொழில் அமைதி கெட்டு விட்டது, தொழில்கள் சீர்குலைந்துவிட்டன என்று கூறினோமே. பாவிகள் நம்முடைய முகமூடியைக் கிழித்து விட்டார்களே என்று ஒப்பாரி வைக்கச் செய்த பட்ஜெட் தான் இது.

இந்த நிதிநிலை அறிக்கையை, தமிழ்நாட்டிலேயிருக்கும் 4 கோடி மக்களும் வரவேற்கிறார்கள், வாழ்த்துகிறார்கள். கருத்திருமன் அவர்கள் கன்னடத் தமிழர். அவர்கள் ஒப்பாரி வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1970 மார்ச் 2] [திரு. எஸ். ஆறுமுகம்]

இன்று ஒரு புதிய படைப்பை பெருந்தலைவரவர்கள் கொடுத்திருக்கிறார்கள். எங்களுக்குத் தலைகனம் குறைந்து விட்டது. எப்பொழுது வந்து இருக்கிறது என்பதை நான் நினைவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன். 1970-வரைக்கும் அல்ல. இப்பொழுது பல்வேறு மாநிலங்களில், குறிப்பாக மத்திய அரசில் அவர்களுக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைத்துக் கொள்ள தமிழ்நாட்டில் எங்களுக்குப் பாதுகாப்புக் கொடுங்கள் என்று தமிழ்நாட்டு மக்களிடம் ஓடோடி வந்ததால் எங்களுக்குத் தலைகனம் குறைந்துவிட்டது. எங்களைக் காப்பாற்றுங்கள் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். இத்தகைய எண்ணம் எவ்வளவு காலத்திற்கு முன்னால் வந்திருக்கிறது என்பதை நாம் இன்று எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இன்று நம்முடைய நிதிநிலை அறிக்கையில் குறிப்பாகக் கண்டிருக்கிறோம். ஐந்தாவது நிதிக் கமிஷன் 7.2 சதவிகிதத்தில் இருந்து 6.9 சதவிகிதமாக நமக்கு நிதியீட்டைக் குறைத்திருக்கிறது. இதற்கு மத்திய சர்க்காருக்கு ஒருமுகமாக எதிர்ப்பு கொடுக்க வேண்டுமென்று நாம் சொல்லியபொழுது சொன்னார்கள், இது அரசியல் லாபத்திற்காக, அரசியல் வேட்டைக்காக சொல்லக்கூடிய கருத்து, இதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று காமராஜர் கருத்திருமன், விநாயகம் மட்டுமல்ல, அவருடைய கட்சியைச் சார்ந்தவர்களும் சொன்னார்கள். இன்னும் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன், தென் மாநிலத்தில் இருப்பவர்கள், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் நம்முடைய கருத்திற்கு அப்பொழுது செவி சாய்க்கவில்லை. இன்று கேரளத்தினுடைய 'பைனான்ஸ் மினிஸ்டர்' அவர்கள் நம்முடைய கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மைசூரின் முதலமைச்சரவர்கள் நம்முடைய கருத்தை ஏற்றுக் கொண்டு, நம்முடைய தென்னகத்திற்கு 5-வது நிதிக் கமிஷன் போதிய தொகை ஒதுக்கவில்லை, ஓரவஞ்சனை செய்திருக்கிறது என்று நாம் சொன்னதற்குப் பிறகு இன்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். பீஹார், உத்தரப் பிரதேசம், குஜராத், பஞ்சாப், ஹரியானா, மத்தியப் பிரதேசம், மகாராட்டிரம் போன்ற அந்த மாநிலங்களுக்கு அதிகப்படியான நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். நாம் அந்த மாநிலங்களுக்கு நிதி ஒதுக்க வேண்டாமென்று சொல்லவில்லை. ஒதுக்க வேண்டும். ஆனால், அதே நேரத்தில், தென் மாநிலங்களுக்கு, குறிப்பாக தமிழ்நாட்டிற்கு ஏன் நிதி அதிகமாக ஒதுக்கவில்லை. இந்த மாநிலத்திற்கு நிதி குறைவதற்கான காரணத்திற்கு மத்திய சர்க்கார் நமக்குப் பதில் சொல்லியாக வேண்டுமென்ற நிலையிலேதான் இன்று நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஹாண்டே போன்றவர்கள், என்.ஜி.ஓ.-க்களுக்குப் பத்து ரூபாய் தானா இடைக்கால நிவாரணம் என்று கண்டித்துப் பேசியிருக்கிறார்கள். பிச்சைக் காசு என்று சொல்லியிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் நண்பர்களும் பிச்சைக் காசு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர்களுடைய சுதந்திராக் கட்சியும், கம்யூனிஸ்ட்

கட்சியும் ஆளக்கூடிய மாநிலங்களில் இத்தகைய நிவாரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை எங்களுக்குச் சொல்லியாக வேண்டும், நாட்டு மக்களுக்குச் சொல்லியாக வேண்டும். அப்படியல்லாமல் தூண்டிவிட்டு அரசியல் லாபத்தைத் தேடலாம் என்று நினைத்தால் அது நடக்காது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இராஜாஜி அவர்களும், அண்ணா அவர்களும் மற்ற அரசியல் தலைவர்களும் சுமுகமான உறவை ஏற்படுத்திக் கொண்டு, ஆரோக்கியமான ஜனநாயகம் நாட்டிலே வளர வேண்டும், நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கான திட்டத்தைத் தீட்ட வேண்டுமென்றுதான், 20 ஆண்டு காலமாக இருந்த காங்கிரஸ் கட்சி அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க வில்லை, எனவே, அந்தக் கட்சியை ஆட்சியிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்று உடன்பாடு செய்து கொண்டோம். அந்த நல்ல உறவை, நல்ல பண்பை ஹாண்டே போன்றவர்கள் கெடுத்துவிடக் கூடாது. அப்படிக் கெடுத்தால் அதனால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தமிழ்நாட்டில் எந்தவிதமான நஷ்டமும் இல்லை என்பதை அவர்கள் மனதிலே உறுதிப்படுத்தி வைத்துக் கொள்ளவேண்டும். எதிர்ப்பவர்களின் கதி 1972-க்குப் பின்னாலே என்ன ஆகும் என்பதையெல்லாம் கொஞ்சம் கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்று இங்கே, சிண்டிகேட்டா, இண்டிகேட்டா என்றெல்லாம் சந்தேகம். காமராஜ், கருத்திருமன், விநாயகம் ஆக உங்களைக் கேட்கிறேன். நீங்கள் உண்மையான சோஷலிசவாதிகள் என்றால், இந்த நாட்டில் பொதுவுடைமைக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டால் நீங்கள் சமதர்மத்தில் நம்பிக்கை வைத்திருந்தால், நீங்கள் ஏன் இன்றைய தினம் சட்டமாக நிறைவேற்ற கொண்டு வந்த ஒரு பொதுவுடைமைக் கொள்கையை ஆதரிக்கவில்லை. அதை ஆதரிப்பதற்குப் பதிலாக, அவர்களை பதவியிலிருந்து இறக்க வேண்டும், அது ஒன்றுதான் நம்முடைய குறிக்கோளாக இருக்க வேண்டுமென்று சொல்ல முயற்சி செய்கிறீர்கள் என்று கேட்கிறேன். சோஷலிசவாதிகளாக இருக்கக்கூடியவர்கள், சமதர்மக் கொள்கையை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள், அதை ஏன் ஆதரிக்கவில்லை. ஆகவே அவர்கள் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்திய உபகண்டம் பூராவுமே இன்னும் சில காலத்திற்குள்ளாகப் பிற்போக்கு சக்திகள், பிற்போக்குவாதிகள் என்ற பெயரைப் பெற்றுவிடுவார்கள் என்று கருத்திருமன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் அதற்குக் காரணம் உண்டு. ஜனசங்கம், இன்னும் மற்றக் கட்சிகளுடன் உடன்பாடு வைத்துக் கொண்டு அழைத்துப் பேசுகிறார்கள். எதற்காக? இந்திரா அவர்களுடைய அமைச்சரவையை இறக்க வேண்டும், அவர்களுடைய மந்திரிகளை ராஜினாமாச் செய்யும்படி வைக்கவேண்டும் என்ற துடிப்பிலே அவர்கள் செய்கிறார்களே தவிர, எந்த நோக்கத்தின் அடிப்





படையில் அத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, எங்களுடைய கட்சியின் தலைவர் கலைஞர், முதல் அமைச்சர் அவர்கள் ஒரு திட்டவட்டமான கொள்கையைக் கொண்டிருக்கிறார்கள். கம்யூனிஸ்டு கட்சிக்காரர்களுக்கும், சுதந்திராக் கட்சிக்காரர்களுக்கும் சொல்லிக் கொள்வேன், எந்தக் காங்கிரசாக இருந்தாலும் சரி, எங்களுடைய கொள்கை எங்களுடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிய வழியில், அண்ணா வழியில் அயராது உழைப்போம் என்ற கோஷத்தை எழுப்புவோம். ஆதிக்கமற்ற ஒரு சமுதாயத்தை அமைத்துத் தருவோம். இது எங்களுடைய லட்சியம். இந்தித் திணிப்பை எதிர்ப்போம், எதிர்த்து வந்திருக்கிறோம் அன்றும், இன்றும் எதிர்த்து வருகிறோம் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். மாநில சுய ஆட்சி, மத்தியில் கூட்டாட்சி என்று இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லிக்கொள்ளக்கூடிய கருத்தை உலக அரங்கில் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். வெளிநாட்டுக்காரர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையை ஏற்றுக்கொள்வதுதான் எதிர்காலத்தில் நாட்டில் இருக்கக்கூடிய 50 கோடி மக்களுக்கு நல்வாழ்வைத் தரமுடியும். அப்படிப்பட்ட வகையிலேதான் மாநில சுய ஆட்சி, மத்தியில் கூட்டாட்சி அமைய வேண்டும் என்ற கருத்துக்களை இன்றைய தினம் நாம் யோசித்துக் கொண்டு வருகிறோம்.

இன்னொன்றும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வன்முறையைத் தகர்த்து வறுமையை வெல்லுவோம். நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஜனநாயகத்தின் அடிப்படையில் நல்லதோர் ஆட்சி நடத்தி வருகிறது. சில பேர்கள் மக்களைத் தூண்டிவிட்டு அரசியல் லாபத்தைத் தேடி வருகிறார்கள். அப்படிப்பட்ட வன்முறையைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு, தமிழக அரசு, கலைஞர் அரசு ஜனநாயகத்தைப் பாதுகாப்பதோடு ஜனநாயக வழியில் வன்முறையைத் தவிர்த்து வறுமையை வெல்லக்கூடிய வகையிலே ஆட்சியை நடத்துவோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றைய தினம் திரு. மகாதேவன் பிள்ளை ஒன்றைச் சொன்னார்கள். முதல் அமைச்சர் அவர்கள் உல்லாசக் காரில் போகிறார்கள், குளிர்ந்த காரில் போகிறார்கள் என்று சொன்னார்கள். நான் என்னுடைய உள்ளத்தைத் திறந்து சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் அறுவை சிகிச்சையை அமெரிக்காவில் செய்து கொண்ட பிறகு டாக்டர் மில்லர் அவர்கள் சொன்னார்கள். "நீங்கள் குளிர்ந்த அறையில்தான் இருக்க வேண்டும், உஷ்ணம் உங்களுடைய உடம்புக்கு ஒத்து வராது. ஆகவே, நீங்கள் இந்த வழி

யிலே இருக்க வேண்டும்" என்று கட்டாயப்படுத்திச் சொன்னதோடு மட்டுமல்லாமல் அங்கிருந்து கலைஞர் அவர்களுக்கும் நம்முடைய கழகத் தலைவர்களுக்கும் தகவல் அனுப்பினார்கள். அதன் பேரில் அப்படிப்பட்ட ஒரு நல்ல குளிர்ந்த இல்லத்தை நாம் இங்கே ஏற்பாடு செய்தோம். "காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள், ஏதாவது நம்மைக் குறை சொல்லிவிடுவார்கள், அண்ணாவுக்குச் சொகுசான வாழ்க்கை எதற்கு என்று கேட்டுவிடுவார்கள், இப்படிப்பட்ட உயர்ந்த நாட்டிற்கு சேவை செய்தாலும், இப்படிப்பட்ட இரக்க மற்றவர்கள் இப்படிச் சொல்லக்கூடியவர்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள், ஆகவேதான் அப்படிப்பட்ட வீட்டிற்கு நான் போகமாட்டேன்" என்று சொல்லித்தான் அண்ணா அவர்கள் அந்த வீட்டிற்குப் போகவில்லை. "எனக்கு குளிர்சாதனம் பொருந்திய கார் தேவையில்லை" என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லியதன் விளைவாகத்தான் அண்ணா அவர்களை நாம் கைவிட்டு விட்டோமோ என்ற நிலைமை நமக்கெல்லாம் இருக்கிறது. ஆகவே தான் கலைஞர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான்கு கோடி மக்கள் மட்டுமல்ல, கடல் கடந்து அன்னிய நாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள், மைசூர் போன்ற வெளி மாநிலங்களில் வாழ்கின்ற தமிழர்கள், தமிழ் நாட்டில் நல்வழி காட்டக்கூடிய நம் தலைவர்கள் இருக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியிலுள்ள முதியவர்கள், அரசியலில் மூத்தவர்கள் இதை ஒத்துக் கொள்வார்கள் என்று எண்ணுகிறேன். ஆகவே, கலைஞர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் குளிர்சாதனம் பொருத்தப்பட்ட காரிலேயே போக வேண்டும். அப்படி எந்தத் தரப்பிலாவது அதற்கு எதிர்ப்பு வருமானால், திராவிட முன்னேற்றக் கழகம் அத்தகைய வசதி செய்து தருவதற்குத் தயாராக இருக்கிறது. யார் சொல்வதற்கும் நீங்கள் அஞ்ச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். யாரோ சொல்கிறார்களே என்பதற்காக அந்த வழியை நீங்கள் பின்பற்றிவிட வேண்டாம் என்று வேண்டிக் கொள்கிறேன்.

இறுதியாக மைசூர் மாநிலத்தில் இருப்பவர்கள் அங்கே இருக்கும் தமிழர்களை எவ்வளவோ கொடுமைப்படுத்துகிறார்கள். அதே நேரத்தில் இங்கே இருக்கக்கூடியவர்களுக்கு நம்முடைய கலைஞர் அவர்கள் பாதுகாப்புக் கொடுத்திருக்கிறார்கள். நாம் ஒன்றை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். மைசூர் மாநிலத்தில் கோலார் தங்க வயல் முதலிய பகுதிகளில் 1949-க்கு முன்னால் இன்றைய தினம் இருக்கக்கூடிய சென்னை சர்வகலாசாலையின் கீழ்தான் அங்கே அவர்கள் தமிழ் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அங்கெல்லாம் தமிழர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்ற காரணத்தினால் அந்தப் பகுதிகளை நம்மோடு சேர்க்க வேண்டும், தமிழகத்தோடு இணைக்க வேண்டும் என்று நாம் கேட்கக் கூடாதா என்று கேட்கிறேன். அதற்கு மாறாக அங்கே ஏதாவது தவறான வழிகளில் நம்மை பலாத்காரமாக இழுப்பார்களேயானால், அதற்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசு தயாராக இருக்கும், தமிழர் தலைவர் கலைஞர் தயாராக இருப்பார் என்பதைத் தெரிவித்துக்கொண்டு,





நிதிநிலை அறிக்கையை ஆதரித்து, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. பி. எஸ். தனுஷ்கோடி: தலைவர் அவர்களே, 1970–71 வருஷத்திய நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகிறபொழுது, அதில் இருக்கக்கூடிய சில நல்ல அம்சங்களை வரவேற்று, அதற்கு முன்னதாகச் சில விஷயங்களைச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நாகப்பட்டினத்தில் சுருட்டுத் தொழிலாளர்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை முன் வைத்து, முதலாளிகள் தங்களுடைய கோரிக்கைகளை ஒத்துக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக உண்ணாவிரதம் இருந்தார்கள். சர்வ கட்சிகளைச் சேர்ந்த தொழிலாளர்கள், திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம், காங்கிரஸ், இடதுசாரி கம்யூனிஸ்டு, வலதுசாரி கம்யூனிஸ்டு ஆகிய கட்சிகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை முன்வைத்திருக்கிற நேரத்தில், 32 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். அதிலே சர்க்கார் தலையிட வேண்டும் என்று கோரி, லேபர் ஆபீசர் தலையிட்டு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதை 26 முதலாளிகள் ஏற்றுக்கொண்டு, 8 முதலாளிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்தத் தொழிலாளிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசம்பந்தம் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். உடனடியாகத் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் முதல் அமைச்சர் அவர்களும் தலையிட்டு, அந்த 8 முதலாளிகளும் அந்த ஒப்பந்தப்படி கூலி கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தத் தொழிலாளர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நிலச் சீர்திருத்த மசோதாவை தமிழக அரசு, காங்கிரஸ் அரசு கொண்டு வந்ததுபோல அல்லாமல், உடனே எந்த விதமான அறிவிப்பும் இல்லாமல் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டு வருகிறபொழுது, நிச்சயமாக அந்த 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதை ஒரு தனி நபர் என்ற அடிப்படையில் இல்லாமல், ஒரு குடும்பத்திற்கு என்ற அடிப்படையில் கொண்டுவந்தால்தான், பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் மீதம் இருக்கும். சமுதாயத்தில் ஒரு மாற்றம் ஏற்பட வேண்டுமென்றால், காங்கிரஸ் சர்க்கார் கொண்டு வந்ததுபோல் அல்லாமல், நல்ல தீவிரமான கொள்கையை, தீவிரமான நிலச் சீர்திருத்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பல முதலாளித்துவ நாடுகளில் கூட நில உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஜப்பான் நாட்டில் 7½ ஏக்கருக்கு மேல் கிடையாது. தென் கொரியா நாட்டில் ஒரு குடும்பத்திற்கு 6½ ஏக்கர் நிலம் என்று வைத்திருக்கிறார்கள். அதுபோன்ற நாடுகளில் இப்படி முற்போக்கான அம்சங்கள் வந்து கொண்டிருக்கும் பொழுது, விவசாயிகள் அதிகமாக இருக்கக்கூடிய நமது தேசத்தில் இப்படி ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று

கேட்டுக் கொள்கிறேன். பல விதிவிலக்குகள் இருக்கின்றன. அந்த விதிவிலக்குகளை ரத்து செய்ய வேண்டும். காங்கிரஸ் ஆட்சியில் இருந்த நேரத்தில் பல விதிவிலக்குகளை அளித்தார்கள். உதாரணமாகக் கூற வேண்டுமானால், தஞ்சாவூர் மாவட்டத்தில் வலிவலம் எஸ்டேட் இருக்கிறது. அதற்கு 303 வேலி நிலம் இருக்கிறது. ஆனால் இந்தச் சட்டத்தின் மூலம் அதிலிருந்து ஒரு குழி நிலம்கூட எடுத்துக் கொள்ளவில்லை. பல டிரஸ்டுகள் ஏற்படுத்தப்பட்டு, அது இன்னும் நிலப் பிரபுக்கள் கையில்தான் இருக்கிறது. அதே போன்று உள்ள விதிவிலக்கை ரத்து செய்ய வேண்டும். காரிமங்கலம் கிராமத்தில் நாகைத் தமிழ் கல்லூரி நிறுவனத்தார்கூட பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தை, டிரஸ்டு மூலமாக வைத்துக்கொண்டு அதைத் தரிசு நிலமாகவே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய இந்த நேரத்தில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தை தரிசாகப் போட்டிருக்கிறார்கள். முன்னாள் அமைச்சர்
மு.ப. 11-00 திரு. கோவிந்தசாமி அவர்கள் இருந்த நேரத்தில் நான் இதை எடுத்துக் கூறியபொழுது, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் உத்தரவிட்டார்கள். அப்படி உத்தரவு இட்டும், அதிகாரிகள் நோட்டீஸ் விட்டும், என் நிலத்தை சர்க்கார் ஏலம் விடக் கூடாது என்று அதிகாரிகளை மிரட்டி, என் நிலத்தை நான் தரிசு போடுவேன், நீங்கள் யார் கேட்பதற்கு என்று பேசும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகள் ஏற்படாமல் இருக்க, டிரஸ்டுகள் பூராவையும் நீக்கிவிட்டு, விதிவிலக்குகளை ரத்து செய்து, அந்த வகையில் செயல்பட்டால், பஞ்சத்தைப் போக்க ஏதுவாக இருக்கும். அந்த முறையில் ஏற்பாடுகள் செய்யவேண்டும். அதேபோல, கரும்பாலைகளுக்கு பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களை வைத்திருப்பவர்களுக்கு கரும்பின் பெயரால் விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு உத்தரப் பிரதேசத்தில், கரும்பாலைகளைச் சர்க்கார் ஏற்று தேசியமயமாக்கக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதேபோன்று தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய கரும்பாலைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விலக்கை ரத்து செய்து, அதற்கும் உச்ச வரம்பு கட்டி, ஏற்பாடுகள் செய்தால், கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகள் குறைந்த விலைக்கு கரும்பு கொடுக்கமுடியும். மக்களுக்கு ஜீனியும் குறைந்த விலையில் கிடைக்கும். அதோடு விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பும் கொடுக்க முடியும். ஆகவே, உத்தரபிரதேசத்தைப்போல, கரும்பாலைகளை தேசியமயமாக்க ஏற்பாடுகள் செய்யப்படுவதைப் போன்று, தமிழகத்திலும் கரும்பு சாகுபடிக்கு அளிக்கப்பட்டிருக்கும் விதிவிலக்கை ரத்து செய்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில், நான்கு லட்சம் விவசாயத் தொழிலாளிகள் இருக்கிறார்கள் என்று கணபதியாப் பிள்ளை அறிக்கையில் இருக்கிறது. அவர்களுக் கெல்லாம் நிலம் கொடுக்க, விதி விலக்கு கொடுத்திருப்பதை யெல்லாம் ரத்து செய்யவேண்டும். ஸ்டாண்





டர்ட் ஏக்கர் பிரிக்கும்போது, அது குடும்ப வாரியாகச் செய்யப்பட வேண்டும். தனி நபருக்கு என்று இருக்கக் கூடாது. அதோடு, வருமான அடிப்படையில் ஸ்டாண்டர்ட் ஏக்கர் இருக்க வேண்டும். வரி அடிப்படையில் இருக்கக் கூடாது. ஒரு வருஷத்திற்குக் குறைந்தபட்சம் ரூ. 4,800 வருமானம் வருகிறது என்றால், அந்த வகையில் நிலத்தின் தரத்தைப் பிரித்து, ஏற்பாடு செய்தால் நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்க ஏதுவாக இருக்கும்.

நீலகிரி மாவட்டத்தில் மலைப் பிரதேசங்களுக்கு, தோட்டக்காடுகளுக்கு காங்கிரஸ் ஆட்சியில், கூடலூர் தாலுகாவில் ஏற்காடு மலையில், கொடைக்கானல் தோட்டங்களுக்கு விலக்குகள் அளித்து, பெரும் முதலாளிகளுக்கு ஆதரவாக இருந்திருக்கிறார்கள். இப்பொழுது நம் அரசு அவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, கொடுக்கப்பட்டிருக்கும் விலக்குகளை ரத்து செய்ய வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் இருக்கும் தோட்டங்களை எடுக்கும்போது, அவற்றிற்கு ஒரு கார்ப்பொரேஷனை அமைத்து, அயல்நாடுகளிலிருந்து வரும் அகதிகளுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுத்து இருப்பதாகத் தெரிகிறது. அப்படிச் செய்ய வேண்டியதுதான். அதே நேரத்தில், அங்கே ஜன்மத்தில் சாகுபடி செய்து கொண்டிருக்கும், பல விவசாயிகளுக்கு ஆபத்து இல்லாமல் இதைச் செய்ய வேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். அவர்கள் பல ஆண்டுக் காலமாக அங்கே விவசாயம் செய்து வந்திருப்பவர்கள். அந்த ஆதிவாசிகளுக்கும், மலைவாசிகளுக்கும், தமிழர்களானாலும் சரி, மலையாளிகளானாலும் சரி, பாகுபாடு எதுவும் இல்லாமல், நிலத்தை நீண்ட நாட்களாக வைத்திருந்தவர்களுக்கு உரிமை கொடுத்து, நடவடிக்கை எடுக்க வேண்டும். சர்க்கார் தரிசு நிலங்கள் சமவெளியான, காட்டு வெளியாக இருக்கும் நிலங்களில், நிலமற்றவர்கள் உழுகிறவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். தஞ்சை மாவட்டத்தில் இன்னும் தமிழ் நாட்டிலும், புஞ்சை நிலங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. விலக்கு ஏழை எளியவர்களுக்குத் தேவையேயல்லாது, வசதியுள்ளவர்களுக்கும், பணப் பொருள்களை ஏராளமாகச் சாகுபடி செய்யும் பணக்காரர்களுக்கும் கொடுக்கிறது. புஞ்சை வரி நீக்கப்பட்டிருக்கிறது. அரசுக்குக் கிடைக்கக்கூடிய நியாயமான வரிகள் கிடைக்காமல் அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு மட்டும் விலக்கு அளித்துவிட்டு, நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு விலக்கு வேண்டாம் என்று செய்ய வேண்டும். அந்த வகையில் சர்க்கார் மறு பரிசீலனை செய்ய வேண்டும். அதேபோல், நஞ்சை நிலங்களுக்கு, வரியை நீக்க எங்களுடைய கட்சி ஒரு யோசனையைக் கூறுகிறது. இருபோக நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு விலக்கு அளிக்கலாம். ஒரு போக நிலமாக இருந்தால், இரண்டு ஏக்கருக்கு விலக்கு அளிக்கலாம். தர்ம ஸ்தாபனங்களுக்கு ஏராளமான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு வரம்பு கட்ட வேண்டும். தஞ்சை மாவட்டம் வலிவலம் இருதயநாதசுவாமி

கோவிலுக்கு நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. கூட்டுறவு முறையில் சாகுபடி என்று சொல்லி, வலிவலம் எஸ்டேட்டில் இருப்பவர்கள், பினாமி குத்தகைச் சீட்டு எழுதி வைத்து, கரம்பை நிலங்களை கூலிகளுக்குக் கொடுத்துவிட்டு, மீதம் இருக்கும் நல்ல நிலங்களை தாங்களே வைத்துக் கொண்டு, சர்க்கார் லோன்களும் பெற்று, விளையவில்லை என்று சொல்லிவிட்டு, எண்டோமெண்டு போர்டுக்கும் சிபாரிசு செய்கிறார்கள். குத்தகை தள்ளுபடி கேட்டு விடுகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட இடைத்தரகர்களை நீக்கிவிட்டு, நேரிடைச் சாகுபடிதாரர்களுக்கு நிலத்தைப் பகிர்ந்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த மாதிரியான ஊழல்களைச் சர்க்கார் கவனிக்க வேண்டும்.

அற நிலைப் பாதுகாப்பு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கூட்டுறவு சொசைடி அமைக்க நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 21 ஏக்கர், 15 ஏக்கர் விளையாத புஞ்சைத் திடல்களை குத்தகைச் சீட்டு எழுதி வாங்குகிறார்கள். பிற்பாடு விளையாத நிலங்களுக்கு என்று பாக்கி போட்டு, வரட்சியால் சேதம் ஏற்படுகிறது. குத்தகை பாக்கி விழுகிறது. இதற்காக ஒரு கமிஷனோ அல்லது ஒரு அதிகாரியையோ போட்டு, எத்தனை கலம் பாக்கியிருக்கிறது, எவ்வளவு காலத்திற்கு என்றெல்லாம் ஆராய்ந்து, பாக்கிகளை ரத்து செய்துவிட்டு, நேரிடையாக சொசைடி மூலம் வருமானம் வரக்கூடிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப் புறங்களில் வேலையின்மையைப் போக்க வேண்டி ஒரு கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கு கிட்டத்தட்ட 14 லட்சம் ஏக்கர் சாகுபடி ஆகிறது. 4 லட்சம் ஏக்கர் நிலத்தின் தானியங்கள் வருஷா வருஷம் வெள்ளத்தால் அழிகின்றன. ஆகவே, இந்த நிலைமையை நீக்க குறைந்த பட்சம் பத்துக் கோடி ரூபாயாவது ஒதுக்கி, தேவைப்படும் இடங்களில், நீர்ப்பாசனம் கொடுத்து, வடிகால் திட்டம் அமுல் படுத்தி, நடவடிக்கை எடுக்க வேண்டும். கிராம அபிவிருத்தி வேலைகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதிகமாக நிதிகளை ஒதுக்கி, பணிகளைச் செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு: தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்ட 1970-71 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களையும் சிலவற்றை சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையில் மிகத் தெளிவாக குறிப்பிட்டிருப்பது போல, பொருளாதார நிலை அசைவற்று இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள் நேற்று குறிப்பிட்டது போல் உலகத்திலேயே பொருளாதார நிலை மந்தப்பட்டிருக்கிற இந்த நிலையில், பொது மக்கள் மகிழ்ந்து வரவேற்கும் நிலையில் ஒரு நிதி நிலை அறிக்கையை தந்ததற்கு அவர்களுக்கு பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப்





பட்டிருக்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், மிகப் பெரிய சோஷலிசவாதிகள், பல்வேறு கட்சியைச் சார்ந்தவர்களும் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலும் சோஷலிசத்தைக்கொண்டு வரப் போகிறோம் என்று சொல்லும் இந்த நேரத்தில், மத்திய சர்க்காரில் இன்றைக்குப் பொறுப்பில் இருக்கும் கட்சிக்காரர்கள் சோசலிசம் பற்றிச் சொல்லும் நேரத்தில், அப்படிப்பட்ட மிகப் பெரிய, அதிதிவிர சோசலீச வாதிகள், புகுத்த தயங்குகிற நல்ல திட்டங்களை நம்முடைய அமைச்சரவை இந்த அறிக்கையில் தந்திருப்பது, அண்ணாவின் வழியில் கழக அரசு தமிழகத்தை சிறப்பாக நடத்திச் செல்வதற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது என்று தெரிவிக்கக் கடமை பட்டிருக்கிறேன். மத்திய மாநில அரசுகளுக்கிடையே உள்ள உறவு முறைகள் மத்திய மாநில அரசுகளின் அதிகார வரம்பு பற்றிய பிரச்சனை, அண்ணா அவர்களின் பொருளாதாரக் கண்ணோட்டம், அண்ணாவின் உரிமைக்குரல், ஏழை எளிய மக்கள் மீது பரிவு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கி ஒன்றாக இணைத்து இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றால்—அது மிகையல்ல. பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்ததற்குப் பிறகு அவருடைய கல்லறையில் சமர்ப்பிக்கப் பட்ட மலர் வளையங்கள்—எல்லாம் வாடிப்போகின்ற தன்மை படைத்தவை. ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையானது அண்ணா அவர்களின் சமாதிக்குச் சமர்ப்பிக்கும் புகழ்மாலையாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை நாங்களும், விவரம் தெரிந்த பொதுமக்களும் ஆதரித்துப் பாராட்டுகின்ற நேரத்திலே, மதிப்பிற்குரிய நமது சிண்டிகேட் காங்கிரஸ் நண்பர்கள் சட்டமன்றத்திலும் வெளியிலேயும் இந்த நிதிநிலை அறிக்கையை தவறான கண்ணோட்டத்திலேதான் பார்த்துப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 'ஒப்பாரி' என்று ஒரே வரியில் முடித்துவிட்டார்கள். அவர் மட்டுமல்ல, நேற்றைய தினம் பேசிய திரு. மகாதேவன் பிள்ளை அவர்கள் நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேசும்போது, 'ஆமைக்கறி எங்கே, கடல் பாசில் செய்த அல்வா எங்கே?' என்று கேட்டார்கள். திரு. மகாதேவன் பிள்ளை அவர்கள் சைவமா, அசைவமா, அல்லது வீர சைவமா என்று தெரியவில்லை. அவருக்கு வேண்டியதெல்லாம் கடல் பாசியில் செய்த அல்வா, ஆமைக்கறிதான். இதேபோல்தான் இருக்கிற நிலைமையை எதிர்க்கட்சி நண்பர்கள் உணர மறுத்து வருகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்திலே இருபது ஆண்டுகளாக எதிர்க்கட்சியாக இயங்கியது. பற்பல திட்டங்களை பற்றிச் சொன்னது. முக்கியமான திட்டங்களை தேர்தல் அறிக்கையிலே தந்தது. சில சந்தர்ப்பங்களில், தேவைப்படுகிறது என்று கருதிய நேரங்களில் சில யோசனைகளை அரசுக்குச் சொல்லியது. அம்மாதிரியான திட்டங்களில் ஒன்று தான் கடல் பாசியிலிருந்து அல்வா தயாரிப்பது, ஆடுகளை வளர்த்து வெளிநாடுகளுக்கு அனுப்புவது என்பதாகும். காங்கிரஸ்காரர்கள் அவர்களுக்குப் பிடிக்கிற பண்டங்களையேதான் இங்கு கேட்டுக்கொண்டிருக்

கிறார்கள். அரசாங்கம் எவ்வளவோ பிரச்சினைகளை தீர்த்துவருகிறது. கூவம் சீர்திருத்தப் பணி, சேலம் உருக்காலை, தூத்துக்குடி துறைமுகத் திட்டம் போன்ற பல திட்டங்களைச் செய்துவருகிறது. இவற்றையெல்லாம் காங்கிரஸ்காரர்கள் விட்டுவிட்டு, காவேரி நீரை நகரத்திற்குக் கொண்டுவரும் பிரச்சினையை விட்டுவிட்டு, தொழில் வாய்ப்புக்களைப் பெருக்கவேண்டுமென்ற திட்டத்தை விட்டுவிட்டு எதை எதையோ பேசுகிறார்கள். அவர்கள் சொல்கிற மாதிரி செய்வதாக இருந்தால், நாம் எல்லோரும் இந்த நல்ல திட்டங்களையெல்லாம் விட்டுவிட்டு கடலுக்குத்தான் போக வேண்டும். காங்கிரஸ் என்ற கப்பல் இன்று கடலில் கவிழ்ந்து போயிருக்கிறது. அந்தக் கவிழ்ந்த கப்பலில் எங்களையும் தள்ளப் பார்க்கிறார்கள்.

அடுத்தப்படியாக, நீங்கள் என்ன செய்துவிட்டீர்கள், எல்லாம் நாங்கள் போட்ட திட்டம்தானே. நாங்கள் போட்ட திட்டத்தையே தான் நீங்கள் விஸ்தரித்திருக்கிறீர்கள் என்றெல்லாம் காங்கிரஸ் நண்பர்கள் பேசி வருகிறார்கள். நாங்கள் இப்போதுதான் புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கிறோம். நாங்கள் புதிதாக வந்திருக்கிறோம் என்பதற்காக இந்த சட்டமன்றத்தை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டோமா? இந்த மின்விளக்குகள் எல்லாம் தேவையில்லை என்று எடுத்துவிட்டோமா? இந்த ஒலிபெருக்கி தேவையில்லையென்று அதை விட்டுவிட்டோமா? நீங்கள் இவையெல்லாம் நல்லது என்று செய்தீர்கள். நீங்கள் செய்த நல்லவைகளை ஆதரிக்கிறோம். நீங்கள் போட்ட திட்டங்களைத்தான் விஸ்தரிக்கிறோம் என்று சொன்னால், அந்த விஸ்தரிப்பிலேயே வித்தியாசம் இருக்கிறது. நல்ல திட்டங்களை நாங்கள் துரிதமாக விஸ்தரிக்கிறோம். உங்களுடைய திட்டங்கள் எல்லாம் இருபது ஆண்டுக் காலத்தில் ஆமை வேகத்தில் நகர்ந்தது. நாங்கள் துரிதமாக விஸ்தரிக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக, 'நாங்கள் அல்லவா உங்களுக்கெல்லாம் ஓட்டுரிமை கொடுத்தோம்' என்று சொல்லுகிறார்கள். வயது வந்தவர்களுக்கு ஓட்டுரிமை என்பது அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. இதைப் போய் நாங்கள்தான் செய்தோம் என்றும், எங்கள் கட்சிதான் ஓட்டுரிமை கொடுத்தது என்று சொல்வதும் சரியல்ல. இலங்கை சுதந்திரம் அடைந்தது. அங்கு ஓட்டுரிமை கிடைக்கவில்லையா? ஒருவேளை அவர்கள் திரு. காமராஜர் அவர்களுடைய தலைமையில் இருப்பதாலோ என்னவோ அவர்களுடைய பாடங்களில் கோளாறு இருக்கிறது. ஆகவே, அடிப்படைப் பிரச்சினையில் இந்த அரசு தவறு இழைத்திருக்கிறதா என்றால் இல்லை. ஒரு சிலர் உணவு உற்பத்தி நல்ல முறையிலே செயல்படவில்லை என்று சொல்லுகிறார்கள். திரு. காசிராமன் அவர்கள் பேசும்போது, "உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது. அதற்காக உழவர்களைப் பாராட்டுகிறேன்" என்று நாசூக்காகப் பேசிவிட்டார்கள். காங்கிரஸ்காரர்களாகிய அவர்கள் காலத்திலே பெருகாத உணவு உற்பத்தி, இப்போது அதிகமாகியிருக்கிறது.



இதை அவர்கள் ஒத்துக்கொள்ளுகிறார்கள். அவர்கள் காலத்தில் ஏன் உணவு உற்பத்தி பெருகவில்லை என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் ஆட்சியில் உணவு உற்பத்திக்குத் தக்க ஆக்கம் தரவில்லை. உழவர்களுக்கு உரிமை வழங்கவில்லை. கழக ஆட்சியில் நல்ல ஊக்கம் கொடுத்ததன் விளைவாக உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது. இதை அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நிதிநிலை அறிக்கையில் பல புரட்சிகரமான திட்டங்களை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். 'அனைத்து மாநில கடன் ஆணைக் குழு' ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இது சாதாரண பிரச்சினை அல்ல. மத்திய அரசு மாநிலங்களுக்குக் கடன் தருகிறது. பிறகு கடனைத் திரும்ப வசூலித்துக்கொள்கிறது. இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, 'இந்தப் பிரச்சினை தள்ளிவிடுவதற்கில்லை, யோசிக்க வேண்டும்' என்ற முறையில் 'இந்து' பத்திரிக்கை எழுதியிருக்கிறது. மெயில் பத்திரிகையும் இந்த யோசனையை வரவேற்று எழுதியிருக்கிறது. மத்திய அரசானது உலக பாங்கியிலிருந்து அதிகமான தொகையை குறைந்த வட்டிக்கு வாங்குகிறது. மாநிலங்களுக்கு அந்தத் தொகையை கடனாகக் கொடுக்கும்போது குறைந்த தவணைகளில் அதிக வட்டிக்குக் கொடுக்கிறது. இதைப் பற்றித் தமிழக அரசு மட்டுமல்ல, எல்லா மாநிலங்களும் சேர்ந்து மத்திய அரசுக்கு விடப்பட்ட உரிமை குரலாக இது அமைந்திருக்கிறது.

நண்பர் திரு. விநாயகம் அவர்கள் இன்னொரு விஷயத்தைப் பற்றிப் பேசினார்கள். அவர் வழக்கறிஞர் நல்ல முறையில் வாதாடினார். ஆனால் அவருடைய வழக்கு தோற்றுப் போகிற வழக்காகத்தான் இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் என்னென்ன சொன்னீர்களோ, அதைத்தானே செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். நாங்கள்—கான்ஸ்டிட்யூஷன் அரசியல் சட்டத்திற்கு அடங்கித்தான் பொறுப்பை ஏற்றுக்கொண்டோம். மத்திய மாநில அரசுகளின் உரிமைகளைப் பற்றி நாங்கள் மட்டும் பேசவில்லை. 1961-ம் ஆண்டு அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தரவேண்டுமென்று அப்பொழுதே கேட்டிருக்கிறார் என்பது போன்ற விவரங்கள் விவாதக் குறிப்புகளில் இருக்கிறது. ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ்காரர்களான அவர்கள் மத்திய அரசை பணிவாகக் கேட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் அமைந்த அரசு, கலைஞர் அவர்கள் தலைமையில் இருந்துவரும் அரசு கொஞ்சம் அதிகாரத்துடன் கேட்கிறது. இது ஒன்றும் புதிய கோரிக்கை அல்ல. மேலும், இந்தக் கோரிக்கை தமிழகத்திலிருந்து

மட்டும் வருகிற கோரிக்கை அல்ல. பல்வேறு மாநிலங்களி லிருந்தும், அனைத்து மாநிலக் கடன் ஆணைக் குழு வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தி வருகிறார்கள். காங்கிரஸ் பெரியவர்கள் யோசனை செய்துபார்க்க வேண்டும். இந்தக் கோரிக்கை நமது மாநில நிதியமைச்சர் அவர்கள் மட்டும் எழுப்புகின்ற கோரிக்கை அல்ல. மேலும் வரி உயர்வு பொதுமக்களைத் தாக்காதா, பொதுமக்களைப் பாதிக்கும் வண்ணம் இருக்கிறதே என்று சொல்கிறார்கள். நாம் சோஷலிசம் பற்றிப் பேசுகிறோம் நாம் பேசுவது திரு. காமராஜர் பேசும் சோஷலிசம் அல்ல. காமராசர் அவர்கள் பேசுகிற சோஷலிசம் என்னவென்றே புரியவில்லை இன்னும் சொல்லப் போனால் அந்த சோஷலிசம் பற்றி அவருக்கே புரியாது. பேசுப வருக்கும் புரியாது, கேட்பவர்களுக்கும் புரியாது. பேசுபவர் களுக்கே புரியவில்லை கேட்பவர்களுக்கு எப்படி புரியும்? "ப்ருன் தி ரிச் அண்ட் பே தி பூர்" என்பதை ஒரு கட்சியும் தரலாம். பணக்காரர்களிடத்திலே இருக்கிற செல்வத்தை எடுத்து ஏழை எளியமக்களுக்குத் தரலாம் என்பது ஒரு புறமிருக்க எந்த அளவிற்கு அவ்வாறு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

மண்ணிந் கலந்திடுமோ ?—தெற்கு
மாகடலுக்கு நடுவினிலே அங்கோர்

கண்ணற்ற தீவினிலே—தனிக்
காட்டினிற் பெண்கள் புழுங்குகின்றார் " என்று பாரதியார்

இலங்கையைப்பற்றி பாடினார்கள். அந்த இலங்கையிலிருந்துதான் தமிழர்கள் அகதிகளாக திரும்புகிறார்கள். இந்த இலங்கைவாழ் அகதிகளுக்காக மறுவாழ்வு அளிக்கும் திட்டமாக மலைத்தோட்ட மேம்பாட்டுக் கழகம் ஒன்றே பத்துக் கோடி ரூபாய் மூலததனத்தில் ஆரம்பித்திருக்கிறது. இந்த அகதிகளின் நல்வாழ்விற்காக மத்திய அரசாங்கத்தை கேட்க வேண்டிய அவசியம் இருக்கிறது. மத்திய அரசாங்கம் பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளை தண்டகாரண்யத் திட்டம் என்ற திட்டத்தை ஏற்படுத்தி, கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்தார்கள். அப்படி செலவழித்த பிறகு இறுதியில் அந்த அகதிகள் அங்கே இல்லையென்று சொல்லப்பட்டது என்றாலும் பணம் பாழாக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அவ்வளவு பணம் செலவழித்த மத்திய அரசாங்கம் இலங்கையில் இருந்து வருகிற அகதிகளுக்கு என்கிறபோது ஏதோ கண்துடைப்பாகதான் உதவி செய்கிறதே தவிர, ஒன்றும் இல்லை. ஆகவே மாநில அரசாங்கத் திட்டங்களை ஏற்று இன்னும் நல்லமுறையில் உதவி செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைக் குறிப்பிட்டு விடைபெறுகிறேன். நில உச்ச வரம்புச் சட்டம் திடீரென்று வந்துவிட்டதே என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். புரட்சிகரமான உண்மை சோஷலிசத் திட்டம் என்கிறபோது சொல்லிவிட்டா வரும்?



61-லே அரசாங்கக் கணக்குப்படி 6 லட்சம் கிடைக்கும் என்றார்கள். 6 ஆயிரம் ஏக்கர்தான் வந்தது. அந்த நிலை ஏற்படக்கூடாது என்கிற காரணத்தினால்தான் திடீரென்று வந்தது.

அடுத்து, ஒரு முக்கியமான பிரச்சினை—மத்திய மாநில உறவு பற்றியது. குடிமக்கள் எல்லாம் ஒன்று சேர்கிறபோது ஒரு நாடு அமைகிறது. ஒரு நாட்டுக்கு ஒரு ஆட்சி தேவை. அந்த ஆட்சிக்கு அதிகாரம் தருவது சட்டம். சட்டத்தை அமைத்து கொள்வது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள் அமைந்த அவை. அந்த அந்த அரசுகள் தன்னாட்சி நிலையில் செயல்படுவது ஒன்றுதான் மேலும் மேலும் குடிமக்கள் பல நன்மைகளை அடைவதற்கு வசதியாக இருக்கும். மாநில சுயாட்சி ஒன்றுதான் அதற்கு வழி என்கிற இந்த அளவோடு சொல்லி பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் "வரியைக் குறைத்து வசதியைப் பெருக்கு வோம்" என்று சொல்லி வந்தார்கள். அவர்கள் கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டதா என்றால் இல்லவே இல்லை. மொத்த வருமானம் கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய்க்கு அதாவது 288 கோடி ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது என்றால் அந்த அளவுக்கு வரிகள் மிக அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கின்றன. வரிகள் உயர்ந்திருக்கின்ற அளவுக்கு வசதிகள் பெருக்கப்பட்டிருக் கின்றனவா என்றால் இல்லை. இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 8 கோடி ரூபாய் துண்டு விழும் என்பதாக நிதிநிலை அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். இதில் சாதாரண மக்களுடைய வாழ்க்கைத் தரம் பாதிக்கபடக் கூடிய அளவுக்கு வரி போடப்படவில்லை என்று சொன்னார்கள். எப்படிக் கூறினாலும் மக்கள் தலையில் தான் இந்த வரிப்பளு விழப்போகிறது. தனிப் பட்ட நபரிடம் இருந்து எதுவும் வருவதில்லை.

குறிப்பாக, இன்றைய தினம் ரேடியோ, கெடிகாரம், சிமென்ட், மின்சாரப்பொருள் முதலியவற்றின் மீது வரி விதித்திருக்கிறார்கள். இது பொதுமக்களைத்தான் பாதிக்கப்போகிறது. பசுமைப் புரட்சி என்று சொல்கிறார்கள். அந்த பசுமைப் புரட்சிக்கு அடிப்படைக் காரணமாக இருப்பதே மின்சார மோட்டார், பம்புகள், பல்புகள் முதலியவைதான். இவை சாதாரண விவசாயிகளைப் பாதிக்கக் கூடிய நிலையில்தான் இருக்கின்றன. மத்திய சர்க்கார் விதிக்கக்கூடிய வரிகளும் இதில் சேர்ந்தால் கேட்கவேண்டிய அவசியம் இல்லை. தஞ்சை மாவட்டம் போன்று வடாற்காடு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் உணவு உற்பத்தியில் தலை சிறந்து நிற்கிறது என்றால் அதற்குக் காரணம் மின்சார மோட்டார்கள் தான். இப்போது அதிகப்படுத்துகிற வரி அந்த

விவசாயிகளை எல்லாம் பெரிதும் பாதிக்கும். இதனால் பசுமைப் புரட்சி தடைப்படாதா என்பதை யோசிக்க வேண்டுமென்று இங்கே கூறுகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் டிராக்டர் சாதனங்களின் மீதான வரியையும் 7-ல் இருந்து 9-ஆக உயர்த்தியிருக்கிறார்கள். இதுவும் விவசாயிகளைத்தான் பெரிதும் பாதிக்கும். இவற்றை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தன்னாட்சி உரிமைபற்றி நிதிநிலை அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். தன்னாட்சி உரிமை என்கிற குரல் திராவிட நாட்டுப் பிரிவினை கோரிக்கையின் மறு ஒலியோ என்று தோன்றுகிறது. ஒரே மொழி பேசுகின்ற மாநிலத்திலேயே இன்றைக்கு தங்கள் தங்கள் பகுதி தனியாகவேண்டுமென்ற தன்னாட்சிக் கோரிக்கையும் அதன்மீது கலவரம், புரட்சி எல்லாம் நடந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறோம். நாளை நம்முடைய மாநிலத்திலேயே பாண்டியநாடு தனித்துப்போகவேண்டுமென்கிற கிளர்ச்சி எழுந்தால் ஆச்சரியப் படுவதற்கில்லை. இப்படி தன்னாட்சிக்கோரிக்கை திராவிட நாட்டுக் கோரிக்கையாக இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்த ஆசைப் படுகிறேன். இது போகப்போக பல சிக்கல்களில் கொண்டு போய்விடும்.

ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் தொழில்கொள்கை சம்பந்தமாக— தட்டினால் தங்கம், வெட்டினால் வெள்ளி, இடித்தால் இரும்பு என்றெல்லாம் உற்சாகமாகப் பேசிவந்தார்கள். ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. தட்டித் தங்கம் எங்கே எடுத்தார்கள், வெட்டி வெள்ளியை எங்கே எடுத்தார்கள் என்பதாக எல்லாம் கேள்வி எழும்புகிறது.

இன்றைக்கு என்.ஜி.ஓ.-க்களுக்கு எல்லாம் 10 ரூபாய் நிவாரணம் அளித்திருப்பதாகக் கூறுகிறார்கள். யானைப் பசிக்கு சோளப் பொறி போட்ட மாதிரியாகத்தான் இது இருக்கிறது. விலைவாசிகள் ஒரேயடியாக உயர்ந்துகொண்டே போகின்றன. 1967-இல் அறுநூறு சொச்சம் இருந்தது 68-இல் 701 ஆயிற்று. 69-இல் 717 ஆயிற்று. 70 பிப்ரவரியில் 774-ஆக உயர்ந்தது. 70 மார்ச்சில் 804 புள்ளியாக—ஒரு மாதத்தில் 30 புள்ளி உயர்ந்துவிட்டது. இந்த நிலையில் ஏழைத் தொழிலாளர்கள், சர்க்கார் சிப்பந்திகள் இவர்களுடைய நிலை எல்லாம் என்ன ஆகும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

விவசாய மக்கள் அதிகமாக உள்ள கிராமங்களுக்கு சமூக நலத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை மிகமிகக் குறைவு என்பதை சுட்டி காட்ட விரும்புகிறேன். எல்லா ஆண்டுகளையும் விட இந்த ஆண்டு மிக குறைவு. நகர்ப்புறத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு கூவம் நதிச்சீர்திருத்தச் திட்டம், காவேரி நீர்த்திட்டம் என்றெல்லாம் செய்தால் போதாது.



விவசாயிகள் நல்லமுறையிலே வளம்பெற, அவர்களுக்கு நல்ல முறையிலே உரம் தர முன்பு இருந்த காங்கிரஸ் ஆட்சி யூரியா போன்ற ரசாயன உரங்களுக்கு வழங்கிய பங்கீட்டு மானியம் போன்ற இவை இல்லாமல் இப்பொழுது விவசாயிகள் உரங்களை அதிக விலை கொடுத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். 100 கிலோ கொண்ட மூட்டை என்பது இல்லாமல் இப்பொழுது 40 கிலோ அல்லது 50 கிலோ என்ற அளவுக்கு இருப்பதை முழு விலை கொடுத்து வாங்கக் கூடிய பரிதாபமான நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. எதிர் வரிசையிலே இப்போது இருக்கின்ற முதலமைச்சர் அவர்கள் முன்பு எதிர்க் கட்சியில் இருந்தபொழுது பம்பாய் மாநிலத்தை இந்த மாநிலத்தோடு ஒப்பிட்டுக் காட்டி இந்த மாநிலத்திலே வேலை வாய்ப்பு குறைவாக இருக்கிறது என்று பேசியிருக்கிறார்கள். பம்பாய் மாநிலத்தில் 43% சம்பாதிக்கின்றவர்களின் எண்ணிக்கை ஆனால் தமிழ்நாட்டிலே 31% தான் இருக்கிறது. ஆனால் அவர்களால் பேணிக் காக்கப்படுகிறவர்கள் 69% பேர் இருக்கிறார்கள் என்று எல்லாம் சுட்டிக்காட்டித் தொழிற்சாலைகளை ஏற்படுத்தவேண்டுமென்று அன்றைக்குக் கூறினார்கள். ஆனால் இன்றைக்கு தொழில் வாய்ப்புக்கு என்ன வழி என்று பார்த்தால் இதிலே இல்லவே இல்லை. கிராமப் புறங்களிலே உள்ளவர்கள் வேலை வாய்ப்பில்லாமல் அதிக சதவீதமுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு வேறு மாற்று வழிபற்றி ஒன்றுமே இதிலே சொல்லப்படவில்லை. விவசாய உற்பத்திப் பொருள்களைக் கொண்டு வாழ விவசாயிகளுக்கு உதவிசெய்யகூடிய முறையிலே இந்த அரசு எந்தவிதமான திட்டம் இதிலே கூறவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

நண். பகல் 12-00

அடுத்தப்படியாக, கல்வி மானியத்தின்கீழ் சமூக கல்வி என்பதின்கீழ் கிராமப்புறங்களுக்கு ஒதுக்கியிருக்கக்கூடிய தொகை போதவே போதாது. மாத்தடியிலே பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள் மிகக் கேவலமான முறையிலே இருப்பதைத் தவிர்க்க மேலும் பண ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு பொதுவாக இந்த அறிக்கையிலே கிராமப்புறங்களுக்குப் போதுமான அளவு பணம் ஒதுக்காததையும் திட்டங்களை வகுக்காததையும் வன்மையாகக் கண்டித்து என்னுடைய உரையை முடித்துகொள்கிறேன். வணக்கம்.

* திரு. கு. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்தச்சபையில் சமர்ப்பித்திருக்கும் 1970-71-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை நான் மனமார வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையால் ஒரு சாராருக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டு விட்டது. ஆம் குறைகூறித் திரிய ஏதேனும் அகப்படாதா என்று அலையும் காங்கிரஸ்காரர்களுக்கு இனி வேலை இல்லைதான். மாநில அரசிடமுள்ள அவலையும் தன்னிடமுள்ள உமியையும் கலந்து தின்னும் போக்கு மத்திய

[திரு. கு. கிருஷ்ணமூர்த்தி] [1970 மார்ச் 2

அரசிற்கு இருக்கும்வரையில் 15 பக்கங்களுக்கு நிதி நிலை அறிக்கையில் மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருப்பது போதவே போதாது; 48 பக்கங்களையுமே அதற்கு ஒதுக்கியிருக்கலாம்.

அரசியல் சட்டத்தில் கொடுத்த வரிகளை விதிக்கும் உரிமை அனைத்தையும் மத்திய அரசு வைத்துக் கொள்ளும் வரை நம் குற்றச்சாட்டுகளிலிருந்து மத்திய அரசு தப்ப முடியாது. நம் உரிமைக் குரல் ஓயாது. எதிலுமே முன்னோடியாக இருக்கும் நம் தமிழக அரசு, மத்திய-மாநில அரசுகளின் உறவு குறித்து மறு பரிசீலனை செய்ய, அரசியல் விற்பனர்களைக்கொண்ட குழு அமைத்தது அரசியல் தீர்க்க தரிசனமாகும். காலப் போக்கில், இந்த அணியில் பல மாநிலங்கள் சேருவது உறுதி என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறைந்த நிதி வருவாய் இருந்தும், மத்திய நிதிக் குழுவிடம் நம் குரல் செவிடன் காதில் ஊதிய சங்கானாலும், மிகுந்த விவேகத்துடனும் அரசியல் யூகத்துடனும் சிக்கனமாகவும் நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையினைத் தயாரித்ததற்கு எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

சேலம் உருக்காலைக்கு முன்னோடியாக கஞ்சமலைப் பகுதியில் சுரங்கம் வெட்டுதல், அரக்கோணத்தில் வார்ப்பட தொழிற்சாலை, ஆலங்குளத்தில் சிமிட்டி, காஞ்சியில் நவீனப் பட்டு நெசவு, தூத்துக்குடியில் உர உற்பத்தி மற்றும் ரப்பர் சரடு தொழிற்சாலை விஞ்ஞானத்திற்கு வேண்டிய மூலப் பொருள் கலவைத் தொழிற்கூடங்கள் நிறுவுவது இவையனைத்தும் நம் கைகள் எப்படித்தான் கட்டப்பட்டாலும், தமிழகத்தின் தொழிற் முன்னேற்றத்திற்கு இந்த அரசு முடிந்ததனைத்தும் செய்யும் என்பதற்கு சான்றுகளாகும். காங்கிரஸின் அலங்கோல ஆட்சியின் கொள்கை விளைவால் மூடிக்கிடந்த 27 ஆலைகளில் 13 பஞ்சாலைகளைத் திறக்க வழிவகை செய்து, இந்த அரசு தன் மனிதாபிமானத்தைக் காட்டிக் கொண்டது. இலங்கை அகதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்க 10 கோடி ரூபாய் ஒதுக்கியது. அரசு ஊழியர்கள் அனைவருக்கும் சிறப்புப்படி ரூபாய் 10 தருவது, ஆசிரியர்களுக்கு இலவச மருத்துவ உதவி, திருமணக் கடன் வசதி, வீட்டு வாடகைப் படி, கைத்தறிக் கடன் சலுகைகள், ஓய்வு பெற்றவர்களுக்கு ஊதிய உயர்வு, குடிசைகள் சீரமைப்புக்கு ஒரு கோடி, குறைந்த நில உச்ச வரம்பு இவையெல்லாம் இந்த அரசு தமிழகத்திற்குச் சூட்டிய மாலையில் ஒளிவீசும் நல்முத்துக்களாம்.

என் தொகுதியான பழனிப் பகுதியில் தொடக்க சுகாதார நிலையம் அமைக்க முன்வந்ததற்கு என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் ஆய்வில் உள்ள கொடைக்கானல்-பழனியை இணைக்கும் மலைப்பாதைத் திட்டம், மதுரை கோவை மாவட்டங்களின் பொருளாதார உருவத்தை இன்னும் கவர்ச்சியாக்கும் என்பதால் இந்தப் பணியினை துரிதமாக்க வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், பழனிக்கும் பால



1970 மார்ச் 2] [திரு. கு. கிருஷ்ணமூர்த்தி]

சமுத்திரத்திற்கும் குறுக்கே பாலம் அமைத்தல், பாலாறு பொருந்தலாறு திட்டத்தினைச் செயல்படுத்தல் மூலம் என் தொகுதி மக்களின் நீண்டகாலத் தேவைகளைப் பூர்த்திசெய்யும்படி வேண்டுகிறேன்.

தமிழகத்தில் வேலைவாய்ப்புகள் பெருகவேண்டுமானால் மத்திய அரசு, சேலம் உருக்காலை, சேதுசமுத்திரம் திட்டங்கள் அமல் செய்யவேண்டும்.

இறுதியாக நில உச்ச வரம்பை 15 ஏக்கர் என திடீரென சாமார்த்தியமாகச் செய்தது, புரட்சிகரமான திட்டங்கள் கொண்டு வருவதால் யாருக்கும் நாங்கள் சளைத்தவர்கள் அல்ல என்று தெளிவாக்கி காட்டியதோடு, இந்த அரசு ஏழை உழவர்கள்களின் அரசு என்று நிரூபித்துவிட்டதற்காக எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைத்தவிர அரிசன நலனுக்காக இந்த ஆண்டு 5.19 இலட்சம் ரூபாய் ஒதுக்கியதற்காக நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, சபைமுன் வைக்கப் பட்டிருக்கும் 1970-71 வது வருடத்துக்கான நிதி நிலை அறிக்கையின் மீது எனது சட்டசபைக் கட்சித் தலைவர் தோழர் மாரிமுத்து நேற்றுப் பேசியபொழுது "வளர்ந்துவரும் மக்கள் தொகையயும் கடந்த வருட நிதி நிலை அறிக்கையையும் அளவு கோலாகக் கொண்டு நாம் இன்றுள்ள நிதி நிலை அறிக்கையை அளந்து பார்த்தால் இதை முற்போக்கானதென்றோ, நிலைமைகளைச் சாமாளிப்பதற்கு போதுமானதென்றோ கருதமுடியவில்லை" என்று கூறினார். அதே கருத்தைக் கொண்ட நான் இதன் உள்ளே புகுந்து இந்தப் பிரச்சினைகளை மேலும் விளக்க விரும்பவில்லை. இந்த நிதி நிலை அறிக்கையில் விசேஷமாக அறிவிக்கப்பட்டிருக்கும் அந்த அறிவிப்பைப்பற்றி மட்டும் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த அறிவிப்புப் பல்வேறு விதமான இடர்பாடான உணர்வுகளையெல்லாம் கடந்து அரசியல் கட்சிகளிடையே இருக்கிற உறவில் முறிவு ஏற்படுமோ என்ற நிலைமையிலே இருந்தாலும்கூட அதையும்கூட பொருட்படுத்தாமல் மிகத் துணிவோடு நல்ல முறையிலே அந்த அறிவிப்பு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அறிவிப்பு மாநிலத்திலே இருக்கிற மக்களிடையே ஒரு பரபரப்பையும் எதிர்ப்பு, ஆதரவு நிலைமைகளையும் உண்டாக்கியிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, தேசத்தின் மற்றப் பகுதிகளிலே இருக்கின்ற மக்களும் சரி, அரசாட்சி செய்கிறவர்களும் சரி, அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அதைப்பற்றிச் சிந்திக்கின்ற நிலைமையையும் உண்டாக்கியிருக்கிறது. இந்த அறிவிப்பிலே இந்த மாநிலத்திலே இருக்கிற ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்துச் சமூக நீதியை உண்டாக்குவதற்கான மனோபாவம் பிரதிபலிக்கிறது. ஆனால் இந்த அறிவிப்பு

[திரு. எம். சுரேந்திரன்] [1970 மார்ச் 2

எப்பொழுது அமலுக்கு கொண்டுவரப்படும், எந்த முறையிலே சட்டம் செய்யப்படும் என்பதைப்பற்றியெல்லாம் குறிப்பிடவில்லை. அது இல்லாத காரணத்தினாலே முன்பு இந்தச் சபைக்கும் அரசுக்கும் ஏற்பட்ட அனுபவத்தை வைத்துக்கொண்டு பார்க்கிறபோது நில உச்ச வரம்பிலே குறைவு பண்ணிய நேரத்திலே அந்த நில உச்ச வரம்பினால் பாதிக்கப்படுகிறவர்கள் பல்வேறு முறைகளிலே அதைப்பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். குழப்பமடைந்திருக்கிறார்கள். ஆத்திரப்பட்டு இருக்கிறார்கள். பழைய பத்திரங்கள் கிடைக்கவில்லை. அதிக விலை கொடுத்து வாங்கிப் பதிவு செய்து கொண்டு இருக்கிறார்கள் என்று தகவல்கள் வருகின்றன. எந்த நேரத்திலேயும் பழமைகளை மாற்றிப் புதுமைகளை தோற்றுவிக்கும்பொழுது இதுபோன்ற நிலைமைகள் ஏற்படத்தான் செய்யும் என்பதற்கு சான்றுகள் இருக்கின்றன. காலாகாலத்திலே இவற்றைச் செய்யாத காரணத்தால் அமைதிக்குப் பங்கம் ஏற்படுவது சண்டைச் சச்சரவுகள். கொலை நடப்பது ரத்தக்களறி ஏற்படுத்தல் போன்ற காரியங்கள் நடப்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஆகவே இது காலத்திலே உணர்ந்து செய்யப்பட்ட காரியம் என்பதிலே சந்தேகம் இல்லை. இந்தக் காரியத்தை இந்த மாநிலத்திலும் சரி, நாட்டிலும் சரி, முற்போக்கான எண்ணம் கொண்டவர்கள் அவ்வளவு பேரும் ஒன்றாக நின்று பாராட்டி வரவேற்கிறார்கள் என்பதை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இது காலநிலைக்கு ஏற்ற ஒரு அறிவிப்பே தவிர, விசேஷ அறிவிப்பு என்று சொல்ல முடியாது. இதைவிட விசேஷமான அறிவிப்பு இதற்கு முன்னால் இந்த மன்றத்திலே அறிவிக்கப்பட்டிருக்கிறது இந்த ராஜ்யத்திலும் சரி, மற்ற ராஜ்யங்களிலும் சரி, சிந்திக்காத பிரச்சினையான படியரிசித் திட்டம் இந்த மன்றத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது உலகமே வியக்கத்தக்க ஒன்றாக இருந்தது. அந்தப் படியரிசித் திட்டம் அடுத்த மாவட்டங்களுக்குக்கொண்டு செய்ய முடியாமல் சிறுகச் சிறுகச் குறைத்து தேய்ந்துபோன நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படி பரபரப்பு அடையக்கூடிய திட்டத்தைக் கொண்டுவந்து அதை விரிவுபடுத்த முடியாது சீரழிந்துபோன நிலையைப் பார்க்கும்போது, பரபரப்பு அளிக்கக்கூடிய அறிவிப்புகள் மட்டும் போதாது, சரியாக அமல் நடத்துவதற்கான அஸ்திவாரங்களும், சாதனங்களும் வைத்துக் கொண்டுதான் செய்யவேண்டுமென்ற அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. இப்போது படியரிசித் திட்டம் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு அளிப்பது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வருமானத்தின் வரம்பு 200 ரூபாய் என்று வைத்திருப்பது இன்றைய நிலையில் மிகக் குறைவானவர்களுக்கு மட்டுந்தான் பயன்பெறும் நிலை இருக்கிறது. வருமான அடிப்படையை உயர்த்த வேண்டும், இது மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும். இந்தத் திட்டத்தை மற்ற ராஜ்யங்கள் எல்லாம் கூட கொண்டுவர வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தை உண்டாக்கக் கூடிய வகையில் காரியமாற்ற வேண்டும்.



1970 மார்ச் 2] [திரு. எம். சுரேந்திரன்]

இன்று நிலத்தில் விவசாயம் செய்யக்கூடியவர்களை எடுத்துக் கொண்டால் பலவிதமானவர்கள் இருக்கிறார்கள். கூலிக்கு விவசாயம் செய்யக்கூடிய நிலம் இல்லாத விவசாயிகள், குத்தகை விவசாயிகள், வார விவசாயிகள் என்று பல்வேறு விதமாக இருக்கிறார்கள். குத்தகைக்கு நிலத்தை விடுகின்ற சிலர் தொடர்ந்து குத்தகைக்குக் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள், அப்படிப்பட்டவர்களுக்கு அந்த நிலம் தேவையில்லாத காரணத்தால்தான், நேரடியாக விவசாயம் செய்ய முடியாத காரணத்தால்தான் அம்மாதிரிக் குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட குத்தகை நிலங்களை இவர்களுக்கே அளித்துவிடுவதற்கான வழிமுறைகள் வருங்காலச் சட்டத்தில் இருக்க வேண்டும். இந்த மாதிரிச் சட்டத்தைக் கொண்டுவரும்போது முன் தேதியிட்டு உருவாக்க வேண்டுமே தவிர, சட்டம் கொண்டு வருகின்ற நாளில் இருந்து அமலாகும் என்ற நிலையில் இருக்கக் கூடாது.

பல விவசாயிகள் பிறர் நிலத்தில் வீடு கட்டி குடியிருந்து கொண்டு வருகிறார்கள். அந்த நிலம் அவர்களுக்கே உரிய ஒன்றாகச் செய்வதற்கான ஏற்பாடும் சட்டத்திலே இருக்க வேண்டும். கிராமங்களிலே நில அமைப்பிலே இருக்கிற நிலைமைகள் பழமையான காலத்திலே உருவாக்கப்பட்டவை. அதை மாற்றியமைக்காத வரையில் இம்மாதிரி முற்போக்கான திட்டங்களால் பலன் ஏற்படுமா என்பது சந்தேகம். இப்போது இந்தக் காரியத்தை எல்லாம் எதிர்ப்பவர்களுக்கு நான் ஒரு கருத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நிலத்திற்கு மட்டுந்தான் உச்ச வரம்பு நிர்ணயிக்க வேண்டுமா, மற்றவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாமா, நாங்கள் மட்டுந்தான் இளிச்சவாயர்களா, கையாலாகாதவர்களா என்று கேட்கிறார்கள். இதிலே சமூக நீதியை உண்டாக்க வேண்டுமென்பதுதான் நோக்கம். கீழே இருப்பவர்கள் மேலே உயர வேண்டும். அதற்காக மற்றவர்களுடைய வசதியைக் குறைப்பது நோக்கமல்ல. சமூக நீதியை உண்டாக்குவதுதான் நோக்கம். இதை எதிர்ப்பவர்கள் சமூகத்தில் எஜமானர்கள் நிலையில் இருப்பவர்கள்தான்; ஆதிக்கம் செய்கிறவர்கள்தான். அவர்கள் எதிர்க்கக் காரணம் பொருளாதார நிலையைக் குறைக்கிறோம் என்பதால் அல்ல, எஜமானத் தன்மை மாறுகிறதே, ஆதிக்கத் தன்மை மாறுகிறதே என்பதுதான் காரணம். பரம்பரை பரம்பரையாக இருந்து வந்தநிலை மாறும் போது எதிர்ப்புத் தோன்றுவது இயல்பு.

பாராளுமன்றத்தில் பாங்குகளை எடுத்துக் கொள்ளும் சட்டத்தை நிறைவேற்றிய பிறகு அவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று அதிகமான நஷ்ட ஈட்டைப் பெறும்படியான நிலைமையை உண்டாக்கினார்கள். இந்த காரியத்திலும் அதுபோன்ற நிலைமைகள் உண்டாகக் கூடும். இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் ஆங்காங்கு மிச்சமாகக் கிடைக்க கூடிய நிலம் இரண்டு லட்சம் ஏக்கர் அளவுக்குக் கிடைக்கும் என்று கூறுகிறார்கள். அந்த நிலத்தை

விநியோகம் செய்வதிலே சரியான முறையைக் கையாள வேண்டும். சரியான முறையைக் கையாளாவிட்டால் குழப்பமும், கஷ்ட நஷ்டமும் உண்டாகும். இந்தக் காரியத்தைச் செய்யும்போது துரிதமாகவும் நியாயமாகவும் நடந்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

நகரத்தை எடுத்துக் கொண்டால் பல பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். சம்பத்திய பத்திரிக்கைக் குறிப்பின்படி சென்னை நகரத்தில் கூட 20 சதவிகிதம் பேர்களுக்கு வீடு இல்லாத நிலை இருக்கிறது என்ற விவரம் சொல்லப்பட்டிருக்கிறது. கிராமங்களில் எடுத்துக்கொண்டாலும், நகரங்களில் எடுத்துக்கொண்டாலும் வீடு இல்லாதவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. இதைத் தீர்க்காமல் விட்டுவிட முடியாது. சேரிகளை ஒழிப்பதற்காக ஏழு வருஷம் என்று ஒரு காலத்தை நிர்ணயித்திருக்கிறார்கள். இது ஒரு நல்ல அம்சம். ஒவ்வொரு காரியத்தைச் செய்கிறபோதும் இந்த அரசு ஒரு கால்வரையறைக்குள் முடிப்பது என்ற வைராக்கியத்தை ஏற்றுக் கொண்டால் சிறப்பாக இருக்கும்; பாராட்டக் கூடியதாக இருக்கும். நகரத்திலே வீடுகளை அதிகமாக வைத்திருப்பவர்கள் தாங்கள் குடியிருப்பதற்கான வீட்டை மட்டும் வைத்துக் கொண்டு மற்ற வீடுகளை நியாயமான வாடகைக்கு கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். தங்களுடைய தேவைக்கு அதிகமாக வீடு வைத்துக் கொண்டிருப்பவர்கள் நஷ்ட ஈடு பெற்றுக் கொண்டு அதை அளித்துவிட வேண்டும். அப்படித் தயாராகாவிட்டால் வீடு எங்கே இருந்தாலும், நிலம் மிச்சமாக எங்கே இருந்தாலும் ஜனங்கள் தாங்களே பயன்படுத்திக் கொள்ளத் தயாராகிவிடுவார்கள் என்ற நிலைமையை உணரவேண்டும். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறவர்கள், சட்டபூர்வமாக இந்தக் காரியங்கள் நடைபெறுகிறதே என்று மகிழ்ச்சி அடைய வேண்டுமே தவிர, அதற்கு எதிர்ப்புக் காட்டி சிக்கல்களை ஏற்படுத்துவதோ, குழப்பத்தை ஏற்படுத்துவதோ சரியல்ல. மற்றவர்கள் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கமாட்டார்கள். அதன் விளைவாக ஏற்படுகின்ற நிலைமைகள் இப்போதுள்ள நிலையை விட அதிக வேதனை அளிக்கத்தக்கதாக இருக்கும்.

இந்தச் சட்டத்தைக் கொண்டுவரும்போது எல்லா அம்சங்களையும் சேர்த்து முழுச் சட்டமாகக் கொண்டு வர வேண்டுமே தவிர, உச்சவரம்பைக் குறைத்து விட்டோம் என்று மட்டும் செய்தால் போதாது. பழைய உச்சவரம்புச் சட்டத்தில் விடுபட்டதையும் இதிலே சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்படி ஒரு முழுமையான சட்டமாக இப்போது தயாரிக்க வேண்டும். கிடைக்கின்ற நிலத்தை மற்றவர்களுக்கு வழங்கும்போது அரிசனங்களுக்கு முதலிடம் அளிக்க வேண்டும். அரிசனங்களுக்கு இப்போது பல சலுகைகள் காட்டப்படுகிறது என்றாலும் கூட, அவர்கள் சமுதாயத்தில் மதிக்கப்படுகின்றவர்களாக ஆகவில்லை. அதற்குக் காரணம் பொருளாதாரத்திலே பலகீனமாக





இருப்பதுதான். அவர்களைப் பொருளாதாரத்தில் பலப்படுத்தாத வரை எத்தனை சலுகைகளை அளித்தாலும் போதாது, கல்விக்காக எவ்வளவு தூரம் உதவி செய்தாலும் போதாது. பொருளாதாரத்தில் அவர்களைப் பலப்படுத்தும் வகையில் நிலத்தை வழங்கும்போது முதலில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற முறையை ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்போது கிடைக்க இருக்கின்ற இரண்டு லட்சம் ஏக்கர் நிலத்துடன் அதிக நிலத்தை எடுத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. காட்டு இலாகாவின் கையிலே ஏராளமான நிலம் உபயோகம் இல்லாமல் இருக்கிறது. அவற்றை விவசாயத்திற்கு அளிக்க வேண்டுமென்பதிலே எவ்விதத் தடையும் இருக்க நியாயமில்லை.

ஆனால், பழைய காலத்திலிருந்து இருக்கிற சட்டங்கள், இருக்கிற விதிமுறைகள் அதற்குத் தடையாக இருந்துகொண்டு இருக்கின்றன. வளர்ந்திருக்கிற காடுகளைப்பற்றிச் சொல்லவில்லை. காடுகளாக இல்லாத, மரங்கள் இல்லாத நிலங்கள் காடுகள் என்ற பெயரில் பல உள்ளன. ஆகவே, இருக்கிற அந்த சட்டதிட்டங்களை ஆராய்ந்து அவைகளை மாற்றியமைக்க, குறைந்தபட்சம் அதுபற்றி ஆராய ஒரு கமிட்டியைப் போட்டு அப்படிப்பட்ட நிலங்கள் எவ்வளவு ஏக்கர் இருக்கின்றன என்று பார்த்து அவைகளை எடுத்து அவற்றை விவசாயத்தின் கீழ் கொண்டுவருவதில் ஒரு தவறும் இல்லை. நம் மாநிலத்தில் மட்டுமல்ல, நம் தேசத்தில் காட்டு இலாகா நிலம் எவ்வளவு சதவிகிதம் இருக்கவேண்டும் என்ற ஒரு கொள்கையை வைத்துக்கொண்டிருக்கின்றோம். காடுகள் இவ்வளவு சதவிகிதம் இருக்க வேண்டுமென்று ஒரு விதிமுறையை வைத்துக்கொண்டிருக்கிறோம். காடு என்று பெரிய பெரிய மரங்கள் இருந்தால்தான் அவை காடாக ஆக முடியும். ஆனால் அதில்லாமல் நிலத்தின் அளவை மட்டும் வைத்துக்கொண்டு இவ்வளவு சதவிகிதம் காடுகள் வைத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்வதில் எவ்வித பலனும் இல்லை. ஆகவே இது குறித்து ஆராய்ந்து ஒரு முடிவு எடுத்தால் நம் தேசத்திலுள்ள நிலம் இல்லாத விவசாயிகளில் பெரும் பகுதியினருக்கு குறிப்பாக ஹரிஜனங்களுக்கும், பிற்பட்ட வகுப்பு மக்களுக்கும் நாம் அதிக உதவி செய்யமுடியும். அதன்மூலம் அவர்களின் பொருளாதாரத்தில் ஒரு பலத்தை ஏற்படுத்த முடியும். அதன் மூலம் அவர்களிடையே உற்சாகத்தையும், ஊக்கத்தையும் ஊட்டி உணவு உற்பத்தியையும் பெருக்க முடியும். இன்னொரு வாதம் எதிர்த்தரப்பிலிருந்து கிளப்பப்பட்டது. அதிக நிலம் இல்லாவிட்டால் எப்படி டிராக்டர்களை வைத்து வேலை செய்வது? எப்படி இயந்திரங்களைக் கொண்டு வேலை செய்வது? என்பதாகும். டிராக்டர்களை வைத்துத்தான், இயந்திரங்களை வைத்துத்தான் பயிரிடவேண்டுமென்ற அவசியமில்லை. நம் நாட்டில் நிலம் இல்லாதவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அவர்களை முழுசாகப் பயன்படுத்தினால் இயந்திரங்களின் உதவி இல்லாமலேயே நாம் அதிக உற்பத்தியைக் காண முடியும்.

அடுத்து, அரை ஏக்கர், முக்கால் ஏக்கர் என்று துண்டு துண்டுகளாக இருக்கக்கூடிய நிலங்களை ஒன்று சேர்ப்பதற்கான வழியையும் இந்தச் சட்டத்தின் மூலம் ஏற்படுத்த வேண்டும். புன்செய் நிலங்களையும் விட்டுவிடாமல் அவற்றையும் அபிவிருத்தி செய்து அதிலும் நல்ல வேளாண்மை காணக் கூடிய முயற்சியையும் மேற்கொள்ளவேண்டும். இவற்றை நான் கூறக் காரணம், வருங்காலத்தில் சட்டம் செய்யும்போது இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு செய்யவேண்டும், அப்படிச் செய்யப்படும் என்று நம்பி இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்றுப் பாராட்டுகிறேன். ராஜ்யத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளை குறைப்பதற்கான புதுப் புது அம்சங்களை, புரட்சிகரமான உணர்வுகளைக் கொண்ட நம் நிதி அமைச்சர் அவர்கள் வருங்காலத்தில் கொண்டுவருவார்கள் என்று நம்பி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. மு. இரத்தினசபாபதி:** தலைவர் அவர்களே, 1970–71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை ஆதரித்துப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முழுக்க முழுக்க கிராமங்கள் அடங்கிய பகுதியின் பிரதிநிதி என்ற முறையில் வந்திருக்கக்கூடிய நான் கிராம நலத்திற்காகவும், கிராம மக்களுக்காகவும் இந்தத் திட்டத்தில் செய்திருக்கக்கூடிய பணிகளைப் பற்றியும் அதன் மூலம் கிராமங்களுக்கு என்னென்ன நன்மைகள் கிடைக்க இருக்கின்றன என்பதைப் பற்றியும் ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கிராமங்களைப் பொறுத்தவரையில், கிராமங்களிலுள்ள முக்கிய தொழிலான விவசாயத்தை எடுத்துக் கொண்டால் அதை வளர்ப்பதற்கும், கிராம மக்களுக்கு வேண்டிய சாலை வசதிகள், குடிதண்ணீர் வசதிகள், மின்சார வசதிகள், கல்வி வசதிகள், வேலை வாய்ப்பு வசதிகள் போன்றவை குறித்தும் இத்திட்டத்தில் கூறியிருப்பதைப் பற்றி நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

விவசாயத் துறையை எடுத்துக் கொண்டால் விவசாய வேளாண்மை மும்முரத் திட்டத்தின் கீழ் பயன்தரத்தக்க, நல்ல மகசூலைத் தரக்கூடிய விதைகளை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி அதன் மூலம் உற்பத்திப் பெருக்கை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். இன்று தமிழகம் முழுவதிலும் ஐ.ஆர். 8-ஐப் பயன்படுத்தி நல்ல மகசூலைப் பெற வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இவை தஞ்சாவூரில் மட்டுமல்ல, ஆற்றுப் பாசனம் உள்ள பகுதிகளில் மட்டுமல்ல, வறட்சிமிக்க என் கோவில்பட்டி தாலுகாவில் கூட, குளங்களை நம்பியிருக்கிற இடங்களில் கூட, மானாவாரி பூமிகள் இருக்கக்கூடிய இடங்களில் கூட இந்த ஐ.ஆர். 8 பயிரிடப்பட்டு நல்ல மகசூலைப் பெற்றுத் தந்திருக்கிறது. அங்குள்ள விவசாயிகளும் கணிசமான அளவில் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் நம்மை அறியாமலேயே தமிழ்நாட்டில் மாபெரும் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகோலக் கூடிய வகையில் பருத்தி உற்பத்தியில் மறுமலர்ச்சி கண்டிருக்கிறோம். புது ரகமான





எம்.சி.யு. 5-ஐப் புகுத்தி அதிக மகசூலைப் பெற்றிருக்கிறோம் பருத்தி உற்பத்தியில். அதன் காரணமாக பருத்தி உற்பத்தியை நாம் அதிகரித்திருப்பதோடு, மேல் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யக்கூடிய தரம் உயர்ந்த 13-16, 11-16 இழை பருத்தி பேல்கள் போன்றவற்றை இறக்குமதி செய்யக்கூடியதையும் நிறுத்தி விடக்கூடிய வாய்ப்பையும் ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த பருத்தி விவசாயத்தினால் பருத்தி பயிரிடக்கூடிய விவசாய மக்களுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 50 முதல் ரூ. 60 வரை கூடுதல் கிடைப்பதினால் இதற்கு முன் கிடைத்துவந்த வருமானத்தை விட ஐந்து கோடி ரூபாய் வருமானம் அதிகமாகக் கிடைத்துள்ளது. அதோடு தமிழ் நாட்டில் பருத்தி உற்பத்தி செய்யப்படுவதன் மூலம் 20 கோடி ரூபாய் அளவிற்கான அன்னியச் செலாவணி மிச்சப்படக்கூடிய முறையில் உள்ள வாய்ப்பையும் பெற்றிருக்கிறோம்.

இப்படி புது முயற்சிகளை நாம் மேற்கொள்வதுடன், விவசாய மக்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து தருவதற்காக அவர்கள் அதிகச் சிரமப்படாமல் கடன் வசதிகள் பெற வாய்ப்பளிக்க வேண்டுமென்று 60 நில வள வங்கிகளைக் கூடுதலாகத் திறந்து நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறோம். இதன் மூலம் விவசாயிகளிடையே நல்ல உற்சாகமும், உழைக்கக்கூடிய தன்மையும் ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். 20 அல்லது 25 ஆண்டுகளுக்கு முன்னர் விவசாயத்துறையில் ஈடுபட்டிருந்தவர்கள் விவசாயம் செய்வதினால் என்ன மிச்சத்தைக் காண முடியும் என்ற அலுப்புணர்ச்சியோடு இருந்தார்கள். அப்படி அலட்சிய மனோபாவத்துடன் இருந்தவர்கள் இன்று உற்சாகத்துடன் விவசாயத்தில் ஈடுபட்டு நல்ல உற்பத்தியைப் பெருவதற்கான வழிவகைகளை இந்த மூன்று ஆண்டுகளில் தமிழக அரசு செய்து கொடுத்திருக்கிறது என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கிராமங்களிலுள்ள சாலை வசதிகளைப் பொறுத்தவரையில், கிராமங்களிலுள்ள சாலை வசதிகள் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவும், ஊராட்சிகள் மூலமாகவும் செய்யப்பட்டு வருகின்றன. இதுவரையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு சாலை வசதிகளுக்காக நிதி கொடுப்பதில் உள்ள முறை எப்படியிருந்தது என்றால் மக்கள் தொகை அடிப்படையில் தலைக்கு இருபது காசு என்று மானியம் கொடுத்து, ரோடு வசதிகளைப் பெருக்கிக் கொள்ளுங்கள் என்று கூறிக் கொண்டிருந்தார்கள். அதன் காரணமாக மக்கள் தொகை குறைந்து பரப்பளவு அதிகமாகவுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் பகுதிகளில் சாலைவசதிகளை விஸ்தரிக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இந்த ஆண்டு அந்த முறை மாற்றப்பட்டு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சாலைகளின் நீளம் எவ்வளவு இருக்கிறது என்று பார்த்து அதற்குத் தக்கபடி மானியம் கொடுத்து சாலை வசதிகளைப் பெருக்க வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு சாலை வசதிக்காக 80 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது, இந்த ஆண்டு

[திரு. மு. இரத்தினசபாபதி] [1970 மார்ச் 2

ஒரு கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தப்பட்டு சாலை வசதிகள் மேம்பாட்டிற்கான ஒரு நல்ல திட்டத்தை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். ஆக, சாலை வசதிக்கான நல்ல திட்டத்தைப் புகுத்தியிருப்பதற்காக இந்த நேரத்தில் அரசாங்கத்தைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பி.ப. 12-30 அடுத்து, கிராம மக்களின் குடி நீர் வசதிக்காக தமிழகத்தில் வாட்டர் போர்ட் என்ற அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் நகர்ப்புற மக்களுக்கு மட்டுமல்லாது கிராம மக்களுக்கும் குடி நீர் வசதிகள் செய்து தரப்படவேண்டும் என்ற முறையில் குடி நீர் வசதிகளைப் பெருக்கிக் கொள்ள நல்லதொரு வாய்ப்பை ஏற்படுத்தித்தர ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் அவர்கள் கிராமங்கள் பாதுகாக்கப்பட்ட, குடிநீர் பெறுவதோடு, அவர்களுக்கு வாழ்க்கையிலே ஒரு நல்ல உற்சாகம் ஏற்படத்தக்க அளவிற்கு இந்தத் திட்டம் பயன்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்திற்காக, குடி-நீர் திட்டத்திற்காக 140 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்கது.

அடுத்தபடியாக, கிராமங்களுக்கு மின்வசதி கொடுப்பது என்ற முறையிலே, இந்த 71-ஆம் ஆண்டிற்குள்ளாக தமிழ்நாட்டிலேயிருக்கும் அத்தனை கிராமங்களுக்கும், அது குக்கிராமமாக இருந்தாலும் சரி, பெரிய கிராமமாக இருந்தாலும் சரி, அவைகளுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்தத் திட்டத்தைப் புகுத்தி, இந்த ஆண்டு நல்ல முறையில் விஸ்தரிக்க வேண்டுமென்பதற்காக 21 கோடியே 50 லட்சம் ரூபாய் அரசு ஒதுக்கியிருக்கிறது. கிராமங்களுக்கு விஸ்தரிக்க கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை 15 கோடியே 50 லட்சம் ரூபாய். ஏறக்குறைய 6 கோடி ரூபாய் அதிகமாக மின்சார விஸ்தரிப்பிற்காக ஒதுக்கி, கிராம மக்கள் அதிக காலமாக விரும்பி ஆசைப்பட்டுக் கொண்டிருக்கும் ஆசையை குறுகிய காலத்தில் நிறைவேற்றத்தான் தமிழகத்திலே இரண்டாண்டுகளுக்குள்ளே எந்தக் கிராமத்திலும் மின்சார வசதி இல்லை என்ற நிலைமை ஏற்படாதபடி, நல்ல முறையிலே இந்த அரசு செயல்பட்டுக்கொண்டு வருகிறது என்பதை நான் நினைவுபடுத்திக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கல்வி வசதியைப் பொறுத்தவரையில், கிராமங்களில், குறிப்பாக ஆரம்பக் கல்விதான் மிகவும் முக்கியமாகயிருந்தது. அந்த முறையில், இந்த ஆண்டும் 6 வயது முதல் 11 வயதுவரையுள்ள குழந்தைகளுக்கு நல்ல முறையில் கல்வி போதிக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த ஆண்டு 2,720 ஆசிரியர்களையும் நியமித்துக்கொள்ள வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளது. மொத்தமாக இந்த மாநிலத்தை எடுத்துக்கொண்டால், இந்த ஆண்டு கல்விக்காக 66 கோடியே 83 லட்சம் ரூபாய் ஒதுக்கி கிராம மக்களுக்கு வசதி செய்திருப்பதைப் பாராட்டுகின்றேன்.



1970 மார்ச் 2] [திரு. மு. இரத்தினசபாபதி]

கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பிற்கு நல்ல வசதி செய்து தர வேண்டுமென்ற நோக்கத்தோடு, சமூக நலத் திட்டங்களை ஏற்படுத்தி அதன்மூலம் இந்தக் கிராமங்களிலிருக்கும், ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கும் கிராமங்களில் சாலைகள் அமைத்தல், மகப்பேறு நிலையங்கள் கட்டுதல், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், நீர்வழங்கல் பணியை விரிவுபடுத்துதல் ஆகிய திட்டங்களுக்காக சுமார் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி, அதன் மூலம் நல்ல பலனை எதிர்பார்த்து தமிழக அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

கிராமங்களில் இருக்கும் வேறு தொழில் செய்யக் கூடியவர்கள், முக்கியமாக கைத்தறி நெசவாளர்கள், எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல் அவர்கள் மிகவும் பழங்கால முறையிலேயே தங்கள் தொழிலை நடத்திக் கொண்டிருப்பதால் அவர்களுக்கு பல நேரங்களில் தங்கள் தொழிலில் சிக்கல் ஏற்பட்டு, அதன்மூலம் வருமானம் பாதிக்கப்படுவதினால், அவர்களுக்கு மிகவும் தரமுள்ள துணிகளை உற்பத்தி செய்ய நல்ல முற்போக்கான முறையிலே செய்ய பல இடங்களிலே வசதி செய்யப்பட்டிருக்கிறது. மேலும் பின்தங்கிய பகுதிகளில் கைத்தறி உற்பத்தி செய்பவர்களுக்கு, கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி நடைபெறும்பொழுது மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் சம்பளம் கொடுத்துப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 2,25,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதனால் அந்தப் பகுதியிலே உள்ள நெசவுத் தொழிலாளர்களுக்கு நல்லதொரு பயிற்சியைக் கொடுத்து நல்ல தரமான உற்பத்தி செய்ய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

இப்படிப் பல துறைகளிலேயும் கிராமங்களுக்குப் பலப் பல வசதிகளைச் செய்துதர முன்வந்திருக்கும் இந்த அரசைப் பாராட்டுகிறேன். என்னுடைய தொகுதியான விளாத்திகுளம் பகுதியிலே மிக முக்கியமான திட்டமான வைப்பாற்றின் குறுக்கே ஆற்றங்கரை என்ற கிராமத்தின் பக்கல் அணைகட்ட திட்டத்தில் சேர்த்திருக்கின்றார்கள். அதற்காக இந்த அரசைப் பாராட்டுவதுடன், இந்தத் திட்டத்தைக் கூடிய சீக்கிரம் எவ்வளவு வேகமாகச் செயல்படுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விளாத்திகுளத்தை தனித் தாலூக்காவாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை நெடுநாட்களாக அந்த வட்டார மக்களிடம் இருக்கிறது. அந்தக் கோரிக்கை இப்பொழுதுள்ள அரசின் பரிசீலனையில் இருந்து வரும் கோரிக்கை. அதை நிறைவேற்றி நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து அமர்கிறேன்.

* திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : தலைவரவர்களே, நிதியமைச்சரவர்களாலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த நிதிநிலை அறிக்கையை நன்றாக அலசிப்பார்த்தால் கிராம மக்களினுடைய நிதிநிலைமை கூடுவதாக அல்ல; நிதிநிலை குலைவதாக இருக்கும் என்பது நிச்சயமாக எனக்குத் தெரிகிறது. சாதாரணமாக, இந்த

[திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்] [1970 மார்ச் 2

நிலச் சீர்திருத்தம் என்ற பெயராலே 15 ஏக்கரா அல்ல, ஐந்தோ, இரண்டோ எத்தனை வேண்டுமானாலும் குறையுங்கள். ஆனால் அதனாலே உற்பத்தி பெருகுமா? நீங்கள் நினைக்கும்மாதிரி கீழே யிருக்கும் சாதாரண விவசாயி பயனுறுவானா? என்பதைப்பற்றி நிச்சயமாக ஒரு கருத்தரங்கு வைத்து, நல்ல ஆராய்ச்சியின் மூலமாக முடிவு செய்து அப்புறம் கொண்டுவாருங்கள் என்றுதான் கேட்டுக்கொள்ளுகின்றேன். மேலெழுந்தவாரியாக, மேலே இருப்பவனைக் கீழே இறக்குகிறோம் என்று சொல்வது பொறாமையைத் தூண்டிவிட்டு அதன்மூலம் மக்களின் ஆதரவைப் பெறுவது மிகவும் எளிது. "அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத் தீயுழி உய்த்து விடும்" என்று வள்ளுவப்பெருமான் கூறியிருக்கிறார்கள் பொறாமையைக் கிளப்பிவிட்டால், நாட்டிலுள்ள செல்வமெல்லாம் நாசமாகிவிடும். எப்படியானாலும், நாங்கள் சொல்வதிலே உண்மை இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றிச் சிந்திக்க வாய்ப்பு கொடுக்க வேண்டும். நீங்கள் குறைப்பதைப்பற்றிக் கவலையில்லை. ஏன், கேரளாவிலே ஏழரை ஏக்கர் என்றிருக்கிறது. இங்கு மூன்றே முக்கால் என்று குறைத்தாலும் தவறு இல்லை. ஆனால் அதனால் உற்பத்தி பெருக வாய்ப்பு இருக்குமா என்று பார்க்க வேண்டும். இடதுசாரி நண்பர்கள் சொல்கிறார்கள், எவன் உழவில்லையோ, இன்னொருவருக்குக் குத்தகைக்குக் கொடுக்கிறானோ, அவனுடைய நிலத்தை ஏன் உழுபவனுக்கே கொடுக்கக் கூடாதா என்று சொல்லுகிறார்கள். ஏன்; பணம் மிச்சம் இருப்பதனால்தானே பேங்கில் போடுகிறான், அந்தப் பணம் நாட்டிற்கே இருக்கட்டுமே என்றுகூட சொல்லலாம். வீடு அதிகம் இருப்பதால்தானே வீட்டை வாடகைக்குக் கொடுக்கின்றான். எனவே, வாடகைக்கு இருப்பவனுக்கும் சமத்துவம் கொடுத்து விடுங்களேன்.

மிகச் சாமர்த்தியமாக, மிகத் திறமையாக, யாருக்கும் தெரியாமல் நாங்கள் கொண்டு வந்துவிட்டோம், நாங்கள் முதலில் கொண்டுவருவதில்லை என்று சொல்லிவிட்டு இப்பொழுது மிகச் சாமர்த்தியமாகக் கொண்டு வந்திருக்கிறோம் என்று பெருமைப் பட்டுக் கொள்ளலாம். ஏதோ ஸ்மக்ளிங் பொருள்கள் வைத்திருப்பவனைப் பிடிப்பது மாதிரி, மிகச் சாமர்த்தியமாக, மிகத்திறமையாகச் செய்துவிட்டோம் என்று சொல்வதுமாதிரி எல்லோரும் பேசுகிறார்கள். நிலம் வைத்திருப்பவர்கள் கள்ளத்தனமாக பெற்றுக் கொண்ட சொத்து அல்ல அது. முன்பே தெரிந்தால் விற்றுவிடுவார்கள் என்று சொல்லி இம்மாதிரி செய்தோம் என்று பெருமைப் பட்டுக் கொள்ளலாம். ஏன், அவன் விற்றால் விற்று விட்டுத்தான் போகட்டுமே, அது பிறரை ஏமாற்றிக் கொண்டுவந்த சொத்து அல்ல. கஷ்டப்பட்ட பரம்பரையிலே கொண்டு வந்த சொத்து அது. அதை விற்றுக் கொள்ளக்கூட அனுமதி கொடுக்காமல் திடீரென்று ஸ்மக்ளிங் பொருள்களைப் பிடிப்பதுபோல் பிடித்துவிட்டோம் என்று சொல்லிக்கொள்வதில் என்ன பெருமை இருக்கிறது என்று புரியவில்லை. இதனால் உற்பத்தியில் சமத்துவம் வருமா? இவர்கள் எல்லோரையும் சமத்துவம் செய்ய முடியுமா? 100 கெஜம் துணியை



1970 மார்ச் 2] [திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்]

பத்தாயிரம் பேருக்குப் பங்கிட்டுக் கொடுத்தால் அதனால் என்ன அளவு வருமா? அது கோவணத்திற்குக் கூட வராது. அதுமாதிரி துண்டாக்குவதில் என்ன பிரயோஜனம்? ஒரு பெரிய கட்டிடத்தில் உட்கார்ந்துகொண்டு தினம் ஒன்றுக்கு 5,000, 10,000 சம்பாதிக்கும் வருவாய்க்காரர்கள் மீது கைவைப்பதுதானே? ஏற்கெனவே ஒருமுறை உச்சவரம்பு கொண்டு வந்தாகிவிட்டது. இன்னொருமுறை, மிச்சமுள்ளதையும் குறைக்க வேண்டுமென்றால் இவர்கள் மாத்திரம் என்ன பாவம் செய்தார்கள்? ஓட்டு தேடுவதற்கு இது ஒரு வழியாகும். ஆனால் இந்த வழியை எண்ணிக் கொண்டு செய்தால் இந்த நாடு கெட்டுவிடும்.

கொள்முதலை நீங்கள் யாரிடம் பெற்றீர்கள்? கணக்கு எடுத்தால், கொள்முதல் இந்த அளவுக்குக் கிடைக்குமளவுக்கு உற்பத்தியைப் பெருக்க யார் உழைத்தார்கள் என்பது புலனாகும். நிலத்தில் பாடுபடுபவர்கள் அதற்கான முதலீட்டையும் போட்டு, தங்கள் உழைப்பையும் தந்து, கணக்குப் பார்த்தால் அவனுக்கு 5 சதவீதமோ, 6 சதவீதமோ நிச்சயமாகக் கிடைக்கிறதா? கொஞ்சம் தயவு செய்து நெஞ்சிலே கைவைத்துச் சொல்லுங்கள். நாங்கள் சொல்வதைக் கூட நீங்கள் கேட்க வேண்டாம். கணபதியாப் பிள்ளை அவர்களின் அறிக்கையைப் பாருங்கள். நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தில் எவ்வளவு அதிகம் கொடுத்திருக்கிறார்கள்?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அவர்கள் கணக்குப்படி 15 ஸ்டாண்டர்ட் ஏக்கராவுக்கு, ஒரு ஆண்டுக்கு 2,600 ரூபாய், 2,700 ரூபாய் வரும். இவ்வளவு உழைப்பையும் தந்து, முதலீடும் செய்து அவனுக்கு வரக்கூடியது என்ன? இதைக் கொஞ்சம் யோசனை செய்யுங்கள். அறிக்கை உங்களிடம் இருக்கிறது.

எங்கள் பகுதியிலே குடும்பத்திலேயுள்ளவர்கள் ஆலைத்தொழிலிலே ஈடுபட்டு மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய், வருஷத்திற்கு 6,000 ரூபாய் பெறுகிறார்கள். ஆனால் விவசாயத்தில் குடும்பத்தோடு இரவும் பகலும் பாடுபட்டு இதில் பாதி வருமானம் கூடப் பெறாதவர்களிடமிருந்து பிடுங்குவதைக்கண்டு சந்தோஷப்படுகிறீர்களா என்ன? இது வேதனை மிக்க காரியம் என்பதைச் சொல்லிக் கொள்ளுகின்றேன்.

இப்பொழுது நீங்கள் தமிழக அரசு லாட்டரிச் சீட்டு கொடுக்கிறீர்கள். ஒரு ரூபாய் போடுபவன் திடீரென்று ஒரு லட்சம் பெறுகிறான், பொங்கல் பரிசாக 5 லட்சம் பெறுகிறான். அதைப் பார்த்து சந்தோஷம். ஆனால், பரம்பரையாக உழைத்து, பாடுபட்டு, தானும் அனுபவியாமல் நாட்டு மக்களுக்குக் கொடுப்பவர்களைக் கசக்கிப் பிழிகிறீர்கள். எங்களுக்கு கணக்கு காட்டுங்கள். நிலத்திற்குப் போட்ட முதல், உழைப்பையும் சேர்த்து 5 % கூடக் கிடையாது. அந்த அளவுக்கு லாபத்தைக்கூட அனுபவிக்காமல் நகர மக்களுக்கு உணவு தருகின்ற அவர்களை இன்னும் எவ்வளவு தூரம்

மட்டம் தட்ட வேண்டுமென்று நினைக்கிறீர்கள்? ஒரு வக்கீல் இருக்கிறார்—நீங்கள் சோஷலிசம் பேசுகிறீர்கள்—ஒரு டாக்டர் இருக்கிறார். ஒருவர் வருவாய் இன்னொருவருக்கு உண்டா? ஒரு வக்கீலுக்கு வரும் வருமானம் இன்னொரு வக்கீலுக்கு வருகிறதா? அதற்கு எப்படி உச்சவரம்பு போடப் போகிறீர்கள்? ஒருவருக்கு ரூ. 10 வருமானம் வருகிறது. இன்னொருவர் ஒவ்வொரு காகிதத்தை எழுதிக் கொடுத்துவிட்டு ரூ. 1,000 சம்பாதித்துவிடுகிறார். அவர்கள் கணக்கு காட்டுவதில்லை, டாக்ஸ் கட்டுவதுமில்லை. உதாரணமாக, ரத்தம், மலம் இவைகளைச் சோதிக்கும் லாபரட்டரி இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். ரூ. 10,000, 20,000 முதல் போட்டு சில ரசாயனக் கருவிகளை வாங்கி வைத்துக்கொண்டு, ஆயிரக்கணக்கான ரூபாய்கள் சம்பாதித்துவிடுகிறார்கள். இன்னும் இப்படி எத்தனையோ உதாரணங்கள் சொல்லிக்கொண்டே போகலாம், அளவே இல்லை.

சினிமாத் துறையை எடுத்துக்கொண்டால், கரும்பு தின்னக் கூலியா? பெண்களோடு கூடிக் குலாவி, ஆடிப்பாடிவிட்டு, லட்சக்கணக்கான ரூபாய் சம்பாதித்து விடுகிறார்கள். அதற்கான கணக்கை கொடுக்கிறார்களா என்றால், அதுவுமில்லை. அவர்கள் என்ன வரி கொடுக்கிறார்கள்? கரும்பு தின்னக் கூலியா? அவர்களுக்கு என்ன வரி போட்டிருக்கிறீர்கள்?

இம்மாதிரி இன்னொன்றையும் சொல்கிறேன். உங்களுக்காவது ஆதாயம் உண்டா? அதுவுமில்லை. நான் ஒரு கணக்கு கொடுக்கிறேன். உங்கள் இலாகா மூலம் புள்ளி விவரம் எடுக்கச் சொல்லுங்கள். விவசாய வருமான வரி இருக்கிறதே, அதிலிருந்து இப்பொழுது என்ன வருமானம் வருகிறது, இனி என்ன வரும்? நில உச்சவரம்பு 15 ஏக்கர் என்று வைத்துவிட்டால், விவசாய வருமான வரி இலாகாவை நிர்வகிக்கும் செலவுகூட உங்களுக்கு வராது. நில உச்சவரம்புச் சட்டத்தை நீங்கள் இப்பொழுது சொல்லியபடி கொண்டு வந்துவிட்டால், அந்த இலாகாவின் நிர்வாகச் செலவுக்குக் கூட கட்டாது விவசாய வருமான வரியின் மூலம் வருகிற வருமானம். அந்த இலாகாவையே எடுத்துவிட வேண்டி வரும். இதைக் கொஞ்சம் நன்றாக சிந்தித்துப் பார்த்து, கணக்குப் போடுங்கள். நீங்கள் குடியானவர்களை அழுத்துவதை ஒரு கலையாகக் கொண்டிருக்கிறீர்கள்.

எஸ்.டி.ஸி மூலம் ஹைடிரோ சல்பேட கரும்பு உற்பத்தியாளர்களுக்கு, வெல்லம் சர்க்கரை உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இறக்குமதி விலை ரூ. 3, 3¼ என்றால், எங்களுக்குக் கிடைப்பது ரூ. 30, 40 விலையில். இதற்கெல்லாம் உச்சவரம்பு இல்லையா? மின்சாரத்திற்கு வரி இருக்கிறது. தொழிற்சாலைகளுக்கு மின்சாரத்திற்கு வரி 10% குறைத்திருக்கிறார்கள். குடியானவர்களுக்கு 20% ஏற்றியிருக்கிறார்கள். டிராக்டருக்கு 2% தான் ஜாஸ்தி என்றால், டிராக்டர் என்ற கருவியை வாங்கவேண்டுமானால் அதற்கு ரூ. 600, 700 என்று விலை கூடுதலாக இருக்கிறது.



நாளைக்கு ஒரு டிராக்டர் வாங்கவேண்டுமென்றால் ரூ. 600 அதிகம் கொடுத்தாகவேண்டியிருக்கிறது. நீங்கள டிராக்டர் விலையை ரூ. 6,000 ஆக கூட்டினாலும் சரி, உச்சவரம்புச் சட்டம் வந்தபிறகு டிராக்டர் வாங்கவேண்டும் என்று நினைக்கிற ஒரு முட்டாளுக்கு எத்தனை வரி போட்டாலும் தகும், நீங்கள் போடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைவிட இன்னொன்றையும் நினைவுபடுத்துகிறேன். குடியானவனுக்கு பெரிய உபகாரமாகச் செய்வதாகச் சொல்லி, புஞ்சை நிலத்திற்கு உள்ள கந்தாயத்தை எடுத்தீர்கள். அதனுடைய பலனை குடியானவன் எப்படி அனுபவித்தான் என்பதை சிந்தித்துப் பார்த்தீர்களா? ஒரு ஏக்கருக்கு 8 அணா அல்லது ஒரு ரூபாய் என்று கொடுத்துவந்த கந்தாயத்தை எடுத்துவிட்டால் குடியானவனுக்கு ரொம்ப உபயோககரமாக இருக்கும் என்று எடுத்தீர்கள். ஆனால் அதன் பலன் என்ன? குடியானவன் ஒரு முறை தன்னுடைய குடும்பத்தில் பாகப்பிரிவினை செய்துகொண்டால், அவன் 1,000 வருஷங்களுக்குக் கட்டவேண்டிய வரியை ஒரே சமயத்தில் கட்டும்படி அவனைக் கசக்கி பிழிந்து எடுத்து விடுகிறீர்கள். இதை நீங்கள் நிச்சயம் மறுக்க முடியுமா? முடியாது. ரூ. 10-க்கு ஸ்டாம்பு பேப்பர் வாங்கவேண்டியதற்கு ரூ. 100 அல்ல, ரூ. 1,000-க்கு வாங்கவேண்டியிருக்கிறது. இதற்கான புள்ளிவிவரத்தை நிச்சயம் ஆதாரத்தோடு கொடுக்க முடியும். குடியானவனைக் கசக்கிப் பிழிவதை நீங்கள் ஒரு கலையாகக் கொண்டிருக்கிறீர்கள். எவ்வளவு வருத்தத்தோடு சொன்னாலும் தீராது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் காங்கிரஸ்காரர்கள் ஒரு பெரிய அறிக்கை விடுத்திருக்கிறார்கள். (மணி அடிக்கப்பட்டது). நான் கருத்தைச் சொல்லிக் கொள்கிறேன். வருத்தத்தையாவது கொஞ்சம் சொல்லிக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். வேறு ஒன்றுமில்லை. இரண்டு நிமிஷங்கள் கொடுங்கள். 30 ஆண்டுகளுக்கு முன்னால் காங்கிரஸ்காரர்கள் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே இந்தியா முழுவதும் சேர்ந்து வெள்ளைக்கார அரசாங்கத்தில் ரூபாய் 250 கோடி வரியாகப் போட்டு கொள்ளையடித்துக்கொண்டு போகிறார்கள் என்று சொன்னார்கள். ஆண்டு ஆரம்பத்திலேயே ஜனவரி, பிப்ரவரி என்று வருஷமே வரியோடு பிறக்கிறது, சுதந்திரம் வந்த பிறகு எவ்வளவோ வரியைக் குறைப்போம் என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லிவந்தார்கள். ஆனால் இன்று நிலைமை என்ன? அன்று 250 கோடி ரூபாய்க்கு வரி போடப்பட்டிருக்கிறது, அவர்கள் கொடுத்த புள்ளிவிவரப்படி. அதிலும் கடல் மூலம் இறக்குமதியாகிற பொருள்களுக்கு வரி ரூ. 54 கோடிகள், சாராயங்களுக்கு கலால் வரி ரூ. 24 கோடி. இதர வரிகள் 150 கோடி. புள்ளி விவரம் இருக்கிறது. மாநிலத்தில் 300 கோடி ரூபாய்க்கு வரி போட்டால் மத்திய அரசில் 3,000 கோடி ரூபாய்க்கு வரி போடுகிறார்கள். இப்படியெல்லாம் வருஷா வருஷம் வரி வரியென்று வரிந்துகொண்டே போகிறார்கள். நமது பேறறிஞர்

அண்ணா அவர்கள் முன்பு மிகத் தெளிவாக பல கூட்டங்களில் பேசினார்கள். மில் முதலாளி, ஆலை முதலாளி, சினிமா முதலாளி இவர்களெல்லாம் சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் அரசாங்கமே சம்பாதிக்கும், அந்தத் தொழில்களை அரசாங்கமே எடுத்து நடத்தி, அதிலிருந்து வருகிற லாபத்தைக் கொண்டே ஆட்சியை நடத்துவோம், வரியைக் குறைப்போம் என்றெல்லாம் சொன்னார்கள். வரி குறையவில்லை. ஓயாமல் வருஷா வருஷம் உயர்ந்துகொண்டே போகிறது.

பஸ் தொழிலை நாட்டுடைமையாக்கினீர்கள். அந்த ஒரு துறையை, பஸ் துறையை மட்டும் நாட்டுடைமையாக்காமல் விட்டுவைத்திருந்தால், இப்பொழுது வரி போட்டிருக்கிற அந்த ரூ. 6 கோடியை அவர்களே முதல்போட்டு, கஷ்டப்பட்டு தொழில் நடத்தி சம்பாதித்து உங்களுக்கு வரியாகக் கொட்டிக் கொடுத்திருப்பார்கள். அதுவும் இப்பொழுது கெட்டுவிட்டது. சரி, மக்களாவது பஸ்களில் சௌகரியமாகப் போகிறார்களா என்றால், நெஞ்சில் கையை வைத்துச் சொல்லுங்கள், அவர்களும் சௌகரியமாகப் பிரயாணம் செய்ய முடியவில்லை. நாட்டுடைமையாக்குவதை ஒரு பெரிய கலையாகக் கொண்டிருக்கிறீர்கள். ஏழைகளை ஏமாற்றக் கூடிய ஒரு பெரிய கலை. உண்மை பிக்சர் இதுதான். திறமையோடு, அக்கரையோடு, அனுபவத்தோடு முதலைப் போட்டு, கஷ்டப்பட்டு தொழில் செய்து, லாபத்திலிருந்து அரசாங்கத்திற்கு வரி கொடுத்து, மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்து, தாங்களும் பணம் சம்பாதித்துக்கொண்டு, மிச்சமுள்ள பணத்தை வேறு தொழில்களில் போட்டு, நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்கி வந்தவர்களை நாசம் செய்து விட்டீர்கள், நசுக்கி விட்டீர்கள். நாங்கள் செய்கிறோம் என்று சொல்லி, திறமை இல்லாதவர்கள், அனுபவம் இல்லாதவர்கள், முதல் இல்லாதவர்கள் இவர்கள் கையில் கொடுத்து நாசம் செய்து, நாட்டைக் கெடுத்து, வருவாயைக் கெடுத்து, மேலும் மேலும் வரி போட்டு நாட்டைக் குட்டிச்சுவராக்கினீர்கள். திறமையாகவாவது, பொதுமக்களுக்கு அனுகூலமாகவாவது நடத்துகிறீர்களா என்றால், அதுவும் இல்லை. நாட்டுடைமையாக்குவது என்ற கொள்கையை வைத்து நாட்டைக் கெடுத்து, நாட்டை இந்த ஆபத்தான நிலைமைக்கு தயவு செய்து கொண்டு வராதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். நெடுநாளைய உறுதிமொழி நிறைவேற்றப்படுகிறது என்று நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நெடுநாளைய உறுதி மொழி அல்ல, நெடு நாளைய சதித் திட்டம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அவர்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். அவர்களுடைய கொள்கையை விளக்குவதற்கு சுதந்திரம் உண்டு. இவைகளெல்லாம் சமுதாயத்தில் அவர்களுடைய விரிவான சிந்தனையில் அமைகிறது. இருந்தாலும், அவர்களுக்கு எப்படி உரிமை இருக்கிறதோ, அதேமாதிரிதான் மற்றவர்களுக்கும் உரிமை இருக்கிறது. ஏழை எளியவர்கள், குடியானவர்கள் இவர்களைப் பொறுத்தவரையில், நாட்டினுடைய ஒரு பெரிய சமுதாயத்தில் ஒரு மாற்றத்திற்கான காரியங்களை





சதித்திட்டம் என்று அவ்வளவு பெரியவர், பெரியவர் ராஜாஜி அவர்களைத் தலைவராகக் கொண்டவர், இந்த மன்றத்தில் சொல்வது சரி அல்ல. அதை வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது கூட அல்ல. அதைத் திருத்தி, அதற்குப் பதிலாக வேறு ஒரு வார்த்தை சொன்னால் நலமாக இருக்கும். அவர் ஒரு பெரிய கவிராயர், அதற்குப் பதிலாக வேறு ஒரு வார்த்தை சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : மாண்புமிகு நிதி அமைச்சர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, சதித் திட்டம் என்பதற்குப் பதிலாக வேறு எந்தப் பதத்தை உபயோகப்படுத்திக்கொண்டாலும் பரவாயில்லை, உபயோகப்படுத்திக்கொள்ளுங்கள். அவர்களே 'நாங்கள் ஒன்றும் இப்படிக் கொண்டுவரமாட்டோம்' என்று அறிவிப்பு கொடுத்துவிட்டு, குடியானவர்களை ஏமாந்திருக்கும் படிச் செய்துவிட்டு கொண்டுவந்த ஒரு திட்டத்தை வேறு என்ன பதம் உபயோகித்துச் சொல்வது, என்ன பதம் அதற்குச் சரியாக இருக்கும்? அல்லது ஏமாற்றிய திட்டம் என்று வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். எப்படியானாலும் பரவாயில்லை.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அவர்கள் அதுவே இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார் என்று தெரிகிறது. வைத்துக் கொள்ளட்டும். ஏழை எளியவர்கள் மேம்பாட்டிற்காக செய்யப் படுகிற இந்த நல்ல விஷயங்களை சதித் திட்டம் என்று சொன்னால், இப்படிப்பட்ட சதித்திட்டங்கள் இன்னும் ஆயிரக்கணக்கான சதித் திட்டங்கள் இந்த நாட்டில் நடைபெறவேண்டும், இந்த சதித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவே தான் மக்கள் கட்டளையைப் பெற்று திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : உண்மையிலேயே ஏழைகளை இந்தத் திட்டம் உயர்த்துமானால், 15 ஏக்கர் என்று வையுங்கள், 2½ ஏக்கர் என்று வேண்டுமானாலும் வையுங்கள் என்று முதலிலேயே சொன்னேன். அதை நிச்சயம் செய்யுங்கள் என்று தான் சொல்லுகிறேன். இப்பொழுது மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் போட்டுள்ள வரியோடு ஏறுகின்ற விலைவாசியினால், என். ஜி. ஓக்கள், சாதாரணப் பள்ளி ஆசிரியர்கள் இவர்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்ட சலுகைகள் யானைப் பசிக்குச் சோளப் பொறியாக அமையும். (மணி அடிக்கப்பட்டது) இந்த நிதிநிலை அறிக்கை நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாக இல்லை என்று சொல்லிக்கொண்டு, அமர்கிறேன்.

* திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கைமீது என் கருத்துக்களைச் சொல்லும்போது, இதிலே பல நல்ல புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டு வந்தாலும் கூட, இந்த பட்ஜெட்டை ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது, கொண்டு வந்திருக்கும் அத்தனைக் திட்டங்களும் உடனடியாக அமுல் நடத்தமுடியுமா என்று பார்த்தால், அமுல் நடத்த முடியும்

என்பதில் சந்தேகம் தான் வருகிறது. ஒரு பக்கம் ரேஷனை எடுத்து விட்டோம் என்று சொல்லியிருப்பதில் ஒரு சாராருக்கு, கன்ட்ரோல்களை எடுக்க வேண்டும் என்பவர்களுக்கு சந்தோஷமாக இருக்கும். அதே போல, 15 ஏக்கராவாகக் குறைத்திருக்கிறோம் என்பதில், இடது சாரிக்காரர்களுக்கு தீவிரமான கொள்கை என்று சந்தோஷம். ஆனாலும், ஆங்காங்கே இவற்றை அமுல் நடத்த முன் வந்தால், அப்பொழுது நடுவில் சட்டச் சிக்கல் இல்லாமல் நடைபெறமுடியுமா என்றால் சந்தேகம் தான். இந்த பட்ஜெட்டைப் பற்றிச் சுருக்கமாகச் சொன்னால், ஏதோ கொள்கையளவில், அமுலுக்கு வந்திருக்கிறதில்லை. ஆனால், நடைமுறையில் ஆகாது என்ற உட்கருத்துத்தான் தெரிகிறது. இது ஒரு 'ஸ்டேட்ஸ்மன்' பட்ஜெட்டாக இல்லை, ஒரு 'பாலிடீஷியன்' பட்ஜெட்டாகத்தான் இருக்கிறது. அப்படித்தான் சுருக்கமாச் சொல்ல வேண்டியிருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், இப்பொழுது 15 ஏக்கர் என்று ஆக்கவிருக்கிறோம். நடுவிலே இந்த 15 ஏக்கருக்கு மேல் இருப்பவர்கள், உடனடியாக எத்தனையோ விதமான பினாமி டிரான்சாக்ஷன்கள் செய்வதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது. சட்டத்தின்மூலம் ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்தாலும், அரசியல் சட்டப்படி அது செல்லுமா என்றால், கொஞ்சம் யோசிக்க வேண்டியதாகத்தான் இருக்கிறது. அது ஒரு தனி மனிதனுடைய பண்டமெண்டல் ரைட். தன் சொத்தை வாங்கவும், வைத்துக் கொள்ளவும், விற்கவும் இருக்கும் ஜீவாதார உரிமை. அந்த உரிமையைப் பாதிக்கும் அளவில் செய்வது எந்த விதத்தில் சரி என்று சொல்ல முடியாது. ஸ்டேட் கவர்ன்மெண்டுக்கு இருக்கும் அதிகாரம், அக்விஸிஷன் செய்வதால், பொதுக்காரியங்களுக்கு உபயோகிக்க அதிகாரம் இருக்கிறதேயல்லாமல், அதே நேரத்தில் அப்படி நிலத்தை எடுத்து, மக்களுக்கு வினியோகிக்கும்போது, வேறு விதமான இண்டர்ப்ரிடேஷன் வரும். அவனும் மனிதன்தான். இவனும் மனிதன்தான். அவனிடம் பிடுங்கி இவனுக்குக் கொடுக்க அரசியல் சட்டத்தில் இடம் இருக்கிறதா என்று பார்த்தால், அப்படிப்பட்ட சட்டம் செல்லுமா என்று பார்த்தால், அதில் பிரச்சினை பலமாக இருக்கிறது. அதே நேரத்தில் 15 ஏக்கருக்குக் கீழே வைத்திருப்பவன் சுதந்திரமாக விற்கலாம், ஆனால் மேலாக வைத்திருப்பவன் செய்யக்கூடாது என்றால் அதில் வித்தியாசம் வருகிறது. டிஸ்க்ரிமினேஷன் என்று வந்தால் அது அரசியல் சட்டப்படி நிற்குமா என்று சந்தேகம் இருக்கிறது. இந்த நேரத்தில் சொல்லுவார்கள், அரசியல் சட்டம், கான்ஸ்டிட்யூஷன் அப்படி இருக்கிறது என்று. சரி, ஆனால் உங்கள் திட்டம் நிறைவேறுமா? நிறைவேறாது, அந்த நிலையை யோசிக்கவேண்டும். ஆகவே, கான்ஸ்டிட்யூஷனை மாற்றவேண்டும். அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டுமானால், இங்கே பேசிக்கொண்டு இருக்கக்கூடாது. உடனடியாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அத்தனை பாராளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து அரசியல் சட்டத்தை





மாற்றியமைக்க வழி கோலவேண்டும். பின்பு இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அதுவரையில் இந்த திட்டம் நிறைவேறுமா என்றால், நிறைவேறாது என்பதில் கொஞ்சங்கூட சந்தேகம் இல்லை.

இன்றைக்கு கண்ட்ரோலை எடுக்கவேண்டும் என்று, எடுத்திருக்கிறார்கள். இன்னும் இரண்டு மாதகாலத்தில் பாருங்கள், நான் நன்றாகச் சொல்லுவேன், இந்த விலை இருக்காது, விலை ஏறும், அதன் மேல் மறுபடியும் ரேஷன் கொண்டு வரவேண்டும். இப்படி அப்படி ஓட்டைகளை அடைத்து, எத்தனை நாளைக்கு தாக்குப் பிடிக்க முடியும். பிற்காலத்தில் நல்ல நிலைமை வேண்டும் என்று செய்ய வேண்டும். அப்படி ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டு வந்திருந்தால், பாராட்டலாம்.

சென்டர்-ஸ்டேட் ரிலேஷன் பற்றி கொஞ்சம் சிந்திக்க வேண்டும். நான் ஒரு நகரசபைத் தலைவர். இந்த அறிக்கையில் முதலிலே இருக்கக் கூடிய ஐந்து பக்கங்களை அப்படியே ஸ்டேட்-லோகல் பாடீஸ் அண்ட் பஞ்சாயத்ஸ் ரிலேஷன்ஷிப் என்று போட்டால், அதிலே இருக்கக் கூடிய அவ்வளவும் இதற்கும் தகும். எந்த அதிகாரமும் எங்களிடம் கிடையாது. இதிலே ஒரு கமிஷன் போட்டு இருக்கிறார்கள், சென்டர்-ஸ்டேட் ரிலேஷன் திருத்தப் படவேண்டும் என்று. அதே சமயத்தில் சற்று யோசிக்க வேண்டும். கீழே நகரசபைகளும், ஊராட்சி ஒன்றியங்களும் இருக்கின்றன; அவற்றில் அத்தனை அதிகாரமும் மாநில சர்க்கார் கையில் வைத்துக் கொண்டிருக்கிறது. அதே சமயத்தில் மத்திய சர்க்காரிடம் அதிகாரம் வேண்டும் என்று கேட்கிறார்கள். கொஞ்சம் திரும்பிப் பார்க்கவேண்டும். அதையேதான் நாங்களும் கேட்கிறோம். மத்திய சர்க்கார், அமெரிக்காவிடமிருந்தோ அல்லது ரஷ்யாவிடமிருந்தோ கடனைப் பெற்று மாநில சர்க்கார்களுக்குக் கொடுக்கிறது. அதே நேரத்தில் மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடமிருந்து பெற்று, எங்களுக்கு கொடுக்கிறார்கள். அவர்கள் வெளிநாட்டிலிருந்து குறைந்த வட்டிக்கு வாங்கி, தங்களிடம் அதிக வட்டி வாங்குவதாக மாநில சர்க்கார் குறைபடும் அதே நேரத்தில், குறைந்த வட்டியில் மத்திய சர்க்காரிடமிருந்து வாங்கி, எங்களிடம் அதிக வட்டி வாங்குகிறார்கள். மத்திய சர்க்கார் வாங்கும்போது குமுறுகிறார்கள். அதேநேரத்தில் எங்களுடைய டெபாசிட் பணங்களுக்கு அதிகமான வட்டியைக் கொடுக்காமல், கடன்களைக் கொடுக்கிறார்கள். அதற்கு ஒரு அழகான பண்ட் வைத்திருக்கிறார்கள். எந்த வேலைத் திட்டங்களை எடுத்துக் கொண்டாலும், அதற்கு 'ஸெண்டேஜ் சார்ஜ்' என்று போட்டு, பணத்தை குவியலாக வைத்து, எங்களிடம் திருப்பிக் கொடுத்து, எங்களை நசுக்குகின்ற நிலையைப் பார்த்தால், அது பாரபட்சமாக இருக்கிறது. அதையும் யோசிக்க வேண்டும். இப்பொழுது இந்தக் கடன் தொகைகளைக் கொடுக்கவே நகர சபைகளில் வருமானம் சரியாகப் போய்விடுகிறது. இப்பொழுது மத்திய சர்க்கார் கடன்களைக் கட்ட முடியவில்லை என்று மாநில சர்க்கார், 20 வருஷம் என்பதை 40 வருஷம் என்று செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள். நாங்களும் அப்படியே தான் எங்கள்

கடன்களை 50 வருஷமாக்க வேண்டும் என்கிறோம். எங்களுக்கும் 'ஆட்டானமி' வேண்டும். லோகல் பாடிகளுக்கும் 'ஆட்டானமி' வேண்டும். அமெரிக்க கான்ஸ்டிட்யூஷன் பிரகாரம், உங்களுக்கு மத்திய சர்க்காரிலிருந்து எவ்வளவு அதிகாரங்கள் வேண்டுமோ அதேபோல எங்களுக்கும் வேண்டும் என்று கேட்கிறோம்.

எங்களுடைய ஊராட்சி ஒன்றியங்கள், நகர சபைகள் இவற்றிற்கு எங்களுக்கென்று ஒரு தனி போலீஸ் படை வேண்டும். சின்ன, சின்ன விஷயங்கள் அந்த நகரத்தில் உள்ளவர்களுக்குத் தான் தெரியும். சின்ன நியூசன்ஸ், யாரோ இங்கே ஒதுங்குகிறான், இதற்கெல்லாம் உங்களுக்கு எதற்கு தொந்தரவு. அதையெல்லாம் மாநில சர்க்கார் எங்களிடமே விட்டு விடட்டும். அந்த முறையில் எங்களுக்கு ஒரு ஆட்டானமி வேண்டும். எப்படி பெடரல் முறையில் மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடமிருந்து அதிகாரம் வேண்டும் என்று கேட்கிறார்களோ அதே போல, அதே பெடரல் முறையில் நாங்களும் கேட்கிறோம். ஆகையினால், எங்களுடைய நகரசபைகளைப் பொறுத்த வரையில், ஒரு கமிட்டியை அமைக்க வேண்டும். ஒரு கமிட்டியைப் போட்டு, நம்முடைய ரிலேஷன்ஷிப் எவ்வளவு தூரம் சீர்படுத்த வேண்டும் என்றும், அதிகாரங்கள் எவ்வளவு தூரம் டிசெண்ட்ரலைஸ் பண்ணப்பட வேண்டுமோ அந்த வகையில் செய்யப்பட வேண்டும். இல்லை என்றால், இந்த பட்ஜெட் திட்டம் பாரபட்சமாக இருக்கிறது என்பதுதான் தெளிவு. ஒரு சின்ன விஷயமானாலும் உங்கள் அனுமதி வேண்டும். உங்கள் அப்ரூவல் இல்லாமல் செய்ய முடியாது. எதற்கும் உங்களை நம்பியிருக்க வேண்டும். அடித்தளத்தில் எந்தக் கட்சியாக இருந்தாலும், ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்களோ அதைப் பொறுத்துத்தான் அந்தக் கட்சிக்கு நல்ல பெயர். இதை யாரும் மறுக்க முடியாது. அதே போன்று நகர சபைகளில் சின்ன சின்ன விவகாரங்களைப் பொறுத்தவரையில், இங்கே மாநில மட்டத்திலே தெரியாது. நகர சபையின் உள்ளாட்சி நிலைமை உங்களுக்குத் தெரியாது. ஏனென்றால், உதாரணமாக நாங்கள் ஒரு வரி போடுகிறோம். அதற்கு டாக்ஸேஷன் கமிட்டியிருக்கிறது. அவர்கள் தீர்மானிக்கிறபடி செய்கிறோம். அவர்கள் போட்ட வரியைக் குறைக்க இவர்களுக்கு அப்பீல் செய்யலாம். அப்படி அப்பீல் செய்யும்போது, தார தம்மியம் பார்த்து குறைக்கலாம். அதே நேரத்தில் ஒருவன் பூர்விகமாக நான்கு லட்ச ரூபாய் வீட்டை கட்டியிருக்கலாம். இன்றைக்கு சொத்து மதிப்புப் போட்டால், ரூ. 6000 ஆறு மாதத்திற்கு வரி போடலாம். பிற் காலத்தில், நிலைமை அவனை ஊரை விட்டு விரட்டும் அளவில் வரலாம். சட்டம் வரலாம். யாருக்குத் தெரியும் உண்மை நிலைமை. மாநில சர்க்காரில் இருக்கும் உங்களுக்குத் தெரியாது. அங்கே உள்ள நிலவரம் எங்களுக்குத்தான் தெரியும். ஆகவே, ஒரு கமிட்டி அமைத்து இது பற்றிப் பரிசீலிக்க வேண்டும்.

கடைசியாக, வருத்தப் படக் கூடிய ஒன்று கைத்தறிக்காரர்கள் பற்றியது. விசைத்தறிகளைப் புகுத்தும்போது, வேலையில்லாத





நிலைமை ஏற்படும். அவர்களைத் திருப்தி செய்ய என்ன செய்யப் போகிறார்கள் என்பது குறித்து திட்டத்தில் ஒன்றும் இல்லை. அவர்கள் வேலையில்லாமல் இருக்கும்போது, வெளியிலே வேலையில்லாதவர்களோடு சேர்ந்து பெரும் புரட்சியை ஏற்படுத்துவார்கள். திடீரென்று புரட்சிகரமான திட்டத்தைப் போன்று, புரட்சி நாளைக்கு ஏற்பட்டால், எப்படிச் சமாளிப்பது என்பதைப் பற்றி தீவிரமாக யோசித்துப் பார்க்க வேண்டும். கைத்தறி நெசவாளர்களுக்கு தொழில் அமைச்சர் சொன்னார்கள், விசைத்தறியை வாங்கிக் கொள்ளலாம் என்று. அப்படி விசைத்தறி வாங்கும் நிலையில் நெசவாளர்களும் இல்லை, கூட்டுறவு சங்கங்களும் இல்லை. நம் மாநிலத்தில் லாபத்தைப் பெருக்குவோம் என்று சொல்கிறார்கள். இது லாபப் பிரச்சினையா, உயிர் பிரச்சினையா என்று பார்க்க வேண்டும். சர்க்கார் மனிதாபிமானத்தோடு இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டும் என்று கூறி முடிக்கிறேன்.

* திரு. எம். சுப்பிரமணிய கவுண்டர் : தலைவர் அவர்களே, பி.ப. 1-00
இப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நிதிநிலை அறிக்கையை ஆதரித்துப் பேச விரும்புகிறேன். தர்மபுரி மாவட்டத்திலே சின்னாறு திட்டம் 2 கோடியே 56 லட்சம் ரூபாய்க்கு தமிழக அரசாங்கம் போட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அந்தத் திட்டத்தை முதல் வேலையாக எடுத்து ஆரம்பிக்க வேண்டுமென்று மிக்க பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசாங்கம் உணவுத் துறையிலே நல்ல முறையிலே விவசாயிகளுக்கு நல்ல ஊக்கத்தை ஊட்டி வருகிறது. கூட்டுறவு முறையிலே விவசாயிகளுக்கு கடன் வழங்கி, பம்புசெட்டுகளை அமைத்துக்கொள்ளவும், உணவு உற்பத்தியைப் பெருக்கவும் வேண்டிய வசதிகளைச் செய்து தருகிறது. இதனால் விவசாயிகள் ஊக்கத்துடன் பாடுபடுகிறார்கள். உணவு உற்பத்தியை இருமடங்காக அதிகரிக்கிறார்கள். இதற்கு முன்னால் இருந்த அரசாங்கம் சென்னையிலும் சரி, தர்மபுரி மாவட்டத்திலும் சரி, தாய்மார்கள் ரோடுகளில் க்யூ வரிசையில் நின்று உணவுத்தானியம் கிடைக்கவில்லையே என்று ஏங்கும் நிலையைத்தான் வைத்திருந்தது. பதுக்கல்காரர்கள் உணவுத்தானியத்தை வெளியே காட்டாமல் பதுக்கி வைத்தார்கள். ஆனால் இன்றைய தினம் பதுக்கல்காரர்கள் எல்லாம் இன்றைய அரசாங்கத்தின் நல்ல ஏற்பாட்டினால் திருந்தி விட்டார்கள். இன்றைய தினம் எங்கு பார்த்தாலும் உணவுப் பொருள்கள், முக்கியமாக அரிசி கிடைக்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தமிழக அரசாங்கமானது உணவுக் கட்டுப் பாட்டை நல்ல முறையில் தைரியத்தோடு, ஆழ்ந்த யோசனைக்குப் பிறகு எடுத்துவிட்டது. இதன்காரணமாக எங்கு பார்த்தாலும் உணவுப்பொருள் தாராளமாக எல்லோருக்கும் கிடைக்கிறது. மேலும், கூட்டுறவுத் துறையில் விவசாயிகளுக்கு மின்சார பம்ப்

1970 மார்ச் 2] [திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்]

செட்டுகளை வழங்கி, அதன்காரணமாக உற்பத்தியைப் பெருக்கலாம் என்ற தீர்க்கதரிசனத்தோடு உணவுக் கட்டுப்பாட்டை எடுத்திருக்கிறது.

இந்த அரசாங்கமானது வேளாண்மைத் துறையில் நல்ல உற்சாகத்தை விவசாயிகளுக்கு அளித்து வருகிறார்கள். 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருந்ததை 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற அளவுக்கு ஆக்கியிருக்கிறார்கள். ஒருவர் உண்டு களிக்கவும், உண்ட உணவினால் தொந்தி பெருக்கவும், பிறிதொருவர் ஒட்டிய வயிறோடு பசியால் வாடவும், இருக்கும்படியான நிலைமை இனி ஏற்படாது. உழைக்காது உண்டு களிப்பவர்களுக்கு ஏராளமான நிலம், பசியால் வாடுபவர்களுக்கு, உழைத்துப் பாடுபடுபவர்களுக்கு நிலம் இல்லையே என்ற ஏக்கம் இனி இருக்காது. முப்பது ஏக்கர் என்றிருந்ததை பதினைந்து ஏக்கர் என்று மாற்றியது உழைத்துப் பாடுபடக்கூடியவர்களுக்கு நல்ல ஆறுதலைத் தருகிறது. உச்சவரம்பு செய்திருப்பதை வரவேற்கிறேன். சாதாரணமாக கிராமங்களில் பணக்காரர்கள் எப்படி நிலத்தைச் சேர்க்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். சாதாரண விவசாயிக்கு பணக்காரர்கள் கடனாக ஆயிரம், ஐநூறு ரூபாய் என்று கொடுப்பார்கள், கொஞ்சநாள் போனதும் வட்டி ஏறிக்கொண்டே போகும். மேலும் வட்டிக்கு வட்டி என்று ஆகும். விவசாயி பணத்தைக் கொடுக்க முன்வந்தபோதும், 'என்ன கவுண்டரே, இவ்வளவு அவசரம், இன்னும் கொஞ்சம் பொறுத்துக் கொடுங்கள், பரவாயில்லை' என்று சொல்லி கடைசியில் வட்டியும் முதலுமாக அதிகமாகிற சமயத்தில் அந்த விவசாயியை நெருக்கி, அவனுடைய நிலத்தை ஈடாகப் பெற்றுக் கொள்கிறார்கள். இப்படித்தான் அண்டையிலுள்ள நிலங்களையெல்லாம் பெரிய பணக்காரர்கள் வளைத்துக்கொள்கிறார்கள். இதன் காரணமாகப் பாடுபடக்கூடிய விவசாய மக்கள் நிலத்தை இழந்திருக்கிறார்கள். ஆகவே, இந்த உச்சவரம்புச் சட்டத்தினால் அதிக நிலம் வைத்திருப்பர்கள்தான் கவலை கொள்கிறார்கள். ஒரு டாம் (அணைக்கட்டு) கட்டுகிறோம் என்று சொன்னால் அதற்கு அருகிலுள்ள சில நிலங்கள் முழுகத்தான் செய்யும். 'ஐயோ, என் நிலம் போகிறதே' என்று சிலர் அஞ்சுவார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் அரசாங்கத்தின்மீது குறை கூறுவார்கள். அவர்கள் குறைகூறுகிறார்கள் என்பதற்காக அந்த அணைக்கட்டைக் கட்டாமல் இருக்க முடியாது. அதைக் கட்டினால்தான் கீழே இருக்கும் நிலங்களுக்கு நல்ல நீர்ப்பாசன வசதி ஏற்படும். ஆயிரக்கணக்கான விவசாயிகள் நன்மை அடைய முடியும், நாட்டிலே உணவுப் பஞ்சத்தைத் தீர்க்க முடியும். ஏழை, எளிய, பாட்டாளி, நடுத்தர வர்க்கத்தினர் நலனை முன்னிட்டுத்தான் இந்த உச்சவரம்புச் சட்டத்தை இந்த அரசு கொண்டுவந்திருக்கிறது. ஒன்றிரண்டு பணக்காரர்கள்தான் பாதிக்கப்படுவார்கள். ஒன்றிரண்டு சினிமாக் கொட்டகைகளை வைத்துக் கொண்டு, சென்னையிலே மாளிகை போன்ற வீடுகளை வைத்துக்



1970 மார்ச் 2] [திரு. எம். சுப்பிரமணிய கவுண்டர்]

கொண்டிருக்கிற பெரிய பணக்காரர்கள்தான் இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்படுவார்கள். தமிழக அரசாங்கம் கொண்டுவந்த இந்தத் திட்டத்தை நான் மனமார வரவேற்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திற்கு நமது மின்சாரத் துறை அமைச்சர் வந்தபொழுது, மேட்டூரிலே இருக்கும் மின்சார சிஸ்டத்தை தர்மபுரிக்கு பிரித்துக்கொடுத்து, தர்மபுரியிலே ஒரு மின்திட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக தர்மபுரி மாவட்ட மக்களின் சார்பாக தமிழக அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துப் பாராட்டுகிறேன். ஏழைஎளியவர்கள், விவசாயிகள் இருக்கும் கிராமங்களில் எல்லாம் 1971-ம் ஆண்டு இறுதிக்குள் மின்சார விளக்குகள் எரிய வேண்டும் என்று இந்த அரசு ஏற்பாடு செய்து அதற்கான ஆக்க வேலைகளில் ஈடுபட்டிருக்கிறது. நமது அமைச்சர் அவர்கள் கரூர் தாலுக்காவில் மூன்று மாதத்திற்குள் மின்சார விளக்கு எரிய வேண்டுமென்று சொல்லிவந்தார்கள். அதற்கான வேலைகள் தீவிரமாகச் செய்யப்பட்டு வருகிறது. அதற்காக தர்மபுரி மாவட்ட மக்களின் சார்பாக எங்களுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தர்மபுரிக்கு அடுத்த ஒகேனக்கல் ஸ்கீம் பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. தமிழக அரசாங்கம் அந்தத் திட்டத்தை ஏற்படுத்தினால் தர்மபுரிக்கு மட்டுமல்ல, மற்ற மாவட்டங்களுக்கும் மின்சாரம் கொடுக்க முடியும். இந்தத் திட்டத்தை உடனடியாக ஏற்று நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தர்மபுரி மாவட்டத்திலே எங்குபார்த்தாலும் முட்காடுகள் நிறைய இருக்கின்றன. மற்றும் தரிசு நிலங்களும் ஏராளமாக இருக்கின்றன. தர்மபுரி, அரூர், ஓசூர் கிருஷ்ணகிரி ஆகிய தாலுக்காக்களில் முள்காடுகளும், தரிசு நிலங்களும் இருக்கின்றன. தெங்கரகோட்டை என்ற ஊருக்கு அருகில் இரண்டாயிரம் ஏக்கர் முள்காடுகள் இருக்கின்றன. அந்த நிலங்களையெல்லாம் ஏழை எளிய விவசாயிகளுக்கு, ஆளுக்கு ஐந்து ஏக்கர் என்ற அளவில் பிரித்துக் கொடுத்தால், ஏழை விவசாயிகளுக்கு வாழ்வு அளித்த பலன் ஏற்படும். காடுகளை அழிக்கக் கூடாது, வனச் செல்வத்தைப் பெருக்க வேண்டும் என்பது இந்த அரசின் கொள்கையாக இருக்கிறது. இருந்தாலும் அந்த தரிசு நிலங்களையும் முள்காடுகளையும் பண்படுத்தி, அந்த இடங்களில் பலா, மா, தென்னை, போன்ற வருவாய் தரக்கூடிய பணப் பயிர்களைச் செய்யலாம். இப்படிச் செய்வதால் காட்டிற்கு காடாகவும், வருவாய்க்கு வருவாயாகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயத்தில் நிலமில்லாத விவசாயிகளுக்கு அந்த நிலத்தைக் கொடுத்து ஊக்குவித்தவர்களாவோம். ஆகவே, அந்தமாதிரியான தரிசு நிலங்களை விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுத்து, அந்த இடங்களில் பணப் பயிர் வைக்க ஆவன செய்ய வேண்டும் என்று மிக்க பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நில அடமான பாங்கிகள் வாயிலாக விவசாயிகளுக்கு நிறைய கடன் உதவி கொடுப்பதோடு,

வீடு கட்டும் திட்டத்திலே சென்னையிலே உள்ள மீனவர்களுக்கும், மற்ற குடிசை வாழ் மக்களுக்கும் தமிழக அரசாங்கம் வீடு கட்டிக் கொடுத்துக்கொண்டு வருவதுபோல மாவட்டங்களில் உள்ளவர்களுக்கும் வீடு கட்டிக்கொடுக்க திட்டமிட வேண்டும், என்று சொல்லி, எனக்குப் பேச அனுமதி அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. என். மருதாசலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கையில் சில வரவேற்கத்தக்க அம்சங்கள் இருக்கின்றன. ஆனாலும் அதில் உள்ள சில குறைபாடுகளை அரசுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதாவது நிதி நிலை அறிக்கையில் இன்று அரிசன இலாக்காவுக்காக ஒதுக்கப்பட்ட பணம் 519 லட்சம் தான். இந்த 519 லட்சமும் நல்லமுறையில் அரிசனங்களுக்கு எந்த எந்த முறையில் உதவி செய்யவேண்டும் என்கிற எண்ணத்தோடு ஒதுக்குகிறோமோ அந்த அந்த காரியங்களுக்கு செலவு செய்யப்படுவதில்லை என்பது என் கருத்து.

குறிப்பாக சென்ற ஆண்டு பத்திரிகையில் ஒரு திட்டத்தை அறிவித்திருந்தார்கள். அரிசன மக்களுக்கு சைக்கிள் கடை வைப்பதற்கும், காப்பிக்கடை, டீக்கடை போன்றவை வைப்பதற்கும் எட்டு வருஷத் தவணையில் பணம், கடன் உதவியாக அளிக்கப்படும் என்பதாக அறிவித்திருந்தார்கள். கிராமத்தில் உள்ள அரிசன மக்கள் பேப்பரைப் பார்த்து வந்த பேப்பரை ஓட்டி வைத்துக் கொண்டு, அந்த உதவியைப் பெறுவதற்கு என்ன என்ன பாரங்களை, ப்ளான்களைப்போடவேண்டுமோ அவற்றைப்போடுவதற்கு கடன் வாங்கி 100, 200 நட்டப்பட்டார்கள். மணியக்காரர் கையெழுத்து, தாசில்தார் கையெழுத்து என்றெல்லாம் ஓடி ஓடி வாங்கி அனுப்பினார்கள். இதுவரையிலும் எந்த அரிசனனுக்கும் அந்தப் பலன் கிடைக்கவில்லை. போட்ட திட்டப்படி எவ்வித உதவியும் செய்யவில்லை. அரிசனங்கள் ஏமாந்து இருக்கிறார்கள். அதைப் பரிசிலனை செய்து அந்த உதவி அவர்களுக்கு கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக அரிசனங்கள் நீண்ட நெடுங்காலமாக சர்க்கார் புறம் போக்கு நிலங்களில் பயிர் செய்து வருகிறார்கள். அப்படிப் பயிர் செய்து வருகின்றவர்கள் யாருக்கும் பட்டா கொடுக்கப்படவில்லை. தொந்தரவு கொடுக்காமலாவது இருக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. உதாரணமாக கோவையில் அரிசன்—அவர் ஒரு தியாகியும்கூட—தியாகி பென்ஷன் வேண்டாம், பூமிதான் வேண்டுமென்று கடந்த 7 ஆண்டுகளாக சர்க்கார் புறம்போக்கு நிலத்தில் பயிர் செய்து வருகிறான். அவனுடைய பிள்ளை தேச பாதுகாப்புக்காக மிலிட்டரியில் பணியாற்றி வருகிறான். அப்பேர்ப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த அந்த அரிசனையே பல ஆண்டுகளாகச் சாகுபடி செய்து வருகிற பூமியை விட்டு வெளியே போகச் சொல்லி இரண்டு, மூன்று மாதங்களாகத் தாசில்தார் தொந்தரவு செய்து வருகிறார்.





மரம், மட்டை வைத்துப் பலன் கொடுக்கிற சமயத்தில் இந்த மாதிரியாகச் செய்கிறார்கள். ஆகவே அரசு இதுபற்றி கவனித்து புறம் போக்கு நிலங்களில் பலகாலமாகச் சாகுபடி செய்து வருகிற அரிசனங்களுக்கே அந்த நிலங்களைப் பட்டா செய்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தமிழ்நாட்டில் அரிசன மக்களுக்கு வீடு கட்டிக் கொள்ள மனைக்கட்டு வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த அதிகாரிகளைப் போட்டிருக்கிறோம். இந்த அரிசன ஆபீசர்களே மோசமாக நடந்துகொள்கிறார்கள் என்று கூற விரும்புகிறேன். வீடு இல்லாத தாழ்த்தப்பட்டவர்கள் விண்ணப்பம் கொடுத்தால் இந்த அதிகாரிகள் அந்த நிலக்காரர்களிடம் சென்று அரிசனங்களுக்காக அந்த நிலங்களை எடுத்துக்கொள்ளக்கூடும் என்பதைத் தெரிவித்து விடுகிறார்கள். அவர்கள் கோர்ட், ஸ்டே என்று போய்விடுகிறார்கள். இதனால் பல நூற்றுக்கணக்கானவர்களுக்கு வீட்டுமனை கிடைக்கவில்லை. இதைப்போக்கவேண்டுமானால் அரசு அவசரகாலச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். மிலிட்டரிக்கு நிலம் எடுக்கிற மாதிரி அந்த பூமியை எடுத்து அரிசன மக்களுக்குப் பகிர்ந்து கொடுத்தால்தான் வீடு இல்லாப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்போதுதான் இந்த அரசு அரிசன மக்களிடத்தில் நல்லபெயர் வாங்க முடியும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கல்லூரியில் தங்கிப் படிக்கிற அரிசன மாணவர்களுக்கு மாதம் 50 ரூபாய் கொடுக்கிறார்கள். இது போதவே போதாது. நாள் ஒன்றுக்கு 2 ரூபாய் என்பதாக மாதம் 60 ரூபாயாவது கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்தபடியாக உயர்தரப் பாடசாலையில் தங்கிப் படிக்கிற மாணவர்களுக்கு உணவுக்காக மாதம் 20 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இது போதவே போதாது. ஐம்பது ரூபாயாகவாவது உயர்த்திக் கொடுத்தாக வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்களுடைய பகுதி கோவை நகரமானது ஒரு தொழில் கேந்திரமான நகரம். அந்த நகரத்தில் இன்றைக்குப் பல மில்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அப்படித் திறக்கப்பட்ட மில்களில் ரொம்ப மட்டரகமான முறையில் வேலை வாங்கப்படுகிறது. ஒவ்வொரு தொழிலாளியும் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டு 3 மடங்கு வேலைப் பளு சுமத்தப்படுவதனால் கஷ்டப்படுகிறார்கள். ஒரு புறம் வேலைப்பளு என்றால் சம்பளமாவது 10ந் தேதிக்கு ஒழுங்காகத் தரப்படுகின்றதா என்றால் இல்லை. 15 தேதி, 20 தேதி என்று அதிலும் பாதிப் பாதி சம்பளமாகத் தரப்படுகிறது. இன்னும் பங்கஜா மில், முருகன் மில் இரண்டும் அந்த நகரத்தில் மூடப்பட்டு கிடக்கின்றன. அதன் தொழிலாளர்கள் மில்லைத் திறந்து தொழில் நடத்தவேண்டும், தங்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சியாளரைச் சென்று பார்த்து வருகிறார்கள். முருகன் மில்லையும், பங்கஜா மில்லையும் எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். மருதாசலம்] [1970 மார்ச் 2

அடுத்தபடியாக, எங்களுடைய பகுதியில் புஞ்சை நிலங்கள்தான் அதிகமாக இருக்கின்றன. நஞ்சை நிலங்கள் கிடையாது. நஞ்சை நிலங்களின் மீது கொடுக்கப்பட்ட இரண்டு வருஷ, மூன்று வருஷக் கடனை ஒரே தவணையில் வசூலிக்கிறார்கள். போன 11-ம் தேதி மகாநாடு நடத்தி விவசாயப் பெருமக்கள் கடனை ஒத்திவைக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். முதல் தவணையை வசூலித்து, அந்த அந்த வருஷக் கடைசியில் பாக்கி தவணைகளை வசூலிக்க அரசு உத்தரவு போட்டால்தான் விவசாயிகளுக்கு அனுகூலமாக இருக்கும். இதற்கான உத்தரவைப்போட வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள். 8¼ பைசாவாக இருந்ததை இப்போது 10 பைசாவாக உயர்த்தியிருக்கிறார்கள். மின்சாரக் கட்டணத்தை அரசு பழைய மாதிரியே 8¼ பைசாவாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

திரு. ரா. ரத்தின தேவர்: தலைவர் அவர்களே, 1970-71-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது சில வார்த்தைகளை அதனை வரவேற்றுக் கூறுகிறேன். நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்பொழுது இந்த நல்லமுறையிலே ஏழைகளுக்கு வாய்ப்பு அளிக்கக்கூடிய முறையிலே இருக்கிறது. இருந்தாலும் எந்த அளவுக்கு தமிழக அரசு ஏழைகளுக்கு வரி விதிக்காமல் இருக்கிறதோ அதைப் பாதிக்கக்கூடிய வகையிலே மத்திய அரசாங்கம் வரி போட்டிருக்கிறார்கள். அதனால் ஏழை மக்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமையிலே இருக்கிறார்கள். 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற முறையிலே இன்றைக்குக் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டம் போன்ற பகுதிகளிலே எத்தனை ஸ்டாண்டர்டு ஏக்கர்கள் இருந்தாலும் ஒரு மழையில்லை என்றால் அவர்கள் பாடு கூலிக்காரன் என்ற முறையிலேதான் நடந்து கொண்டிருக்கிறது. நீர்ப்பாசன வசதிகள் உள்ள மாவட்டங்களுக்கு இந்தத் திட்டம் ஏதுவாக இருக்கும். எங்கள் மாவட்டம் போன்ற பகுதிகளிலே தண்ணீர் வசதியில்லாமல் பற்றாக்குறையாக இருக்கின்ற காரணத்தால் குறிப்பாக ஒரு குடும்பத்திற்கு 4 அல்லது 5 பேர்கள் இருக்கக்கூடிய குடும்பம் என்றால் இத்தனை ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்ற வரம்பு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில். 1966–67, 1967–68-ம் ஆண்டுகளைக் காட்டிலும் மின் இணைப்புகள் அதிகமாகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை நாம் நடைமுறையிலே பார்க்கிறோம். இராமநாதபுரம் மாவட்டத்திலே முதுகுளத்தூர் தாலுகாவிலே கிராமப்புறங்களிலே விசையேற்றங்கள் முன்னாலே பார்த்ததே கிடையாது, ஆனால் இப்பொழுது அங்கே பரவி வருகிறது என்பதை நடைமுறையிலே பார்க்கிறோம். நிதிநிலை அறிக்கையில் அதைப் பற்றிச் சொல்லப்பட்டிருந்தாலும் மீண்டும் அதை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைத்தவிர தொழிற்சாலைகளுக்கு எந்த அளவுக்குக் குறைவாக மின்சாரக் கட்டணம்



1970 மார்ச் 2] [திரு. ரா. ரத்தின தேவர்]

வாங்கப்படுகிறதோ அந்த அளவுக்கு குறைவாக அந்தப் பகுதி மக்களுக்கும் மின் கட்டணம் குறைவாக வாங்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வறட்சி நிவாரணப் பிரச்சினையிலே போன ஆண்டு தமிழக அரசு நல்ல முறையிலே பல லட்சக்கணக்கான ரூபாய்களை அளித்தது. அது வரவேற்கவேண்டியது. வறட்சி நிவாரண வேலைகளிலே சில கிராமங்களிலே இணைப்புச் சாலைகள், கால்வாய் தூர் எடுத்தல் போன்ற வேலைகள் எல்லாம் மாவட்ட ஆட்சியாளர் அவர்களைக் கொண்டு நல்ல முறையிலே நடந்திருக்கிறது. இந்த ஆண்டும் அந்தப் பகுதிகளிலே மழையில்லை. எனவே முதுகுளத்தூர், பரமக்குடி, இராமநாதபுரம் போன்ற பகுதிகளிலே எப்போதுமே வறட்சி நிலைமை எப்படி என்பதைப்பற்றி எல்லா அமைச்சர்களுக்கும் தெரியும். இப்பொழுதும் அப்படிப்பட்ட நிலைமைதான் இருக்கிறது. எனவே இந்தப் பகுதிகளை பஞ்சப் பிரதேசங்கள் என்று பிரகடனம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பிற்பட்ட வகுப்பினர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் மிகுந்த பகுதிகளிலே ரோடுகள், குடிதண்ணீர் வசதிகள் இவற்றை 5 ஆண்டுகளுக்குள் செய்யவேண்டும் என்று இருப்பதை நிதிநிலை அறிக்கையில் பார்த்தேன். வாஸ்தவம். அரிசன மக்களுக்கு கொடுக்கப்பட்ட அரிசனக் காலனிகளில் சில இடங்களில் வீடுகளே இல்லாத அளவுக்கு பழுதடைந்திருக்கின்றன. புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீடுகள் பழுதடைந்திருக்கின்றன. இதைப்பற்றி நான் ஏற்கனவே சட்டசபையிலே பேசியிருக்கிறேன். எனவே அப்படிப்பட்ட காலனிகளைப் பழுது பார்த்து வேண்டியவற்றைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசன மக்களுக்கு 5 சென்ட் நிலம் கொடுக்கப்படுகிறது நடைமுறையிலே இருந்து கொண்டிருக்கிறது. வீடு இல்லாதவர்களுக்கு ஏற்கனவே 5 சென்ட் கைவசம் உள்ளவர்களாக இருந்தாலும்கூட வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்படி வீடு கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பேக்வர்ட் கிளாஸ் அதாவது, பிற்பட்ட வகுப்பினர்க்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்த அளவுக்கு உத்தியோக உயர்வு, கல்விச் சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவோ அந்த அளவுக்கு உத்தியோக உயர்வும், கல்விச் சலுகைகளும் அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

முதுகுளத்தூர், திருவாடானை, இராமநாதபுரம் போன்ற பகுதிகள் கடற்கரைப் பகுதிகளாக இருப்பதால் அந்தக் கடற்கரைப் பகுதிகளின் வளத்தைப் பெருக்கி வளம் ஏற்படுத்தக்கூடிய முறை

யில் தொழில்களை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடலாடிப் பகுதியில் சால்ட் இண்டஸ்ட்ரீஸ் ஆரம்பிக்கக்கூடிய ஏது இருக்கிறது. பூர்வாங்க வேலைகள் எல்லாம் அதற்காக முடிவடைந்து அதிகாரிகளிடமிருந்து தகவல்கூட வந்திருக்கும் என்று நினைக்கிறேன். அந்த சால்ட் இண்டஸ்ட்ரீஸ் ஆரம்பிக்கப் பட்டால் பல ஆயிரக்கணக்கான ஏழை விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடியதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே பார்க்கும்பொழுது நீர்ப்பாசனத் திட்டங்கள் எங்களுடைய பகுதியிலே குறிப்பாக ஒன்றும் சொல்லப்படவில்லை. அந்த டிமாண்ட் வரும்பொழுது நீர்ப் பாசனத் திட்டங்களைச் சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் பேரவை ஒற்றி வைக்கப்பட்டு, மீண்டும் நாளை காலை 9 மணியளவில் கூடும். வணக்கம்.

பி.ப. 1-28

பின்னர், பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

## 6. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders*

@ 158. Statement of guarantees given by he Government of Tamil Nadu to the State Housing Board under the Tamil Nadu State Housing Board Act, 1961. [*Laid on the Table of the House under section 92 of the Tamil Nadu State Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961).*]

### B. *Reports, Notifications and other papers*

@ 59. Return of Assets submitted to the House by Hon. the Minister for Religious Endowments and Members of the Legislative Assembly (vide names below) :—

Hon. Thiru K. V. Subbiah, Minister for Religious Endowments.

*Members.*

1. Thiru M. Anandan,
2. Thiru A. Govindarasan,
3. Thiru N. Kasiraman,
4. Thiru S. Meiyappan,
5. Thiru N. Nachimuthu,
6. Thiru K. R. Nallasivan,
7. Thirumathi V. P. Palaniammal,

@ Laid on the Table of the House on 28th February 1970.



8. Thiru M. Rajangam.
9. Thiru A. R. Subbiah Mudaliar,
10. Thiru C. V. Velappan and
11. Thiru A. Velladurai.

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

## செவ்வாய்க்கிழமை, 1970 மார்ச் 3.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### *Fire accident at Chetput*

* 169 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that a fire accident broke out on the night of 17-11-1969 at Jyothiammal Nagar and Brindavanam area of Jaganathapuram in Chetput, Madras ;

(*b*) if so, the total loss of property and the total number of persons who lost their lives ;

(*c*) whether it is a fact that there was some delay in the arrival of the fire engines ;

(*d*) whether the fire hydrants in that area were in working condition ; and

-(*e*) if not, the reasons therefor?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) சுமார் ரூ. 80,000 மதிப்புள்ள சொத்து சேதமடைந்தது. 32 வயதுள்ள பெண் ஒருவரும், 6 வயதுள்ள சிறுவன் ஒருவனும் உயிரிழந்தனர்.

(உ) இல்லை. தீ விபத்து குறித்த தகவல் 21.55 மணிக்கு தீயணைப்புத் தகவல் அறைக்குக் கிடைத்தது. முதல் தீயணைப்பு வண்டி, தீ விபத்து நடந்த இடத்தை மூன்று நிமிடங்களில், அதாவது 21.58 மணிக்கு அடைந்தது. இரண்டாவது வண்டி நான்கு நிமிடங்களில் அதாவது 21.59 மணிக்கு அந்த இடத்தை அடைந்தது. ஏனைய தீயணைப்பு வண்டிகள் அதன் பின்னர் குறைந்த இடைவெளிகளில் தீ விபத்து நடந்த இடத்தை அடுத்தடுத்து அடைந்தன.

(எ) & (ஒ) இல்லை. இந்தப் பகுதியில் இருந்த தீயணைப்பு நீர்க் குழாய்களில் தண்ணீர் அழுத்தம் மிகவும் குறைவாக இருந்ததால் வண்டியிலுள்ள தீயணைப்பு பம்புகள் தீயணைப்பு நீர்க்குழாய்களிலிருந்து நீரை இழுக்க இயலவில்லை.

Dr. H. V. HANDE : While I am grateful to the Hon. Chief Minister for having come to the spot that night at 12-30, may I know whether there is any programme to give compensation to those who have lost their property? Even the previous day there was a fire accident in the same place, and some of the houses were unfinished because no compensation was paid. In view of the fact that there has been this serious accident, will the Govtrnment reconsider the matter and evolve some programme to give some benefit to the victims?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* இப்பொழுது உதவித் தொகையாக சுமார் இருபதாயிரம் ரூபாய் அளவில் அங்கு செலவழிக்கப்பட்டிருக்கிறது. 183 குடிசைச் சொந்தக்காரர்களுக்குக் குடிசைக்காக 60 ரூபாயும், துணிக்காக இருபது ரூபாயும் கொடுக்கப்பட்டிருக்கிறது. குடிசைகளில் வாடகைக்குக் குடியிருக்கிற 227 பேர்களுக்குத் துணிக்காக மட்டும் தலைக்கு இருபது ரூபாய் தரப்பட்டிருக்கிறது. ஆக, சுமார் இருபதாயிரம் ரூபாய் அளவிற்கு செலவழிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஏதாவது தேவைப்படும் என்று தெரியுமானால் அந்த உதவிகளைச் செய்யவும் அரசு தயங்காது.

*திரு. ந. தருமலிங்கம் :* துணைத் தலைவர் அவர்களே, சென்னைமாநகரில் முன்பெல்லாம் அடிக்கடி தீ விபத்து ஏற்பட்டது. இப்பொழுது அவ்வாறு இல்லை என்பதற்குக் காரணம், தீ வைத்தே பழக்கப்பட்டவர்கள் தங்களைத் திருத்திக் கொண்டார்களா, அல்லது காலம் வரட்டும் என்று காத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* அப்படி யாராவது இருந்தால் அவர்களை இந்தக் கேள்வியின் மூலம் தூண்ட வேண்டிய அவசியம் இல்லை. இப்பொழுது பொதுவாக இந்தத் தீ விபத்துக்கள் குறைந்து வருகின்றன. போலீசார் இதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். போலீஸ் 'வேன்' களில் போலீசார் அடிக்கடி குடிசைப் பகுதிகளுக்குச் சென்று ஒலிபெருக்கி மூலம் அங்கிருக்கின்ற குடிசைவாழ் மக்களை எச்சரிக்கிறார்கள். அடுப்பு போன்றவைகளில் நெருப்புகளை அணைக்காமல் வைக்கவேண்டாம், விளக்குகளைக் கீற்றோரங்களில் வைக்க வேண்டாம் என்று போலீசார் வேன்களில் அடிக்கடி சென்று எச்சரிக்கை செய்து வருகிறார்கள். அதுவும் இந்தத் தீ விபத்துக்களைத் தடுப்பதற்குள்ள ஒரு காரணமாக இருந்து வருகிறது.

*திரு. கே. விநாயகம் :* போன ஆண்டு குடிசைப் பகுதிகளில் நடந்த தீ விபத்துக்களைப்பற்றி ஆராய ஒரு கமிஷன் நியமிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு, அந்தக் கமிஷன் தன்னுடைய அறிக்கையில், ஏதோ தீப்பிடிக்காத வீடுகள் கட்டித் தருவார்கள் என்பதற்காக அங்கிருக்கின்ற மக்கள் ஆசையின் விளைவாக— அத்தகைய ஆசையினால் தூண்டப்பட்டு— அப்படிச் செய்கிறார்கள்



என்று குறிப்பிட்டிருக்கிறதே, அது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? யாரோ ஒரு அரசியல் கட்சி என்றால், எந்தக் கட்சி என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியுமா ?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* இதை அப்போதே— பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபோதே— திட்டவட்டமாகச் சொல்லியிருக்கின்றார்கள். எந்த அரசியல் கட்சியும் திட்டமிட்டுச் செய்வதாக ஒத்துக்கொள்ள முடியாது. ஆனால், முன்பு ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவராகக் கருதப்பட்டார். அதுவே தவிர, எந்தக் கட்சியும் திட்டமிட்டு இந்தக் காரியத்தைச் செய்கிறது என்று எப்போதும் யாரும் சொல்லவில்லை.

*திரு. சி. கோவிந்தராசன் :* தீயினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 80 ரூபாய்— துணி ரூபத்திலும் பண ரூபத்திலும்— கொடுக்கப்படுகிறது. 50 ரூபாயும் அதற்கு மேலும் மாத வருமானம் இருப்பவர்களுக்கு இந்த உதவித் தொகை கிடையாது என்ற நிலை இருக்கிறது. இந்த வரம்பு எப்போதோ ஏற்படுத்தப்பட்டது. எனவே, இந்த வரம்பை ரூ. 200 அளவுக்கு உயர்த்த அரசு முன் வருமா ?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* இப்பொழுது அதுபோல் வருமான அடிப்படையில் எதுவும் கொடுப்பதாக இல்லை. நான் இங்கு படித்த பட்டியலில், 183 குடிசைச் சொந்தக்காரர்களுக்கு குடிசைக்காக 60 ரூபாயும், துணிக்காக 20 ரூபாயும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தைத்தான் இங்கே சொன்னேன்.

*திரு. கரு. சீமைச்சாமி :* சார், காலையில் அஸ்திவாரமிட்டு, மாலையில் தீப்பிடிக்காத வீடு கட்டித் தருவதாக திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் சொன்னார்களே அதுமாதிரி தீப் பிடிக்காத வீடுகள் கட்டப்பட்டனவா ? அரசாங்கம் அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டதா ? அல்லது, கைவிட்டுவிட்டதா ?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* காலையில் அஸ்திவாரம், மாலையில் வீடு, பொழுதுவிடிந்தால் இருக்குமா என்று தெரிந்து கொண்டபிறகுதான் அவைகளைப் பற்றியெல்லாம் ஆராயவேண்டும்.

Thiru T. MARTIN : Sir, the Hon. Chief Minister stated that a Congressman was arrested in connection with the arson case. May I request the Hon. Chief Minister to state whether it is not a fact that Congressman was finally acquitted, in accordance with the judgment passed by the High Court.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* நான் இங்கு சொன்னதே, எந்த அரசியல் கட்சியும் திட்டமிட்டுச் செய்யவில்லை, கைது செய்யப்பட்ட ஒருவர் காங்கிரஸ்காரர் என்று கருதப்பட்டார் என்பதுதான். வழக்கின் முடிவையும் வழக்குத் தொடரப்பட்டவர் மீது குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்றும் தெரிவித்ததற்கு நன்றி, இந்த முடிவு ஏற்கனவே அனைவருக்கும் தெரியும்.

[1970 மார்ச் 3

### Arrest of workers of Standard Motor Products of India

* 170 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether a number of workers of the Standard Motor Products of India were arrested in Madras City about 29th October, 1969 ; and

(*b*) if so, the circumstances under which they were arrested?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) சென்னை மாநகரக் காவல் துறைச் சட்டத்தின் 41-வது பிரிவின்படி விதிக்கப்பட்ட தடை ஆணையை மீறி, ஒவ்வொரு பிரிவிலும் இருபத்தைந்து பேர் கொண்ட இரு பிரிவுகளாகத் தொழிலாளர்கள் வெல்லிங்டன் பாலத்தில் நுழைந்தபோது, காவலர்கள் தக்க எச்சரிக்கை கொடுத்த பின்னர் அவர்களைக் கைது செய்தனர்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: இந்த அரெஸ்ட் செய்யப்பட்ட தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டுள்ளார்களா? இப்பொழுது அவர்களுடைய கோரிக்கைகள் எவையேனும் நிறைவேற்றப்பட்டனவா? நிலைமை இப்பொழுது எப்படி இருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்கள் எழும்பூர் இரயில் நிலையத்தில் இறங்கி ஸ்டாண்டர்டு மோட்டார் ப்ராடெக்ட்ஸ் அலுவலகத்திற்கு ஊர்வலமாகச் செல்ல வேண்டுமென்று அறிக்கை விடுத்திருந்தார்கள். அங்கே - அந்தப் பகுதியில் - அப்படி ஊர்வலம் செல்லக்கூடாது என்று தடை போட்டு நிறுத்தினார்கள். ஊர்வலம் வந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அப்படிக் கைது செய்யப்பட்ட அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்கள். அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகளும் திரும்பப் பெறப்பட்டன. இப்பொழுது நிலைமை அங்கே அமைதியாகி, ஆர்பிட்ரேஷன் மூலமாகத் தங்களுடைய கோரிக்கைகளைத் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்ற அளவிற்கு முடிவு செய்யப்பட்டு, நானும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரும் சம்பந்தப்பட்ட நிர்வாகிகளிடமும் தொழிற்சங்கத் தலைவர்களிடமும் பேசி ஒரு சுமுகமான முடிவு இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி: இப்படித் தொழிலாளர்கள் நடத்துகிற போராட்டங்களில் பல நேரங்களில் பல தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் தொழிலாளர் மீது இருக்கும் அக்கறை காரணமாக அந்த வழக்குகளை வாபஸ் பெற்றிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அந்த வழக்குகள் பெரும்பாலும் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன. அது மாத்திரமல்லாமல், அப்படிக் கைது செய்யப்பட்ட தொழிலாளர்களும் உடனடியாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.



1970 மார்ச் 3]

திரு. இல. பலராமன்: இந்த ஸ்டாண்டர்டு மோட்டார்த் தொழிற்சாலையைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பார்வையிடச் சென்றபோது, தொழிலாளர்கள் நிர்வாணமாக அவர்களுக்குக் காட்சியளித்தார்கள் என்ற விவரம் அரசுக்குத் தெரியுமா? அது பற்றி அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அந்தச் சங்கடமான விவரம் இதுவரை அரசுக்குத் தெரியவில்லை.

### நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டிற்கான இடங்கள்

* 171 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கருத்தடை திட்டத்தை நமது மாநில அரசு தீவிரமாக நடத்துவதால் மக்கள் தொகை அடிப்படையில் பாராளுமன்றத்தில் நமது மாநிலத்தின் விகிதாசாரம் குறையாமல் இருக்க நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசை நமது மாநில அரசு வலியுறுத்தியுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆம்.

திரு. என். கிட்டப்பா: இந்தக் கருத்தடை தீவிரமாக நமது தமிழ் நாட்டில் நடத்தப்படுவதன் காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 41-இலிருந்து 39 ஆகக் குறைந்து விட்டது. இப்படிக் கருத்தடையை அதிகத் தீவிரமாக செயல் படுத்தியதின் விளைவாக இரண்டு இடங்கள் குறைந்துவிட்டதை எடுத்துக்காட்டி, கருத்தடைத் திட்டத்தை இனியும் தீவிரமாக்க வேண்டுமானால் இழந்த அந்த இரண்டு இடங்களையும் திரும்பத் தரவேண்டும் என்று வலியுறுத்தி அந்த இரண்டு இடங்களையும் திரும்பப் பெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதை நாம் இப்பொழுது வலியுறுத்திக் கொண்டுதான் இருக்கிறோம்.

திரு. ரா. ராமச்சந்திர துரை: இந்தக் கருத்தடை திட்டத்தைத் தீவிரமாக இந்த மாநில அரசு நடத்துவதைக் குறித்து எந்தவித மான மறுப்பும் கிடையாது. ஆனால், ஒவ்வொரு ஆசிரியரும் மூன்று நான்கு பேர்களை ஒவ்வொரு மாதமும் கொண்டுவந்து கருத்தடைக்கு விடவேண்டும் என்று யூனியன்களிலும் மற்ற இடங்களிலும் வற்புறுத்தப்படுவதாகச் சொல்லுகிறார்களே அது உண்மையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியில் குற்றச்சாட்டு இருக்கக் கூடாது.

திரு. ரா. ராமச்சந்திர துரை: அத்துடன் மாத்திரமல்லாமல், திருமணமாகாத வாலிபர்களையும் கொண்டுபோய்க் கருத்தடை செய்வதாகச் சொல்லுகிறார்களே, அதுவும் உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இரண்டுமே அவருக்குத் தெரியாத காரணத்தால், 'என்ன, 'உண்மையா?' என்று கேட்கிறார். தெரிந்து கொண்டு கேட்டால் விவரம் அளிக்கலாம்.

திரு. வி. எஸ். எஸ். மணி: கருத்தடைத் திட்டத்தை நமது அரசு தீவிரமாக்கும் நேரத்தில் பாராளுமன்றத்தில் விகிதாசாரம் குறைந்துவிடும் என்ற நிலைமை இருந்தாலும் கூட, இந்து சமுதாய மக்கள் மட்டுமே கருத்தடை செய்து கொள்ள முன்வருகின்ற காரணத்தாலும், கத்தோலிக்க கிறிஸ்தவர்களும், முஸ்லீம் சமூகத்தினரும் கருத்தடை செய்து கொள்ள முன்வராத காரணத்தாலும், இந்து சமூகத்தினரின் மக்கள் தொகை குறைந்து கிறிஸ்த்தவ, முஸ்லீம் சமூகத்தினரின் மக்கள் தொகை அதிகரித்து அவர்கள் இந்து சமூகத்தினரின் மேல் ஆதிக்கம் (டாமினேட்) செலுத்தும் நிலைமை ஏற்படும் அல்லவா? இந்த நிலையைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மற்ற மதத்தினருக்கு மத சம்பந்தமான சிக்கல்கள் இருந்தாலும் அந்த மதத்திலே உள்ளவர்களும் மெல்ல மெல்ல கருத்தடையை ஆதரித்து வருகிறார்கள்.

திரு. கே. போஜன்: நமது முதலமைச்சர் பதிலளிக்கையில் பாராளுமன்றத்தில் விகிதாசாரத்தைக் குறைக்கக்கூடாது என்று மத்திய அரசுக்கு எழுதி இருப்பதாகக் கூறினார்கள். அதற்கு மத்திய அரசிடமிருந்து பதில் வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இரண்டு நாளைக்கு முன்பு வந்த, சம்பந்தப்பட்ட மத்திய அரசு சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சரிடம் இந்தக் கருத்தை வலியுறுத்திக் கூறியிருக்கிறேன். அவரும் இதை அனுதாபத்தோடு கேட்டு மத்திய அரசிடம் கூறுவதாகக் கூறியிருக்கிறார். பொதுவாக மக்கள் தொகை அதிகரிப்பின் சதவிகிதத்தைப் பற்றி உறுப்பினர்களிடத்தில் எடுத்துச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். 1951-ல் இருந்து 1961-ம் ஆண்டு வரையில் தமிழ் நாட்டில் மக்கள் தொகையின் அதிகரிப்பு சதவிகிதம் 11.85 என்ற அளவுக்குத்தான் ஆகியிருக்கிறது. ஆந்திரம், உத்திரப் பிரதேசம் ஆகிய இரண்டு மாநிலங்கள் தவிர மற்ற இடங்களில் எல்லாம் இந்த அதிகரிப்பு அதிகமாக இருக்கிறது. அஸ்ஸாமில் 34.45; பீகாரில் 19.77; குஜராத்தில் 26.88; கேரளாவில் 24.76; மத்தியப் பிரதேசத்தில் 24.17; மகாராஷ்டிராவில் 23.06; மைசூரில் 23.57; ஒரிஸ்ஸாவில் 19.82 என்ற அளவுக்கு மக்கள் தொகை சதவிகித அதிகரிப்பு இருக்கிறது. தமிழ்நாட்டில் 11.85 என்ற அளவுக்குத்தான் இருக்கிறது. நமக்குப் பாராளுமன்ற இடங்கள் 41 ஆக இருந்தது 39 ஆக ஆகியிருக்கின்றன. ஆந்திரத்தில் 43 இடங்கள் 41 ஆக ஆகியிருக்கின்றன. அஸ்ஸாமில் 12 இடங்கள் 14 ஆக ஆகியிருக்கின்றன. குஜராத்தில் 22 இடங்கள் 24 ஆக ஆகியிருக்கின்றன. கேரளாவில் 18 இடங்கள் 19 ஆக





ஆகியிருக்கின்றன. மத்தியப் பிரதேசத்தில் 36 இடங்கள் 37 ஆக ஆகியிருக்கின்றன. ஆகவே, இவற்றை எல்லாம் சுட்டிக்காட்டி பாராளுமன்ற இடங்களை 1951-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி ஒதுக்கவேண்டுமென்று இந்த அரசு தெரிவித்திருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: இப்போதுள்ள ஜனத்தொகைக்கு மேல் பெருகக்கூடாது என்ற அடிப்படையில் கருத்தடை செய்ய வேண்டுமென்று மத்திய சர்க்கார் உத்தரவா? இருக்கக்கூடிய ஜனத்தொகைக்கு மேல் அதிகரிக்காமல் குறைக்கக் கூடிய அடிப்படையில் 'அறுவடை' செய்ய (சிரிப்பு) இதுவும் ஒரு அறுவடைதான் — அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்பது உத்தரவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தச் சர்க்கார், மத்திய சர்க்கார் கருத்து எல்லாம், இருப்பதை அறுவடை செய்ய வேண்டுமென்பது அல்ல. புதிதாக வரும் பயிர்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதுதான்.

திரு. எஸ். இராமச்சந்திரன்: மாநிலங்களுக்குப் பாராளுமன்ற இடங்களை ஒதுக்குவதில் பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை சென்ஸஸ் எடுப்பதை வைத்துத்தான் நிர்ணயிக்க வேண்டுமென்று அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ளதாகவும், அதைத் திருத்தினால் தான் நம்முடைய கோரிக்கை சாத்தியமாகும் என்றும் சொல்வது உண்மையா? அந்த நிலையில் உற்பத்திப் பெருக்க விகிதம் என்ற ஒன்று இருக்கிறது. 1951-ல் எல்லா மாநிலங்களுக்கும் பொதுவாக வைத்து அதற்குப் பிறகு ஏற்பட்டிருக்கின்ற 'ஃபெர்டிலிடி ரேட்' வைத்து சென்ஸஸ் கணக்கு எடுக்க நமது அரசு இந்தியப் பேரசுக்கு ஆலோசனை கூறுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: உறுப்பினர்கள் அவர்கள் கூறியது போல் அரசியல் சட்டத்தில் இருப்பது உண்மை. அதைத் திருத்தவேண்டுமென்று மத்திய சர்க்காரிடம் வலியுறுத்தி வருகிறோம்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது ...: மனிதனுக்குள்ளே போய் விட்டால் மதி வெளியேறிவிடுகிறது என்ற காரணத்தால் பத்து கோடி ரூபாய் வருவாய் வருவதைக் கூடப் பார்க்காமல் காந்தியடிகளின் தத்துவத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நம் அரசாங்கம், மனித குலத்தின் ஒழுக்கத்திற்கு ஊறு விளைவிக்கின்ற ஒன்று கருப்பையில் கை வைப்பது என்ற காந்தியடிகளின் கருத்தை ஏற்று, மத்திய அரசு ஏதோ சில கோடி ரூபாயைக் கொடுக்கிறது என்ற காரணத்திற்காக இந்த அரசு கருத்தடைத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளாமல் ... த் திட்டத்தை எதிர்க்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்போதிருந்த நிலைமையில் காந்தியடிகள் அப்படிக் கூறினார். இன்றைக்கு இருந்தால் கருத்தடையை இரட்டிப்பான முறையில் செய்யவேண்டுமென்றுதான் அவர் கூறுவார்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** மக்கள் அடிப்படையில் பாராளுமன்றத்தில் இடங்களை ஒதுக்குவதில் இருக்கும் சிக்கல்களை மாற்றுவதற்கு மாற்றுத் திட்டமாக மத்திய அரசிடம் இந்த அரசு என்ன யோசனை கூறியிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாற்றுத் திட்டத்தைத்தான், இங்கு மாத்திரம் அல்ல, மத்திய அரசிடமும் எடுத்துக் கூறியிருக்கிறோம். 1951-ஆம் ஆண்டு சென்ஸஸ் அடிப்படையில் இடங்களை ஒதுக்குவதை நிர்ணயிக்க வேண்டுமென்பதுதான் மாற்றுத் திட்டம்.

**திரு. மா. பா. சாரதி :** குடும்ப நலத் திட்டம் மேலும் நல்லபடி நடைபெற கருச் சிதைவுத் திட்டத்தை அரசு கையாளுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதுபற்றி இப்போது மத்திய அரசு யோசித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. உறுப்பினர் அவசரப்பட வேண்டாம்.

**திரு. கே. விநாயகம் :** பாராளுமன்றத்தில் அதிகமான இடங்களைப் பெறுவது நம்முடைய முக்கியமான லட்சியமா அல்லது ஜனத்தொகையைக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலம் குறைப்பது முக்கியமான லட்சியமா? இதிலே அமைச்சருடைய பரிந்துரை என்ன ? எங்களை எந்த[illegible]ம் அந்த வேலையிலே இறங்கச் சொல்லுகிறீர்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நம்முடைய நோக்கம் மக்கள் தொகை குறைக்கப்பட வேண்டும் என்பது. அதாவது புதிதாக உற்பத்தியாவதைக் குறைப்பது என்பது. ஆனால் அந்த அடிப்படையில் பாராளுமன்ற இடங்களை ஒதுக்கக்கூடாது ; 1951-ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் ஒதுக்க வேண்டுமென்பது இந்த அரசின் நோக்கம்.

## ஆசிரியைப் பயிற்சிப் பள்ளிகள்

*172 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருமங்கலத்தில் உள்ள ஆசிரியைப் பயிற்சிப் பள்ளியில், படிப்போரின் எண்ணிக்கை 80-ல் இருந்து 40-ஆகக் குறைக்கப்பட்டிருப்பதை மீண்டும் 80-ஆக உயர்த்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.





**திரு. என். எஸ். வி. சித்தன் :** மக்கள் தொகை உயர்ந்து வரும் இந்த நேரத்தில் இப்படி இடங்களைக் குறைப்பதால் படிப்பதற்கு வசதி குறைவாகும் நிலை உண்டாகிறது. ஆகவே, இருக்கின்ற வசதியைக் குறைக்காமல் பழைய நிலைக்கு உயர்த்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மக்கள் தொகைக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. மக்கள் தொகை உயர்ந்து வந்தாலும் கூட தேவைக்கேற்றபடி உற்பத்தி செய்யவேண்டும். குறிப்பிட்ட திருமங்கலம் ஆசிரியைப் பயிற்சிப் பள்ளிக்கு நான்கு வகுப்புக்கள் தரப்பட்டிருந்தன. அங்கு ஒழுங்கீனங்கள் ஏற்பட்ட காரணத்தால் இரண்டு வகுப்புகளாகக் குறைக்கப்பட்டன. மறுபடியும் ஒரு வகுப்பு தரப்பட்டு அதற்குப் பிறகும் மாணவியர்களைச் சேர்ப்பதில் ஒழுங்கீனங்களும் பணம் வாங்கும் குற்றச்சாட்டுகளும் வந்ததால், கொடுத்த அனுமதி நீக்கப்பட்டு இரண்டு வகுப்புகளாக ஆக்கப்பட்டன. நமது மாநிலத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை மேலும் கூட்டுகின்ற நிலைமை இல்லை. இப்போது இருக்கின்ற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளே போதும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, புதிதாக எந்தப் பயிற்சிப் பள்ளியையும் உருவாக்குகின்ற நிலையில் தமிழக அரசு இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒழுங்கீனங்கள் காரணமாக இந்தக் குறிப்பட்ட பள்ளியின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது என்றார்கள். நான் புதிதாக அதிகப்படுத்தச் சொல்லவில்லை. ஏற்கனவே இருந்ததைத் தொடரச் சொல்லுகிறேன். குறிப்பிட்ட பள்ளியில் ஒழுங்கீனங்கள் இருக்குமானால் வேறு பள்ளியில் 40 பிள்ளைகளைக் கொண்ட வகுப்பு தொடங்குவதற்கு அனுமதி கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான்கு வகுப்புகள் என்று இருந்ததில் இரண்டு ஜூனியர் வகுப்புகள் எடுக்கப்பட்டுவிட்டன. மாநிலத்தில் இப்போதிருக்கும் சூழ்நிலையின் அடிப்படையில் இந்த வகுப்பையும் கூட்டுவதாக இல்லை. ஆசிரியர் பயிற்சிப் பள்ளியையும் அதிகப்படுத்தும் நோக்கம் இல்லை.

*173 வினா—திருமதி வி. ப. பழனியம்மாள் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாராபுரத்தில் ஒரு பெண்கள் ஆசிரியர் பயிற்சிப்பள்ளியை ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** ஏற்கனவே எங்கள் தாராபுரத்தில் பெண்களுக்கான ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி இருந்தது. அது இப்போது வேறு ஓர் இடத்திற்கு மாற்றப்பட்டுவிட்டது.

ஆகவே புதிதாக அங்கு வேறு ஒரு பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஏற்படுத்தாவிட்டாலும் கூட, வேறு ஓர் இடத்திலுள்ள பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை எங்கள் ஊருக்கு மாற்றிக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதற்கான காரண காரியங்கள் இருக்குமானால் முறைப்படி விண்ணப்பித்து அது ஆராயப்பட்ட பிறகுதான் செய்யவேண்டும். தாராபுரத்தில் இருந்ததை வேறு ஓர் இடத்திற்கு மாற்றியிருக்கிறார்கள் என்றால் ஏதாவது ஒரு காரணத்தின் அடிப்படையில்தான் மாற்றியிருக்க வேண்டும். அது சரியா இல்லையா என்பதுபற்றி விண்ணப்பித்துக் கொள்வதன்மூலம்தான் அதைப் பரிசீலிக்கவேண்டும்.

* 174 வினா.—திரு. கே. போஜன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டத்தில் ஒரு பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி திறக்கக் கோரி, அம்மாவட்டத்தின் அபிவிருத்தி மன்றத்திலிருந்து மனு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், உடனடியாக இப்பள்ளியை நிறுவ அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. கே. போஜன் : தற்சமயம் நீலகிரி மாவட்டத்தில் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்றுமே இல்லை. எங்கள் மாவட்டத்தில் அநேக பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. நீலகிரி மாவட்டத்தில் தனியார் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்றும், கோவையில் ஒரு பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும் இருக்கின்றன. அதன் காரணமாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள பெண்களுக்கு, அதாவது மாணவிகளுக்கு அங்கு போதிய இடம் கிடைப்பதில்லை. ஆகவே, நீலகிரியில் உள்ள ஆண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் உள்ள இடத்தைக் குறைத்தாவது பெண்களுக்கு ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஊட்டியில் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று தனியார் துறையில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அது நீலகிரி மாவட்டத்திற்குப் போதுமானதாக இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நான் முதலில் எடுத்துக்கூறியுள்ளபடி ஆசிரியர் பயிற்சிக்கு வருகிறவர்களின் எண்ணிக்கை கூட, வருடாவருடம் எடுத்துக் கொள்கிற எண்ணிக்கை, குறைந்துவருவதால், அதிகமான ஆசிரியர், ஆசிரியைகளை உற்பத்தியாக்கும் நிலைமையில் இப்போது இல்லை. 1965-66ல் 12,500, 1966-67ல், 10,410, 1967-68ல் 6,750 பேர்கள்தான் தேவைப்பட்டார்கள். ஆகவே, இனிமேல் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைக்



கூட்டுவதற்கில்லை. ஆண்கள் பயிற்சிப் பள்ளியில் உள்ள எண்ணிக்கையைக் குறைத்து பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை நிறுவ முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். அது தனியாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. இப்போதுள்ள பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் அதிக இடங்கள் தேவைப்படுகிற நிலைமைகள் ஏற்படுமானால் நாற்பது இடங்களை ஐம்பது இடங்களாக மாற்றிக் கொள்கிற ஒரு தன்மையை ஆராய்ந்தபிறகு, தேவைப்படுமானால் செய்யலாம் என்று ஒரு குறிப்பு இருக்கிறது. அந்த வகையில் வேண்டி வந்தால் ஆராய்ந்து பார்க்கலாம்.

*Selection of students in teochers training schools*

* 175 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(a) whether the Government have issued orders to the Inspectors of Schools, not to select handicapped candidates, such as those affected with infantile paralysis, etc., for the Teachers' Training ; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) நடைமுறையில் இருக்கிற நிலை விதிமுறைகளின்படி, இயற்கையிலே உடல் ஊனம் உள்ளவர்கள் அல்லது ஊனக்குறைவைத் தேடிக் கொண்டவர்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் பொதுவாகச் சேர்த்துக்கொள்ளப் படமாட்டார்கள். ஆனால், அக்குறைபாடு ஆசிரியப் பணிகளைத் திறமையுடன் நிறைவேற்றுவதற்கு எவ்வகையிலும் இடர்பாடாக இராத அளவுக்குச் சிறு குறையாக இருக்கிறதெனக் கருதப் பட்டால், பள்ளிக் கல்வி இயக்குநரின் ஒப்பளிப்பைப் பெற்றுக் கொண்ட பின்னர், அவர்கள் பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளப் படலாம்.

(இ) ஆசிரியர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பயிற்சிக்குப்பின், பொதுவாக 5 முதல் 15 வயதிற்கிடைப்பட்ட சிறுவர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்கு உரியவர். உடல் ஊனம் உள்ளவர்களைக் கேலி செய்யக்கூடாதென்ற மனப்பக்குவத்தை இந்த வயது வரம்பிற்குட்பட்ட சிறுவர்களும், இளம் பருவத்தினரும் பெற்றிருக்க மாட்டார்கள். வகுப்பு ஆசிரியர்களிடம் ஊனக்குறைவு இருப்பது அவர்களைக் கேலி செய்யும் உணர்ச்சியைச் சிறுவர்களிடம் தூண்டக்கூடும்.

DR. H. V. HANDE: Sir, we cannot generalise that such persons will be made fun of by small boys and girls. Special consideration must be given to the handicapped persons especially small children affected by infantile paralysis such children may be brilliant as there are such brilliant handicapped persons even among adults. There is also a G.O. which says that those who suffer from such handicaps will be given preferential treatment or opportunities in certain jobs. So, will the Government revise its old order and see that such handicapped persons are given preference over other normal persons in regard to these posts?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** முதலில் கூறியபடி சிறிய ஊனக்குறைவு இருக்குமானால், அதனால் அவர்களுடைய பள்ளிப் பயிற்சி சொல்லிக் கொடுக்கிற தரத்தில் எந்தக் கேடும் இல்லாத வகையில் இருக்குமானால், இயக்குனர் அனுமதியோடு சேர்த்துக் கொள்ளலாம் என்று விதி இருக்கிறது. ஊனமுள்ளவர்கள் சிறு பிள்ளைகள் முன்பு சென்றால் அவர்கள் கேலி செய்கிற ஒரு சூழ்நிலை ஏற்படும். ஊனக்குறைவு இருந்தால் சிறு பிள்ளைகள் கேலியில் இறங்குவார்கள். வயது முதிர்ந்த மாணவர்களாக இருந்தால், ஊனக்குறைவு இருந்தாலும், அதனால் ஈர்க்கப்பட்டு விடக்கூடிய பண்பாடு இருக்கும். வேறு பல தொழில்களில் ஊனக்குறைவு உள்ளவர்களைச் சேர்த்துக் கொள்வதில் அதிக இடர்பாடுகள் இல்லை. எந்த வேலைகளை அவர்கள் செய்ய இயலுமோ அவற்றில் வைத்துக் கொள்வதில் தடை ஒன்றும் கிடையாது. துவக்கப் பள்ளி, உயர் துவக்கப் பள்ளி போன்றவற்றில் இந்தக் கட்டுப்பாட்டை அனுஷ்டிக்க வேண்டியிருக்கிறது. கண் சிறிது பொட்டையாக இருந்தாலும் அது சிரிக்கிற அளவிற்கு இருக்கும். கால் நொண்டியாக இருந்தாலும் அதுவும் சிரிக்கிற அளவிற்கு இருக்கும். வயது முதிர்ந்த மாணவர்களாக இருந்தால் அல்லது கல்லூரிகளில் ஊனக்குறைவை அதிகமாகக் கவனிப்பதில்லை. பெரும் புலவர் கதிரேசன் செட்டியார் அவர்கள் முழு ஊனக் குறைவு உடையவர்கள் தான். ஆனால் அவர்களது திறமை, அவர்களது அறிவு இவற்றை அறிந்து கல்லூரி மாணவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமை இருந்தது. சிறு பிள்ளைகள் படிக்கிற இடங்களில் சைகாலஜி அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. சிறிது நொண்டுபவர்கள், கையில் ஏதாவது சிறிய குறை இருப்பவர்கள் போன்ற சிறிய ஊனம் உடையவர்களுக்கு சிறிது சலுகை காட்டலாம் என்று இப்போது இருந்து வருகிறது.

**திரு. ஆர். கருப்பையா :** பொதுவாக தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு மகளிர்தான் ஏற்றவர்கள் என்று மதிப்பிற்குரிய அமைச்சர் திரு. மதியழகன் அவர்கள் கூட குறிப்பிட்டுள்ளார்கள். சேலம் மாநாட்டில் பெரியார் அவர்களுடன் இருந்தபோது முதல் மூன்று வகுப்புகளுக்கு மகளிர்தான் ஆசிரியைகளாக இருக்கவேண்டுமென்று தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளார்கள். அந்தக் கொள்கையை வற்புறுத்தும் பொருட்டாவது மகளிர்க்கான ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைத் திறக்கவும், அவர்கள் பயிற்சிப் பள்ளிகளில் உள்ள எண்ணிக்கையைக் குறைக்காமல் இருக்கவும் அரசாங்கம் முன்வருமா? பள்ளிகளில் இளம் சிறுவர்களுக்கு படிப்பு சொல்லிக் கொடுப்பதற்கு மகளிர்க்கு அதிகப்படியான வாய்ப்பை அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படி ஒரு கருத்தும் சொல்லப்படுவது உண்டு. ஆடவர்கள் வேறு பல வழிகளில் உயர்ந்த வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்கிற சூழ்நிலை



ஏற்படுமானால், வேறு பல துறைகளில் அவர்கள் ஈர்த்துக்கொள்ளப்படுகிற சூழ்நிலை ஏற்படுமானால், துவக்கப் பள்ளிகளில் கல்வி கற்றுக்கொடுப்பதற்கான பொறுப்புகளை ஆசிரியர்களிடம் விடலாம். அப்படித் தேவைப்படுகிற சூழ்நிலை வரும்போது ஆண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை மாற்றியமைக்கிற கட்டம் ஏற்படலாம். ஆனால் இப்போது அப்படிப்பட்டதொரு நிலைமை ஏற்படவில்லை. பயிற்சி பெற்றிருக்கிற ஆசிரியர்களுக்கு இடம் தேடிக் கொடுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். எதிர்காலத்தில் அவர்களுக்கு எல்லாம் வேறு துறைகளில் வாய்ப்புகள் ஏற்படுகிற சூழ்நிலை ஏற்படும்போது வேண்டுமானால் இது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால், இப்போது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அமைச்சர் அவர்கள் சிறிய ஊனம் உடையவர்களை எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். இந்த ஆண்டு வட ஆர்க்காடு மாவட்டத்தில் இராணிப் பேட்டை ட்ரெயினிங் ஸ்கூலில் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு பேர்கள் காலில் சிறிது ஊனம் இருக்கிறது என்ற காரணத்திற்காக வேண்டி அவர்கள் அட்மிட் செய்து கொள்ள மறுக்கப்பட்டார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே சிறிது ஊனம் காலில் இருக்குமானால் அவர்களையும் எடுத்துக்கொள்ள உத்தரவு இடுவார்களா? அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு சேர்த்துக் கொள்ள மறுக்கப்பட்டவர்களை இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டிலாவது எடுத்துக் கொள்ள உத்தரவு இடப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்த விஷயம் எனக்குத் தெரியுமா என்று கேட்டார்கள். எனக்கு அது தெரியாது. அது சிறிய ஊனமா அல்லது பெரிய ஊனமா என்பதைப் பற்றி ஆராய்ந்து பார்த்தால்தான் தெரியும். சிறிய ஊனம் உடையவர்களை சேர்த்துக் கொள்ளலாம் என்றிருக்கிறது, இயக்குனர் அனுமதியின் பேரில். அவர்களை சேர்த்துக் கொள்ளவில்லை என்றால் அது சிறிய ஊனமாக இருக்காது, பெரிய ஊனமாக இருந்திருக்கும். அதை அவர்கள்தான் பரிசீலித்துப் பார்க்கவேண்டும்.

### *Urban land tax collections*

* 176 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Madras Corporation has demanded share in the Urban Land Tax collections?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆம்.

**திரு. டி. மார்டின் :** எவ்வளவு தொகை கார்ப்பரேஷன் கேட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கார்ப்பரேஷன் கேட்டது, தொகையைப் பற்றியல்ல. 1967-ல் மாநகராட்சிமன்றம், மாநகராட்சி மன்றத்தால் கிடைக்கிற பலன்களால்தான் இந்த நிலங்களின் மதிப்பு உயர்ந்திருக்கிறது என்றும், நாங்கள் சாலைகள் போடுகிறோம், விளக்குகள் போட்டுக் கொடுக்கிறோம், குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கிறோம், ஆகவே இதற்கு நாங்கள்தான் பாத்தியதாரர்கள், எனவே வரி வசூலிப்பதில் நீங்கள் 10% எடுத்துக்கொண்டு எங்களுக்கு 90% ஐக் கொடுங்கள் என்று சொன்னார்கள். அரசாங்கம் அதைக் கவனிப்பதற்கில்லை என்று முதலில் நிராகரித்தது. மீண்டும் அவர்கள் 1968-ல் ஒரு தீர்மானத்தைப் போட்டு மீண்டும் புனராலோசனை செய்யவேண்டு மென்று கேட்டார்கள். அப்படிக் கேட்கும்போது 90%க்குப் பதிலாக 80% ஆவது கொடுங்கள் என்று கேட்டு தீர்மானம் போட்டார்கள். இதுபற்றிய தாவா சுப்ரீம் கோர்ட்டில் இருந்தது. அது சரியான சட்டமா, செல்லுபடியாகும் சட்டமா என்ற முடிவு வந்த பிறகு அதுகுறித்து முடிவு செய்யலாம் என்று இருந்தது. அது, அரசியல் சட்டத்திற்கு முரணானது அல்ல, செல்லும் என்று தீர்ப்பு வந்து விட்டது. அதற்குப் பிறகு மீண்டும் எந்தளவில் கொடுக்கமுடியும் என்பதுபற்றி அரசு இன்று பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவரவர்களே, நகர்ப்புறங்களி
மு.ப. 9-30 லிருந்து எவ்வளவு வரி அரசாங்கத்திற்கு வருகிறது? எவ்வளவு விகிதாச்சாரம் கார்ப்பொரேஷனுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட உத்தேசம் உண்டு?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதுபற்றிய விவரம் இந்த மன்றத்தின் முன்னால் இல்லை. தனியாகக் கேள்விபோட்டால் சொல்லலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், நகர்ப்புறங்களில் இருக்கக்கூடிய நிலத்திற்கு நகரசபையும் வசூல் செய்கிறது. அதே நேரத்தில் ரெவின்யூ டிபார்ட்மெண்டும் வசூல் செய்கிறது. இப்படி இரண்டு வரி வசூலிக்கக்கூடிய முறை சரியா? ஒன்று, ரெவின்யூ டிபார்ட்மென்ட் வசூலிக்க வேண்டும் அல்லது அந்த நகரசபை வசூலிக்க வேண்டுமென்கிற அடிப்படையில் ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அது சரியானது அல்ல. நகரசபை வரி இனங்களை நகரசபை அலுவலர்கள் வசூலிக்கிறார்கள். நம்முடைய அரசாங்கத்தின் அலுவலர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள் அரசாங்கத்திற்கான வரி இனங்களை வசூலிக்கிறார்கள். இது நிர்வாக சௌகரியத்தையும், நிலைமையையும் பொறுத்தது.

**THIRU K. VINAYAKAM :** Now that the Supreme Court has held that our Act is valid and whereas there is provision in the Act that before an assessment is made, the assessee has got an opportunity of appeal and that he must be informed beforehand how much has





been levied, does the Hon. Minister know that nowadays the tax collector is issuing the notice and immediately demanding the payment of tax, without giving an opportunity to the assessee to appeal? The scope to appeal to the appellate authority constituted by Government is thus reduced.

**THE HON. THIRU K. A. MATHIALAGAN :** The hon. Member's contention is not correct.

**DR. H. V. HANDE :** In addition to what the hon. Member Thiru Vinayakam had said, in a constituency like Park Town wherein the assessees having half a ground and one ground live, and wherein they could not enhance the rent because of the Rent Control Act, the rate per ground is as high as Rs. 40,000 or Rs. 50,000. Those people are having small holdings like half a ground and one ground and they have been living for long there. In view of the fact that they are charging only the old rent, will the Hon. Minister reconsider the whole thing and give suitable instructions to the concerned authorities to be a little more merciful to these people owning half a ground and 1 ground and will the Hon. Minister see to it that people owning less than 2 to 3 grounds are given better consideration?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்பொழுதிருக்கிற நிலவரமே இவை தெளிவாக வரிவசூல் செய்யப்படவில்லை, 2, 3 ஆண்டுகளாக. இதில் நிலைமைகள் இருக்கின்றன. இந்த நிலைமைகளில், இதை வியாஜ்ஜியமாக வைத்துக்கொண்டு இப்பொழுது ஒரு சுபாவம், எதையெடுத்தாலும், பேங்கு தேசியமயம் என்றால் கோர்ட் இருக்கிறதே, உச்சவரம்பா, ஆகா, சுப்ரீம் கோர்ட் இருக்கிறதே என்ற எண்ணங்களின் அடிப்படையிலே, நியாயமாக அறுதியிட்டிருந்தாலும், தவறானவைகள் என்ற உணர்வு இருக்கிறது. மதிப்பிற்குரிய திரு. ஹாண்டே அவர்கள் சொல்வது மாதிரி நியாயமாக இருக்குமானால் கண்டிப்பாக அந்தந்தக் கட்டத்திலே கவனிக்கப்படுகிறது. இன்னும் நியாய உணர்வோடு, இந்த வரியேகூட வசூலிக்கப்படுகிறது. தரம் பிரிப்பது மாதிரி, நிலத்திற்குத் தரம் பிரிப்பது போல் பிரிக்கிறார்கள். அதிலே ஏதாவது தவறுகள், முறைகேடுகள் இருந்தால் தனிப்பட்ட முறையிலே ஒவ்வொன்றாகக் கவனிக்கப்படும்.

### மணிமுத்தாறு அபிவிருத்தி வரி

*177 வினா—**திரு. டி. மார்டின் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், சாத்தான்குளம் தொகுதியிலுள்ள பன்னம்பாறை கிராமம், பண்ணைப்பத்துக்குளம் ஆயக்கட்டு நஞ்செய் நிலங்களுக்கு மணிமுத்தாறு தண்ணீர் பாயவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், மேற்கண்ட ஆயக்கட்டு நஞ்செய் நிலங்களுக்கு மணிமுத்தாறு அபிவிருத்தி வரி வசூலிக்கப்படுவதை அரசு உடனே நிறுத்தும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) மணிமுத்தாறு திட்டத்துவக்கத்திலிருந்து 1959-60-ம் ஆண்டு தவிர மற்ற எந்த ஆண்டிலும் தண்ணீர் விடப்படவில்லை.

(இ) அபிவிருத்தி வரி தள்ளுபடி செய்வதற்கோ அல்லது தள்ளி வைப்பதற்கோ கோரிக்கை எதுவும் இதுவரை விவசாயிகளிடமிருந்து பெறப்படவில்லை.

**திரு. டி. மார்டின்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, சாத்தான் குளத்திலுள்ள ஒரு சில கிராமங்களுக்கு இந்த மணிமுத்தாறு தண்ணீர் உபயோகப்படும்போது, மேலிருந்து கீழ்வரும் கடைசி தண்ணீர் சில குளங்களுக்கு கிடைக்கிறது. அதை வைத்து பருவம் செய்கிறார்கள். ஆனால் இந்தக் குறிப்பிட்ட குளத்திற்குத் தண்ணீர் வரவில்லை. இருந்தாலும் இந்த ஆயக்கட்டு நஞ்செய் நிலங்களின் பட்டாதாரர்களிடமிருந்து வரி வசூல், டெவலப்மெண்ட் டாக்ஸ் வாங்கியிருக்கிறார்கள். அந்த ரசீதைக்கூட இந்த அவையின் முன்பு காட்டியிருக்கிறேன். இதையும் கருத்திற் கொண்டு, இனிமேலாவது தண்ணீரை அந்தக் குளத்திற்குக் கொடுக்காத காரணத்தால் அந்தப் பட்டாதாரர்களிடமிருந்து டெவலப்மென்ட் டாக்ஸ் வசூல் செய்ய வேண்டாமென்று உத்தரவு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்டின் அவர்கள் சொன்னதை நான் மறுக்கவில்லை. அவர்களுக்கு இது தெரியும். இது, தஞ்சாவூர் பாஷையில் சொல்ல வேண்டுமென்றால் கடைமடைப் பகுதிமாதிரி கடைசியாக இருக்கும் இடம் அந்தக் குளம். 1959-ஆம் வருஷத்தில்தான் வந்திருக்கிறது நிரம்பத் தண்ணீர் இருக்கும் காலத்தில் வராது என்று சொல்ல முடியாது. அதனால்தான் அந்த வசூல் செய்யப்பட்டது. வசூல் செய்யப்பட்ட தொகையும் என்னிடம் இருக்கிறது. அதை எப்பொழுதும் இந்த அரசாங்கம் மறுக்கவில்லை. 1967-ஆம் வருஷத்தில் 269 ரூபாயும், 1968-ஆம் வருஷத்தில் 222 ரூபாயும் வசூலிக்கப்பட்டிருக்கிறது. மொத்த வரியே 391 ரூபாய்தான். ஆனால் தண்ணீர் வரவில்லை என்று சொல்வதும் உண்மை. இப்போதுகூட பரிசீலனை செய்யலாம். இரண்டையும் சேர்த்துப் பரிசீலனை செய்ய வேண்டும். வரியை ரத்து செய்துவிடலாம் என்று சொன்னால் தண்ணீரும் அதற்கு வராது. ஆனால் தண்ணீரும் வரவேண்டும் என்றும் வரியும் கொடுக்க வேண்டாமென்றும் சொன்னால் அது சரியானதல்ல. அதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**உறாஜி. ம. மு. பீர் முஹம்மது:** பேரவைத் தலைவர் அவர்களே, மணிமுத்தாறு மேல்மட்டக் கால்வாயிலிருந்து தண்ணீர் பாயும் குளங்களின் அமைப்பே விசித்திரமாக இருக்கிறது. ஒரு காலினால் குளம் நிரம்பி மறுகாலுக்குப் போனதற்குப்பிறகுதான் மறுகுளம்



நிரம்ப வேண்டியிருக்கிறது. இதனால் ஒரு குளத்தில் நிரம்பாவிட்டால் அடுத்த குளத்திற்குத் தண்ணீர் வராது. எனவே, இதைப் பரிசீலனை செய்து, ஒவ்வொரு குளத்தையும் தனிக்கால்களாகப் பிரிக்க அரசாங்கமானது செலவு செய்து அல்லது அங்குள்ள விவசாயிகள் தனிப்பட்டமுறையில் செலவு செய்து கொள்கிறேன் என்று சொன்னால் அதற்கு அனுமதி கொடுத்துச் செய்து கொள்ள தயாராக இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பொதுப்பணித்துறை கவனிக்க வேண்டிய விஷயம். மணிமுத்தாறு திட்டம் என்பது மட்டும் அல்ல, காவிரி நதித் திரத் திட்டம், பவானி திட்டம்; தாம்பிரபரணி திட்டம் இவை மூலம் எப்படி சிக்கனமாகத் தண்ணீரைச் செலவு செய்யலாம் என்பதுபற்றி அரசாங்கத்தின் பல்வேறு கட்டங்களிலும் பரிசீலனையில் இருக்கிறது. இந்த ஊரைப் பொறுத்தவரையிலும் தண்ணீர் வரும் என்ற நம்பிக்கையில் சில நிலைமைகள் செய்யப்பட்டன. இப்போதும், இரண்டையும் சேர்த்துச் செய்யலாம், தண்ணீர் வேண்டியது இல்லை, வரியை விட்டுவிடலாம் என்றால் இரண்டு பிரச்சனைகளையும் பரிசீலனை செய்யலாம்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்:** தலைவரவர்களே, மணிமுத்தாறு அணை திருநெல்வேலி ஜில்லாவில் தாம்பிரபரணி பாசனத்திற்கு ஒரு தலைவலியாக இருந்து வருகிறது. மணிமுத்தாறு இருக்கின்ற பிரதேசத்தில், தாம்பிரபரணி பாசன மேல்புறத்தில் 'அட்வான்ஸ் கார்' பயிரிடப்படுகிறது என்ற காரணத்தினால் காலாகாலத்தில் பயிர் செய்ய முடியாது இருப்பதால், இந்த அரசாங்கம் நமது முதலமைச்சரவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த காலத்தில் அதற்கு வேண்டிய திட்டமான முடிவு செய்வதாகக் கூறினார்கள். அதையெல்லாம் தாண்டி, ஸ்டான்டிங் ஆர்டரை வரவேற்காமல் தாம்பிரபரணி மேல்புறப் பாசனத்தில் உள்ள விவசாயிகளுக்கு கஷ்டமான நிலையை ஏற்படுத்தி வருகிறார்கள். அதை இந்த அரசாங்கம் நன்றாகக் கவனித்து, ஸ்டாண்டிங் ஆர்டரை மணிமுத்தாறு தண்ணீருக்குச் செய்யப்பட வேண்டுமென்பதற்காக நீங்கள் அந்த ஸ்டாண்டிங் ஆர்டருக்குப் புறம்பாகச் செயல்படுகின்றதைக் கவனிக்க வேண்டும். பெட்டர்மென்ட் டாக்ஸ் வசூலிப்பதை, மணிமுத்தாறு தண்ணீருக்கு மட்டுமல்லாமல், மணிமுத்தாறு மேல்புறத்தில் இருக்கும் கால்களிலுள்ள பாசனங்களுக்கு பெட்டர்மென்ட் டாக்ஸ் விதிப்பதை எதிர்த்து, திருவாடுதுறை மடாதீனம் ரிட் போட்டு அனுகூலம் ஆகியிருக்கிறது. இதை நன்றாகக் கவனித்து, மதியூன்றிக் கால் போன்ற கால்களுக்கு பெட்டர்மென்ட் டாக்ஸ் வசூல் செய்யாமல் இருப்பதற்கு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** சொல்லவேண்டியதை தீக்ஷிதர் அவர்கள் என்னிடம் சொல்லிக்கொண்டுதான்

இருக்கிறார்கள். அவர்கள் தொகுதியைப் பற்றி சொல்கிறார்கள். அவரைப் போன்ற நெடு நாளைய அனுபவம் பெற்ற சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இப்படிச் சொல்வது சரியானது அல்ல. நியாயமாகக் கொடுக்கவேண்டிய வரியைக் கொடுக்கத்தான் வேண்டும். இரண்டும் சொல்கிறார்கள். அபிவிருத்தி வேலைகளையும் செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள். பிறகு, வரி எதற்கு என்று கேட்கிறார்கள் வரி போடுகிறபோது. மறுபடியும் வரி வசூல் செய்கிறபொழுது வரி வஜா செய்யவேண்டும் என்று கேட்கிறார்கள். இந்தக் காரியங்களில் நாம் ஒவ்வொருவரும் கொஞ்சம் பக்குவப் படுத்திக்கொண்டால், அது நல்ல பரிகாரமாக இருக்கும்.

திரு. டி. மார்டின்: அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து 'தண்ணீர் வேண்டும், ஆனால் வரி செலுத்தமாட்டேன்' என்று பண்ணைப்பத்து கிராம பட்டாதாரர்கள் கூறியது போல் தொனிக்கிறது. அந்தப் பகுதிக்கு தண்ணீர் கொடுக்கவேண்டியது மிகவும் அவசியம், மிகவும் பின்தங்கிய பகுதி, வறண்ட பகுதி. ஆண்டு தோறும் தண்ணீரைக் கொடுத்து, வரி வசூல்செய்தால், யாரும் அதை ஒப்புக்கொள்வார்கள். தண்ணீர் கொடுக்காமல், அதே நேரத்தில் வரி வசூல் செய்வது சரியா என்றுதான் கேட்கிறேன். வரி வாங்கவேண்டாம், ஆனால் தண்ணீர் கொடுங்கள் என்று கேட்கவில்லை. எனவே அமைச்சர் அவர்கள் இரண்டையும் சேர்த்து கவனிக்கிறேன் என்று சொல்வதிலிருந்து ஒருவேளை அங்கே கொடுக்க வேண்டிய தண்ணீரை நிறுத்தி விடுவார்களோ என்று அஞ்சுகிறேன். அந்தவிதமாகச் செய்யாமல், தண்ணீர் கிடைப்பதற்கும் ஒரு வழி செய்து, வரி வசூல் செய்வதற்கும் வழி காணுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அமைச்சர்களுக்கு யார் பேரிலும் கோபம் இல்லை. இன்னும் அதிகத் தண்ணீர் வேண்டும் என்பதுதான் அமைச்சர்களின் ஆசை. உறுப்பினர் அவர்கள் என்னைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். அபிவிருத்தி வேலை நடக்கிறது. அபிவிருத்தி வேலைகளுக்கான வரி என்பது, அந்த வேலைகள் முடிந்து இரண்டு வருஷம் கழித்துத் தான் வருகிறது. இவ்வளவு நேரம் கூறிய விஷயத்திற்கு வந்தால் கிராமம் பூராவும் சேர்ந்து ரூ. 300 வரி கட்டியிருக்கிறார்கள். கட்டாமல் இல்லை. நன்றாகத்தான் வரி கட்டிக் கொண்டிருக்கிறார்கள். கட்டாமல் பாக்கி இருப்பது ரூ. 100 தான். வழக்கமாக அங்கே தண்ணீர் வருகிறது. அனுபவத்தில் தண்ணீர் போய்ச் சேரவில்லை என்றால், அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். இருந்தாலும் நாம் என்ன பார்க்கவேண்டும் என்றால், தண்ணீர் வரவேண்டும், அதனுடைய நன்மையை மக்கள் பெறவேண்டும் என்று நினைத்துத்தான் தண்ணீர் கொடுக்கப் படுகிறது. அவர்களுக்கு தண்ணீர் சேரக்கூடாது என்பது அரசாங்கத்தின் நோக்கம் இல்லை.



### கலப்புமணம் செய்துகொண்ட தம்பதிகளுக்கு சலுகைகள்

*178 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கலப்புத் திருமணம் செய்துகொண்ட மணமக்களுக்கு அவர்களின் கல்வி, தொழில் ஆகியவற்றுக்கு மேலும் சலுகைகள் தரும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்கள் சமுதாயத்தில் பெரும்பாலும் வைதீக எண்ணம் உள்ளவர்களால் புறக்கணிக்கப்படுகிறார்கள். எனவே, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் முதல் இடம் அளிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு, கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கும் வகையில் தங்கப் பதக்கம் பரிசு அளிக்கப்படுகிறது. வேலை வாய்ப்பு தரப்படும் என்றால், ஒருக்கால் வேலை வாய்ப்பு கிடைப்பதற்காக கலப்புத் திருமணம் செய்துகொண்டு விட்டு, பிறகு விட்டுவிட்டால் நிலைமை என்ன ஆகும் என்பதையும் யோசிக்க வேண்டியிருக்கிறது.

திரு. கே. பி. எஸ். மணி: கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு தங்கப் பதக்கம் பரிசு கொடுப்பதினால் அவர்களுடைய வாழ்க்கை ஒன்றும் முன்னேறிவிட முடியாது. அது ஒரு அபிமானமே தவிர, வேறு ஒன்றுமில்லை. அவர்கள் வருங் காலத்தில் பல துறைகளிலும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை உத்தேசித்து, அரசு லாண்டு ஸீலிங்கிலிருந்து கிடைக்கும் நிலங்களைப் பிரித்துக் கொடுப்பதில், நேரடியாக விவசாயம் செய்பவர்களுக்கு முதல் சலுகையும், மாஜி இராணுவத்தினருக்கு இரண்டாவது சலுகையும், மூன்றாவதாக கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கு இந்தச் சலுகையைக் கொடுப்பதற்கு அரசு வழிவகை செய்யுமா? அப்படிச் செய்தால் கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள், சமுதாயத்தில் மற்றவர்களால் பகிஷ்கரிக்கப்படும்பொழுது, அவர்களுடைய பிற்கால வாழ்க்கை சற்று நிம்மதியாக இருக்கும். ஆகவே, அதைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கலப்புத் திருமணம் செய்துகொள்வதிலே, ஜாதி வேற்றுமைகளை ஒழிக்க வேண்டும் என்ற ஒரு கொள்கை அடிப்படையில் நல்ல வைராக்கியத்தோடு செய்து கொள்வதாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட கலப்புத் திருமணம் செய்துகொண்டு பல எதிர்ப்பிற்கிடையிலே நல்ல முறையிலே வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்

என்பது தெரியும். எனவே, சில சலுகைகளைப் பெறுவதற்காக கலப்புத் திருமணம் செய்துகொள்வதைவிட கொள்கையின் அடிப் படையில் கலப்புத் திருமணம் செய்துகொள்வது மிகவும் நல்லது.

திரு. ஜெ. பெள்ளி கவுடர்: தலைவர் அவர்களே, கடந்த ஆண்டில் கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களின் எண் ணிக்கை எவ்வளவு என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கடந்த ஆண்டு அல்ல, 1968-ம் ஆண்டில் கலப்புத் திருமண பரிசு பெற்ற தம்பதிகள் மாத்திரம் 48 பேர்கள் என்ற கணக்கு இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: கலப்புத் திருமணம் செய்துகொண்ட பெண்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்தவர்களின் விகிதாசாரம் கூடுதலா அல்லது மற்ற வகுப்புப் பெண்களின் விகிதா சாரம் கூடுதலா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இந்தப் புள்ளிவிவரம் இப்பொழுது இல்லை. என்றாலும், பொதுவாக கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களில் ஆணோ அல்லது பெண்ணோ யாரோ ஒருவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரைச் சேர்ந்தவர் களாகத்தான் இருப்பார்கள். எந்த விகிதாசாரப்படி என்பதற்கான கணக்கை இப்பொழுது எடுக்கவில்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன்: ஜாதி மத பேதமற்ற சமுதா யத்தை வரும் தலைமுறையிலாவது உருவாக்க வேண்டும் என்பதற்கு அச்சாணியாக அமைந்திருப்பது தான் கலப்புத் திருமணமாகும். ஆகையினால், இந்தத் திருமணங்களை ஊக்குவிக்கின்ற வகையில் தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைகள் அத்தனையையும் மாநில அரசு தரவேண்டும். அதே போல மத்திய அரசு தருவதற்கும் ஏற்பாடு செய்வதற்கு இந்த அரசு ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கலப்புத் திருமணம் செய்துகொண்டாலும், அந்தத் தம்பதிகளில் ஒருவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினராக இருப்பர். ஆகவே, அவருக்கு அந்த சமுதாயத்தின் அடிப்படையில் எல்லாச் சலுகைகளையும் அரசாங்கம் செய்து கொடுத்துக்கொண்டுதான் இருக்கும். இது மாநில அரசின் திட்டமாகும். மத்திய அரசாங்க உதவிகோரும் எண்ணம் இப்பொழுது இல்லை.

### *Milk Powder*

* 179 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state :

(a) whether a large quantity of milk powder is being secured by the State Government from UNICEF ; and

(b) if so, the details thereof?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) "யுனிசெப்" மூலம் நிறுவனத்தின் மூலம் பால் பவுடர் எதுவும் பால் பண்ணை மேம் பாட்டுத் துறைக்கு கிடைக்கப்பெறுவதில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: கேர் நிறுவனத்திலிருந்து இந்த அரசுக்கு அதிக அளவிலே பால் பவுடர் கிடைத்துவருகிறது. இந்தப் பவுடர் சரியான முறையிலே விநியோகிக்கப்படாமல், மளிகைக் கடைகளிலும், ஹோட்டல்களிலும் விற்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. இனியாகிலும் இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் தீவிரமாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கேர் நிறுவனத்திலிருந்து வரும் பால் மாதவரம் பால் பண்ணைக்கு வருவதில்லை. கல்வித் துறை அமைச்சருக்குப் போடவேண்டிய கேள்வி இது.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister the quantity of deficit of milk in our State and the alternative schemes proposed by this Government to make up the deficit

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பால் குறைவாக இருக்கிற காரணத்தினால், பாலை அதிகமாக அளிக்கவேண்டும் என்பதற்காக அரசாங்கத்திற்கு உலக உணவுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிற பால் பவுடர் வருகிறது. சிங்கிள் டோன்டு, டபிள் டோன்டு என்று பாலாக மாற்றி, அது சென்னையிலும் மற்ற இடங்களிலும் விநியோ கிக்கப்பட்டு வருகிறது.

### *Madhavaram Milk Project*

* 180 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(a) whether it is a fact that the residents of Madras City have not been supplied with Buffalo milk from July 1969 by the Madras Milk Project at Madhavaram ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) வெளியூர்களிலிருந்து வரும் பாலின் அளவு படிப்படி யாகக் குறைந்ததால், 1969 ஜூன் 16 முதல் எருமைப்பால் ஒரு வேளைக்கு மட்டும் வழங்கப்பட்டது. மற்றொரு வேளையில் தரம் உயர்த்தப்பட்ட பால் வழங்கப்பட்டது. ஜூலைத்திங்கள் முதல் எருமைப்பால் வழங்குவது அறவே நிறுத்தப்பட்டு காலை, மாலை, ஆகிய இருவேளைகளிலும் தரம் உயர்த்தப்பட்ட பால் வழங்கப் பட்டது. 15—8—69 வரை பசும்பால் முறையாக வழங்கப்பட்டு வந்தது. அதன் பின்னர் பசும்பாலுக்குப் பதிலாக தரம் உயர்த்தப் பட்ட பால் வழங்கப்பட்டது. 16—10—69 முதல் பசும்பால் மீண்டும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. 16—10—69 முதல்

[1970 மார்ச் 3

மாலைவேளைகளில் மீண்டும் எருமைப்பால் வழங்குவது மேற்கொள்ளப்பட்டது. காலை வேளையிலேயே எருமைப்பால் அதிகமாகத் தேவைப்படுவதால் நவம்பர் 16 முதல் காலைவேளையில் எருமைப் பாலும் மாலைவேளையில் தரம் உயர்த்தப்பட்ட பாலும் வழங்கப் பட்டு வருகிறது.

*181 வினா—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் பால் பண்ணையில் 1968-69-ம் ஆண்டில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு வெளிநாடுகளில் இருந்து உயர்ந் தரகப் பசுக்கள், எருமைகள் வாங்கப்பட்டனவா ?

(இ) அதற்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) ரூ. 82,008.20.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவர் அவர்களே, எருமைப் பால் சென்னை நகருக்கு போதுமான அளவில், தேவைக்குத்தக்கபடி சப்ளை செய்ய முடியாததால், மக்கள் பால் கிடைக்காமல் கஷ்டப்படு கிறார்கள். ஆகவே, இந்தக் குறையை நீக்க, உடனடியாக வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பால் குளிர் காலங்களில் அதிகமாகக் கிடைக்கும்; கோடைக்காலங்களில் குறைவாகத்தான் கறக்கும். குளிர் காலங்களில் எருமைப்பால் கொடுக்கிறோம். ஆனால் கோடை காலங்களில் போதிய அளவு கிடைக்காததால், பசும்பாலையும், சில வேளைகளில் அதுவும் அதிகமாகக் கிடைக்கா விட்டால், சிங்கிள் டோன்ட், டபிள் டோன்ட் என்று பாலை தரப் படுத்தி, பவுடரைக் கலந்து விநியோகம் செய்கிறோம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** அமைச்சரவர்கள் 82,000 ரூபாய் செல வில் வாங்கப்பட்டதாகக் கூறினார்கள். எத்தனை மாடுகள் வாங்கப் பட்டன ? பால் பண்ணையில் 2,000 மாடுகள் இருந்து, பால் கறந்து கொடுத்தவர்களுக்கு சரியான விலை கொடுக்காததால் பால் பண்ணை யிலிருந்து வெளியேறிவிட்டார்கள் என்று கூறப்படுவது உண் மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மொத்தம் வெளி நாட்டி லிருந்து வாங்கப்பட்ட பசுக்கள் 16, காளைகள் 5. அங்கே இருந்தவர் கள் சரியான விலை கொடுக்காததால் வெளியேறிவிட்டார்கள் என் பதை ஒத்துக்கொள்ள முடியாது. அங்கே மாடுகளை வைத்துக் கொண்டு, பால் பண்ணைக்கு மாட்டுக்கு ஒரு லிட்டர், இரண்டு லிட் டர் வீதம் கொடுத்துவிட்டு, மீதம் உள்ள பாலை வெளியிலே விற்க ஆரம்பித்தார்கள். எவ்வளவு பால் கறக்கிறார்களோ அவ்வளவு பாலையும் பண்ணைக்குக் கொடுக்க வேண்டும் என்கிற உத்தரவைப் போட்ட பிறகு அவர்களாகவே வெளியேறிவிட்டார்கள்.



1970 மார்ச் 3]

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் வெளியிடத்திலிருந்து வரும் பால் சப்ளை நின்றுவிட்டது என்று சொன்னார்கள். திருப்பூரிலிருந்து ஒரு ஆயிரம் லிட்டர் பால் கொடுத்துவந்ததை, அதிகாரிகள் வேண்டாம் என்று சொல்லிவிட்ட தால்தான் நிறுத்தியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் அமைச்சரவர்கள் பால் வாங்க ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கோடை காலங்களில் எவ்வளவு பால் கொடுக்கிறார்களோ, அதற்கு மேல் ஒன்றரைப் பங்கு குளிர் காலங்களில் வாங்கத்தயார். கோடை காலங்களில் பால் குறைவாக இருப்பதால் அப்பொழுது கொடுக்காமல், குளிர் காலங் களில் பால் அதிகம் கறக்கும்போதுமட்டும் கொடுப்பது என்றால், அப்படி எல்லாப் பாலையும் மாதவரத்தில் வாங்கினால் நஷ்டம் ஏற்படு கிறது. ஆகவே, யார் கோடை காலங்களில் 100 லிட்டர் கொடுப் பார்களோ அவர்களிடமிருந்து குளிர் காலங்களில் 150 லிட்டர் பால் எடுப்போம் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். எந்தக் கூட்டுறவு சங்கத்திலிருந்தும் பால் வேண்டாம் என்று சொல் லவில்லை.

**திரு. கே. விநாயகம் :** சார், அரசாங்கத்தின் நோக்கம், பொது மக்கள் நல்ல பாலைக் குடிக்கவேண்டும் என்பதுதான். நல்ல பால் வேண்டும் என்றுதான் மாதவரம் பண்ணை பாலை வாங்குகிறோம் இப்பொழுது மில்க் பவுடரை கலந்து, டோனிங் செய்து மக்களுக்குத் தருவதாகச் சொல்கிறார்கள். அப்படி மில்க் பவுடர் கலந்தால், அதன் தரம் குறையாதா ? அது ஆரோக்கியத்திற்கு நல்லதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, கறந்த பாலில்தான் உலகத் திட்டத்தின்கீழ் பால் பவுடரை சிங்கிள் டோன்ட், டபிள் டோன்ட் என்று தரம் உயர்த்தப்பட்டு பால் கொடுக்கப்படுகிறது. ஆரோக்கியத்திற்கு கேடு எதுவும் இல்லை. ஆறு சதவிகித சத்து உணவை மூன்று சதவிகிதமாகக் குறைக் கிறோம். மற்ற இடங்களில் நடப்பதைத்தான் நாமும் செய்கிறோம். தவிர எதுவும் இல்லை.

## தவளைகள் ஏற்றுமதி

*182 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தவளைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, நம் அண்டை மாநிலமாகிய கேரளத்தில், தமிழகத்தில் தஞ்சை, திருச்சி பகுதி களில் உள்ள தவளைகளை, நேரா எப். சி. ஐ. மூலமாக விலைக்கு

வாங்கி, வெளிநாடுகளுக்கு அனுப்பி, அன்னியச் செலாவணியைப் பெறுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அது போன்ற நடவடிக்கைகளை நம்முடைய தமிழக அரசும் மேற் கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அன்னியச் செலாவணி எந்த மாநிலத்திற்கும் தனியாகத் தருவதில்லை. நம் மாநிலத்திலிருந்து யாராவது அப்படிச் செய்ய முன்வந்தால், அரசு உதவி கொடுக்க முடியும்.

**திரு. மா. இராசாங்கம்:** தலைவர் அவர்களே, இந்தத் தவளைகளை இப்பொழுது யாரும் அனுப்பவில்லை என்றாலும், கிணற்றுத்தவளை களையாவது அனுப்ப சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அந்தத் தவளைகளையும் அனுப்ப யாராவது முன் வந்தால், அரசாங்கம் உதவியளிக்கும்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, தவளைகளை ஏற்றுமதி செய்வது போல், இறக்கைகளையும் கேரளக்காரர்கள் எடுக் கிறார்கள். அதையும் நாமே ஏற்றுமதி செய்தால் என்ன என்பதை அரசாங்கம் பரிசீலிக்குமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வி தவளை பற்றியது.

### வாலாஜாபேட்டை பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

*183 வினா—**திரு. எம். அப்துல் கபூர் சாகிப்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜாபேட்டையில் உள்ள கூட்டுறவு பட்டு நெசவுத் தொழிற்சங்கத்திற்கு இதுவரை அரசாங்கம் மூலதனமாக எவ்வளவு தொகை கொடுத்துள்ளது?

(இ) இச்சங்கம் நஷ்டத்தில் இயங்கிவருவது அரசுக்குத் தெரியுமா?

(உ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) வாலாஜாப்பேட்டை பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அரசு 1957-58-ல் ரூ. 8,750/- பங்கு மூலதனக் கடனாகவும், 1959-60-ல் ரூ. 4,375/- மற்றொரு பங்கு மூலதனக் கடனாகவும் வழங்கியது.

(இ) ஆம்.

(உ) சங்கத்தின் பணிகளை மேம்படுத்துவதற்கும், சங்கம் செவ்விய முறையில் செயல்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. ஆனால், எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் அச்சங்கத்திற்குப் புத்துயிரூட்ட இயலவில்லை. மாவட்டக்



கூட்டுறவு மத்திய வங்கியிடமிருந்து சங்கம் நடைமுறை மூலதனக் கடனின் கீழ் பெற்ற தொகை வகையில் அச் சங்கம் மத்திய வங்கிக்கு ரூ. 46,268 செலுத்த வேண்டியுள்ளது. 31—3—69 அன்றுள்ளபடி அதற்கு ஏற்பட்ட நிகர விரயம் ரூ. 20,815/-. இச் சங்கத்தைக் கலைத்துவிடக் கருதப்பட்டுள்ளது.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பட்டுக் கூட்டுறவு நெசவுத் தொழிலாளர் சங்கம், அந்தப் பக்கத்தில் இருக்கும் பட்டுத் தொழிலாளர்களுக்கு முக்கியமாக இருக்கும் காரணத்தால், இதை மறுபரிசிலனை செய்து, லாபகரமான அளவில் நடத்த அரசு முயற்சி செய்யுமா? மூடிவிடாமல் இருக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறியலாமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நடத்துகின்றவர்கள் தரமான முறையில் விற்பனை செய்து லாபம் காட்டினால், அதை மூட வேண்டாம்.

### தமிழகத்தில் புது சர்க்கரை ஆலைகள்

*184 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1969 ஜூன் மாதம் முடிய எங்கெங்கு சர்க்கரை ஆலை தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

(இ) தனியார் துறையில் எத்தனை? கூட்டுறவுத் துறையில் எத்தனை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) விபரங்கள் பின்வரு மாறு:—

| | |
|---|---|
| தென் ஆற்காடு | நெல்லிக்குப்பம் |
| | பெண்ணாடம் |
| | முண்டியம்பாக்கம் |
| | கள்ளக்குறிச்சி |
| செங்கல்பட்டு | படாளம் |
| வட ஆற்காடு | ஆம்பூர் |
| திருச்சிராப்பள்ளி | புகளூர் |
| | காட்டூர் |
| | பெட்டவாய்த்தலை |
| சேலம் | மோகனூர் |
| தர்மபுரி | திம்மனஹல்லி |
| கோயம்புத்தூர் | கிருஷ்ணாபுரம் |
| | ஆப்பாகுடல் |
| மதுரை | நிலக்கோட்டை |
| | பாண்டியராஜபுரம் |
| தஞ்சாவூர் | வடபாதிமங்கலம் |
| (இ) தனியார் துறை | 9 |
| கூட்டுறவுத் துறை | |

[1970 மார்ச் 3

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத்தலைவர் அவர்களே, அனுமதி அளிக்கப்பட்டவை அனைத்தும் உற்பத்தி தொடங்கி விட்டனவா ? மொத்த கரும்பையும் பயன்படுத்திக் கொள்ளும் அளவிற்கு கரும்பாலைகள் தமிழகத்தில் உள்ளனவா ? புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு, புதிய டைரக்டர்கள் பொறுப்பேற்ற பிறகு ஆலைகள் லாபத்தில் இயங்குகின்றனவா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தனியார் துறை, கூட்டுறவுத் துறை இரண்டும் இருக்கின்றன. கூட்டுறவுத் துறையில் தருமபுரியில் உற்பத்தி தொடங்கவில்லை. நம்முடைய மாநிலத்திற்கு இன்னும் மூன்று ஆலைகள் வேண்டும் என்று கேட்டோம் ; இரண்டு தந்திருக்கிறார்கள் ; ஒன்று பரிசீலனையில் இருக்கிறது. தனியார் துறையில் பல ஆலைகள் லங்களுடைய டிபாசிட்டை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். மத்திய சர்க்காருக்கு நாம் சிபாரிசு செய்து கொடுத்திருக்கிறோம். இப்போதைக்கு இது போதும் என்று அரசாங்கம் கருதுகிறது.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் பதிலில் ஆம்பூர் ஆலைக்கு விஸ்தரிப்புக்கு அனுமதி அளித்ததாகச் சொன்னார்கள். அதன் பலன் என்ன ? அது ஏற்கனவே நஷ்டத்தில் ஓடுவது அரசுக்குத் தெரியுமா ? அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விஸ்தரிப்புக் கொடுத்ததன் காரணத்தால், விரைவில் உற்பத்தி தொடங்குகிறது. கூட்டுறவு ஆலைகளிலேயே ஆம்பூர் ஆலைதான் நல்ல ஆலை. ஒரு சில ஆண்டுகளில் அதிலே நஷ்டம் ஏற்பட்டிருக்கலாம். ஆனாலும், பொதுவாக அது சிறந்த முறையில் நடக்கிறது.

**திரு. எஸ். ஜே ராமசாமி :** தலைவர் அவர்களே, இப்போது பெரிய ஆலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஷேர் கேபிடல் கொடுப்பவர்களிடத்தில் தான் எடுக்கிறார்கள். கரும்பு விவசாயிகளிடத்தில் தேக்கமாக இருப்பதால், எல்லோரிடத்திலும் இருந்து கரும்பு எடுக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, ஆலை நன்றாக நடைபெற வேண்டுமானால் கரும்பு அதிகமாகக் கிடைக்க வேண்டும். அதற்காகத்தான் அதன் பங்குதாரர்களாக நியமித்து, அவர்கள் அவசியம் கரும்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னோம். பல ஆண்டுகளுக்கு முன்னால் கரும்பு கொடுப்பதற்கு ஆள் கிடைக்கவில்லை. ஆகவே, சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தினால்தான் இந்தப் பிரச்சனை தீர்க்கப்படும்.



1970 மார்ச் 3]

## திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் கால்நடை கேந்திரம்

*** 185 வினா.—திரு. டி. மார்டின் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் கால்நடை கேந்திரம் கட்டி முடிந்தாகி விட்டதா ?

(இ) இல்லை எனில், காரணம் என்ன ?

(உ) எப்போது கட்டிமுடிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) 29-6-1965-ல் கட்டிடம் கட்டி முடிவுற்றது. 30-6-1965-ல் அது கால்நடை துறை வசம் ஒப்படைக்கப்பட்டது.

(இ) & (உ) இவ் வினாக்களுக்கு இடமில்லை.

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியம் உடன்குடி ஊராட்சி ஒன்றியம், சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் பண வசதி இல்லாத காரணத்தினால் இதுபோன்ற கட்டிடங்கள் கட்ட முடியாத நிலைமை ஏற்பட்டு, அங்குள்ள ஆசிரியர்களுக்கும் இப்போது சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. இதுபற்றி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டபோது கமிஷன் அமைக்கப்படுவதாகச் சொன்னார்கள். அப்படிக் கமிஷன் அமைக்கப்பட்டு, அறிக்கை சமர்பிக்கப்பட்டுவிட்டதாக ? உடனடியாகச் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இது திருச்செந்தூர் கால்நடை கேந்திரத்தைப்பற்றிய கேள்வி. திருச்செந்தூர் முருகனிடத்தில் செல்கிற பக்தர்கள் பல்வேறு கோரிக்கைகளை ஒரே சமயத்தில் எழுப்புவதைப்போல மாண்புமிகு உறுப்பினர் ஒன்றிலிருந்து ஒன்றாக பல்வேறு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். உறுப்பினர் குறிப்பிடுகிற குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

## *Strike by employees of Ramanathapuram Municipality*

* 186 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the employees of the Ramanathapuram Municipality had gone on strike about the 1st July, 1969; and

(*b*) if so, the details thereof

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) 28-6-69 அன்று இரவு, இராமநாதபுரம் நகராட்சி துப்புரவு மேற்பார்வையாளர் (Sanitary Inspector) பணியில் இருந்தபோது சிலரால் தாக்கப்பட்டார். இந்த நிகழ்ச்சி குறித்து விசாரணை நடத்துமாறு கோரி துப்புரவு பணியாளர்கள் உட்பட நகராட்சி ஊழியர்கள்

29-6-69 அன்று ஒருங்குதிரண்டு ஊர்வலம் ஒன்றை நடத்தினர். அதற்கு மறுநாள், துப்புரவுப் பணியாளர்கள் உட்பட பணியாளர்களில் பெரும்பாலோர், தனிப்பட்ட காரணங்களுக்காகவும் உடல் நலமின்மை என்ற காரணங்களுக்காகவும் பெருமளவில் விடுப்புக்கு விண்ணப்பித்துக் கொண்டனர்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, முனிசிபல் ஊழியர்கள் கட்டுப்பாடாக இம்மாதிரி விடுப்பு எடுத்ததற்கு சரியான நடவடிக்கை எடுப்பதோடு, அவர்களுக்கு இருக்கிற குறைகளைத் தீர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, கேட்ட கேள்வியின் அடிப்படை, பணியாளர் ஒருவர் தாக்கப்பட்டதுபற்றி. அவர்கள் தங்களுக்கு இருக்கும் குறைகளின் அடிப்படையில் விடுப்பு எடுக்கவில்லை. தாக்கப்பட்ட அதிகாரி புகார் மனு கொடுத்ததன் பேரில் வழக்கு மன்றத்தில் வழக்கு பதிவுசெய்யப் பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டது. பின்னர் இவர்களுக்குள் ஒரு சமரச உடன்பாடு ஏற்பட்டு, துணை மாஜிஸ்ட்ரேட் அவர்கள் வழக்கில் முடிவு கண்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும், நகராட்சி ஆணையாளரும் நிலைமைகளை ஆராய்ந்து இப்படிப்பட்ட குறைகள் நிகழாவண்ணம் எச்சரிக்கை கொடுத்து, இப்போது இயல்பாகக் காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, அந்த அதிகாரி தாக்கப்பட்டது, தனிப்பட்ட காரணங்களுக்காகவா ? நகராட்சிப் பணியினைச் செய்யும்போது அவர் தாக்கப்பட்டாரா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, 'பணியில் இருந்தபோது தாக்கப்பட்டார்' என்று நான் என்னுடைய பதிலிலேயே குறிப்பிட்டேன். என்ன காரணங்களுக்காக அவர் தாக்கப்பட்டார் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. அவர் கொடுத்த புகாரின் மேல் நடவடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## Temporary casual workers of Electricity Board

* 187 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the benefits to be given to the Temporary Casual Labour workers of operation, maintenance have been implemented as per the agreement entered in 1967 between the workers and the Board ; and

(b) if not, the reasons therefor?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) 1967-ஆம் ஆண்டில் அப்படி யாதொரு ஒப்பந்தமும் பதிவு பெறவில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.





DR. H. V. HANDE : During 1967 there were negotiations between Ennore Thermal Station workers and the Electricity Board and there was written assurance (I do not have a copy here, I have got it at home and had not brought it here) that the agreement will be implemented and the Chairman also assured that it will be implemented, i.e., that those people who have put in more than the service stipulated in the question, i.e., 240 days will be considered for work-charged establishment and absorbed as such. In view of this, will the Hon. Minister come forward and give an assurance that these temporary workers will be treated on a par with the work-charged establishment and given those benefits if they had put in 240 days of work?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். 1967-ல் அப்படி ஒரு ஒப்பந்தம் இல்லை. 1-9-69-லே தற்காலிகமாக வேலை செய்யும் ஊழியர்களுக்கும், நிரந்தரமான ஊழியர்களுக்கும் உண்டான சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று பேச்சுவார்த்தை நடந்தது. சில சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள் 1965, 1966, 1967, 1968 ஆகிய ஆண்டுகளில் வேலை செய்தவர்கள் ஒவ்வொரு ஆண்டும் 180 நாட்கள் வேலை செய்திருந்தால் நிரந்தர ஊழியருக்கான சலுகை கொடுக்கலாம் என்று ஒத்துக் கொண்டார்கள். 1-9-69 தேதி அந்த ஒப்பந்தத்தை மாற்றி ஒவ்வொரு ஆண்டும் இவ்வளவு நாட்கள் என்று பார்க்க வேண்டியதில்லை. மொத்தமாக நான்கு ஆண்டுகளுக்கும் சேர்த்து 480 நாட்கள் வேலை செய்திருந்தால் இந்தச் சலுகைகளை அளிக்கலாம் என்று சொல்லப் பட்டது. இதனால் இப்போது கிட்டத்தட்ட நான்கு ஆயிரம் பேர்களுக்குச் சலுகை கிடைக்கும்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, மின்சாரத் துறையில் கேஷுவல் லேபரர்ஸ் என்று சொல்லக்கூடிய தொழிலாளர்கள் நிரந்தரமாக்குவதற்காக ஒரு ஒப்பந்தம் செய்துக் கொள்ளப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் ஆண்டு ஒன்றுக்கு ? ஆயிரம் தொழிலாளர்களை பர்மனெட் செய்வது என்று ஒப்பந்தத்தில் கண்டிருக்கிறது. அது எந்த அளவிற்கு நிறைவேற்றப் பட்டிருக்கிறது ? இதுவரை அந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படவில்லையே ஏன்? அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் எத்தனை தொழிலாளர்கள் பர்மனென்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, அதை நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். எவ்வளவு பேர் நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற கணக்கு விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. முதலில் ஆண்டுக்கு 180 நாட்கள் வேலை செய்திருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. பின்னர் நான்கு ஆண்டுகளிலும் தொடர்ச்சியாக 1965லிருந்து 1968 வரையிலும் ஆன காலத்தில் மொத்தமாகச் சேர்த்து 480 நாட்கள் வேலை செய்திருந்தால் இம்மாதிரியான சலுகை கொடுக்கலாம் என்று இருக்

கிறோம். எவ்வளவுபேர் தற்காலிகமாக இருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் இல்லை. ஒப்பந்தத்தில் கண்டுள்ள கொள்கையை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் 22 ஆயிரம் தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தரச் சலுகைகள் அளிப்பதற்காக நிலை ஆணைகளைத் திருத்தக் கோரி மின்சாரத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் வேண்டு கோள்விடுத்ததையொட்டி ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டு அது இப்போழுது அமலில் இருக்கிறதென்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் பதில் அளிக்கப்படும்.

DR. H. V. HANDE : The Hon. Minister in his reply stated that it is not 1967 but that the date is 1-9-1969. Will the Hon. Minister give an assurance as to exactly from what date they are going to implement this particular order and whether the Board had already made preparations for collecting the necessary statistics? Will the Hon. Minister clarify the position further?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே 1—11—1968-ல் ஒரு சாராருக்கும், 1—3—1969-லிருந்து ஒரு சாராருக்கும் அமல் நடத்துவதாக ஒப்புக் கொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே. தினக் கூலியாக மூன்று வருஷம், நான்கு வருஷமாக வேலை செய்து கொண்டு வருகிறவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரையுமாவது பர்மெனன்ட் செய்ய வகை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : நான்கு வருஷத்தில் தொடர்ச்சியாக இத்தனை நாட்கள் வேலை செய்திருந்தால் போதும், அவர்களை நிரந்தரமாக்க ஏற்பாடு செய்யத்தான் வகை செய்திருக்கிறோம் என்று குறிப்பிட்டேன்.

### சென்னையிலுள்ள அரசுத் தொழிலாளர் காப்புறுதி மருத்துவ மனை

* 188 வினா.—திரு. எம். பூபதி : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் 1967-ல் திறக்கப்பட்ட ( E.S.I. ) ஆஸ்பத்திரியில் கண் பரிசோதனை செய்து சிகிச்சை செய்யும் டாக்டர்கள் மற்றும் கண் பரிசோதனைக்குத் தேவையான எல்லா வசதிகளும், எல்லாக் கருவிகளும் இருக்கின்றனவா ?



மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : காப்புறுதி செய்து கொண்டவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் சிறப்பு ஆலோசனை வழங்கவும் சிகிச்சை அளிப்பதற்கும் சென்னையில் உள்ள அரசு தொழிலாளர்கள் காப்புறுதி மருத்துவமனையில் 1967-ம் ஆண்டில் கண் நோய் சிவில் சர்ஜன் ஒருவர் நியமனம் செய்யப் பட்டுள்ளார். பணியாளர்களை மருத்துவ மனையில் சேர்த்து சிகிச்சை அளிப்பதற்காக 10 படுக்கைகள் கொண்ட பிரிவும் இங்கு உள்ளது. கண் சிகிச்சை தொடர்பான ஸ்லிட் லாம்ப் டயாதெர்மி கருவி, மிகப் பெரிய காந்தம் ஆகிய முக்கிய கருவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. சிறப்புக் கண் சிகிச்சை தேவைப்படும் நேர்வுகளில் அத்தகைய பிணியாளர்களை எழும்பூர் அரசு கண் மருத்துவ மனைக்கு அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, கண்சிகிச்சை செய்வதற்கு Photocoagulation, electro-radiogram, ultra-senogram என்ற கருவிகள் எல்லாம் மிகவும் அவசியம் ஆயிற்றே. இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் இவைகள் எல்லாம் இல்லையே. இவற்றை வாங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை வரவேற்கத்தக்கது. இப்போது சிவில் சர்ஜன் இருக்கிறார். சாதாரண சிகிச்சைக்கான கருவிகள் இருக்கின்றன. அவசியமாகிறபோது எழும்பூர் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கிறார்கள்.

திரு. டி. மார்டின் : இ. எஸ். ஐ. ஆஸ்பத்திரியில் மருந்து கருவி சாதனங்கள் வாங்குவதற்கும், உணவு வகைகளுக்காகவும் ஒதுக்கப் படுகிற பணம் இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் மிகக் குறைவாக இருக்கிறது என்பதை அமைச்சர் அறிவார்களா ? அப்படி இருக்கிறபோது நல்ல கருவிகளை எப்படி வாங்க முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : கனம் உறுப்பினர் அவர்கள் இந்த நல்ல கருத்தை வெளியிலும் சொல்ல வேண்டும். நாங்கள் மத்திய போர்டுக்கு இன்னும் அதிகமான நிதி இந்த இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிக்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### மைசூர் மாநில சட்டப் பேரவையில் மைசூர் மாநில முதலமைச்சர் காவிரி நீரைப் பயன்படுத்துவது குறித்த 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தைப்பற்றி அளித்த அறிக்கை.

DR. H. V. HANDE : I have given notice of the following adjournment motion—

"I move that this House stands adjourned to discuss a matter of urgent, public importance, namely, the statement of the Chief Minister of Mysore made in the Mysore Assembly that the Mysore Government had not given any assurance either to the Central Government or to the Tamil Nadu Government that the 1924 Agreement on Cauvery Waters utilisation would be faithfully implemented. His further contention that the clearance of Hemavathi Project was within Mysore's rights under the 1924 Agreement to utilise its share of 45 tmcft. is a serious matter which has to be discussed in detail immediately and does not brook any delay. Sir I urge that we adjourn our routine business and discuss this subject today itself."

Sir, I will briefly explain to convince the House as to how the subject comes under Rule 42. Negotiations have been going on for some time and the Hon. the Chief Minister of Tamil Nadu, the Central Water and Power Commission and the Central Ministry are seized of the matter. If we adjourn the business of the House, we will be able to discuss the whole problem.

The relations between the Mysore Government and the Tamil Nadu Government have been very good all these years. There are two agreements governing this subject, the agreement of 1892 and the agreement of 1924. The agreement of 1892 is a permanent one and recognises the prescriptive rights of Tamil Nadu for the use of the Cauvery waters for the ayacut already developed in the State of Tamil Nadu. Mysore is obliged to get the consent of Tamil Nadu in respect of any project mentioned in Schedule 'A'. The 1924 Agreement says that the works on Krishnarajasagar have to be according to certain rules and regulations and the utilisation of Mysore's share of 45 tmcft. is subject to the condition that the limit flows guaranteed to Tamil Nadu are not affected by more than five per cent. There is the riparian right of our State also and we should see that right is not affected.

I am not trying to criticise something which has been the subject matter of discussion in the Mysore Assembly ; I am not questioning the right of the Mysore Chief Minister in what he has said to the Assembly. The subject matter is alarming. If we adjourn the business of the House, we can evolve ways and means to bring the Mysore Chief Minister to our State and show him what is happening in our State and how, if this water is cut off, the riparian rights of our State will be affected. It does not matter whether one belongs to this part of the country or that part ; the people of Mysore as well as Tamil Nadu must be well off. There is no question of misunderstanding. The sum



total of benefit given to the two States will not be increased. I will be very happy if our Chief Minister gives an assurance to this House that he will invite the Chief Minister of Mysore and show him the Thanjavur area and other areas where the people are very seriously affected. I am quite sure that the people of Mysore will be with us, because no man will like another man to suffer. By giving water to us, Mysore will not suffer. We only requtst that our riparian rights should be protected.

I wish to say about one more point and you will then appreciate the great need for the adjournment of the business of this House. Mysore has not obtained the clearance of the Central Water and Power Commission for the Hemavathi Project. Reliable information has been received that some of the projects have come up to the ground level. Mysore is proceeding with this project without the consent of the Central Water and Power Commission. In view of the fact that we do not want any misunderstanding or bitterness between the two States, I request that the business of this House be adjourned to discuss that subject. We are grateful to the Chief Minister for giving us an opportunity to ventilate our views in a private meeting. If an opportunity is given to express our views publicly, it will be better.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:* தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்கள் இன்று பத்திரிக்கையில் வந்துள்ள செய்தியினைக் குறித்து விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தினை அளித்து அதுபற்றிய கருத்துரைகளை தொகுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

பத்திரிக்கையில் வந்த செய்தியினுடைய அடிப்படையிலே நாம் இந்தப் பிரச்சினையை ஆராயாமல் காலகட்டத்தில் 1968 ஆம் ஆண்டு முதல் மைசூர் மாநில அதிகாரிகளிடம், மைசூர் மாநில இன்றைய முதல்வர் அவர்களிடம் இந்த அரசின் சார்பில் நானும், ஏனைய அமைச்சர்களும் பல நேரங்களில் கலந்து உரையாடி வந்திருக்கிறோம். அண்மையில் டெல்லியில் பிப்ரவரித் திங்கள் 8-ஆம் நாள் அன்று மைசூர் மாநில முதல் அமைச்சர், தமிழக முதல் அமைச்சர், கேரள முதல் அமைச்சர் அடங்கிய கூட்டத்தினை மத்திய அமைச்சர் திரு. கே. எஸ். ராவ் அவர்கள் முன்னிலையில் நடத்துவது என்று தீர்மானித்து நான் டெல்லிக்குப் புறப்பட்டுக் கிளம்பிய நேரத்தில் உடல் நலம் இல்லாத காரணத்தினால் அந்தக் கூட்டத்தில் மைசூர் மாநில முதல் அமைச்சர் கலந்துகொள்ளப் போவதில்லை, டெல்லியிலேயே இருந்த மைசூர் மாநில சட்ட அமைச்சர் தான் கலந்துகொள்கிறார் என்று அறிவிக்கப்பட்டது. அந்தக் கூட்டத்தில் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டு அங்கே பேசிய நேரத்தில் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மைசூர் மாநிலம் அடிப்படையிலேயே மதிக்கவில்லை அதை மதித்து நடக்கத் தயாராய் இல்லை என்கிற கருத்தினை நிதி அமைச்சர் அவர்களும், பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களும் நம்மிடத்தில் எடுத்துக்

கூறினார்கள். அதற்குப் பிறகு தான் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டம் ஒன்றினை நான் கூட்டி அனைத்துக் கட்சித் தலைவர்களின் கருத்தையும் நான் கேட்டு அறிந்தேன். அவர்கள் ஹேமாவதி அணையைக் கட்டுவதினால் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிற அபாயங்களையும் அதைத் தவிர்ப்பதற்கு இந்த அரசு எடுக்கின்ற முயற்சிகளுக்கு எல்லாக் கட்சிகளின் சார்பிலும் நிரந்தரமான நிறைவான ஆதரவு உண்டு என்பதனையும் எடுத்துக் கூறினார்கள். அவர்களுடைய அரிய யோசனைகளைப் பெற்று அன்றைய தினமே நானும் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களும் டெல்லிக்குச் சென்று இந்தியப் பிரதமர் அவர்களைச் சந்தித்து இந்தப் பிரச்னையிலே உடனடியாக மத்திய அரசு தலையிட வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டோம். விரைவிலே நடவடிக்கை எடுப்பதாக அவர்கள் கூறியிருக்கிறார்கள். அவர்கள் விரைவிலே நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள் என்றாலும் இன்னும் உரிய நடவடிக்கை எடுக்காதது வருந்துதற்குரிய ஒன்றாகும். ஏனென்றால் மைசூர் மாநிலத்தினுடைய முதலமைச்சர் அவர்களும் மற்றவர்களும் விடுக்கின்ற அறிக்கைகள், பத்திரிக்கைகளிலே வருகின்ற செய்திகள், இவற்றைப் பார்க்கிறபொழுது அவர்கள் மேலிடத்திலிருந்து எந்தவிதமான அனுமதியையும் பெறாமல் சென்ட்ரல் வாட்டர் பவர் கமிஷனிடமிருந்து எத்தகைய ஒப்புதலையும் பெறாமல், திட்டக் குழுவின் ஒப்புதலைப் பெறாமல் ஹேமாவதிஅணையைக் கட்டுவது என்று தீர்மானித்து அந்த வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் தமிழகத்திற்கு வருகின்ற பேரபாயத்தினை உடனடியாகத் தடுக்க வேண்டுமென்று பொறுப்பும் அக்கறையும் மத்திய அரசுக்கு இருக்கிறது. இதிலே மத்திய அரசு இன்னும் காலதாமதம் செய்வது உள்ளபடியே நாம் எல்லாம் வருந்துவதற்குரிய ஒன்றாகும். விரைவில் மத்திய அரசின் நடவடிக்கையை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். யாருடைய அனுமதியும் பெறாமல், திட்டக் குழுவின் அனுமதியும் பெறாமல் ஒரு மாநிலத்திலே இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்யலாம் என்ற முறையிலே மைசூர் மாநிலம் வழி வகுக்குமானால் மற்ற மாநிலங்களும் அதைப் பின்பற்றுமானால் மத்திய அரசு என்ற ஒன்றே தேவையில்லாமல் போய்விடக்கூடிய சூழ்நிலையெல்லாம் ஏற்பட்டு விடும். இந்தப் பேரபாயத்தை உணர்ந்து மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்திற்கு வர இருக்கின்ற இப் பெரிய ஆபத்தை ஏற்படுத்த ஹேமாவதி அணைக் கட்டு கட்டக் கூடாது என்ற உறுதிமொழியும் காக்கப்படாத அளவிலே, நாம் உயிராக மதிக்கின்ற 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மதிக்க மாட்டோம் என்று வெளிப்படையாகச் சொல்வது மிகக் கவலையோடு அணுகிப் பார்க்க வேண்டிய ஒன்றாகும். இந்தக் கவலை தரக்கூடிய பிரச்சினையில் மத்திய அரசு விரைவில் தலையிட வேண்டும். மத்திய அரசின் பதிலுக்குச் சில நாட்கள் காத்திருப்போம். பதில் எதிர்பார்க்கிற நேரத்திற்குள் வராவிட்டால் மீண்டும் எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி அவர்களுடைய



கருத்துக்களை அறிவதாக இருக்கிறேன். அப்படி அறிகிற நேரத்திலே நாம் மனம்விட்டுப் பல விஷயங்களைப் பேசி, இருக்கிற நிலைமைகளை ஆராயவும், சிறிய அளவிலே கூட்டப்படுகிற எல்லாக் கட்சித் தலைவர்களின் அக் கூட்டம் பயனுள்ளதாக இருக்கும். எனவே இந்தச் சபையிலே அதை விவாதிக்க தேவையில்லை, மத்திய அரசின் உடனடியான பதிலை இந்த அரசு விரைவில் எதிர்பார்க்கிறது. மத்திய அரசு அக்கறை காட்டும் என்று எதிர்பார்க்கிறோம். காட்டும் என்றால் அந்தப் பதிலை, காட்டவில்லை என்றால் அதனால் ஏற்படுகிற நிலைமைகளை ஆராய விரைவிலே அனைத்துக் கட்சித் தலைவர்கள் அடங்கிய கூட்டம் கூட்டப்படும். டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த ஒற்றி வைப்புத் தீர்மானம் நாம் எல்லோரும் இந்த விஷயத்திலே எவ்வளவு கவலையோடு இருக்கிறோம் என்பதைத் தெரிவிக்கக்கூடிய தீர்மானமாகப் பயன்படுகிறது என்ற அளவிலே இதற்காக இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்கத் தேவையில்லை என்ற அளவிலே என்னுடைய கருத்துக்களைக் கூறி அமைகிறேன்.

DR. H. V. HANDE : Sir, our cause is a very good one and it suffers for lack of publicity. Can we not at least tell the people of the Mysore State and also explain to the Chief Minister of that State that it is a very serious thing and it is a question of bread and butter for us. I have a feeling that they have not understood the seriousness of the situation in which Tamil Nadu is placed. Can any such step be taken in that direction?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்ற விளக்கத்தின்படி இது அரசின் அன்றாட நிகழ்ச்சிகளுக்கு உட்பட்டிருக்கின்ற காரணத்தினாலும் இதுபற்றி மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், இப்பொருள் குறித்து விவாதிக்க பேரவையின் பிற அலுவல்களை ஒற்றி வைக்கத் தேவையில்லை என்பதால் நான் என்னுடைய அனுமதியை இதற்கு மறுக்கிறேன்.

## (3) அறிவிப்பு.

## ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்பற்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களும் திரு. டி. மார்டின் அவர்களும் ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவற்றைப்பற்றி அரசாங்கம் சில தகவல்களைச் சேகரிக்க வேண்டியிருப்பதால் நாளைக்குப் பேரவைத் தலைவரால் அவை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (4) கவன ஈர்ப்பு

### நக்ஸல்பாரிகளின் பயங்கர நடவடிக்கைகளைத் தடுத்து பீதியுணர்வைப் போக்குதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து டாக்டர் ஹாண்டே அவர்கள் சட்டப் பேரவை 41வது விதியின்கீழ் ஒரு அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார்.

DR. H. V. HANDE : Mr. Deputy Speaker, Sir, I wish to call the attention of the Hon'ble Chief Minister to a matter of urgent public importance, namely, the great anxiety and worry in the minds of the people which has been caused on account of the dangerous activities of the Naxalites in this State and the need to take immediate steps to stop such activities and infuse a sense of security among the general public of this State.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலுள்ள நக்ஸல்பாரிகள் மாவோ அறிவுரைகளின் அடிப்படையில் வன்செயல்களிலும், ஆயுதந்தாங்கிய புரட்சியிலும் ஈடுபடுவது ஒன்றே தொழிலாளி வகுப்பினர் கடைத்தேற வழியென்று பொதுக்கூட்டங்களிலும் ரகசியக் கூட்டங்களிலும் இதுகாறும் அறிவுரைகள் வழங்கி வந்துள்ளனர். அவ்வப்போது, புரட்சியில் ஈடுபடும்படி மாவோவின் கூற்றுகள் அடங்கிய சிறு வெளியீடுகளை வெளியிட்டு வந்ததுடன், நக்ஸல்பாரிகள் அந்த அறிவுரைகள் அடங்கிய சுவரொட்டிகளையும் ஆங்காங்கே ஒட்டி வந்துள்ளனர்.

இம்மாநிலத்தில் உள்ள நக்ஸல்பாரிகளின் நடவடிக்கைகளை அரசு கூர்ந்தும் விழிப்புடனும் கவனித்து வருகிறது. அவர்களது செயல்களை ஒடுக்க இயன்ற நடவடிக்கைகள் அனைத்தும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. நக்ஸல்பாரிகள் நிகழ்த்தும் ஆட்சேப கரமான உரைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் மீது இ.பி.கோ. 124-வது பிரிவின்கீழ் வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன. மாவோவின் அறிவுரைகள் அடங்கிய சுவரொட்டிகளை ஒட்டுவது குறித்தும் இயன்றவரையில் அதுபோன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து விழிப்புடன் செயல்பட்டதன் பலனாக, ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த திரு. நாகிரெட்டி மற்றும் எட்டு நக்ஸல்பாரிகள் 1969 டிசம்பர் திங்களில் சென்னைக்கு வந்தபொழுது கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது ஆந்திரப் பிரதேசத்தில் வழக்குகள் பதிவாகியுள்ளபடியால் தக்க நடவடிக்கை எடுக்கப் படுவதற்காக அவர்கள் ஆந்திரப் பிரதேச காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்கள் கைது செய்யப்பட்டதால், இவ்விரு மாநிலங்களையும் பாதிக்கும் நக்ஸல்பாரிகள் அச்சுறுத்தல் தடைப்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில், கேரள மாநிலத்தைச் சேர்ந்த C. A. தம்பி என்கிற மாதவன் தம்பி என அழைக்கப்படும்



திரு. M. தம்பி என்பவர் துப்புக்குட்டிப்பேட்டையில் (கடலூர் காவல் நிலையம்) கைது செய்யப்பட்டார். அவர் வசம் காணப்பட்ட மாவோ வெளியீடுகள் கைப்பற்றப்பட்டன. மேலும், சனவரி 23-ம் தேதி நள்ளிரவில், செங்கோட்டையைச் சேர்ந்த K. ராசு என்கிற ரவி என்பவரும், சென்னை புரசைவாக்கத்தைச் சேர்ந்த சந்திரசேகரன் என்பவரும் மாவோவின் அறிவுரைகள் அடங்கிய சுவரொட்டிகளை சென்னை சட்டக் கல்லூரி முன்னால் ஒட்டிக் கொண்டிருப்பதாக மாநில C.I.D. -யினால் தகவல் கொடுக்கப்பட்டு, சென்னை சட்டக் கல்லூரி போலீசார் அவர்களை கைது செய்து, அவர்கள் வசம் காணப்பட்ட மாவோ அறிவுரைகள் அடங்கிய சுவரொட்டிகளைக் கைப்பற்றினர். மேற்கொண்டு புலன் விசாரணை நடந்து வருகிறது.

தமிழ் நாட்டிலுள்ள நக்ஸல்பாரிகள் இதுவரையில் பயங்கரச் செயல்கள் எவற்றிலும் ஈடுபடவில்லை. அரசும், காவலரும் விழிப்புடன் செயல்பட்டு உரிய நேரத்தில் தக்க நடவடிக்கை எடுத்ததன் பலனாக, தமிழ் நாட்டில் நக்ஸல்பாரிகளின் நடவடிக்கை கள் குறைந்துள்ளன. எனவே, பொதுமக்கள் இது குறித்து பீதியடையத் தேவையில்லை.

DR. H. V. HANDE : Sir, while I am happy that some assurance has been given that suitable steps would be taken in the matter, may I know from the Hon. Chief Minister whether it is not a fact that some of these people have indulged in anti-national activities like trying to communicate information to other countries like China? Sir, we have already lost 50,000 sq. miles of territory in the northern borders of our country ond there is also a threat from the West Bengal borders. So, we must be nationalists and it does not matter if we follow different policies and principles and also different ideologies.

MR. DEPUTY SPEAKER : Let the hon. Member put a question and let there be no debate.

DR. H. V. HANDE : So, will the Hon. Chief Minister tell us whether he is going to invoke any special provisions of law to see that these people do not indulge in any anti-national activities.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் என்னுடைய அறிக்கை யிலேயே விவரமாக சொல்லியிருக்கிறேன். அவர்களுடைய நடவடிக்கைகள் இன்னும் தீவிரப்படுத்தப்படுமானால், அவைகளைத் தடுக்க ஒடுக்க தமிழ்நாடு காவல் துறை தயாராகவே இருக்கிறது.

## (5) 1970-71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம்.

திருமதி வி. ப. பழனியம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் வரவு-செலவு திட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு இந்தத் திட்டத்தை வரவேற்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்ததுபற்றி பெரிதும் மகிழ்வெய்துகிறேன்.

[திருமதி வி. ப. பழனியம்மாள்] [1970 மார்ச் 3

தமிழக அரசு 1970-71ம் ஆண்டிற்கான பட்ஜெட்டைச் சமர்ப்பித்ததும் பத்திரிகைகள் எல்லாம் வெகுவாகப் பாராட்டின. அந்தப் பாராட்டுகள் உண்மையில் இதுவரை இந்த மன்றத்தில் படைக்கப்பட்ட எந்த பட்ஜெட்டுக்கும் கிடைக்காத பாராட்டுதல்களாகும். நம்மைச் சற்றுச் சாடியே எழுதும் ஒரு தேசிய ஆங்கில நாளிதழ் கூட "More for N.G.O.s and teachers" என்று தலைப்பிட்டு நம் பட்ஜெட்டின் சாராம்சத்தை வெளியிட்டிருக்கிறது.

அரசு ஊழியர்கள், பட்ஜெட் சமர்ப்பிப்பதற்கு முன்தினம் வேதனையோடும், வேதனையால் விளைந்த வெறுப்போடும் சென்னை மாநகர வீதிகளில் ஊர்வலம் வந்தவர்கள், மறுநாள் மகிழ்ச்சியில் திளைத்து, மலர்ந்த முகத்தோடு தோன்றுவதைக் காண்கிறோம். இந்த மகிழ்ச்சிக்குக் காரணமான பட்ஜெட்டைப் பார்த்தால், அங்கே அவர்களுக்கு இடைக்கால நிவாரணம், இதுவரை எங்கும் தரப்படாத சிறப்பு ஈட்டுப்படி இடம் பெற்றிருக்கிறது. இப்பெருமைக்குரிய பட்ஜெட்டை நாம் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம்.

நான் அரசியலுக்கு வருமுன் ஆசிரியையாக இருந்தவள். பட்ஜெட் என்பது ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தின் ஒரு அம்சம் என்பதுதான் அவர்களுக்குத் தெரியும். அது தங்களுக்குச் சில நன்மைகளைக் கொண்டு வரும், சில சலுகைகளைத் தரும் என்று அவர்களுக்குத் தெரியாது. காரணம் இதுவரை வந்த பட்ஜெட்டுகள் ஆசிரிய சமுதாயத்தைப் பற்றி ஒரு அனுதாபம் கூட வெளியிட்டதில்லை. இன்று தமிழ் நாடெங்கிலும் உள்ள ஆசிரியர்கள் அளவு கடந்து மகிழ்கிறார்கள்.. அவர்களுக்கு இலவச மருத்துவ உதவி, வீட்டு வாடகைப்படி, விழாக்கடன், கைத்தறித் துணிகளை வாங்குவதற்கான உதவி, மலைப் பகுதி ஆசிரியர்களுக்கு குளிர் காலப்படி. ஆகியவைகள் அளிக்கப்பட்டுள்ளன. நான் ஆளுங்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் என்ற நிலையில் மட்டுமல்ல, ஆசிரியை என்ற நிலையில் நின்றும் இந்த பட்ஜெட்டைப் பார்க்கிறேன். மகிழும் ஆசிரிய சமுதாயத்தோடு சேர்ந்து மகிழ்கிறேன். இந்த மகிழ்ச்சிக்குரிய பட்ஜெட்டை ஆசிரிய சமுதாயத்தின் சார்பில் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன்.

அடுத்து விவசாயிகள் அளவுகடந்த மகிழ்ச்சியுடன் இந்த பட்ஜெட்டை வரவேற்கிறார்கள். ஏன்? இந்த பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு, 62.50 கோடி ரூபாய்க்குக் குறுகிய காலக் கடன் வசதி, 16 கோடி ரூபாய்க்கு நீண்ட காலக் கடன் வசதி, 166 நிலவள வங்கிகள் அமைக்கத் திட்டம், 25,500 கிணறுகள், 13,200 குழாய்க் கிணறுகள், 15,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள், 34,600 விசையேற்றங்கள், 3,000 டிராக்டர்கள் ஆகியவற்றை அமைக்கவும், வழங்கவும் ஆன 72 கோடி ரூபாய்த் திட்டம் விவசாயிகளின் ஒளிமிக்க எதிர்காலத்திற்குக் கட்டியம் கூறும் இந்த பட்ஜெட்டை விவசாயிகளின் சார்பாக வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.



1970 மார்ச் 3] [திருமதி வி. ப. பழனியம்மாள்]

கோவையில் விவசாயப் பல்கலைக் கழகம் அமைய இருக்கும் செய்தியைப் பட்ஜெட் தருகிறது. இச் செய்தி தமிழக மக்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும் செய்தி. இந்த மகிழ்ச்சிக்குரிய களம் எங்கள் மாவட்டத்தின் தலைநகரில் அமைவது குறித்து நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். கோவை மாவட்ட மக்களின் சார்பில் இந்த பட்ஜெட்டிற்கு நான் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் கோவை மாவட்டத்தை வளமாக்கும் ஒரு திட்டம். தமிழ்நாட்டில் ஏற்படப் போகும் பசுமைப் புரட்சிக்கு அடிக்கல் இடும் திட்டம். இந்தத் திட்டத்திற்கு இந்த பட்ஜெட்டில் 2.7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டக் கால்வாயின் கரங்களால் தாலாட்டப்படும் கழனிப் பகுதிகளுக்குச் சொந்தமான மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகரில் ஏழைகள் வசிக்கும் குடிசைப் பகுதிகளில் தீப்பிடிக்காத நிரந்தர வீடுகளை அமைத்து, ஏழை எளியவர்களின் அடி வயிற்றில் கொழுந்து விட்டு எரிந்த அச்சத்தை அணைக்க வேண்டுமென்பது அண்ணா கண்ட கனவு. அக் கனவினை நினைவாக்கும் வகையில் ஏழு ஆண்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்திருப்பதும், அதற்காக இந்த ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதும் பாராட்டுதற்குரியதாகும்.

இந்த மன்றத்தில் இதற்குமுன் ஒரு முறை நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. விளைவுச் சட்டத்தின் பாதுகாப்பில் பெரும் பண்ணைகள் இன்றும் பண்ணைகளாகவே உள்ளன. அந்தச் சட்டத்தால், பணக்காரர்கள் பாதிக்கப்படவே இல்லை. மாறாக, ஏழைகளும், அரசும் ஏமாந்தது. இன்று உச்ச வரம்பு 30 ஏக்கரிலிருந்து 15 ஏக்கராகக் குறைக்கப்பட்டுள்ளது. இதைத் தீவிரமாக அமல்படுத்த வேண்டும் என்றும் நான் நமது அரசைக் கேட்டுக் கொள்கிறேன் இந்தச் சட்டத்தால் நான் Tap the rich, pat the poor என்று அண்ணா ஆட்சிக்கு வந்தபோது அழகாகச் சொன்ன தமிழக அரசின் குறிக்கோளை நிறைவேற்றுகிறோம். இந்தப் புரட்சிகரமான திட்டத்தைத் துணிவோடு கொண்டுவரும் தமிழக அரசை நான் பெரிதும் பாராட்டுகிறேன். இந்தத் திட்டத்தை நான் கோடிக்கணக்கான ஏழைகளின் சார்பாகவும், நிலமற்ற உழவர்களின் சார்பாகவும் வரவேற்கிறேன்.

தமிழக அரசு பட்ஜெட்டின் ஒவ்வொரு அம்சமும் பாராட்டுதற்குரியதாக உள்ளது. ஒவ்வொரு திட்டமும் ஏழைகள், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் ஆகியோரின் நலனை நோக்கமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருப்பது பாராட்டிற்குரியது.

கடைசியாக, என்னுடைய தொகுதியில் கடத்தூர் கணியூருக்கு இடையே போக்குவரத்து அதிகமாக இருப்பதாலும், மிகவும் இன்றியமையாத காரணங்களுக்காகவும் ஒரு பாலம் வேண்டு

மென்று பல ஆண்டுகளாகவே கேட்டுக் கொண்டிருந்தோம். அந்தப் பாலம் கட்டும் திட்டம் இந்த பட்ஜெட்டில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்த பட்ஜெட் விவாதத்தில் பங்கு பெற அனுமதித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. தோ. மு. நல்லசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1970-71ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஒட்டி என்னுடைய சில கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த காலத்தில் ஆளுகின்ற கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சியைப் பார்த்துக் கூறிய பெரிய குற்றச்சாட்டு, படிப்படியாக வரியை உயர்த்துவதன் மூலமாக மக்கள் பெரும் வேதனைக்கு உள்ளாகிறார்கள் என்பதைக் கடந்த பத்தாண்டு காலமாக இந்தச் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் கேட்டுக் கொண்டிருந்தேன். நம்முடைய தமிழக அரசு சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னால் 1960-61ல் 101 கோடி ரூபாய் அல்லது 102 கோடி ரூபாய்க்கு வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தது. அன்றைக்கு எதிர்க்கட்சிகளிலே ஒன்றாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் வரி அதிகமாகப் போடுவதைக் கண்டித்துப் பேசினார்கள். இன்றைக்கு 1970-71ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை எதிர்த் தரப்பில் இருந்தவர்கள் ஆளும் கட்சியாக மாறி சமர்ப்பிக்கும் நிலைமையில் கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய்க்கு ஒரு வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்திருக்கிறார்கள். அவர்கள் 1967-68ல் முதல் முறையாகச் சமர்ப்பித்த பட்ஜட்டே கூட 233 கோடிக்குத்தான் என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கடந்த சுமார் நான்கு ஆண்டுகளுக்குள்ளே கிட்டத்தட்ட 60 கோடி ரூபாய்க்கும் அதிகமாக வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு வரி உயர்வை அதிகப்படுத்தியிருக்கிறீர்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிச் காட்ட விரும்புகிறேன். அப்படி உயர்த்தப்பட்ட நிலையிலும் எந்த எந்த இனங்களில் அதிகப்படியாக கவனம் செலுத்துவதன் மூலம் மேலும் நாட்டு மக்களுக்கு வசதிகளைத் தேடித் தர முடியும். விலைவாசி உயர்வைத் தடுத்து நிறுத்த முடியும் என்பதைப் பற்றி தீவிரமாக ஆலோசிக்கப்பட்டதா என்பதைப் பார்க்கும்போது 1970-71ல் திட்டங்களுக்காகச் செலவிடப்படும் 106 கோடி ரூபாயில், வேளாண்மையும், அதற்குத் தொடர்பான வேலைத் திட்டங்களும், என்ற அமைப்பில் தான் முக்கியமான இலாக்காக்கள் நிர்வாகிக்கப்படுகின்றன என்று கருதுகிறேன். வேளாண்மை உற்பத்தி, சிறு பாசனம், மண்வளப் பாதுகாப்பு, கால்நடை வளர்ச்சி, பால் பண்ணையும் பால் வழங்கலும் என்ற முக்கியமான இனங்கள் மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான இனங்கள், இவைதான் வேளாண்மையும்



அதற்குத் தொடர்பான வேலைத் திட்டங்களும் என்ற அமைப்பில் வருகின்றன. அதற்கு நீங்களே சமர்ப்பித்து 1968-69-ம் ஆண்டு பட்ஜட்டில் 17 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்த நிலை மாறி, 1970-71-ல் சுமார் 12¼ கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருப்பது வருந்தத்தக்கது. நாட்டில் இருக்கும் சாதாரண மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் இனங்களுக்குப் போதிய அளவு கவனம் செலுத்தப்படவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

அதேமாதிரி கூட்டுறவு, சமுதாய வளர்ச்சி மேம்பாடு ஆகிய அமைப்புகளை எடுத்துக் கொண்டாலும் அதிகப்படியான தொகைகள் ஒதுக்கப்படவில்லை என்பது என் மற்றொரு குற்றச்சாட்டாகும். இதற்கெல்லாம் அடிப்படையான விவசாயத்தைப் பற்றிச் சொல்வதற்கு முன், பாசனம், மின்விசை ஆகியவைபற்றி குறிப்பிட விரும்புகிறேன். இவற்றிற்காக 70-71-ல் கிட்டத்தட்ட 48 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 1968-1969-ல் ஒதுக்கப்பட்டுள்ளதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இதற்காக அதிகப்படியாக செலவு செய்யப்படவில்லை, அதன் வளர்ச்சியும் போதவில்லை என்பது எனது மற்றொரு குற்றச்சாட்டாகும். மக்களின் தேவைக்கு உரிய திட்டங்களில் அதிகக் கவனம் செலுத்தப்படவில்லை என்பதோடு கூட மக்களுக்கு அன்றாடம் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்களின் விலைவாசி ஏற்றத்தைத் தடுப்பதற்கு அரசு போதிய கவனம் செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டையும் நான் சாட்ட விரும்புகிறேன்.

விவசாயத்தை நம்பியிருக்கும் நம் நாட்டில் உள்ள இன்றைய நிலையைப் பார்க்கும்போது, சர்க்கரை ஆலைகள் நம் மாநிலத்தில் அதிகமாகத் தோன்றியுள்ளதைப் பார்க்கிறோம். முன்பு வடநாட்டில்தான், குறிப்பாக யு.பி., பீஹார் போன்ற மாநிலங்களில் தான் சர்க்கரை ஆலைகள் அதிகமாக இருந்து வந்தன. இன்று நம் தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 17 சர்க்கரை ஆலைகள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். விவசாயத்தை நம்பியிருக்கும் உழவர்கள் மாற்று விளைபொருளாகக் கரும்பைப் பயிரிடுகிறார்கள். அப்படிக் கரும்பு பயிரிடுகிறவர்களுக்கு சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் ஏற்பட்டிருக்கக்கூடிய அவதியை இந்த அரசு கவனித்திருக்கும் என்று கருதுகிறேன். சென்ற ஆண்டில் மத்திய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ. 100 குறைந்தபட்ச விலையாக கொடுத்தேயாக வேண்டுமென்று. ஆனால் நம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ரூ. 80ம் அதற்குக் குறைவாகவும்தான் கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டு சுமார் ரூ. 74 அளவில் அல்லது அதற்குக் குறைவாகத்தான் கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைப் பற்றி அரசு தக்க கவனம் செலுத்தியாக வேண்டும். இப்படி குறைந்த விலை கிடைப்பது என்ற நிலை மட்டுமல்லாது காலா காலத்தில் அவர்களின் பொருள்களுக்குரிய தொகை கிடைப்

பதில்லை. சர்க்கரை கிடங்குகளில் இருக்கிறது, லெவி சர்க்கரை விற்பனையாவதில்லை, 'ஓப்பன் மார்க்கட் ஷுகர்' விற்பனையாவதில்லை, ஆகவே எங்களிடம் பணம் இல்லை என்று சொல்கிருர்கள் ஆலைக்காரர்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க யு.பி. யில் செய்துள்ளதைப் போன்று இந்தச் சர்க்கரை ஆலைகளையெல்லாம் தேசியமயமாக்கி விடலாம். அதனுல் சர்க்காருக்கும் அதிகமான அளவில் லாபம் கிடைக்கக்கூடும், அதேசமயத்தில் கரும்பு பயிர் செய்யும் விவசாயிகளுக்கும் அது பலன் உள்ளதாக இருக்கும், வாங்கிச் சாப்பிடக்கூடிய மக்களுக்கும் நியாயமான விலையில் சர்க்கரை கிடைக்க வாய்ப்பும் ஏற்படும். அதில் அரசு தக்க கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இந்த நிதிநிலை அறிக்கையில் உச்சவரம்பு பற்றி கூறியிருக்கிருர்கள். உச்சவரம்பு 30 ஸ்டான்டேர்ட் ஏக்கர் என்பதை 15 ஸ்டான்டேர்ட் ஏக்கராக் குறைக்கப் போவதாகக் கூறியுள்ளார்கள். இதை நான் சொல்லும்போது, உச்சவரம்பு வேண்டாம், அல்லது இந்த முப்பது ஏக்கர் என்பதைக் குறைக்க வேண்டாம் என்று சொல்ல நான் முன்வரவில்லை. நாம் நாட்டின் நிலையைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். நம்நாட்டிலுள்ள மக்கள் தொகையையும், இருக்கக்கூடிய விளைநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம் நாட்டில் உள்ள விளை நிலங்கள் குறைவாகத்தான் இருக்கிறது. ஆனுல் அதில் விளையக்கூடிய பொருள்களை நம்பி வாழக்கூடிய மக்கள் எண்ணிக்கை மிக மிக அதிகம். இந்த நிலையில் எந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதானுலும் உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் குந்தகம் ஏற்படாத வகையில் கொண்டு வரப்பட வேண்டும். விளை நிலங்கள் குறைவு, அதை நம்பி வாழ்பவர்கள் எண்ணிக்கை அதிகம். ஆகவே உற்பத்தியைப் பெருக்கும் வகையில்தான் எந்தச் சீர்திருத்தமும் கொண்டுவரப்பட வேண்டும். அதை எண்ணத்தில் வைத்துத்தான் 30 ஸ்டான்டேர்ட் ஏக்கர் என்று 61ல் முன்பிருந்த அரசு ஒரு சட்டத்தை இயற்றினுர்கள். அப்படி இயற்றப்பட்ட சட்டத்தின் விளைவுகள் என்ன என்பதைப் பற்றி நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். எனக்குக் கிடைத்துள்ள புள்ளிவிவரங்களை வைத்துக் கொண்டு பார்க்கும்போது நோட்டிஃபைட் சர்ப்ளஸ் என்ற அமைப்பில் 24,500 ஏக்கர்கள்தான் நிர்வாக அமைப்பில் உள்ளது. சுமார் 65,000 ஏக்கர்களை நீதி பரிபாலனத் துறையின் பரிசீலனையில் இருக்கக் கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆக, மொத்தத்தில் 8,120 ஏக்கர்கள்தான் அசைன்' செய்து கொடுத்திருக்கிருர்கள், 'சர்பளஸ் நிலம் என்று. இதைச் செய்ய நீங்கள் முற்பட்டு 2½ ஆண்டுகள் ஆகிவிட்டன. இருந்தபோதிலும் இந்த அஸைன்மென்டில் அதிகப்படியான வேகம் காண்பிக்கப்படவில்லை. ஆகவே இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதின் மூலம் எந்த அளவிற்கு பெரிய மாற்றம் இருக்கும் என்பதை ஒரு நிபுணர் குழு போட்டு பரிசீலிக்க வேண்டும் அல்லது கடைசிப் பட்சமாக சமர்பிக்கப்பட்டிருக்கும்



இந்த பில்லை இரண்டு சபைகளின் உறுப்பினர்கள் சிலர் அடங்கிய ஒரு செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி பரிசீலனை செய்து கொண்டு வரவேண்டும் என்பது என் கருத்து.

இந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையில், விவசாயத் துறை மேம்பாடு அடையச் செய்ய நவீன இயந்திரங்களைக் கொண்டு, அதிலும் குறிப்பாக ட்ராக்டர்களைக் கொண்டு பயிரிடும் வகையில் 1,368 ட்ராக்டர்கள் வழங்கியுள்ளதாகப் பெருமையுடன் குறிப்பிட்டு இருக்கிருர்கள். மேலும் 3,000 ட்ராக்டர்கள் வழங்க இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். பசுமைப் புரட்சியை ஏற்படுத்த இருக்கிரேும் என்று சொல்லும்போது, நாம் கொண்டு வரும் திட்டங்களினுல் மக்களுக்கு என்ன நன்மைகள் ஏற்படும், நவீன முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் அது சிறிய அளவில் உள்ள பண்ணைகளுக்கு உகந்ததாக இருக்குமா என்பதைப் பற்றி பரிசீலிக்க வேண்டும். கிராமங்களில் உள்ள விவசாயிகளின் நிலையைப்பார்க்கும்போது, சுமார் 15 ஏக்கர்களுக்குக் குறைவாக உள்ள விவசாயிகளின் நிலையைப் பார்க்கும்போது அநேகமாக எல்லா விவசாயிகளும் கடன் பளுவில் மூழ்கியவர்களாகவே இருக்கிருர்கள். ஆனுல் கொடுக்கப்படும் புள்ளிவிவரக் கணக்கை எடுத்துப் பார்த்தால் ஐந்து ஏக்கர், பத்து ஏக்கர் உள்ளவர்கள் க்ஷேமமாக இருக்கிருர்கள் என்றுதான் சொல்லப்படுகிறது. எல்லா அரசியல் கட்சிகளும் தீவிரமாகத்தான் சோஷலிசத்தைப் பற்றி பேசுகின்றன. எல்லோரும் ஏழை மக்களுக்காகத்தான் பேசுகிருர்கள். ஆகவே நாம் செய்யும் சட்டதிட்டங்கள் ஏழை மக்களை வேதனைக்குள்ளாக்குவதாக இருக்கக் கூடாது. அதிலும் குறிப்பாக. அவர்களுக்கு உணவுப் பண்டங்கள் கிடைப்பதில் வேதனை உண்டாக்கும் நிலை ஏற்பட்டு விடக் கூடாது.

அடுத்தபடியாக, மதுரை, ராம்நாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் சில பகுதிகளில் மழை பெய்யாது போனமையால் வரட்சி நிலைமைகளைச் சமாளிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கோவையைச் சேர்ந்த தாராபுரம், சேலத்தை சேர்ந்த நாமக்கல், திருச்செங்கோடு, கரூர், குளித்தலை போன்ற வட்டங்களில் மழைக் குறைவு காரணமாக மக்கள் குடி தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படக்கூடிய நூற்றுக்கணக்கான கிராமங்கள் அந்தப் பிரதேசங்களில் உள்ளன. அவற்றையும் அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளாதது வருந்தத் தக்கது. இந்த அறிக்கையில் அரசு பல நல்ல காரியங்களை செய்வதாக குறிப்பிட்டிருந்தாலும் அரசாங்கம் பெருக்கிக் கொண்டுள்ள வரிகளைப் பார்க்கும்போது செலவிடக் கூடியது 297 கோடி ரூபாய் என்ற நிலையில் செலவு செய்வது பாராட்டத்தக்கது அல்ல என்று என் கட்சி சார்பில் கூறி அமர்கிறேன். வணக்கம்.

[1970 மார்ச் 3

* திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றிருக்கக்கூடிய நிலைமையையும், 1966-ம் ஆண்டு இறுதியில் இருந்த உணவு நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் 1966-ம் ஆண்டு இறுதியில் மக்கள் அரிசிக்காக கடைகளுக்கு முன்னர் க்யூவில் நின்று கொண்டு அரிசி கிடைக்காமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்த நிலை இருந்தது. ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளில் நமது தமிழக அரசு எடுத்துக் கொண்ட அக்கன்ற காரணமாகவும், அவர்கள் விவசாய உற்பத்தியில் அதிக நாட்டம் கொண்டு விவசாயிகளுக்குக் கொடுத்த அநேக சலுகைகள் காரணமாகவும், அந்தச் சலுகைகளை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்கியதன் காரணமாகவும், இயற்கை நமக்குச் சாதகமாக இருந்த காரணத்தினாலும் நம் மாநிலம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று இன்று உணவுக் கட்டுப்பாட்டை நீக்கக் கூடிய நிலைமையை அடைந்திருக்கிறோம். இது மிகவும் வரவேற்கத் தக்கதொன்றாகும். இன்றைய நிலைமையிலே மக்கள் அவர்களுக்கு வேண்டியபோது, அவர்களுக்கு வேண்டிய அளவு, அவர்களுக்கு வேண்டிய தரமான அரசியை வாங்க வசதியாக கட்டுப்பாடுகளை நீக்கியிருக்கும் நம்முடைய தமிழக அரசை வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன். குறிப்பாக மிகவும் தைரியத்துடன் இந்தக் கட்டுப்பாட்டை நீக்கிய நம்முடைய முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களையும், உணவு அமைச்சரவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால், இந்த உணவுக் கட்டுப்பாட்டை நீக்கியிருப்பது என்றென்றைக்கும் நிரந்தரமாக இருக்க நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். மறுபடியும் உணவு உற்பத்தி குறைந்து, திரும்பவும் உணவுக் கட்டுப்பாடு வராமல் இருக்க, ஏற்கெனவே அரசாங்கம் விவசாயிகளுக்குக் கொடுத்து வந்த அத்தனை சலுகைகளையும் கொடுத்து, மறக்காமல் கொடுத்து, மேலும் அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இந்த 1970-71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே எல்லாக் கிராமப்புறங்களுக்கும் மின்சார வசதியளிக்கவும், இந்த ஆண்டு இறுதிக்குள் 42,387 கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் மின் வசதி கொடுக்கவும், இன்னும் குறுகிய காலத்தில் நம் மாநிலத்திலுள்ள அத்தனை கிராமங்களுக்கும் மின் வசதி கொடுக்கவும் திட்டமிட்டிருப்பதை வரவேற்கிறேன்.

நம் மாநிலத்திலுள்ள பெரும்பான்மையான அரிசன காலனிகளுக்கு மின் இணைப்புக் கிடைக்கவில்லை. எனவே, கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கும் பொழுது அரிசன காலனிகளுக்கு முதலிடம் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.



1970 மார்ச் 3] [திரு. கே. போஜன்]

நான் மதிப்பீட்டுக் குழுவிலே மாநிலத்திலுள்ள மற்ற எல்லா மாவட்டங்களுக்கும் சென்றபொழுது, மின் இணைப்புக்காக வேண்டிய பொருள்களான கம்பங்கள், கம்பிகள் போன்ற ஏனைய சாமான்கள் குறிப்பிட்ட காலத்தில் கிடைப்பதில்லை என்ற புகார்கள் ஆங்காங்குள்ள அதிகாரிகளிடம் இருக்கின்றன. ஆகவே, மின்வாரியம் ஆங்காங்கு கேட்டிருக்கும், அதிகாரிகள் கேட்கும் மின் இணைப்புக்கு வேண்டிய பொருள்களை உடனடியாக அளிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மற்றும் கிராமப் பகுதிகளிலுள்ள மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்கள் இருப்பதற்குப் போதிய வீடுகள் கிடைப்பதில்லை. எனவே, அவர்களுக்கு இடவசதி செய்து தரவில்லை என்ற ஒரு குறையிருக்கிறது. அதை உடனடியாக நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே, பேரூராட்சிகளுக்கு இதுவரையில் சாலைகளைப் பேணுவதற்கும், நிர்மாணிப்பதற்கும் ஜனத்தொகையின் அடிப்படையில் மானியம் அளிக்கப்பட்டு இருந்த ஒரு நிலையை மாற்றி இப்பொழுது சாலைகளின் மைல் நீள அடிப்படையில் மானியம் அளிக்கத் திட்டமிருப்பதை வரவேற்கிறேன். அதற்கு காரணம், நீலகிரி மாவட்டம் போன்ற மலைப்பகுதி மாவட்டங்களிலேயுள்ள சாலைகள், ஜனத்தொகை அங்கே குறைவாகயிருந்தாலும், சாலைகளின் நீளம் அதிகமாகயிருப்பதால் இதுவரை கொடுக்கப்பட்ட மானியம் போதவில்லை. இப்பொழுது மாற்றி அமைத்திருக்கின்ற முறைப்படி போதுமானதாகயிருக்கும், சாலைகள் நல்லமுறையில் பராமரிக்கப்படும் என்ற காரணத்தினால் இதை வரவேற்கிறேன்.

இரண்டு, மூன்று ஆண்டுகளாக விவசாயத் துறைக்கும், மற்றத் துறைக்கும் அதிக மானியம் கொடுத்திருந்தாலும், மருத்துவத் துறைக்கு அதிக மான்யம் ஒதுக்கப்படவில்லை. குறிப்பாக, கிராமப் புறங்களில் மருத்துவ வசதி மிகவும் குறைந்திருக்கிறது. போதுமான அளவுக்குக் கிராமப்புறங்களில் மருத்துவ வசதி கிடைக்கவில்லை. ஆகவே, இதைக் கருத்திற் கொண்டு, ஆங்காங்குள்ள கிராமப்பகுதிகளில் மருத்துவமனைகளை ஏற்படுத்தி, கிராமப் பொது மக்களுக்கு மருத்துவ வசதி ஏற்படுத்தித் தர தீவிர நடவடிக்கை எடுக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பின் தங்கிய வகுப்பினரின் குறைகளைக் கண்டறிந்து அவைகளைப் போக்க ஒரு ஆணைக் குழுவை அமைத்திருப்பதை நான் மனதார வரவேற்கிறேன். காரணம், பின்தங்கிய வகுப்பினர்கள் மிகவும் கீழ்ப்பட்ட நிலையிலே, பின்தங்கிய பொருளாதார நிலையில், வசதியில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாணைக் குழு பின்தங்கிய வகுப்பினரின் வாழ்க்கைத் தரத்தை அறிந்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பரிந்துரை

கொடுக்க இயலும். அதன் பேரில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியும். இப்பொழுது அமைத்துள்ள பின்தங்கிய வகுப்பினர் ஆணைக் குழு எல்லா மாவட்டங்களுக்கும் சென்று, பின்தங்கிய வகுப்பினரின் குறைகளை அறிந்து, ஒரு நல்ல பரிந்துரை அளிக்கும் என்றும், அதன்மூலம் அரசாங்கம் பின்தங்கிய வகுப்பினரின் நலன்களுக்காக, அவர்களின் குறைகளைப் போக்குவதற்காக நடவடிக்கை எடுக்கும் என்றும் நம்புகிறேன்.

அரிசன நலனுக்காக 66–67–இல் 405 லட்சம் ரூபாய்க்கு வகை செய்யப்பட்டிருந்ததற்கு மாருக, 70–71–இல் 519 லட்சம் ரூபாயாக உயர்த்தியிருப்பதை வரவேற்கிறேன். இன்னும் மேலும் அரிசனங்களுக்கு வேண்டிய போதிய எல்லாவிதமான வசதிகளையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்த அறிக்கையிலே புதிதாக 22 அரிசன மாணவர் இல்லங்களைத் திறக்கவும், தற்போது தனியார் துறையினல் நடத்தப்பட்டு வரும் மானியம் பெறும் 20 அரிசன மாணவர் இல்லங்களை எடுத்துக் கொள்ளவும் இருப்பதை வரவேற்கிறேன். ஆனல் இந்த 22 புதிய இல்லங்களை ஏற்படுத்தினல் மட்டும் போதாது. மேலும் அதிக அரிசன மாணவர் இல்லங்களை ஏற்படுத்தியும், மேலும் அரிசன காலனிகளிலே போதுமான பள்ளிக் குழந்தைகள் இருந்தால் ஆங்காங்கு உடனடியாகப் பள்ளிகளை நிறுவவும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கிராமப்புறங்களில் வேலையின்மையைப் போக்குவதற்காக சுமார் ஒருகோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இது போதாது என்று கருதுகிறேன். காரணம், கிராமப் பகுதிகளில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. எனவே, இந்தத் தொகையை மேலும் அதிகமாக ஆக்கி ஒவ்வொரு கிராமத்திற்கும் பெரிய தொழிற்சாலை, சிறிய கைத்தொழில்களுக்கான தொழிற்சாலை ஏற்படுத்தி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, வேண்டிய திட்டங்களை உடனடியாகத் தீட்டும் என்று நம்புகிறேன்.

வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நம்முடைய மாநிலத்தில் 18 கோடி ரூபாய் செலவழித்திருக்கிருர்கள். 14.05 கோடி ரூபாய் மத்திய சர்க்காரிடமிருந்து பெற்றிருக்கிருர்கள். அதற்காக அவர்களை மிகவும் பாராட்டுகிறேன். ஆனல் மற்றவர்களெல்லாம் கூறுகிருர்கள், மத்திய அரசு மற்ற மாநிலங்களுக்கு அதிகமாகத் தரவில்லை, நம் மாநிலத்திற்குத்தான் கொடுத்திருக்கிருர்கள் என்று சொல்லுகிருர்கள். எப்படி வாங்கி இருந்தாலும், நம் மாநிலத்தில் வறட்சி நிலைமை. ஆங்காங்குள்ள கஷ்டங்களை நிவர்த்தி செய்ய மத்திய சர்க்காரிடமிருந்து வாங்கி, குடிநீர் பிரச்சனையையும், மற்ற பஞ்ச நிவாரண வேலைகளையும் செய்ய செலவழித்திருப்பதைப் பாராட்டுகிறேன்.. எங்கள் நீலகிரி மாவட்டத்திற்கு சுமார் 15 லட்சம் ரூபாய் கோரியிருந்தோம்.



ஆனல் 10.5 லட்சம் ரூபாய்தான் கிடைத்தது. அதை நல்லமுறையில் பயன் படுத்தியிருக்கிருேம். அங்குள்ள வறட்சியான இடங்களில், குடிநீர் இல்லாத கிராமங்களில் குடிநீர் வழங்கப்பட்டிருக்கிறது. எனினும் இன்னும் பல கிராமங்களில் அங்கு குடிநீர் வசதி கிடையாது. எனவே மேலும் நமது சர்க்கார் போதிய அளவில் பண உதவி செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

உதகை நகரில் கடந்த 3, 4 வருஷங்களாகக் குடிநீர்ப் பிரச்சனை இருந்து வருகிறது. கடந்த ஆண்டிலே நம் மாநில அரசு இந்தக் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக "பார்சன் வேலி" என்ற திட்டத்தை, 40 லட்சம் ரூபாயில் போட்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களும், நிதியமைச்சரவர்களும் அங்கு வந்து "ஃபவுன்டேஷன் ஸ்டோன்" நாட்டி ஆரம்பித்து வைத்திருக்கிருர்கள். அந்த வேலை மும்முரமாக நடந்து கொண்டு வருகிறது. ஆனல் அந்த வேலையை இன்னும் விரைவில் முடிக்க வேண்டும். ஏனென்ருல் கோடை சீசன் ஏப்ரல், மே மாதங்களில் ஆரம்பமாகிவிடும். ஊட்டிக்கு பெருவாரியாக மற்ற மாவட்டங்களிலிருந்தும், மற்ற மாநிலங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் கோடை சீசனுக்கு மக்கள் வருகிருர்கள். அவர்கள் வருவதற்கு முன்னலேயே அந்த வேலையை முடிக்க உடனடியான நடவடிக்கை எடுத்து, சீசன் ஆரம்பிப்பதற்கு முன்னலே அந்த வேலையை முடிக்க வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நம் மாநிலத்திலுள்ள அரசிதழ் பதிவு பெருத அரசாங்க ஊழியர்களான என்.ஜி.ஓ. க்களுக்குச் சிறப்பு ஈட்டுப் படியாக பத்து ரூபாய் அளித்திருப்பதை வரவேற்கிறேன். ஆனல் அதேநேரத்தில் அதை இன்னும் சிறிதளவு அதிகரிக்கலாம் என்று நான் கருதுகிறேன். என்.ஜி.ஓ. க்களுக்குச் சிறப்பு ஈட்டுப்படியாக 10 ரூபாய் மட்டும் கொடுத்துவிட்டால் போதாது. அவர்களுக்கு மேற்கொண்டு பல குறைகள் இருக்கின்றன. நம் மாநிலத்தில் வேலை செய்யும் என்.ஜீ.ஓ. க்களுக்கும், மத்திய சர்க்காரில் வேலை செய்யும் ஊழியர்களுக்கும் உள்ள ஊதியங்களில் பல வேறுபாடுகள் இருக்கின்றன. அவர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் இவர்களுக்கும் கிடைக்க வேண்டும். மத்திய சர்க்காரில் பணியாற்றும் என்.ஜி.ஓ. க்களுக்குக் கிடைக்கக்கூடிய பல சலுகைகளும் மாநில சர்க்காரில் வேலை செய்யும் என்.ஜீ.ஓ. க்களுக்குக் கிடைக்க வேண்டும். பல சலுகைகளில் மிகுந்த வேறுபாடு இருக்கின்றன. இவர்கள் மிகவும் குறைந்த ஊதியம் பெறுகிருர்கள். ஆனல் இருவரும் செய்யும் வேலை ஒரே வேலைதான். ஆகவே, இந்தமாதிரியான குறைபாடுகளை நீக்க வேண்டும். கேரளாவில் என்.ஜி.ஒ. க்களுக்கு அதிகப்படியான ஊதியமும், மற்ற சலுகைகளும் கொடுக்கிருர்கள். அதைப்போலவே நாமும் கொடுப்பதற்கு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

[திரு. கே. போஜன்] [1970 மார்ச் 3

குறிப்பாக, நீலகிரி மாவட்டத்தில் பணிபுரியும் பதிவு பெறாத அரசு ஊழியர்களுக்கு 1922-ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட அந்த மலைவாசப்படி என்ற படியினைத்தான் இப்பொழுது அமலில் வைத்திருக்கிறார்கள். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலைமை என்ன? இன்றிருக்கும் நிலைமை என்ன என்பதை அறிந்து அதற்குத் தக்கவாறு அவர்களுடைய குறைகளைப் போக்கி, அதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதுமட்டுமல்ல, உதகையில் பணியாற்றும் என்.ஜீ.ஓ. க்களுக்கு வீட்டு வசதி இல்லை. அதனால் தனியார்-வீடுகளில் வாடகை அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே, அந்தக் குறையையும் நீக்க வேண்டும். பல ஆண்டுகளுக்கு முன்னால் என்.ஜீ.ஓ.க்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்க, கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க, "ஃபவுண்டேஷன் ஸ்டோன்" போடப்பட்டு பல ஆண்டுகளாக அது அப்படியே இருக்கிறது. அதை அரசு உடனடியாகக் கவனித்து, என்.ஜீ.ஓ.-க்களுக்கு வீட்டு வசதி செய்யும் முறையில் வீடுகளைக் கட்டி வசதி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மற்ற ஏனைய ஆசிரியர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகளையும் கொடுத்து, மலைப்பகுதிகளிலே தனியார் துறை பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குக் குளிர்காலப் படியும் இதுவரையில் அளிக்காததை, இப்பொழுது இந்த நிதிநிலை அறிக்கையிலே கொடுக்க முன்வந்திருப்பதைப் பாராட்டி வரவேற்கிறேன்.

ஓய்வு ஊதியம் பெறுபவர்களுக்கு குறைந்தபட்ச தொகை ரூ. 20 ஆக இருந்ததை, ரூ. 30 ஆக உயர்த்தியிருப்பதை, ஓய்வு ஊதியம் பெறும் உத்தியாகஸ்தர்கள் அனைவரும் வரவேற்பார்கள் என்று நான் கருதுகிறேன். அதுவும் அல்லாமல், ஓய்வு ஊதியத்தை கணக்கிடும்பொழுது முன்பெல்லாம் கடைசி 3 ஆண்டுகள் வாங்கிய சராசரி சம்பள விகிதம்தான் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது. தற்சமயம் கடைசி ஓராண்டுக்கான சராசரி ஊதியத்தைக் கணக்கிடும்பொழுது முன்பெல்லாம் கடைசி 3 ஆண்டுகள் வாங்கிய அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதனால் அவர்களுக்குச் சற்று கூடுதலாக ஓய்வு ஊதியம் கிடைக்கும். அதையும் நான் வரவேற்கிறேன்.

கடைசியாக வரிவிதிப்பு முறைப்பற்றி ஒரே வார்த்தைக் கூறிக்கொண்டு நான் முடிக்கிறேன். மற்றைய பல நண்பர்கள் இங்கு பேசும் பொழுது இந்த நிதிநிலை அறிக்கை வரி இல்லாத அறிக்கை என்று கூறினார்கள். வரி போடாமல் எந்தச் சர்க்காரும் நடக்க முடியாது. இதில் புதிய வரி போடவில்லை என்றாலும், பழைய வரியைச் சிறிது உயர்த்தியிருக்கிறார்கள். அப்படி உயர்த்தியிருப்பதைப் பார்க்கும்பொழுது, விவசாயிகளுக்குத் தேவையான கருவியாகிய டிராக்டர்கள் மீது விதிக்கப்பட்டிருக்கும் வரியை



1970 மார்ச் 3] [திரு. கே. போஜன்]

எடுத்துவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம் மாநிலத்தில் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களான காபி, தேயிலை, மற்றும் சர்க்கரை, மண்ணெண்ணெய் ஆகியவைகளின் மீது மத்திய சர்க்காரால் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் பொதுமக்கள் அதிகக் கஷ்டத்திற்கு உள்ளாக வேண்டியிருக்கிறது. குறிப்பாக, மத்திய தர வகுப்பினரை மிகவும் கஷ்டப்படுத்துகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. இவையெல்லாம் அரசு கவனித்து அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொருள்களின் மீது விதிக்கப்பட்டிருக்கும் வரிகளை நீக்கிவிடுமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. ஆலடி அருணா:** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது எனது கருத்துக்களை இந்த மேலான அவையின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். 1967-க்குப் பின்னர் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து இந்த நாட்டில் தொழிலைப் பெருக்குவதற்காகவும், தொல்லையைத் துடைப்பதற்காகவும், விவசாயத்தை விருத்தி செய்வதற்காகவும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காகவும் புதிய நெறிகளைப் புகுத்திடவும், புரட்சிகரமான திட்டங்களை மேற்கொள்ளவேண்டும் என்பதற்காகவும், பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்தத் தத்துவத்தை மையமாக வைத்து, எந்தக் கொள்கையை அடிப்படையாக வைத்து, எந்த நெறிமுறைகளை மேற்கோளாக வைத்து, தன்னுடைய நிதிநிலை அறிக்கையை தயாரித்தாரோ, அதே அடிப்படையிலே, அதே கொள்கைகளை கூர்மையாக்கும் வகையில், அதே நெறிகளை வேகப்படுத்தும் வகையில், அதே தத்துவங்களுக்கு புது விளக்கங்கள் அளிக்கும் வகையில் நமது நிதி அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையை தயாரித்திருப்பதற்கு நாம் எல்லோரும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். மத்திய சர்க்காரிடமிருந்து வரக்கூடிய தேசிய வரவின் வாயிலிருந்து பெறுகிற வருவாய் 7.2 சதவிகிதத்திலிருந்து 6.9 என்று குறைந்தாலும் வருமான வரி 8.34 சதவிகிதத்திலிருந்து 8.18 என்று குறைந்தாலும், ஆயத்தீர்வை 7.18 சதவிகிதத்திலிருந்து 6.5 என்று குறைந்தாலும், கூடுதல் ஆயத்தீர்வை 11.00 சதவிகிதத்திலிருந்து 9.63 ஆகக் குறைந்தாலும், இந்த அரசாங்கம் நாட்டு மக்களை வாழ வைப்பதற்காக, பல அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதற்காக, இந்த நிதிநிலை அறிக்கையை மிகச் சிறப்பான முறையிலே தயாரித்திருக்கிறது. இந்த அரசாங்கத்திற்குத் தேவையான அதிகாரங்கள் இந்த அரசாங்கத்திற்குத் தேவையான உரிமைகள் இவைகளெல்லாம் பற்றி நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இந்த உரையில் துவக்கத்திலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், எதிர்புறத்திலே உட்கார்ந்திருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை ஒப்பாரி என்று சொன்னார்கள். இன்னும் இரண்டு நாள் கழித்து அவர்கள் ஒப்பாரி வைப்பார்கள். அப்பொழுது நாம் கேட்கலாம். அவர்கள் பக்கத்திலிருக்கும் எனது பெருமதிப்பிற்குரிய திரு. விநாயகம் அவர்கள், ' இங்கே இப்படிச் சொல்கிறார்கள், ஆனால் டெல்லியில் லாலி பாடுகிறார்கள், இரட்டை வேடம் போடுகிறார்கள், இரட்டைக் குரல் எழுப்புகிறார்கள்' என்ற அடிப்படையில் நேற்றையதினம் இங்கே பேசினார்கள். அவர்களுக்கு நான் பணிவன்போடு இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த நாட்டினுடைய வளர்ச்சிக்காக, இந்த நாட்டினுடைய முன்னேற்றத்திற்காக, அரசியல் சட்டம் எப்படித் திருத்தப்படவேண்டும், அதிகாரங்கள் எப்படி பகிர்ந்து அளிக்கப்படவேண்டும், அரசாங்கத்தினுடைய கடன்களில் என்ன மாற்றங்கள் காணவேண்டும் என்பதைக் குறித்து விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம், எந்தத் திட்டத்தையாவது, எந்தக் கொள்கையாவது, எந்த தத்துவத்தையாவது, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் எதிர்த்துப் பேசியிருக்கிறார்களா? அல்லது இங்கே இருக்கிற நிதி அமைச்சர் அவர்களின் கருத்துக்கு மாறாக யாராவது அங்கே பேசியிருக்கிறார்களா? ஆனால், விநாயகம் அவர்கள் சொன்னார்கள், நாங்கள் இரட்டைக் குரல் எழுப்புவதாகச் சொன்னார்கள். நான் யார் இரட்டைக் குரலில் பேசுகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுகிறேன். கடந்த ஆண்டு நவம்பர் 26-ம் தேதி வரை மத்திய சர்க்காரை, இந்திராவின் அரசை இணையற்ற அரசு, இதைப் போன்ற அரசு இதுவரைக்கும் வந்ததில்லை என்று புகழ் பாடினீர்கள். இன்றைக்கு அந்த அரசை ஏகாதிபத்திய சர்க்கார் என்று சொல்கிறீர்கள். நவம்பர் 26-க்கு முன்னால் இங்கே இருக்கிற சுதந்திராக்களை பிற்போக்கானவர்கள் என்றீர்கள். இன்று உத்திரப்பிரதேசத்தில் அதே சுதந்திராக்களின் காலடியில் வீழ்ந்து கிடக்கிறீர்கள். சுமார் 7, 8 ஆண்டுகளுக்கு முன்னால் காங்கிரஸ் நண்பர்கள் வலது சாரிகளை சேர்த்துக் கொண்டு இடது சாரிகளை எதிர்த்தார்கள். இன்றைக்கு இடது சாரிகளை சேர்த்துக்கொண்டு, வலது சாரிகளை எதிர்க்கிறார்கள். நேருவின் ஆட்சி மொழிப் பிரச்சினை பற்றி நேரு அளித்த வாக்குறுதியின் பொருளே இப்பொழுது தான் அவர்களுக்குப் புரிகிறது.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை)

இதுவரைக்கும் மாறாக இருந்தவர்கள், உரிமைக் குரல் கொடுக்காதவர்கள் இன்றைக்கு தத்துவத்துக்கு புதிய விளக்கம் கொடுக்க முன்வருகிறீர்கள்.

நான் இவைகளையெல்லாம் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் [கொ]ண்டு வருவதற்குக் காரணம், பாங்குகளை தேசியமாக்கிய [திட்ட]த்தில், ' இது எங்களுடைய திட்டம், நாங்கள் சொன்ன திட்டம் தான், அதைத்தான் அம்மையார் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்' என்று சொன்னார்கள். ஆனால், இந்தத் திட்டம் செல்லாது என்று சுப்ரீம் கோர்ட்டு சொன்னவுடன், முன்னாள் நிதி அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் என்ன சொன்னார் தெரியுமா? ' அவசரப்பட்டு சட்டம் கொண்டு வந்தார்கள்' என்றார். அன்று அப்படிச் சொன்னார்கள். இன்று இப்படி சொல்கிறார்கள். நம்மை இரட்டைக் குரல் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். யார் இரட்டை வேடம் போடுவது? யார் இரட்டைக் குரலில் பேசுவது? நீங்கள்தான் இரட்டைக் குரல் கொடுக்கிறீர்கள் என்று குற்றம் சாட்டுவதற்காகச் சொல்லவில்லை. நீங்கள் இரட்டைக் குரலா கொடுக்கிறீர்கள். எட்டப்பன் குரலில் அல்லவா பேசுகிறீர்கள்? எனவே, யார் தடுமாறிச் செல்லுகிறார்கள்? தி. மு. கழகம் ஒரு கொள்கையின் அடிப்படையில் இயங்குகிறது, ஒரு நியாயத்தின் அடிப்படையில் இயங்குகிறது. எங்களுக்கு இருக்கிற உரிமைகளை, அதிகாரங்களை பயன்படுத்தி, இந்த அமைச்சர் அவையை எவ்வளவு பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு பயன் படுத்துகிறோம். இன்றைக்கு எங்களுடைய உரிமைக் குரலை ஏன் சந்தேகிக்கிறீர்கள்? எங்களுடைய உரிமைக் குரலை ஒத்துக்கொள்ள மறுப்பதன் காரணம் உங்களுடைய அரசியல் வாழ்வு இருக்காது என்பதற்காக. இன்னொன்றையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் இதே கருத்தைச் சொல்கிற நேரத்தில், எதிர்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் என்ன சொன்னார்கள்? அன்று மத்திய சர்க்காருக்கு வக்காலத்து வாங்கினார்கள். அப்பொழுது அவர் பேசியதை நினைவு படுத்த விரும்புகிறேன். " நாம் மத்திய சர்க்காருடன் நல்ல முறையில் அணுகி தொடர்பு வைத்துக்கொள்வோமானால், நிச்சயமாக எல்லா காரியங்களிலேயும் எங்களுடைய பூரண ஒத்துழைப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்". இதுதான் நமது எதிர்கட்சித் தலைவர் அவர்களின் மணிவாசகங்கள். சர்க்காருக்கு ஒத்துழைப்புக் கொடுப்பதற்கு இரண்டு நிபந்தனைகள். ஒன்று நாம் மத்திய சர்க்காரிடம் நல்ல முறையாக அணுகவேண்டும். அணுகினால் மட்டும் போதாது. ஒரு நல்ல தொடர்பை வைத்துக்கொள்ளவேண்டும் என்று பேசிய கருத்திருமன் அவர்கள் இன்னும் மூன்று தினம் கழித்து இங்கே என்ன பேசுவார் என்பது நமக்குத் தெரியும். இதையெல்லாம் குறிப்பிட்டதற்குக் காரணம், யார் மாறிப் பேசுகிறார்கள் என்பதை இந்த மன்றத்தின் மூலம் மக்கள் தெரிந்துக்கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான்.

நேற்றையதினம் திரு. விநாயகம் அவர்கள் சொன்னார்கள். ' 25 பேர்கள் உட்கார்ந்திருக்கிறார்களே, சேலம் உருக்காலையை ஏற்றுக்கொண்டால் தான் நாங்கள் உங்களை ஆதரிப்போம், இல்லாவிட்டால் ஒத்துழைப்புக் கொடுக்க மாட்டோம்' என்று ஏன் இந்திராகாந்திக்கு சொல்லக் கூடாது? என்று சொன்னார்கள். நான் அவர்களைத் திருப்பி கேட்கிறேன். உங்களோடு ஸ்தாபன அடிப்

படையில் நேற்று வரை இருந்தவர்தான் இன்றைக்கு பிரதமராக இருக்கிறார். நீங்கள் 50 பேர்களும், "சேலத்தில் இரும்பாலை துவக்கினால் இந்திராவை ஆதரிக்கிறோம்" என்று சொல்லக் கூடாதா? நாங்கள் அகில இந்திய ரீதியில் இயங்குகிறோம். ஆகவே, தனிப்பட்ட மாநிலப் பிரச்சினையைப் பற்றி எப்படிக் கேட்கமுடியும் என்று நீங்கள் சொல்லலாம். அந்த வாதத்தையும் நான் ஒத்துக் கொள்கிறேன். ஆகவே, பாராளுமன்றத்தில் நீங்கள் 50 பேர்கள் கூட கேட்க வேண்டாம். தமிழ் நாட்டிலிருந்து சென்ற மூன்று மூர்த்திகள், அதுவும் கடைசியாகச் சென்ற மும்மூர்த்திகளில் முதல்வர் கழிவுக் கடவுளாகியவர் சொல்லட்டும். அதையெல்லாம் விட்டுவிட்டு, தூண்டி விட்டு விடுவது என்றால், பற்றவைத்து குளிர் காயலாம் என்று பார்த்தால் அப்படிப் பட்ட ஏமாளிகள் இங்கேயில்லை.. வடக்கே போங்கள், தெற்கே தேடி அலையாதீர்கள்.

உங்கள் போக்கு எங்களுக்குத் தெரியும். நேற்று பேசிய விநாயகம் கேட்டார்கள் கொள்கை அடிப்படையில் என்ன சாதித்து விட்டீர்கள் என்று; மூன்று ஆண்டில் என்ன செய்திருக்கிறோம் என்று பொறுப்போடு பதில் சொல்ல கடமைப் பட்டிருக்கிறோம். பஸ் போக்குவரத்தை தேசியம் ஆக்கவேண்டும் என்று சொன்னோம். 75 மைலுக்கு அதிகமான பஸ் வழித்தடங்களை தேசியம் ஆக்கினோம். அந்த வகையில் 418 பஸ் சர்வீஸ்களை சர்க்கார் எடுத்து இருக்கிறது. இது நாங்கள் கொள்கையில் செல்லுகிறோம் என்பதற்கு அழுத்தமாக எடுத்துக்காட்டு இல்லையா? சங்கரலிங்கனால் பிணத்தின் மேல் நின்று பேய்க் கூச்சல் போட்டு தமிழ்நாடு என்று பெயரிட மறுத்தீர்கள். உங்களையும் வாழ்க என்று சொல்ல வைத்து இந்த மாநிலத்திற்கு தமிழகம் என்று பெயர் வைத்தோமே அது நாங்கள் எங்களுடைய கொள்கையில் செல்லுகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டு இல்லையா? இந்தியைப் பள்ளிகளில் புகுத்தக் கூடாது என்றோம். உங்கள் ஆட்சியில் கட்டாயப்பாடமாக வைத்து, மாணவர்கள் இந்தியை விரும்பிப் படிப்பவர்கள் என்று மனசாட்சி இன்றிப் பேசினீர்கள். இந்த அரசாங்கம் பள்ளிகளிலிருந்து இந்தியை ஒழித்துக் கட்டியிருக்கிறது. அது நாங்கள் எங்கள் லட்சியத்தில் தொடர்ந்து செல்லுகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டு இல்லையா? தமிழை வளர்ப்பதற்கும், காப்பதற்கும், நீதி நிர்வாகத் துறையில் அரசாங்கம் தமிழைக் கொண்டுவர தீவிர நடவடிக்கை எடுத்து இருக்கிறதே, அது எங்கள் லட்சியப் பாதையில் செல்கிறோம் என்பதற்கு அழுத்தமான சான்று இல்லையா? இந்த நிதிநிலை அறிக்கையில் எந்த மாநில சர்க்காரும் செய்யாததை துணிந்து செய்திருக்கிறோம். 15 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் யாரும் வைக்கக் கூடாது என்று நிலப் பிரபுத்துவத்தின் ஆதிக்க ஆணிவேரை அறுத்து எறியக்கூடிய திட்டத்தைக் கொண்டுவர யாராலும் முடிந்ததா? உங்களுடைய கடந்த காலத்தில் 30 ஏக்கர் என்று சொன்னீர்கள். எப்படி? முதல் அமைச்சரே விளக்கம் தந்திருக்கிறார்கள். "வருகிறது, வருகிறது, பிரிக்க



வேண்டியதைப் பிரித்துக் கொள்ளுங்கள். கொடுக்க வேண்டியதைக் கொடுத்துக் கொள்ளுங்கள், மாமன், மச்சான், மைத்துனன் என்று சொல்லிப் பிரித்துக் கொள்ளுங்கள்" என்று ஆதரவோடு அவர்கள் தப்பிக்க வழிவகுத்து சட்டம் செய்தீர்கள். ஆனால் இந்த சர்க்கார் யாரும் எதிர்பாராத வகையில் புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வந்து, எதிர்பார்த்த நன்மையை செய்திருக்கிறது.

இதை நான் சொல்லும்போது, இவைகளெல்லாம் சரிதான், வேலையில்லாத் திண்டாட்டம் என்ன ஆயிற்று என்பீர்கள். உங்களுக்குப் பல திண்டாட்டங்கள். எனவே, வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி கூறிவருகிறீர்கள். அதற்கும் பதில் சொல்லுகிறேன். 1951-ல் முதல் ஐந்தாண்டு திட்டம் துவங்கியபோது, வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 33 லட்சம்; 1956-ல் 51 லட்சம்; 1961-ல் அது 71 லட்சமாக இருந்தது, 1966-ல் 96 லட்சமாக ஆயிற்று. நீங்கள் மகுடத்தைக் கீழே வைத்த காலத்தில், இந்தியத் துணைக் கண்டத்தில் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 96 லட்சம். ஆனால் உங்கள் இயக்கத்தைச் சேர்ந்த முன்னாள் முதல் அமைச்சர் ஒருவர் பேசுகிறார்கள்: 'நான் ஆட்சியில் இருந்த போது, கூப்பிட்டுக் கூப்பிட்டு வேலைகொடுத்தேன்' என்று கொயபெல்ஸ் கூட இப்படிப் பச்சைப் பொய்யை மனச்சாட்சியின்றி சொல்லியிருக்க மாட்டான் ஆகவே, இவைகளையெல்லாம் மனத்தில் வைத்துத்தான், இந்த சர்க்கார் பல காரியங்களில் தீவிரமாக நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். தொழில் துறையில், பல திட்டங்களை நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். தலைக்கு ரூ. 100 கொடு என்று கேட்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள். அங்கே ராம்சுபாக் சிங் பாராளுமன்றத்தில் ரூ. 50 கொடுங்கள் என்கிறார். 100 இல்லை, 50 இல்லை, வேலையில்லாதவர்களுக்கு 1,000 கூடக் கொடுக்கத்தயாராக இருக்கிறது நம் சர்க்கார், நம் சர்க்காருக்கு வருமானம் இருக்குமானால். அண்ணாவின் தம்பிகள் அகமகிழ்ச்சியோடு செய்வார்கள். ஆனால் நிதி நிலை அதற்கு இடமளிக்கவில்லை. மைசூரில் உங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆளுகிறார்கள். குஜராத்தில் உங்கள் கட்சிக்காரர்கள் ஆளுகிறார்கள். ரூ. 100 திட்டத்தைத் தைரியம் இருந்தால், உங்கள் இருதயசுத்தியைக் காட்ட அமுல் நடத்துங்கள். அதைவிட்டுவிட்டு, சர்க்காருக்கு பிரச்சினைகளை எப்படி எப்படி எழுப்புவது என்று செய்து உங்கள் அரசியல் வாழ்வைத் தொடர வேண்டும் என்ற அடிப்படையில்தான் பிரச்சினைகளை எழுப்பிக் கொண்டு இருக்கிறீர்கள். அப்படியே செய்துக்கொண்டிருந்தால் தமிழ் மக்கள் உங்களை நம்புவார்கள் என்று தப்புக்கணக்கு போடாதீர்கள். 1952-லேயே உங்களை அடையாளம் காட்டினார்கள். காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஒற்றுமையில்லாததால், 1967 வரைக்கும் இழுத்து வந்தது. இனியும் நம்புவார்கள் என்ற தவறான கணக்கில், தமிழ் மொழிக்கு எதிரான, தமிழ் நாட்டிற்கு எதிரான பிரசாரத்தில் இறங்கினால், தி.மு.க. சர்க்கார் இவ்வளவு செய்கிறதே, இதைக்கூட காங்கிரசில் ஒரு கூட்டம் மன்றத்தில் உட்கார்ந்து

கொண்டு குறைகூறுகிறதே என்று மக்களைச் சிந்திக்க வைக்கும் என்று சொல்லி, இந்த அடிப்படையில் நல்லதொரு நிதிநிலை அறிக்கையைக் கொடுத்திருப்பது. இது திராவிட முன்னேற்றக் கழகத்தில் லட்சிய வரலாற்றின் ஒரு மைல் கல்லாக இருக்கிறது என்று சொல்லி, இந்த அறிக்கையை ஆதரித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எ. பட்டாபி. நாயுடு: சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அரசினரால் சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் நிதி நிலை அறிக்கையில் சொல்லப் பட்டிருப்பதைப் பற்றி நான் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். முதலாவதாக, இந்த அரசு பதவி ஏற்ற காலத்தில் மக்களிடத்தில் அளித்த வாக்குறுதிகளைத் தவற விட்டது பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு பதவி ஏற்ற காலத்தில் ஏற்பதற்கு முன்பு, மக்களிடத்தில் ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடுவோம் என்று சொல்லப் பட்டது. ஆனால், பதவிக்கு வந்தபிறகு ரூபாய்க்கு ஒரு படி மட்டும், என்று சொல்லப்பட்டது. அந்த லட்சியத்தின் அடிப்படையில் நாங்கள் அப்படி ஒரு படி போட்ட பிறகுதான் சம்பளம் வாங்குவோம் என்று சொல்லி, சென்னையிலும், கோவையிலும் மட்டும் ஒரு படி அரிசி போடப்பட்டது. அதுவும் இப்பொழுது கைவிடப்பட்டது. அந்த வாக்குறுதியைச் செயல் படுத்த இந்த அரசு தவறி விட்டது என்கிற குற்றச் சாட்டை சாட்டுகிறேன்.

இந்த அரசு நாங்கள் ஆட்சிக்கு வந்தால், விலைவாசிகளைக் கட்டுப் படுத்துவோம் என்று சொன்னார்கள். இன்றைக்கு விலைவாசிகள் விஷம் போல் ஏறியிருக்கின்றன. அந்த வகையில் செயல்பட இந்த அரசு தவறி விட்டிருக்கிறது என்கிற குற்றச்சாட்டை சாட்டுகிறேன்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால், வேலை வாய்ப்புக்களை அளிப்போம் என்று சொல்லப்பட்டது. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவோம் என்றும் சொல்லப்பட்டது. இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது. என்பதோடு மட்டுமின்றி, வேலை இழப்பினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவதிப் படுகிறார்கள். அதையும் இந்த அரசு செயல் படுத்தத் தவறி விட்டது என்கிற குற்றச்சாட்டை சாட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நாங்கள் ஆட்சிக்கு வந்தால், ஐந்து ஏக்கர் சொந்தக்காரர்களுக்கும், அதற்குக் குறைவாக உள்ளவர்களுக்கும், நில வரியையும், மற்ற வரிகளையும் ரத்து செய்வோம் என்று சொல்லப்பட்டது. அதையும் இந்த அரசு செயல் படுத்தத் தவறி விட்டது என்ற குற்றச் சாட்டைச் சாட்டுகிறேன்.



நாங்கள் ஆட்சிக்கு வந்தால், கவர்னர் பதவியை நீக்கிடுவோம் என்று அப்பொழுது செல்லப்பட்டது. இன்றைக்கு அதையும் எந்த வகையிலும் செயல் படுத்தவில்லை என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்த மாநில ஊழியர்களுடைய சம்பளத்தையும் அவர்களுடைய வேலை விகிதத்தையும் மத்திய அரசினுடைய ஊழியர்களுடைய சம்பளத்திற்கும் வேலைவிகிதத்திற்கும் ஏற்ப செய்வோம் என்று சொன்னார்கள். அதைச் செயல்படுத்த அரசு தவறிவிட்டது.

அடுத்தபடியாக, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் உயர்ந்தபட்ச சம்பளம், குறைந்தபட்ச சம்பளம் இவற்றிற்கிடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து, குறைந்த சம்பளக்காரர்களுக்கு சம்பளத்தை உயர்த்தியும், அதிக சம்பளம் உள்ளவர்களுக்கு உச்ச வரம்பு கட்டியும் சமநிலையை ஏற்படுத்துவோம் என்று சொல்லப் பட்டது. அதையும் இந்த அரசு செயல்படுத்தத் தவறிவிட்டது.

இப்படியே சொல்லிக்கொண்டு போனால் என்னுடைய நேரம் வீணாகும். அதிகமாகச் சொல்வதற்கு இருக்கிறது. ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 'வரியைக் குறைப்போம், வசதிகளைப் பெருக்குவோம்' என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு வரியைக் குறைக்கவில்லை. அதற்கு மாறாக வரி அதிகமான அளவில் போடப்பட்டிருக்கிறது. அதிகமான வரிகளைப் போட்டதால் மக்களுடைய வாழ்விலே ஒரு விதமான கஷ்டத்தை உண்டாக்கிவிட்டார்கள். இன்றைக்கு நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது இந்த ஆண்டு போடப் பட்டிருக்கிற வரி 294.04 கோடி ரூபாய். 1966-67லே 188.72 கோடி ரூபாய்; 1967-68 லே 49.73 கோடி ரூபாயாக இருந்தது. இவற்றையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்தால், இருபது ஆண்டுக் காலத்திலே காங்கிரஸ்காரர்கள் காலத்தில் போடப்பட்ட வரி 138.99 கோடி ரூபாயாக இருந்தது. மக்களுடைய ஆட்சி இது என்று சொல்லப் படுகிற இந்த ஆட்சியில் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் மூன்று ஆண்டுக் காலத்திலே போடப்பட்ட வரியானது 105.72 கோடி ரூபாய். இவ்வளவு அதிகமான அளவு போட்டுவிட்ட இந்தச் சர்க்கார் ஏதாவது நல்ல காரியங்களைச் செய்திருக்கிறதா. என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இருபது ஆண்டுக் காலத்திலே காங்கிரஸ் ஆண்டபொழுது எத்தனை ஆரம்பப் பள்ளிகள் திறக்கப்பட்டன, எத்தனை உயர்நிலைப்பள்ளிகள் திறக்கப் பட்டன, எத்தனை கல்லூரிகள் திறக்கப்பட்டன, எத்தனை தொழில் கல்லூரிகள் திறக்கப்பட்டன என்பதைப் பார்க்க வேண்டும். இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகின்ற பொழுது எத்தனை பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் திறக்கப்பட்டன என்பதற்கான புள்ளிவிவரம் பட்ஜெட்டில் காட்டப்படவில்லை.

[திரு. எ. பட்டாபி நாயுடு] [1970 மார்ச் 3

அடுத்தபடியாக, நீர்ப்பாசனத் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி, மருத்துவத் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி எந்தவிதமான புள்ளிவிவரமும் காட்டப்படவில்லை. ஆனால், ஏதோ ஒன்றிரண்டை மட்டும் எடுத்துக்காட்டி பெருமைப்படுத்திக் கொள்கிறார்கள். விவசாயத் துறையிலே கடன் அதிக அளவில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்தக் கடன் எந்த முறையில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். சில இடங்களில் கடனைத் திணித்தும் இருக்கிறார்கள். என்னுடைய பகுதியிலும் பரவலாக கடன் கொடுக்கப்பட்டது. அந்தக் கடன் எப்படிக் கொடுக்கப்பட்டது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏக்கருக்கு 130 ரூபாய் வரை உரம் கடன் கொடுக்கிறோம் என்று சொல்லி விவசாயிகளிடத்தில் அக்ரிமென்ட் எழுதிக்கொண்டு, பத்துப் பதினைந்து நாட்களுக்குப் பிறகு ஓர் இடத்தைக் குறிப்பிட்டு, 'இந்த இடத்தில் உரம் வைத்திருக்கிறோம், வந்து எடுத்துப் போங்கள்' என்று சொன்னார்கள். ஒருசிலர் சென்று உரத்தை எடுத்துச் சென்றார்கள். மற்றவர்கள் உரத்தை எடுத்துச் செல்லவில்லை. அந்த உரம் வெயிலில் காய்ந்தும், மழையில் நனைந்தும் அவர்கள் போட்ட இடத்திலேயே இருந்து மக்கி, மண்ணோடு மண்ணாகியிருக்கிறது. அதற்கு உண்டான கடன் வட்டி விகிதத்தைப் பார்த்தால் மார்வாரிகூட அவ்வளவு வட்டி கேட்க மாட்டான். விவசாயிகளுக்காக பாடுபடுகிற அரசு என்று சொல்லிக்கொண்டு 130 ரூபாய்க்கு 48–3/4 ரூபாய் வட்டியாக விதிக்கிறார்கள் எந்த மார்வாரியும் இவ்வளவு கேட்கமாட்டான். இதை மக்களிடத்தில் போய்ச் சொன்னால் என்ன ஆவார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த அரசு மக்களை அதிகமான அளவில், கஷ்டமான முறையில் துன்புறுத்திக்கொண்டு வருகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு எப்படி வரிகளை விதித்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்னார்கள். 'வரி பணக்காரர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது, ஏழைகளுக்கு இல்லை' என்று சொல்கிறார்கள். ஏதோ ஒன்றிரண்டு வரிகள்தாம் பணக்காரர்களுக்கு இருக்கிறதே தவிர, மற்ற வரிகள் எல்லாம், ஏழை எளியவர்களுக்கும், நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும்தான் அமைந்திருக்கிறது. இன்றைக்கு சினிமாமீது, வரி போட்டப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அந்த வரி பூராவும் ஏழை மக்களின்மீதுதான் விழப்போகிறது என்பதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பஸ்ஸுக்கு பத்து ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறார்கள் என்று சொன்னால் அந்த வரி உயர்வு ஏழை மக்களைத்தான் பாதிக்கும். விற்பனை வரியும் 11 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. எல்லா மக்கள்மீதும் இது திணிக்கப்படும். மற்றும் மோட்டார் வண்டி, கடிகாரம், ரேடியோ போன்ற சாதாரண மக்கள் அனுபவிக்கக்கூடிய பொருள்களுக்கெல்லாம் வரிகட்ட வேண்டிய நிர்ப்பந்தம் வருகிறது.



1970 மார்ச் 3] [திரு. எ. பட்டாபி நாயுடு]

அடுத்தபடியாக, மின்சாரப் பொருள்களின்மீது விதிக்கப்பட்ட வரியானது விவசாயப் பெருமக்களைப் பாதிக்கிறது. மின்சார விஸ்தரிப்பு செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் வரியை உயர்த்திருக்கிறார்கள். மின்சார சாமான்களை விவசாயிகள் வாங்க வேண்டியிருக்கிறது. மின்சாரப் பொருள்கள் எல்லாம் 7 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாக வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. இது நிச்சயமாக விவசாயிகளைப் பாதிக்கும். பொதுவாக இந்த வரி உயர்வானது எல்லா விவசாயிகளையும், சாதாரண பொது மக்களையும் பாதிக்கக்கூடியதே தவிர, பணக்காரர்களுக்கு மட்டும் போடப்பட்ட வரி என்று சொல்வதற்கில்லை.

ஆகையால் இந்தப் பட்ஜெட் யாருக்கும் திருப்தியளிக்கக்கூடியதாக இல்லை நாட்டில் விலைவாசி ஏறியதால், இந்தப் பட்ஜெட்டானது பல தொல்லைகள் ஏற்படுவதற்குத்தான் வழி செய்திருக்கிறது. ஆகவே இது திருப்தியற்ற பட்ஜெட் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. வி. எஸ். கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்தினைத் தெரிவிக்க விரும்புகிறேன். இதுபோன்ற நிதிநிலை அறிக்கைகளை இதற்குமுன்னே இந்த மன்றத்திலே வைத்து விவாதம் நடந்த காலத்திலேயெல்லாம், எதிர்த்தரப்பிலுள்ள குழிப்பாக, காங்கிரஸ் தரப்பிலேயிருந்து பல குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன. திட்டத்தில் புதுமையில்லை, புரட்சியில்லை என்று சொன்னார்கள். இந்தத் தடவை வைத்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி அப்படிப்பட்ட குற்றச்சாட்டை இதுவரையில் யாரும் கூறியதாகத் தெரியவில்லை. ஒருவேளை இனிமேல் கூறுவார்களோ, என்னவோ ? எனவே, இந்தப் பட்ஜெட், புரட்சித்திட்டங்கள் நிறைந்த பட்ஜெட் என்பது நன்கு புலனாகிறது. ஏழை எளியமக்கள், நடுத்தர வகுப்பினரின் நன்மையைமையமாக வைத்துத் தீட்டப்பட்டிருக்கிற இந்த நிதி நிலை அறிக்கை நாட்டு மக்களால் பரவலாக வரவேற்கப்படுகிறது, போற்றப்படுகிறது, பாராட்டப்படுகிறது. மக்கள் இதைப் பாராட்டினாலும், நல்ல பல திட்டங்களை உள்ளடக்கிய பட்ஜெட்டாக இருந்தாலும், எதிர் தரப்பிலே உள்ள காரணத்தால் எதிரான கருத்துக்களைச் சொல்வதுதான் இலக்கணம் என்ற மரபைக் காங்கிரஸ் தரப்பிலே உள்ளவர்கள் கடைப்பிடித்து வருகிறார்கள். அவர்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளைக் கூறினார்கள். உதாரணமாக நேற்றையதினம் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. கே. விநாயகம் அவர்கள் தனக்கே உரிய விதூஷக பாணியிலே வினயமாக பல கருத்துகளை எடுத்துச் சொன்னார்கள்.

அவர்கள் சொன்ன குற்றச்சாட்டெல்லாம் "மக்களிடத்தில் பல வாக்குறுதிகளைத் தந்தீர்கள் ? அவற்றை நிறைவேற்றினீர்களா ? வரியைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோம் என்று சொன்னீர்களே, செய்தீர்களா ? இந்த வரவுசெலவுத் திட்டத்தின் முதல் பத்து பக்கத்தைத் துருவித் துருவிப் பார்த்தேன். மத்திய

[திரு. வி. எஸ். கோவிந்தராசன்] [1970 மார்ச் 3

சர்க்காரைக் குறை கூறியிருக்கிறீர்களே தவிர வேறு ஒன்றும் காண வில்லை. இங்கே மத்திய சர்க்காரைப் பற்றி எதிர்ப்பாகப் பேசுகிறீர்கள். டெல்லிக்குப்போனால் நல்ல பிள்ளையாகப் பெயர் எடுக்கிறீர்கள்" என்பவைகள்தான். "நீங்கள் இரட்டை வேடம் போடுகிறீர்கள்" என்று குற்றம் சாட்டினர். மேலும் டாக்டர் ஜேக்கால் அண்ட் மிஸ்டர்ஹைடு என்ற கதையை உதாரணம் காட்டினர். அவர் சொன்னவற்றில் அதுமட்டுமல்ல கதை. மொத்தமே கதைதான். உண்மைக்கு மாறாக, புறம்பாக எல்லாவற்றையும் திரித்தே கூறினர்கள். இரட்டை வேடமோ, இரட்டைக் குரலோ திராவிட முன்னேற்றக் கழகத்தினிடத்தில் இல்லை. காங்கிரஸ் தரப்பில் இருந்துதான் மாறுபட்ட குரல்கள் கிளம்புகின்றன என்பதை நண்பர் அருணா அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். நாங்கள் இங்கே மட்டும் இந்தக் குரலை எழுப்புகிறோமா? டெல்லியிலேயும் எழுப்பி வருகிறோம் என்பதற்கு சில ஆதாரங்களைச் சொல்ல விரும்புகிறேன். நாடாளு மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் குழுவின் துணைத் தலைவராகச் செயல்படுகிற திரு. நாஞ்சில் மனோகரன்— டெல்லி நாடாளு மன்றத்திலேயே மத்திய அரசுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் தருகிற ஆதரவு நிபந்தனையுடன் கூடிய ஆதரவு என்றும், எங்கள் கொள்கைக்கு எந்தவிதமான குந்தகமும் இல்லாத அளவில் இந்திய சர்க்கார் செய்கிற நல்ல காரியங்களை, முற்போக்கான காரியங்களை ஆதரிப்போம், மற்றவற்றை எதிர்ப்போம் என்றும் தெள்ளத் தெளிவாக டெல்லிப் பட்டணத்திலேயே சொல்லியிருக்கிறார்கள் என்பதை சபாநாயகர் அவர்களே, தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

சென்னையில் இராஜாஜி மண்டபத்தில் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், மறைந்த மதிப்பிற்குரிய பேரறிஞர் அண்ணா அவர்களது திருவுருவப்படத்தைத் திறந்து வைத்தபோது அவர்களுக்கு முன்னாலேயே தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் "உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்று சொன்னார்கள். (திரு. கே. விநாயகம்: அவர்களுக்கு எங்கே புரிந்திருக்கப்போகிறது?) அவர்கள்கூட மொழிபெயர்ப்பாளர் இருந்திருக்கிறார்கள் என்பதைக் கவனப்படுத்துகிறேன். மாநில அரசின் நலன்களுக்குப் பாதகமின்றி எங்களுக்கு வேண்டிய நலன்களைச் செய்ய முன்வரும் போது நாங்களும் ஒத்துழைப்போம். மத்திய அரசு மாநில அரசை அடிமைப்படுத்த, உரிமைகளைப் புறக்கணிக்க முற்படும்போது எங்களுடைய உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்று இந்தியப் பிரதமர் அம்மையாரை மேடையில் வைத்துக்கொண்டே நமது முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் முழங்கியிருக்கிறார்கள்.

அதேபோல சேலம் இரும்பாலைத் திட்டத்திற்காகவும், தூத்துக்குடி துறை முகத் திட்டத்திற்காகவும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியான பிற்பாடுதான் மத்திய சர்க்காருக்கு



1970 மார்ச் 3] [திரு. வி. எஸ். கோவிந்தராசன்]

எதிர்க எழுச்சி நாளைக் கொண்டாடிற்று என்பதையும் நினைவு படுத்த விரும்புகிறேன். எல்லாக் கட்சிகளும் கலந்துகொண்டன. "எல்லாக் கட்சிகளும் கலந்துகொள்கின்றனவே, நாங்கள் என்ன செய்வது? என்று காங்கிரஸ் தொண்டர்கள் கேட்டபோது அவர்களுடைய கட்சித் தலைவர், "வீட்டிலே போய்ப் படுத்துத் தூங்குங்கள்" என்று சொன்னார் என்பதை விநாயகம் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றையதினம் கூட மத்திய சர்க்கார் இலாக்காக்களில் இந்தி திணிக்கப்படுகிறது என்று தெரிந்தவுடன் ஹைக்கோர்ட்டிற்குச் சென்று வழக்கைத் தொடர்ந்திருப்பது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாடாளு மன்ற உறுப்பினர் திரு. முரசொலி மாறன் அவர்கள்தான் என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆக இப்படி மத்திய சர்க்காருடன் நாங்கள் கொண்டுள்ள உறவு நிபந்தனையுடன் கூடியதுதான். இங்கொன்று சொல்வது, அங்கொன்று சொல்வது என்பதாக நாங்கள் இரட்டை வேடம் போடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து அவர்கள் சொன்னது வசதியைப் பெருக்கவில்லை, வரியைக் குறைக்கவில்லை என்பதாகும். (திரு விநாயகம் குறுக்கீடு)

மாண்புமிகு உறுப்பினர் உட்கார்ந்துகொண்டே என்னுடைய பேச்சில் குறுக்கிடுகிறார்கள். அது மன்ற விதிக்கு மாறானது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, if the Chair wants I can get up and cross him. I am a gentleman and so I do not want to disturb him. But I can give him information.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந. திருமலிங்கம்) : வேண்டுமென்றால் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புங்கள். உறுப்பினர் பேச்சில் குறுக்கிடாதீர்கள்.

திரு. கே. விநாயகம் : உறுப்பினர் பேசும்போது என் பெயரைச் சுட்டிச் சுட்டிக் குறிப்பிடுவதால் குறுக்கிடவேண்டியிருக்கிறது. பொதுவாகச் சொன்னால் நான் ஏன் குறுக்கிடுகிறேன்? வேண்டுமென்றால் எனக்கு நேரம் கொடுங்கள் பேசுகிறேன்.

(ஓர் உறுப்பினர் : எனக்கு நேரம் கொடுங்கள். நானும் பேசுகின்றேன்.)

திரு. வி. எஸ். கோவிந்தராசன் : திராவிட முன்னேற்றக் கழக அரசு வசதிகளை நிறையப் பெருக்கியிருக்கிறது என்பதற்கு என்னால் நிறைய ஆதாரங்கள் கொடுக்க முடியும். கல்வித்துறையில் முதலில் எஸ்.எஸ்.எல்.ஸி. வரையில் இலவசக் கல்விச் சலுகை அளிக்கப்பட்டது. அடுத்து, பி.யு.ஸி-க்கும் விஸ்தரித்திருக்கிறது. இது வசதியைப் பெருக்கியதாக ஆகாதா?

[திரு. வி. எஸ். கோவிந்தராசன்] [1970 மார்ச் 3

உணவுத்துறையை எடுத்துக்கொண்டால், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பிண்ணாக்கையும், பருத்திக் கொட்டையைம், சாப்பிடச் சொன்னார்கள். எலிக்கறியில் புரதச் சத்து நிறைய இருக்கிறது சாப்பிடலாம் என்றார்கள்,' திங்கள் இரவு சாப்பிடாதீர்கள், வியாழன் இரவு சிற்றுண்டி சாப்பிடுங்கள் என்றெல்லாம் சொன்னார்கள். திராவிட முன்னேற்ற கழக அரசு வந்த பிறகு இன்றைய நிலை என்ன? எந்த ரக அரிசியும் எல்லா இடத்திலும் கிடைக்கும் என்கிற ஒரு வசதியான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்றால் இது வசதியைப் பெருக்கியதாக ஆகாதா?

திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகுதான் மாநில அரசு ஊழியர்களுக்கு 3 முறை பஞ்சப்படியை உயர்த்தியிருக்கிறது. இது வசதியைப் பெருக்கியதாக ஆகாதா? 14 லட்சம் ரூபாயில் என்.ஜி.ஓ.-க்களுக்குக் குடியிருப்பு வீட்டு வசதியைச் செய்திருக்கிறது. இது வசதியைப் பெருக்கியதாக ஆகாதா? பின் தங்கிய வகுப்பார் நலன்களுக்காக இரண்டு கோடியே அறுபது லட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. இது வசதியைப் பெருக்கியதாக ஆகாதா? நிலமற்ற ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு நிலம் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறது, இது வசதியைப் பெருக்கியதாக ஆகாதா? 1969-70-இல் 5,728 வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறது. 3,985 தீப் பிடிக்காத வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறது, இது வசதியைப் பெருக்கியதாக ஆகாதா? அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இலவச மருத்துவ உதவி பெறும் உரிமையினை நல்கியிருக்கிறது. உள்ளாட்சிகளிலுள்ள பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் வீதங்களில் வீட்டு வாடகைப் படியை அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும் அளிக்க முடிவு செய்திருக்கிறது. இன்னும் விமாக் கடனும், கைத்தறித் துணிகளை வாங்குவதற்கான உதவியும் அளிக்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் வசதிகளைப் பெருக்கியதாக ஆகாதா? இவைகளுக்கெல்லாம் அவர்களது அகராதியில் வேறு எந்தப் பெயரைப் பெறும் என்பது எனக்குப் புரியவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து, வரியைக் குறைக்கவில்லை என்று சொன்னார்கள். ஏன் குறைக்கவில்லை? திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் புஞ்சை நிலங்களுக்கான அடிப்படைத் தீர்வையை எடுத்தது. கோவை பஞ்சாலைகளுக்கு அளிக்கப்பட்டு வந்த மின்சக்தி விலையினை 40% இல் இருந்து 30% ஆகக் குறைத்தது. இப்படிப் பல்வேறு துறைகளில் வசதிகளைப் பெருக்கி, வரியைக் குறைத்துத்தான் செயல்பட்டு வருகிறது. என்றாலும் நல்லமுறையில் மேலும் பல வசதிகளை மக்களுக்குச் செய்து கொடுக்கவேண்டுமென்றால் பணம் தேவை. பணத்தைப் பெருக்கிக் கொள்ள வழியில்லை. இந்திய அரசியல் சட்டப்படி அதிகாரங்கள் எல்லாம் மத்தியில்தான் குவிக்கப்பட்டிருக்கின்றன.



1970 மார்ச் 3] [திரு. வி. எஸ். கோவிந்தராசன்]

மத்திய-மாநில அரசுகளுக்கிடையே உறவுகள் எப்படி அமைந்திருக்கவேண்டும், அதிகாரங்கள் எப்படிப் பரவலாக்கப்பட வேண்டும் என்பதையும் பரிசீலனை செய்வதற்காகத்தான் இந்த அரசு மூவர் குழு ஒன்றை அமைத்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு திட்டத்தை வரையறுத்துக்கொடுத்தவுடன் அரசியல் ரீதியில் அதைப் பரிசீலனை செய்து மத்திய அரசினிடத்தில் சமர்ப்பிக்க இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். இங்கே சொல்கிறீர்களே, திருச்சி மகாநாட்டில் மாநில சுயாட்சி, மத்தியில் குடியாட்சி என்று, டெல்லிக்குச் சென்று இந்திரா அம்மையாரிடம் சொன்னால் அவர்கள் சட்டத்தைக் காட்டுவார்கள் என்றார். சட்டம் நம்மால் ஆக்கப்பட்டதே தவிர, சட்டம் நம்மை ஆக்கவில்லை. திரு. விநாயகம் அவர்கள் முன்பு வடக்கெல்லைப் போராட்ட தளபதியாக இருந்தவர். காலச்சூழ் நிலையினால் வேறிடத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். மாநில சுயாட்சிக்கு சட்டம் குறுக்கே நிற்குமானால் அதை மாற்றியமைப்பதற்காகப் போராடத் தயார், முதல் அமைச்சர் பதவியையே துறந்து அதற்காகப் போராடத் தயார் என்பதாக அறைகூவல் விட்டிருக்கிறார் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மத்திய சர்க்காரிடத்திலே ஏதோ நாங்கள் இரட்டை வேடம் போடுகிறோம் என்பது உண்மை அல்ல. இங்கே பேசியவர்களில் சிலர் நிதிநிலை அறிக்கையில் உள்ள விவகாரங்களை எடுத்துச் சொல்லாமல், முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். பெரியார் அவர்களுடைய சிலையை அவர்கள் திறந்த பாவத்திற்குக் கழுவாய் தேடத்தான் அவர்கள் மயிலாப்பூர் குளத்திலே தூர் எடுத்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். பெரியார் சிலையைத் திறப்பதை நாங்கள் பெருமையாகக் கருதுகிறோம். அது மட்டுமல்ல. பெரியார் அவர்களுடைய சிலையை அவர்கள் திறந்தார்கள் என்றால், அவர்களால் உருவாக்கப்பட்ட திருவாரூர் மு. கருணாநிதியாகத்தான் பெரியார் அவர்களுடைய சிலையைத் திறந்தார்கள். மயிலாப்பூர் குளத்திலே அவர்கள் தூர் எடுத்தார்கள் என்றால் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி என்ற முறையிலேதான் செய்தார்கள் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். பெரியார் சிலையை அவர்கள் திறந்தது பாவம் என்று காங்கிரஸ்காரர்கள் கருதுவார்களானால், கடந்த 1967 தேர்தலிலே பெரியார் அவர்களோடு சேர்ந்துகொண்டு பாடுபட்டார்களே, அந்தப் பாவத்திற்கு நீங்கள் எப்பொழுது கழுவாய் தேடப் போகிறீர்கள் என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன்.

இன்னொன்றையும் அதைவிட வேகமாகச் சொன்னார்கள்: நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குளிர்சாதனக் காரிலே போவதைக்கூடச் சுட்டிக்காட்டி குறைபட்டுக் கொண்டார்கள். அதற்கு முதல்வர் அவர்கள் அன்றைக்குப் பதில் அளித்த பொழுது எங்கள் உள்ளமெல்லாம் உருகியது. எனக்குக் கண்வலி, பல தடவைகள் ஆப்பரேஷன் செய்யப்பட்டிருக்கிறது, மருத்துவருடைய ஆலோ

சனையின்பேரில்தான் செல்கிறேன் என்று சொன்னார்கள். இருந்தாலும் நீங்கள் வேண்டாம் என்று சொன்னால் நான் விட்டுவிடுகிறேன் என்று சொன்னார்கள். அவர்கள் விடத் தேவையில்லை. 42 பேர்கள் கொண்ட கட்சியின் சார்பிலே அவர்கள் அதைக் கூறுகிறார்கள் என்றால் 139 பேர்கள் கொண்டிருக்கின்ற எங்கள் கட்சியின் சார்பிலே நாங்கள் சொல்கிறோம்—நீங்கள் அந்த வசதியை இழக்கத் தேவை இல்லை. முன்பொரு நாள் கோபாலபுரத்திலிருக்கிற தங்கள் வீட்டிலிருந்து பாளையங்கோட்டை வரையிலே ஓட்டை லாரியிலே ஏற்றி ஒரு டீ கூடக் கொடுக்காமல் உங்களை இழுத்துச் செல்ல உத்தரவிட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் உங்களைப் பார்த்து அப்படிச் சொன்னால் நீங்கள் அதற்கு செவிமடுக்கத் தேவையில்லை, நாங்கள் சொல்கிறோம் அந்த வசதியை இழக்கத் தேவையில்லை. அறிஞர் அண்ணா அவர்கள் ரண சிகிச்சைக்காக அமெரிக்காவிற்குச் சென்று வந்தபொழுது அதற்காக அரசாங்கம் பணம் கொடுக்கக் கடமைப்பட்டிருந்தாலும், வேண்டாம் என்று உதறித் தள்ளியதால் கழகத்தின் சார்பிலே அந்தச் செலவை ஏற்றுக்கொண்டோம். மருத்துவர் அறிவுரைப்படி குளிர்சாதன வசதியுள்ள வீட்டில் வசிக்க அறிஞர் அண்ணா மறுத்துவிட்டார். அதனால் அண்ணாவை இழந்துவிட்டோம். யாரையும் இனிமேல் இழக்க நாங்கள் தயாராக இல்லை. ஒளி விளக்கை இழந்து விட்டோம் மெழுகுவர்த்தி எரிகிறது. அதை ஊதி அணைக்கப் பார்க்கிறார்கள் என்று திருச்சியிலே முதல்வர் அவர்கள் அழகாகச் சொன்னார்கள். எவரும் ஊதி அணைக்க விடமாட்டோம். நீங்கள் அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தாலும்கூட திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிற நாங்கள் சொல்கிறோம், நீங்கள் அந்த வசதியை இழக்கத் தேவையில்லை, அதற்காக ஏற்படும் செலவை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று கூறி இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. எம். முத்தையா : அவைத் தலைவர் அவர்களே, 1970-71ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்தற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரிப்பதா வேண்டாமா என்ற குழப்பத்தோடு நான் ஆரம்பிக்கிறேன். என்ன காரணம் என்று கேட்கலாம். இந்த நிதிநிலை அறிக்கையிலே எதை எடுத்தாலும் பார்த்தாலும் விவசாயிகளுக்கு இந்த அரசு எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்கிறது என்ற முறையிலே இருக்கிறது. மேடையிலேயும் இப்படிப் பேசுகிறார்கள். விவசாயிகளுக்கு என்ன சலுகைகள் இருக்கிறது? சிறுவர்கள் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடுவதைப்போன்று இவர்களும் கண்ணைமூடிக்கொண்டு விவசாயிகளின் தலையிலே கொட்டுகிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை. என்.ஜி.ஓக்கள் ஸ்ட்ரைக் என்று சொன்னால் அவர்களுக்கும் உடனே பத்து ரூபாய் கூட்டிக் கொடுக்கிறார்கள். விவசாயிகள் ஸ்ட்ரைக்





செய்யமுடியுமா? எனவே விவசாயிக்கு விமோசனம் என்பது எல்லாம் பேச்சளவிலேதான். 30 ஏக்கரிலிருந்து 15 ஏக்கராகக் குறைக்கப் போகிறீர்கள். குறையுங்கள். ஆனால் விவசாயி எப்படியோ உருண்டு புரண்டு பிழைத்துக்கொள்வான். எந்த விவசாயியாவது பிளைமவுத் அல்லது கெடிலாக் என்று சொல்வார்களே அந்தக் காரிலே போவதைப் பார்த்திருக்கிறீர்களா, இருக்கவே இருக்காது. கிராமப் புறங்களிலே விவசாயம் செய்து உற்பத்தியைப் பெருக்குகிறவனுக்கு இந்த நிலைமை என்றால் ஏன் பட்டணவாசிகளுக்கு உச்சவரம்பு வைக்கக்கூடாதா? பங்களா வாசிகள் இருக்கிறார்கள், எத்தனை பங்களாக்கள், லாட்ஜ்கள்; தியேட்டர்கள்; ப்ளேனில் பறக்கிறார்கள், அவர்களுக்கெல்லாம் இந்த நிலைமையைக் கொண்டு வரக்கூடாதா? என்று வினவ விரும்புகிறேன். பட்டணம் வாழ் வாசிகளைவிடவா விவசாயம் செய்கிறவர்கள் உல்லாசத்திலே இருக்கிறார்கள்?

அடுத்தபடியாக, பசுமைப் புரட்சி என்று சொல்லி எங்கே போனாலும் முழக்குகிறார்கள். அதிலே பெருமையாக எங்கள் ஜில்லாவைச் சேர்ந்த அமைச்சர் பசுமைப் புரட்சிபற்றி பெருமையாகப் பேசிக் கொள்கிறார். நானும் பெருமைப் படுகிறேன். பசுமைப் புரட்சி என்றால் எங்கே பசுமை, எங்கே வளம் கொழிக்கிறது, வறட்சி எங்கேயும் இல்லை என்று பார்க்கிறார்களா? பசுமைப் புரட்சி இல்லை என்றுதான் சொல்லவேண்டும். என் பகுதிகளிலே பசுமைப் புரட்சி வரவேண்டுமென்றால் மின்சாரம்தான் முக்கியமாகத் தேவைப்படுகிறது. ஆனால் மின்சாரக் கட்டணம் எட்டே கால் பைசாவாக இருந்தது 10¼ பைசாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதுவா பசுமைப் புரட்சி?

நிலவள வங்கி என்று சொல்லி தாலுகாவுக்கு ஒரு வங்கி என்ற முறையிலே 100 வங்கிகள் எங்கு எங்கோ. எப்படி எப்படியோ நடக்கிறது. ஒத்தியோ அடமானமோ உள்ளவற்றிற்குக் கடன் கொடுக்கமுடியாது என்றால் விவசாயத்தை எப்படிப் பெருக்க முடியும்? கடன் கொடுக்காமல் எப்படி விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்கமுடியும்? கிரையப் பத்திரம் பட்டா கரக்ட்டாக இருந்தால் தான் கடன் கொடுப்போம் என்று கிணறு வெட்டுவதற்கோ அல்லது பம்புசெட்டிற்கோ சொல்கிறார்கள். பட்டா மாற்றுகிற விஷயம் இருக்கிறதே அது சாதாரண விஷயமல்ல. அது ரெவின்யூ டிபார்ட்மென்டில் செய்யப்படுகிறது. ஒருவர் பெயரிலிருந்து மற்றவர்க்கு மாற்றவேண்டுமானால் ஒரு தலைமுறையாவது ஆகும். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நீங்கள் ஏற்றுக் கொண்டாலும் சரி, இல்லை என்றாலும் பரவாயில்லை. கிரையப் பத்திரம் அல்லது வில்லங்க சர்டிபிகேட் இருந்தால் லோன் சாங்ஷன் செய்யவேண்டும். பட்டா வந்துதான் லோன் கொடுக்கவேண்டுமென்றால் கிரையப் பத்திரம் எதற்கு? ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் எதற்கு? அநேகம் பேர்கள் சிறு சிறு விவசாயிகள் இந்தக் காரணத்தினால் லோன் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். பட்டா இல்லை, என்றால்

லோன் இல்லை என்று சொல்கிறார்கள். கிரையப் பத்திரம் இருக்கிறதே அதை வைத்துக்கொண்டு கொடுக்கலாம். சப் ரிஜிஸ்திரார் ஆபீஸ் இருக்கிறதே, அங்கே பட்டாக் கொடுக்கின்ற முறைக்குப் பதிலாக பேங்க்லே எப்படி பாஸ் புக் வைத்திருக்கிறார்களோ அதைப்போன்று அங்கேயும் நிலத்தின் விஸ்தீரணம், நம்பர்; மதிப்பு இவற்றைப் போட்டு பாஸ்புக் வைத்துவிடலாம். வாங்குகிறவருக்கும் ஒரு பாஸ்புக், விற்கிறவருக்கும் ஒரு பாஸ்புக் இருக்கும். ஒருவன் விற்றுவிட்டால் அவன் பாஸ்புக்கில் அடித்துவிட்டு வாங்கியவனுடைய பாஸ்புக்கில் சேர்க்கவேண்டியதிருக்கும். அவ்வளவுதான். இந்த முறை உங்கள் லேண்ட் சீலிங்க்குக்கூட பயனுள்ளதாக இருக்கும் என்று நினைக்கிறேன். பட்டாவைப் பொறுத்தவரையில் எங்கே பார்த்தாலும் அலைகிறார்கள், ஓடியாடி அலைஞ்சாலும் நடக்கவில்லை. நானும் பார்த்தேன், நடக்கவில்லை. நான் ரொம்பவும் இதிலே சங்கடப் பட்டிருக்கிறேன். அதனால்தான் சொல்கிறேன். பாஸ்புக் முறை வைக்கவேண்டும். அதற்குண்டான செலவை விவசாயிகளிடத்திலே வேண்டுமானால் வாங்கிக்கொள்ளுங்கள். திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்தவரையிலே நான் பொறுப்பேற்றுக்கொள்ளக்கூட தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாஸ்புக் முறையைக் கொண்டு வந்தால் பாஸ் புக்கைக் காட்டியவுடன் லோன் கொடுக்கக்கூடிய வசதிகள் ஏற்படும். அந்த முறையைக் கொண்டுவந்தால் இந்த அரசை நான் மிகமிகப் பாராட்டுவேன். விவசாயிகளை இப்படி ஊக்குவித்தால்தான் அவர்கள் முன்னேறமுடியும். அவர்களை தலைமேலே குட்டி கீழே இறக்கினால் அவர்கள் முன்னுக்குவர முடியாது.

இன்று கிராமத்தில் உள்ள விவசாயிகள் காண்டுக்கு 8¼ பைசா விலிருந்து 10¼ பைசாவாக உயர்த்தியதற்காக ஸ்ட்ரைக் செய்ய முடியாது. இதற்காக ஒரு விவசாயி இன்னொரு விவசாயியைக் கூப்பிட்டால், ' நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ, நான் வரமாட்டேன்' என்று கூறிவிடுவான். இந்த வகையிலே விவசாயிகளை ஒன்று திரட்ட முடியாது. நீங்களாக அரசாங்கமே பார்த்து தான் விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும். இன்னொன்று துயர் தணிப்பு நிதி என்று ஒதுக்கப்பட்டது. நான் இங்கு மட்டுமல்லாது கலெக்டர் ஆபீசிலும் சென்று முறையிட்டும் கழுகு மலைக்குக் குடி தண்ணீர்த் திட்டம் கிடையாது. (மணிஅடிக்கப்பட்டது) ஒரு நிமிடம், இது உயிர்ப் பிரச்னை; சொல்லி விடுகிறேன். ஒரு மனிதனுக்கு அத்தியாவசியத் தேவை காற்று, அதற்குப் பிறகு தண்ணீர்; அதற்குப் பிறகு சாப்பாடு. கழுகு மலைக்குக் குடி தண்ணீர்த் திட்டம் தேவை என்று எத்தனையோ முறை படையெடுத்தாகிவிட்டது. கலெக்ட்ர், மற்றும் எல்லோரையும் பார்த்தாயிற்று. கடவுளுக்குத்தான் மனுப் போடவில்லை, அவருடைய போஸ்ட் ஆபிஸ் தெரியாது. தெரிந்தால் அவருக்கும் போட்டிருப்பேன். துயர் தணிப்பு நிதியில் இருந்தோ அல்லது மற்ற எந்த நிதியிலிருந்தாவது பணம் ஒதுக்கி கழுகுமலை குடிதண்ணீர்ப்



பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன், வணக்கம்.

திரு. சி. சின்னசாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1970-71ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். 1950-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26ம் நாளை இந்தியத் துணைக் கண்டத்தில் எவ்வளவு முக்கியமான ஒரு நாளாகக் கருதுகிறோமோ அதே அடிப்படையில் 1970-ம் ஆண்டு பிப்ரவரி 26-ம் நாளன்று சரித்திரத்திலேயே ஒரு திருப்பு முனையாக, திராவிட முன்னேற்றக் கழக அரசு தன்னுடைய வலிவான கொள்கையின் மீது, பொருளாதார ரீதியில் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் பலரும் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் பற்றி அவரவர்களுடைய கட்சியின் கண்ணோட்டத்தின் மீது நின்று பேசியிருக்கிறார்கள். இதிலே கருத்து வேறுபாடு கொண்ட சுதந்திராக் கட்சி நண்பர்கள் கூட அடிவயிற்றில் இருக்கும் ஆத்திரத்தை, புதிதாக ஏற்பட்டிருக்கின்ற அரசியல் காதலை முன்னிட்டு, ஆதரிப்பதா வேண்டாமா என்ற மையமான நிலையில் நின்று பேசிய வார்த்தைகளை நாங்கள் பொறுப்புணர்ச்சியோடு கூர்ந்து கவனித்துக் கொண்டுதான் இருக்கிறோம். அந்தப் புதிய அரசியல் காதல்களுக்குத் தெளிவாய்ச் சொல்லுவோம்—இமாலயத்தில் இருந்து குமரி முனை வரை ஏற்படுகின்ற கூட்டு மீண்டும் நிலப் பிரபுத்துவ சக்தியைக் காப்பாற்றுவதற்காக முனையுமானால் சட்டபூர்வமாக சமுதாய நீதியைச் சந்திக்கின்ற நிலைமை மாறி, நக்ஸல்பாரிகள் என்று சொல்லப்படுகின்றவர்களால் துப்பாக்கி முனையில்தான் இந்த மாறுதலை ஏற்பார்களா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : அந்த நக்ஸல்பாரிகளை நீங்கள் ஆதரிக்கிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இடையிலே குறுக்கிட்டுப் பேச உங்களுக்கு உரிமை கிடையாது. உங்களுடைய கட்சி உறுப்பினர்கள் பேசும்போது கருத்துக்களைச் சொல்லலாம்.

திரு. மு. சின்னசாமி : பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற கொள்கை ரீதியாக, சட்டபூர்வமாகச் செய்யும்போது ஆத்திரப்படுகின்றீர்கள். இந்த நிலையை ஏற்றுக் கொள்ளாவிட்டால், சட்டத்தின் மூலமாக ஏற்படுகின்ற இந்த மாறுதலை ஏற்க மறுத்தால் இந்தியத் துணைக் கண்டத்திலே அடுத்து வருகின்ற கால சட்டம் நக்சல்பாரி என்று சொல்லப்படுகின்ற துப்பாக்கி முனைதான் என்பதை எந்தப் பொதுவுடமைவாதியும், சோஷலிசவாதியும் சொல்லித்தான் ஆகவேண்டும். இது சரித்திரத்தின் சாதாரண உண்மை. கடந்த 300 ஆண்டு காலத்தில்

சர்வதேச ரீதியில் பார்த்தாலும், சட்டபூர்வமாக எங்கு மாறுதலை ஏற்றுக் கொள்ளவில்லையோ அங்கெல்லாம் துப்பாக்கி முனையைச் சந்தித்துதான் நீதியை வாங்கியிருக்கிறார்கள். இதை நான் கொங்கு நாட்டைச் சேர்ந்த திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நக்சல்பாரி என்று சொன்னாலும், கம்யூனிஸ்ட் என்று சொன்னாலும்; சோஷலிஸ்ட் என்று சொன்னாலும், சமூக மாறுதலைச் செய்கின்றவர்கள் யாராக இருந்தாலும், சமூக நீதியைப் பெறும் வகையில் அரசியல் வாழ்க்கையில், சமுதாய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய அபாயத்தை முன்கூட்டியே உணர்ந்து, அந்த கால கட்டத்தை உணர்ந்து. திராவிட முன்னேற்றக் கழக அரசு சட்டபூர்வமாக 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இதை இந்தியத் துணைக் கண்டத்தில் மாத்திரமல்லாமல் சர்வதேச அரங்கில் இருக்கும் பொதுவுடைமைவாதிகளும், சோஷலிசவாதிகளும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை புனிதமான சோஷலிசம் விஞ்ஞான சோஷலிசம் என்பதை ஏற்றுக்கொள்ளும் நிலை பிறந்திருக்கிறது. பொருளாதார ரீதியில் இதை அங்கீகரிக்கும் நிலை உருவாக அதற்கான நிர்ப்பந்தம் இந்தியாவில் ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் இந்த நிதிநிலை அறிக்கை சுட்டிக் காட்டுகிறது என்பதைத்தான் பயந்து பயந்து செத்துக் கொண்டிருக்கிற நண்பர்களுக்குக் கூற விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய பொறுப்பு வாய்ந்த பெரியவர் என்று கருதக்கூடிய காங்கிரஸ் கட்சி நண்பர், மத்திய ஆட்சிக்கும் மாநில ஆட்சிக்கும் இருக்கும் உறவு முறை சந்தேகக் கண் கொண்டு பார்க்கக்கூடியதாக இருக்கிறது என்று கூறினார். இன்று மத்திய அரசு எந்தக் கட்சியின் பெயரால் இருந்தாலும், மத்திய ஆட்சியில் புனிதமான சோஷலிச லட்சியம் இருக்கும் வரையில் அந்த லட்சியத்தின் அடிப்படையில், கொள்கை ரீதியில் திராவிட முன்னேற்றக் கழக அரசு கை கொடுக்கும். முற்போக்கு சக்தியை இந்தியத் துணைக் கண்டத்தில் அழித்துவிட வேண்டுமென்று பிற்போக்குச் சக்திகள் முனையுமானால், கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரையில் முற்போக்குச் சக்தியைக் காப்பாற்ற திராவிட முன்னேற்றக் கழகம் தலைமை தாங்குகின்ற கால கட்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை முதலாளித்துவம் உணரவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தை மாநிலக் கட்சி என்று மட்டும் பார்க்கும். நிலை மாறிவிட்டது. வடபுலத்தில் பஞ்சாப் மாநிலத்திலும், அரியானா மாநிலத்திலும் தலைநகர் பிரச்சினையிலே கருத்து மாறுபாடு வந்தது. இதிலே அகில இந்தியக் கட்சித் தலைவர்கள், மகாத்மா காந்தி வழி வந்த தலைவர்கள் பொதுவான யோசனை சொல்லுவதற்கு வய்ப்பு இல்லை, வக்கு இல்லை, துணிவு இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைதான் தமிழகத்தில் நின்று கொண்டு வடபுலத்தில் இருக்கும் அரசியல் நிலைமையைக் கூர்ந்து கவனித்து வீரமிக்க சீக்கியருக்கு சண்டிகாரை அளிக்க வேண்டும், அரியானாவுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்ற யோசனையை



அளித்தது. அந்த வகையில் இந்த நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் சக்தி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிறது என்பதை இதுவரை உணராவிட்டாலும் இனியாவது உணர்ந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

இதுவரை கண்ணிருந்தும் குருடர்களாய், காதிருந்தும் செவிடர்களாய், நாவிருந்தும் ஊமையர்களாய் உள்ளவர்கள் பின் விளைவுகளை ஆராய்ந்து உணர வேண்டுமென்று அந்த உயர்ந்த நண்பர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் எங்கே இருந்தாலும் அரசியல் நாகரிகத்தோடு பார்த்தால் பிப்ரவரி 26ம் தேதி ஏற்பட்ட மாறுதலை வரவேற்க வேண்டும். நிலப் பிரபுத்துவ சக்திகளைப் பழி வாங்க வேண்டுமென்ற நோக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடையாது. அது கழகத்தின் ஆசை அல்ல. சமூக நீதி கிடைக்க வேண்டுமென்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆசை. இனிமேல் சென்னையில் இருந்து கொண்டு கோவையிலோ, தஞ்சையிலோ 50 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று கும்மாளம் அடிக்க முடியாது. நிலம் உழுபவனுக்குத் தான் சொந்தம் என்ற தத்துவத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு துணிவாக, ராஜதந்திரத்தோடு, யாரும் தப்பித்துக் கொள்ள முடியாத நிலையில் பிப்ரவரி 26-ம் தேதியன்று நிறைவேற்றி சமுதாயத்திற்கு நீதி வழங்கி இருக்கிறது. கிடைக்கின்ற இரண்டு லட்சம் ஏக்கர் நிலத்தை தலைக்கு ஒரு ஏக்கர் வீதம் கொடுத்தால் கூட இரண்டு லட்சம் குடும்பங்கள் நிம்மதியாக வாழ முடியும். அந்தத் தரப்பில் இருப்பவர்கள், நல்லெண்ணம் படைத்தவர்கள், தனிப்பட்ட முறையில் பேசும்போது பாராட்ட வேண்டிய திட்டம் என்பதை ஒப்புக் கொள்ளுகிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். அவர்களுடைய அரசியல் நிலைமை இவ்வாறு அவர்களை இங்கே பேசும் நிலையில் வைத்திருக்கிறது. வெளியில் போனால் என்ன சொல்லுவார்களோ என்ற நிலைக்காக அப்படிப் பேசுகிறார்கள். மனச்சாட்சியோடு பேசினால் சமுதாய நீதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ளுவார்கள்.

அடுத்து, எனது மாவட்டத்தைச் சார்ந்த இரண்டு நிகழ்ச்சிகளை இந்த அரசின் கவனத்திற்கும், மற்றவர்களின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். இந்த உச்சவரம்புச் சட்டம் வந்த பிறகு மீதமுள்ள நிலங்களைப் பகிர்ந்து கொடுப்பதோடுகூட, அதற்குரிய தண்ணீர் வசதிகளைச் செய்து, தஞ்சை மாவட்டத்தில் உள்ள மாறுதல் திட்டத்தைச் சீக்கிரம் செய்து, மிச்சத் தண்ணீரை சேலம், கோவை மாவட்டங்களுக்குக் கொடுப்பதன் மூலம் இந்த லட்சியத்தை அடைய ஏதுவாக இருக்கும். கோவை மாவட்டத்தில் மின்சார வசதி இல்லாத அநேகக் கிராமங்கள் உள்ளன. ஈரோடில் ஒரு எஸ். இ. ஆபீஸ் திறந்து அங்குள்ள விவசாய மக்களுக்கு மின் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டம் மிகப் பெரிய மாவட்டமாக இருப்பதால் ஏற்கனவே இருந்த அரசு கூட அதை இரண்டாகப் பிரித்து கோவை மாவட்டம், ஈரோடு மாவட்டம் என்று வைக்கக்கூடிய நிலைமை இருந்தது. ஆனால் அப்போது அயல்நாட்டுப் படை யெடுப்பின் காரணமாக அத் திட்டம் ஒத்திப்போடப்பட்டது. ஆகவே, இப்போதிருக்கும் அமைச்சரவை அருள்கூர்ந்து கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஈரோடு மாவட்டம் என்று தனியாக ஏற்படுத்துவதற்கு எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கூட ஈரோட்டை இரண்டாகப் பிரித்து பெருந்துறையை தனி வட்டமாக ஆக்கி, அதைத் தனி தலைநகரமாக ஆக்க வேண்டுமென்று எங்கள் மாவட்டத்தின் மதிப்பிற்குரிய தலைவர் அவர்களும் எங்கள் வழிகாட்டியும் ஆன மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்களை எப்படி 26ம் தேதியன்று திடீரென்று 30 ஏக்கர் என்றிருந்ததை 15 ஏக்கர் என்று கொண்டு வந்தார்களோ அதே போன்று அமைச்சர் அவர்கள் தன் சுறுசுறுப்பு, அறிவு, ஆற்றல், திறமை இவற்றையெல்லாம் பயன்படுத்தி இரண்டொரு நாட்களில் தாங்கள் ஊருக்குத் திரும்புவதற்குள்ளாக ஒரு பத்திரிகைச் செய்தி கொடுத்து கோவை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும், ஈரோடு இரண்டாகப் பிரிக்கப்படும், பெருந்துறை தனி வட்டமாக ஆக்கப் படும், அது தலைநகராக இயங்கும் என்று கொள்கை அளவில் இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று பத்திரிகைச் செய்தி கொடுத்தால் அவர்களுக்கு....

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இதில் புதிதாக ஒன்று மில்லை. ஏற்கனவே ஈரோடு வட்டம் பெரிய வட்டமாக இருக் கிறது. இன்னும் பல தாலுக்காக்கள் அமைய வேண்டும் என்று அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிற ஒன்றுதான். உறுப்பினர் அவர்கள் சொல்வதற்காகச் சொல்லவில்லை. பொதுவாக சிறுசிறு தாலுக்காக்களை அரசாங்கம் அமைத்துக்கொண்டு வருகிறது. அந்த வகையில் கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இன்னும் சில தாலுகாக்கள் அதிகமாக அமைக்கவேண்டிய கருத்துரையை ஏற்கனவே கலெக்டர் அவர்கள் அளித்திருக்கிறார் கள். எந்த நேரத்தில் செய்வது என்பதுதான் நமக்குள்ள சங்கட மான நிலையேதவிர கொள்கை அவில் இவைகள் எல்லாம் வர வேண்டும் என்பது அரசாங்கம் ஏற்கனவே ஒத்துக்கொண்டுள்ள ஒன்றுதான். அந்த வகையில் பெருத்துறையும் தனி தாலுகாவாக ஆக எல்லாவிதமான நியாயமும் இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. மு. சின்னசாமி:** அமைச்சரவைக்கும், குறிப்பாக ரெவின்யூ அமைச்சர் அவர்களுக்கும் இந்த நல்ல செய்தியைக் கொடுத்ததற்காக ஈரோடு வட்ட பெருமக்கள் சார்பாக அதிலும் குறிப்பாக பெருந்துறை வட்ட பெருமக்கள் சார்பாக எனது நன்றி யைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.





**திரு. க. ர. நல்லசிவன்:** மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் அவை முன்னால் விவாதத்தில் இருக்கக் கூடிய வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி என்னுடைய கருத்துக் களை இங்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முதலாவதாக, ஒரு அரசியல் கட்சிக்கு எப்படி அதன் கொள்கைகள்தான் வழி காட்டியாக இருக்கமுடியுமோ அதேபோல் ஒரு அரசாங்கத்திற்குத் தன்னுடைய தேர்தல் பிரகடனம்தான் அந்த ஐந்து ஆண்டுகள் பூராவிற்கும் இருக்கக்கூடிய . தெளிவானதொரு வழிகாட்டியாக இருக்கமுடியும். அந்த அடிப்படையில் பார்க்கும்போது வரவு செலவுத் திட்டத்தை எடுத்து முதன் முதலாக பார்ப்பது என்ன புது வரிகள் போட்டிருக்கிறார்கள் என்றுதான் இயல்பாகப் பார்ப் பார்கள். அந்த அடிப்படையில், இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால், திராவிடமுன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் வரி இல்லாத பட்ஜட்டை நாங்கள் சமர்ப்பிப்போம் என்று கூறியிருந்ததை நான் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதற்கு மாறான முறையில் வரிகள் போடப்பட்டிருக்கலாம். ஆனால் அதே வேளையில் நான் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகின்றேன். அரசாங் கத்திற்கு வருவதற்கு முன்னால் ஒரு கட்சி திட்டம் தீட்டுவதற்கும், அரசுக்கு வந்ததற்குப் பின்னால் அது இயல்பான நிலைமையைத் புரிந்துகொண்டு திட்டம் தீட்டுவதற்கும் வித்தியாசம் உண்டு என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். ஆகவே இனிமேலாவது இதுபோன்ற தேர்தல் பிரகடனங்களை, தேர்தல் வாக்குறுதிகளைக் கொடுக்கும்போது மிக ஜாக்கிரதையாக, நாம் எதை எதைச் செய்ய முடியும் என்பதைக் கவனத்தில் வைத்துக் கொண்டு காரியங்களைச் செய்வது நல்லது என்பதை இந்தச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையில் நான் இதை சொல்லவேண்டும். வரி இல்லாத பட்ஜட் என்று சொல்லும்போது, ஒரு அரசாங்கத்தை நடத்தவேண்டுமென்று சொன்னால் புதுப் புதுச் செலவுகள் எப்படி வருகின்றனவோ அதைச் சரிக்கட்ட புதுப் புது வருவாய்களும் அவசியம். அப்படி புதுப் புது வருமானங்களை உண்டு பண்ண சில புதுப் புது வழி களும் மேற்கொள்ளப்படவேண்டும். திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் பிரகடனத்தில் மேல் சபைகளை ஒழிப்பது, கவர்னர் பதவிகளை ஒழிப்பது போன்ற காரியங்களைச் செய்யலாம் என்றிருக் கிறது. அவைகளை எல்லாம் ஒழித்தால் நம் செலவில் ஒரு பகுதி மிஞ்சும் என்பதையும் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அப்படிச் செய்வதினால் வருமானமும் வருகிறது. கொள்கையும் மேற்கொள்ளப்படுகிறது. ஒரு கொள்கையைப் பிரகடனப்படுத்தி அதன் வழி நின்று அதை அழுத்தம்திருத்த மாகப் பின்பற்ற அதை நடைமுறைக்குக் கொண்டுவர கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒன்றுக் காகவே நான் மனமகிழ்ச்சியோடு, மனமாறப் பாராட்டுகிறேன் நிதி அமைச்சர் அவர்களை. நீண்டநாட்களாகச் சொல்லிவந்தது நிறை வேற இருக்கிறது. 1948-ல் நான் காங்கிரஸ்காரனாக இருந்தேன். உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற முறையில் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்தைக்கொண்டுவர வேண்டுமென்று சொன்ன தற்காக அன்றிருந்த காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த முதல் அமைச்சர் அவர்கள் என்னை ஒரு ஆண்டு காலத்திற்கு சிறையில் வைத்திருந்தார்கள். இன்று காங்கிரஸ் கட்சிக்கு எதிரான ஒரு கட்சி அதை நிறைவேற்ற இருக்கிறது என்று சொன்னால், யார் அதை நிறைவேற்றினாலும் அவர்களைப் பாராட்டவேண்டியது எங்கள் பரிபூர்ண பொறுப்பாகும். அதே சமயத்தில் அதில் ஜாக்கிரதையாகச் செல்லவேண்டும் என்றும் சொல்லிக் கொள் கிறேன். காங்கிரஸ் அரசு 1961-ல் நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று செய்தது. அந்தச் சட்டத்தின் பெயரால் எவ்வளவு ஏக்கர்கள் நிலம் இல்லாதவர் களுக்குக் கொடுக்கப்பட்டது என்பதைப் பார்க்கவேண்டும். இருப தாயிரம் ஏக்கர்கள் வரை சமீப காலங்களில் விநியோகிக்கப்பட் டிருக்கலாம். ஆகவே நான் சொல்வது, 15 ஏக்கர் என்று செய்வது மட்டும் போதாது, அதை நிறைவேற்றுவதில் காலதாமதம் செய் தால் அச் சட்டம் பயனுல்லாமல் போய்விடும். ஒரு சர்க்காருக்கு ஐந்து வருடங்கள் என்பது தெளிவாக வரையறுக்கப்பட்ட ஒன்று. நான் மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவெனில், இதை விரைவில் சட்டமாகக் கொண்டு வந்து நிறை வேற்றி நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். சம்பிரதாயப்பூர்வமாகப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புவது போன்றவைகள் செய்யவேண்டியிருக்கும். இருந்த போதிலும் அதை விரைவாகச் சட்டமாகச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, சமீபத்தில் மத்திய அமைச்சர் திரு. ஜகஜீவன் ராம் அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும்போது, ஏழை எளிய ஹரிஜனங்கள், பின்தங்கிய வகுப்பினர் இவர்கள் சர்க்கார் புறம் போக்கு நிலங்கள் இருக்குமானால் அவற்றை அவர்கள் ஆக்கிர மித்துக் கொள்ளலாம் என்று கூறியிருக்கிறார்கள். அது சரியா தவறா என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. இன்று தேசத்தில் உள்ள நிலைமை மாறிக்கொண்டிருக்கிறது என்பதற் காகத்தான் சொல்கிறேன். இந்த 15 ஸ்டான்டேர்ட் ஏக்கரா என்பதைக் கூட நாம் திட்டவட்டமான அளவாக வைத்துக் கொள்ள முடியாது. ஜப்பான் போன்ற நாடுகள் முன்னேறி யிருக்கின்றன என்றால், ஜப்பானில் உள்ள மாக்ஸிமம் ஹோல்டிங் 7½ ஏக்கர்தான், அதுவும் ஸ்டாண்டர்ட் ஏக்கர் அல்ல, வெறும் 7½ ஏக்கர் தான். இதையும் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



அடுத்தபடியாக, 50 பக்கங்கள் கொண்ட இந்த உரையில் அதிக மாகக் குறிப்பிடப்பட்டிருப்பது, மத்திய அரசினிடம் அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன என்பதும், அதன் நிதிக் கொள்கையினால் ஏற்படும் பலாபலன்கள் இவற்றைப் பற்றித்தான் அதிகமாகப் பிரஸ்தாபித்திருக்கிறார்கள். அதை ஒப்புக்கொள்கிறேன். நிச்ச யமாக மத்தியில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் மாநிலங் களுக்குப் பிரித்துக் கொடுக்கப் படவேண்டும், அதேபோன்று மாநிலங்களில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் மாவட்ட அளவிலும், கிராம அளவிலும் பிரித்துக் கொடுக்கப்படவேண்டும் என்பதையும் இந்தச் சர்க்கார் தன் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன்.

மாவட்ட அபிவிருத்தி மன்றம் என்று ஒன்றிருக்கிறது. அந்த மன்றத்திற்கு நாங்கள் சரியாகப் போவதுகூட கிடையாது. ஏனென்றால், அஜெண்டா வரும், தீர்மானங்கள் நிறைவேற்றப் படும், ஆனால் அவைகள் நல்லமுறையில் செயலுக்கு வருவது மிகமிகக் குறைவாகத்தான் இருக்கும். மாவட்டங்களுக்கும், கிராமங்களுக்கும் பெரிய அளவில் அதிகாரம் கிடையாது. மத்திய சர்க்காரிலுள்ள அதிக அதிகாரத்தை நாம் கேட்கும்பொழுது, மாநில அளவிலும் நாம் அதைப் பிரித்துக் கொடுப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

அதற்கடுத்தபடியாக, மத்திய சர்க்காரை, பெரிய அளவிலே இன்று திராவிட முன்னேற்றக் கழக அரசு குறை சொல்லுகிறது. அதை நான் வரவேற்கிறேன். அதேநேரத்தில், இன்று மத்திய சர்க்கார் இருக்கிறதே, அதை இங்கிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகமும், மற்றும் இந்தியாவிலிருக்கின்ற அரசியல் கட்சிகளும் ஆதரிக்காவிட்டால், உண்மையிலேயே சொல்லுகிறேன், மத்திய அரசே கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகம் விரும்பினால், மத்திய சர்க்காரை நிச்சயமாக மாற்றிவிட்டு, முன்பு ஒருநாள் நான் ஆசைப்பட்டேன், சொன்னேன், நமது நிதியமைச்சரவர்கள் மத்திய நிதியமைச்சராக ஆகவேண்டுமென்று நான் சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது, ஆகவே, என்றைக்குமே இந்தமாதிரியான சந்தர்ப்பம் இருக்காது, எனவே, கொஞ்சங்கூட தயவு தாட்சண்யம் காட்டாமல் மத்திய சர்க்காரை நீக்கிவிட்டு கூட்டு அரசாங்கத்தைக் கொண்டு வர முடியும். அதன்மூலம் மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களைப் பெற்றுவிட முடியும். அப்படியிருக்கும்பொழுது நாம் ஏன் ஐயோ, எங்களுக்கு அதிகாரம் இல்லையே, ஐயோ அதிகாரங்கள் மத்தியில் குவிந்துகிடக்கின்றனவே என்று சொல்ல வேண்டும்? நாமே நம்மைச் சிறைப் படுத்திக்கொண்டு, ஐயோ நான் சிறையில் இருக்கிறேனே, கஷ்டப்படுகிறேனே என்று சொல் வதுபோல் ஏன் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லு கின்றேன்.

அதுமட்டுமல்ல, காங்கிரசைத் தீர்த்துக் கட்டுவதன்மூலம்தான் எல்லாக் காரியங்களையும் செய்ய முடியுமென்று சொன்னோம். அந்த அருமையான சந்தர்ப்பம் இப்பொழுது கிடைத்திருக்கிறது. ஆனால், இப்பொழுது ஒன்றைச் சொல்லுகிறார்கள், 'ஸ்டெபிலிட்டி' என்று. அதைக்கண்டு அரசியல்வாதிகள் பயப்படுகிறார்கள். ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். வேகமாக மாறி வரும் சமுதாயத்தில் ஸ்டெபிலிட்டியைப் பார்க்க முடியாது. பகுத்தறிவு வாதத்தைப் பார்த்து மீதியுள்ளவர்கள் என்ன சொல்லுகிறார்கள், கெடுத்து விடுவார்கள், நாசமாக்கிவிடுவார்கள், ஆண்டவன் இல்லை என்று சொல்லிவிடுகிறார்களே என்று சொன்னார்கள். அதைப்பார்த்துக் கொண்டு பேசாமலே மீதியுள்ளவர்கள் இருந்தார்களா, நிச்சயமாகக் கிடையாது. அதுபோல் இன்று ஏதோ ஒரு புரட்சியை 3 மாதத்திலே, 3 நாட்களிலே வைக்கலாம். நான் சொல்வதெல்லாம், இன்று மத்திய அரசாங்கத்தை நீக்கிவிட்டு, கூட்டு அரசாங்கமாக ஆக்கி அதிகாரத்தைப் பிரித்துக் கொடுக்கச் சொல்வோம்.

மொழி, பொருளாதாரம், பிளானிங் கமிஷன் பற்றி நிதியமைச்சரவர்களின் புத்தகத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. நான் கேட்கிறேன், நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? நாமே உட்கார வைத்துவிட்டு, நாமே ஏன் சொல்ல வேண்டும். சேலம் திட்டம் வரும் வரும் என்று சொன்னார்கள். அமைச்சரவர்கள் என்ன சொன்னார்கள், நிச்சயமாக வரப்போகிறது என்றார்கள். நான் நம்பியிருந்தேன். விசாகையிலே, மற்ற இடங்களிலே வரா விட்டாலும் நிச்சயமாக சேலத்திற்கு வந்தே தீரும் என்று நம்பிக் கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுது அந்த நம்பிக்கை பொய்த்துவிட்டது. ஆதலினால் நான் கேட்டுக்கொள்வது, எவ்வளவு விரைவாக மத்திய சர்க்காரை நீக்கிவிட்டு, கூட்டு அரசாங்கத்தை ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவாகச் செய்ய இந்த அரசாங்கம் முன்னின்று நடத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, நெசவாளர்கள் விஷயம் அடங்கிவிட்டது. உண்மையிலேயே நான் சில இடங்களிலே பார்த்தேன், ஒன்று நூல் விலை ஏறிவிட்டது, மற்றொன்று விசைத்தறிகள் வேகமாகப் பெருகியிருக்கின்றன. அதைத் தடுக்க முடியாது. நெசவாளர்கள் பல இடங்களில் வாழ்க்கையிழந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் திட்டவட்டமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சர்க்கார் ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியவர்களுக்கு ஒருசில சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதனால் அவர்கள் பரிபூர்ணமாகத் திருப்தியடைந்திருக்கிறார்களா என்றால் திருப்தியடைந்ததாகத் தெரியவில்லை. ஏனென்றால் ஒன்று அடிப்படைத் தேவைகள், இரண்டாவது



மாறிவரும் நகரத்தில் இருக்கும் வாழ்க்கை அவர்களுடைய வாழ்க்கையில் பிரதிபலிக்கச் செய்கிறது. ஆகவே, நம்மைப் பொறுத்த வரையில் நாம் எந்த அளவுக்குச் சிக்கனத்தைக் கடைபிடிக்கிறோமோ அதை அனுசரித்துத்தான் சமூகமும் இருக்கும் அதைக் கருத்தில் வைத்துக் கொண்டு, நம்முடைய வாழ்க்கையில் கடைப்பிடித்து அவர்களுக்கு நாம் உதாரணமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தப் பரம்பிக்குளம்-ஆளியார் திட்டம் சம்பந்தமாக இந்த அரசாங்கம் மிகச் சிரத்தையோடு பேச்சு வார்த்தை நடத்தியது. ஆனால் இன்றுவரையில் அந்தப் பேச்சு வார்த்தை முழுமை பெற்றதாகத் தெரியவில்லை. என்மீது கூட குற்றச்சாட்டு சொல்லப் பட்டது. கீழ்பவானியை விட்டுக் கொடுத்து, பரம்பிக்குளம்-ஆளியாற்றுக்காக ஏதோ செய்ததாக. அதைப் பற்றி நான் கவலைப் படவில்லை. நான் வருத்தப்படுவதெல்லாம், ஒப்பந்தம் செய்யப் பட்ட அது முற்றுப்பெறவில்லை, அமைச்சர்கள் கையெழுத்துப் போடவில்லை, அதனால் கிடைக்கக்கூடிய லாபம் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படவில்லை என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதைச் சீக்கிரமாக முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்.** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தவறாகப் புரிந்துக் கொண்டிருக்கிறார்கள். பரம்பிக்குளம்-ஆளியாறு சம்பந்தமாக ஒப்பந்தம் ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களாலும், இதற்கு முன்னாலேயிருந்த இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் முதலமைச்சர் மாண்புமிகு ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட் அவர்களாலும், எல்லாவிதமான விவரங்களும் ஒப்புக் கொள்ளப்பட்டு, கையெழுத்தாகி, அதை அமுல் படுத்துவதற்காக அதைப்பற்றிய விவரங்களை அதிகாரிகள் சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த விவரங்களுக்கான அறிக்கைதான் கையெழுத்துப் பட வேண்டுமே தவிர, பரம்பிக்குளம்-ஆளியாறு பற்றி பொதுப் போக்கான ஒப்பந்தம் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மட்டத்திலே ஒப்பந்தம் ஆகியிருக்கிறது. பெரிய அபிப்பிராய பேதங்கள் எதுவும் இல்லை. வெகுவிரைவாக இப்பொழுது நடைபெற காரியங்கள் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சரவர்களும், கேரள முதலமைச்சரவர்களும் பெங்களூரிலே சந்தித்துப் பேசினார்கள். அதற்கு முன்பு, டெல்லியிலே இப்போது வந்திருக்கும் இந்த அமைச்சரவையின் முதலமைச்சரவர்களையும் நான் சந்தித்துப் பேசியபோது, அவர்களுக்குள்ள அசௌகரியங்கள் காரணமாக கொஞ்சம் தாமதப்படுகிறதே தவிர, ரொம்ப சீக்கிரமாக நிறைவேற்றப் பல திட்டங்களை இந்த ஆண்டிலே துவங்குவதற்கான வழிவகைகள் எல்லாம் காண்பதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது.

திரு. க. ர. நல்லசிவன் : வருகின்ற வருஷத்தில் இருந்தாலும் போதுமானது. ஆனால் இது முடியாமல் நீண்ட காலமாகிவிடக் கூடாது, காவிரி மாதிரி இழுத்துக்கொண்டு போகக்கூடாது என்பதற்காகச் சொன்னேனே தவிர வேறொன்றுமில்லை.

கோவை மாவட்டத்திலுள்ள புஞ்சைப் பகுதிகளைப்பற்றி எனக்குப் புதிய சந்தேகம், புதிய சிக்கல். அதனால் கோவை சட்ட சபை அங்கத்தினர்கள் முதலமைச்சரவர்களைப் பார்க்கலாம் என்றிருக்கிறோம். பாண்டியார்–புன்னம்புழா என்று சொல்லி ஒரு மின்சாரத்திட்டம் இப்பொழுது கவனத்தில் இருக்கிறது அதை மாற்றி, நீர்ப்பாசனத் திட்டமாக மாற்றினால் சுமார் ஒரு லட்சம் ஏக்கராக்களுக்கு பாசன வசதி கிடைக்கும். அதைச் சர்க்கார் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

குடிசைவாசிகளைப்பற்றி நமது நிதியமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சென்னையை அழகுப்படுத்த வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் குடிசையில் வாழ்பவர்களை விரட்டக்கூடாது. அதற்குப்பதிலாக, சென்னையிலே ஏராளமான இடங்கள் இருக்கின்றன. அவற்றை ஆர்ஜிதம் செய்து, 5 செண்ட், 10 செண்ட் என்று இல்லாவிட்டாலும் கூட 2 செண்டாவது கொடுக்க முன்வர வேண்டும். தமிழகம் பூராவும், வீடில்லாதவர்களுக்கு 2 செண்டாவது கொடுக்க வேண்டும். பர்மாவிலிருந்து வருகின்றவர்களுக்கு, இலங்கையிலிருந்து வருகின்ற அகதிகளுக்கு எப்படி விசேஷ சலுகை காட்டுகிறோமோ அதைப் போல வீடில்லாதவர்களுக்கு, இந்த அரசாங்கம் வருகின்ற இரண்டாண்டுக் காலத்திற்குள்ளாவது, 2 செண்ட்டாவது கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வேலையில்லாத மாணவர்களும், வேலையில்லாத வயது வந்த வாலிபர்களும் இருக்கிறார்கள். இவர்களைப் பற்றி பட்ஜெட்டிலே ஒன்றுகூடச் சொல்லவில்லை. அது மிகவும் ஆபத்தானது. கல்வியமைச்சரவர்கள் அதைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். அதைக் கவனிக்காமல் விட்டுவிட்டால் பெரும் ஆபத்து வந்து சேரும். வேலை கொடுப்பதற்காக, விவசாயப்படை என்றாவது ஒன்று அமைத்து, குறைந்தபட்சம் ஒரு டோக்கன் மான்யமாகக் கொடுத்து அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். இல்லாவிட்டால் அது பெரும் ஆபத்தாகப் போகும் என்பதைச் சொல்லி, இந்த வரவு-செலவுத்திட்டத்தில் அதுபற்றிக் கூறப்படவில்லை, அதைக் கவனித்தில் வைத்துக் கொண்டு காரியம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

* திரு. வி. எஸ். எஸ். மணி : சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, 70-7-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் கொண்டுவந்துள்ளார்கள். அதை நான்



வரவேற்கிறேன். அந்த அறிக்கையைத் தயாரித்த அரசைப் பாராட்ட எல்லோரும் கடமைப்பட்டுள்ளார்கள். இந்த அறிக்கையிலுள்ள முக்கியமான அம்சம் என்னவென்றால், திட்டவேலைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் 70–71-ம் ஆண்டுக்கு 106¼ கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பது பாராட்டத்தக்கது. சாதாரண செலவுகள் அதிகரிக்கும் இக்காலத்திலே மற்ற மாநிலங்களெல்லாம், திட்டச் செலவுகளைக் குறைத்துக் கொண்டுபோகும் நேரத்திலே, நமது மாநில அரசு தனது நிதியைக் கொண்டு நிர்வாகத்தைச் சமாளிக்கக்கூடிய ஒரு காரணத்திற்காக ஏதோ தண்டனை விதிப்பதைப்போல் மத்திய அரசு நிதி உதவியைக் குறைத்துக்கொண்டது. நமது அரசு நல்லபல திட்டங்களை நிறைவேற்றுவதற்காக நிதி ஒதுக்கு செய்து அதனால் நல்ல பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற கருத்துடன் காரியங்கள் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன. அதற்காக இந்த அரசைப் பாராட்டவேண்டும். அவர்களுடைய துணிச்சலையும் பாராட்ட வேண்டும். இந்த அரசுக்குத் திட்ட வேலையின் அபிவிருத்தியில் எவ்வளவு அக்கரை இருக்கிறது என்பதும் நமக்குப் புலனாகிறது. அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றுவதற்காக சில வரிகளை உயர்த்தியிருக்கிறார்கள். அவைகளெல்லாம் செல்வந்தர்களைப் பார்க்கின்றனவே தவிர, ஏழை மக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை. இந்த அரசு சோஷலிஸ நோக்கு உள்ள அரசு என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, அரசு உதவி பெறும் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்கு நல்ல பல சலுகைகள் செய்து கொடுத்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, இலவச மருத்துவ உதவி அவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் நல்க முன்வந்துள்ளார்கள். இது உண்மையிலேயே பாராட்டக்கூடிய செயலாகும். இந்த நேரத்தில் நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தச் சட்ட மன்றத்தில் பணியாற்றக்கூடிய உறுப்பினர்களும் பொதுப் பணியில் ஈடுபட்டவர்கள்தான். அவர்களுக்கு இலவச மருத்துவ உதவி செய்துவருகிறது இந்த அரசு, ஆனால், அவர்களுடைய குடும்பத்தினருக்கு இல்லை. அவர்களுடைய குடும்பத்தினருக்கும் சேர்த்து இலவச மருத்துவ உதவி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில் உற்பத்தி செய்யக்கூடிய காஞ்சிபுரம் புடவைகள் உலகப் பிரசித்திபெற்றவை. உலகத்தில் காஞ்சிபுரம் புட்வையைப்பற்றி மிகப் பெருமையாகப் பேசக்கூடிய ஒரு 'நிலையிலே,' காஞ்சிபுரத்தில் உற்பத்தி செய்யக்கூடிய அந்தக் காஞ்சிபுரம் புடைவைகளுக்கு முக்கியமாக வேண்டிய உப பொருள் ஜரிகை. இந்த ஜரிகை உற்பத்திக்கு ஒரு தொழிற்சாலை வேண்டும் என்று, அந்தத் தொழிற்சாலைக்காக இந்த பட்ஜெட்டில் ரூ. 25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் தொழிற்சாலைக்கு பேரறிஞர் அண்ணா

அவர்களின் பெயரைச் சூட்டலாம் என்று கூட அண்மையில் நமது தொழில் அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். காஞ்சீபுரம் பட்டுப் புடவையை உற்பத்தி செய்வதற்கு அசல் பட்டு, அசல் ஜரிகை வேண்டும் என்றால், நமது மாநிலத்திலே கிடையாது. வட புலத்தில் உள்ள சூரத்தில் உற்பத்தி செய்து இங்கே கொண்டுவரப் படுகிறது. இந்த ஜரிகையைத் தான் நமது காஞ்சிபுரத்தில் தயார் செய்யவேண்டும் என்பதற்காக அங்கே ஒரு ஆலையை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், உயர்ந்த ரக ஜரிகை வேண்டுமென்றால் அன்னியச் செலாவணி கூட தேவைப்படுகிறது. தங்கம் வேண்டும், வெள்ளி வேண்டும். இதற்காக ரூ. 25 லட்சம் நாம் செலவு செய்து ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தினால் கூட அது போதாது. குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாயாவது அந்தத் தொழிச்சாலைக்கு நாம் ஒதுக்கீடு செய்தால் தான் நல்ல முறையிலே உயர்ந்த ரக ஜரிகை தயார் செய்து, உயர்ந்த ரக பட்டுப் புடவை தயார் செய்து கொடுக்க முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

காஞ்சிபுரம் பட்டுப்புடவைகளுக்கு அமெரிக்காவில் ஏகப்பட்ட கிராக்கி. தமிழ்ப் பெண்களின் புடவை உடுத்தும் பாணி, இந்த நாட்டிலுள்ள பெண்கள் புடவை உடுத்துகிற முறையை மேல் நாடுகளில் பின்பற்றவேண்டும் என்று, இவர்களைப் போல புடவை உடுத்த வேண்டும் என்ற மோகம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆடை அணிவது எப்படி என்றமுறையைப் பற்றி பயிற்சி அளிக்கக் கூடிய நமது நாட்டுப் பெண்கள் கூட அங்கெல்லாம் தேவைப்படுகிறார்கள். தமிழ் நாட்டுப் பெண்களுக்கு இதற்காக மேல் நாடுகளில், குறிப்பாக அமெரிக்காவில் ஏகப்பட்ட கிராக்கி இருக்கிறது. காரணம் பழைய கவுன் முறையானது அவர்களுக்குப் பிடிக்கவில்லையாம்; உண்மையிலே பெண்களின் கற்புக்கு ஒரு பாதுகாப்பாக இருக்கக்கூடிய நமது முறை, உடை உடுத்திக்கொள்ளக் கூடிய முறை நல்ல முறையாக இருக்கிறது, பழைய கவுன் முறையை மாற்றவேண்டும் என்று மேல்நாட்டுப் பெண்களும் கருதுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. எனவே. இந்த நிலை நீடிக்குமானால், நமது நாட்டுப் புடவைகளுக்கு அமெரிக்காவிலும், ஏனைய மேல் நாடுகளிலும் ஏகப்பட்ட கிராக்கி ஏற்படும் என்பதையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே, அதிகமான அளவில் பட்டுப் புடவைகளைத் தாயாரிக்கவேண்டும் என்றால் இந்தத் தொழிற்சாலையைப் பெரிதாக ஆக்கவேண்டும். பெரும்பாலும் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஒரு நல்ல பொற்காலம் வரப்போகிறது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உச்ச வரம்புச் சட்டத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். தமிழ் நாட்டில் நில உச்ச வரம்பை 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று இருந்ததை 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவாகக் குறைக்க முன்வந்திருந்திருக்கிறார்கள். ஆனால், பொது உடைமை நண்பர்கள் திராவிட முன்னேற்றக்



கழகத் தோழர்கள் நம்மையும் மிஞ்சிவிட்டார்களே என்று அவர்களே உள்ளூர பொறுமைபடத்தான் செய்வார்கள். அதே நேரத்தில் என்ன சொல்கிறார்கள் என்றால், ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதை கணக்கெடுப்பதில் நில வரியின் அடிப்படையில் கணக்கெடுத்து வருகிறார்கள், அது கூடாது, வருவாயை அடிப்படையாகக்கொண்டு கணக்கெடுக்கச் செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் வருவாயைக் கணக்கெடுத்தால், இன்றைக்கு இருக்கக்கூடிய சட்டத்தை பூராவுமாக மாற்றவேண்டும். 1961-ம் ஆண்டில் நில உச்ச வரம்புச் சட்டம் வந்த நேரத்தில் அந்தச் சட்டத்தை சுப்ரீம் கோர்ட்டில் செல்லாது என்று ஆக்கினார்கள் மீண்டும் அதற்கு ஒரு சிம்பிள் அமெண்டுமெண்டு கொண்டுவந்து அந்தச் சட்டத்தை ஊர்ஜிதப்படுத்தினார்கள். இந்தநிலைதான் ஏற்படும், இந்த சிம்பிள் அமெண்டுமெண்டை விட்டுவிட்டு வேறுவிதமான மாற்றங்கள் செய்தால் வருமானத்தைக் கொண்டு கணக்கிட்டால், அதற்காக சட்டத்தையே அடியோடு மாற்றவேண்டிய நிலை ஏற்படும். இந்த பட்ஜெட் வரவேற்கக்கூடிய பட்ஜெட், சோஷலிஸ பட்ஜெட், என்று சொல்லிக்கொண்டு, எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்** : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 1970–71–ம் வருஷத்திய நிதிநிலை அறிக்கை குறித்து என்னுடைய சில கூறுதல்களைக் கூற விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கை நல்ல முறையிலே உள்ளே இருப்பதை மறைத்து, பொதிந்து அமைக்கப்பட்டிருக்கிறது. உண்மையாகவே, இந்த நிதிநிலை அறிக்கை எதைச் சார்ந்திருக்கிறது என்றால், மத்திய, மாநில அரசாங்கங்களின் உறவிலே ஏற்பட்ட அரசாங்கம் காண்கின்ற சில குறைகளை மிகப் பெரியதாக்கி, அதன் பேரில் இந்த நிதிநிலை அறிக்கை எழுப்பப்பட்டிருக்கிறது. வாஸ்தவம் தான், மாநில அரசிற்கும், மத்திய அரசிற்கும் நல்ல உறவு இருக்கவேண்டும். மாநிலங்கள் முன்னேற்றம் அடைவதற்கு மத்திய அரசாங்கம் தடங்கலாக இருக்கக் கூடாது. மாநில அரசாங்கங்களுக்கு வேண்டிய எல்லா விதமான உதவிகளையும் கட்சி சார்பில்லாமல் மாநில அரசாங்கங்களுக்கு மத்திய அரசு செய்யவேண்டியதுதான். ஆனால், எடுத்ததற்கெல்லாம் மாநில மத்திய உறவு என்று எடுத்துக்காட்டுவது அவ்வளவு சரியாக இருக்காது. உடல் நல்ல முறையிலே இருந்தால்தான், உடலிலுள்ள அங்கங்கள் நல்ல முறையில் இருந்தால் தான், இந்த தேசம் சுதந்திரத்தோடு நிமிர்ந்து நிற்க முடியும். நாம் ஒன்றை ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும். அரும்பாடு பட்டு சுதந்திரத்தை நாம் வாங்கியிருக்கிறோம். இந்த நாட்டின் ஒரு அங்கமாக இருக்கிறோம். தேசத்தினுடைய சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டும். மாநில அரசுகளும், மத்திய அரசும் நல்ல உறவோடு இருக்கும்படி நாம் பார்த்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும், இந்த தேசத்தில் ஜனநாயகம் நிலைக்க, இந்த தேசத்தில் சுதந்திரம் பாதுகாக்கப் பட. சுதந்திரத்திற்கு

ஆபத்து இல்லாமல் செய்ய, மாநிலத்திற்கும், மத்திய சர்க்காருக்கும் ஒற்றுமை நல்ல முறையில் இருக்க வேண்டும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, இந்த அறிக்கையிலே விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு மற்றும் பசுமை முன்னேற்றத்திற்கு, நல்ல பல காரியங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. முதலாவதாக, 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதிலிருந்து, 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று குறைக்கப் பட்டிருப்பது சரிதான். பாராட்ட வேண்டியது தான். ஆனால் இதனால் மத்திரம், 30 லிருந்து 15 ஆகக் குறைந்ததால் மாத்திரம் சோஷலிசப் பொருளாதாரத்தை நாம் கைப்பிடித்துவிட்டோம் என்று நிச்சயமாக ஆகாது. ஆகவே, நன்றாக, நிதானமாக செயல் படவேண்டும். இப்படி ஸ்டாண்டர்ட் ஏக்கரைக் குறைப்பதால், மத்திய வகுப்பினர்கள், அடியில் இருக்கின்ற விவசாயிகள், ஏழைகள், இன்னும், அதிகமாக நிலம் வைத்துக் கொண்டு உயர் நிலையில் உள்ள பெரியவர்கள் இவர்களையெல்லாம் கவனத்தில் எடுத்துக் கொண்டு, அவரவர்களுக்குத் தக்கபடி, அடிப்படையில் இருக்கும் விவசாயிகள் முன்னேறுவதற்கான வழியில் நிதானமாக நிலச் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும். நிலச் சீர்திருத்தம் செய்யப் பட்டிருக்கிறது. அமுல் நடத்தப் படுகிறது. ஆனாலும், அதிலெல்லாம், விவசாயிகளுக்கும், நிலச் சொந்தக்காரர்களுக்கும் நல்ல உறவு இருக்க வேண்டும். 60/40 சட்டம் எந்த முறையில் செயல் படுத்தப்படுகிறது என்பதை நன்றாகக் கவனித்து, படிப்படியாக விவசாயிகளுடைய முன்னேற்றத்திற்கு தகுந்த வகையில் நிலச் சீர்திருத்தம் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, பசுமை நன்கு பசுமையாக வேண்டும் என்றால், யு. பி. யில்போல், செய்ய வேண்டும். எல்லா விவசாயிகளும் குறைந்த நிலம் வைத்திருக்கிறார்கள். 2, 3, 5, ஏக்கர் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்களையும் விவசாயிகளாகக் கருத வேண்டும். அப்படி லட்சக்கணக்கானவர்கள் விவசாயிகள் கொஞ்ச நிலம் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம், விவசாயத்தைப் பெருக்க, நிலத் தீர்வையை ரத்து செய்ய வேண்டும், அப்படிச் செய்வதன் மூலம், ஆட்சிக்கு வேண்டிய பொருள்கள் ஈட்டப்படலாம். எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், விவசாயிகள் பூரணமாக ஒத்துழைப்பார்கள். அவர்கள் செழிப்பாக இருக்க, குறைந்த நிலம் வைத்திருப்பவர்களுக்கு நிலத் தீர்வையை நீக்கினால், மிகவும் சரியானதாக இருக்கும். அது விவசாயிகளுக்கு நன்மை பயப்பதாக இருக்கும்: அது ஒரு நல்ல திட்டமாக இருக்கும். அதையும் அரசாங்கம் கருத்தில் கொள்ள வேண்டும்.

இப்பொழுது கண்ட்ரோலை நீக்கியிருக்கிறது. அதற்கு முன்னால் மக்கள் பட்ட கஷ்ட நஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அவர்களுடைய அவதிக்கு கணக்கு வழக்கே இல்லை. அந்த கண்ட்ரோலை நீக்கியதன் மூலம், பலப்பல மாவட்டங்களில் உணவுப் பொருள்களின் விலை ஏறியிருக்கிறதா, இறங்கியிருக்கிறதா என்று பார்த்





தால், ஏறித்தான் இருக்கிறது. எப்படி ஏறுகிறது? பார்க்க வேண்டும். மக்களுக்குக் குறைந்த விலையில் உணவுப் பொருள்கள் கிடைக்கின்றனவா என்று அரசாங்கம் ஜாக்கிரதையாக கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறது, என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

என்னுடைய பகுதி அம்பாசமுத்திரம், கடயம் பகுதியில் உண்மையாகவே வறட்சி அதிகமாக இருக்கிறது. வட பக்கத்தில் இருக்கக்கூடிய கிராமங்களில், இந்த வருஷமும் மழையில்லை, சென்ற வருஷமும் மழையில்லை. வரட்சியினால் அவதிப்படும் ஜனங்கள் எந்த நன்மையும் அடையவில்லை. அதை அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொண்டு, வெங்காடம்பட்டி, தெற்குமடத்தூர் முதலிய கிராமங்களில் இருக்கும் நிலைமை மோசமாக இருக்கிறது என்று சொல்லி, அந்தக் கிராம மக்களுடைய கஷ்டங்களை போக்க நீங்கள் நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று உங்களை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும், நிலச் சீர்திருத்தம் நல்ல முறையில் அமுல் செய்யப்பட வேண்டுமென்றால், ஒட்டாரம் குளம், நாட்டு உள்கால் போன்ற அந்த கால்கள் எல்லாம் புதிய முறையில் சீர்திருத்தம் செய்யப்படவேண்டும். புதிய திட்டத்தின் கீழ் தண்டத் தீர்வை போடக்கூடாது என்று அறிக்கை இட்டிருந்தும் கூட தயவுசெய்து அந்தக் தண்டத் தீர்வையை, விவசாய அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு, அகற்றிவிட வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதற்குப் பிறகு இந்த பட்ஜெட்டில், பல பல விஷயங்களைக் சேர்க்கவேண்டும் என்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். முதலாவதாக, அங்கஹீனம் அடைந்தவர்களுக்கு இந்த பட்ஜட்டில் ஒரு விதமான ப்ரொவிஷனும், நன்மைக்கான திட்டமும் வரையப்படவில்லை என்பதை வருத்தத்தோடு கூறுகிறேன். அங்கஹீனமான சகோதரர்களுக்கு, அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கு நாம் நன்மைகள் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏற்கனவேயே இந்தச் சட்ட சபையிலே,

a Bill for the amendment of the Employment Exchanges (Compulsory notification of vacancies) Act to physically handicapped persons

என்று ஒரு மசோதாவை ஏற்கனவே இந்த சட்டசபையில் நான் கொண்டு வந்திருக்கிறேன். தயவுசெய்து, அன்புகூர்ந்து, அங்கஹீனமானவர்களுக்கு நல்லதொரு செயலைச் செய்கிறோம் என்கிற பெருமிதத்தோடு, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள், அந்த பில்லை நன்றாக ஆராய்ந்து, சட்டமாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளுகிறேன். அது மாத்திரமல்லாமல், பென்ஷனர்களுக்கு தொகை கூட்டப் பட்டிருக்கிறது. 15 வருஷம் கம்யூடேஷன் மூலமான தொகை கொடுத்த பிறகும், பென்ஷனர்கள் உயிரோடு இருந்தால், அவர்களுக்கு முழுப் பென்ஷனைக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அபிவிருத்தித் திட்டங்கள் நல்ல முறையில் செயல்படுகின்றன. நம்முடைய சீப் செக்ரடரி, ஸ்ரீ ராயப்பா அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவிற்கு வந்தார்கள். கிணறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் எவ்வளவோ லட்சக்கணக்கான பணத்தை மோசடி செய்கிறார்கள்; நிர்வாகக் கவனக் குறைவால், அந்த விவசாயிகளுக்குப் பணம் போய்ச் சேராமல், எப்படி எப்படியோ மோசடிகள் நடக்கின்றன. நிர்வாகஸ்தர்கள் நன்றாகக் கவனிக்க வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. இந்த நிலையில் நம்முடைய சீப் செக்ரடரி ஸ்ரீ ராயப்பா அவர்கள் ஒரு நல்ல காரியம் செய்தார்கள். அதைப் பாராட்டுகிறேன். கோடிக்கணக்கான பணத்தை கிணறு வெட்ட மானியமாகக் கொடுக்கிறோம். பஞ்சாயத்து யூனியனிலும் நிர்வாகஸ்தர்கள் இருக்கிறார்கள். கிணறு வெட்டினார்களா, கிணற்றில் தண்ணீர் வருகிறதா, விவசாயிகள் அதை உபயோகிக்கிறார்களா என்றெல்லாம் யாரும் கவனிப்பதேயில்லை. ஸ்ரீ ராயப்பா அவர்கள் எங்கள் ஜில்லாவில், ஆலங்குளம் பகுதி என்று நினைக்கிறேன், பல கிணறுகளைப் பார்வையிட்டார்கள். இப்படி வெட்டலாமா, அப்படி வெட்டலாமா, என்றெல்லாம் பார்த்துச் செய்திருக்கிறார்கள். அது பாராட்டத் தக்கது. அதே மாதிரி நம்முடைய அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற வேண்டுமானால், ஆட்சியாளர்கள், மிக்க கவனத்தோடு மக்களுக்கு சேவை செய்கிறோம் என்கிற நல்ல எண்ணத்தோடு நிச்சயமாகக் கவனித்து அந்த அந்த திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட கோடிக்கணக்கான ரூபாய்கள் வீணாகாமல் விவசாயிகளுக்குக் கிடைக்கும் படியான ரீதியில் தங்கள் கடமைகளைச் செய்தால் மிக்க நன்மை பயக்கும். அப்படியெல்லாம் செய்தால் இந்த நிதிநிலை அறிக்கையிலே நீங்கள் எதிர்பார்க்கிற நன்மைகள் நிச்சயமாக நீங்கள் பெறலாம் என்று இந்த சந்தர்ப்பத்திலே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இன்னும் இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன். தொழிலாளர்கள் பிராவிடென்ட் பண்டுக்கு பணம் கொடுக்கிறார்கள். அவர்கள் கஷ்டப்படும் காலங்களில், பிராவிடெண்ட் பண்டிலிருந்து கடன் கொடுப்பதில் தடங்கல்கள் இருக்கின்றன. விக்ரமசிங்கபுரம் ஹார்வி மில்லில் தொழிலாளர்களுக்கு லோன் பாரத்தில் கையெழுத்திட்டு விட்டுத்தான் சட்ட சபைக்கு வந்திருக்கிறேன். உண்மையைச் சொல்லுகிறேன். அவர்கள் கல்யாணம், படிப்பு என்று இவற்றிற்காக தங்கள் பண்டிலிருந்து 75 சதவிகிதம் வரை கடன் வாங்க முடியும். ஆனால் அவர்கள் இப்பொழுது பொய்யாக கல்யாணம், படிப்பு என்று சொல்லுகிறார்கள். கல்யாணம் என்றும் அச்சடிக்கிறார்கள். அது அவர்களுடைய பணம். அதிலே கடனைக் கொடுக்க, பொய்யான காரணங்களைக் கூற இடமில்லாமல், தொழிலாளர்களுக்கு உரிய தொகையிலிருந்து 75 பர்செண்ட் எந்தக்காரியத்திற்கென்றாலும் கொடுக்கலாம் என்று நீங்கள் ஒரு உத்தரவைப் போட்டால், நிச்சயமாக தொழிலாளர்கள் உங்களைப் போற்றுவார்கள். தொழிலாளர்களுக்



குண்டான பிராவிடெண்ட் நிதியிலிருந்து அவர்கள் கடன் பெறுவதற்கான வசதி செய்துதர வேண்டும். அதிலுள்ள கஷ்டங்களை நீக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மா. பா. சாரதி. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1970–71ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மதிப்பிற்குரிய எதிர்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் "6 கோடி ரூபாய்க்கு வரி போட்டுவிட்டார்கள், விவசாயிகளின் மீது வரி போட்டுவிட்டார்கள். வரி போடமாட்டோம், வரிகளைக் குறைப்போம் என்று வெளியிலே சொல்லிக்கொண்டு வந்ததையெல்லாம் மறந்து வரி போட்டு விட்டீர்களே" என்று பேசி இருக்கிறார்கள். நாங்கள் வரி போட்டோம் என்று சொன்னால் தாங்கள் கூடியவர்களுக்குத்தான் வரி போட்டிருக்கிறோம். பணக்காரர்களுக்குத்தான் வரி போட்டிருக்கிறோம் என்பது நன்கு தெரிகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

1967-க்கு முன்பிருந்த தமிழகத்தின் நிலைமையையும் இன்றுள்ள நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இப்போதுள்ள ஆட்சியைப் போற்றிப் புகழக்கூடிய நிலைமையிலேதான் இருக்கிறார்கள். இனி மேல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஒன்றுதான் தமிழகத்திலே செயல்பட முடியுமே தவிர வேறு ஒருவரையும் ஆட்சிப் பீடம் நம்புவதற்கில்லையென்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்கிறேன். மக்கள் இந்த ஆட்சியை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இதற்குச் சான்றாக மத்தியிலே ஆளும் கட்சியாயுள்ள காங்கிரஸின் நிலைமை நம்பிக்கையற்ற நிலைமையாகப் போய்விட்டிருக்கிறது. காங்கிரஸ் அவர்களுக்குள்ளேயே சச்சரவு ஏற்பட்டு இரண்டாகப் பிளந்து போன்தால் இனி அவர்களை நம்புவதற்கு எந்தவிதமான சந்தர்ப்பமும் இல்லையென்று மக்கள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டிருக்கிறார்கள். இந்த ஆட்சி மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்திருக்கிறது. செய்து வருகிறது. அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில் 500 ரூபாய்க்குட்பட்டவர்களுக்குச் சராசரியாக பத்து ரூபாய் உயர்த்தப்பட்டிருக்கிறது. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இதைப் பாராட்டுகிறார்கள், போற்றுகிறார்கள்.

அடுத்தபடியாக, அரசு ஊழியர்களுக்கு மட்டும் திருமணக் கடன் போன்ற வசதிகள் இருந்ததை இப்போது ஆசிரியர்களுக்கும் இந்த அரசு வழங்கியிருக்கிறது. இந்த நல்ல அம்சத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், கல்விக்காக அதிகப் பணத்தை ஒதுக்குவதையும், நகராட்சிகள் நடத்தும் உயர்நிலைப்பள்ளிகளை இந்த அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற என்னுடைய கருத்தையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். மற்றும் சேலம் இரும்பாலைத் திட்டம் நான்காவது ஐந்தாண்டு திட்டத்திலே எடுத்து முடித்துவிடக் கூடிய சூழ்நிலையை, இந்த

அரசு துரிதமாக எடுத்துக்கொள்வதற்கான முயற்சிகளை ஏற்படுத்த வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். சேலம் இரும்பாலைத் திட்டத்திற்காக திட்டத்தில் கேட்கப்பட்ட 250 கோடி ரூபாயை கண்டிப்பாகப் பெற்றுத் தர வேண்டும். அவர்கள் 222 கோடி ரூபாய் தருவதை ஏற்கக்கூடாது.

அடுத்தபடியாக, மதுவிலக்குத் திட்டத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மதுவிலக்குத் திட்டத்தைக் காட்டி, அதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்தைக் காட்டி, மத்திய சர்க்காரிடத்திலிருந்து நஷ்ட ஈடு கேட்க வேண்டும். பத்து கோடி ரூபாயோ, பதினைந்து கோடி ரூபாயோ எவ்வளவு முடியுமோ அவ்வளவு தொகையைக் கேட்டுப் பெற்றாக வேண்டும். அப்போதுதான் மதுவிலக்குத் திட்டத்தைச் செயல்படுத்துவோம் என்று மத்திய சர்க்காரை பூச்சாண்டியாவது காட்டிப் பணத்தைப் பெற வேண்டும்.

அடுத்தபடியாக, குறைந்த அளவு பென்ஷன் 20 ரூபாய் என்றிருந்ததை 30 ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் பாராட்டப்பட வேண்டிய விஷயமாகும். ஒய்வு ஊதியத்தின் அடிப்படையில் 1966 டிசம்பரிலிருந்த கிராக்கிப்படியை சம்பளத்துடன் இணைக்கப்பட்டிருப்பதை, நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற 1967 ஏப்ரலிருந்து அடிப்படையில் அமல்படுத்தினால் அவர்கள் இன்றும் சந்தோஷமாக இருப்பார்கள். அவர்களுடைய ஒத்துழைப்பு நமக்குப் பூரணமாக இருக்கும்.

குறிப்பாக, என்னுடைய தொகுதியைப்பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். வட ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகராகிய வேலூர் நகரத்தில் மார்க்கெட்டுக்காக நகராட்சி மூலமாக பல வருடங்களுக்கு முன்னால் 17 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு, அந்தத் திட்டத்திற்கு 5 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் என்று ஒதுக்கப்பட்டு கட்டட வேலை முடிந்துவிட்டது. அந்தக் கட்டடம் ஏழு லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் அதற்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்தான் கிடைத்திருக்கிறது. மேலும் நகராட்சியின் பொதுப்பணத்திலிருந்து ஈடு செய்ய வேண்டியிருக்கிறது. மற்ற இரண்டு இடங்களிலும் கட்டடம் கட்டுவதற்கு நமது உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து பணம் ஒதுக்கித்தர முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிக்கட்டினால், ஐந்து வருட காலங்களில் கட்டடத்தினுடைய மதிப்பு வாடகையாக வந்து விடுகிறது. நகராட்சிக்கு இம்மாதிரியான கட்டடங்கள் இருந்தால் அதன் மூலமாக நல்ல வாடகை கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வேலூருக்கும் காட்பாடிக்கும் இடையிலுள்ள பாலாற்றிலுள்ள பாலம் பழுதடைந்து இருக்கிறது. பாரமுள்ள வண்டிகள் போவதற்கு முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அந்தப் பாலாற்றில் ஒரு புதுப்பாலம் கட்ட வேண்டும். இதற்காக



60 லட்சம் ரூபாய் அளவில் ஒரு எஸ்டிமேட் தயார் செய்து அனுமதிக்கக்கூடிய கட்டத்தில் இருக்கிறது. அரசு இதை உடனடியாக அனுமதித்து, பாலாற்றின் மேல் பாலத்தை கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வட ஆர்க்காடு மாவட்டத்தில் தலைநகர் என்று சொல்லப்படும் வேலூர் நகரத்தில் பெண்களுக்கென்று ஒரு கல்லூரி வேண்டுமென்று கேட்கப்பட்டு வருகிறது. நேற்றையதினம் நமது கல்வியமைச்சர் அவர்கள் பக்கத்தில் காட்பாடியில் இருக்கிறது, வாலாஜாபாத்தில் இருக்கிறது என்று சொல்லிவிட்டார்கள். தலைநகர் என்று சொல்லக்கூடிய நகரத்தில், ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மக்கள் வசிக்கும் நகரத்தில் பெண்கள் கல்லூரி இல்லையென்று சொல்வது சரியல்ல. ஆகவே, பல நாட்களாக இருந்து வரும் கோரிக்கையை இந்த அரசாங்கம் நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது வேலூரில் அரசினர் கலைக் கல்லூரி நடைபெற்று வருகிறது. இதற்குப் பிறகு ஆரம்பித்த செய்யார், திருவண்ணாமலை போன்ற இடங்களிலுள்ள கல்லூரிகளில் மேல் படிப்பு படிப்பதற்கான வசதிகளைச் செய்துவருகிற சமயத்தில், வேலூரிலுள்ள கல்லூரியில் அம்மாதிரியான வசதிகள் செய்துதரப்படவில்லை. ஆகவே, வேலூரிலுள்ள அரசினர் கலைக் கல்லூரியில் பி.காம்., எம்.ஏ., போன்ற வகுப்புகளை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலையை அரசு அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கையை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வட ஆர்க்காடு மாவட்டத்தில் பீடித் தொழிலாளர்கள் அதிகம். வேலூரைப் பொறுத்தவரைக்கும் 30 ஆயிரம், 40 ஆயிரம் மக்கள் பீடித் தொழிலை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். பீடித் தொழிலாளர்களுக்காக ஏற்படுத்திய சட்டத்தை தீவிரமாக நல்ல முறையில் அமல்படுத்தி, அந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம் என்று கொண்டு வந்துள்ள திட்டத்தை வரவேற்கிறேன். இது ஒரு சிறந்த திட்டமாக இருக்கிறது. அரசு உடனடியாக இதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தலைமைக்கு நன்றிகூறி உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கி. ஜெயராமன் : தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே கொண்டுவந்துள்ள நிதிநிலை அறிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆள்கின்ற கட்சியாகப் பொறுப்பு ஏற்றதும், இது ஒரு வெல்ஃபேர் ஸ்டேட்டாக, மக்களுடைய க்ஷேமநலன்களை நிலைநிறுத்துகிற சர்க்காராக அமைய வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கருதி முதல் பட்ஜெட்டைக் கொண்டு வந்தார்கள். அந்த

நேரத்தில் குறிப்பாக காங்கிரஸ் நண்பர்கள் பட்ஜெட்டைப்பற்றி பேசும்போது திருவிழாக் காலங்களில் விற்கப்படுகிற 'கலர் ஷர்பத்' என்றும் 'ஷுகர் கோட்டட்' பில்ஸ் அதாவது இனிப்பு தடவிய கசப்பான மருந்து என்றும் சொன்னார்கள். இந்த ஆண்டு அவர்கள் வரிக்குமேல் வரி, வரிக்கு வரி என்று கூறி வருகிறார்கள். தாங்கக் கூடிய ஒருசிலருக்குத்தான், வரிப்பளு தாங்கக் கூடியவர்களுக்குத் தான் இந்த அரசு வரி போட வேண்டும் என்ற கொள்கையை ஏற்கெனவே கொண்டிருக்கிறது. அந்தக் காரணங்களினால் தான் இந்த பட்ஜெட்டிலும் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் குறைந்த அளவுக்கு 5 லட்சத்திற்கு மேல் டர்ன்ஓவர் உள்ளவர்கள் மீது ஒரு சர்சார்ஜ் விதிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆந்திராவிலும் இம்மாதிரி இருக்கிறது. அவர்கள் 3 லட்சத்திற்கு மேல் போடுகிறார்கள். அங்கே வாங்குகிறவர்கள் கட்டுகிறார்கள். ஆனால் இங்கே விற்பவர்கள் மீது போடப்படுகிறது. உண்மையாகச் சொல்லப்போனால் இந்த பட்ஜெட் வெல்ஃபேர் பட்ஜெட் என்றே சொல்லாம். இன்னும் அதிகமாக சொல்ல வேண்டுமானால் நியாயமான பட்ஜெட், ரேஷனல் பட்ஜெட் என்று சொல்லலாம்.

திரு. வினாயகம் அவர்கள் பேசும்போது திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்ற பிறகு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முன்வரவில்லை. you are cheeting the people மக்களை ஏமாற்றுகிறீர்கள் என்று சொன்னார்கள். மக்களை நாங்கள் ஏமாற்றவில்லை. மக்கள் விழிப்பாகத்தான் இருக்கிறார்கள். பல்வேறு நிகழ்ச்சிகளில் இருந்து பார்த்தால் காங்கிரஸ் கட்சியினர்கள் தான் ஏமாந்திருக்கிறார்கள். ஏமாந்து வருகிறார்கள் என்று சொல்ல முடியும்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் பஸ்களை தேசியமாக்கிற்று. அப்போது காங்கிரஸ்காரர்கள் "பணத்திற்கு எங்கே போவீர்கள்?" என்று சொன்னார்கள். நஷ்டஈடு கொடுக்காமலேயே இந்த அரசு பல ரூட்டுகளை தேசியமாக்கியிருக்கிறது. வழக்குமன்றத்திற்குப் போனார்கள். நீதி நிலைநாட்டப்பட்டது. நாங்கள் மக்களை ஏமாற்றவில்லை. சொன்னபடியே செய்தோம். ஆனால் நீங்கள் தான் ஏமாந்தீர்கள்.

அப்படியே மதுவிலக்கை எடுத்துகொண்டால் காங்கிரஸ் மாநிலங்கள் அதைக் கைவிட்டுக்கொண்டு வருகிற நேரத்தில் இந்த அரசும் அதை எடுத்துவிடும் என்று நம்பினீர்கள். நொண்டிக் குதிரைக்குச் சறுக்கிறது சாக்கு என்பதாக அந்தக் கொள்கையில் வீழ்ந்துவிடுவோம் என்று நினைத்தீர்கள். ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள் நாட்டுக்கு மதுவிலக்கு நன்மை அளிக்கும் என்றே நம்பினார். கலைஞர் கருணாநிதி அவர்களும் அதை உங்களுக்குக் கேள்விக்குறியாக்கி—இன்றைக்கு அதற்கு ஒரு முற்றுப்புள்ளியே வைத்துவிட்டார். நாங்கள் மக்களை ஏமாற்றவில்லை. நீங்கள் தான் ஏமாந்தீர்கள். ஏமாந்துகொண்டே வருகிறீர்கள்.



உங்கள் ஆட்சிக்காலத்தில்தான் அர்பன் லாண்டு டாக்சைக் கொண்டுவந்தீர்கள். அதில் இருந்த குறைபாடுகளை நாங்கள்தான் நீக்கினோம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கிராமங்களுக்கே அதிக வரி போடுகிறீர்களே என்றார்கள். தாங்கக் கூடிய நகரங்களில் உள்ளவர்களுக்கும் போடப்பட்டுள்ள வரியாக அது வந்திருக்கிறது. அதன்மூலம் இவ்வாண்டு 125 லட்சம் கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. ஆக நாங்கள் ஏமாறவில்லை, ஏமாற்றவில்லை. இதிலும் நீங்கள்தான் ஏமாந்தீர்கள். ஏமாந்துகொண்டே வருகிறீர்கள். இந்திரா அம்மையார் அவர்கள் அர்பன் லாண்டு ஆக்டைப்போலவே அர்பன் லாண்டு அண்டு பில்டிங் செஸ் ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் மூலமும் நகரங்களுக்குத்தான் வரி விழும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தொழிற்சாலைகள் மூடப்படும் என்றீர்கள். 1966-ல் ஆறாயிரத்துச் சொச்சம் தொழிற்சாலைகள் இருந்தன என்றால் 1968-இல் 7,394 தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆக நாங்கள் மக்களை ஏமாற்றவில்லை, நீங்கள் ஏமாந்தீர்கள். ஏமாந்துகொண்டே வருகிறீர்கள்.

பஞ்சாலைகளை எல்லாம் நாங்கள் மூடிவிட்டதாகச் சொன்னீர்கள் உங்கள் ஆட்சிக் காலத்தில் மூடப்பட்டிருந்த பஞ்சாலைகள் 27. ஆனால் 69-இல் எங்களால் திறக்கப்பட்ட பஞ்சாலைகள் 13. ஆக இதிலும் நீங்கள்தான் ஏமாந்தீர்கள். நாங்கள் மக்களை ஏமாற்றவில்லை.

தூத்துக்குடி துறைமுகத்திற்காக நாங்கள் எழுச்சிநாளைக் கொண்டாடினோம். உங்கள் தலைவர் உங்களை 'வீட்டிலே போய்ப் படுத்துத் தூங்கச் சொன்னார்கள். மத்திய அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்களுக்குக் கருப்புக்கொடி காட்டினீர்கள். அவர் கூட வருந்தினார். ஆனால் இன்றைக்கு மத்திய சர்க்கார் எங்களுக்குப் பச்சைக் கொடி காட்டிவிட்டது. இதற்காக 6 கோடி ரூபாய்க்கு மேல் தொகை ஒதுக்கியிருக்கிறது. இதிலும் நாங்கள் மக்களை ஏமாற்றவில்லை. நீங்கள்தான் ஏமாந்தீர்கள்.

தூத்துக்குடி நகரத்தைச் சுற்றி பெரிய தொழிற்சாலை ஏற்படுத்தப்பட பெட்ரோ கெமிகல் காம்ப்ளெக்ஸ் 200 கோடி அளவில் நிறுவ வேண்டும் என்றோம். மத்திய சர்க்கார் 100 கோடிக்கு ஏற்படுத்துங்கள் என்றார்கள். மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவே 52 கோடி அளவிலே அந்தத் தொழிற்சாலையை உடனடியாக ஏற்படுத்த வழி செய்திருக்கிறோம். இதிலும் நாங்கள் மக்களை ஏமாற்றவில்லை. நீங்கள்தான் ஏமாந்தீர்கள். மேலும் சர்க்காருடைய பொதுத்துறையில் இருக்கவேண்டியதில்லை. ஜாயின்ட் செக்டாரில் கூட்டுறவுத் துறையில் வளர்க்கத் திட்டமிட்டிருக்கிறோம்.

[திரு. கி. ஜயராமன்] 1970 மார்ச் 3]

நெசவாளர் பெருங்குடி மக்களை நாங்கள் ஏமாற்றிவிட்டதாகச் சொன்னீர்கள். நாங்கள் தான் அந்தப் பெருங்குடி மக்களுக்கு வாழ்வளிக்க காஞ்சீபுரத்தில் சாயத் தொழிற்சாலை, ஜரிகை தொழிற் சாலை ஏற்படுத்த வழி வகை செய்திருக்கிறோம். நாங்கள் மக்களை ஏமாற்றவில்லை. இதிலும் நீங்கள் தான் எமாந்தீர்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக—குன்றின் மேல் இட்ட விளக்காக உச்சவரம்புச் சட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படி திடீரென்று கொண்டு வரலாமா என்றீர்கள். டெல்லியில் நமது முதல் அமைச்சரிடம் கேட்டபோது இதுபற்றி ஏதாவது சொல்லி யிருந்தால் கூட எத்தனையோ ஏக்கராக்கள் போய் இருக்கும். இப்போது 2 லட்சத்திற்கும் மேலாக நிலம் கிடைக்கக் கூடும். இதிலும் நாங்கள் மக்களை ஏமாற்றவில்லை. ஏமாந்தது நீங்கள்தான்.

வாக்குறுதியை நிறவேற்ற என் சும்மா இருக்கிறீர்கள். போராட் டங்களை நடத்துங்களேன் என்றார்கள். அதிலும் நாங்கள் பின் தங்கி விடவில்லை. நாங்கள் மெஜாரிட்டியாக இருக்கிறபோதும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஜனவரித் தீர்மானத்தை உங்கள் ஒத்துழைப்புடன் நிறைவேற்றியவர்களே நாங்கள் தான். இன்றைக்கும் கூட நாடாளுமன்ற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அன்பழகன் அதுபற்றி ஒரு தீர்மானமே அங்கே கொண்டு வா இருக்கிறார்கள். எங்கள் சாயம் கெட்டி, வெளுக்காது Cong. (O) சாயம்—உங்கள் சாயம் வெளுக்கப்போகிறது. இதிலும் நாங்கள் மக்களை ஏமாற்றவில்லை. ஏமாந்தவர்கள் நீங்கள் தான்.

விலைவாசிகள் ஏறியிருக்கின்றன. ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆயினும் உற்பத்தி பெருகியிருப்பதன் காரணமாக ஏறியிருக்கிற 4% ஓ, 5% ஓ கொஞ்சம் குறையக் கூடும். அல்லது கட்டுப்படுத்தப்படும். நமது உணவு அமைச்சர் அடிக்கடி உஷார் படுத்தி வருகிறபடி இதில் கவனம் செலுத்தப்பட்டே வருகிறது. ஆயினும் விலைவாசி ஏற்றத்திற்கு இந்த அரசையே குற்றம் சாட்ட முடியாது. நான் மத்திய அரசைக் குற்றம் சாட்டுகிறேன். அவர் களுடைய வரிக் கொள்கை, பொருளாதாரக் கொள்கைதான். அதற்காகத்தான் பாங்குகளை தேசியமாக்கியவுடன் அதனை ஒழுங்கு படுத்தும் கமிட்டியில் நமக்குப் பிரதிநிதித்துவம் மாநில அளவில் மட்டுமல்ல, வட்டார வாரியாக அளிக்கவேண்டுமென்று கோரி வரு கிறோம். 1969 ஜனவரி 8-ல் இருந்த நோட்டுப் புழக்கம் 96 கோடிக்கு என்றால் அதற்குப் பிறகு ஜனவரி 1970-இல் 326 கோடிக் குப் போய்விட்டது. இதனை எல்லாம் ஒழுங்கு படுத்தத்தான் வட்ட வாரியாக பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டு—அதுபற்றிய நில வரங்களைக் கட்டுப்படுத்தி—விலைவாசி உயர்வை ஒரு நிலையில் வைக்க உதவவேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. ஆக நாங்கள் மக்களை ஏமாற்றவில்லை. ஏமாந்தவர்கள் நீங்கள்தான். 1972-லேயும் நாட்டுக்கு நல்லது செய்ய நல்ல தம்பி மீண்டும்



1970 மார்ச் 3] [திரு. கி. ஜயராமன்]

வருவான். வருவதற்கு முன்னோடியாகத்தான் இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது என்று சொல்லிக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

* திரு. எஸ். கே. வடிவேலு : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் வரவு-செலவுத் திட்டத்தின்மீது எனக்குப் பேச வாய்ப்புத் தந்தமைக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய கையில் 1970-71-ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் இருக்கிறது. இதைப்பார்க்கும்பொழுது என்னுடைய உள்ளம் பூரிப்பு அடைகிறது. ஏனென்றால் இந்த பட்ஜெட் ஏழைகள் வாழ்வதற்கென்றும், விவசாயிகளுக்கென்றும் நல்ல முறையிலே தயாரிக்கப்பட்டிருக்கிறது. நம் மாநிலத்திலே யுள்ள நிதி வசதிகளைக் கொண்டு இவ்வளவு சிறந்த முறையிலே பட்ஜெட்டை வேறு யாராக இருந்தாலும் தயாரிக்க முடியாது. பல ஆண்டுகளாக பட்ஜெட் தயார் செய்த அருமைக் காங்கிரஸ் நண்பர்கள் இதைப்பார்த்து பொறாமைப்படுகிறார்கள். உச்ச வரம்பு வருகிறது வருகிறது என்று பல ஆண்டுகளாக அவர்கள் கூறி 1963-64-ஆம் ஆண்டு கொண்டுவந்தார்கள். அதற்குள் என்ன என்ன செய்துக்கொள்ளவேண்டுமோ அவற்றையெல்லாம் பணம் படைத்தவர்கள் செய்துக்கொண்டார்கள். ஆனால் இன்றைக்கு அப்படி அவர்கள் ஒன்றும் செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டிருக் கிறது. அவர்கள் என்ன எண்ணிக் கொண்டிருந்தார்களோ அதற்கு மாறாக—நேற்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திடீரென்று கொண்டு வந்ததற்குக் காரணம் அதிலே ஓட்டைகள் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் கொண்டுவந்தோம் என்று கூறினார்கள்—அதைப்போல் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை நம்முடைய காங்கிரஸ் நண்பர்கள் பாராட்டி இருக்கவேண்டும். 30 எக்கரிலிருந்து 15 ஏக்கராவாகப் பண்ணிவிட்டார்களே, 1972 பொதுத் தேர்தலிலே நமக்குப் பணம்கொடுக்க யாரும் முன்வர மாட்டார்களே என்ற பயம் அவர்களுக்கு இப்பொழுதே தோன்றி யிருக்கிறது. எனவே மிகவும் நல்ல முறையிலே இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கின்ற நேரத்திலே பணம் படைத்தவர்கள் முன் தேதியில் உள்ள பழைய பத்திரத்தையெல்லாம் தேடி எடுத்து தப் பித்துக்கொள்ள முனைந்துகொண்டிருக்கிறார்கள், அப்படி அவர்கள் செய்யாமல் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இந்த பட்ஜெட் ஒரு புரட்சிகரமான பட்ஜெட், சோஷலிச சமதர்ம வழியில் செல்லுகின்ற பட்ஜெட், ஏழைகளை மனதிலே கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கிற பட்ஜெட் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரிகளைக் குறைத்து வசதிகளைப் பெருக்கக்கூடிய இந்த பட்ஜெட்டின் ஒவ்வொரு அம்சமும் பாராட்டுக்குரியது. இந்த பட்ஜெட்டைத் தயார் செய்த தமிழக அரசை என் சார்பாகவும் என்னுடைய கொட்டியம் தொகுதியில் உள்ள மக்களின் சார்பாகவும் பாராட்டுகிறேன். திருச்சி மாவட்டத்திலே உள்ள லால்குடியிலே சென்ற ஆண்டு ஒரு கருத்தரங்கு நடை

பெற்றது. முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அந்தக் கருத்தரங்கிலே கலந்துக்கொண்டார்கள். இன்றைக்குப் கோவைக்குப் பல்கலைக் கழகம் ஒன்று பட்ஜெட்டில் இடம் பெற்றிருக்கிறது. அதற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய முறையில் நிலவளம், நீர்வளம் இருக்கக்கூடிய பகுதியாக உள்ள தொட்டியம் தொகுதியிலே முசிரியிலே ஒரு கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கொள்ளிமலைத் திட்டம் காங்ரஸ் நண்பர் களால் கைவிடப்பட்ட திட்டம். மாண்புமிகு முதலமைச்சர் பொதுப்பணித்துறையமைச்சராக இருந்தபொழுது அதைப் பார்வையிட்டு சுமார் 2½ கோடி ரூபாய் மதிப்பீட்டிலே இன்றைக்கு அந்தத் திட்டத்தைப் பட்ஜெட்டிலே சேர்த்து இருக்கிறார்கள். அதையும் என்னுடைய முசிரி வட்டத்தின் சார்பாக பாராட்டு கிறேன்.

தற்பொழுது பொதுப்பணித்துறை அமைச்சராக இருக்கின்ற வர்கள் மாவட்ட வாரியாகச் சென்று பல சட்டமன்ற உறுப்பினர் களையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் அழைத்து விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையிலே, என்ன என்ன செய்யவேண்டும், எப்படி எப்படிச் செய்தால் உற்பத்தி பெருகும் என்று நல்ல கருத்துக்களைத் தந்திருக்கிறார்கள். அதுவும் பாராட்டுக்குரியது. இப்படிப்பட்ட நல்ல அரசை காங்கிரஸ்காரர்கள் குறை கூறவேண்டுமென்றே குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஓராண்டுத் திட்டம் என்ற திட்டத்தை ஏற்றுக்கொண்டு ஊராட்சிகளுடைய ஒன்றிய நிதி வசதிகளைப் பொதுமக்கள் நல்ல முறையிலே பெறவேண்டும், அதிலும் குறிப்பாக ஹரிஜன மக்களுக்கு, விவசாய மக்களுக்கு நல்ல முறையிலே வசதிகள் ஏற்படவேண்டுமென்ற முறையிலே அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். குடிநீர், கல்யாண மண்டபம் கட்டுதல், டிராக்டர்கள் கொடுத்தல் போன்றவற்றைப் பொறுத்தவரையில் நல்லமுறையிலே வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

நீண்ட நெடுநாளாக முசிரி–குளித்தலைப் பாலம் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசோடு போராடி இதனைச் சீக்கிரம் நிறைவேற்றவேண்டுமென்று . சட்டமன்றத்தின் மூலம் கேட்டுக் கொள்கிறேன். வேலூருக்கும் திருச்சிக்கும் இடையே ஏறத்தாழ 90 மைல் நீளம் இருக்கிறது. மத்தியில் பாலம் இல்லாமல் பொதுமக்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. எனவே, மத்திய சர்க்காருக்கு இதை வலியுறுத்திக் கூறி நிறைவேற்றித்தரவேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசு பொறுப்பேற்றவுடன் தமிழக மக்களுக்கு மின்சார வசதிகள் கொடுக்கவேண்டுமென்று விரைவாக பல முயற்சிகள் செய்துகொண்டிருக்கிறது, அதையும் பாராட்டுகிறேன்.



15 ஏக்கர் என்று சீலிங் கொண்டுவரப்படுவதால் என்னுடைய சொந்த ஊரிலே சில பேர் தப்புகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். மாட்டு மந்தை, கோயில்கள் என்றெல்லாம் தப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இடம் தாமல் நல்ல முறையிலே செயல்படவேண்டும் என்று முதலிலே அரிசன மக்களுக்கும் பிற்பட்ட மக்களுக்கும் ஊக்கமளிக்கக் கூடிய வகையிலே சட்டத்தின் மூலம் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் நான் மிகமிகப் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன் அவர்களுக்கு நல்ல காரியத்தைச் செய்வேன் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு அவர்கள் அதற்காக இன்று தனியாக ஒரு அமைச்சர் அவர்களைப் போட்டு அதற்காக ஒரு தனிக் குழுவையும் ஏற்படுத்தி அந்தக் குழு மாவட்டவாரியாக சென்று என்ன என்ன நல்ல திட்டங்கள் அவர் களுக்குத் தேவை என்றறிந்து வர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். இந்த பட்ஜெட்டை வரவேற்று என்னுடைய தொட்டியம் தொகுதி மக்களின் சார்பாக இதற்கு ஆதரவு தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

*** திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, தமிழக அரசின் 1970-71-ஆம் ஆண்டின் பட்ஜெட்டின் சில அம்சங்களை வரவேற்கின்ற அதே சமயத்தில் சில குறைபாடுகளையும் தோழமையோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு உள்ளேன். மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் வேண்டும் என்ற கொள்கையை எங்கள் மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சியும் ஏற்றுக்கொள்கின்றது. பல மாநிலங்களும் அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக் கின்றன. தமிழக அரசு இதை வற்புறுத்தி அதற்கான நடவடிக்கை களை எடுக்கவேண்டுமென்பது மிக மிக அவசியமானதாகும். அவ்வாறு நடவடிக்கைகள் எடுப்பதற்கு எங்களுடைய கட்சியும் அதனைச் சார்ந்து நிற்கும் ஸ்தாபனங்களும் அதற்காக எடுக்கும் நடவடிக்கைகளை ஆதரிக்கும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு 575 கோடி ரூபாய் உடனடியாக கொடுக்கவேண்டு மென்று கோருகின்ற அதேநேரத்தில் நாம் அவர்களுக்கு இருக் கின்ற போக்குகளையும் நிலைமைகளையும் கடுமையாக எடுத்துச் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். குறிப்பாக மத்திய அரசு எடுத்து நடத்த வேண்டிய பல்வேறு தொழில்களையும், மாற்றோர்களின் பல்வேறு விதமான மூலதனங்கள் இந்த நாட்டிலே இருக்கின்றன, அந்நிய நாடுகளின் மூலதனங்களைச் சர்க்கார் உடமையாக்கவேண்டும். ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தை அரசு எடுத்துக்கொள்ளவேண்டும், இருக்கின்ற எல்லா பாங்கு களையும் தேசியமயமாக்க வேண்டும். இப்படிப்பட்ட பல கோரிக்கை களை நாம் மத்திய அரசு முன்வைத்து இன்றைக்கு இருக்கின்ற கனரகத் தொழில்கள் அத்தனையும் அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும் என்ற முறையிலே எடுத்துச்சொல்லி அதற்காக கிளர்ச்சி நடத்தவேண்டும். அவ்வாறு நாம் கிளர்ச்சி செய்யும்பொழுது

மத்திய அரசின் கையிலே உள்ள தொழில்கள் அதிகரிக்க வழி ஏற்படும். தூத்துக்குடி திட்டம், சேலம் உருக்காலைத் திட்டம் இவற்றிற்காக நாம் மாபெரும் கிளர்ச்சிகளை நடத்தினோமே, ஒன்றுபட்டு நடத்தினோமே அதேமாதிரி ஒன்றுபட்டு இதற்கும் நாம் கிளர்ச்சி நடத்தினால் மத்திய அரசிற்கு உணர்வு ஏற்பட்டு அவர்களை நாம் நிர்ப்பந்திக்கக்கூடிய நிலைமை உருவாகும். அப்படி செய்தால் மத்திய அரசு பல தொழில்களை எடுக்கவேண்டிய நிலை ஏற்படும். அதன்காரணமாக மத்திய அரசின் வருவாய் பெருகுகின்றபொழுது நம்முடைய கோரிக்கைகள் நிச்சயம் நிறைவேறும். இப்பொழுது நாம் அவர்களைக் கேட்டால் அவர்களும் திருப்பிச் சொல்வார்கள், துண்டுவிழுகிற பட்ஜெட்டாக இருக்கிறது, எங்களுக்கும் இருநூறு கோடி சில்லரைக்கு மேல் துண்டுவிழுகிற பட்ஜெட்டாக இருக்கிறது என்று சொல்வார்கள். சட்டியிலே இருந்தால்தான் அகப்பையிலே வரும் என்று சமாதானம் சொல்வார்கள். அப்படிப்பட்ட சமாதானம் சொல்ல இடம்கொடுக்காமல் அவர்களுடைய வருவாயைப் பெருக்குவதற்கு நாம் நல்ல யோசனைகளைக் கூற வேண்டும். அப்படிச் சொல்லும்பொழுது அவர்கள் அவற்றை உடனடியாகச் செய்யமாட்டார்கள். அதற்காக நாம் கிளர்ச்சியிலே ஈடுபடவேண்டும்.

இதைத்தவிர தமிழக அரசும் சில நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும். விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இந்தியா பூராவும் கொந்தளிப்பு, பொருளாதார நெருக்கடியின் காரணமாக நாட்டுமக்கள் 'அத்தனைபேர்களும் தாங்களாகவே முன்வந்து போராடவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடி நிலைமை தமிழக அரசையும் பாதித்திருக்கிறது. தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், என்.ஜி.ஓ.-க்கள், எல்.ஐ.சி. ஊழியர்கள் அத்தனைபேரும் இன்றைக்கு எழுச்சியில் இறங்கியிருக்கிறார்கள். காரணம் என்ன? வருங்காலத்தில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. விலைவாசியின் உயர்வு காரணமாக தங்களுக்குவேண்டிய வசதிகளைப் பெற இயலாமல் போய்விடுமோ என்ற சந்தேகம் இருப்பதால்தான் மாபெரும் போராட்டங்கள் கிளர்ச்சிகள் இவற்றில் இன்றைக்கு அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவ்வாறு கிராமப்புற மக்களும் இன்றையதினம் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். திரு. சவான் அவர்கள் சொன்ன விஷயம் ஞாபகம் இருக்குமென்று கருதுகிறேன். பசுமைப் புரட்சி சரிவர நடைபெறவில்லையென்றால் சிவப்புப் புரட்சியாக மாறிவிடும் என்று எச்சரிக்கை விடுத்திருக்கிறார். அதையும் ஞாபகத்தில் கொள்ள வேண்டும். இந்தியா பூராவும் ஏற்பட்டிருக்கும் நிலை தமிழகத்தையும் பாதிக்கத்தான் செய்யும். தமிழகத்தில் உள்ள ஏழை மக்களுக்காக வேலை இல்லாதவர்களுக்காக ஒரு கோடி ரூபாய் தமிழக அரசு ஒதுக்கி இருக்கிறார்கள். அது போதாது. கிராமப்புறங்களில் பல கோடி மக்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அதே போன்று நகரத்திலும் வேலை இல்லாமல் இருக்கிறார்கள்.



போதுமான அளவுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கான வழிவகைகளைக் காணவேண்டும். அதற்கு தமிழகத்தில் அரசே பல்வேறு தொழில்களை ஏற்று நடத்த வேண்டும்.

தமிழக அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்து 75 மைலுக்கு மேல் இருக்கும் போக்குவரத்தை அரசுடமை ஆக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த வேலை துரிதமாக நடக்கவில்லை. இப்போது சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது. மிக அதிகமான பஸ்களை வைத்திருக்கிற டி.வி.எஸ்., ஏ.பி.டி; போன்ற நிறுவனங்களைத் தேசியமயமாக்கவேண்டும் மேட்டூர் அலுமினியம் கெமிகல் பாக்டரிக்கு கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய்க்கு மின்சாரம் மானியமாக அளித்துக் கொண்டு வருகிறோம். அப்படி வருஷா வருஷம் ஒரு கோடி ரூபாய் விட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையை மாற்றி அதை அரசே ஏற்று நடத்த முடியும். அந்தப் பெருந்தொகையை ஒரு முதலாளிக்குக் கொடுத்து வளர்க்க வேண்டியது அவசியந்தானா என்று பார்க்க வேண்டும். அவசியமில்லை.

உத்திரப் பிரதேசத்தில் சிறிய சிறிய சர்க்கரை ஆலைகளை அரசு எடுத்து நடத்துகிறார்கள். நம்முடைய நாட்டில் இருக்கும் சர்க்கரை ஆலைகளை விடச் சிறியவை. இங்கே 17 கோடிக்கு மேற்பட்ட மூலதனம் கொண்ட சர்க்கரை ஆலைகள் 17 இருக்கின்றன. பாரி கம்பெனி, கோத்தாரி, சக்தி ஷுகர் பாக்டரி போன்றவற்றை எல்லாம் தேசவுடமையாக்க வேண்டும். அந்நியர்களுடைய கையில் இருக்கும் டீ எஸ்டேட்டுகளையும்—இப்போது குறைவாகத்தான் இருக்கின்றன; நம்மவர்கள் கைக்குப் பெரும்பாலும் மாறிவிட்டது—நம்மவர்கள் கையில் இருக்கும் பெரிய டீ எஸ்டேட்டுகளையும் தேசவுடைமையாக்க வேண்டும். இவற்றையெல்லாம் தேசவுடைமையாக்குவதன் மூலம் அதிக வருவாய் பெற்று வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கான திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

